
JL.

# மாதர் போதினி

No. 181 ஜனவரி 1913 No. 1

1914.


## A HAPPY NEW YEAR

## புது வருஷ வாழ்த்து

1913-ம் ௵ பிறந்துவிட்டது. ஒரு வருஷம் நமக்குத் தெரியாத விதமாய்க் கடந்துவிட்டது. நம்முடைய கடிதங்களின் தலைப்பில் போடும் தேதியும் மாறிவிட்டது. கிறிஸ்து பிறந்து 1913 வருஷங்கள் ஆகிறதென்கிற சத்தியம் அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாலும், ஏற்றுக்கொள்ளாதவர்களாலும், அவர்கள் அறியாதவிதமாய் வழக்கங்களில் வந்தேறிருகிறது. ரோமை ஆண்டு, மகமது ஆண்டு, இந்தியா, ஜப்பான் தேசங்களில் வழங்கிவந்த ஆண்டுகள், இவைகளெல்லாம் பெத்லெகேமில் பிறந்த கிறிஸ்து ஆண்டுவரவே, மறைந்துபோயின.

புதுவருடம் நன்மையான விஷயங்களில் நம்மை விர்த்தியாக்குகிறதற்கும், துற்கிரியைகளை நீக்கி, நற்கிரியைகளைச் செய்ய ஏவுகிறதற்கும் ஏற்ற சமயம். காலம், பெரிய கிரியைகளை நடப்பிப்பதற்கு எவ்வளவு அவசியமோ அதேபிரகாரமாய் நம்முடைய நடக்கையைச் சீர்ப்படுத்தவும் அவசியம். வருஷங்கள் கண்ணுக்குத் தோன்றாமல் கடந்துபோனபோதிலும், நம்மில் காணப்பட்ட நற்செய்கைகள் வருஷங்களைப்போல நம்மைவிட்டுக் கடந்துபோகாமலிருக்கவேணுமென்கிற எண்ணம் டிசெம்பர்௴ 31௳ நடு இராத்திரியில் நமக்கு உண்டாகலாம். ஆனால் பழைய வருஷத்தோடு துற்கிரியைகளை ஒழித்துவிடவும் வழியுண்டு. கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கோ, எல்லாப் பொறுமையையும், அன்பு தாழ்ச்சியையும், ஆகாத காரியங்களையும் அகற்றுவதற்கு அனுகூலமான சமயமாகிறது.

நம்முடைய ஜீவியமாகிய எழுத்துப் பலகையிலுள்ளவைகளை முற்றிலும் கலைத்துவிட்டுப், புது வருஷத்திற்குரிய புதுத் தீர்மானங்களை

வரைவோமாக. பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கிச் செல்லும் தன்மை நன்மையான விஷயங்களை நம்மில் விர்த்தியாக்குகிறதற்குக் காரணமாயிருப்பதால், அப்படிப்பட்ட ஆவி இந்தப் புது ஆண்டில் நமக்குண்டாவதாக. கடந்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தி, வரப்போகிற ஆசீர்வாதங்களுக்காகத் தேவகிருபையைத் தேடி, இப்புது வருஷத்தை ஆரம்பிப்போமாக.

## A PRAYER FOR THE NEW YEAR

## புது வருஷ ஜெபம்

எல்லா இருதயங்களுக்கும் மேலாக நீதியும், சுத்தமுமான இருதயத்தை விரும்புகிற பரிசுத்த ஆவியே, எங்களை வழிநடத்தி எங்கள் அறியாமையை எங்களுக்குத் தெரியக்காட்டி, எங்கள் பெலவீனத்தில் பெலன் தாரும். எங்கள் நாட்களைப் பாவக்கேட்டிலிருந்து விலக்கி ஆசீர்வாதமான அரிக்கட்டுகளை நாங்கள் திரளாய்ச் சேர்க்கும்படி எங்களுக்கு வேண்டிய பொறுமையையும் கிருபையையும் தாரும். ஜீவ வழிகாட்டியாகிய கிறிஸ்துவே, எங்களைச் செவ்வையான பாதையில் நடத்தும். மாறுபாடான வழிகளில் நடவாமலும் வஞ்சக ஆணைக்குட்படாமலும் எங்களுடைய ஜீவியத்தை ஒரு விளையாட்டாகப் போக்காமலும் எங்களுடைய இருதயங்களைப் பரம எருசலேமுக்கு நேராகத் திருப்பும். நீதியின் சூரியனாகிய கிறிஸ்து எங்களிலுதிக்கவும் உமது அப்போஸ்தலர்களைப்போல உமது ஊழியத்திற்கு எங்களை ஒப்புக்கொடுக்கவும் கிருபை செய்தருளும். ஆமென்.

## A NEW YEAR'S MESSAGE

## ஒரு புது வருஷ செய்தி

'இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவன் வீட்டில் நான் பிரவேசிப்பேன்.' வெளி. 3. 20.

நம்முடைய இருதயத்தையும் மனதையும் ஊடுருவிப் பாய்ந்து கவர்ந்துகொள்ளத்தக்க ஒருவிதமான சக்தி இந்த வார்த்தைகளில் இருக்கிறது. இவ்வார்த்தைகளின் கருத்தே மிகத் தெளிவாயிருக்கிறதினால், அதிலுள்ள ஒற்றுமையை விளக்கிக் காட்டுகிறதற்கு ஒரு



படம் நமக்கு அவசியமில்லை. ஆனாலும் கிறிஸ்து வாசலருகே காத்துக்கொண்டு நிற்கிறதுபோல் காட்டியிருக்கிற படம் முன்பக்கத்தில் பதிக்கப்பட்டிருக்கிறது. அவர் இந்தப் புது வருஷ வாசலில் வந்து ஒவ்வொருவருடைய இருதயத்திலும் தட்டுகிறார் அல்லவா?

கிறிஸ்துவின் ஜனனநாள் வந்து கடந்துபோய்விட்டது. அந்தத் தினம் எல்லாராலும் மிகவும் உற்சாகமாயும், சந்தோஷமாயும், களிப்பாயும் ஒரு விசேஷ விருந்துநாளாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவின் வருகையை நினைப்பூட்டுகிற அந்த நாளை அதன் உண்மையான கருத்தின்பிரகாரம் கொண்டாடப் பிரயாசப்படுகிறோமா? இவ்வளவு நாளும் அதன் தன்மையை நாம் சரியானபடி உணர்ந்திராவிட்டால் இப்பொழுதாவது இன்னொரு புது வருஷத்தைத் தொடங்குமுன் அதைப்பற்றிச் சிந்தித்து ஆராய்கிறது நம்முடைய கடமையல்லவா? கிறிஸ்துவுக்கு நம் இருதயத்திற்குள் பிரவேசிக்க இடங்கொடுக்கப்போகிறோமா? இதைக் 'கிறிஸ்தவ வருஷம்' ஆக்கப்போகிறோமா? மனுஷரின் வீட்டுவாசலருகேயல்ல, அதிலும் உறுதியாய் அடைபட்டிருக்கிற அவர்கள் இருதயத்தின் வாசலருகே நின்று கிறிஸ்து தட்டிக்கொண்டிருக்கிறதாய் எண்ணிக்கொள்வோம்.

தமக்குச் செவிகொடுக்கிறவர்களுக்கு, 'தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும்' என்று சொல்லுகிறார். எப்பொழுது கதவு திறக்கப்படும் என்று காத்துக்கொண்டே நிற்கிறார். நானும் நீயும் அவருக்கு இடங்கொடுக்கப்போகிறோமா?

இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவரிடத்திற்கும் அவர் வர ஆயத்தமாயிருக்கிறார். யோவான்ஸ்நானன் கேட்டதுபோல் நாம் ஒவ்வொருவரும், 'கிறிஸ்துவே, நீர் என்னிடத்திற்கா வருகிறீர்?' என்று கேட்கத் தயாராயிருக்கிறோமா? நம்மிடத்தில் வருகிறவர் யாரென்று விசாரிக்கிறது மாத்திரமல்ல, அவர் நம் வீட்டிற்குள் பிரவேசித்தபின் அவருக்குச் செய்யவேண்டிய கடமையென்ன என்றும் தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் பார்வைக்குத் தாழ்மையும் சத்தத்தில் அமைதியுமுடையவராயிருந்தாலும் அவர் அதிகாரம் பொருந்தியவராயிருக்கிறார். நம் வீட்டிற்குள் பிரவேசிக்குமுன் வெளியில் நின்று அனுமதி பெற்றுக்கொண்டு அதன்பின்பு உள்ளுக்கு வருகிறதினால் நாம் என்னவிதமாய் அவரை உபசரித்தாலும் அது போதுமானது என்று எண்ணிக்கொள்ளக்கூடாது.

நியாயாதிபதியின் தன்மை அவருக்கு உண்டு. நாம் சிந்திக்கிறதற்கு எடுத்துக்கொண்ட வசனத்திற்கு முன்னுள்ள வசனத்தைப் பார்த்தால் அதுவும் இதே கருத்தையுடையதுதான். ஒரு சாதாரண லௌகிக கிறிஸ்தவன் தன் ஆண்டவரை முகமுகமாய்ச் சந்திக்கும்பொழுது

என்னவிதமாய் நடத்தப்படுவான் என்பதைப்பற்றி அதில் சொல்லியிருக்கிறது.

உண்மையான ஒரு காரியத்தைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? அதென்னவென்றால், இயேசுவை நம் இருதயத்திற்குள்ளும் நினைவுகளின் அந்தரங்கத்திற்குள்ளும் பிரவேசிக்க இடங்கொடுத்த அந்நிமிஷமுதல், நம்முடைய குற்றங்குறைகளைக் கடிந்துகொண்டு புதுமாதிரியான ஜீவியம்பண்ண நாம் பிரயாசப்படுவோம். எந்தெந்தச் செய்கை அசுத்தமானதோ, பரிசுத்தமற்றதோ, தப்பிதமானதோ அவைகளையெல்லாம் அவர் கடிந்துகொள்ளுகிறார். சிட்சிக்கவேண்டும் என்ற ஆசையினால் அல்ல, நம்மேல் அவருக்கு இருக்கும் அன்பினால்தான் அப்படிச் செய்கிறார்.

வறுமை நிறைந்ததும் வசதியில்லாததுமான ஒரு சாதாரண வீட்டில் குடியிருக்கிறதற்கு அவருக்கு வெறுப்பில்லை. ஆனால் பொறாமை, மாம்ச இச்சை, லௌகிகம் முதலான பலவிதமான கொடிய பாவங்கள் நிறைந்த வீட்டில் அவர் குடியிருக்க விரும்பவேமாட்டார். அதைத் தெளிவாய்ச் சொல்லியும்போடுவார். அது நமக்கும் திட்டமாய்த் தெரியும்.

சாதாரண உலக வேலைகளையும் தேச சட்ட நிருபணைகளையும் மலைப்பிரசங்கத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடத்திவர முடியாது என்று சாதாரணமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால், இப்படிச் சொல்லுகிறதின் அர்த்தம் என்ன என்று நமக்குத் தெரியுமா? 'இயேசுகிறிஸ்துவுக்கு இந்த இருதயத்தில் இடமில்லை' என்று சொல்லுகிறதற்குச் சமானந்தான்.

மேற்சொல்லப்பட்ட அந்த வாசகம் எழுதியிருக்கிற இடத்தில் அவர் நிச்சயமாகவே பிரவேசிக்கமாட்டார். எந்தெந்த இடத்தில் இப்படிக் கிறிஸ்துவுக்கு இடங்கொடுக்க மனதில்லாதிருக்கிறார்களோ அவ்விடத்திலெல்லாம் அவருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயந்துபோய்த்தான் அப்படிச் செய்கிறார்கள் என்பதும் நிச்சயம்.

பிரியமுள்ள சிநேகிதரே! நான் உங்கள் மனதில் ஒரு காரியத்தைத் தெளிவாய் உறுதிப்படுத்தவேண்டும். அதென்னவென்றால், நம்முடைய அனுமதியின்றிக் கிறிஸ்து ஒருபோதும் நம் இருதயத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்; பிரவேசிக்கப் பிரயாசப்படவுமாட்டார். கட்டாயம்பண்ணிப் பிரவேசிக்கிற வழக்கம் அவரிடத்தில் கிடையாது. அவருக்கு அனுமதிகொடாமல் அவரைப் புறம்பே தள்ளுகிறதைப்போல் எளிதான காரியம் வேறே கிடையாது. ஆனால், அவரைப் பிரவேசிக்க விட்டபின் அவருக்குக் கீழடங்கி நடவாமல் இருக்க முடியாது. நம்மை நேசிக்கிறதினால், அவர் நம்மை நியாயமுந் தீர்ப்



பார். அவரை நம் இருதயத்தில் பிரவேசிக்கவேண்டாமென்று எப்பொழுது சொன்னோமோ, அப்பொழுதே அவர் பார்க்கக்கூடாத பாவங்களை மனதில் பேணி வைத்திருக்கிறோம் என்பது தெளிவாகிறது. கதவை விரிவாய்த் திறந்து அவரை உள்ளே பிரவேசிக்க விடுவோமாக. ஏனென்றால் அவர் வருகை நம்மைத் தாழ்த்துகிறதற்கல்ல, உயர்த்துகிறதற்கே ஏதுவாயிருக்கிறது. நம்மிலுள்ள பல குற்றங்குறைகளைத் தவிர்க்கவும், நம் இருதயத்தைப் பரிசுத்தம் செய்யவும், இன்னும் அவர் மனதிற்கேற்ற பல வித்தியாசங்கள் பண்ணவும் அவர் நம்மை ஏவலாம். பகற்காலத்திலேயே, சரியான தருணத்திலேயே, அவர் கற்பிக்கும் பாடங்களை நாம் கருத்தாய்ப் படித்துக்கொள்வோமாக.

புது வருஷம் பிறக்கப்போகிறது. அவர் வாசலருகே நின்று தட்டிக்கொண்டு நாம் எப்பொழுது திறப்போம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். வீணாய்த் தட்டிவிட்டு அவர் திரும்பிப்போகும்படி நாம் செய்துவிடவேண்டாம். அந்தக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நாம் புது வருஷப்பிறப்பிற்குமுன் புறம்பே தள்ளிவிடவேண்டாம். நம் இருதயத்திற்குள் அவரை ஏற்றுக்கொள்ளும்படி பிரயாசப்படுவோமாக!

## A NEW YEAR'S LYRIC

By L. I. Stephen, Madras

## புது வருடக் கீர்த்தனை

இராகம், கல்யாணி. ஆதிதாளம்.

### பல்லவி

தோத்திரம் தோத்திரமே!—கர்த்தா உமக்கே
தோத்திரம் தோத்திரமே!

### அநுபல்லவி

சாத்திரனே கருணை நேத்திரனே சுரர்கள்
தோத்திரனே துதிக்குப் பாத்திரனே அனந்தம்— தோத்தி.

### சரணங்கள்

1. போன வருடந் தற்காத்தீர்—எமை நடத்திப்
புது வருடத்திற் சேர்த்தீர்—
ஆனசுகம் பலமும் அளித்தன்புடன் கண் பார்த்தீர்
ஆதரையுற்ற துயர் அரும்பிணிகளைத் தீர்த்தீர்— தோத்தி.

2. இம்மட்டுந் தயைக் காட்டினீர்—எமதாயுளில்
இன்னுமோ ராண்டு கூட்டினீர்—
எம்மை யாதரித்துற்ற இடர்களெல்லா மோட்டினீர்
இன்பமுடனே நன்மையால் முடிசூட்டினீர்— தோத்தி.

3. துன்பத்தில் துணையாய் நின்றீர்—எங்களுக்குற்ற
தொல்லையில் உம்மருள் தந்தீர்—
இன்பமளித்தே ஆவிக்கேற்ற நன்மை புரிந்தீர்
இனஜனத்துடன் வாழ எந்தை மனமுவந்தீர்— தோத்தி.

4. புதிய நன்மைகளைத் தாரும்—இவ்வருடத்தில்
புவியில் வருமிடர் தீரும்—
அதிகமதிக மாசீரளித்தருள் விழிபாரும்
ஆதரையின் பாவம் அதமாகத் தயைகூரும்— தோத்தி.

5. உந்தன் நல்லருட் சொரியும்—சகலரையும்
உடற்றும் வினையைப் பிரியும்
இந்தப் பத்திரிகைமேல் இன்ப ஆசீர்பொழியும்
இதனைப் படிப்பவரெல்லார்க்குந் தயை அளியும்— தோத்தி.

## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி)

அப்போது வேதாபிமானி 'இதற்கு நீ ஆச்சரியப்படுகிறாயே. குரங்கு மிருகசாதியைச் சேர்ந்தது. மிருகத்துக்கோ பகுத்தறியும் சக்தியில்லையே. ஆனால் புத்தி சித்தம் ஆத்துமா என்ற திரிகரணங்களையும் தன்னுள் அடக்கப்பெற்ற மனுஷனோ ஜீவஜெந்துக்களுக்கெல்லாம் மேலாக எண்ணப்படுகிறான். அவன் வானசாஸ்திர, பூமி சாஸ்திரங்களையெல்லாம் கணிக்கிறான். யோசேப்பைப்போல வருங் காரியத்திற்குப் பொருள் சேர்த்து, காரியங்களை ஞானமாய் நடத்திக் கொள்வான்.

ஆனால் இந்தக் குரங்குகளின் சம்பவத்தைப்போல மனிதராகிய நமக்குள்ளே ஒரு காரியம் சம்பவிக்கிறபோது, அதாவது, ஒரு மரணமோ அல்லது குற்றத்துக்காக ஒரு தண்டனையோ, மற்றவர்களுக்கு நேரிடுகிறதைக் காணும்போது, நாமும் அந்த வானரங்களைப்போல நல்லுணர்ச்சியுள்ளவர்கள்போல, இனிமேல் நான் அப்படித் தப்பிதம், தகாத காரியங்கள் செய்யமாட்டேனென்று, நல்ல தீர்மானங்கள் பண்ணிக்கொள்ளுகிறது. ஆனால் அச்சம்பவங்கள் நமது



மனதைவிட்டு நீங்கும்போது நாம் பழையபடி மனம்போன போக்கிலே உழன்று கெட்டுப்போகிறது எவ்வளவு வெட்கமும் துக்கமுமான காரியம். இதைப்பற்றி இந்துக்கள் சொல்வதுபோலப் பக்தி வைராக்கியம், பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம் என மூன்று வைராக்கியத்தை மனுஷர் நல்லுணர்வோடு காட்டியும் அநேகமாய் நிறைவேற்றக்கூடாமல் தவறுகிறார்கள்' என்றார்.

இதற்குள்ளாக மழையும் நின்று வானம் வெளிவாங்கினது கண்டு இருவரும், சன்னியாசி பிரயாணம் திண்ணையை விட்டதும், என்பதுபோலச் சத்திரத்தைவிட்டு வழி நடந்தார்கள். வரும்போது சீதன் 'சத்திரம் வந்ததும் குரங்கு வேடிக்கை பார்த்ததும் நன்றாயிருந்தது. இன்னம்கூட எனக்கு வர மனமில்லை. அந்தத் தோட்டத்திலுள்ள புஷ்பங்கள் நல்ல வாசனையாயிருந்தன. நாளைக்குப் புறப்படுவீர்களென்று நினைத்துக்கொண்டிருந்தேன்' என்றான்.

அதுகேட்டு வேதாபிமானி 'சீதா! உன்னைப்போல உலகத்திலுள்ள ஏனையோர் இவ்வுலகமாகிய சத்திரத்திலே இருந்து, பிதாவின் வீட்டுக்குப் போக மனமற்று, புஷ்பத்தைப்போலச் சற்றுநேரம் மணமும் அலங்காரமுமாக இருந்து, பின்பு வாடிப்போகிறதும், வெளியே எறியப்படுவதுமான அற்ப மகிமைகளையும், சிற்றின்பங்களையும், பொருள்களையும் சதமென்றெண்ணி, குரங்குக் கூட்டத்தைப்போல உல்லாசத்தில் நாட்கழிக்க மனமுற்று, நாம் இருக்கும் உலகமாகிய சத்திரத்திலிருந்து போக மனம் வருந்துகின்றனர். ஆயினும் காலம் வரும்போது நான் விடமாட்டேனென்றாலும், உலகம் நம்மைவிட்டுப் போகும் காலமும் திடீரென வந்துவிடும் என்பதை நினைத்துக்கொள்' என்றார்.

அப்படியே வழி நடந்துபோகையில் ஒரு சிற்றூருக்குச் சமீபமாய் இரண்டொரு கடைகளில் வாழைப்பழம், முறுக்கு, வெற்றிலை பாக்கு, பொடி முதலியன வைத்து விற்றுக்கொண்டிருக்கிறதைச் சீதன் பார்த்துக்கொண்டே மிகுந்த அவாவுள்ளவனாய் வாயூறிக் கொண்டு போகிறதைக் கவனித்த வேதாபிமானி, மடியிலிருந்த பையைப் பார்த்துச் 'சில்லறையில்லையே முழுரூபாய்தானிருக்கிறது' என்று சீதன் கையிலெடுத்துக் கொடுத்து, 'ஒரு அணுவுக்குப் பழமும் ஒரு அணுவுக்கு முறுக்கும் வாங்கிக்கொண்டு மிச்சக்காசைச் சரியாய் எண்ணி வாங்கிவா' என்றார்.

அப்பொழுது சீதன் அதிக சந்தோஷத்தோடு ரூபாயை வாங்கிக் கொண்டு, கடையில் கொண்டுபோய்க் கொடுத்துப் பழமும் முறுக்கும் தரும்படி கேட்டான். அக்கடைக்காரன் அப்படியே கொடுத்துச் சில்லறையும் தந்தான்.

பையன் எண்ணிப் பார்த்து, அதிகமாக 4 அணா இருந்தது கண்டு, 'ஓய் கடைக்காரரே, நீர் தந்த துட்டில் 4 அணா அதிகம் கொடுத்து விட்டீரே' என்றான். அதுகேட்டுக் கடைக்காரன் ஆச்சரியப்பட்டு, சந்தோஷத்தோடே நாலு அணாவும் கால் ரூபாயாகக் கிடந்ததினாலே தவறியிருக்கும் என்று மறுபடியும் எண்ணிப் பார்த்து 'நீர் யாரையா? வேதக்காரர்போலிருக்கிறது. எங்களைப்போல இந்துக்களென்றால், கிடைத்தது லாபமென்றெண்ணி ஓட்டம் பிடித்துவிடுவார்களே' என்று சொல்லி நன்றியறிதலோடு அனுப்பிவிட்டான். கீதனும் சிரித்துக்கொண்டு, 'உம்முடைய துட்டு எனக்கு என்னத்துக்கு, உம்முடைய காசிலே ஒரு காசுக்கு ஆசைப்பட்டால் எங்கள் தெய்வம் எங்களுக்கு அதிலும் பதின்மடங்கு நஷ்டம் உண்டுபண்ணும்' என்று சொல்லிவிட்டு, குருவினிடம் வந்து சாமானை ஒப்புவித்து, நடந்த வரலாற்றைச் சொன்னான்.

அதுகேட்டு வேதாபிமானி, 'கீதா! நீ செய்தது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஏனெனில் நம்மிலும்கூடச் சிறு பையன்கள் கடைகளிலே செல்லாத துட்டுகளை, திருட்டுத்தனமாய்க் கொடுத்து மாற்றுவதும், துட்டுகளிலே ரசம் தடவி ஏமாற்றுவதும் உண்டே. அப்படியிருக்கையிலே கிடைத்த துட்டை 'வலியவந்த சீதேவியைக் காலாலே தள்ளலாமா' என்று வாங்கிக்கொண்டு நெட்டோட்டமாய் ஓடிவருவார்களே. அப்போது இதர மதஸ்தர்கள் கிறிஸ்தவர்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அது வெட்கமும் துக்கமுமான காரியம். நாம் எல்லா இடங்களிலும் நம்மைக் கிறிஸ்தவர்களாகக் காட்டிக்கொள்ளக் கவனமாயிருக்கவேணும். அப்போ கிறிஸ்துவுக்கு மகிமையும் நமக்குப் புகழும் கிடைக்கும்' என்றார்.

இப்படிப் பேசிக்கொண்டு வருகையிலே, நாற்சந்திப் பக்கம் வந்ததினால் போகிற திசை தெரியாமல் வழியருகே போவார் வருவாரைப் பார்த்து, தாங்கள் போகும் ஊருக்கு வழி எது என்று கேட்டார்கள். அப்போ ஒருவன் 'சிறிதுதூரம் போனால், அங்கே ஒரு கைகாட்டி மரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கே போனால் விபரம் தெரிய வரும்' என்றான்.

அப்படியே வேதாபிமானியும் கீதனும் நடந்து கைகாட்டி மரத்தைக் கண்டார்கள். அதிலே இருபுறமும் பலகை அடித்து, திசை காட்டி, முக்கிய ஊர்களின் பேரும் வரையப்பட்டிருந்தது. அது கண்டு இவர்கள் இருவரும் தாங்கள் நோக்கிய திசைக்கு நேராகப் பிரிந்துபோனார்கள். போகும்போது கீதன், 'ஐயா இங்கே வந்ததும் உங்களுக்கு யார் சொல்லித் தந்தது. ஒருவரையும் காணோமே. பலகையைப் பார்த்து வழியறிந்துகொண்டீர்களே' என்றான்.



அதுகேட்டு வேதாபிமானி சிரித்துக்கொண்டு, 'கீதா! நீ பலகையைப் பார்த்தாயே, அதில் எழுதியிருந்த எழுத்துக்களைக் கவனிக்கவில்லையா? அதில் நாம் போகும் திசை குறிப்பிட்டிருக்கிறதை நீ கவனிக்கவில்லைபோலும். இப்படித்தான் நமக்குப் பராபரன் தமது சித்தத்தை வெளிப்படுத்தவும், மோட்சப் பாதைக்கு நம்மை வழிநடத்தவும், சத்தியவேத புத்தகத்தை நமது கையில் தந்திருக்கிறார். நாம் அதைக் கவனத்தோடும் உணர்வோடும் வாசியாததினால்தான், நாம் அவருடைய பாதையில் செல்லத் தெரியாமல் திகைத்து, வழி தவறி மனம்போன போக்கிலே உழன்று அலைந்து கெட்டுப்போகிறோம்.

அன்றியும் எத்தனையோ போதகர், உபதேசிமார் இந்த வழிகாட்டி மரத்தைப்போல் பூர்வபாதை எதென்று விசாரித்து நடவுங்கள் என்றும், எரே. 6. 16-ல் மற்றவர்களுக்கு வழியைக் காட்டிப் போகிறார்கள். ஆனால் தாங்களோ தாங்கள் இருக்கும் இடத்தைவிட்டு ஒரு அடியாகிலும் நடந்து முன்மாதிரி காட்டக்கூடாதவர்களாயிருக்கிறார்கள்' என்று சொல்லிப் பின்னும் 'தமிழிலே ஒரு முதுமொழியுண்டு. அதாவது, உலகத்தில் ஏணி, தோணி, அண்ணாவி (உபாத்தியாயர்) இம்மூவருக்கும் ஈடேற்றமில்லையாம்' என்றார்.

அதுகேட்டு கீதன் 'அது என்ன ஐயா, அதன் அர்த்தம் எனக்குப் புலப்படவில்லையே' என்றான்.

அப்பொழுது வேதாபிமானி 'கீதா, நான் அதன் பொருளைச் சொல்லுகிறேன் கேள். முதலாவது சொல்லப்பட்ட ஏணி தன்னைச் சார்ந்து வருபவரை எல்லாம் மேலேற்றி மெத்தைகளை, கோபுரங்களைக் கண்டு களிக்கும்படி செய்கிறது. இது ஒருநாளும் மேலேறிப் பார்த்திராது என்பது நிச்சயம். இரண்டாவதான தோணி என்பதுவோ தன்னைக் கருவியாகக்கொண்டு, அக்கரைசேர வருபவரைத் தடையின்றிச் சுமந்துகொண்டுபோய் அக்கரை சேர்த்துவிடுகிறது. ஆனால் தானோ ஒருக்காலும் கரையேறிச் சுகிக்கிறதில்லை. அப்படியே அண்ணாவி என்றால் தமிழ்ப் பள்ளிக்கூட உபாத்திமாரைக் குறிக்கும். ஏனெனில் இக்காலத்து உபாத்திமாரிடம் படிக்கும் மாணவர் வரவரப் படித்துப் பெரிய உத்தியோகங்களை வகித்து, காலாகாலங்களில் தங்கள் திறத்துக்கும் வரத்துக்கும் தக்கபடி உயர்ந்த பதவிக்கு வந்துவிடுகிறார்கள். அப்படியே அவரிடம் படித்தவர்கள் இங்கிலீஷ் படித்து F. A., B. A. பரீட்சைகள் கொடுத்து லாயரும், டாக்டரும், தாசில்தாரும் ஆவர். ஆனால் அண்ணாவியோ பழைய அண்ணாவியாகத்தான் இருப்பார். இதைச் சில உபாத்திமாரைக் கேட்டால் அனுபோகத்திலே சொல்லக்கூடியவராவார்' என்றார்.

அதற்குள்ளாக அவர்கள் வரும் வழியிலே ஆறு ஒன்று குறுக்கிட்டது. அதுகண்டு தாங்கள் எப்படி வழி கடக்கிறது என்று இருவரும் ஆலோசிக்கையில், அங்கு ஒரு படவுக்காரன் ஆட்களை ஏற்றிக்கொண்டிருக்கிறதைக் கண்டு அவனருகிற் சென்று தங்களுடைய நோக்கத்தைத் தெரிவிக்க அவனும் அதற்கிணங்கித் தன் கூலியைப் பேசி வாங்கிக்கொண்டு ஏற்றிப்போவதாகச் சொன்னான். அதோடு 'படவு புறப்படுமுன்னதாக நீங்கள் உங்களுக்கு வேண்டியவைகளைச் சீக்கிரம் ஆயத்தப்படுத்திக்கொண்டு வாருங்கள். பொழுது சாய்ந்துபோயிற்று. இரவு 7 மணிக்கெல்லாம் படவு புறப்பட்டுவிடும். அதற்குள் வந்தாலாச்சுது. அதற்குப்பின் வந்தால் படவு கரையைவிட்டு வெகுதூரம் போய்விடும்' என்றான்.

(இன்னும் வரும்)

E. Manonmani Devadas.

## GOD FIRST

## முதலாவதாக தேவன்

புது வருஷம் தொடங்கியிருக்கிறது. வழக்கம்போல் அது வெகு சீக்கிரமாயும் அமைதியாயும் ஓடி முடிந்துவிடும். நாம் நன்றாய் யோசிக்குமுன் வருஷத்தின் மத்தி வந்துவிடும். ஆதியில் தொடங்கி தங்கள் காரியங்களையெல்லாம் செவ்வையாய் யோசித்து நடத்திவருகிறவர்கள்தான் கடைசியில் சரியான சித்திபெறுவார்கள். 'ஒருவரும் வேலைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.' பகற்பொழுதில் செய்யப்படுகிற வேலைகளெல்லாம் நல்ல வேலையாய் இருக்கும். ஆகையால் பகல் முழுவதையும் வேலை செய்கிறதற்காக நாம் வைத்துக்கொள்ளுகிறோம். ஏனென்றால், இந்த உலகத்தில் நன்றாய்ச் சித்திபெற்றிருக்கிற அநேகர் அதிகாலையில் எழுந்து வேலை தொடங்கினவர்களாயிருக்கிறார்கள்.

தேவனுக்கும் அவருடைய வேலைக்கும் நாம் எவ்வளவு அதிகமாய் நம்முடைய நேரத்தைச் செலவிடுகிறோமோ, அதற்குத் தக்கதாய்ச் சித்திபெறுவோம். ஆகையால் கர்த்தருடைய வசனத்தை வாசிப்பதோடும் ஜெபத்தோடும் ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒரு வாரம் முழுவதையும் நன்றாய்ச் செலவிடுவதற்கு ஏதுவாய் வாரத்தின் முதல் நாளாகிய ஓய்வுநாளைக் கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்குவது மிகவும் அவசியம். அதை லீவு நாளாய் அல்ல, பரிசுத்த நாளாயும், சந்தோஷத்திற்கென்று அல்ல, வணக்கத்திற்கென்றும் செலவிட்டால்தான் அவருக்கென்று



செலவிடுவதாய் இருக்கும். தேவாலயத்திற்குப் போய்க் கர்த்தரை ஆராதிப்பதிலும், சன்மார்க்கத்திற்கடுத்ததும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கேற்றதுமான புஸ்தகங்களை வாசிப்பதிலும், ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களில் போய்ப் போதிப்பது, வியாதியஸ்தரைச் சந்திப்பது, சன்மார்க்க தாள்பிரதிகளைப் பிறருக்குக் கொடுப்பது முதலிய ஆண்டவருக்கடுத்த வேலைகளைச் செய்வதிலும் அந்நாளைச் செலவிடவேண்டும்.

பின்னும் கர்த்தருடைய வேலை நடத்தப்படுவதற்காகப் பணஉதவி செய்யவேண்டியதும் நம்முடைய கடமை. கர்த்தருக்குத் தேவை என்ன என்ன உண்டு என்று யோசித்து அதை முதலில் கொடுத்துத் தீர்த்தால், வரவர நம்முடைய காரியங்களெல்லாம் குறையில்லாமல் சரிவர நடந்தேறும். வருஷம் முழுவதிலும் நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் கர்த்தருக்கென்று நம் நேரத்தையும் பெலத்தையும் செலவழித்தால், கடைசியில் உண்மையான சந்தோஷமும் சித்தியும் அடைவோம். அவரும் நம் பூரண சிநேகிதராய் விளங்குவார். தேவனுடைய புஸ்தகத்தை அன்றாடகமும் அதிகாலையில் வாசிக்க வேண்டியதைப்பற்றி மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். இந்த நல்ல பழக்கத்தைக் கைக்கொள்வதினால் தேவனுடைய வார்த்தையும் எண்ணமும் எப்பொழுதும் மனதில் குடிகொள்ளும்; தீமையானவை யாவும் புறம்பே தள்ளப்படும்; மனதில் தோன்றும் பல எண்ணங்களையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கிறதற்கு ஏதுவாகும். இவ்விதமாய் நம் மனசு அடக்கப்பட்டு, நம் இருதயம் சுத்தம்பண்ணப்பட்டு, நம் நடக்கை முழுவதும் விர்த்தியடைகிறது. தேவனுடைய வசனத்தைப் புறம்பே தள்ளுவதைவிட நாம் வாசிக்க ஆசைப்படும் பலவிதமான பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும், கட்டுக்கதைகளையும் தூரவைத்துவிடுவது நலமாயிருக்கும். அன்றாடகமும் தவறாமல் வேதம் வாசிப்பது இன்றியமையாதது. எல்லாக் காரியத்திலும் தேவனுக்கு முதல் இடத்தை நாம் அளிக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு நல்ல பழக்கத்தைத் தொடங்குவதற்கு மற்றெல்லாக் காலத்தைவிட ஒரு புது வருஷத்தின் ஆரம்பம் மிகவும் ஏற்றதாயிருக்கிறதல்லவா?

## IN THE SWISS MOUNTAINS

## சுவிச்சர்லாந்து தேசத்து மலைகள்

இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு மிசி அம்மாள், சுவிச்சர்லாந்து தேசத்திற்குப்போய்ப் பல விதமான மலைக்காட்சிகளைப் பார்த்துப் படம்



எழுதும்படியாகப் போயிருந்தார்கள். ஒருநாள் இந்த அம்மாளும் ஒரு துரையுமாக மலைக்குப்போய்ப் படம் வரைந்துகொண்டிருந்தார்கள். திரும்பும்போது துரை ஏதோ அலுவல் நிமித்தம் வேறே வழியாய்ப் போக நேரிட்டது. அப்போது அவர் அந்த அம்மாளைப் பார்த்து, 'அம்மா, நீங்கள் தனிமையாய்ப் போய்விடுவீர்களா? இங்கே கள்வர்கள்



அதிகம். பத்திரமாய்ப் போகவேண்டும்' என்றார். அம்மாள் அவரைப் பார்த்து 'எனக்குப் பயமில்லை ஐயா, நான் இருட்டு ஆகுமுன்னே ஊர் போய்ச் சேர்ந்துவிடுவேன், வழியும் எனக்குத் தெரியும், நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்' என்று அவருக்குச் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

அவர்கள் கொஞ்சத்தூரம் தைரியமாய்ப் போனபிற்பாடு எதிரேயிருந்த மலைச்சார்பிலிருந்து இரண்டு மனிதர் எதிர்ப்பட்டார்கள். இவர்கள் ஏதோ இரகசியமாய்ப் பேசிக்கொண்டார்கள். தன்னை எதிர்க்க வகைபார்க்கிறார்கள் என்று இவர்களுக்குத் திட்டமாய் விளங்கிற்று. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? பரலோகத்திலிருக்கிற பிதாவை நோக்கிப் பாதுகாப்புக்காக ஒரு ஊக்கமான ஜெபம்மாத்திரம் செய்தார்கள். ஒரு பெரிய சத்தம் கேட்டது. மலையிலே பெரும்பிளப்பு உண்டாகிவிட்டது. ஆதியிலே சிவந்த சமுத்திரத்தை இரண்டாய்ப் பிரித்த கடவுள் மலைகளையும் பிரித்துவிட்டார். கள்வர் ஒரு பக்கமும் அந்த அம்மாள் ஒரு பக்கமுமாய்ப் பிரிந்துவிட்டார்கள். அந்த அம்மாள் சுகமாய்த் தம் வழியே வீடு போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் இந்த சங்கதியைத் தம் சிநேகிதரிடம் சொன்னபோது எல்லாருக்கும் அதிக ஆச்சரியம் உண்டாயிற்று. அந்த நாள்முதல் அந்த அம்மாளுக்கு ஆண்டவர்மேலே உள்ள பற்றுதலும் விசுவாசமும் அதிகரித்தது. அதை அவர்கள் மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள்.

## LIZARDS

## பல்லியும் அதன் இனங்களும்

நம் வீடுகளில் வெகு சாதாரணமாய்க் காணும் பிராணிகளில் தீங்கற்றது பல்லி. அது 'லொட், லொட்' என்று சத்தம் செய்யும். அதைக் கெவுளி என்று சொல்வார்கள். அதற்கு இந்துக்கள் பலன் பார்ப்பதும் உண்டு. சாதாரண பஞ்சாங்கத்திலும் 'பல்லி சொல்லுக்குப் பலன்' என்றதன்கீழ்க் காணலாம். இப்படியிருந்தும் இப்பல்லியையும் அதன் இனத்தைச் சேர்ந்த ஓணான், ஓந்தி, உடும்பு இவைகளையும்பற்றி உள்ள விசித்திரங்கள் பலருக்குத் தெரியாது. அது விஷயம் சிறிது இங்கே சொல்வோம்.

### மரப்பல்லிகள்

வீட்டில் நாம் அனுதினமும் காணும் பல்லியைப்போலவே சிறிது பருத்து இருக்கும் பல்லிக்கு 'மரப்பல்லி' என்று பேர். மரப்பல்லி

களைத் தோட்டப்பல்லி என்றும் சொல்லலாம். அவை வெளியில் போயே இரைதேடித் தின்கின்றன. சில சமயங்களில் அவைகள் வல்லூறு, காகம், கிரி, நரி ஆகிய இவைகளுக்கு இரையாய்விடுகின்றன. சாதாரணப் பல்லிகளுக்கும் ஓணானுக்கும் வித்தியாசம் அதிகம். பல்லிகள் பகலிலே நடயாடி, இருட்டுக்கு முந்தியே தங்கள் தங்கள் வளைபோய்ச் சேரும். அவற்றிற்கு இரவில் கண் தெரியாது! இந்த மரப்பல்லிகளின் வால் வெகு நீளம். உடலைப்போல் இரண்டத்தனை இருக்கும். ஆனால் அது ஓணான் வாலைப்போல் சுருட்டவாவது திருப்பவாவது முடியாது. இவற்றைத் தவிர மரங்களிலும் புதர்களிலும் வசிக்கும் பல்லிகளும் பலஜாதி உண்டு.* ஆபத்துக்காலத்தில் அவை அணில்களைப்போலவே கிளைக்குக் கிளை தாவித் தாவிப்போய் வெகு சாமர்த்தியமாய்த் தப்பித்துக்கொள்கின்றன.



தரையின்மேலேயே சாதாரணமாய் வாசஞ்செய்யும் இன்னொரு வகைப் பல்லியும் உண்டு. நல்ல மத்தியானவேளையிலும் வெய்யில் நன்றாய்ப் படாத பாறைகள் உள்ள இடங்களில் காணும் வேறொரு விதப் பல்லியும் உண்டு. இப்படிப் பாறைகளின் ஓரங்களிலும் அதன் அக்கம்பக்கங்களிலும் காண்கிற பல்லிகள் வெவ்வேறு நிறமுள்ளவைகளாய் இருக்கின்றன. அந்த ஜாதியில் சிலவற்றிற்கு முதுகில் கறுப்புக் கோடுகளும், மற்றவற்றிற்கு ஊதாக் கோடுகளும், வேறு சிலவற்றிற்குச் சிவப்புக் கோடுகளும் இருக்கும். அல்லது உடல் முழு



வதும் பசுமையாய் இருப்பவைகளும் உண்டு. இந்த ஜாதியைத்தான் இந்தியாவில் மரப்பல்லி என்றும், தோட்டப்பல்லி என்றும் வழங்குகிறார்கள். இப்பல்லிகள் பட்டுப்பூச்சி அல்லது வண்ணாரப்பூச்சி போன்ற அழகான பூச்சிகளைப் பிடித்து நன்றாய் மென்று தின்னும். ஜீவவர்க்க சாஸ்திரிகள் இந்தவிதப் பல்லியில் இருநூறுவகை இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இனி நிறத்தைப் பார்ப்போம். பச்சோந்தி ஒன்றே நிறத்தை மாற்றி நமக்குள் ஆச்சரியத்தை உண்டுபண்ணுவது என்பது ஸஹஜமாய் எல்லோரும் அறிந்தது. ஆனால் நன்றாய் உற்றுப் பார்ப்பவர்களுக்கு, தோட்டப் பல்லிகளிலும் சில அந்தப் பச்சோந்தியைப் போலவே அவ்வளவு சீக்கிரத்தில் தங்கள் நிறத்தை மாற்றிக்கொள்ளுகின்றன என்பது தெரியலாகும். இந்தப்பிரகாரம் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பல்லிகளுக்குள்ளாக ஆண்பல்லிகளுக்கே தலையில் ஒரு மாதிரி குஞ்சம் உண்டு. அந்தக் குஞ்சம் முதுகு பூராவுமே படர்ந்திருக்கிறது. பச்சோந்தியைப்போலவே அதையொத்துள்ள பல்லிகளும் தங்கள் தொண்டைகளைக் காற்றினால் உப்பச்செய்யவும் கோபக்குறி காட்டவும் தெரிந்திருக்கின்றன.

பல்லிகளில் பல மிருதுவான பூமியின்கீழ் இரண்டோரடி ஆழத்தில் முட்டையிடுகின்றன. அம்முட்டைகளைத் தோல் மூடியிருக்கும். இவை ஓணான் முட்டைகளைப்போல் சாமான்யத்தில் உடைபடா. மரப்பல்லிகள் அநேக பக்ஷிகள் இடும் முட்டைகளைத் தின்றுவிடுகின்றன. சில சமயங்களில் பலவிதப் பூக்களையும் தின்கின்றனவாம். என்றாலும் பிரதம ஆகாரம் பூச்சிகளே. பல்லியொன்று தேனீ ஒன்றைப் பிடித்து நன்றாய்க் ‘கரகர’ என்று மென்று தின்னும். மழைகாலத்தில் மரப்பல்லிகளும் பச்சோந்திகளைப்போல் வெட்டுக்கிளிகளை ஏராளமாய்த் தின்னும்.

## பச்சோந்திகள்

இவைகள் ஈரமுள்ள இடங்களில் இருப்பதில்லை. அவை வெறும் தரையாக இருந்தாலும் சரி, புல் தரையாக இருந்தாலும் சரி, அவற்றின் ஆகாரம் அற்பபூச்சி, எறும்பு ஆகிய இவைகளே. பச்சோந்தியிலும் வகை அநேகம் உண்டு. அவற்றில் பெரியது எட்டு ஒன்பது அங்குல நீளமும் சாதாரண மரப்பல்லியைப்போல் இரண்டத்தனை தடிப்பும் இருக்கும். சிறிய ஜாதிப் பச்சோந்தி நாலு அங்குலமே இருக்கும். அது ஓடும்போது அதன் கால்கள் நமக்குத் தெரியாதபடி அவை அவ்வளவு சின்னவை. பாம்பு நகர்வதுபோல் நகரும் என்ன வேண்டும். மத்திய மாகாணங்களில் ஓரடி நீளப் பச்சோந்திகள் சர்வ சாதாரணம்.

• நீண்ட உடலும், வாலும், தடித்த தோலும், கூர்மையான கண்களும், வேகமாய் ஓடும் கால்களும் உள்ள உடும்பு சாதாரணமாய்ச் சிறு முதலையைப்போலவே காணும். அதைத் ‘தரைமுதலை’ என்றே சொல்லிவிடலாம். முதலை தான் பிடித்த எதையும் லேசில் விடாது, உடும்பும் அப்படித்தான். ஆனால் அது தண்ணீரில் இது தரையில்: அவ்வளவுதான், பிடியில் இரண்டும் ஒரே பிடி. அதுவும் விடாப்பிடி! இதனால் உடும்பு ஒருவிதத்தில் நல்ல உபயோகமுள்ள பிராணி என்னலாம். பூனாவுக்குச் சமீபத்தில் ஸிங்கர் என்றொரு கோட்டையை மஹாராஷ்டிரர் பிடிக்கவேண்டி வந்தபோது கோட்டைச் சுவர்களைக் கடந்து செல்லமுடியாதிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் ஓர் உடும்பின் இடுப்பில் கயிறு ஒன்று கட்டிக்கொண்டு உடும்பை வீசி மதிலின் உச்சிக்கு எறிந்தார்கள். அது அங்கேபோய்ச் சேர்ந்ததும் தன் ஸ்வபாவம்போல் கிடைத்த பிடியை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டது. கீழிருந்தவர்கள் அந்தக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஒரு பையனைத் தொத்தித் தொத்தி ஏறச்சொல்லி உச்சியில் இருந்த பெரிய மரம் ஒன்றில் இவர்கள் எறிந்த பலத்த வடக்கயிற்றைக் கட்டிவிட்டான். பிறகு சிப்பாய்கள் அநேகர் அதுபற்றி மேல் ஏறிப்போய்க் கடைசியில் கோட்டையைக் கைவசப்படுத்திக்கொண்டார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1913 ௵ ஜனவரி ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பு. | 1 சாமு. | 1. | 1—8 | 11 ச. | 1 சாமு. | 6. | 1—9 | 21 செ. | 1 சாமு. | 10. | 17—37 |
| 2 வி. | ” | 1. | 9—18 | 12 ஞா. | ” | 6 | 10—21 | 22 பு. | ” | 11. | 1—8 |
| 3 வெ. | ” | 1. | 19—28 | 13 தி. | ” | 7 | 1—8 | 23 வி. | ” | 11. | 9—15 |
| 4 ச. | ” | 2. | 1—11 | 14 செ. | ” | 7. | 9—17 | 24 வெ. | ” | 12 | 1—8 |
| 5 ஞா. | ” | 2 | 12—21 | 15 பு. | ” | 8. | 1—9 | 25 ச. | ” | 12. | 9—15 |
| 6 தி. | ” | 3. | 1—14 | 16 வி. | ” | 8. | 10—22 | 26 ஞா. | ” | 12. | 16—25 |
| 7 செ. | ” | 3. | 15—21 | 17 வெ. | ” | 9. | 1—10 | 27 தி. | ” | 13. | 1—7 |
| 8 பு. | ” | 4. | 1—11 | 18 ச. | ” | 9. | 11—24 | 28 செ. | ” | 13. | 8—16 |
| 9 வி. | ” | 4. | 12—22 | 19 ஞா. | ” | 9 | 25-27 | 29 பு. | ” | 14. | 1—10 |
| | | | | | | 10. | 1—8 | 30 வி. | ” | 14. | 11—23 |
| 10 வெ. | ” | 5. | 1—12 | 20 தி. | ” | 10. | 9—16 | 31 வெ. | ” | 14. | 24—32 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912



LORD PENTLAND, THE NEW GOVERNOR OF MADRAS, AND HIS FAMILY

# மாதர் போதினி

No. 182 பெப்ருவரி 1913 No. 2



## A VISIT TO MOUNT SINAI

## சீனாய்மலை யாத்திரை

உலகத்திலுள்ள பரிசுத்த மலைகள் பலவற்றில் சீனாய்மலையே பரிசுத்தம் என்று தாராளமாய்ச் சொல்லலாம். மோசே தேவனுடைய மகிமையைக் கண்டதும், பத்துக்கற்பனைகளை வாங்கினதும் அந்த மலையின்மேலே தான். இவ்விரண்டு விசேஷங்களையும் தவிர அந்த சீனாய் தீபகற்பத்திலுள்ள பரிசுத்தமான கட்டடங்களும், அதிசயமான காட்சிகளும் நமது மனதைக் கவரத்தக்கனவாய் இருக்கின்றன. இப்படிக்கெல்லாம் மகிமைபொருந்திய சீனாய்மலை தக்க யாத்திரை ஸ்தலமாகும்.

அவ்விடத்துக் காட்டுப் பாதைகள் வெகு இடுக்கானவை. அங்குள்ள நிலங்கள் அதிக செழிப்புள்ளவை. அவ்விடத்திலுள்ள ஜனங்கள் யாவரும் கூடாரவாசிகளே. இம்மலைத்தேசம் எகிப்துதேசத்து யுத்த உத்தியோகஸ்தர்களால் ஆளப்படுகிறது.

இப்படிப்பட்ட சீனாய்மலைக்குப் போக விரும்புகிறவர்கள் எகிப்து தேசத்தில் முக்கிய பட்டணமாகிய கெய்ரோவில் இருக்கும் அதிகாரிகளிடமிருந்து உத்தரவுபெற்றுத் தீரவேண்டும். இந்த உத்தரவோடே, சீனாய்மலையின் செங்குத்தான பக்கங்களில் இருக்கும் பரிசுத்த கதரேன் மடத்து சந்நியாசிகளுக்கு ஒரு முகவுரைக் கடிதமும் சம்பாதித்துக் கொண்டுபோவது மேல். அந்த மலையில் வழிகாட்டவும், வேறே சௌகரியங்களைத் தேடித்தரவும் அவர்கள்தான் உதவவேண்டும். மற்றப்படி முடியாது

இவ்விரண்டையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டுப்போய், இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த இடத்தையும், பார்வோனும் அவனுடைய சர்ப்பசேனையும், அமிழ்ந்துபோன இடத்தையும், கடந்து சென்று, கப்பலேறி ஸூயஸ் என்ற ஊரிலிருந்து டார் என்ற இடம்போய்ச் சேரவேண்டும். மெக்காவிலிருந்து திரும்பிவரும் பிரயாணிகளில் ஜூரம் முதலிய தொத்து வியாதியஸ்தரை டாரில் நிறுத்திவிடுவது வழக்கம். அப்படிப்பட்டவர்களைத் தங்கவைக்க நல்ல நல்ல கட்டடங்கள் அங்கே உண்டு. டார் வனாந்தரத்தைக் கடந்து மேலே போக ஒரு ஒட்டகம் அமர்த்திக்கொள்ளவேண்டும்.

எல்கா வனாந்தரம் அல்லது எல்கா சமவெளியைக் கடந்துவிட்டால் வாடிஹிப்ரான் என்ற செழிப்பான பாகங்களை அடையலாம். முன்காலத்தில் இது வனாந்தரம் என்று வழங்கிவந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் எகிப்தில் விட்டுவந்த இறைச்சிக்காகவும் அப்பத்துக்காகவும் மோசே ஆரோன் என்பவர்களுக்கு விரோதமாய் முறுமுறுத்த இடம் இதுவே. அந்த முறுமுறுப்புகளைக் கேட்டுக் கடவுள் அடுத்த நாற்பது வருஷங்களுக்கும் மன்னாவை வருஷிக்கச் செய்ததும் இங்கேயேதான்.

இதைவிட்டால் வாடிபிரகன் என்னும் ஊருக்கு எல்பூவாய் என்பதைக் கடந்து போகவேண்டும். அந்த எல்பூவாயுக்கு அரபிபாஷையில் 'சிறு பாதை' என்று அர்த்தம். இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலைக்குப் போனபோது, அவ்வளவு திரளான பேர் போக வேறே வழியில்லாமல் இந்த வழியாகத்தான் போனார்கள். வேதத்தில் சொல்லியிருக்கிற ரெவிதீம் என்ற இடத்தில் இஸ்ரவேலர் அமலேக்கியரோடே சண்டைசெய்து அவர்களை ஜயித்த சந்தர்ப்பத்துக்கு ஒத்துவருகிறது. அந்த இடத்திற்காக அவர்கள் அப்படிச் சண்டை



செய்தது தகுதியானதுதான். 'நல்ல மூத்து' என்று அழைக்கப்படும் பிரான் வனாந்தரத்திலுள்ள செழிப்பான இடங்களின் துவக்கம் அது. அதில் இப்போதும் தென்னந்தோப்புகள் அநேக மைல் கணக்காய் இருக்கின்றன. அவ்விடத்து ஜனங்கள் யாவரும் கூடாரங்களில் சஞ்சரிக்கிறார்கள்.

இதிலிருந்து போனால் ஒருநாள் பிரயாணத்தில் சமுத்திரமட்டத்துக்கு 5,000 அடி உயரத்திலும், அந்த மலைச் சிகரத்துக்கு 2,000 அடி கீழேயும் உள்ள இடத்தில் கட்டியிருக்கிற பரிசுத்த கதரேன் மடத்திற்கு கரடுமுரடான வழிகளின்வழியாய்ப் போய் வந்துசேரலாம். மோசேயின் மலை அல்லது ரேபெல்மூசா என்னும் மலைச் செங்குத்துச் சரிவுகளில் உள்ள அந்த மடமானது பார்க்க வெகு விநோதமாய் இருக்கிறது. அது பார்வைக்கு ஒரு மலைக்கோட்டை என்றிருக்கும்படியாக அதைச் சுற்றிப் பெரிய சுவர்கள் இருக்கின்றன. நாலாவது நூற்றாண்டில் ஜஸ்டினியன் என்னும் சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்த இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினான். அவன் அநேக ரோமன் எகிப்திய அடிமைகளைப் பெண்சாதி பிள்ளைகளுடனே அந்தக் கிறிஸ்தவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படி அந்த மடத்துக்கு அனுப்பி இன்னும் அதிகமாய் ஸ்திரப்படுத்தினான். அந்தச் சந்ததியார் இன்னும் அங்குள்ள சந்நியாசிகளுக்கு ஊழியஞ்செய்துவருகிறார்கள். அந்த மலையின் உச்சியை அடைய சந்நியாசிகள் கட்டியுள்ள ஒழுங்கில்லாத மூவாயிரம் படிக்கட்டுகளையும் ஏறியேறிப் போகவேண்டும்.

அநேக விநோதமான இடங்களைக் கடந்தபிற்பாடு ஒரு வளைவான வழிக்கு வந்துசேர்வோம். அதிலிருந்துதான் பாதை போகிறது. வெகுகாலத்துக்குமுன்னே பரிசுத்த ஸ்டீவன்ஸன் என்னும் சந்நியாசி வெகு வைராக்கியத்துடன் அந்த வாசலைக் காத்துக்கொண்டிருந்தார். அந்தப் பரிசுத்த மலையின்மேல் ஏறுவதற்குமுன் ஒருவன் தான் பாத்திரவான் என்றும் யோக்கியன் என்றும் ரூபிக்கவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் எவனையும் ஏறவிடமாட்டார்கள். அப்படி ரூபித்தபின் அவனுக்கு சாக்கிரமெந்தைப் பரிமாறி அவன் மலையின் மேல் ஏற உத்தரவு கொடுப்பார்கள். ஒருநாள் அந்த ஸ்டீவன்ஸன் இருந்த இடத்திலேயே செத்துக்கிடந்ததாகக் கண்டார்கள்.

அந்தப் பாதை பெரிய உருண்டைக் கற்களுள்ளே அங்கும் இங்கும் வளைந்துபோய் ஒரு சிறு மைதானத்திற்குக் கொண்டுவந்துவிடுகிறது. அந்த மைதானத்தின் மத்தியில் ஒரு பெரிய சீப்புரு மரமும் ஓர் உருண்டையான மலையும் இருக்கின்றன. இங்கேதான் மோசே இஸ்ரவேல் மூப்பரைக் கூடிவரச் செய்தது. எலியா தீர்க்கதரிசி

எசபேலுக்குப் பயந்து ஓடிப்போகும்போது தங்கின குகையைக் குறிப்பிடும்படியாக இங்கே ஒரு கற்கோவிலும் இருக்கிறது. அந்தக் குகையில் அவர் மெல்லிய சப்தத்தையும் கேட்டார். இந்த இடத்திலிருந்து உச்சி மிகவும் செங்குத்தாய் இருக்கும். மோசே தேவனுடைய மகிமையைப் பக்கத்தில் கடந்துபோகக் கண்டதற்காகவும், அங்கே பத்துக்கற்பனைகளைக் குறிப்பதற்காகவும், சமுத்திர மட்டத்துக்குமேல் 7000 அடியிலே அந்த மலை உச்சியில் ஒரு கற்குவியல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் அவ்வளவு பெரிய மலைத்தொடர்ச்சியுள்ள அந்த இடத்தில் நின்றால் இஸ்ரவேலருடைய காலங்களில் நடந்த அதிசய காரியங்கள் அநேகம் நினைவுக்கு வருகின்றன. அது மெய்யாகவே ஒரு பரிசுத்தமான இடம் என்பதற்கு என்ன சந்தேகம்!

ஆரோன் பொன் கன்றுக்குட்டியை நிறுத்திய 'ஆரோன் மலை' என்னும் இடமும், மோசே சீனாய்மலை ஏறினபோது இஸ்ரவேல் ஜனங்கள் பாளயம் இறங்கிய எர்ராஹ என்னும் சமபூமியும் அந்த மலையின் அடிவாரத்தில் இருக்கின்றன. பின்னே சொல்லியது தேவனுடைய மலைக்கு நேரே சரிந்துள்ள ஒரு பெரிய சமபூமியாய் இருக்கிறது. அந்தச் சமபூமியின்மேல் வெகு சிறிய பொடிக்கற்கள் இருப்பதால் அது சாதாரண தரைபோல் இருக்கிறது. இந்தச் சமபூமியோடு சேர்ந்த பக்கத்து விஸ்தீரணமான பள்ளத்தாக்குகளைச் சேர்க்காமல் இந்தச் சமபூமிமாத்திரம் ஒவ்வொருவருக்கும் நிற்க ஒரு சதுரகஜ இடம்விட இரண்டுகோடி ஜனங்கள் நிற்கக்கூடும் என்று மதிக்கப்பட்டது.

கடைசியாக சீனாய்மலையில் உள்ள சந்நியாசி மடத்தில் பூர்வகாலத்தில் உள்ளதும் மிக உபயோகமுள்ளதுமான கையெழுத்துப் பிரதிகள் கண்டெடுக்கப்பட்டதை நாம் காணலாம். கி. பி. 400-ம் வருஷத்துக்குப் பின் கிரேக்க பாஷையில் எழுதிய பழைய புதிய ஏற்பாடுகளின் கையெழுத்துப் பிரதிகள் இவையாகும்.

## CHILD TRAINING

## குழந்தைகளை வளர்த்தல்

'அப்பா! குழந்தாய்! இதைச் செய்' என்று அவனிடம் ஒருதரத்திலேயே சொல்லிவிடு. கட்டளையைத் திருப்பித் திருப்பிப் பலதரம் சொல்லாதே. பலதரம் ெவினால் அவன் இளக்காரம் கண்டுகொள்வான். ஒருதரம் சொன்னவுடனேயே அவன் அதைச் செய்யாவிட்டால் தண்டனை கட்டாயமாய் அடைவான் என்பது அவனுக்கு நிச்சயமாய்த்



தெரிந்திருக்கட்டும். இதில் அவன் உன்னை 'ஏன்? என்னத்திற்காக?' என்று காரணங்கேட்க இடந்தராதே. அநாவசியமாக அற்ப குற்றங்களைக் கண்டுபிடிப்பதை நீக்கிவிடு.

சில குழந்தைகள் தங்கள் இஷ்டத்திற்கு மாறாக ஏதாவது நடந்துவிட்டால் அவைகள் தரையின்மேல் விழுந்து, புரண்டு புரண்டு, சத்தமிட்டு அழுவதைக் கண்டிருக்கிறோம். இதற்குச் சாதாரணமாய்த் தரும் மருந்து அடி. ஆனால் இந்த மருந்தைவிட நல்ல தந்திரம் ஒன்றுண்டு. அதாவது அப்படிப்பட்ட காலங்களில் அதை நாம் கொஞ்சமும் கவனியாததுபோல் வெளியே வந்து கதவைப் பூட்டிவிட வேண்டும். அப்போது குழந்தைகள் கத்தி ஓய்ந்து, பின் 'இப்படிச் செய்வதால் நமக்குத்தான் வலிக்கிறது; நம்மைக் கவனிப்பாரைக் காணோம்,' என்பதை உணர்ந்து அழுகையை நிறுத்திவிடும். இந்த விதமாக இரண்டொருதரம் செய்தால் எப்படிப்பட்ட துஷ்டக்குழந்தையும் சரிப்பட்டு வழிக்கு வந்துவிடும்.

குழந்தைகளுக்குக் கட்டளையிடுவதில் இன்னொரு விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது அவர்களை ஏவும்பொழுது அவர்களுடைய மனதுக்குப் பயத்தை உண்டாக்கல் ஆகாது என்பதாம். இப்படியின்றி மிரட்டியே கட்டளையிட்டு வேலையும் வாங்கிவந்தால் நாளடைவில் மிரட்டாமல் நாம் ஒரு அற்பகாரியத்தைச் சொன்னால் அதை அக்குழந்தைகள் அசட்டைபண்ண நேர்ந்தாலும் நேரும். இதோடு நாம் விதிக்கமுடியாத எந்தவிதத் தண்டனையையும் சொல்லி மிரட்டல் ஆகாது.

## CONVERTED IN PRISON

## சிறைச்சாலையில் குணப்பட்ட ஓர் இந்து ஸ்திரீ

சில வருஷங்களுக்குமுன்னே வட இந்தியாவைச்சேர்ந்த சிராம்பூர் என்னும் மாகாணத்தில் மிகவும் நிர்ப்பாக்கியரான ஒரு குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் பத்துப் பன்னிரண்டு பிராயமடைந்திருந்த சமயத்தில் தெய்வாதீனமாய் ஒருமாத காலத்திற்குள் தன் தாயையும் தன் தகப்பனையும் தன் உடன்பிறந்த இருசகோதரரையும் விஷபேதி என்னும் கொடிய வியாதியின்மூலமாய் இழந்துவிட நேரிட்டது. நிர்ப்பாக்கிய ஸ்திதிக்குள் ஆதரவற்றவளாய்ப்போன இந்த இளம்பெண் அயலகத்தாருடைய சொற்ப சகாயத்தைக்கொண்டு ஜீவிக்கவேண்டியவளாக இருந்தும் பரோபகாரியான ஒரு புண்ணிய

புருஷன் ஆதரவற்ற இந்த ஏழைப்பெண்ணைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டு தனக்கும் தன் மனைவி பிள்ளைகளுக்கும் தன் வீட்டுவேலை விஷயங்களுக்கும் கூடியவாறு உதவியுள்ளவளாய் இருக்கத்தக்கதாய்த் தன் சொந்தப் பிள்ளைபோலப் பாதுகாத்து ஆதரித்துப் போஷித்து வந்தான்.

இப்படிப்பட்ட நல்ல நிலைமையில் சிலகாலமிருந்து தன் எஜமானுக்கும் எஜமாட்டிக்கும் கூடியவாறு திருப்திகரமாகவே நடந்துகொண்டபோதிலும் 'ஜாதியந்தப் புத்தி குலமந்த ஆச்சாரம்' என்னும் பழமொழிப்படி இந்தப் பெண் சிற்சில விஷயங்களில் உண்மைக்குமாறாய் நடந்துகொள்ள ஆரம்பித்தாள். இதை அறிந்த அவளது எஜமானும் எஜமாட்டியும், இவளிடத்தில் காணப்பட்ட துர்ப்பழக்க வழக்கங்களைக் கண்டு கண்டித்துப் புத்திமதிகள் சொல்லிவந்தும் இவளோ தன் துர்க்குணத்திலே வளர்ந்துவருகிறவளாய்க் காணப்பட்டாள். ஒருநாள் நல்ல மத்தியானவேளையிலே தன் எஜமாட்டி அயர்ந்து தூங்குஞ் சமயத்தில் எஜமானனின் பெட்டியைத் திறந்து அதிலிருந்த கொஞ்சம் பணத்தையும் சில தங்கநகைகளையும் திருடிக்கொண்டு ஓடிப்போய்விட்டாள். பெண் ஓடிவிட்ட விஷயத்தையும் பொருள்கள் களவுபோன காரியங்களையும்பற்றி, போலீசாருக்கு அறிவிக்கப்பட்டபோது போலீசார் ஓடிப்போன பெண்ணைச் சொத்துக்களுடன் பிடித்துக்கொண்டார்கள். விசாரணையானதின் பின் அந்தப் பெண் குற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டு ஆறுமாதகாலத்துக்குச் சிட்சையடைந்தாள். ஐயோ! பரிதாபம். ஆதரவற்ற ஏழைப் பெண் தன் உண்மைக்கேட்டினிமித்தமும், துர்ப்பழக்க வழக்கத்தினிமித்தமும் இப்பரிதாபமான நிலைமைக்குட்பட்டுச் சிறைச்சாலைக்குள் அடைபட்டாள்.

இந்த ஏழைப் பெண் இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான நிலைமையில் இருந்தபோதிலும் இவளுக்கு ஒரு நற்காலம் வர ஏதுவாயிற்று. எப்படியென்றால், அம்மாகாணத்திலுள்ள கருணைசிந்தையுள்ள மிஷனெரிமார் அங்கிலேய ராஜாங்கத்தாரிடமிருந்து அனுமதிபெற்று அம்மாகாணத்திலிருந்த சிறைச்சாலைகளிலுள்ள குற்றவாளிகளைச் சந்திக்கவும் அவர்களோடு பேசவும், அவர்கள் செய்திருந்த குற்றங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, கிறிஸ்துமார்க்கத்தின் திவ்ய இலட்சணங்களையும், உபதேசங்களையும் போதிக்கவும்தக்கதாய் பிரசங்கிமார்களையும், வேதாகமஸ்திரீகளையும் நியமித்திருந்தபடியால் மேற்கண்ட மாகாணத்தில் மேற்சொல்லப்பட்ட பெண் அடைபட்டிருந்த சிறைச்சாலைக்கு ஒரு வேதாகமஸ்திரீ போய்வருவது வழக்கம். இந்த அம்மாள் தன் வழக்கப்படி அவ்விடத்திலுள்ள பெண் கைதிகளுக்குப்



பிரசங்கித்துவருவதை நாளடைவில் கவனித்துவந்த அந்தப் பெண் ஆச்சரியப்படத்தக்கதாய் ஒரு புதிய மாறுதலுக்குள் ஆகும்படி நேரிட்டது. அம்மாறுதல் என்ன? வெகுகாலமாய்த் தான் செய்துவந்திருக்கும் பற்பலவிதமான பாவக் கிருத்தியங்களைக் குறித்த உத்தம மனஸ்தாபம். இப்படிப்பட்ட உத்தம மனஸ்தாபத்தினால் பொறுமை, சாந்தம், கீழ்ப்படிதல், நல்நடக்கை முதலிய நற்கனிகள் உண்டாக ஆரம்பித்தது. இத்தியாதி நற்குணாதிசயங்களைக் கவனித்த சிறைச்சாலையின் அதிகாரியுங்கூட ஆச்சரியப்பட ஏதுவாயிற்று. அப்பெண்ணுக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையின் நாட்கள் முடிந்து விடுதலையடைந்ததும், தனக்கு நற்புத்தி புகட்டி நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வழியைக் காட்டிவந்த மேற்படி வேதாகம ஸ்திரீயைத் தேடி, அந்தம்மாளிடம் சென்று தான் அடைந்த போதனையினால் தான் குணப்பட்டிருப்பதாக அறிக்கையிட்டுச் சிறிதுகாலம் அந்த அம்மாளிடமே தங்கி இன்னும் வேண்டிய போதனைகளையும் பெற்றுக் கடைசியாக அங்குள்ள மிஷனெரிமார்களி லொருவரால் திவ்ய தீக்ஷைபெற்று அதற்கு ஆறுமாதத்திற்குப் பிறகு ஒரு தேவஊழியனுக்குச் சிறந்த மனைவியானாள்.

இதை வாசிக்கும் என் சகோதரிகளே! மேற்சொல்லப்பட்ட பெண்ணின் முந்தின நிலைமைக்கும் பிந்தின நிலைமைக்குமுள்ள வித்தியாசத்தை நாம் பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கருவிகளாகக்கொண்டு அநேகருடைய இருதயங்களில் கிரியைசெய்து கெட்டுப்போன ஆத்துமாக்களை ஒரு நூதன ஜீவியத்துக்குட்படுத்துவதாக நாம் காண்கிறோம். பாவம் நிறைந்த உலகமாகிய இந்தச் சிறைச்சாலையில் எத்தனையோ ஆத்துமாக்கள் இன்னும் தங்கள் பொல்லாத வழிகளிலும் ஜீவியத்திலும் நிலைத்திருக்கிறார்கள். நாம் செய்யவேண்டியதென்ன? தேவன் நம்மில் அன்புகூர்ந்ததுபோல் நாமும் அவர்களில் அன்புகூர்ந்து அவர்களை இரட்சகரின் பாதத்தண்டை கொண்டுவந்து சேர்க்கத்தக்கதாய் நாம் நமது ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால் மெய்யாகவே அப்படிப்பட்ட அநேக ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தக்கூடியவர்களாய் இருப்போம்.

E. J. Ponnusami, Erumapatti.

## HYMN. 'TIME IS WINGING US AWAY'

1. காலம் ஓட ஓடவே நித்திய மண்டுதே
ஜீவன் செல்லச் செல்லவே கல்லறை கிட்டுதே
வாலிபம் அழகு போம் வண்மை மங்குமே
சால தேகம் நீங்கிடும் சாவு அண்டிடுமே

2. காலம் ஓட ஓடவே நித்திய மண்டுதே
ஜீவன் செல்லச் செல்லவே கல்லறை கிட்டுதே
ஆயின் பக்தன் மோட்சத்தில் ஆனந்த சுகமே
பெற்று மாண்பு யேசுவில் பேர் அன்பில் வாழ்வானே.

J. I. Christmas, Tiruvannamalai.

## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி)

இதைக் கேட்டதும் வேதாபிமானியும், கீதமணியும் தாங்கள் கொண்டுவந்திருந்த பலகாரங்களைத் தின்று, தண்ணீரும் அருந்தி, தாக சாந்தி செய்துகொண்டு தாங்களிருக்கும் இடத்திலேயே துணியை விரித்து முழந்தாள் ஊன்றி கைகளைக் குவித்து, கடவுளைத் துதித்துப் பக்திவினயமாய் ஜெபஞ்செய்து பிரயாணத்துக்கு ஆயத்தப்பட்டார்கள். மற்றவர்களோ ரூபாய்களை எண்ணி, பைகளில் முடிப்புக் கட்டுகிறதும், நல்ல வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுகிறதும், வழிக்கு வெற்றிலை பாக்கு முதலிய பண்டம்பாடிகள் வாங்குவதுமாயிருந்து தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள்ளாக நிலவு உதயமாகி, காலதாமதமில்லாமல் படவு கரையடுத்து, ஏற்கனவே சீட்டுப்பெற்றிருந்த எல்லாரையும் ஏற்றிக் கொண்டது. அப்படியே வேதாபிமானியும் கீதனும் சீட்டுப் பெற்றிருந்ததால் ஏறிக்கொண்டார்கள். அப்படியே குறிக்கப்பட்ட நேரத்தில் தண்டுவலித்து படவு ஓடத் தொடங்கினது கண்டு வேதாபிமானியும் கீதமணியும் சில ஸ்தோத்திர கீதங்களைக் கர்த்தருக்கு மகிமையாகப் பாடிக்கொண்டே போனார்கள்.





அங்கு படவிலிருந்தோரெல்லாம் கேட்டு அகமகிழ்ந்து இரவின் அச்சம் நீங்கிக் களிப்புற்றிருக்கும்போது நிலவு நட்சத்திரங்களைத் தனியேவிட்டுத் தன் முகத்தை மறைத்துக்கொண்டது. அதுகண்டு படவிலுள்ளோர் நித்திரை மயக்கத்தினால் தூங்க ஆரம்பித்தார்கள். ஆனால் பணப்பைகளையும் ஆபரணங்களையும் சுமந்து இருப்பவர் பயத்தால் திகைத்து எங்கே கள்ளர்வள்ளம் வந்துவிடுமோ என்று கலங்கிக் கொண்டிருந்தனர்.

அந்நேரமே வள்ளக்காரன் ஒரு விதமான கூச்சல் போட்டான். உடனே பதில் சத்தம் ஒருமாதிரி தொனியாய்த் தூரத்திலிருந்து கேட்டது. கேட்டவுடனே கீதமணி 'ஐயா! நம்மைச்சுற்றிலும் தண்ணீர் இருக்கிறதே! திருடன் எப்படி வருவான்? அதற்குள்ளாக ஏன் இவர்களெல்லாம் பயப்படுகிறார்கள்?' என்றான். அதற்கு வேதாபிமானி 'திருடனும் வள்ளத்திலேறித்தான் திருடவருவான். ஆனால் இந்தப் படவு நம்முடைய படவைப்போல கம்பெனியைச் சேர்ந்ததல்ல. திருட்டளவாய்க் காட்டுப்பக்க வழியாய்ப் புறப்பட்டு வருகிறதாயிருக்கும்' என்றார்.

இதற்குள்ளாக இன்னொரு சத்தம் சமீபத்தில் கேட்பதுபோல் கேட்டது. உடனே அந்த வள்ளத்திலுள்ள ஜனங்கள் நகைகளைக் கழற்றி அந்த வள்ளத்திலுள்ள ஒரு ஏழைக் கிழவியின் மடியிலே கட்டிப் பணமுடிப்பையும் ஒளித்துவைத்து, பயத்தால் நடுக்க

மூற்றிருந்தார்கள். அதைக்கண்ட வேதாபிமானி அவர்களை நோக்கி, “இங்கே நமக்கு உதவிசெய்ய போலீஸ்காரருமில்லை. அக்கம்பக்கத்திலிருந்து ஜனங்கள் ஓடிவந்து உதவிசெய்யத் தகுந்த இடமுமில்லை. பக்கங்களிலே ஊரிருக்கிறதா என்று வள்ளத்தை அடுத்து, இறங்கிக் கொள்ளக்கூடாதபடி நள்ளிரவாயிருப்பதால் கூடாதிருக்கிறது, என்று கிலேசப்படுகிறீர்கள். அது சரியே, ஆனால் எங்களுக்கு ஒரு நம்பிக்கையுண்டு. அதாவது நம்மெல்லாரையும் சிருஷ்டித்து, இரட்சித்துக் காத்துவருகிற கடவுள் ‘ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்’ என்கிறார். இக்கட்டில் சகாயர் அவரே. அவரை நோக்கி நாங்கள் ஜெபிக்கிறோம். அதை நீங்களும் விசுவாசித்தால் ரட்சிப்பைக் கண்டடைவீர்கள்” என்று சொல்லி, உடனே முழந்தாள் ஊன்றி, கரங்களை எறெடுத்து, உருக்கத்துடனே, ‘ஆச்சரியமான கிருபையைக் காண்பித்தவரே, இப்பொழுதும் சமயசகாயராய் எழுந்தருளிவந்து, தானியேலைச் சிங்கங்களின் வாய்க்குத் தப்புவித்ததுபோல, எங்களைக்கொண்டு உம்முடைய நாமம் மகிமைப்படும்படி இந்தக் கள்ளர் கூட்டத்திலிருந்து எங்களை ரட்சித்தருளவேண்டும். இயேசுவினிமித்தம் இரங்குமையா’ என்று ஜெபித்தார்.

இதற்குள்ளாக படவுக்காரனே வேறொருவிதமான ஒலியாகச் சப்தித்தான். அதுகேட்டு திருடர் வள்ளம் விலகித் தூரமாய்க் கைக்கெட்டினது, வாய்க்கெட்டவில்லை என்றதுபோல ஓட்டம் பிடித்தது. ஏனென்றால் இவர்கள் பிரயாணம்பண்ணின வள்ளக்காரனே திருட்டு வள்ளத்திற்கு உளவுகாரனாயிருந்ததினால் ஒருவருக்கொருவர் சத்தத்தினாலே சாடைபண்ணி நெருங்கிவரும்போது இந்த வேதாபிமானியின் ஜெபம் அவன் இருதயத்தை மாற்றினதினால் இந்தச் சம்பவம் நேரிடாதபடி மறுசத்தம் காட்டிவிட்டான். ஆதலால் திருட்டு வள்ளக்காரன் பயந்து ஓடிப்போக நேரிட்டது. அதுகண்டு வள்ளத்திலுள்ளவர்கள் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும், கடவுளுடைய ஆச்சரியமான செயலையும், நடத்துதலையும் தியானித்துச் சந்தோஷத்தினால், இது கனவோ நினைவோ என்று சிந்திக்கவேண்டியதாயிருந்தது.

இதற்குள்ளாக நேரமும் பொழுதும் கழிந்து, நிலங்கீறிக் கிழக்கு வெளுக்கும் நேரத்திலே மலையாளதேசத்திலுள்ள திருவெல்லா என்ற ஊர்வந்து சேர்ந்தோம்.

அங்குவந்து சேர்ந்ததும் அந்த ஊர்க்காட்சி வெகு விநோதமாயிருந்தது. மாதர்கள் மகிழ்வோடு கொண்டையில் முடித்துக்கொள்ளும் தாழம்பூவினது செடியே வேலியாகச் சூழப்பட்டு, காவுகள்தோறும், வாழை, பலா, மா, கூந்தற்பனை, தென்னை, கமுகு முதலிய விருட்



சங்கள் வானத்தை அளாவுவனபோல ஓங்கி வளர்ந்து, விரிந்து, பருத்து, அடர்ந்து தோன்றியதும், எங்கே பார்த்தாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பச்சைப்பசேரென்று இருப்பதும் மனதுக்கு அதிக கிளர்ச்சியை உண்டாக்கினது. அதுகண்டு இரவிற்கண்ட திகில் நீங்கிக் கடவுளைத் தோத்திரித்து வள்ளத்திலுள்ளோரை வழியனுப்பிக் கொண்டு, கரையிறங்கி அந்த ஊர்க்குருவின் வீடு விசாரித்து, அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர் இவர்களை மெத்த அன்போடு எற்றுக்கொண்டு, உபசரித்து, சிலநாள் தம்மோடு தங்கி, தேசாசாரம், மதாசாரங்களைக் கிரகித்துப் போக இடம் கொடுத்தார். இவர்களுக்குப் பார்த்த முகமெல்லாம் வேற்றுமுகம், பாஷைகளோ ஜல்தியில் புலப்படுகிறதில்லை. போஜனாதிகளிலும் பேதமாயிருக்கிறது. ஆயினும் அவர்கள் காட்டிய அன்போ, இவர்களை அங்கு சிலநாளிருக்கும்படி ஏவிற்று.

அப்படி இவர்கள் அங்கே தங்கியிருக்கும்போது, அதற்கு அடுத்த நாளிலே ஓய்வுநாள் வந்தது. அப்போ அந்த ஊரார் ‘நாளைக்கு ஒரு கடையும் திறக்கப்படமாட்டாது. அவசியமானதை இன்றே வாங்கிக் கொள்ளவேணும்’ என்று சொல்லிக்கொண்டார்கள். அப்போது வேதாபிமானி ‘அப்படியானால் இந்த ஊரிலே கடைவிற்போரெல்லாம் கிறிஸ்தவர்களா?’ என்றார். அதற்கு அவர்கள் ‘அல்ல, புறமதஸ்தரும் சிலர் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளிலே விற்கவுமாட்டார்கள். ஒருவரும் கடையிலே வியாபாரம் கொள்ளவுமாட்டார்கள். அதினாலே கடைவைப்பவர்களுக்கு லாபமிராததுபற்றி இந்துக்களும் அன்று கடையைச் சாத்திவிடுவார்கள்’ என்றார்கள்.

‘ஆகா! இது நல்ல முறைதான்!’ என்று வேதாபிமானி சந்தோஷம் அடைந்து, ‘நாளை எத்தனை மணிக்கு ஆராதனை?’ என்று கேட்டார். ‘காலையிலும் மாலையிலும் இருப்பதனாலே, காலை 8 மணிக்கு ஆராதனை உண்டு’ என்றார். ‘அதில் நாளை நற்கருணையும் உண்டு’ என்று பேசிக்கொண்டார்கள்.

அவர்கள் சீரிய சபையைச் சேர்ந்தவர்களாதலால், அவர்களுடைய ராப்போசன முறையைப்பற்றிச் சிலவற்றை அறிய விரும்பித் தெரிந்துகொண்டார். அவையாவன, ராப்போசனத்திற்கும் வைக்கும் அப்பம் ஒன்றே. அதுவும் கோவில் திரிகையில் திரித்து எடுத்த கோதுமை மாவை கோவில் கிணற்று ஜலத்தில் ஜெபமுறையோடு தண்ணீரெடுத்துப் பிசைந்து, தூபகலசத்தில்வைத்து, கரிநெருப்பிட்டுச் சுடப்பட்டிருக்கும் ஒரு கையகல அடைதான். எவ்வளவு பேருக்கென்றாலும் ஒரு அவல்பரிமாணம் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. ரசம் காண்டியினாலே கோரி, அண்ணாந்து விடப்படு

கிறது. குருக்கள்விஷயம், புத்திரசந்தானம் பரம்பரையாய் வைத்துக்கொள்ளுகிறது. சம்பளமின்றிக் கோவில் மானிபமேற்படுத்திக் காலக்ஷேபத்துக்காக வைத்துக்கொள்ளுகிறது. குரு ஒரே மனைவியுடையவராயிருக்கவேண்டுமென்று 1 தீமோ. 3. 2-ல் சொல்லியிருக்கிறபடி தாரமிழந்தாலும் மறுபடி விவாகம் முடிக்கலாகாது. குருப்பட்டம் அந்தியோகியாவில்தான் பெற்று மெத்ராசன் அதாவது பிஷப் என்கிறவரால் நடந்தேறுகிறது. குருக்கள் பார்வைக்கு ரோமான் சாமிமாரைப்போலிருந்தாலும், சொரூபவணக்கமும் மற்றும் கொள்கைகளும் ரோமானுக்கு ஒத்ததாக இல்லை. அவர்கள் தேவாலயத்திலே ஆராதனை நேரத்தில் ஒருவரும் உட்காரும் வழக்கமில்லையாம். கெர்ப்பஸ்திரீகளும், முதிர்வயதுள்ளவர்களும் உட்கார்ந்து இருக்கவேணுமானால் கோவிலை ஒட்டிக் கட்டிய திண்ணைகளிலே வெளியேபோய் உட்காரவேண்டுமேயல்லாது கோவிலில் உட்காரக்கூடாது.

(இன்னும் வரும்)

Esther Manonmani Devadas

## WHO FIRED THE GUN?

## 'துப்பாக்கி சுட்டவன் யார்?'

சில வருஷங்களுக்கு முன்னமே ஆபிரிக்காவின் தென்பாகத்திலே ஒரு யுத்தம் நடந்தது. அப்போது, ஒருநாள் கேப் டவுன் என்ற பட்டணத்திலே திடீரென்று காலை 10½ மணிக்கு ஒரு வேட்டுச்சத்தம் கிளம்பிற்று. இது பட்டாளத்தார் யாவருக்கும் அதிக ஆச்சரியமாயிருந்தது. ஏனென்றால், அந்தப் பட்டாளத்து ஒழுங்குப்படி அந்த வெடி விடியற்காலமும் சாயங்காலமும்மாத்திரம் சுடப்படவேண்டும். மற்ற நேரத்தில் சுடுகிறவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும். ஆகையால் சேனைத்தலைவர்கள், 'துப்பாக்கி சுட்டவன் யார்?' என்று விசாரித்தார்கள். குற்றவாளி தென்படவேயில்லை. தங்களால் கூடிய மட்டும் பிரயாசப்பட்டுவிட்டுப் பிற்பாடு சும்மா இருந்துவிட்டார்கள்.

இதற்குச் சில வாரங்களுக்குப் பிற்பாடு, பட்டாளத்திலுள்ள ஒரு கல்விமான், தன் வழக்கப்படி அங்கேயுள்ள துப்பாக்கிகளையும், அவைகளோடு தொடுக்கப்பட்ட மின்சாரங்களையும் பரிசோதனை செய்தான். அப்போது ஒரு மின்சாரக் கம்பியின்மேல் ஒரு சிறு சிலந்திப்பூச்சி உட்கார்ந்திருக்கக் கண்டான். கடைசியிலே துப்பாக்கி சுட்ட குற்றவாளி அகப்பட்டுக்கொண்டான்.



உடனே அந்தப் பூச்சியை எடுத்துச் சேனைத்தலைவரிடம் கொண்டு போனார்கள். அவர் அதிக ஆச்சரியப்பட்டு, அதற்குச் 'சிறு துப்பாக்கிக்காரன்' என்று பேரிட்டு, அதை யாவரும் பார்க்கிறதற்காக, அந்தப் பட்டணத்திலுள்ள பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பிவிட்டார். இப்போதும், அங்கே போனால் அந்தப் பூச்சியையும் அதின் சரித்திரத்தையும் நாம் பார்க்கலாம்.

பாருங்கள்! சிறு பொருள்களினால் உண்டாகிற நன்மை தீமைகள் எவ்வளவு பெரிதாயிருக்கிறது! யாக்கோபு அப்போஸ்தலன், நம்முடைய நாக்குகளைக்குறித்து என்ன சொல்லுகிறார்? 'நாவும் நெருப்புத்தான்' என்கிறார். நீதி. 28. 21-ல் சொல்லியிருக்கிற வசனத்தை நாம் ஒருபோதும் மறந்துபோகக்கூடாது.

ஆகையினால் நாம் ஒவ்வொருவரும் தாவீது அரசன் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறதுபோல, 'ஆண்டவரே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்' என்று ஆண்டவரை நோக்கித் தினந்தோறும் ஜெபிக்கவேண்டும்.

## THE FIRST TEMPTATION

## சோதனையை ஆரம்பத்திலேயே தவிர்

ஒரு கடுதாசித் துண்டானது மடிபட்டிருந்தால் அந்த மடிப்பிலேயே அதைக் கிழிப்பது வெகு சுலபம் அல்லவா? அப்படியே, நாமும் ஒரு தடவை ஒரு சோதனைக்கு உட்பட்டுவிடுவோமேயானால் அப்புறம் அந்தச் சோதனைக்கு நாம் வெகு சீக்கிரத்தில் முற்றிலும் ஆளாகிவிடுவோம்.

நமது நல்ல ஒழுக்கமே கடுதாசி. நாம் செய்த பாவகாரியம் ஒன்று அந்தக் கடிதத்தின் மடிப்பு. நம்முடைய காரியம் பெரிய பாவமானால் மடிப்பு அழுத்தமானதாகும். இப்படியிருந்தால் நாம் மறுமுறை இன்னும் பெரிய பாவத்திற்கு உள்ளாகிவிடுவோம். அதுவும் வெகு சீக்கிரத்தில் ஆகும். அதன்மேல் நம்மிடத்தில் நன்னெறி என்பது கொஞ்சமும் இல்லாமல் தீயவழியிலேயே நடக்கத் தலைப்பட்டுவிடுவோம். ஆதலால் சோதனையை ஆரம்பத்திலேயே தடுத்துத் தவிர்த்துவிடவேண்டும்.



## HANNAH'S VOW

## அன்னாளின் பொருத்தனை

‘பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்’ என்பது திருமறையின் திருவாக்கு. பிள்ளைகள் சுதந்தரராய் இருக்கவேண்டுமானால் பெற்றோர் அவர்களைத் தெய்வபக்தியிலும் சன்மார்க்க ஜீவியத்திலும் கர்த்தருக்கேற்ற சிக்ஷையிலும் வளர்ப்பது அவசியமே.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சியடைந்து வித்தியாபட்டங்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், லௌகீக சம்பந்தமான உயர்ந்த உத்தியோகஸ்தர்களாக வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட நோக்கம் ஒருவாறு நல்லது என்றாலும், தங்கள் பிள்ளைகள் சொற்ப படிப்பினராயினும் அல்லது அதிகமாய்ப் படித்திருந்தாலும் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தையே செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக்கொள்ளுகிற சில பெற்றோர்களின் நோக்கம் மேற்சொல்லப்பட்ட பெற்றோர்களின் நோக்கத்தைவிட மிகவும் சிறந்ததும் சிலாகிக்கப்படத்தக்கதுமாயிருக்கிறது.

வெகுகாலமாய்ப் பிள்ளையில்லாமல் மலடியாயிருந்த அன்னாளினுடைய ஊக்கமான வேண்டுதல் ஒரு பெரிய நன்மையை உண்டாக்கிற்று என்று காண்கிறோம். ஆகையால்தான் அன்னாள் ஓர் உறுதியான பொருத்தனையை நேர்ந்துகொள்ளவேண்டியவளாய் இருந்தாள். அந்தப் பொருத்தனை என்ன? ‘சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உமது அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஓர் ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை’ என்பதே. (1 சாமு. 1. 11.)



இப்படிப்பட்ட பொருத்தனை நிறைவேறத்தக்கதாய் அன்னாளின் வேண்டுதல் கேட்கப்பட்டதென்று பார்க்கிறோம். கர்த்தர் அன்னாளை நினைத்தருளினார். இதோ அவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனை ஈன்றெடுத்தாள். தான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனையை நிறைவேற்றினாள். அப்படியே சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சகலவித சன்மார்க்க ஜீவியத்திலும் தேவதாபக்தியிலும் வளர்க்கப்படத் தன் ஜீவியகால பரியந்தம் தேவஊழியனாய்ச் சிறந்த தீர்க்கதரிசியாக விளங்கினார் என்று பார்க்கிறோம்.

என் சகோதரிகளே! அன்னாளுக்கிருந்த நல்ல நோக்கம் நமக்குள்ளுமிருக்கிறதா? அப்படியிருக்கிறதானால் கர்த்தர் அன்னாளின் நல்நோக்கத்தை நிறைவேற்றினதுபோல் நமது நோக்கத்தையும் நிறைவேற்றுவார்; இது சத்தியம். இவ்விதமாய் நமது நோக்கங்கள் நிறைவேறுகிறபோது நமது பிள்ளைகள் மெய்யாகவே நமக்குச் சுதந்தரராய் இருப்பார்கள். அவர்கள் கர்த்தருக்கு உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியத்தைச் செய்யக்கூடியவர்களாயுமிருப்பார்கள். அப்போது அவர்கள் நமது பந்தியைச்சுற்றி ஒலிவமரக்கன்றுகள் ஆவார்கள்.

தேவபக்தனும் திவ்ய ஊழியனுமாகிய தீமோத்தேயுவைச் சற்றுக் கவனிக்கும்போது அவருடைய பெற்றோர் அவரைச் சிறுபிராய முதல் கர்த்தருக்கேற்ற சிக்ஷையில் வளர்த்து கர்த்தருக்கே ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தார்களென்று பார்க்கிறோம். தீமோத்தேயுவினிடத்தில் காணப்பட்ட தேவபக்தி, சன்மார்க்க ஜீவியம், உண்மை, பரிசுத்த நடக்கை முதலிய சகல சுபலட்சணங்களையும் கவனித்த பரி. பவுல் அப்போஸ்தலன் அவரைத் தேவஊழியத்திற்கென்று தெரிந்துகொண்டார் என்று பார்க்கிறோம். கர்த்தருக்கேற்ற வழிகளில் வளர்க்கப்பட்டு அவருடைய திவ்ய ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்கப்படுகிற பிள்ளைகளின் ஜீவியம் எவ்வளவோ சிறந்ததும் ஆசீர்வதிக்கப்பட்டதுமான ஜீவியமாயிருக்கிறது.

ஐரோப்பிய மாதர்களிலநேகர் தங்கள் பிள்ளைகளை இப்படிப்பட்ட விஷயங்களில் வெகுவாய்க் கவனித்துவருகிறார்கள். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்னும் பழமொழிப்படி சிறுபிராயமுதல் கர்த்தருக்கேற்ற சிக்ஷையிலும் சன்மார்க்க ஜீவியத்திலும் வளர்க்கப்பட்டுவரும் ஐரோப்பிய சிறுவர் சிறுமியர் பிற்காலத்தில் சிறந்த தேவ ஊழியர்களாக விளங்கி நிற்கிறார்கள். தகப்பன் ஜீவனோபாயத்தினிமித்தம் அடிக்கடி வெளியில் போக நேரிடுகிறது. ஆனால் தாயானவளோ சதா வீட்டிலேயே இருந்து வீட்டின் சமுசார காரியாதி

களைக் கவனிக்கப் போந்த சகவாசம் இருப்பதால் பிள்ளைகளின் நற்பழக்க வழக்கங்களுக்கான விஷயங்களைக் கவனிக்க நல்ல சமயமுமுண்டு.

சகோதரிகளே! நாம் நமது பிள்ளைகளை இப்படிப்பட்ட சிறந்த ஊழியத்துக்கு ஆயத்தப்படுத்துகிறோமானால் அன்னாளைப்போல நல்ல தீர்மானங்களைச் செய்துகொண்டு அத்தீர்மானங்கள் நிறைவேறத் தக்க முயற்சிசெய்வது இன்றியமையாதது என்பதை நாம் உணர வேண்டும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் இன்னதென்று நாம் அவர்களுக்குப் புகட்டும்போது தேவனை அறிகிற அறிவு அவர்களுக்குத் தானே உண்டாகிறது. அப்போது அவர்கள் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையையும் நற்புத்தியையும் பெறுகிறார்கள். அவைகள் அவர்களுக்கு விலைமதிக்கப்படக்கூடாத சிறந்த பூஷணங்களாகத் துலங்குகின்றன. மெய் ஞானமும், நல் ஆலோசனைகளும் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு ஜீவனாகவும், கழுத்துக்கு அலங்காரமாகவும் இருக்கின்றன.

ஆதலால் சகோதரிகளே! கர்த்தர் நமக்குத் தந்திருக்கும் பற்பல விதமான தாலந்துகளில் புத்திரபாக்கியமும் ஒன்று. இந்த தாலந்துகளை நாம் ஞானமாய்ச் செலவிட்டு நமது கடமைகளை நிறைவேற்றி வருவோமானால் நாம் பாக்கியவதிகளே. கர்த்தருடைய ஆசீர்வாதம் நமது வீட்டிலும், நமது வேலைகளிலும், நமது பிள்ளைகளின்பேரிலும் இன்னும் நமது எல்லாக் காரியங்களின்பேரிலும் பரிபூரணமாய் ஊற்றப்படும் என்பது சத்தியம்.

Esther. J. Ponnusami, Erumapatti.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ௵ டெப்ருவரி௴

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச. | 1 சாமு. | 14. 33—46 | 11 செ. | 1 சாமு. | 17. 51—58 | 20 வி. | 1 சாமு. | 21. 6—15 |
| 2 ஞா. | „ | 15. 1—11 | 12 பு. | „ | 18. 1—11 | 21 வெ. | „ | 22. 1—10 |
| 3 தி. | „ | 15. 12—23 | 13 வி. | „ | 18. 12—21 | 22 ச. | „ | 22. 11—23 |
| 4 செ. | „ | 15. 24—35 | 14 வெ. | „ | 19. 1—10 | 23 ஞா. | „ | 23. 7—18 |
| 5 பு. | „ | 16. 1—13 | 15 ச. | „ | 19. 11—18 | 24 தி. | „ | 23. 19—29 |
| 6 வி. | „ | 16. 14—23 | 16 ஞா. | „ | 20. 1—10 | 25 செ. | „ | 24. 1—12 |
| 7 வெ. | „ | 17. 1—15 | 17 தி. | „ | 20. 11—23 | 26 பு. | „ | 24. 13—22 |
| 8 ச. | „ | 17. 16—27 | 18 செ | „ | 20. 24—34 | 27 வி. | „ | 25. 1—13 |
| 9 ஞா. | „ | 17. 28—37 | 19 பு. | „ | 20. 35—42; | | | |
| 10 தி | „ | 17. 38—50 | | | 21. 1—5 | 28 வெ. | „ | 25. 14—25 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

# மாதர் போதினி

No. 183 மார்ச்சு 1913 No. 3



## PANCRATIUS, THE BOY MARTYR

## இரத்தசாக்ஷியான பையன்

வெகுகாலத்துக்குமுன்னே ரோமன் ஒருவன் செல்வவானும் வாழ்ந்திருந்தான். அவனிடத்தில் ஐசுவரியம் அத்தனையும் அமைந்திருந்தது. அவனுக்கு பங்கிரோஷஸ் என்றொரு அருமைப் புதல்வன் இருந்தான். அவன் வெகு உல்லாசக்காரன். அவன் இருந்த மாளிகையின் பக்கத்தில் சிறு ஊற்று ஒன்று 'சிலு சிலு' என்று ஓடினது. அதனருகில் நல்ல நல்ல பூஞ்செடிகொடிகள் செழித்திருந்தன. அவற்றின் சமீபத்தில் பங்கிரோஷஸ் போய் அடிக்கடி விளையாடுவொன். அவ

னுக்கு அப்போது வயசு ஒன்பது. அப்போது அவனுக்கு இல்லாதது எதுவுமில்லை. செல்வவந்தன் பெற்ற பிள்ளை: அதிலும் ஒரே மகன். என்ன குறை! இருந்தாலும் ஒரு பெருங்குறை இருந்தே இருந்தது. அவன் அஞ்ஞானியாயிருந்தான். அதுவும் அவன் தப்பிதம் என்பதற்கில்லை. அவன் கிறிஸ்துவை அறியாமல் இருந்தவர்கள் பெற்ற பிள்ளை. அதனால் பங்கிரேஷசும் அவரை அறியாமல் தன் பெற்றோர்கள் வழிபட்ட தெய்வங்களையே வழிபட்டு மகிழ்ந்திருந்தான்.

'உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா' என்றபடி பாக்கியவானாய் மகிழ்ந்திருந்த பங்கிரேஷசுக்குப் பரிதாபமான மாறுதல் ஒன்று ஏற்பட்டது. அவனுடைய அருமை அம்மாள் மாண்டாள். அவளை அவன் ஆனந்தமாய் விளையாடும் பூந்தோட்டத்திலேயே அடக்கம்பண்ணினார்கள். அவளுடைய அன்புள்ள நாயகனும் அருமையான பிள்ளையும் அனுதினமும் அந்தக் கல்லறைக்குப் போய் நல்ல நல்ல பூக்களை அதன்மேல் தூவிவருவார்கள். இப்படி மூன்றுமாதம் ஆவதற்குள் அப்பனுக்கும் பிள்ளைக்கும் உள்ள பரஸ்பர விசுவாசமும் நாளுக்கு நாள் பலத்துவந்தது. பலத்தென்ன? பங்கிரேஷஸ் இன்னொரு சோதனைக்குள்ளாக நேரிட்டுவிட்டது. அன்பான அப்பன் அதிக அசௌக்கியமடைந்தான். அப்பனும் தான் சுகப்படுவது அருமை என்பதை உணர்ந்து தன் சகோதரனை வரவழைத்து வயது பத்தும் நிறையாத அநாதை பங்கிரேஷசைத் தன் சொந்த மகன்போல வளர்த்து வரும்படியாகக் கேட்டுக்கொண்டான். பங்கிரேஷஸ் தன்னுடைய தகப்பனாருக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை நடத்திவிட்டுத் தன் உல்லாச வீட்டை வருத்தத்தோடு விட்டுச் சிற்றப்பனோடுகூட ரோமாபுரிபோய்ச் சேர்ந்தான்.

அப்பெரிய நகரம் போனதும் பங்கிரேஷஸ் தான் நன்றாய்ப் படித்து நாட்டில் நல்ல மதிப்புள்ளவன் ஆவான் என்றெண்ணினான். சிற்றப்பனும் தன் ஸ்வீகாரபுத்திரன் தக்க அந்தஸ்தை அடைவானாக என்றே பிரார்த்தித்தான். அந்தப் பிரார்த்தனையும் அப்படியே ஆயிற்று. அநேகர் ஆனமட்டும் பார்த்தும் அடையாத அருமையான அந்தஸ்தை பங்கிரேஷஸ் அடைந்தான். அதன் மகிமையை யாரும் இன்னும் மறக்கவில்லை. அம்மகிமையின் வரலாறு என்னவென்று பார்ப்போம்.

பங்கிரேஷஸ் ராஜதானியாகிய ரோமர்புரியைக் கண்டு அதன் அலங்காரங்களையும் ஐசுவரியத்தையும் பார்த்துப் பார்த்துப் பிரமை அடைவான். அக்காலத்தில் அதை ஒரு ரோம சக்கரவர்த்தி ஆண்டு வந்தான். அப்போது பங்கிரேஷஸ் சிறியவனாக இருந்தபோதிலும் அங்கே கிறிஸ்தவர்கள் என்று பேர் வைத்துக்கொண்டிருந்த சில ஜனங்



களை ராயன் எவ்வளவு கடுமையாய் நடத்தினான் என்பது அவனுக்குத் தெரியாமற்போகவில்லை.

கிறிஸ்தவர்கள் அந்தக் கொடிய சக்கரவர்த்திக்குப் பயந்து நடு ராத்திரிகளில் ஆராதனைகள் நடத்தினார்கள். அவற்றை பங்கிரேஷசும் சிற்றப்பனும் கவனமாய்க் கேட்டார்கள். அதோடு அவர்கள் செய்த வீரச்செயல்களையும் இரக்கச் செயல்களையும் அறிந்து அநுதாபமடைந்து அதிக மனவருத்தப்பட்டார்கள். ஆனால் இவர்கள் என்ன செய்யமுடியும்? தங்கள் கோவில்களுக்குக் கிரமமாய்ப் போனார்கள். பங்கிரேஷஸ் தன் படிப்பிலேயே கருத்தாயிருந்துவந்தான். இப்படியே பங்கிரேஷஸ் தன் பதின்மூன்றும் வயசுவரைக்கும் நடந்து வந்தான்.

பின் ஒருநாள் ராத்திரி ரோமாபுரி எங்கும் நிசப்தமாய் இருக்க வீட்டில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கொஞ்சம் கேட்டது. திறந்து பார்க்கையில் அன்பான அத்தியக்ஷர் வந்தார். அவரை அன்போடு உபசரித்தார்கள். அவரும் சிலுவையின் சரித்திரத்தை அவர்களுக்குச் சொன்னார். பங்கிரேஷசும் சிற்றப்பனும் அதை அதிக ஆவலாய்க் கேட்டார்கள். கொஞ்சநாளைக்கெல்லாம் அவர்கள் இருவரும் ஞானஸ்நானம்பெற்று மற்ற கிறிஸ்தவர்களுடன் கலந்துகொண்டார்கள். நடுராத்திரி ஆராதனைகளுக்கும் போய்வருவார்கள். ஆதிகாலத்தில் ரோமாபுரியில் மரித்த கிறிஸ்தவர்களை அடக்கம் செய்திருந்ததும் இரத்தசாக்ஷியாய் மரித்த கிறிஸ்தவர்களை அடக்கம் செய்திருந்த கல்லறைகளுக்கும் போனதுண்டு. இப்படியிருந்த கொஞ்சநாளைக்கெல்லாம் பங்கிரேஷசுக்கு ஒரே உதவியாயிருந்த சிற்றப்பனும் மாண்டான். பாவம் பங்கிரேஷஸ் என்ன செய்வான்! மரித்த சிற்றப்பனண்டை முழந்தாளிட்டு உருகி உருகி அழுதுகொண்டிருந்தான்.

திடீரென்று ஏதோ காலடிச்சத்தம் கேட்டது. பார்த்தான் பாவம் பங்கிரேஷஸ். சிப்பாய்கள் வருஞ் சத்தம் அது என்று கண்டான். பெரிய ஆட்கள் நாலுபேர் அறைக்குள் வந்தார்கள். அவர்களில் ஒருவன் கொஞ்சம் பட்சமாகவே அந்த அழுத பையன் தோளில் கையை வைத்து 'எழுந்திரு! வா சக்கரவர்த்தியிடம். இப்படியே புறப்படு' என்றான்.

பங்கிரேஷஸ் பதில் வார்த்தை ஒன்றும் சொல்லாமல் எழுந்தான். சக்கரவர்த்தி தன்னைக் கூப்பிடுவது இன்னதற்கு என்று நன்றாய் அறிவான். ரோம பிரபுவின் மகனான பங்கிரேஷஸ் குட்டையும் கையுமாய்க் கொண்டுபோகப்பட்டுத் தன் மதத்தைப்பற்றிய காரியங்களுக்குச் சக்கரவர்த்தியிடம் உத்தரம் சொல்லவேண்டியதாயிற்று. பங்கிரேஷஸ் பிரபுவின் பிள்ளையாக இல்லாமல் சாதாரணமாக இருந்திருந்தால்

அப்போதே அவனைக் கொன்றிருப்பார்கள். பிரபுத்தனம் அவனுக்கு இருந்ததினால்தான் சக்கரவர்த்தியிடம் இந்தப் பாசாங்கு விசாரணையாவது நேரலானது. பங்கிரேஷஸ் பிரபுவாகவும் தைரியசாலியாகவும் இருந்ததினால்தான் அந்த அநியாய வெயிலில் தலையும் காலும் வேக வேக குட்டை ஒருபக்கம் கைகளை நெருக்க நெருக்க வெகு பாடுபட்டுச் சக்கரவர்த்தி சமுகம்போய்க் கம்பீரமாயும் மனமகிழ்ச்சியாயும் தைரியமாய்ச் சக்கரவர்த்தியை நேர நிமிரப் பார்க்கவும் கூடியவன் ஆனான்.

அந்த ரோம சக்கரவர்த்தி வெகு கொடியவன். ஆனால் இந்த பங்கிரேஷசுடைய சௌந்தரியத்தையும் தைரியத்தையும் கண்டு மனமிரங்கிவிட்டான். சாதாரணமாகக் குரூரர்களே இப்படித்தான் பேடிகளாக இருப்பார்கள். தங்களுக்கு இல்லாத தைரியம் மற்றவர்களுக்கு இருப்பதைக் கண்டால் அவர்கள் சில சமயங்களில் மெச்சுவார்கள். ஆகையால் பங்கிரேஷசைக் கண்டதும் குரூரக் குறிகாட்டாமல் அவனோடு பரிந்துபேச ஆரம்பித்து,

‘அப்பா! பையா! பார், உன் தாயும் தந்தையும் இப்போது நாங்கள் வணங்கும் தேவதைகளையே வணங்கினார்கள். இந்தப் புதுமதம் என்னத்திற்கு? அதை விட்டுவிடு. நம்ம பழய ஸ்வாமிக்குப் பலி கொடு. நான் உன்னை என் மகனைபோல் செய்துவிடுகிறேன். உன் புதுச் சாமியை விடவில்லையோ உன்னை எங்கள் ஸ்வாமிக்குப் பலியிட்டுவிடுவேன். நீ பாவம் சிறு பையன், உன்னை அப்படி பலியிடப்படாது. என்ன?’

இப்படித் தன் அரிய பெற்றோர்கள் பேரைச் சொன்னதும் வருத்தத்தால் தலை குனிந்தவன் நன்றாய் நிமிர்ந்து பார்த்தான். சக்கரவர்த்தி கேட்ட கேள்விக்கு உத்தரம்சொல்ல அந்தப் பையன் மனம் பட்டபாட்டை என்னென்று சொல்வது! இணங்கினால் கண்யம், கௌரவம், மேன்மை, வாழ்வு இவை உண்டு; மறுத்தால் அவமதிப்புத்தான். பின் மரித்தும் விடவேண்டும். பாவம் பால்மணமும் போகாத பங்கிரேஷஸ் எப்படித் தீர்மானிப்பான்? அப்படியும் இப்படியும் பார்க்காமல் ஒரே தைரியமாய் ‘நான் மாட்டேன்’ என்றான்.

இதைக் கேட்டதும் சக்கரவர்த்தி அந்தச் சமாதானப் பேச்சையெல்லாம் நிறுத்திவிட்டான். வெகு கோபம் வந்துவிட்டது. ‘சரி. மாட்டாயா? அப்படியானால் உடனே உன்னைப் பலியிடச் சொல்வேன்’ என்றான்.

சக்கரவர்த்தி மனமும் முகமும் எப்படி மாறினவோ அப்படி பங்கிரேஷஸ் மனமும் முகமும் மாறலாயின. பிரிய வசனத்துக்கே அசையவில்லை; இந்தக் கோபத்துக்குத்தானா மயங்கப்போகிறான்? மேலே பிரகாசிக்கும் வானத்தை அண்ணாந்து பார்த்து தைரியமாய்



‘பலியிடுவதானால் செய்யலாம். நான்மட்டும் என் ரக்ஷகரை மறுக்க மாட்டேன். விக்கிரகங்களை நான் வணங்கேன். அவருக்காக மரிக்க மற்றவர்களுக்குப் பலம் தந்ததுபோலவே எனக்கும் அவர் பலத்தைக் கொடுப்பார்’ என்று மறுமொழி சொன்னதும்,

சக்கரவர்த்தி கோபப்பொறி சிந்தி அதட்டி ‘இந்தப் பிடிவாதப் பையலை என்முன் நிறுத்தாதே; கொண்டுபோ; அவனை உங்கள் கத்திக்கு இரையாக்குங்கள்’ என்று கட்டளையிட்டான்.

அந்தப் பிரகாரமாகவே பொழுதுசாய அந்த பங்கிரேஷஸ் கைகட்டி தான் விசுவாசித்த தேவனை நோக்கி ஜெபம்பண்ணிய நிலையிலேயே மாண்டான்.

பின் வெகுகாலம் வரைக்கும் அவனைப்பற்றி ஒன்றும் இல்லை. அப்பால் கான்ஸ்டென்டைன் என்னும் ரோம சக்கரவர்த்தி கிறிஸ்தவன் ஆனபோது முன்னே இரத்தசாக்ஷியாக மரித்த இந்தப் பையனுடைய எலும்புகளை எடுத்து அவற்றின்மேல் அழகான ஒரு கோவில் கட்டினான். அதற்குப் பேரும் அந்த பங்கிரேஷஸ் பேரே ஆயிற்று. அதனால் அவன் பேர் இன்னும் யாவர் ஞாபகத்திற்கும் இடமாயிருக்கிறது. அவனுடைய தைரியமே தைரியம்! அவனைப்போலவே நாமும் எதிலும் இருப்போமாக.

## THE DUTIES OF WOMEN

## உத்தம ஸ்திரீகளின் கடமை

சில வருஷங்களுக்குமுன்னே ஐரோப்பாக் கண்டத்தைச்சேர்ந்த பர்மிங்ஹாம் என்னும் பட்டணத்தில் வாசஞ்செய்துவந்த தேவபக்தியுள்ள வாலிப துரை மகனொருவர் நற்குணசாலியான ஐரோப்பிய பெண்மணி ஒருத்தியை மணஞ்செய்துகொள்வதாக வாக்களித்திருந்தார். இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் செய்த இரண்டொரு வாரங்களுக்குப் பிறகு மேற்படி துரைமகன் அஜாக்கிரதையால் தன் கைகளிலுண்டான காயங்களினால் வியாதிப்பட சிகிச்சைக்காக வயித்திய சாலைக்குக் கொண்டுபோகப்பட்டார். காயப்பட்டிருந்த அவருடைய இரண்டு கைகளையும் இரணவயித்தியன் வெட்டிவிட வேண்டியதாக இருந்தது. இரண்டு கைகளையும் இழந்த அந்த வாலிபதுரை தமது சிநேகிதர்களில் ஒருவரை அழைத்து ‘நான் கொஞ்சநாளைக்குமுன் இரண்டொருநாள் பிரயாண தூரத்துக் கப்பாலிருக்கும் ஒரு பட்டணத்திலுள்ள ஒரு வாலிப துரைசானியை விவாகஞ்செய்துகொள்வதாக வாக்களித்திருந்தேன். இப்போதோ நான் இந்தப் பரிதாப நிலை

மையில் இருக்கிறேன். அம்மாதை நான் விவாகம் செய்துகொள்ளவும் ஜீவனுய்ஸத்திற்கு வேண்டிய வேலைசெய்யவும் கூடாதவனாய் இருக்கிறேன். ஆதலால் என் நிலைமையைப்பற்றி விபரமாய் ஒரு கடிதம் எழுதி வாக்குத்தத்தத்தின்படி நடக்கக் கூடாதிருப்பதால் இன்றுமுதல் நானும் அவ்வாலிபக் கன்னிகையும் புருஷனும் மனைவியுமாய் இருக்க ஏதுவில்லை; சகோதரனும் சகோதரியுமாய் இருப்பதாகப் பாவித்துக்கொள்ளும்படி தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். இச்சங்கதி நடந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு ஒருவண்டி அதிவேகமாய் வியாதியஸ்தனான அந்தவாலிபதுரைமகன் இருந்த வயித்தியசாலைக் கட்டடத்தின் முன்வாயிலில் வந்துநின்றது, உடனே ஒரு ஸ்திரீ அதினின்று ஆவலோடிறங்கி வியாதியஸ்தன் இருந்த அறைக்குள் சென்றாள். அப்போது அவர் அம்மாதைக் கண்டு திகைத்து 'இவ்வளவு தூரம் நீ ஏன் வந்தாய்?' என்று கேட்டதற்கு, அப்பெண்மணி 'என் நேசரே! நான் உம்மைப் போஷிக்கவும் சந்துஷ்டியாக்கவும் வந்தேன்; நீர் சுகமாய் இருந்தால் என்னை ஆதரிப்பீரல்லவா? அப்படியிருக்க இப்பரிதாப நிலைமையிலிருக்கிற உம்மை நான் கைவிடுவது நீதியோ? நான் ஜீவனோடிருக்குமளவும் உமக்காகப் பாடுபட்டு ஆதரிப்பது என்மேல் விழுந்த கடமை; இதற்காகவே நான் வந்திருக்கிறேன்' என்று மனதில் சந்தோஷத்துடன் துக்கமுள்ளவளாய்ச் சொன்னாள்.

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதிலொரு கருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கரன்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

சகோதரிகளே! ஸ்திரீகளான பெண்பாலார் தங்கள் இல்லறவாழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகள் பல. அப்படிப்பட்ட கடமைகளை அவர்கள் கட்டாயம் நிறைவேற்றவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

1. தன் புருஷனுடைய சம்பாத்தியம் அதிகமாய் இருந்தாலும் சொற்பமாயிருந்தாலும் 'வரவுக்குத் தகுந்த செலவுசெய்' என்னும் முதுமொழிப்படி குடும்ப சம்ரக்ஷணைக்கான எல்லா விஷயங்களிலும் கண்ணும் கருத்துமாயிருந்து நடப்பிப்பதும் அத்தியாவசியமான காரியமே.

2. பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்ப்பதும் கல்வியில் தேர்ச்சியடைய வைப்பதும், சன்மார்க்க ஜீவியத்தில் நடத்துவதும் தாய்மார்களின் கடமைகளிலொன்று.



3. தாய்மார்கள் தங்கள் நற்பழக்கவழக்கங்களினால் அண்டை அயல் வீடுகளிலுள்ள பெண்களுக்கு முன்மாதிரியாக ஜீவிப்பது அப்படிப்பட்டவர்கள் சீரடைவதற்குச் சிறந்த எத்தனங்களாயிருக்கின்றன.

4 அந்தி சந்தி மத்தியானவேளைகளில் குடும்பஜெபம் நடத்தும் விஷயத்தில் ஸ்திரீயானவள் தன் புருஷன் பிள்ளைகள் முதலிய பந்துமித்திரர்களை ஏவி இவ்விதமாய்த் தன் வீடு ஜெபவீடாய் இருக்கும்படி செய்வதில் மிகவும் கடமைப்பட்டிருக்கிறாள்.

5. ஸ்திரீகள் தேவஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறார்களானால் அப்படிபபட்டவர்கள் பெற்றிருக்கும் இந்தச் சிறந்த ஊழியத்தைச் சீராய் நிறைவேற்றுவதிலும் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களைக் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்துவதிலும் வெகு கவலையாய் இருப்பதும் ஸ்திரீகளின் கடமையே.

மேற்கூறிய சரித்திரத்தில் சொல்லப்பட்ட ஐரோப்பிய பெண்மணியானவள் தான் நிறைவேற்றவேண்டிய கடமையை நிறைவேற்றுவது அவசியமென்றிருந்ததுமாத்திரமல்ல, அதை நிறைவேற்றவும் முயன்றாள் என்று பார்க்கிறோம். இவ்விதமாக வேதஸ்திரீகள் தங்களுடைய எல்லாக் கடமைகளையும் சீரும் செம்மையுமாய் நிறைவேற்றுவதில் எவ்வளவோ க்கவலையும் கரிசனையும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். அப்படிப்பட்டவள் தன் புருஷனுக்கும் தன் பிள்ளைகளுக்கும் மற்றும் தன்னுடைய பந்துமித்திரர்களுக்கும் ஒரு சிறந்த பூஷணம்போல் விளங்கி நிற்கக்கூடியவளாய் இருக்கிறாள். அப்படிப்பட்ட ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறவளாய் இருக்கிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேலிருக்கிறது; அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறதென்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளைப் பார்த்து 'அநேக பெண்கள் குணசாலிகளாய் இருந்ததுண்டு, நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள்' என்று அவளைப் புகழுகிறான். அப்படிப்பட்டவள் கர்த்தாது ஆசீர்வாதங்களையும் மனுஷாது புகழ்ச்சியையும் அடையக்கூடியவளாயிருக்கிறாள் என்பது சத்தியம்.

Esther. J. Ponnusami, Erumapatti.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி)

இதைக்கண்ட வேதாபிமானிக்கு ஒரு ஞாபகம் வந்தது. அதாவது, இவர் இருந்த கிராமக்கோவில் ஒன்றில், ஒரு முனிஷிப்தார் ஒரு சீரிய கிறிஸ்தவர் வந்தபோது இவருக்கு உட்கார்ந்து இருக்கும்படி நாற்காலிகள் கொண்டுவந்து போட்டதற்கு அவர் ஒருக்காலும் தேவாலயத்தில் நாற்காலி போட்டிருப்பது கூடாது என்று மறுத்துவிட்டு மற்றவர்களோடு தரையிலே உட்கார்ந்துகொண்டார். கோவில் முடிந்த பிறகு ஏனையோர் 'நீங்களும் எங்களைப்போலத் தரையில் இருந்துகொண்டீர்களே. நாற்காலியிலிருக்கக்கூடாதா?' என்றதற்கு, அந்த முனிஷிப்தார் (மலையாளி) 'எங்கள் ஊரிலே கோவிலில் உட்காரும் வழக்கமேயில்லை' என்றார்.

அதுகேட்டு கூடவிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றால் இந்தப் பக்கங்களிலுள்ள பெரிய கோவில்களிலே நாற்காலிகள், சாய்மானங்கள், முழங்காலுக்கு மெத்தைகள், காற்றுவீச பங்காக்கள், கால் இருக்கப் பாய்கள் அடித்துக் கோவிலிலிருக்கும் ஒருமணிநேரத்திற்குச் சரீரசுகத்தைப் பேணி, எவ்வளவோ சௌகரியங்கள் அமைத்து வைத்திருக்கிறார்கள். அன்றியும் நமது கோவில்களில் வருகிறவர்கள் தூண்புறமும் சுவர்ப்புறமும் வந்து சாய்மானம் போட்டதுபோலச் சாய்ந்துகொண்டு, அது காரணத்தால் நித்திரைகொள்ளவும், கோவிலில் பாடும் பாட்டுகளும் பிரசங்கமும் தாலாட்டென எண்ணிக்கொண்டு, பஞ்சணைமெத்தையில் துயில்பவர்போல நித்திரையும் கொண்டு குறட்டையும் விடுகிறார்களே. தேவனுக்குமுன்பாக இது எவ்வளவு பயங்கரமானது என்பதை உணருகிறது யார்? இதர மதஸ்தர்களும்கூடப் பேச்சுமூச்சற்ற விக்கிரகத்தை எவ்வளவு பயபக்தியாய், சரீரவதைசெய்து, அங்கப்பிரதட்சணம் உருண்டு தங்களை எவ்வளவாகத் தாழ்த்திப் பணிகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நம்மில் அநேகர் பயபக்தியில்லாமல் அவருடைய ஆலயத்தில் காணப்படுவதில் பாவத்தைக் கூட்டிக்கொள்ளுகிறோமேயல்லாது வேறல்ல, என்று பேசிக்கொண்டார்கள்.

பின்னும் அந்தச் சீரிய கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒன்றுபோல் வெள்ளைத்துகில் உடுத்து, ஆண்களெல்லாரும் ஒரேவிதமாக மொட்டைத்தலையராக இருந்தார்கள். சாதிபேதமே காணப்படவில்லை. அது காரணம் யாது என்று விசாரிக்க அவர்கள் சொன்னது 'எங்கள் மார்க்கத்துள் அமைந்தவர்களையெல்லாம் நாங்கள் ஜாதியோடு ஒன்



றாகச் சேர்த்துக்கொள்ளுவோம். திருஷ்டாந்தமாக, புலையர் தீயர் என்னப்பட்டவர்களை வெகு தீட்டாயெண்ணி ரோட்டில் நடக்க இடம் கொடுக்கமாட்டோம். ஆனால் எங்கள் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்தவர்களையோ ஜாதிபேதமின்றி எல்லாரையுமே சேர்த்துக் கொள்ளுவோம், தீட்டா யெண்ணவுமாட்டோம்' என்றார்கள்.

பின்னும் வேதாபிமானி அவர்களைக் கவனித்துப் பெண்களெல்லாரும் நமது நாட்டைப்போல் அதிக ஆபரணங்களைப் பூட்டிக்கொள்ளாமல் எல்லாரும் ஒரே ஒரு நகைமாத்திரம் போட்டிருக்கக் கண்டார். அதுவும் 50 ரூபாய்க்குள் அடங்கினதாகவே இருந்தது. 'அவர்கள் அதிக தனவந்தராயிருந்து அதிகமாய் நகைபோடக்கூடுமானால் 200 ரூபாய்க்கு அதிகமான நகை கிடையாது' என்றார்கள்.

அதுகேட்டு வேதாபிமானி 'நமது நாட்டிலே ஸ்திரிவர்க்கர் 3 ஆயிரத்துக்குக் கம்மல், அட்டிகை, தங்க ஒட்டியாணம், காசுமாலை முதலிய விலைபெறுமான நகை போடுகிறார்களே. எளியவர்கள்கூட 300 ரூபாய்க்குக் குறையாமல் போடவேண்டியதிருக்கிறது. அன்றியும் பணக்காரர் வரவர அதிகமான பொருள் தருவதாக ஒப்பந்தம் பேசுகிறார்கள். அந்தோ! என்ன பணப்பெருமையா? எளியாரைக் கவலைக்குள்ளாக்க வலியார் காட்டிய வழியா? தட்டார்கள்பேரிலுள்ள தயவா? தட்டார்கள் பட்டப்பகல் கொள்ளையடிக்க அவர்களைத் தேடி வலியத் தாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்து, அவன் வீட்டுக்கு நடந்து நடந்து, கால் பலமும் குன்றினாலும், நகைசெய்யும் வழக்கம் இன்னும் நம்மில் நிற்கவில்லையே' என்று தனக்குள்ளே அங்கலாய்த்து, அந்த மலையாள ஜனங்களைப் பார்த்து, 'நீங்கள் மக்களைக் கலியாணம் செய்து கொடுக்கும்போது என்ன கொடுப்பீர்கள்' என்றதற்கு, 'நிலம், பணம், மரங்களிலும் சிலவற்றை சீதனமாகக் கொடுப்போம்' என்றார்கள்.

அப்போது வேதாபிமானி 'அது நல்ல மாதிரிதான். ஏனெனில் நீங்கள் கொடுக்கும் பொருள்கள் வரவரப் பெருகிப் பின்பு லாபத்தைத் தரக்கூடியன. எங்கள் ஊரிலே வயிற்றை ஒறுத்து, வாயை ஒறுத்து பட்டினி கிடந்து, சீட்டுகட்டுப்போட்டுப் பணஞ்சேர்த்து நகைசெய்து கொடுப்பார்கள். அதிலே தட்டான் பாதியும், கள்ளர் பாதியும், கள்ளுக்கடை பாதியுமாகப் பறந்துபோய்விடும். ஒருக்கால் எங்கள் தேசத்திலே 3000 ரூபா நகை அணிந்திருந்த ஒரு பெண்பிள்ளை திருமங்கிலியமன்றி, வேறொன்றுமில்லாதிருக்கக் கண்டேன்' என்று துக்கத்தோடு பெருமூச்சுவிட்டு, 'குடியினாலும் குடிகெட்டோர் அனந்தம்; என்றைக்கு இந்தத் துர்ப்பழக்கங்கள் எங்கள் தேசத்தைவிட்டு நீங்குமோ அன்றுதான் தரித்திரம் நீங்கிச் சுகவாழ்வைக் கண்டடைய

லாம்' என்றார். அதற்குள் அவர்கள் 'நாங்கள் பிள்ளைகளுக்காக வயிற்றை ஒறுத்துக் கஷ்டப்பட்டுச் சீட்டுப்போடுகிறதில்லை. சீட்டுக்காரருடைய பிரளிகளில் சிக்குகிறதுமில்லை' என்றார்கள்.



அதற்கு வேதாபிமானி 'நீங்கள் பிள்ளைகளுக்கு என்னவகை செய்வீர்கள்?' என்றான். அதற்கு 'எளியவன்முதல் வலியவன் வரையும் கோழிமுட்டை முதலாய் மாங்கள்வரையிலும் ஒன்று ஒன்று அந்தப் பிள்ளைபேருக்குப் பிரித்துவிட்டு, அதைப் பெருகச் செய்து பரிபாலித்து, விக்கிரயம்செய்து, அதன் பணத்தைக்கொண்டு நிலம் வாங்கி, இப்படியே பிரயாசத்தினால் பூமியின் நற்பலன்களைக் கொண்டே பிள்ளைகளுக்கு வழிசெய்துகொள்வோம்' என்றார்கள்.

அதுகேட்டு வேதாபிமானி, 'நீங்கள் செய்வது நல்ல முறைதான். பிரயாசத்துக்குத் தக்க பலன் கிடைக்கும். ஆண்டவரும் உதவிசெய்வார். அதினால் உங்கள் தேசத்திலே தரித்திரமில்லை' என்றார்.

அதுவுமன்றி அந்த ஊரிலே அநேக முதிர்வயதுள்ளவர்கள் இருந்தார்கள். திருஷ்டாந்தமாக, ஒரு வீட்டிலே தகப்பனும் மகனும்



பேரனுமான கிழவர்கள் 94, 72, 50 வயதுமாயுள்ளவர்கள் இருந்தார்கள். அதுகண்டு நாங்கள் இது கர்த்தருடைய ஆசீர்வாதம் என்று ஸ்தோத்திரத்தோடே கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்தோம். கர்த்தருடைய பத்துக்கற்பனைகளில் வாக்குத்தத்தங்களடங்கிய முதலாம் கற்பனையில் தாய்தகப்பனைக் கனம்பண்ணுவோருக்குக் கிடைக்கிற சிலாக்கியம் என வியந்து பேசிக்கொண்டு வேதாபிமானி 'சீதா, இந்த ஊரிலே நேற்று இரவு பஜனைக் கூட்டத்துக்குப் போயிருந்தபோது ஒரு சங்கதியைக் கவனித்தாயா?' என்றார்.

அதுகேட்டு, சீதன் 'திரளான ஜனங்கள் 10 மைல் தூரம் 5 மைல் தூரமான இடங்களிலிருந்து ஆவலோடே பஜனைப்பிரசங்கத்துக்குக் கூடிவந்தார்களே, தீவட்டிபந்தத்துக்குப் பதிலாய் தென்னம் ஓலைகளைச் சேர்த்துக்கட்டிய கட்டுகளைப் பிடித்து விரைவாய் வந்ததும் எனக்கு வேடிக்கையாயிருந்தது. மேலும் அவர்கள் ஆசனம் விரிப்புத்தேடாமல் தரையிலே வரிசை வரிசையாக இருந்ததையும் கவனித்து இப்பெருங்கூட்ட ஜனத்துக்கு இந்தப் பிரசங்கியார் சொல்வது எப்படிக் கேட்கும் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தேன். அதற்கு மூன்று பேர் வலதுபுறமும் இடதுபுறமுமாக நின்று தர்சுமால்பண்ணிச் சொல்வதைக் கேட்க வெகு விநோதமாயிருந்தது, ஐயா,' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'அதுவும் நல்ல சங்கதிதான். என் பககத்தில் 68 பிராயமுள்ள ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் திடீரென எழுந்து நின்றுகொண்டேயிருந்து பிறகு உட்கார்ந்துகொண்டார். அது என்ன காரணம்?' என்று பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டேன். அவர்கள் 'அவர் தமையன் வந்தார். அவர் இருக்கும் இடம் தெரிந்து உட்காரும்வரையும் நின்றுகொண்டிருந்தார்' என்றார்கள். 'எனக்கு இப்பெரும் கூட்டத்திலேகூட மரியாதைசெய்ய கவனமாயிருக்கவேணுமோ?' என்றேன். 'இது எங்கள் வழக்கம்' என்றார்கள். பார்த்தாயா, சீதா? நமது தேசத்திலே அண்ணனுக்கும் தம்பிக்கும், தகப்பனுக்கும் மகனுக்கும் இவ்வளவு மரியாதையுண்டா? தம்பிக்கு உத்தியோகம் வந்தால் அண்ணனை இனம் தெரியாதவனைப்போல் அழைப்பானே என்றார். 'ஆனால் எல்லாரும் அப்படியல்ல என்பதற்காகச் சந்தோஷப்படவேண்டியது. சில பிள்ளைகள் தாயோடு சேர்ந்துகொண்டு தகப்பனை அடிப்பதும், தாரத்தைக் கண்டவுடன் தாய்தகப்பனை அண்டவிடாமல் பேசுவதும் ஏசுவதும் சொல்லவேண்டுவதில்லை. இப்போ இடத்துக்கிடம் இந்த நடபடிக்கை சகஜமாய் நடந்தேறுவதைக் கண்ணாரக் கண்டவர்களும், காதாரக் கேட்டவர்களும் எத்தனையோ பெயர் உளர். அதை நாம் பேசுவதுகூட அடாது' என்றார்.

அது கேட்டு ஸ்ரீதமணி 'ஐயா, அதினால்தான் நமது சபைகளில் அதிகமான முதியோர் இல்லாமல் பெரும்பாலும் பாலியரும் சிறு பிள்ளைகளுமே இருக்கக் கண்டேன்' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'இல்லை, முதியோரும் சிலர் இருந்தாலும் தரித்திரமும் வறுமையும் பசியும் குடிகொண்டு, வியாதிமுதலிய கஷ்டதிசைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தாவீது ராஜன் சொல்வதுபோல எழுபது அல்லது எண்பது வயதாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. இப்படியிருந்தபோதிலும், இந்த அழுகையின் பள்ளத்தாக்கை விட மனமில்லாத அநேக கிழவர்களைக் கண்டிருக்கிறேன், அப்பா' என்றார்.

அப்போது ஸ்ரீதமணி 'ஆ, என்ன ஆச்சரியம்' என்றான்.

அப்போது வேதாபிமானி 'சிறு பிள்ளையில் என் தகப்பனார் சொல்லிய கதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. அதைச் சொல்லுகிறேன் கேள்' என்றார்.

ஸ்ரீதமணிக்குக் கதை பிரியமானதால் 'ஐயா சொல்லுங்கள்' என்று ஆவலாய்க் கேட்டான். (இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.

## 'YE DID IT UNTO ME'

## 'நீங்கள் அதை எனக்கே செய்தீர்கள்'

ஒருநாள் இராத்திரி மழையும் காற்றும் கலந்தடித்தது. அப்போது குரு ஒருவர் தம் சீஷர்களுடன் சாப்பிட யத்தனித்தார். வழக்கம்போல் சாப்பிடப் போகுமுன் 'இயேசுவே! இப்போது வந்து எங்கள் விருந்தாளியாயிரும்' என்று ஜெபம்பண்ணினார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சீஷன் ஒருவன் 'இதென்னையா! நீங்கள் எப்போதும் இயேசுகிறிஸ்துவை வரும்படியாக அழைக்கிறீர்கள். அவர் என்னவோ வருகிறதேயில்லை! அதேன்? நிச்சயமாக வருவாரா?' என்று கேட்டான்.

அதற்குக் குரு 'ஓ! அவர் கட்டாயம் வருவார்' என்றார்.

உடனே பையனும் 'அப்படியானால் இன்றிரவு அவர் வந்தால் உட்கார ஒரு இலை காலிவிட்டு வைக்கிறேன்' என்றான்.

இப்படிச் சொல்லியும் சொல்லாததுமாக யாரோ கதவைத் தட்டக் கேட்டது. கதவைத் திறந்தபோது மழையால் நனைந்து பசியால் மெலிந்த கிழவன் ஒருவன் வந்தான். அவனை அன்போடு உபசரித்து காலியாக விட்டுவைத்திருந்த இலையில் உட்காரவைத்தார்கள்.



இதைக்கண்டதும் சீஷன் அத்தனையும் அறிந்துகொண்டவன்போல் 'ஐயா! இப்போ எனக்குத் தெரிந்துவிட்டது. இயேசு தாமே வரமாட்டார்! அதனாலே தமக்குப் பதிலாக இந்த ஏழையை அனுப்பியிருக்கிறார்' என்றான்.

## DANIEL'S SONG

## தானியேலின் பாட்டு

இராகம் 'தேவ பிதா.' ஆதிதாளம்.

பல்லவி

திட்டுள்ளது திராக்ஷ ரசம், திட்டமாக வேண்டாமென்று

அனுபல்லவி

தீர்மானமாய் தானியேலும் திட்டமாக வேண்டிக்கொண்டான்-திட்.

சரணங்கள்

1. பத்து நாளாய் பருப்பு சோறு பலவகை மரக்கறிகள்
உத்தமமாய் தண்ணீர் பானம் உண்ணவகை செய்யவேண்டும்-திட்.

2. நாட்டிலுள்ள சாராயங்கள் நல்லதல்ல பொல்லாததே
வீட்டிலும் வழங்கவேண்டாம் விருந்துகளில் சேர்க்கவேண்டாம்-தி.

3. ராஜாவுக்கு முன்னாகவே ராஜியத்தின் வாலிபரில்
திராசு நிறைத் தூக்குப் போன்ற தீர்க்கமாய் விளங்குகின்றார்-திட்.

4. மேல் விராயன் பார்வையிலே நிற்கின்ற நாலு பேர்கள்
பால்குடித்துத் துள்ளுங் கன்றாய் பார்வையிலே தோன்றுகின்றார்-தி.

## NOISY INSECTS

## சத்தம் செய்யும் பூச்சிகள்

இந்த லோகத்தில் உள்ள பூச்சிவகைகள் அநந்தம். அவற்றில் அநேகம் கத்துகின்றன. அதிலும் இரண்டுவகைப் பூச்சிகள் ஒரே விதமாய்க் கத்துவதும் இல்லை. சில 'கீச், கீச்' என்கின்றன, வேறு சில ரீங்காரமிடுகின்றன. பலவகைப் பூச்சிகள் செய்யும் சத்தத்தைக் குறிக்கும் வார்த்தைகளே நம்மில் இல்லை. அவைகள் செய்யும் சத்தம் இப்படி உண்டாகிறது என்பதாவது தீர்மானமாகத் தெரி

யுமா? அதுவுமில்லை. இரவில் நாம் தூங்கும்போது காதண்டை வந்து சத்தமிடும் கொசு, அல்லது குளான் முதலியன தங்கள் சிறு மெல்லிய இறகுகளைப் பறக்கும்போது விரைவாய் வீசியடிப்பதால் உண்டாவதாகச் சொல்லுகின்றனர். இதாவது இவ்வளவு தெரிந்திருக்கிறது. ஆனால் ஒரு பூச்சி செய்யும் சத்தத்தை மற்றது எப்படித் தெரிந்துகொள்ளுகிறது என்பதைப்பற்றிக் கொஞ்சமும் தெரியாது. நாம் அவைகளின் சத்தத்தைக் காதால் கேட்கிறோம். அதனால் அப்படிச் சத்தமிடும் பூச்சிகளைப்பற்றி அறிய ஆசைப்படுகிறோம். சத்தம் செய்யாத பூச்சிகள் அநேக கோடியாக இருந்தும் அவைகள் மௌனமாயிருப்பதால் அவற்றைக் கவனிப்பதில்லை.



அநேக பூச்சிகளும் வண்டுகளும் தங்களுடைய செட்டைகளினால் ஹம்’ என்றும் ‘பஸ்’ என்றும் சத்தஞ்செய்கின்றன. சில வண்டுகளின் இரைச்சல் சிறு பிள்ளைகள் பறக்கவிடும் பட்டம் அல்லது காற்றாடி செய்யும் சத்தம்போலவே இருககும்.

வெட்டுக்கிளிகள் பெரிய கும்பலாகப் பறந்துபோகும்போது உண்டாகும் சத்தம் ஓடுந் தண்ணீரின் இரைச்சல்போல் இருக்கும். அவைகள் தரையில் இருந்து ஏதோ தழை, கதிர்களைக் கொறிக்கும்போது உண்டாகும் சத்தம் ‘குசுகுசு’ என்று வெகு நன்றாய்க் கேட்கும்.

‘சாப்பூச்சி’ என்றொரு வித வண்டு உண்டு. அது மரத்துக்குள் இருப்பது; மரத்தை அரித்துக்கொண்டு வெளியே வரும்போது செய்யும் ஓசை வெகு நன்றாய்க் கேட்கும். இங்கிலாந்தில் இது வெகு அபூர்வம். இப்போதும் ஹிந்துக்கள் நாய் ஊளையிடுவதைச் சாவுக்குறி என்றெண்ணுவதுபோல ஒரு காலத்தில் இங்கிலாந்து தேசத்தார் இவ்வண்டின் ஓசைக்குப் பயந்திருந்தார்கள்.

ஸிக்காடஸ் நம் வாத்தியங்களைப்போல சந்தோஷத்தினால் சப்தஞ் செய்யும் பூச்சிகள் வெகு சொற்பம். அந்தமாதிரிப் பூச்சிகளில் ஸிக்காடஸ் என்ற ஜாதிப் பூச்சியே பேர்போனது. இவைகள் பண்டையகாலத்திலே கிரீஸ் ரோம் தேசங்களில் பேர்பெற்றிருந்தன. இந்த ஜாதியிலும் ஆண்பூச்சிகள்தான் சப்திக்கும். பெண்பூச்சிகள்



சப்திக்கா. இந்த ஆண்பூச்சிக்கு அதன் சரீரத்தின் இருபக்கங்களிலும் ஒருவித அவயவம் இருக்கும். அதனால் அது சப்தமிடுகின்றது. அதற்கு நாலு சிறகுகளும் ஒரு கூர்மையான அலகும் உண்டு. அதன் வடிவம், பழக்க வழக்கங்கள் விட்டிலைப்போன்றவைகளே. ஆனால் இது விட்டிலைவிடப் பெரியது. இதன் சட்டைகள் கண்ணாடியைப்போல் ஊடுருவிப் பார்க்கக்கூடியவை.

இந்தியாவிலுள்ள இந்த ஜாதியில் அநேகம் இரண்டே அங்குல நீளமுள்ளவை. மலேயா தீவிலுள்ளவை மிகப் பெரியவை. டார்ஜீலிங்கில் நிலவீயைவிடச் சிறிய அழகிய பச்சை ஜாதி உண்டு.

இந்தியாவின் எல்லா மலைகளிலும் மற்றும் வறட்சியான பாகங்களிலும் இந்த ஜாதி சாதாரணமாய் அகப்படும். இந்த ஸிக்காடஸ் ஜாதி பாம்பைப்போல் தோலுரிப்பது வழக்கம். அப்படிக் கடைசி முறை சட்டைவிட்டு முதிர்ந்த இறகுபெற்றதாய்ப் பறந்துபோய்விடும்போது அதன் சட்டை அடிமரத்தில் ஒட்டியிருப்பதைக் காணலாம். அது வெகு விநோதமாயிருக்கும். அதிலிருந்து ஸிக்காடஸின் பெரிய தலை, கூர்மையான அலகு, பெரிய கண்கள், உரத்த கால்கள் முதலியவற்றை உயிரோடிருந்தாற்போலப் பார்க்கலாம். ஆனால் உயிரோடிருக்கும் ஸிக்காடஸைப் பார்ப்பது துர்லபம். ஏனென்றால் அதனண்டை நாம் போனால் அது சத்தமிடுவதை நிறுத்திவிட்டு நொடியில் பறந்து போய்விடும்.

இந்தப் பூச்சிகளில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஜோடியாக இருக்கும்போது ஏதாவது எதிரி முன்னிட்டால் அதை ஆண்பூச்சியே மூர்க்கமாய்ச் சத்தமிட்டுத் துரத்தும். இப்படிச் சத்தமிடுவதெல்லாம் வெயில்காலத்தில் நல்ல மத்தியான வேளையில்தான். மழை ஆரம்பித்ததும் அவை ஓய்ந்துவிடும். இளம்பூச்சிகள் மரமதுவையுண்டு ஜீவிக்கும்.

ஸிக்காடஸ் சத்தத்தை அறிய விரும்புவோர் பிடிலின் முதல் தந்தியின்மேல் வில்லால் வெகு விரைவாக முன்னும் பின்னும் தள்ளிப்பார்க்க. என்னதான் விரைவாக வில்போட்டாலும் அதற்கு நூறில் ஒரு பங்காகாது.

## சிள் வண்டுகள்

கத்தும் பூச்சி வகைகளில் இன்னொன்று சிள் வண்டு. இந்தச் சிள்வண்டு வயல்களில் காணப்படும் சாதாரணமான பூச்சிதான். என்றாலும் இதற்கும் வெட்டுக்கிளிக்கும் வித்தியாசம் சுலபமாய்த் தெரியாது. அவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்கள் ஆரை இங்கே சொல்வது நலம்.

(1) சிள்வண்டின் இறகுகள் அதன் முதுகின்மேல் படிந்து தட்டையாய் இருக்கும். ஆனால் வெட்டுக்கிளிகளின் இறகுகள் அதன் இருபக்கங்களிலும் மடிந்து இருபுறச் சிறகுகளும் முதுகின்மேல் வீட்டுக் கோப்பைபோல் சேர்ந்திருக்கும்.

(2) சிள்வண்டுகள் இரவில்தான் சுறுசுறுப்பாய் இருக்கும். வெட்டுக்கிளிகள் பகலிலேயே இரைதேடித் திரியும்.

(3) சில பூச்சிகளுக்குத் தலையின் முன்னண்டையில் நூல் போன்ற இரண்டு சன்னக்கொம்பு இருப்பது உண்டு அல்லவா? அவை அவற்றால் ஸ்பரிசிக்கும்; கேட்கவும் செய்யுமாம். அவைகளைப் பொதுவில் ஸ்பரிசினிகள் என்போம். இந்த ஸ்பரிசினிகள் சிள்வண்டு, வெட்டுக்கிளி இரண்டிற்கும் உண்டு. ஆனால் முந்தியதின் ஸ்பரிசினிகள் வெகு நீளம்; சிலவேளைகளில் அவை நாலைந்து அங்குலம் இருக்கும். பிந்தியதின் ஸ்பரிசினிகள் வெகு குட்டை.

(4) சிள்வண்டுகள் துளை அல்லது வளைகளில் வசிக்கும். வெட்டுக்கிளிகளோ வெறுமனே தரையின்மேலேயே வாழும். குழிமுயலுக்கும் முயலுக்கும் உள்ள வித்தியாசங்களில் இது ஒன்று அல்லவா?

(5) சிள்வண்டுகள் பாடும்; அல்லது 'கிச்' என்று சத்தமிடும். ஆனால் வெட்டுக்கிளி யாதொரு சத்தமும் செய்வதில்லை.

(6) வெட்டுக்கிளிகள் நமக்குத் தீமையை விளைவிப்பன அல்ல. ஆனால் சிள்வண்டுகள் தோட்டம், வயல், வீடு முதலான இடங்களில் நமக்கு நாசமுண்டாக்கும். இந்தக் கடைசி வித்தியாசம் வெகு முக்கியமானது. அதோடு இந்த ஆறு வித்தியாசங்களும் நம் சாதாரண வீட்டுச் சிள்வண்டுகளுக்குப் பொருத்தமாகா.

(இன்னும் வரும்)

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1913 ஆம் மார்ச்சுமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | 1 சாமு. | 25. | 26—35 | 11 | செ. | 1 சாமு. | 31. | | 21 | வெ. | லூக். | 23. | 32—46 |
| 2 | ஞா. | ,, | 25. | 36—44 | 12 | பு. | லூக். | 18. | 1—14 | 22 | ச. | ,, | 23. | 47—56 |
| 3 | தி. | ,, | 26. | 1—12 | 13 | வி. | ,, | 18. | 15—30 | 23 | ஞா. | ,, | 24. | 1—12 |
| 4 | செ. | ,, | 26. | 13—25 | 14 | வெ. | ,, | 18 | 31—43 | 24 | தி. | ,, | 24. | 13—35 |
| 5 | பு. | ,, | 27. | | 15 | ச. | ,, | 19. | 1—10 | 25 | செ. | ,, | 24. | 36—53 |
| 6 | வி. | ,, | 28 | 1—14 | 16 | ஞா. | ,, | 19. | 28—40 | 26 | பு. | 1 கொரி. | 15. | 1—11 |
| 7 | வெ. | ,, | 28 | 15—25 | 17 | தி. | ,, | 20. | 1—18 | 27 | வி. | ,, | 15. | 12—23 |
| 8 | ச. | ,, | 29. | | 18 | செ. | ,, | 22. | 1—13 | 28 | வெ. | ,, | 15. | 24—34 |
| 9 | ஞா. | ,, | 30 | 1—10 | 19 | பு. | ,, | 22. | 14—30 | 29 | ச. | ,, | 15. | 35—49 |
| 10 | தி. | ,, | 30. | 11—20 | 20 | வி. | ஏசா. | 53. | | 30 | ஞா. | ,, | 15. | 50—58 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913


# மாதர் போதினி

No. 184 ஏப்பிரல் 1913 No. 4


## TWO KINDS OF BEGGARS

## இருவகைப் பிச்சைக்காரர்கள்

தேவதாசன் லோகநாதன் என்ற இரண்டு பிச்சைக்காரர்கள் ஒரு நாள் சந்தித்துப் பின்வருமாறு சம்பாஷித்தார்கள்.

லோக.—என்ன! நம் தொழில் ஒரு தொழிலா? எனக்குச் 'சீ' என்று போய்விட்டது.

தேவ.—அப்படியா! எனக்கென்னவோ நம் தொழில் நல்ல தொழிலாகத்தான் இருக்கிறது. நாளுக்குநாள் அதில் எனக்குப் பிரியமும் உற்சாகமும் அதிகரித்துவருகின்றன.

லோக.—உன்மட்டில் அதுவிஷயம் புதுமையாகக் காண்கிறது. நம்மை முன்னேறச் செல்லவிடாதபடி அநேக காரியங்கள் தடையாக இருக்கின்றன. முதலாவது ஒரே வீட்டிற்குப் பலதரம் போவதற்குண்டா? அதுவுமில்லை.

தேவ.—என் அநுபவம் அப்படியல்ல. நான் எவ்வளவுக் கெவ்வளவு அடுத்தடுத்துப் போகிறேனோ அவ்வளவுக் கவ்வளவு எனக்கு உதவத் தயாராயிருக்கிறார்கள்.

லோக.—இல்லவே இல்லை! அப்படிச் சொல்லவே வேண்டாம். என்னை, போன பக்கமெல்லாம் 'போடா! குறும்புக்காரா! போ போ!' என்று துரத்துகிறார்கள். என்னை வேறெங்காவதுபோய் என் கதையை விவரிக்கச் சொல்லுகிறார்கள். அப்பால் மீறி சும்மா கத்தினால் ஏதோ இரண்டரிசியைக் கண்ணில் காட்டுவார்கள். அத்தனைதான் பார்த்துக்கொள்.

தேவ.—என்னவோ அப்பா! நான் பொய் சொல்லமாட்டேன். நான் கேட்டதே கிடைக்காவிட்டால், நான் கேட்டதைவிட நல்லது ஏதோ கிடைக்கும். அது நிச்சயம்.

லோக.—'சரிதான்! நாங்களே இங்கே பிச்சையெடுக்கப் புறப்படவேணும்போல் இருக்கிறது' என்று சொல்லும் ஜனங்களும் உள்ள இந்தக் காலத்தில் உனக்கு அப்படியெல்லாம் நடப்பது அதிசயம்தான். அது உன் நல்ல அதிர்ஷ்டம்.



தேவ.—என்னிடம் அப்படிச் சொல்லுவாரே இல்லை. ஆகையால் எங்கே கேட்டவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லவேண்டாதபடி அதிகமாக இருக்கிறதோ அங்கே போ.

லோக.—அதுதான் போகட்டும் என்று நான் துக்கமுகம் காட்டினால் என்னைக் கபடன் என்றும், வேஷதாரி என்றும் இட்டுகிறார்கள்; மலர்ந்த முகங்கண்டால் 'உனக்கென்ன குறைவு' என்று சொல்லிவிடுகிறார்கள். இதையெல்லாம் பார்த்துப் பட்டுச் சலித்தேன்,



இவர்களோடு என்னவாகக் காரியம் கொண்டுபோவதோ தெரியவில்லை.

தேவ.—நீ அப்படி. நான் எப்படியென்கிறாயா? நான் சங்கடப்படும்போது எனக்காகப் பரிதாபப்படுகிறார்கள்; நான் மனமகிழ்ந்து சந்தோஷமாய் இருக்கும்போது எனக்குப் பூரண ஆசீர்வாதம் வருகிறது.

லோக.—அப்பா! சரி சரி! நல்ல அதிசயம்! என் கதையைக் கேட்டும் கேட்காமலுமே அவர்கள் சலித்துப்போகிறார்கள். நான் சொல்வது உண்மையானாலும் அவர்கள் என்னை நம்புவதே இல்லை; பொய் என்று நினைக்கிறார்கள்.

தேவ.—சரி சரி! உனக்கும் எனக்கும் வெகுதூரம். நான் எத்தனைதான் சொல்லிவந்தாலும் அவர்களுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. எனக்கு வேண்டுமானால் சலிப்புத்தோன்றுகிறது. சொல்லச் சொல்ல 'ஊ ஊ' என்கிறார்களே தவிர 'சரிதான்! போடா' என்பதேயில்லை. என்மேல் என்னவோ அத்தனை பிரியம். நான் சொல்லிக்கொள்ள வேண்டிய குறைமுறைகள் எல்லாம் எனக்குத் தெரிந்திருக்கிறதை விட நான் எங்கே போய்ப் பிச்சை கேட்கிறேனோ அங்கேயே அவை நன்றாய்த் தெரியும்.

லோக.—சரி! அப்படியானால் நீ எந்த வீட்டுக்குப் போய்ப் பிச்சை கேட்கிறாய்?

தேவ.—நான் பரலோக வாசலில் நின்று கேட்கிறேன்; நீயோ?

லோக.—நான் இந்த உலகத்தில்தான் பிச்சை கேட்கிறேன்.

தேவ.—அப்படியானால் உன் பிழைப்பு உனக்கு வெகு சலிப்பாகத்தான் இருக்கும்; சந்தேகமில்லை. நான் கேட்கிற வீட்டுக்கு வந்து நீயும் கேட்டுப்பார்; அங்கே வந்தாயானால் நீ ஏமாறவேமாட்டாய். ஒருத்தரும் கோபதாபங் காட்டமாட்டார்கள்; சும்மா வெறுமனே திரும்பவும் மாட்டாய் என்ன! வருகிறாயா?

## FORBEARANCE

## பிழை பொறுத்தல்

சிலவேளைகளில் சிறு குழந்தைகள் ஒருவரோடொருவர் கோபித்துக்கொள்ளுகிறார்கள். ஒரு சிறுவனின் விளையாட்டுக் கருவியையோ ஆபரணத்தையோ மற்றவன் எடுத்துவிட்டால் அவனுக்கு வரும் கோபத்தைப் பார்த்தால் வெகு பிரமாதமாய் விடுகிறதுமன்றி அவன் மற்றவனை அப்படிச் செய்ததற்காக அடித்தும் விடுகிறான். மூர்கா

லத்துப் பெரியோர்கள் நமக்குப் போதித்துள்ள மார்க்கங்களைச் சேர்ந்ததா இப்படிச் செய்வது? அங்ஙனமன்று. தமக்குத் துன்பம் புரிந்தவர்களையும் அவர் நேசித்தார். பிறர் அவர்களைத் துன்புறுத்தினாலும் அவர்களுக்கு இவர் பிரதியாகத் துன்பஞ் செய்கிறதில்லை. நமக்குத் துன்பஞ் செய்தவர்பாலும் நாம் நன்மையே செய்யவேண்டுமென்று வேதசாஸ்திராகமங்களில் அழகான வார்த்தைகளால் கூறப்பட்டிருக்கின்றது.

பிறவுயிர்களிடத்து வெறுப்புறாதவனும் பிறவுயிர்களை நேசிப்பவனும் அவற்றினிடத்துக் கருணையும் பொறுமையுமுடையவனும் எனக்கு அருமையுள்ள நண்பனாவான். பெரியர் பிறர் தமக்குத் துன்பஞ் செய்தகாலத்தும் அவற்றைச் சகித்துப் பொறுத்தார் என்பதைப் பற்றிய கதைகள் அநேகமுள்ளன. திருதராஷ்டிர மன்னனின் சகோதரனாகிய விதுரனைப்பற்றி ஈண்டு கூறுவாம். இவ்வரசனுக்குத் துரியோதனன் என்னும் பெரிய குமாரனொருவனிருந்தான். அவன் நற்குணமுடையோனாயும் சாந்தசீலனாயுமில்லாது தன்னுடைய தாயாதிகளாகிய பாண்டவர்களோடு எப்பொழுதும் சண்டையிட்டும் அவர்களை மிகக் கேவலமாகவும் நடத்திவந்தான். அவர்களிடமிருந்து அவர்களது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டதுமல்லாமல் அவர்களைக் காட்டிற்குத் துரத்திவிட்டான். அப்போது திருதராஷ்டிர மன்னன் தான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒழுகவேண்டியவிதம் என்னவென்று தன்னுடைய சகோதரனாகிய விதுரனை யோசனை கேட்டான். தாங்கள் தாயாதிகளாகிய பாண்டவரோடு சமாதானமாய்ப் போகவேண்டுமென்றும், அவர்களது ராஜ்யத்தை மீண்டும் அவர்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்றும், துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் அப்பாண்டவர்களுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்ள துரியோதனனுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்றும், விதுரனும் திருதராஷ்டிரனுக்குக் கூறினான். தன்னுடைய பிள்ளைகளை நிந்திக்க சமாதானமில்லாதவனான திருதராஷ்டிரன் தன்னுடைய சகோதரன் விதுரன்மேல் மிகவும் சினந்துகொண்டான். விதுரன்பால் அவமதிப்பான வார்த்தைகள் பல மொழிந்ததுடன் நில்லாமல் அவனிடத்தில் குரூரமும் பொய்யுமான வார்த்தைகள் பல பகர்ந்தும் திருதராஷ்டிர மன்னன் அவனை மிகுதியும் நிந்தித்தான்.

கடைசியில் இருதய பூர்வமாய் மிகக் கோபத்தோடும் அவன் விதுரனைவிட் டகன்றுபோனான். விதுரனும் அம்மன்னனைப் பதிலுக்குப் பதில் கோபியாமல் மிகுதியும் மனவருத்தமுற்றார். பின்னர் இவர் பாண்டவரிடஞ் சென்று அரசன் கோபித்த வரலாற்றை அவர்



களுக்குச் சொல்லித் தம்மால் கூடியவரையில் சாந்தசீலராயும் புத்திமான்களாயுமிருக்க முயலுதலே தக்கதென்று அவர்களுக்குப் புத்தி புகட்டினார்.

விதுரன் தன்னைவிட்டகன்ற சிலகாலங் கழித்துத் தன்னுடைய சகோதரனைச் சினந்துகொண்டதற்காகத் திருதராஷ்டிர மன்னன் வருத்தமுற்றான். பின் திருதராஷ்டிரன் தன்னுடைய தூதனாகிய சஞ்சயனை விளித்து 'ஓ சஞ்சயா! என் கோபத்தீயால் வெருட்டியோட்டுவித்த விதுரன் இன்னும் ஜீவந்தனாயிருக்கிறானா? பார்த்துவா. நான் கோபித்தாலும் என்மேல் அவன் கோபிக்காதவனாயிருக்கிறான். இங்ஙனம் அவன்பால் கோபித்து அவனுக்குப் பிழைசெய்தேன்; அதுபற்றி வருத்தமுறுகிறேன். அத்தகையோனைக் கண்டு கடிதினில் அழைத்துவா' என்றான்.

அரசகுமாரருடன் வசிக்கும் விதுரனிருக்குங் காட்டிற்குச் சஞ்சயன் சென்றான். திருதராஷ்டிர மன்னன் செய்த பிழையினைப் பொறுத்த விதுரனும் நாட்டுக்குத் திரும்புவது இயலுமோ என்று சஞ்சயன் மனதிலே கலங்கமும் ஆச்சரியமுமுற்றிருந்தான். அரசகுமாரருடனிருந்த விதுரனும் சஞ்சயனைக் கண்டவளவில் மிகவும் கௌரவத்துடன் நல்வரவேற்று அவனை மிகுதியும் நேசித்தான். பின்னர் அரசனை மன்னிக்குமாறும் தன்னுடன் நாட்டுக்குத் திரும்பிவர வேண்டுமாறும் சஞ்சயன் விதுரனைப் பிரார்த்தித்தான்.

விதுரன் மீண்டுங் கோபங்கொண்டு திருதராஷ்டிர வரசனிருக்கும் நாட்டிற்குத் திரும்பி வருதலில்லையென்று மறுதலித்தனனா? அன்று! அன்று! விதுரனும் உடனே தன்னுடைய சகோதரனிடம் விரைந்து சென்றான். சென்று 'ஓ, மன்னா யான் உன்னை மன்னித்தேன், நீர் என்னுடைய மூத்த சகோதரராகிறீர். உம்மைப் பார்த்து நெடுநாட்களாயினமையான், உன் முகத்தைப் பார்க்க அவாவுற்றவனாய் இங்கு வந்து சேர்ந்தேன்; சந்தோஷ ஈனனாயிருக்கிற என்னுடைய சகோதரனின் குமாரர்களுக்காக மிக்க வருத்தமுற்றிருந்தேன். ஆனால் நின்னுடைய மக்களும் எம்மருமை மக்களே யாவார்' என்று விதுரன் கூறினான். தனக்குச் செய்த எல்லாத் தீமைகளுக்கும் தான் முழுவதும் மன்னித்துவிட்டதாக விதுரன் தன்னுடைய மூத்த சகோதரனிடத்து மிகுதியும் அமைதியாய்ச் சொன்னான்.

வனவாசங் கழித்து மீண்டும் தம் நாடு வந்தடைந்தபோதும் பாண்டவர்கள் எவ்வாறு திருதராஷ்டிர மன்னனிடம் நடந்துகொண்டார்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

கிழவரசனிடத்து அவர்கள் பிரியவீனம் பாராட்டினார்களா? உண்மையில் அவர்கள் பிரிய ஈனர்களாய் நடந்துகொள்ளவில்லை. அம்

மன்னனின் சொற்படியே பதினைந்து வருஷகாலம் அவர்கள் ராஜ்ய பாரம் நடத்தினார்கள். அவனுக்குக் கீழ்ப்படிந்தும் அவன் பக்கலில் உட்கார்ந்தும் உண்மையான விசுவாசத்துடனும் மரியாதையுடனும் அவனுக்குமுன்னே தலை வணங்கியும், முதுமையான மாமன் மாமியார்களை நடத்துவதுபோன்ற விசேஷ மரியாதையுடன் அரசனையும் இராணியையும் அவர்கள் நடத்திவந்தார்கள். பாண்டவ சிரேஷ்டனான யுதிஷ்டிரன் தம் பிள்ளைகள் நூற்றுவரையும் இழந்த திருதராஷ்டிர மன்னன் இவர் தம்மால் கூடியவரையில் துன்புறுவண்ணம் பார்க்கவேண்டுவது தமது தவறாக் கடப்பாடாகுமென்று தனது சகோதரர்களுக்கு அடிக்கடி கூறுவதுண்டு. சகோதரர்களும் தம்முடைய அண்ணனாகிய யுதிஷ்டிரன் வார்த்தைகட் குட்பட்டவராய் முது மன்னனிடத்து விசேஷமாய்ப் படிந்து ஒழுகிவந்தார்கள். பல வருஷங்கள்காறும் நாட்டிலிருந்து தாங்கள் காட்டிற்குத் துரத்தப்பட்டமையைப்பற்றிக் கோபியாமல் அவனை மன்னித்தார்கள். தங்களை மிகுதியும் பொறுக்கமுடியாத கஷ்ட நஷ்டங்களுக்கும் துக்கங்களுக்கும் உள்ளாக்கிய அரசனை அவர்கள் மன்னித்தார்கள். அம்மன்னனிடத்து அவர்கள் சிறிதேனும் வெறுப்புக் காட்டினாரல்லர். அவர்களில் ஒருவனே ஒருவன்தான் திருதராஷ்டிர மன்னனை மன்னியாதவன்; அவன்தான் பீமன். அவன் துரியோதனனாதியோர்மீது கோபமிக்குடையோனாயிருந்தான். கல்வி கேள்விகளில் வல்ல பெரியோராவார் பிறர் தமக்குச் செய்த நன்மைகளையே விசேஷமாகப் பாராட்டுவோர்களேயன்றி அவர் தமக்குச் செய்த தீமைகளைப்பற்றி ஒரு நாளும் கருதவே கருதார் என்னும் நீதிமொழிகளை யுதிஷ்டிரனும் அர்ஜுனனும் சேர்ந்து பீமனுக்கு எவ்வளவு போதித்தும் பீமன் கோபந் தணிந்தானில்லை.

> 'இன்னா செய்தாரை யொறுத்தலவர் நாண
> நன்னயஞ் செய்து விடல்.'

கிழமன்னனாகிய திருதராஷ்டிரனிடத்து மிகுதியும் இவன் கொடுமையாய் நடந்துகொண்டமைபற்றி அம்மன்னனும் கடைசியில் மிகுதியும் துக்கமுற்றவனாய் நாட்டைவிட்டுக் காட்டிற் சென்று காலங்கழிக்கத் தீர்மானித்தான். ஆனால் யுதிஷ்டிரன் கிழ மன்னனிடத்து மிகுதியும் அன்புகூர்ந்தவனாய் 'ஓ மன்னர் மன்னா: என்னை விட்டு நீவிர் காட்டிற்குச் செல்லச் சம்மதித்தீராயின் யானும் உம்முடன் காட்டிற் கேகுவேன்.' தங்களிடத்துத் தாசனாயிருந்தும் தங்கள் ஏவல்களைக் குறைவறச் செய்தும் தங்களுடைய மிகுதியான துக்கத்தை அறவொழிப்பதாக வெண்ணமிட்டிருந்தேன் என்று அம்மன்னனிடத்து மொழிந்தான். தன்பாற் செய்த அக்கிருத்தியங்கள் பலவற்றிற்



காகவும் யுதிஷ்டிரன்தான் அவனை நன்குமதித்ததாக இவ்விதம் காட்டினமைபற்றி திருதராஷ்டிரன் அவனைத் தன் குமாரனாகவே மதித்து நேசித்தான்.

நமக்குத் தீமை செய்தவரிடத்தும் நன்மையே புரியவேண்டுமென்பது இக்கதையினால் அறியக் கிடக்கின்றது. கோபமான வார்த்தைகளை உபயோகிக்காமல் சாந்தமாய் அடங்கிப் பேசுவோமாக.

> 'அடக்க மமரரு ளுய்க்கும் அடங்காமை
> யாரிரு ளுய்த்து விடும்.'

Sen Tamil Magazine.

## SONG—YOUTH

## பாட்டு—வாலிபம்

பல்லவி.

வாலிபம் நிலையாது சொன்னேன் கேளு

அனுபல்லவி.

வாலிபப் பிராயமே காலத்தில் தேவனை
வழிப்படத்தக்க காலமென்று நினை.— வாலி.

சரணங்கள்.

1. கண்களிருண்டு கரங்கள் தளர்ந்து
கலங்களுடைந்து கவிந்திடு முன்னமே
துங்கனருளால் தூயவழியில் சென்று
எங்கோன்மறையே இதயத்திலே நினை.— வாலி.

2. மண்ணான தேகம் மறைந்து பூமி சென்று
பொன்னான கிண்ணி பொறிகள் நசுங்குமுன்
விண்ணுளும் வீரர் மகிபர் மடிந்தார்போல்
உண்ணுளும் உதமத்திலே நினை.— வாலி.

3. போகும் பாதாளத்தில் புத்தி யறிவில்லை
சாகும்முன்னே ஞான சத்துவம் கற்றுக்கொள்
ஏகு மிடமதுவென்று அறிந்திட
ஏற்ற காலமிதுவல்லோ சொன்னேன் நினை.— வாலி.

4. தாசன் சொல்லும் சிறு வாசகம் கேட்டிடும்
நேசர்களே இந்தக் காசினி மாய்கையே
பாசபந்தம் நீக்கி ஏசுவின் பாதத்தை
ஆசையாய்த் தேடிடில் ஆவீர் மோட்சத்தில்.— வாலி.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி)

அப்போது வேதாபிமானி சொல்லத் தொடங்கி, 'ஓரூரில் விறகு வெட்டி ஜீவனார்த்தம் கழிக்கிற ஒரு கிழவன், ஒருநாள் பகல்நேரமெல்லாம் விறகுவெட்டி வியர்வைசிந்தப் பாடுபட்டு பசியினால் களைத்தவனாய் இருந்தும், விறகுவிற்றுச் சாப்பாட்டுச் செலவுக்கு வீட்டுக்குக் கொண்டுபோகவேணுமே என்னும் கவலையினால் தலை தாங்கக்கூடாத சுமையைத் தலையிலேற்றி நெடுந்தூரம் வந்ததும், ஒரு சுமைதாங்கியை வழியிற் கண்டு, 'நமது சுமையை இங்கே இறக்கிவைத்து, திரும்ப எடுத்துப் போகலாம். இல்லாவிட்டால் நாம் அவ்வளவு தூரமான சந்தைக்கு நடந்துகொள்ள முடியாது' என்று உன்னி சுமைதாங்கிக்குப் பக்கமாய் வரவும், தன் சுமை இறக்கவும் வருத்தமாயிருப்பது கண்டு, மனதுக்குள் தன் வருத்தத்தை உணர்ந்து 'எந்நாளும் இப்படிக் கஷ்ட ஜீவனம் செய்வதைப்பார்க்கிலும் செத்துப்போவது வாசி' என, வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு, 'ஆ, எமதூதா எல்லாரையும் கொண்டுபோகிறாயே, என்னையும் கொண்டுபோவேன், எனக்குச் சாவும் வராதா?' என்று சத்தமிட்டு விறகுபாரத்தைச் சுமைதாங்கியின் மேல் வைத்தானாம்.

அந்த அரவம் கேட்டவுடனே, எமதூதன் கருத்த உடலும் பெருத்த பல்லுமுள்ள விகாரரூபமாய் வந்து எதிர்ப்பட்டு, 'என்னைக் கூப்பிட்டாயே, இதோ உன்னைக் கொண்டுபோக வந்துவிட்டேன்' என்றானாம்.

உடனே அந்த மனிதன் திடுக்கிட்டு, படபடத்து 'என்னைக் கொண்டுபோகவா உன்னைக் கூப்பிட்டேன், இந்தச் சுமையை எடுத்துத் தலைமேல் வைத்துவிட்டுப்போக வல்லவோ, கூப்பிட்டேன்' என்றானாம் என்றார்.

அதுகேட்டு கீதமணி நகைத்து 'அந்நிமிஷத்திலே, அவன் புத்தி மாறி உத்தரம் சொல்லிவிட்டானே' என்றார்.

அப்போது வேதாபிமானி இப்படித்தான் உலகத்திலுள்ளவரில் அநேகர், 'சாவு வருகிறதில்லையே' என்று அங்கலாய்த்தவர்போல் பாசாங்குபண்ணுகிறது. ஆனால் சாவுக்கு ஏற்ற ஆயத்தத்தோடே ஜீவியம்பண்ணுகிறவர்களே, சாவு எந்த நேரத்தில் வந்தாலும், சந்தோஷமாய் பிதாவின் வீட்டுக்குப் போகிறவர்கள்போலத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். 'மற்றப்படி நினையாத நேரத்திலே சாவு வரும்



போது ஆயத்தமில்லாதவர்களுக்கு ஆபத்தாகத்தானிருக்கும். ஆகையால் ஆண்டவர் வருகிற நாளையாகிலும், நாழிகையாகிலும் அறியாததினாலே எப்போதும் ஆயத்தமாயிருக்கப் பிரயாசப்படவேண்டும் அப்பா' என்றார்.

அப்போது கீதமணி, அப்படியிருந்தால்தான் 'கதிக்கெல்லாம் மேலான கதியாம் ஏசுவே' என்ற ஞானப்பாட்டு இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்' என்றான்.

இப்படியாக வேதாபிமானியும் கீதமணியும் இருவாரங்களாக இருந்து தேசாசாரம், மதாசாரங்களையும் கவனித்து புத்திதெளியச் சம்பாஷித்துக்கொண்டு தங்கள் சுயதேசம் வரப் புறப்பட உத்தேசித்து வருகிற வழியிலே மங்களபுரம் என்னும் ஒரு சிற்றூருக்கு வந்தார்கள். அந்த ஊர் மிகவும் சிறிய பட்டியாயிருந்தமையால் இவர்கள் ஒரு வீட்டுத் திண்ணையிலே இராத்தங்கினார்கள். அங்கே இராவெல்லாம் கொட்டுமுழக்கமாயிருந்தது கேட்டு கீதமணி 'எப்போ விடியும் போய் வேடிக்கை பார்க்கவேணும்' என்று பகலோன் வரவை எதிர்நோக்கி, அவாவுடனே காத்திருந்தான். அப்படியே அதிகாலையில் எழுந்து அருள்நாதனைத் துதித்து, குருவை நோக்கி 'ஐயா! அந்தப் பக்கத்து வீட்டில் வாத்தியம் முழங்குகின்றதே, அதென்னவென்று பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிவந்துவிடுகிறேன்' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'போய்ப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் வா' என்றார்.

கீதமணி ஒரு ஓட்டமாய் ஓடிப் பார்க்கப் போனான். அங்கே வண்டிகட்டி வாசலிலே நிற்கிறது; பெண்ணும் மாப்பிள்ளையும் ஊருக்குப் போகிறார்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். உள்ளே நுழைந்து பார்ப்போமெனச் சந்தடியோடு சந்தடியாய், இடித்துப் புடைத்து நெருக்கிக்கொண்டு, ஜனக்கூட்டத்தில் நுழைந்து போய்ப் பார்க்கவே, அங்கே பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சீதனங்களாக, கொப்பறை அண்டா, செப்புக்குடம், குத்துவிளக்கு, சருவச்சட்டி, லோட்டா முதலிய வெண்கலப் பாத்திரங்களும், உரல், உலக்கை, திரிகை, அம்மி முதலிய கல்சாமான்களும்; முறம், அரிவாள்மனை முதலிய தட்டுமுட்டுகளும் புதிதாக அமைத்துவைத்திருந்தன.

மாப்பிள்ளை விடைபெற்றுக்கொண்டுபோகப் புறப்பட்டு, வெண்கலப் பாத்திரங்களுக்கெல்லாம் ஓரோர் கும்பிடும், கல்சாமான்களுக்கெல்லாம் ஓரோர் கும்பிடும், பணிமுட்டுக் கருவிகளுக்கெல்லாம் ஓரோர் கும்பிடுமாக வரிசையாய்க் கும்பிட்டுவந்தான். அப்போது அங்கு நின்றவர்கள் 'மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரம்செய்' என்றார்கள்.

அதற்கு அவன் 'இவைகளெல்லாம் என்கூட வந்து எனக்குப்
பிரயோஜனப்படுகிறவைகள். மாமனாரையும் மாமியாரையும் கும்பிட
அவசியமில்லை' என்றான்.

அதுகேட்டு அங்குள்ளவர்கள் 'இந்தச் சாமான்களெல்லாம் அவர்
கள்தானே வாங்கிக் கொடுத்தது' என்றார்கள்.

'அதை யார் கண்டது' என்று வண்டியிலேறிக்கொண்டான்.

இதற்குள்ளாக 'நேரம் ஆகிவிட்டதே குரு என்னைத் தேடுவாரே.
நான் இந்த வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேனே'
என்று ஸ்ரீதமணி தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, தலைதெறிக்க
வேதாபிமானி இருந்த வீட்டுத்திண்ணை வந்து சேர்ந்தான்.

அதுகண்டு வேதாபிமானி 'ஸ்ரீதா! ஏன் இந்த ஓட்டம், சற்று
முந்தியே வாராமல், நீ தாமதப்பட்டதென்ன? வெயிலேறு முன்னதாக
நாம் பிரயாணமாக வேண்டுமென்று உனக்குத் தெரியாதா? சிறுபிள்ளை
களை அவர்களிஷ்டத்திற்கு விட்டால் மனம்போனபடி நேரம் கழிப்
பார்கள் என்பது நிசந்தானே' என்றார்.

அப்போது ஸ்ரீதமணி 'ஐயா! இன்று ஒரு விநோதக்காட்சி கண்
டேன். அதைச் சொன்னால் எனக்குச் சிரிப்பு வந்துவிடும். நீங்
களோ கோபமாயிருக்கிறீர்கள். நீங்கள் சாப்பிட்டுவிட்டு வழிநடந்து
வரும்போது சொல்லுகிறேன். அப்போ நீங்களும் சாவகாசமாய்ப்
பேசக்கூடும் ஐயா' என்று, குருவுக்குக் காலைபோஜனம் கொடுத்துப்
பசியாற்றிப் பிரயாணம்பண்ணத் தொடங்கினார்கள்.

அப்படியே இருவரும் வழிநடக்கையில் வேதாபிமானி ஸ்ரீதமணி
யைப் பார்த்து, 'ஸ்ரீதா! நீ காலையில் கண்ட சமாசாரங்களைச் சொல்
அப்பா!' என்றார். ஸ்ரீதனும் சிரிப்போடு நடந்த வரலாறுகளை ஆதி
யோடந்தமாய் உரைத்து, 'ஐயா! அந்த மாப்பிள்ளையின் புத்தி என்ன
விபரீதமாயிருக்கிறது?' என்று நகைத்தான். 'அதோடு சொல்லிக்
கொடுத்தாலும் மனதில் படவில்லையே. இதுதான் எனக்கு வெகு
கோபமாயிருந்தது. அவன் பட்டிக்காட்டான். படியாதவன்போலிருக்
கிறது, ஐயா' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'இதுவும் கலிகாலக் கூத்துத்தான்போ
லிருக்கிறது. ஆயினும் நமக்குள்ளும் சிலர் இப்படியே யிருக்கிறார்கள்
என்பது உனக்குத் தெரியாதா?' என்றார்.

அதற்கு ஸ்ரீதன் 'ஐயா! நான் பிறந்து இதுநாள்பரியந்தம் இப்
படிப்பட்ட ஒரு மாப்பிள்ளையைக் கண்டதில்லை என்றே நினைக்கி
றேன்' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'அப்படியானால் நான் உனக்குத் தெரி
விக்கிறேன், கேள். அதாவது நாம் பெற்றிருக்கிற ஜீவன், சுகம்,



பலம், சரீரம், ஊண், உடை, மனைவி, மக்கள், நிலம், உத்தியோகம்,
ஆஸ்திபாஸ்தி, தோட்டம் துரவு யாவும் நாம் யாரிடத்திலிருந்து
பெற்றுக்கொள்ளுகிறோம்? அவைகள் எல்லாம் நமது பிரயோஜனத்
துக்கென்று கடவுள் கொடுத்தவையல்லவா? அப்படியிருக்க நாமும்
அந்த மாப்பிள்ளை செய்ததுபோல, யாவையும் நமக்கு இலவசமாய்த்
தந்திருக்கிற பரமபிதாவை மறந்து அழிந்துபோகும் பொருட்களுக்கு
அதிகமாய்க் கனத்தைச் செலுத்துகிறோம். எப்படியென்றால் நம்
முடைய ஜீவனையும் சுகத்தையும் மக்களையும் அதிக பெரிதாயெண்ணி
வருகிறோம். கர்த்தருடைய வேதத்தை வாசிக்கவோ, அவருக்கு
ஊழியஞ்செய்யவோ, அவருடைய ஆலயத்துக்குப் போகவோ மன
மற்று, நம்முடைய சில புலன்களையோ, தோட்டம் துரவுகளையோ
வெகு கவனமாய்க் கவனித்துப் பரிபாலித்து வருவதற்கு ஆவலுள்ளவர்
களாயிருப்பது எத்தனை பேர்? சுருக்கிச் சொல்லவேணுமானால் ஆண்
டவரை ஆராதிப்பதைவிடச் சரீரப்பிழைப்புக்காகக் கவலைப்பட்டு,
அவரை மறுதலிக்கிறவர்கள் எத்தனைபெய ரிருக்கிறார்கள்? மேலும்
தங்களுக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தரைக் கண்கண்ட தெய்வம்,
என்று சொல்லி கடவுளுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்ய
அஞ்சாமலிருக்கிறவர்களும் உண்டே. இவர்களெல்லாரும் செய்வது
இந்த மாப்பிள்ளையின் கிரியைக்கு ஒத்ததல்லவா?' என்றார்.

அதுகேட்டு ஸ்ரீதமணி 'ஆம், ஐயா! எத்தனைபேர் இப்படிப்பட்ட
வர்களாயிருக்கிறார்கள். நானும்கூட ஜெபம்செய்ய மறந்துவிட்டுச்
சாப்பாட்டின்மேல் ஆவலாய் இருக்கிறேன். இப்போ நீங்கள் விஸ்
தரித்துச் சொன்னபிறகுதான் எனக்கு நன்றாய் விளங்குகிறது.
அந்த மாப்பிள்ளைகூடப் பட்டிக்காட்டான், படிப்பில்லாதவன். நம்
மில் படித்தவர்களும்கூடத் தெய்வத்தைவிட, தெய்வகாரியங்களுக்கு
உதவிசெய்வதைவிட, பணத்தையும் மக்களையும் மனைவியையும் அதிக
மாய் நேசிப்பதை நானும் பார்த்திருக்கிறேன். திருஷ்டாந்தமாக,
சுமார் லட்சம் ரூபாய் ஆஸ்திபந்தனான ஒருவன் தான் மரிக்குமுன்,
எழுதிவைத்த மரணசாதனத்தில் தன் ஆஸ்தி முழுவதையும் மனைவிமக்
களுக்கென்று பிரித்துவைத்தாரே ஒழிய, கோவிலுக்கு என்றாவது,
தெய்வ ஊழியத்துக்கென்றாவது ஒன்றும் எழுதினாரில்லை என்பதைக்
கிறிஸ்தவர்கள் ஆச்சரியமாய்ப் பேசிக்கொண்டார்கள்' என்றான்.

(இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.



## NOISY INSECTS (*Cont.*)

## சத்தம் செய்யும் பூச்சிகள்

(தொடர்ச்சி.)

வீட்டுச் சில்வண்டை அதன் மெல்லிய கீச் என்னும் சத்தத்தால் யாவரும் அறிந்திருக்கலாம். ஸிக்காடஸ்போல் இதிலும் ஆணே சப்திக்கும்; பெண் அல்ல. இப்படி சுகமாய் நம் வீடுகளில் காணலாகும் சில்வண்டு, காட்டுச் சில்வண்டைப்போல அத்தனை பலமும் முரட்டுத்தனமும் உள்ளதல்ல. காட்டுச் சில்வண்டுகளில் சில நிலவீயை விடப் பெரிதாவதும் உண்டு. இதன் சத்தம் பருமனுக்குத் தக்கதாய் இருக்கும். என்ன இருந்தாலும் ஸிக்காடஸ் சத்தத்திற்கு ஈடாகாது. ஆனால் இந்த இரண்டுமே ‘கீச்.’ என்று ஒரே தொடர்ந்த சத்தமிடுவனவேயொழிய ‘கீச்’, ‘கீச்’ என்று விட்டுவிட்டுச் சப்திப்பன அல்ல. இந்தச் சில்வண்டு செப்டெம்பர் மாசத்தில் மாலையில் தன் தன் வளையின் வாசலில் இருந்து போட்டி போட்டுக்கொண்டு கத்துவதைக் கேட்க வெகு நன்றாயிருக்கும். அப்போது பாம்பு, தவளை, ஆந்தை முதலானவைகள் பதுங்கியிருந்து திடீரென அவற்றைப் பிடித்துக்கொண்டு போய்விடும்.



வெட்டுக்கிளி. முன்னே சொல்லிய ஸிக்காடஸ் சில்வண்டு இவைகளைவிட வெட்டுக்கிளியைப்பற்றி வாசிக்க வெகு ருசியாயிருக்கும். இந்த வெட்டுக்கிளியில் அநேகவகை உண்டு. சில பச்சை நிறம்; வேறு சில கபில நிறம். பெரியவை சிறியவை என்றும் உண்டு. அவைகள் எல்லாம் ஒரு மாதிரியாகச் சப்திப்பதில்லை; ஒவ்வொரு வகை ஒவ்வொரு மாதிரியாகச் சத்தமிடும். ஸிக்காடவில் உள்ள வகைகள் எல்லாம் ஒரேவிதமாகத் தொனிக்கும். சில்வண்டு வகைகளும் ஒரேவிதமாகத்தான் கத்தும். அஸ்ஸாம், மலேயா ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள பெரிய வெட்டுகள் பறக்கும்போது பறவைகள் தானோ என்று சந்தேகிக்கவேண்டிவரும்; அவை அத்தனை பெரியவை. அஸ்ஸாமில் ஒருவர் கபிலநிற வெட்டுக்கிளி ஒன்று செய்த இரண்டு அசையுள்ள சத்தத்தைக் கால்மைலுக்கு அப்பால் இருந்துகொண்டு தெளிவாய்க் கேட்டிருக்கிறாராம்.

சிலவகை வெட்டுக்கிளிகள் பகலில் தூங்கும்போது தங்கள் கால்களை ஒரேவிதமாக வெளியே நீட்டிக்கொண்டும் தங்கள் ஸ்பரிசினிகளைப் பின்னால் உடம்போடு சேர்த்து மடித்து வைத்துக்கொண்டும் இருக்கும். இந்த நிலையில் அவை நல்ல ரத்தபுஷ்டியோடிருந்தால் மடிபட்ட இலைகளைப்போலவே தோன்றும். அப்புறம் அவை நீட்டிய கால்களை மடக்குவதைக் கண்டால், அவை மூன்று நான்கு அங்குலமும் இருப்பதால் பார்க்கப் பயங்கரமாய் இருக்கும்.

இந்த வெட்டுக்கிளி வகைகளில் ஒன்றுக்கு ஸ்பரிசினிகள் வெகு நீளம். ஆனால் அதுவும் வெட்டுக்கிளிதான். இந்த நீண்ட ஸ்பரிசினிகளுக்கும் மற்றவகை வெட்டுக்கிளிகளுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் ஒன்றுதான். இவை மாம்சபக்ஷிணிகள். மற்ற வகைகள் புல்பூண்டுகளையே தின்று ஜீவிப்பன. அந்த மாம்சபக்ஷிணி காணும் ஒரு பூச்சியின்மேல் பாய்ந்து தன் முன்கால்களால் இறுகப் பிடித்துக்கொண்டு அதை விழுங்க ஆரம்பிக்கும். இது அப்படி இறுகப் பிடிக்கத் தகுந்தபடி வளைந்த சிறு சிறு நகங்கள் பொருந்திய கால்கள் உள்ளதாய் இருக்கிறது. பூச்சி புழுக்களையே அல்லாமல் இதுவும் நல்ல செழிப்பாயுள்ள இலை தழை பழம் இவைகளையும் தின்னும்.

இந்தியாவில் கிளி மைனா முதலிய பாடும் பறவைகளை வளர்ப்பதுபோல் ஜப்பானியர் வெட்டுக்கிளிகளைக் கூண்டுகளில் வைத்துப் பாட்டுக்காக வளர்க்கிறார்கள். அதற்குத் தீனியாகக் கொம்மட்டியைப் போடுகிறார்கள். ஜப்பானில் இப்படிப் பாடும் வெட்டுக்கிளிகளில் நல்லது ஒன்று கிட்டத்தட்ட ஒரு ரூபா விலைபெறும். ஜப்பானியர் பெரிய காட்டுச் சில்வண்டுகளையும் வளர்த்துவருகிறார்கள். அவைகளை இந்தியாவில் கோழிச்சண்டை விடுவதுபோல அங்கே சாயங்காலங்களில் தமாஷாகப் பூச்சிச் சண்டை விடுவதுண்டு.



## FOUND FAITHFUL

## உண்மையுள்ளவனே தான்

முன்னொரு காலத்தில் ஆப்கானிஸ்தானத்திலிருந்து மேற்கே வெகுதூரம்வரைக்கும் உள்ள விசாலமான தேசத்தை ஆண்டுவந்த ஸுல்தான் ஒருவன் இருந்தான். அவனுடைய அரமனையில் அந்நிய தேசத்து வைத்தியன் ஒருவன் வெகு கெட்டிக்காரனும் ஸுல்தானுடைய பிரியத்துக்கும் ஆளாய் இருந்துவந்தான். ஸுல்தானுக்கு அவன் பிரியாத தோழன் என்றும் சொல்லலாம். இதைக் கண்டு பொறாமைகொண்டவர்கள் அநேகர். அதிலும் ஸுல்தானைச் சுற்றியிருந்த முகஸ்துதி பண்ணுபவர்கள் இந்த நேசத்தை எப்படியாவது கெடுத்துவிடவேண்டும் என்று வைத்தியனைப்பற்றி ஸுல்தானிடம் சமுசயம் உண்டாக்கலானார்கள். அதற்காக முகஸ்துதிக்காரர்களில் சிலர் ஸுல்தானுடைய ஸமுகத்தில் ‘அவன் எப்படியிருந்தாலும் அந்நிய தேசத்தான். எல்லாக் காரியங்களையும் அவன் கையிலேயே நம்பிவிட்டிருப்பது சரியல்ல’ என்றார்கள். ஸுல்தானுக்கோ காரணமில்லாமல் வைத்தியன்மேல் சமுசயங்கொள்ள மனமில்லை. இருந்தாலும் அவன் அப்படிப்பட்டவன்தானா என்று கண்டறியவேண்டும் என்று ஆலோசித்தான்.

அதைச் சோதித்துத் தெரிந்துகொள்வதற்காக ஸுல்தான் ஒரு நாள் வைத்தியனைத் தன் சமுகத்திற்குத் தனித்துவரவழைத்து ‘வைத்தியரே! நம்ம நாட்டுச் சிற்றரசர்களில் எனக்குப் பகையாளி ஒருவன் இருக்கிறான். அதனால் என் மனம் சமாதானம் என்பதில்லாமல்



இருக்கிறது. பகிரங்கமாய் அவனை ஏதாவது செய்யலாம் என்றாலோ அவனுக்குச் சிநேகிதர்கள் அநேகராக இருக்கிறார்கள். ஆதலால் அப்படியொன்றும் செய்யமுடியாது. ரகசியமாகவே ஒரு ஏற்பாடு பண்ணவேண்டும். ஒரு பாஷாணம் தயார்செய். அவனை நாளைக்கு விருந்துக்கு அழைத்து அதைச் சோற்றில் கலந்து அவனைத் தீர்த்துவிடலாம். அப்புறம் அதனால் ஒரு தொல்லையும் இருக்காது’ என்றான்.

அதற்கு வைத்தியன் ‘என் ஆண்டவனே! உயிரைக் காப்பற்றக் கூடிய மருந்துகள்தான் எனக்குத் தெரியுமேதவிர உயிரைக் கொல்லும் மருந்து எனக்குத் தெரியாது. இவற்றைப்பற்றி நான் கொஞ்சமும் தெரிந்துகொள்ளவில்லை. அவை தங்களுக்கு அவசியமில்லை என்றே எண்ணியிருந்தேன். அது எனக்கு ஒரு பெருங்குறை என்று தாங்கள் எண்ணினால் வேறு தேசங்களுக்குப்போய் அப்படிப்பட்டவைகளைக் கற்றுக்கொண்டு வர உத்தரவு தரவேண்டும்’ என்று பிரார்த்தித்தான்.

ஆனால் ஸுல்தான் ‘இதெல்லாம் வீண் சாக்குப்போக்கு. தேகத்திற்கு நன்மையைத் தரும் மருந்துகளைப்பற்றி இவ்வளவு தெரிந்திருக்கும் ஒருத்தருக்கு அதற்குத் தீமையை விளைவிக்கும் மருந்துகளைப்பற்றித் தெரியாமலிருக்குமா?’ என்றான்.

அதோடு ஸுல்தான் மன்றாடினான்; பயமுறுத்தினான்; நயமாய் நல்ல வெகுமதி அளிப்பதாய் வாக்குத்தத்தம் பண்ணினான். ஆனால் எதுவும் வைத்தியனிடம் செல்லவில்லை. வைத்தியன் தான் முதலில் என்ன சொன்னானோ அதையே தீர்மானமாகச் சொன்னான். மற்றப்படி ஒன்றுமில்லை. இதைக்கண்டு ஸுல்தான் கடுங்கோபங்கொண்டு காவலாளர் சிலரைக் கூப்பிட்டு வைத்தியனைச் சிறைச்சாலையில் வைக்கும்படி கட்டளையிட்டான். அவனோடுகூட ரகசியமாய் வேறொருவனுக்குக் கைதிவேஷம் போட்டு சிறையில்வைத்து வைத்தியனுடைய அந்தரங்க அபிப்பிராயத்தை அறியும்படி அனுப்பினான். ஆனால் அப்போதாவது வைத்தியன் வேறேதாவது தெரிவித்தானா? இல்லை. ஸுல்தான் தன்னை அநியாயமாய் நடத்திவிட்டான் என்பதைத் தவிர ஒன்றும் சொல்லவில்லை.

கொஞ்சநாள் சென்றபின்பு ஸுல்தான் வைத்தியனைச் சிறைச்சாலையிலிருந்து தருவித்தான். அப்போது மேஜையின்மேல் பொன், வைரக்கற்கள், இன்னும் மற்ற விலையுயர்ந்த ஸாமான்கள் அநேகம் தயாராய் வைத்திருந்தன. பக்கத்தில் கொலையாளி ஒருவனும் கையும் கத்தியுமாய் நின்றான். அப்போது ஸுல்தான் வைத்தியனை மிரட்ட ஆரம்பித்தான். ‘நீ உன் பிடிவாதத்தை விட்டுவிடப் போதுமான காலம் இருந்தது அல்லவா? இந்த மேஜையின்மேல் இருப்பவைகளை

யெல்லாம் எடுத்துக்கொண்டு என் இஷ்டத்தைப் பூர்த்திசெய், அல்லது மரணத்துக்குத் தயார்பண்ணிக்கொள்' என்று சொல்லிப் பார்த்தான்.

என்ன பயமுறுத்தியும் வைத்தியன் வழிக்கு வரவில்லை. 'எனக்கு அவமானம் நான் செய்யும் குற்றத்தில் இருக்கிறதே தவிர நான் அடையலாகும் தண்டனையில் ஒரு சிறிதும் இல்லை. என் பேருக்கும் என் தொழிலுக்கும் அபகீர்த்தி தேடுவதைவிட மரிப்பதே மேலாகும், என் உயிர் உங்கள் கையில் இருக்கிறது; அதை உங்கள் இஷ்டப்படி செய்யலாம்' என்று பழையபடி தைரியமாய்ச் சொன்னான்.

உடனே ஸுல்தான் தன்னைச் சூழ இருந்தவர்களை எல்லாம் அனுப்பிவிட்டு வைத்தியரிடம் கையை நீட்டி அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'சிலர், உன்னைப்பற்றிச் சமுசயங்கள் உண்டாக்கிவிட நானும் உன்னை மனமார நம்ப இந்தச் சோதனைக்கெல்லாம் உன்னை உள்ளாக்கவேண்டியதாயிற்று. உன்னைப்பற்றி இப்போது எனக்கு வெகு திருப்தி உண்டாய்விட்டது. நீ என் சிநேகன்; நானும் உன்னுடையவன் ஆகிவிட்டேன். உனக்கு இனாமாக அல்லாமல், எனக்கு உன்மேல் பிரியம் என்பதற்கு அடையாளமாக, உன்னை நேர்வழியிலிருந்து திருப்ப முடியாமற்போன இந்தச் சாமான்களை நீயே எடுத்துக்கொள்' என்றார்.

LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ௵ எப்பிரல்௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | லூக். | 2. 40—52 | 11 | வெ. | லூக். | 6. 18—26 | 21 | தி. | லூக். | 8. 41—56 |
| 2 | பு. | ,, | 3. 1—11 | 12 | ச. | ,, | 6. 27—38 | 22 | செ. | ,, | 9. 1—11 |
| 3 | வி. | ,, | 3. 12—22 | 13 | ஞா. | ,, | 6. 39—49 | 23 | பு. | ,, | 9. 12—27 |
| 4 | வெ. | ,, | 4. 1—13 | 14 | தி. | ,, | 7. 1—10 | 24 | வி. | ,, | 9. 28—36 |
| 5 | ச. | ,, | 4. 14—32 | 15 | செ. | ,, | 7. 11—23 | 25 | வெ. | ,, | 9. 37—50 |
| 6 | ஞா. | ,, | 4. 33—44 | 16 | பு. | ,, | 7. 24—35 | 26 | ச. | ,, | 9. 51—62 |
| 7 | தி. | ,, | 5. 1—11 | 17 | வி. | ,, | 7. 36—50 | 27 | ஞா. | ,, | 10. 1—16 |
| 8 | செ. | ,, | 5. 12—26 | 18 | வெ. | ,, | 8. 1—15 | 28 | தி. | ,, | 10. 17—28 |
| 9 | பு. | ,, | 5. 27—39 | 19 | ச. | ,, | 8. 16—25 | 29 | செ. | ,, | 10. 29—42 |
| 10 | வி. | ,, | 6. 1—12 | 20 | ஞா. | ,, | 8. 26—40 | 30 | பு. | ,, | 11. 1—13 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

MADRAS

# மாதர் போதினி

No. 185 மே 1913 No. 5

## A CHILD'S TRUST

## ஒரு குழந்தையின் தேவபக்தியும் அதினாலுண்டான குணமும்

அநேக வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்தில் நாட்டுப்புறத்தில் ஒரு குடியானவன் இருந்தான். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அவன், தன் வீட்டுக்குக் காவலாக யாரையாவது ஒருவரை வைத்துவிட்டு, தன் குடும்பத்துடன் அக்கிராமத்துக் கோயிலுக்குப் போவது வழக்கம். அவ்வீட்டுக் கடுத்து வசிக்கப்பட்டவர்கள் பரம யோக்கியர்களாயிருந்தார்கள். ஆகையால் திருட்டு என்பதே அப்பக்கத்தில் வெகுதூரத்துக்குக் கிடையாது.

ஒருநாள் காலமே வெயில் பிரகாசமாய் அடித்துக்கொண்டிருந்தது. ஜனங்கள் உற்சாகமாயிருந்தார்கள். அன்றைக்குத் தன் பெண் மேரியை வீட்டுக்குக் காவலாக வைத்துவிட்டு அக்குடியானவன் தன் மற்றக் குடும்பத்தாரோடு வழக்கம்போல் கோயிலுக்குப் போய்விட்டான். மேரிக்குத் தன்னுடைய நாய் ரோவர் பக்கத்தில் இருந்தமையால் தனியாயிருக்கிறதாகப் பயமில்லாமல் இருந்தது.

அதனால் மேரி தன் தகப்பனுடைய வண்டி கண்ணுக்கு மறையுமட்டும் ரோட்டில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். வண்டி போனபிற்பாடு மேரி வீட்டிற்குள் வந்து கதவைச் சாத்திக்கொண்டு தங்கள் வீட்டுப் பெரிய வேதபுஸ்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு ஒரு மணிநேரம் அதிலுள்ள விநோதமான கதைகளைப் படித்துக்கொண்டிருந்தாள். பின்பு அவள் எழுந்திருந்து தன்னுடைய நாய் வீட்டுக்குள் போகாமல் ஜாக்கிரதையாய்க் கதவைச் சாத்திக்கொண்டு தோட்டத்துக்குள் சென்றாள். அவள் அப்படித் தன்னுடைய செல்

வமான நாயை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினதற்குக் காரணம் என்னவென்றால், ரோவர் விளையாட்டுக்காக மெத்தைகளையும் தலையணைகளையும் பீறிக் கிழிப்பது வழக்கம். தோட்டத்திற்குள் போய்ப் பூங்கொடி வீட்டு நிழலில் படுத்துச் சாப்பாட்டுவேளைவரையில் சூரிய வெப்பம் தாங்கமுடியாமல் உறங்கிவிட்டாள்.

விழித்துப் பார்க்கையில் சாப்பாட்டு நேரமும் கடந்துவிட்டதென்று கண்டு அவசரமாய் வீட்டுக்குள் போய்த் தன் சாப்பாட்டு சாமான்களை மேஜைமேல் வைத்துக்கொண்டிருந்தாள். அப்போது அவ்வீட்டை நோக்கி இரண்டுபேர் வருவதைக் கண்டாள். அவர்களுடைய அழுக்குடுப்பையும் திருட்டுக்கண்ணையும் பார்த்தாலே அவர்கள் மரியாதைக்காரர்களல்ல, திருடர்கள் என்பது நன்றாய்ப் புலப்பட்டது. ஆயினும் ஒரு பாவமும் அறியாத மேரி அவர்கள் மிகுந்த எளியவர்களாக்கும் என்று எண்ணிக்கொண்டு தட்சணமே போய் அவர்களுக்குக் கதவைத் திறந்துவிட்டாள்.

அப்படி அவள் கதவைத் திறந்தது கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்து ஒருவரையொருவர் பார்த்து ஜாடையாய்ச் சிரித்துக்கொண்டு, அவள் சாப்பாட்டுக்கழைக்க அவர்கள் உள்ளே சென்றார்கள்.

அவர்கள் உட்கார்ந்தவுடனே அவர்களில் சிறுவன் 'குழந்தாய், நீ ஒண்டியாகவா வீட்டிலிருக்கிறாய்?' என்று கேட்டான்.

'ஆமாம் ஐயா, நானும் ரோவரும் வீட்டைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்' என்று மேரி பதில் சொன்னாள்.

'ரோவர் என்பது யார்?' என்று ஒருவன் கேட்டான்.

'அது என்னுடைய நாய், அதை நீங்கள் வாசலில் பார்க்கவில்லையா? ஏன் அது குலைக்கவில்லை?'

'நாய்கள் எங்களை ஒன்றும் செய்யா. அதற்கு விடமாட்டோம் உன்னுடைய ரோவர்——'

'ரோவர் எப்படியோ போகட்டும். நாங்கள் இங்கே வந்த காரியம் என்ன? உனக்குத் தெரியுமா, குழந்தாய்' என்று மற்றவன் அவசரமாகவும் கடிந்துகொண்டும் கேட்டான்.

'எனக்குத் தெரியாதய்யா; ஆனால் நீங்கள் பசியோடிருப்பதால் கொஞ்சம் சாப்பிடலாமே' என்று மேரி சொன்னாள்.

'அப்படியானால் சீக்கிரம் ஆகாரம் கொண்டுவா' என்று பெரியவன் சொன்னான்.

'அடே, குழந்தையைப் பயமுறுத்தாதே' என்று மற்றவன் அவனைக் கடிந்து சொன்னான். 'குழந்தாய், அவன் தன் பசியினால் துடிக்காயிருக்கிறான், நீ உன் காரியத்தைப் பாரம்மா' என்று சொன்னான்.



பெரியவன் பேசுவதைப் பார்த்து மேரி நடுங்கிவிட்டாள். ஆனால் அச்சிறியவன் சொல்லும் வார்த்தைகளால் தைரியமடைந்து மடைப்பள்ளியிலிருந்து யதேஷ்டமாக ஆகாரம் பானம் முதலியவைகளை மேஜைமேல் அவர்களுக்கு வைத்துவிட்டுத் தானும் சாப்பிட உட்கார்ந்துவிட்டாள். சிறியவன் உடனே ஒரு பெரிய கவளத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

'நீங்கள் சாப்பிடும்முன் கடவுளுக்கு ஸ்தோத்திரம் சொல்லுகிறதில்லையா?' என்று மேரி கேட்டாள்.

அதற்கவன் 'நான் மறந்துவிட்டேன். எனக்கு அந்த வழக்கம் இருந்தாலல்லவா வரும், நீ ஜெபம்செய்' என்று சொன்னான்.

உடனே மேரி எழுந்து நின்று 'சுவாமி, நீர் எங்களுக்களிக்கப்பட்ட உணவுக்காக ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்' என்று பிரார்த்தித்தாள்.

அவ்விருவர்களும் தங்கள் பசியைக் கொஞ்சம் ஆற்றிக்கொண்டபிற்பாடு 'உன் தகப்பனார் வர நேரமாகுமா? நேற்று சந்தைக்குப் போகவில்லையா? அவர் இல்லாவிட்டால் உனக்குத் தனியாயிருப்பதில் பயமில்லையா? திருடர்கள் வந்துவிட்டால் என்ன செய்வாய் அம்மா?' என்று இவ்விதமாகப் பல கேள்விகள் மேரியைக் கேட்டார்கள்.

'எனக்குக் கொஞ்சமும் பயமில்லை, தன்னை நம்பினவர்களைக் கடவுள் எப்போதும் ரட்சிப்பார். இந்த வசனத்தைக் கேளுங்கள். "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."'

'இது நன்றாயிருக்கிறது, அடுத்த வசனம் சொல்லம்மா குழந்தாய்' என்றான் ஒருவன்.

'சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது' என்றான்.

மற்றவன் இந்தத் தாமதம் பொறுக்காமல் எழுந்துநின்று ஜன்னலை நோக்கித் தன் தோழனிடத்தில் இரகசியம் பேசினான்.

சிறியவன் 'நான் செய்யமாட்டேன், நான் உடன்படமாட்டேன், நீ அப்படிச் செய்யும்பட்சத்தில், உன் திறத்தைப் பார்க்கலாம் வா' என்று கோபத்துடன் பேசினான்.

உடனே இருவரும் வாசல்பக்கம் போய்விட்டார்கள். பிற்பாடு அவர்களில் சிறுவன் உள்ளே வந்து, 'அம்மா குழந்தாய், உன் பேர் என்ன?' என்று கேட்டான். அவள் தன் பெயரைச் சொன்னதும், 'மேரி, உன்னுடைய தகப்பனார் திரும்பிவர நேரமாகும்போலிருக்

கிறது. நாங்கள் போகிறோம், உனக்கு வந்தனம்' என்று சொல்லிப் போய்விட்டான்.

அவர்கள் போனபிறகு ரோவரைக் கூப்பிட்டும் வரக்காணாமையால் மேரி சும்மா இருந்துவிட்டாள்.

அவருடைய பெற்றோர்கள் திரும்பிவந்ததும், மேரி தன் கதையைச் சொன்னாள். வந்தவர்கள் இன்னாரென்று தெரியாததால் அவர்கள் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ரோவரைத் தேடிப் பார்க்க அது செத்துக் கிடந்தது. அது விஷத்தினால் மறித்துவிட்டது என்று கண்டதன்மேல் அவர்கள் அன்று வந்தவர்கள் திருடர்களாய் இருக்கவேணுமென்று ஊகித்தார்கள். முந்தியநாள் சந்தையில் சாமான் விற்றுத் தாங்கள் கொண்டுவந்த பெரிய தொகையைப் பார்த்துவிட்டு அவர்களிருவரும் திருட வந்திருக்கிறார்கள் என்றும் அனுமானித்தார்கள்.

மேலும் அப்படித் திருடவந்தவர்களில் ஒருவன் மேரியினுடைய நிஷ்கபடத்தையும் தேவபக்தியையும் கண்டு வியந்து பாபச்செய்கையான திருட்டை நிறுத்திவிட்டதைக் கண்டு அதியாச்சரியப் பட்டார்கள்.

அன்றைக்கு அவர்கள் திருடாவிட்டாலும் தங்கள் தொழிலை மறக்கவில்லை. கொஞ்சநாளைக்குப் பிற்பாடு கன்னக்களவுக்காக அவர்களிருவரையும் ஆஸ்திரேலியாவுக்குத் திடலேற்றிவிட்டார்கள்.

பெரியவன் யாத்திரை மத்தியிலேயே மறித்துவிட்டான். சிறியவன் ஆஸ்திரேலியா சேர்ந்ததும் ஒரு பெரிய ஆட்டு முதலாளியிடத்தில் கவர்ன்மெண்டார் அவனை ஒப்புவித்தார்கள். அவன் மற்றக் கைதிகளைவிடக் கொஞ்சம் அதிகம் படித்தவனானபடியால், தன் நல்ல குணத்தால் தன் எஜமானனைப் பிரீதிசெய்து ஒருநாள் கோவிலுக்குப் போக உத்தரவு கேட்டான்.

அந்தக் கோவில் குருவானவர் 'கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும்' என்ற சங்கீதத்தைப் படித்தார்.

குரு ஏழாவது வசனத்தைப் பின்வருமாறு படித்தார். 'கர்த்தருடைய தூதர் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார்கள்' என்று வாசித்தார். அந்தக் கைதி அந்த வசனத்தைக் கேட்டவுடன் தன்னுடைய பழைய ஞாபகம் வந்து 'சுவாமி, அந்தப் புஸ்தகத்தைக் கொடுத்தால் அந்த வசனத்தை எழுதிக்கொண்டு தருகிறேன்' என்றான். குரு புஸ்தகத்தையும் கொடுத்து அவனது மேல்விலாசத்தை விசாரித்து அவனுக்கு இனாமாக ஒரு வேதபுஸ்தகம் அனுப்பினார். இவைகளைப் படித்ததும்



அவனது மனம் கசிந்துருகி, அவன் அப்புஸ்தகங்களைப் படித்துத் தன் பாவ இருதயத்தை மாற்றிக்கொண்டு தனக்கு விடுதலையாகும் வரையில் தனது எஜமானனிடம் நல்ல பேரெடுத்துத், தண்டனைக் காலம் தீர்ந்தபின் விடுதலைபெற்றான். உடனே அவன் தன் பெயருக்கு ஒரு தோட்டம் வாங்கி விருத்தியடைந்து வெகு பணக்காரனாகிவிட்டான். மேலும் பரம யோக்கியனும் தேவபக்தியுள்ளவனுமாய்த் திரும்பிவிட்டான்.

சில வருஷங்களுக்குப் பிற்பாடு அவன் இங்கிலாந்துக்குத் திரும்பிப்போனான். போனவுடனே மேலே சொன்ன கிராமத்துக்குப் போய் மேரியினுடைய வீட்டுக்குப் போனான். மேரி குழந்தைப்பருவம் நீங்கி, நல்ல யௌவனஸ்திரீயாகவும் அவளுடைய பிதா கிழவனாகவுமிருந்தார்கள். அப்போதும் மேரி தான் கிரககிருத்தியங்களைக் கவனித்துவந்தாள். அவளைப் பார்த்துச் சந்தோஷமடைந்து, அநேக வருஷங்களுக்குமுன் அவள் குழந்தையாயிருந்தபோது தான் திருட வந்ததும், அப்போது ஒரு பாவமுமறியாத மேரி தனக்கு அன்னமிட்டதும், அதன்பிறகு கூடவந்த திருடனை விரட்டி ஓட்டிக்கொண்டு தான் திருடாமல் போனதும், ஆனால் பின்னால் தன்னுடைய துர்நடத்தையால் தன்னைக் கவர்ன்மெண்டார் தீபாந்தரத்துக்கு அனுப்புவித்ததும் தான் கோவிலுக்குப் போனபோது தான் முன் மேரியின் வாயினால் கேட்ட வாக்கியத்தைக் கேட்டு குருவின் உத்தரவின்மேல் அதைத் தான் எழுதிக்கொண்டதும், தனக்கு அந்தக் குரு வேதபுஸ்தகம் அனுப்பியதைப் படித்துத் தான் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டதும் பின்பு காவல்காலம் தீர்ந்தபிறகு விடுதலைபெற்றுத் தான் சொந்த விவஸாயம்செய்து யோக்கியனும் பணக்காரனும் ஆனதும், தான் எப்போதும் பகவானையும் பக்தையாகிய மேரியையும் மறக்கவேமாட்டான் என்றும் அவளால்தான் தன் பாவஇருதயம் பாவகிருத்தியம் போய் இரட்சணைக்கு யோக்கியனானான் என்றும் பலவாறு கூறிக் கண்ணீர் உதிர்த்து மேரியினிடத்திலும் அவளது பிதாவினிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்தான்.

அதனால் சிறு குழந்தையும் தேவபக்தியினுடைய கம்பீரத்தைக் காட்டின அதிசயத்தை இப்பத்திரிகை படிக்கும் பக்தர்கள் கவனித்து மனதில் வைப்பார்களாக.

## WORDS OR DEEDS?

## வார்த்தைகளோ கிரியைகளோ?

ஜெர்மனிதேசத்து ஒரு தேவாலயத்தில் பின்வருகிற வார்த்தைகள் சுவரில் எழுதியிருக்கின்றன :—

நீங்கள் என்னை **எஜமான்** என்று சொல்லியும்
எனக்கு ஊழியம் செய்கிறதில்லை.
நீங்கள் என்னை **வெளிச்சம்** என்று சொல்லியும்
என்னைப் பார்க்கிறதில்லை.
நீங்கள் என்னை **வழி** என்று சொல்லியும்
நான் சொல்லுகிறபடி நடக்கிறதில்லை.
நீங்கள் என்னை **ஜீவன்** என்று சொல்லியும்
என்னை விரும்புகிறதில்லை.
நீங்கள் என்னை **ஞானமுள்ளவர்** என்று சொல்லியும்
என்னிடத்தில் விசாரிக்கிறதில்லை.
நீங்கள் என்னைத் **தனவான்** என்று சொல்லியும்
ஒன்றும் கேட்கிறதில்லை.
நீங்கள் என்னை **அன்புள்ளவர்** என்று சொல்லியும்
என்னிடத்தில் அன்புகூருகிறதில்லை.
நீங்கள் என்னை **என்றுமுள்ளவர்** என்று சொல்லியும்
என்னைத் தேடுகிறதில்லை.
நீங்கள் என்னை **இரக்கமுள்ளவர்** என்று சொல்லியும்
என்னை விசுவாசிக்கிறதில்லை.
நீங்கள் என்னை **மேன்மையுள்ளவர்** என்று சொல்லியும்
என்னைச் சேவிக்கிறதில்லை.
நீங்கள் என்னைச் **சர்வ வல்லமையுள்ளவர்** என்று சொல்லியும் என்னைக் கனப்படுத்துகிறதில்லை.
நீங்கள் என்னை **நீதியுள்ளவர்** என்று சொல்லியும்
எனக்குப் பயப்படுகிறதில்லை.

ஆகையால்

நான் உங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தால்
நீங்கள் அதற்குக் குற்றம் சொல்லமுடியாது.





## ELIZABETH FRY

## எலிஜபெத் ப்ரை

மனுஷன் அடையவேண்டிய நல்ல குணங்கள் பலவற்றில் முதலாவது லோகோபகாரம். லோகோபகார சிந்தையுடையவர்களாய் நன்மைசெய்யப் பாடுபட்ட நல்லவர்களுடைய ஜீவிய சரித்திரத்தைப் படிப்பது நாகரிகம் பெறுவதற்கு ஒரு வழி. ஆகையால் முன்னே

பக்திமார்க்கமாய் லோகத்திற்கு உபகாரம்செய்து நாட்டைச் சீர்திருத்துவதற்கே சுயநயம் பாராமல் வாழ்நாள் முழுவதும் உழைத்த உத்தமி எலிஜபெத் ப்ரை என்னும் மாதரசியின் சரித்திரச் சுருக்கம் சிறிது சொல்வோம்.

எலிஜபெத் ப்ரை தம் அருமைப் பெற்றோர்களுக்கு இருந்த நல்ல குழந்தைகள் பதினொன்றில் மூன்றாவதாக 1780-ம் ௵ பிறந்தார். அப்பெண்ணின் தலைமயிர் வெகு அழகு; குணமும் அப்படியே. ஏதாவது சப்தத்தைக் கேட்டால் நடுங்குவார்; யாராவது கொஞ்சம் உற்றுப் பார்த்துவிட்டால் கண்ணீர் வந்துவிடும். அவருக்குத் தம் தாயிடம் வெகு பிரியம்; ஆதலால் அவரே செல்லக் குழந்தை. இவருக்கு இருட்டைக் கண்டால் வெகு பயம்.

மற்றவர்களிடத்தில் அதிகமாய்ப் பேசாமலிருந்து பேசாமடந்தை என்று பேரும் பெற்றார்; தம் மனம்போன போக்கெல்லாம் போய்ப் பிடிவாதக்காரியும் ஆனார். ஆனால் அவருடைய தாய் இளமை முதற்கொண்டே அவருக்கு வேதாகமங்களை நன்றாய்ச் சொல்லிக் கொடுத்துவந்தார். இப்படியிருக்கையில் எலிஜபெத்துக்கு வயசு பன்னிரண்டு ஆகவே அருமை அம்மாள் தேகவியோகமானார். பின் அவருக்குப் புத்திசொல்வார் இல்லையாயிற்று. இதனால் அவர், எதையும் தாமே யோசித்துச் செய்தும், தாம் எடுத்த காரியத்தை, யார் தடுத்தாலும் நிறுத்தாமல், செய்துமுடித்தும் வந்தவரானார்.

வயசு பதினேழு ஆயிற்று. நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை; ஆதலால் அவருக்குத் தாம் குற்றமுடையார் என்பது அப்போது தெரியவந்தது. அதோடு இவ்வுலக வாழ்க்கையில் ஆசைவைப்பதால் வருத்தமே உண்டாகின்றது; அது மனசைக் கெடுத்து டம்பம், பேராசை, பொறாமை முதலிய தீக்குணங்களுக்கு இடந்தருகிறது என்று அறியலானார். இப்படி அறியவே பழைய துர்க்குணங்களை எண்ணி எண்ணி அநுதாபப்பட்டு ஏழைபேழைகள், திக்கற்றவர்கள், கதியற்றவர்கள் முதலானவர்களோடு பழகப் பழக முன்னிருந்த தீக்குணங்கள் ஒருவிதமாய் நீங்கிவிட்டன.

அமெரிக்காவிலிருந்து, ஊர் ஊராய்ப் பிரசங்கம் செய்துவந்த வில்லியம் ஸேவரி என்னும் குருவானவர் இங்கும் வந்து பிரசங்கித்தார். அதை எலிஜபெத் போய்க் கேட்டார். அப்படிக் கேட்டுக்கொண்டிருந்த போதே அவர் கண்ணும் கண்ணீருமாய் மனம் கரைந்து உருகி இனித் தம்மால் கூடியவரையில் வேதத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் தப்பாமல் நடக்கவேண்டும் என்று நிச்சயம் பண்ணிக்கொண்டார். அதோடு இந்த லோகத்துச் சுகம் நிலையானது அல்ல என்பதும், நிலையான சுகத்தை நாடி அடையவேண்டும் என்பதும் அவருக்குத்



தெரியவந்தன. அப்படியே அவர் வழக்கமாய்த் தரித்துவந்த உயர்ந்த ஆடையைத் தவிர்த்துவிட்டு, ஆபரணங்களைக் கழற்றிவிட்டுத் தமக்கு ஓய்ந்த நேரங்களில் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்லத் தலைப்பட்டார். பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்கலானது. அதில் ஏழைப்பிள்ளைகள் எழுபதுவரை வந்து சேர்ந்தன. அவர்களுக்குப் புஸ்தகமும் இல்லை, சம்பளமும் இல்லை. இவருக்காவது வேறே துணை உண்டா? அதுவும் இல்லை.

இப்படியிருக்க 1800-ம் ௵ ப்ரை பெருமாட்டியாருக்கு இருபது பிராயம் ஆயிற்று. அப்போது நல்ல பணக்காரரான வியாபாரி ஜோஸப் ப்ரை என்பவரைக் கலியாணம் பண்ணிக்கொண்டார். அதனால்தான் அவருக்கு எலிஜபெத் ப்ரை என்று பேர் வந்தது. ஆனால் தம்முடைய லோகோபகார சிந்தையைமட்டும் மறக்கவே இல்லை. அவர் தம் பிரிய நாயகனோடுகூட லண்டன் நகரத்தில் இருந்த ஒன்பது வருஷகாலமும் நோயாளிகளின் வீடுகளுக்குப் போய்வருவார்; திக்கற்றவர் எங்கே என்று தேடித்திரிவார்; சகிக்கமுடியாத நாற்றமுள்ள இடங்களைப் பார்க்கப் போவார்; தொழிற்சாலை பாடசாலைகளைப் போய்ப் பார்ப்பார்.

பின் லண்டனைவிட்டு கிராமம்போய்க் குடியிருக்க நேர்ந்தது. அங்கேயும் அவர் ஒரு பெண் பாடசாலை ஏற்படுத்தினார். அவர் எப்பொழுதும் ஏழைகளுக்கென்று கம்பளம், பருத்தி நூற்புடைவை, பாவாடை முதலியன வைத்திருந்ததும் அல்லாமல் நோய்க்கு மருந்து வகைகள் அநேகம் வைத்திருந்தார். பெரிய அம்மையும் அதன் கொடூரமும் நம்மெல்லாருக்கும் நன்றாய்த் தெரியும்; அதைத் தடுக்க அம்மை குத்துவதையும் நாம் அறிவோம். சில அறிவீனர்கள் குத்திக்கொள்ளப் பின்வாங்குகிறார்கள். முற்காலத்தில் இங்கிலாந்திலும் அப்படித்தான். அதுவிஷயமாய் எலிஜபெத் ப்ரை பட்ட பாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. இத்தனைக்கும் அவர் பல குழந்தைகளைப் பெற்றெடுத்த சமுசாரி. அதோடு சமுசாரத்தை நன்றாய் நடத்துவது சுலபமான காரியமா? அதிக அருமையாய் வளர்த்த குழந்தை மாண்டது; 1810-ல் அதாவது எலிஜபெத் ப்ரையின் முப்பதாவது வயசில் பிதா மாண்டார். அவரை அடக்கம்செய்த இடத்தில் இவர் ஒரே தியானமாய் வெகுநேரம் தோத்திரம்பண்ணினார். அது முதல் இருந்த கொஞ்சம் கூச்சமும்போய் நல்ல பிரசங்கி ஆனார். பிறகு 1812-ம் ௵ குடும்ப சமேதராய் லண்டன்போய் இருந்தார்.

அப்பால் அவர் தம் சிநேகிதர்களில் ஒரு சீமாட்டியை அழைத்துக் கொண்டு சிறைச்சாலை ஒன்றைப் பார்வையிட்டார். அக்காலத்தில் சிறைச்சாலைகள் இப்போது இருப்பனபோல் இருக்கவில்லை; வெகு

தூரம் சீர்கெட்டிருந்தன. இன்ன குற்றம் செய்தவனுக்கு இந்த இடம் என்று வித்தியாசம் கிடையாது; விசாரணை நடந்திருந்தாலும் சரி, நடக்காமலிருந்தாலும் சரி; எல்லாருக்கும் ஒரே குகை. வேண்டிய அளவு உணவுண்டா? வெளிச்சமே இருக்காது! தரையும் புழுதி கிளம்பியிருக்கும். அவர்களுக்கு வேலையொன்றும் இல்லை. அதிலிருந்து நீங்க வழியுங் கிடையாது.

இப்படிப்பட்ட இடத்தில் இருந்துகொண்டு இந்தப் பேதைகள் எந்நேரமும் 'ஆய்! ஊய்' என்று கத்திக்கொண்டும், சூதாடிக்கொண்டும் சண்டை போட்டுக்கொண்டும் இருந்தார்கள். இந்த நிலையைப் பெருமாட்டியார் பார்த்து அங்கிருந்தவர்கள் அழுக்கையும், அறையின் நெருக்கத்தையும், மற்ற விபரீதங்களையும் பார்த்து மிகுந்த முற்றுக் கருணைகூர்ந்தார். ஆனால் அடுத்தாற்போல் குடும்ப கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வர மூன்று வருஷகாலம் அச்சிறையை மறுபடியும் போய்ப் பார்க்க முடியாமற்போயிற்று. வியாபாரத்தில் நஷ்டமாகி வீட்டையும் விற்றுவிட நேர்ந்தது. அதனால் லண்டனுக்கருகே இருந்த ஒரு சிறு வீட்டில் குடியிருக்கலானார்கள். ஆனால் அவருடைய புகழ்மட்டும் மங்கவில்லை; அரசர் முதலாயினோரும் வந்து பார்க்கும் பாக்கியம் கிடைக்கலானது.

(இன்னும் வரும்.)

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

அப்போது வேதாபிமானி 'அவர்களுக்குப் பரலோகத்திலே என்ன கிடைக்கும்? 1 சாமு. 2. 30-ல் கடைசி வார்த்தைகளில் சொன்னபடிதா னிருக்கு' மென்றார். நீதி. 3. 9-ல் சொன்னபடி 'உன் பொருளாலும் உன் எல்லா விளைச்சலின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு' என்ற வாக்கியத்தை மறந்துவிட்டார்போலும். நாமும் தாவீது ராஜா, 1 நாளா. 29. 12, 14 வாக்கியங்களில் சொல்வதுபோல 'எல்லாம் உம்மால் உண்டானது; உமது கலத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் என்று சொல்வோமாக' என்றார்

இப்படிப் பேசிக்கொண்டே வரும்போது வழியிலே ஒரு பெரிய பட்டணம்போல் கோட்டை கொத்தளங்களும், அக்கிராரம் தெப்பக்குளங்களும், மாடமாளிகை கூடகோபுரங்களும், பெருங்கடைத்தெருக்களும், நடந்துபோக வீதிவிலாசமுள்ள பெரும்பாதைகளும் பார்க்க வெகு அலங்கிர்தமாய்க் காணப்பட்டன. அதினைக்



கண்ட சிதன் 'ஐயா! இது பெரிய ஊராயிருக்கிறது. இந்த ஊருக்குப் பேரென்ன?' என்று அறியவேணும் என்று விரும்பி, பக்கத்தில் நடந்துசெல்லும் ஆளைக் கேட்டான்.



அதற்கு அவன் 'பெருமாள்புரம்' என்றான்.

'இந்த ஊரைப் பார்த்தால் பெரிதாயிருக்கிறதே? இவ்விடத்து விசேஷம் கொஞ்சம் சொல்லுங்கள் ஐயா' என்றான்.

அதற்கு அந்த அந்தணன் 'போங்காலும் போம். உமக்கு வேலையில்லை, பேசிக்கொண்டே போவீர். இந்த ஊர் ஜமீன்தார் பிராமணருக்கு இடும் பூதானம், கோதானம், அன்னதானம், சொர்ணதானம்,

வஸ்திரதானம், கன்னிகாதானம் ஆகிய ஆறுவகை தானங்களில் ஒன்றாகிய கோதானமிடுகின்றனர். அதற்கென்று அக்கம்பக்கத்திலும், தொலைதூரத்திலுமிருந்து வரும் பிராமணாளில் ஏராளமான பேர்வகோபித்து வந்துவிட்டனர். இதற்குள்ளாக கோதானம் கொடுத்து ஆகிவிடும். பக்கத்து ஊரிலிருந்து பையப் போகலாமென்று புறப்பட்டேன். எனக்கு மூந்துதோ, பிந்துதோ, தெரியவில்லை' என்று சொல்லிக்கொண்டு கடுக நடந்து சென்றான்.

அதற்குள் இரண்டொரு பிராமணாள் பசுக்களை நடத்திக்கொண்டு சந்துஷ்டியாய்ப் பேசிக்கொண்டு வந்தார்கள். அதுகண்டு கீதமணியும் வேதாபிமானியும் கோதானம் வாங்கிக்கொண்டு பிராமணாள் எல்லாம் புறப்பட ஆரம்பித்துவிட்டார்கள் போலிருக்கிறது. ஏழைப் பேதை பிராமணன் பக்கத்திலிருந்தும் பிந்திப்போனானே. அவன் அதிர்ஷ்டம் என்னவோ என்று பேசிக்கொண்டார்கள். அப்போது வழிநடந்த பிராமணாள் இருவர் பேசிக்கொண்டு போகையில், 'ஹே! ராமகிருஷ்ணா! உனக்கு எத்தனை பசு கிடைத்தன' என்று ஒருவர் மற்றொருவரைக் கேட்க, இராமகிருஷ்ணையர், 'நேக்கு இரண்டு பசு கிடைத்தன' என்றார்.

அதுகேட்டு மற்றவர் 'நீ கொண்டுபோகிறது ஒன்றுதானே, பின்னொன்று எங்கே?' என்றார்.

அதற்கு ராமகிருஷ்ணையர் 'அடுத்த வீட்டு சுப்பையர் அங்கு வரத் தாமதமாகிவிட்டார். பக்கத்திலிருந்தும் அவருக்குக் கொடுத்துவைக்கவில்லை. ஆதலால் அவருக்குப் பசு கிடைக்கவில்லை. அவருக்கு ஒன்றும் கிடையாதது எனக்கு ஒன்றுகூடக் கிடைத்தாப்போல்தான்' என்று கலகலவென்று சிரித்தார்.

அதற்கு மற்றவர் "ஐயோ, பாவம்! உமக்குக் கிடைத்ததுபோல அவருக்கும் கிடைத்தால் உமக்கென்ன? பக்கத்து வீட்டுக்காரன் நன்றாயிருந்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி, சமையசகாயத்துக்கு இடமுண்டு, 'நாடெங்கணும் வாழக் கேடொன்றுமில்லை' என்ற முதுமொழியை மறந்துவிட்டீரோ காணும்" எனப் பிறர்வாழச் சகியாத ராமகிருஷ்ணன், "என்ன ஓய்! அவனையும் என்னையும் சரியாய் வைத்துப் பேசுகிறீரே. அவனும் மாடுகட்டி வாழ மனுஷனாகிவிட்டானா? அவன் மனைவிக்கு ஒரு பசு கிடைத்தால் அவள் 'இம்மட்டும் கண்டையோ செம்பொட்டைக் கண்ணாலே' என்று அவள் மகத்துவம் கண்ணை மூடிவிடும்; மனுஷரை மதிக்கமாட்டாள். தினசரி நமது ஆத்துக்காரிக்கும் அவளுக்கும் ஓயாமல் மனஸ்தாபமாயிருக்கும். மேஸ்திரேட்டு வழக்குக்கு வக்கீல் தேடித் திரியவேண்டியதுதான் நமக்கு அலுவலாகிவிடும். இந்த உபத்திரவத்தை உத்தேசித்துத்தான் நேக்கு



இரண்டு கிடைத்தது என்று சொன்னேன்" என்று பேசிக்கொண்டு போனார்கள்.

அதுகேட்டு கீதமணி வேதாபிமானியை நோக்கி, 'ஐயா! இந்தப் பிராமணாள் சொன்னதைக் கேட்டீர்களா? அவர்கள் புறமதஸ்தர்களாயிருக்கிறதினாலே அவர்களுடைய சுபாவம் எவ்வளவு இரக்கமற்றதாயிருக்கிறது' என்றான்.

அதுகேட்டு வேதாபிமானி 'அப்பா, கீதா! இந்தப் பொறாமைச் சுபாவம் எலும்புருக்கிபோலக் கிறிஸ்தவர்களுக்கு உள்ளுக்குள்ளே இருந்து கிரியை செய்கிறது. புறமதஸ்தனைப்போல வெளிக்குக் காட்டிச் சண்டை போட்டுக்கொள்வதைவிட, உள்ளுக்குள்ளே வைத்திருந்து இரகசியமாய் ஒருவனை அடியோடே கெடுத்துவிடுவார்கள். திருஷ்டாந்தமாக, ஒரு ஊரிலுள்ள உபதேசியாரைத் தலத்துக் குருவானவர் சட்டப்படி இன்னொரு ஊருக்கு மாற்றிவிட்டாராம். அவர் தமக்குள்ள பண்டம்பாடிகளையெல்லாம் சேர்த்துக் கட்டி வண்டியிலேற்றிப் புறப்படும்போது, அவர் மனைவி, தோட்டத்திலுள்ள மாதுளை, மா, கொய்யா முதலிய மரங்களை வருபவர்க்கு விட்டுப் போகிறதா? இதைக் கொண்டுபோகவும் முடியாதே. இதற்கு ஒரு உபாயம் செய்யவேணுமென்று வஞ்சகமாய் நினைத்து ஆறு பைசாவுக்குச் சுண்ணாம்புக்கல் வாங்கிவந்து ஒவ்வொரு மரத்தின் வேருக்குள்ளே தோண்டி சுண்ணாம்புக் கற்களைக் கொட்டி, ஒவ்வொன்றும் பட்டுப்போகத் தண்ணீர் வார்த்துவிட்டு, வெளியே தெரியாதபடி நல்ல மண்ணைப் போட்டுவிட்டுப் போயினள். மறுநாள் அந்த இடத்துக்குப் புதிதாக நியமனமான உபதேசியார் வந்து வீட்டைச் சுற்றிப் பார்த்து, மா, கொய்யா, மாதுளை முதலிய கனிவிருட்சங்களைக் கண்டு சந்துஷ்டியோடு வீட்டிலே குடியேறினார். செடிகளுக்கு அந்த உபதேசியார் மகள் காலையும் மாலையும் தண்ணீர் விடுகிறது. செடிகளோ வாடி வதங்கி, இலைகள் காயத் தொடங்கின. அவ்வூர் ஜனங்களோ வந்து பார்த்து, தோட்டத்தை அவர்களைப்போல யார் கவனிக்கப்போகிறார்கள். அவர்கள் போனவுடனே செடிகளும் வாடிப்போயினவே, இவர்கள் என்னத்தைப் பேணப்போகிறார்கள். அவர்கள் இருக்கும்போது நந்தவனம்போல இருந்த தோட்டம் இந்த இரண்டு மூன்று நாளைக்குள் இப்படி எல்லாம் காய்ந்துபோனதே' என்று பேசிக்கொண்டார்கள்.

அதுகேட்டு அந்த உபதேசியாரின் பிள்ளைகள் தகப்பனாரிடம் 'நாங்கள் வந்த நாள்முதல் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டுதான் வருகிறோம். அந்தச் செடிகளோ நாளுக்குநாள் தீய்ந்து காய்ந்துபோகின்றன, ஆச்சரியமாயிருக்கிறது' என்றார்கள். அதுகேட்டு உப

தேசியார் 'ஒருவேளை வேர்ப்புழு என்பது இருந்தால் வேர்களைக் கடித்துத் தின்றுகொண்டே வரும். அப்போது செடிகள் செழிப்பாக வளரமாட்டா. ஆயினும் இச்செடிகள் காய்ந்துபோகக் காரணமென்ன என்று கண்டுபிடிக்கவேணும்' என்று செடிகளின் வேரைக் கிண்டிப்பார்க்க சுண்ணாம்புக் கற்கள் தென்பட்டன. அது கண்டதும் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு, 'இப்படியும் செய்திருப்பாரா? இவரும் கிறிஸ்தவரா? அதிலும் உபதேசியாரா?' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார். அதனைப் பிள்ளைகள் அறிந்து செடிகள் பட்டுப்போன காரணத்தை அக்கம்பக்கங்களிலே சொல்ல, பழைய உபதேசியாருடைய பேச்சையும் சாமர்த்தியத்தையும், பிரசங்க சாதுரியத்தையும் கண்டிருந்த ஜனங்கள் அவரும் இப்படிச் செய்திருப்பாரா? என்று சந்தேகிக்கக் கூடியதாயிருந்தது.

இப்படி வெளிக்குப் பக்தியின் வேஷத்தைத் தரித்திருந்தாலும், உள்ளேயோ கவ்வுகிற ஒனாய்களாயிருப்பவர் எத்தனை பேர்? ஆனால் அந்த உபதேசியார் மனைவி செடிகளை வேரறச் செய்தபடியே, அவள் வமிசமும் உலகத்திலே சீக்கிரமாக வேரற்றுப்போனதுதான் எனக்கு மிகவும் ஆச்சரியத்தையும் துயரத்தையும் கொடுக்கிறது. ஐயோ! அவள் உலகத்தின் அற்பமான பொருள்களை மற்றவர்களுக்கு அனுபவிக்க இடம் கொடுக்காததினாலே அவளும் அவர்கள் குடும்பமும் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் இடம்பெறாமல் போனார்களே என்பது எவ்வளவு பயங்கரமானது. 'அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்ற தெய்வநீதி சரியாயிற்றே' என்றார்.

அது கேட்டு கீதமணி 'ஐயா! நாங்களிருந்த ஊரிலே ஒரு பெரிய உத்தியோகஸ்தர் இருந்தார். அவருக்குக் கீழே இருந்த, ஒரு தாழ்ந்த வேலைக்காரனுடைய மகன் படித்து சுவாமியுடைய கிருபையினாலே பி. ஏ. பரீட்சை படிக்கும்படி சலாக்கியம் கிடைத்தது. அதுகண்டு அந்த மேல் உத்தியோகஸ்தரானவர் 'நாமும் பி. ஏ. இவன் மகனும் பி. ஏ. பரீட்சை கொடுத்து நமக்குச் சமமாகிவிடுகிறதா? இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கக்கூடாது. ஆகையால் இவன் படிப்புக்குக் குதாவடை செய்யவேணும்' என உத்தேசித்து அந்தச் சொற்பச் சம்பளம் பெறும் வேலைக்காரனைக் கிராமங்களுக்கு அடிக்கடி மாற்றுதல் செய்துவந்தார். பையனோ சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு, பள்ளிக்கூடத்துச் சம்பளம் கொடுப்பதே வருத்தம். சாப்பாட்டுக் கடைக்கு என்னத்தைக் கொடுப்பது எனக் கலங்கித் தளர்ச்சியடைந்ததினால் ஒரு வருஷம் பரீட்சையில் தவறினான். ஆயினும் கடவுள் இவன் பக்கம் துணைசெய்ததால், இவனுக்குப் பெண் கொடுக்கக் காத்திருந்தவர்கள் சாப்பாட்டுக்கு ஒழுங்குசெய்து, 'நீர் பாடத்தை



மாத்திரம் கவனமாய்ப் படியும். மற்றவைகளை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோ'மென்று சொல்லி தைரியப்படுத்திவிடப் பையன் 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்றபடி ஜெபத்தோடும் கருத்தோடும் படித்துப் பரீட்சையில் தேறி, இவனும் தகுந்த வேலையிலமர்ந்து, சீக்கிரத்தில் உப்பளத்தில் சூப்பிரின்டெண்டெண்டு வேலையாகி மாதம் சம்பளம் 300 ரூ. பெற்றுவந்தான். ஆகவே அவர் தமக்குக் குறிக்கப்பட்ட வேலையினிமித்தம் கிராமங்கள்தோறும் சுற்றிப் பார்த்து வரும்போது, நாங்களிருந்த ஊருக்கு வரும்படி நேரிட்டது. அப்போது இவர் தகப்பனுக்குமேல் எஜமானாயிருந்த இன்ஸ்பெக்டர் தமது ஊரிலேயுள்ள, பனை, தென்னைகளுக்குக் குறைந்த வரிபோடவேணும் என்று ஊராருடைய வாழ்வுக்காக உருகிப் பேசுபவர்போல வெகு தாபந்தமாய்ப் பேசினார். ஆனால் இவரோ பழைய சம்பவங்களை மனதில் வையாது அவருக்கு வேண்டிய சகாயம் சட்டத்துக்கு விரோதமின்றிச் செய்வதாக வாக்களித்ததுமன்றி, அவரை அதிகமாய் மதித்து நேசித்து நடந்துகொண்டார். அது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருந்தது. சுவாமி, அவரை இன்னும் ஆசீர்வதிப்பார் அல்லவா ஐயா!' என்றான்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டே மேல் அழகாபுரி என்ற ஊர் வந்து சேர்ந்தார்கள். அது கிறிஸ்தவர்கள் நிறைந்த இடம். பெரிய கோவிலும் இரண்டு மூன்று குருக்களும், பங்களாக்களும், பள்ளிக்கூடங்களும் உள்ள இடமாயிருந்தது. அதுகண்டு வேதாபிமானியும் கீதனும் சிலநாள் அந்த ஊரில் தாமதிக்க எண்ணிச் சத்திரத்திலே இடம் பார்த்து இருந்துகொண்டார்கள். ஏனெனில் உலக சுலோகம்போல 'ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு' என்றபடி ஒரு கிறிஸ்தவ வீடு என்றால் வருபவரை 'நாம் தானே உபசரிக்கவேணும் என நினைப்பான். ஆனால் அதிக வீடு இருக்கும் இடங்களிலே வந்த விருந்தினர் ஐயர் வீட்டிலே இருப்பார். இல்லாவிடில் உபதேசியார் வீட்டிலே இருப்பார். அல்லது பெரியதனக்காரர் வீட்டிலே இருப்பார். இனக்காரர் வீட்டிலிருப்பார். நமக்கு என் கிரகச்சாரம்? வலிய விருந்துக் கழைத்து வீண் செலவுக்கு இடம் வைத்துக்கொள்வது நமக்கு அடாது' என்று அவரவர் தம்தம் பாட்டைப் பார்த்துக்கொள்வது பெரும்பாலும் பட்டணக்கரை வழக்கமாதலாலும், தங்குமிட மறியாமற்போனதாலும் சத்திரத்திலே தங்கியிருந்துகொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.

## SCRIPTURE PUZZLE

## வேத விடுகதை

கிறிஸ்தவர்களுக்கு முக்கியமாய் இருக்கவேண்டிய குணத்தின் பேர் என் பேர்.

அதன்

1. முதல் எழுத்து, பிள்ளைகள் எதற்கு விலகித் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டுமோ அதன் முதல் எழுத்து.
2. இரண்டாம் எழுத்து, கிறிஸ்தவர்கள் பிரபல்யப்படுத்த வேண்டியதன் முதல் எழுத்து.
3. மூன்றும் எழுத்து, வேதத்தில் வருகிற கடைசியான அழைப்பு.
4. நான்காம் எழுத்து, பவுல் அப்போஸ்தலன் இரண்டாம் பிரயாணத்தில் போன ஒரு தீவின் முதல் எழுத்து.
5. கடைசி எழுத்து, தன் அண்ணனுக்கு முன்பாகத் தெரிந்துகொண்டிருந்த ஒரு தம்பியினுடைய பெயரின் கடைசி எழுத்து.

என் பேர் என்ன?

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1913 ஹு மேமீ

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி. | 2 சாமு. | 1. 1—16 | 11 ஞா. | 2 சாமு. | 7. 1—17 | 21 பு. | 2 சாமு. | 15. 1—12 |
| 2 வெ. | ,, | 2. 1—11 | 12 தி. | ,, | 7. 18—29 | 22 வி. | ,, | 15. 13—23 |
| 3 ச. | ,, | 2. 12—24 | 13 செ. | ,, | 9. | 23 வெ. | ,, | 15. 24—37 |
| 4 ஞா. | ,, | 2. 25—32 | 14 பு. | ,, | 11. 1-3, 14-17 | 24 ச. | ,, | 16 1—14 |
| 5 தி. | ,, | 3. 17—27 | 15 வி. | ,, | 11. 18—29 | 25 ஞா. | ,, | 16. 15—23 |
| 6 செ. | ,, | 3. 28—39 | 16 வெ. | ,, | 12. 1—14 | 26 தி. | ,, | 17. 1—14 |
| 7 பு. | ,, | 4. | 17 ச. | ,, | 12. 15—24 | 27 செ. | ,, | 17. 15—24 |
| 8 வி. | ,, | 5. 1—10 | 18 ஞா. | ,, | 14. 1—11 | 28 பு. | ,, | 18. 1—11 |
| 9 வெ. | ,, | 6. 1—11 | 19 தி. | ,, | 14. 12—24 | 29 வி. | ,, | 18. 12—23 |
| 10 ச. | ,, | 6. 12—23 | 20 செ. | ,, | 14. 25—33 | 31 ச. | ,, | 19. 1—15 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

# மாதர் போதினி

No. 186 ஜூன் 1913 No. 6

OFFICE OF THE REGISTRAR ... 13 JUN 1913 MADRAS.



## A NEW FLORENCE NIGHTINGALE

## புது ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல்

தற்காலத்தில் யூரோப்பில் பெரிய யுத்தம் நடந்துவருவதால் ஜனங்கள் பலருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டுவருகின்றன. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கடவுள் இந்த லோகத்தை இருளையே முன்னிட்டுப் படைத்திருக்கிறார் என்றால் அது நம்பக்கூடியதாகாது. என்ன இருந்தாலும் இங்குமங்கும் நடந்துவரும் இரண்டொரு தக்கதும் நல்லதுமான இரக்கச் செயல்களாலும் சுயாய மறுப்பினாலும்

அந்தக் கொடுமையின் குரூரம் மிகுதியும் குறைவுபடும். சுமார் 60-ம் வருஷத்துக்குமுன் நடந்த கிருமியர் யுத்தத்தில் அடிபட்ட, காயப்பட்ட, கஷ்டப்பட்ட போர்வீரர்களுக்கு இடைவிடாமலும் சுயநயம் பாராட்டாமலும் தக்க சிகிச்சை செய்தும் மன ஆறுதல் சொல்லியும் தேசத்திற்கு ஊழியஞ் செய்துவந்த அப்போதைய கண்யமுள்ள சீமாட்டிகள் பலரையும் அவர்கள் தலைவி காலஞ்சென்ற ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரையும் நம் சகோதரிகள் அறிந்திருக்கலாம். அப்போது அவர்கள் காட்டிய முன்மாதிரியைக்கொண்டு இப்பால் விஞசகாலங்களில் அப்படிப்பட்ட இனிமையான கைங்கரியங்களைச் செய்ய முன்னால் வந்திருக்கிறவர்களும் உண்டு. யுத்தக் கொடுமைகளைத் தெரிவிக்கும் தந்திகளே ஸான்ஸ்டியானோ என்னும் ஊரிலுள்ள துருக்கிய பாளையத்தில் ஓர் இங்கிலீஷ் சீமாட்டி செய்துவரும் பரோபகார ஊழியத்தையும், வீரச் செயலையும் அறிவிக்கின்றன. அந்தக் கன்னிகையின் பேர் 'ஆல்ட்' (Miss Alt). இவரை முன் காலத்திய ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரோடு சேர்ப்பதில் சந்தேகம் ஏற்படுமா! ஆல்ட் அம்மையாரையும் 'கைவிளக்குக் கன்னி' என்னலாம் அல்லவா?

இந்தியாவிலும் இன்னும் பல இடங்களிலும் ஸ்திரீகளின் நன்மையைக் கோரிச்செய்த வைத்திய சிகிச்சைப் பழக்கம்தரும் பாடசாலை முதலியவற்றை ஸ்தாபித்த டப்ரின் சீமாட்டியார் கான்ஸ்டாண்டிநோபுள் என்னும் ஊரிலும் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார். அதிலே தான் நமது ஆல்ட் அம்மாள் பயின்றார். அப்புறம் அவர் செவிலித் தாயாக இருந்து ஜீவனம் பண்ணிவந்தார். இப்போது ஆல்ட் அம்மாளுக்கு வயசு அறுபது; இருந்தாலும் அவருடைய சுறுசுறுப்பு, அநுதாபம், அன்பு முதலிய நற்குணங்கள் எல்லாம் அதிகமாய் இருக்கின்றன. இக்குணங்களில் இவர் காலஞ்சென்ற ப்ளாரென்ஸ் நைட்டிங்கேலுக்குக் கொஞ்சமும் தாழ்ந்தவர் ஆகமாட்டார்; அவரேதான் என்று சொல்லவேண்டும். அவருடைய அனுதின வேலை என்ன? சகிக்க முடியாத நாற்றம், அழுக்கு முதலியவை நிறைந்த இடங்களில் தான் சதா நிற்கவேண்டும். ஆபத்தான காலரா (விஷபேதி) வந்தவர்களுக்கு மருந்து தரவும், பத்தியம் உதவவும், இன்னும் வேண்டிய சகாயம் செய்யவும் வேண்டும். சண்டையில் காயப்பட்டுப் படுத்துக் கிடப்பவர்களுடைய காயத்தைக் கழுவிக் கட்டிக் காத்திருக்கவேண்டும். இந்த வேலைகளில் எது சௌகரியமானது? எது மோசமில்லாதது? காலராவுக்கு மருந்து தருபவருக்கே ஏன் காலரா வந்துவிடக்கூடாது? உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும். பாருங்கள்! செலவுக்குப் பணம் கிடைப்பதும் அருமை. ஆதலால் தன் கையில்



சேர்த்துவைத்திருந்த வெகு கொஞ்சம் பணத்தையும் தன் ஊழியத்திலேயே மனமாரச் செலவிட்டுவிட்டார். தன்னொடொத்த ஸ்திரீ சங்கத்தில் கலந்து உறவாடி மகிழ்ந்திருக்க நேரம் என்பது அவருக்குக் கிடையாது. சுய க்ஷேமத்தைக் கவனிக்க அவருக்குச் சாவகாசம் இல்லை. மற்றவர்களுக்கும் அதிலும் மற்றத் தேசத்தாருக்குமே அவர் செய்யும் உபகாரம் அத்தனையும் ஆகிறது. சுயநயம் இல்லவே இல்லை. சதா கஷ்டமே ஒழிய சுகம் கிடையாது. இவர் சாதி மதம் முதலிய எதையும் கவனியாமல் மனுஷர் கஷ்டப்படாமல் பாதுகாப்பதே கருமமாயிருக்கிறார்.

என்ன அபூர்வ அன்பு! இப்படி மனுஷருக்கு அபாயத்திலும் ஆபத்திலும் ஆஜராகி தைரியமாய் உதவிய இந்த இங்கிலீஷ் ஸ்திரீயைத் தவிர வேறே நல்ல கண்ய ஸ்திரீயோ புருஷனோ இருப்பதாக உடனே சொல்லமுடியாது. ஆல்ட் அம்மையாருக்கு வேறு மதஸ்தரைவிட மஹம்மதியரைக் காப்பாற்றப் பார்ப்பதில் தொந்தரை மிகுதி. சாதாரணமாக அவர்கள் ஸ்திரீகளை வைத்திருக்கும் ஸ்திதி நமக்கு வெகு நன்றாய்த் தெரியும். ஆதலால் அம்மாள் பாடு அதிகம் அல்லவா? இத்தனை பரோபகார சிந்தைக்கு அவருடைய கிறிஸ்தவ பயிற்சியே காரணம். இதை அவரே கண்ணுக்கு முன்னால் ருஜுப்படுத்துகிறார்.

## THE POSTMAN'S STORY

## தபால்காரன் கதை

நான் சிறியவனாய் இருந்தபோது ஆடுகளை மேய்த்து வளர்த்துப் பணம் சம்பாதிக்கலாம் என்று அநேகர் (இங்கிலீஷ்காரர்) அமெரிக்கா போனார்கள். அதை அறிந்து அப்புறம் நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன். நான் அங்கே வசித்துவந்த நாட்டிற்குச் சமீபத்தில் இங்கும் அங்கும் அநேக இங்கிலீஷ்காரர் வாசஞ்செய்தனர். இவர்களுக்கும் எனக்கும், எல்லாருக்கும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது, நாங்கள் இப்படித் தூரதேசம் வந்துவிட்டபடியால் எங்கள் ஊர்க்கடிதங்களைத் தப்பாமல் காலாகாலங்களில் அடையவேண்டும் என்பதே. அப்போது இங்கிலீஷ் தபால் கப்பல்கள் கடிதம் முதலானவைகளையெல்லாம் கொண்டுவந்து நாங்கள் இருந்த இடங்களுக்கும் பக்கங்களிலுள்ள தபால் ஊர்களில் விட்டுவைப்பது வழக்கம். அந்த ஊர்களும் எங்கள் வீடுகளுக்கு வெகுதூரத்தில் இருந்தன; ஆகையால் அவ்விடத்திய ராஜாங்கத்தார் கடிதங்களை எங்கள்

மேய்ச்சல் தரைகளுக்குத் தனித்தனியாக அனுப்புவதில்லை. எங்களுக்கோ கடிதங்கள் வெகு முக்கியம். ஆகையால் நாங்கள் எல்லாரும் தலைக்குக் கொஞ்சம் பணம்போட்டு, அதைக்கொண்டு தபால்காரன் ஒருவனை எங்கள் சுதாவில் ஏற்படுத்தி அவன் மூலமாய்த் தபால்களை அடைந்துவந்தோம். அந்த வேலை அதிக ஆபத்தானது; ஆகையால் அந்தத் தபால்காரன் கடிதங்களைச் சரிவரக் கொண்டுவராமல் நின்றுவிடுவதும் உண்டு. அதோடு ஆடுமேய்ப்பர்களான நாங்கள் அனுப்ப வேண்டியதும் பெறவேண்டியதுமான பணம் பண்டம் எல்லாம் அவன் மூலமாகவே ஆகவேண்டி வந்ததால் அதிக நம்பிக்கையுள்ள ஒருவனை அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கவேண்டி வந்தது.



அப்போது, நான் பார்த்தேன். நானோ நல்ல வாலிபன். பலசாலி. குதிரை சவாரியிலே வெகு கெட்டிக்காரன். பயம் என்பது கொஞ்சமும் கிடையாது; ஆகையால், இந்த வேலைக்கு நானே போனால் என்ன! தக்க சம்பளமும் கிடைப்பதால் சீக்கிரம் என் தரித்திரமும் நீங்கும், பணக்காரன் ஆகலாம், என்று இப்படிக்கெல்லாம் இதை



தாரோடு கலந்து யோசிக்க அவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னை அந்தத் தபால் வேலையில் அமர்த்தினார்கள்.

அமர்ந்ததும் என் வேலையைக் கிரமமாய்ச் செய்து வரலானேன். எங்கே போனாலும் என்னை வெகு சந்தோஷமாய் உபசரித்தார்கள். மனைவி மக்கள், உற்றார் உறவினர், எல்லாரையும் உடன்கொண்டு குடியிருந்தாலும் நாம் சாதாரணமாக அயலூரார் எழுதிவிடும் கடிதங்களை உத்தேசித்துத் தபால்காரனை எவ்வளவோ ஆசையோடும் முகமலர்ச்சியோடும் எதிர்கொள்கிறோம். தூரதேசத்தில் இருப்பவர்களுக்குக் கேட்பானேன்! அதிலும் திக்குக்கு ஒருவராக இருப்பவர்! ஆதலால் அந்த வேலையில் அவர்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் திருப்தியே இருந்துவந்தது. அநேகமாய் நான் தனித்தே குதிரைமேல் போவேன். யாதோர் அபாயமும் சம்பவித்ததில்லை. ஆனால் ஒருதரம் ஓர் அபாயம் நேரிட்டது. அதுவும் தேவகிருபையால் க்ஷேமமாய் முடிந்தது. அதோடு எனக்கு அந்த வேலையும் முடிந்தது. அதன் விபரம் என்ன?

ஒருநாள் அதிகாலையில் புறப்பட்டுக் கடிதங்களைத் தபாலில் போட்டுவிட்டு, வந்த கடிதங்களை வாங்கி, பையில் நிரப்பிக்கொண்டு, பாங்கியில் வரவேண்டிய பணத்தையெல்லாம் வாங்கிக்கொண்டு புறப்பட்டேன். அன்று என் உத்தியோகம் என்றும் இல்லாதபடி உத்தரவாதம் உள்ளதாக இருந்தது. அத்தனை பவுன் கையில் இருந்தது! மறுபடி வீட்டுக்குத் திரும்பும் வழியில் வெகு அபாயமான பாதையொன்றைக் கடக்கவேண்டியிருந்தது. அங்கே வெகுதூரத்துக்கு மரம் என்பதே காணோம்; பார்த்த பக்கமெல்லாம் வெறும் மணல். பக்கத்தில் பள்ளத்தாக்கு ஒன்று தென்பட்டது.

அங்கிருந்து திடீரென இரண்டு வீரர்கள் குதிரைமேல் ஏறிக்கொண்டு எனக்கு முன்னால் வந்தார்கள். அவர்களைப் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. அவர்களில் ஒருவன் 'எங்கே போகிறாய்?' என்று அதிகாரத்தோடு கேட்டான்:

அதற்கு நான் 'ஐயா! நான் ஓர் ஏழைக் கூலிக்காரன்; அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு இந்தத் தபாலைக் கொண்டுபோய்க் கொடுக்கப் போகிறேன்' என்றேன், 'இதோ பாருங்கள்' என்று அக்கடிதக்கட்டையும் காட்டினேன். அவர்கள் வழி தெரியாதவர்கள்போல் பாசாங்கு பண்ணி என்னை வழிகாட்டச் சொன்னார்கள். அப்படியே நானும் வழிகாட்டி நடத்தினேன். ஆனால் அந்தப் பள்ளத்தாக்கை அடைந்ததும் 'இவர்கள் என் பணத்தைப் பறிக்கத்தான் இப்படி என்னைத் தொடருகிறார்களோ!' என்று தோன்றவே என் மனம் பதறியது. இருந்தாலும் தைரியமாய்த் துப்பாக்கியைத் தயார்ப்படுத்திக்கொண்டு,

தேவனை மனசில் தியானம்பண்ணி என்னை ரக்ஷிக்கும்படி கேட்டுக் கொண்டு அவர்களுடன் போனேன்.

அப்புறம் அவர்கள் ஜாடை செய்துகொண்டார்கள். அதையும் பார்த்தேன். உடனே ஒரு கொடிய கள்வன் உரத்த சத்தமிட்டுக் கொண்டு என்னண்டை வந்தான். அதையும் பார்த்தேன். எனக்குப் பயம் என்றால் சொல்லி முடியாது. ஆனால் கும்பிட்ட தெய்வ கிருபையால் அவனுடைய குதிரை இடறிக் கீழே 'பொத்' என்று விழுந்தான். மற்றவனும் உடனே அவனுக்கு உதவிசெய்ய அணுகினான். உடனே நான், 'இதுவே சமயம்' என்று குதிரையைத் தட்டிவிட்டு வாயுவேகம் மனோவேகமாய் அதிசீக்கிரத்தில் என் சிநேகிதன் ஒருவன் வீட்டிற்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்துவிட்டேன். வந்ததும் அங்கே என்னை ஆட்டத்தில் காப்பாற்றிய ஆண்டவரைத் துதித்துப் பாடி நன்றி செலுத்தினேன். அவனுடைய குதிரை இடறாமல் மாத்திரம் இருந்தது அங்கே என் கதி அதோகதிதான்.

ஆபத்தில் ஆண்டவரை நினை
அவர் ஆண்டு நிற்பார்.

## ELIZABETH FRY (*Cont.*)

## எலிஜபெத் ப்ரை (தொடர்ச்சி.)

1816-ம் வருஷ எலிஜபெத் ப்ரைக்கு வயசு முப்பத்தாறு ஆயிற்று; அவர் செய்யத் தொடங்கிய வேலையும் அதிகமாயிற்று. முன் பார்த்த சிறைச்சாலையை மறுபடியும் பார்க்கத் தனித்துப் போக, அதன் தலைவன் 'அம்மா! அப்படித் துணிவது நல்லதல்ல' என்று தடுத்தான். ஆனால் நம் பெருமாட்டியார் மறுத்துவிட்டார். அதன்மேல் அவன் 'கடிகாரம் பணப்பை முதலியவைகளை இங்கேயே வைத்துவிட்டுப் போங்கள்' என்று வேண்டியும் அம்மையார் கேட்கவில்லை. 'ஐயா! உங்களுக்கு நமஸ்காரம். எனக்கும் எதுவும் பயமில்லை. என் பொருள் ஒன்றும் கெடாது' என்றே உறுதியாய்ச் சொன்னார். உடனே பெருமாட்டியார் அந்தப் பாவிகளின் கும்பலுக்கு நடுவே போய் நின்றார். பொறுமை, சித்த சுத்தி, அன்பு முதலிய எல்லாம் சேர்ந்து திகழ்ந்த உத்தமி தங்களுக்கு மத்தியில் நிற்பதைக் கண்டதும் அக்கொடியவர்களுக்குப் பிரமை தட்டிவிட்டது; ஒன்றும் பேசவேயில்லை. சிறிது பொறுத்துத் தெளிந்தவர்களாய் எல்லோரும் 'பணம்! பணம்!' என்று கத்தினார்கள்.

இதைக் கேட்க அம்மைக்கு முதலில் அச்சமே உண்டாயிற்று; இன்னது சொல்வது என்பதும் தோன்றவில்லை. ஆகவே அவர்



தம்மிடம் இருந்த வேதபுஸ்தகத்தைக் கையிலெடுத்து விரித்து, திராக்ஷத்தோட்டத் தலைவனுடைய கதையை எடுத்து வாசித்து அர்த்தம் சொல்லிப் பிரசங்கித்தார்.



இயல்பிலேயே அவருடைய குரல் குயிலின் குரல்போல் இருக்கும். அதில் அன்பும் அநுதாபமும் சேருமானால் என்ன சொல்வது! அவர் பேசிய அத்தனையையும் அப்பாவிகள் கண்ணும் கருத்துமாய் ஆசையோடு கேட்டார்கள். பிரசங்கத்தை முடித்துவிட்டு ப்ரை

பெருமாட்டியார் 'உங்களையும் உங்கள் துன்பத்தையும் பார்க்கையில் எனக்கு வெகு வருத்தமாய் இருக்கிறது. இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீக்க யாராவது ஏற்பாடு செய்வதானால் அது உங்களுக்குச் சர்வ சம்மதமாய் இருக்கும் அல்லவா?' என்றார். அதற்கு அவர்கள் எல்லோரும் 'அம்மா! எங்களை ஏனென்று கேட்பாரும் உண்டா?' என்று வருந்த நம் பிராட்டியார் தாம் துணையாக நிற்பது நிச்சயம் என்று தீர்மானமாகச் சொல்லி விடைபெற்றுப் புறப்பட்டு வந்துவிட்டார்.

மறுபடியும் அவர் அங்கே போனபோது நல்ல காற்றும் இல்லாதிருந்த குழந்தைகளுக்கு இரங்கி, அவர்களுடைய பெற்றோரின் சம்மதத்தின்பேரில் குழந்தைகளுக்கு ஒரு பாடசாலையை ஏற்படுத்தினார். சிறைச்சாலை அதிகாரிகள் சிறைச்சாலையின் ஒரு மூலையில் அதற்கு இடந்தந்தார்கள். இப்படிச் சிறுவர்களுக்கென்று ஏற்படுத்தியதில் பெரிய ஸ்திரீகளும் வந்துசேர அது வெகு பெரியதாயிற்று. அதை நடத்துவதில் கஷ்டம் அதிகமில்லாதிருக்கும்படி அவர்களில் ஒருத்தியைப் பாடஞ்சொல்ல நியமித்து ப்ரை அம்மாளும் தம் சிநேகிதர்கள் சிலரைச் சபைகூட்டி அவர்களை முறையாகத் தணிக்கை பார்க்கவும் ஏற்பாடு செய்யலானது.

குற்றவாளிகளும் குற்றங்களுக்குத் தகுந்தபடி வேறு வேறு இடம் பெற்றனர்; கள் குடித்தல், சூதாட்டம், சத்தியம்பண்ணல் முதலிய பழக்கங்கள் விலக்கப்பட்டன. பாடசாலைப் பரிபாலன ஸ்திரீகள் காலையில்போய் வேதம் வாசித்து ஆரம்பிப்பார். ப்ரை பெருமாட்டியாரும் போவதுண்டு. இப்படி ஒன்றரை வருஷகாலம் நடந்தது. அதற்குள்ளாகவே முன்னிருந்த முரட்டுத்தனம், கட்டுக் கடங்காமை முதலிய தீக்குணங்கள் எல்லாம் போய் எங்கே பார்த்தாலும் அமைதியும் ஒழுங்கும் நிறைய, பார்த்தவர்கள் கேட்டவர்கள் யாவரும் அதிசயிக்கத்தக்கபடி சிறந்த சீர்திருத்தம் அடைந்தது சிறைச்சாலை.

அதோடு நடந்துவந்த தொழிலும் அதிகமே. அதிலிருந்த ஸ்திரீகளும் குழந்தைகளும் சேர்ந்து தைத்துத் தீர்மானம் செய்த உடைகள் 20,000. திருட்டெல்லாம் அடியோடே நின்றுவிட்டது. குருமார்களும் அதிகாரிகளும் இதையறிந்து ப்ரை பெருமாட்டியாரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். ஆனால் ப்ரை அம்மைமட்டும் அப்புகழை விரும்பி இப்படிச் செய்தாரில்லை. லோகோபகாரம் என்பது ஒன்றே நோக்கம்.

இப்படி ப்ரை பெருமாட்டியாரின் நன்மை லண்டன் நகரத்திற்குமாத்திரம் கிடைத்தது என்றிருக்கவேண்டாம். இதையெல்லாம் தெரிந்து தெரிந்து லோகத்தின் வேறு வேறு பாகங்களிலும் இப்படியே செய்து லோகம் முழுமையும் சுபமடைந்தது. அவர் யாத்திரை



போன எந்தத் தேசத்திலும் இவரை எல்லாரும் கொண்டாடினார்கள். அரசர்கள் அநேகர் அவருக்கு விருந்து செய்ததுண்டு. போன இடங்களில் இவர் கூட்டி சபைகளுக்கு ராஜாத்திகளும் ராஜகுமாரத்திகளும் முக்கியஸ்தர்களாக அமைய அன்புகூர்ந்தார்கள்.

இப்படி ப்ரை பெருமாட்டியார் சிறைச்சாலையைச் சீர்திருத்தியதும், ஸ்திரீகளின் சங்கங்களை ஏற்படுத்தியதும், சிறைமீண்ட பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வீடுவாசல்கள் வாங்கித் தந்ததும் அல்லாமல் கல்வி கற்கமுடியாத ஊருக்குத் தூரத்திலிருந்தவர்களுக்கும் படிப்பு விருத்தியாகவேண்டிய பற்பல புஸ்தகசாலைகளை ஏற்படுத்தினார். அப்படி ஏற்பட்ட சாலைகளில் இருந்த புஸ்தகம் மொத்தத்தில் 26,568.

கடைசியாக மருத்துவிச்சிகள் கூட்டம் ஒன்றை ஏற்படுத்தினார். அக்கூட்டம் முதலில் 1840-ம் ௵ கூடியது. அப்போது ப்ளாரென்ஸ் நைட்டிங்கேலுக்கு இருபது வயசு. அவருக்கு இவர் அதுமுதல் உதவிவந்திருந்தார்; பின்னும் தம் ஜீவியகால முழுமையும் அதிலே கழிக்கலானார்.

இப்படி நெடுங்காலம் ப்ரை பெருமாட்டியார் ஒழிவின்றி, தூக்கத்திலும் விழிப்பிலும், சுகத்திலும் சுகவீனத்திலும், இரவிலும் பகலிலும் உழைத்துவந்ததால் தேகம் மிக மெலிந்து நோயுற்று, 1845-ம் ௵ அக்டோபர் ௴ 13௨ பரலோக பிராப்தியானார்.

ஆடை ஆபரணங்களை அகற்றிவிட்டு, படித்து, அறிவாளியாகி, நோயடைந்தவர்களையும் வருத்தமடைந்தவர்களையும் போய்ப் போய்ப் பார்த்து ஆதரித்து, பலருக்குப் பரோபகாரியாயிருந்த ப்ரை பெருமாட்டியாரைப் பார்த்து நாமும் பாடுபடுவோமாக.

'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.'
'ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு.'

'ஒருவன் தன் கடமையை நன்றாய்ச் செய்தானானால், அவன் அரசன் முன்னே நிற்பான்; அற்பன் முன்னே நில்லான்.'

## CHILDREN AND PAIN

## குழந்தைகளும் கஷ்டங்களும்

தாயானவள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு. தான் வளர்த்துவரும் ஸ்திரீகளும் புருஷர்களும் பின்னால் ஏதோ கஷ்டப்பட்டே தீரவேண்டும் என்பது ஒன்று; ஓர் அற்ப சங்கடத்துக்கும் அழுது வருத்தப்படும்படியாகக் குழந்தைகளைப் பழக்கி

விடுவது அவர்களுக்கு நன்மைசெய்வதாக ஏற்படாது என்பது மற்றொன்று. மெய்வருத்தம் என்றாலும் சரி, மனோவருத்தம் என்றாலும் சரி, அதனைத் தைரியமாய்த் தாங்கிச் சகிக்கும் நல்ல வழக்கம் சிறுவயசிலிருந்தே உண்டாக்கவேண்டும். இது தாயால்தான் ஆகவேண்டியிருக்கிறது என்ற விஷயம் தாயின் மனசில் பதிந்திருக்கவேண்டும். எந்தச் சின்னக் குழந்தைக்கும் கஷ்டத்தைத் துரும்பாய் மதிக்க வெகு லேசில் கற்பித்துவிடலாம். அப்படி அந்த வருத்தத்தை அது சகிப்பதிலும் முறையிடாமல் இருக்கும்படியும் செய்துவிடக்கூடும். இதைவிட்டு வருத்தம் வந்தபோது 'மூக்கால் அழுவது' ஒருவிதத்தில் பேடித்தனமாகும்.

வருத்தம் ஒன்றை அதன் போக்கிலேயே சாவதானமாயும் சகஜமாயும் எண்ணும் நல்ல காரியத்தை வெகு இளமனசிலும் பதிப்பித்துவிடலாம். தன்னை அடக்கித் தன் நிலையாய் நின்று தீர்ப்பதற்கு இது வெகு நல்ல சாதனம். இப்படிக்கெல்லாம் சொல்லிவந்ததிலிருந்து, குழந்தைகளின் வருத்தத்திற்குத் தாயானவள் தயாராய்த் தக்க உதவியும் அநுதாபமும் காட்டல் ஆகாது என்று சகோதரிகள் எண்ணிக்கொள்ளப்படாது. தாய் தயவும் காட்டவேண்டும். துயரமும் ஜீவியத்தின் ஓர் அம்சமாதலால் அத்துயரைத் தாங்கச்செய்யவும் வேண்டும். இரண்டும் இவளுடைய கடமைகளே. இப்படி அதைச் சகித்துக்கொள்வது வீரதீரங்களின் அடையாளங்களாம். சகிப்பதே ஜயித்ததுபோலாம்; ஆவி மாம்சத்தை வென்றதுதான் நாளடைவில் அந்தக் குழந்தையே, துன்பம் யார்க்கும் வரத்தக்கது; துன்பமடையாதவர் யாரும் இல்லை என்று திண்ணமாய்த் தெரிந்துகொள்ளும். 'இப்போது இந்த அற்ப வருத்தத்தைப் பொறுத்தால் இனிமேல் வரலாகும் பெருந் துன்பத்தைச் சுலபமாய்த் தாங்கிவிடலாம்' என்று குழந்தையிடம் தெரிவிக்கலாம்.

வருத்தங்கள் அநேகமாய்ச் சொற்ப நேரத்தியன, சீக்கிரம் நின்றுவிடும், மறந்துபோய்விடும், என்று இவை குழந்தையின் முன்னால் சதா இருக்கட்டும். நம்பிக்கையுள்ள நிலை வெகு நல்லது.

அதிக அவசியமாய் இருந்தால் ஒழிய ஒரு குழந்தையின் வருத்தத்தைச் சாதாரணமாய் எடுத்துப் பேசப்படாது நல்ல தாயாக இருப்பவள். அடிக்கடி அதன் துன்பத்தைப்பற்றிப் பேசுவதானது குழந்தை தனக்குத்தானே அநுதாபங் காட்டிக்கொள்ளும் பழக்கத்தை அதிகப்படுத்திக் கெடுத்தும் விடுகிறது. இது விருத்தியடைவதற்கு ஏற்ற வழியல்ல; விரோதமானது என்னலாம். குழந்தை தான் படும் பாட்டைத் தாய் அறிந்தால் அவளும் வருத்தமடைவளே என்று விசனித்து அதைத் தாங்க முயலும்படிக்கும், முணுமுணுக்காமல் கஷ்-



டத்தைச் சகிக்கவும், கஷ்டம் சீக்கிரம் தீர்ந்துவிடும், என்ற நம்பிக்கையும், இன்னும் இதுவிஷயமாய் வீரத்தனம் தோன்றும்படிக்கும் தாய் தன் குழந்தையைப் பழக்கவேண்டும்.

## CURE FOR COUGH OR SORE CHEST

## கைப்பாகம்.—இருமல் அல்லது மார்புவலி

சாதாரணமாய்க் கடையில் விற்கும் ஆழிவிரை (Linseed) கொஞ்சம் வாங்கி, அதைத் தண்ணீரில் நல்ல கெட்டிப் பாகுபதத்தில் வேகவைத்து, கம்பிச் சல்லடையில் வடித்து, குடிக்க ருசியாய் இருக்க வேண்டி அதோடு எலுமிச்சம்பழ ரசம், தேன், இந்த இரண்டையும் தாராளமாய்ச் சேர்த்து அடிக்கடி குடி; சுடச்சுட இருந்தால் வெகு சுகம்.

சுட்ட வெண்காயத்தைத் தேன், எண்ணெய், இவற்றோடு தின்பது விடா இருமலுக்கு வெகு நல்லது.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

மறுநாள் காலை ஜனங்கள் ஆற்றுக்கு ஸ்நானம் செய்யப்போவது கண்டு தானும் போய் ஆற்றிலே ஸ்நானம் செய்துவரும்படி வேதாபிமானியிடம் கீதமணி உத்தரவுபெற்றுக் குளிக்கும்படி ஆற்றுக்குப் போனான். அங்கே கிறிஸ்தவர்களும், பிராமணரும், இந்துக்களுமான அநந்தம்பேர் ஸ்நானம் செய்வதைக் கண்டு களிப்புற்று, இவனும் ஆற்றிலே இறங்கி, வஸ்திரத்தைத் துவைத்துப் பிழிந்து, படித்துறையொன்றில் வைத்துவிட்டுத் தண்ணீரில் விழுந்து ஸ்நானம்செய்தான். அப்போது அங்குள்ளவரில் இந்துக்களான சிலர் ஸ்நானம் செய்தபின்னர் கைகளைக் குவித்து, கடவுளைத் தொழுது சுற்றிச் சுற்றி வந்து, சூரிய நமஸ்காரம் செய்தபின்னர், தம் வீட்டுக்கு ஏகினதையும், பெண்களில் மங்கிலியதாரிகள் மஞ்சள் பூசும்போது கடவுளைத் தொழுது பூசிக்கொள்வதையும் இவன் கவனித்தான்.

பின்னும் கிறிஸ்தவர்களில் சிலர் துணிகளைத் துவைப்பதும், சிலர் அழுக்கு வஸ்திரத்தைக் களைந்துவிட்டுக் குளித்துத் திரும்பவும் அந்த அழுக்கு வஸ்திரங்களையே உடுத்திக்கொண்டுபோகவும் கண்டு



"அப்பா! 'காசிக்குப்போயும் கருமம் தொலையவில்லை' என்றாற்போல ஆற்றில் குளித்தும் உன் அழுக்கு நீங்காமல் போகிறாயே" என்றதற்கு, 'ஆ! நான் தேய்த்துக் குளித்துச் சுத்தமாயிருக்கிறேனே; துணிதானே அழுக்கு, பாவாயில்லை' என்றோடிப்போய்விட்டான்.

அப்போ கீதமணி 'சுத்தம் உடலுக்குமாத்திரமா? வஸ்திரத்துக்கு அவசியமில்லையாக்கும். கிறிஸ்துவின் ரத்தத்தால் கழுவப்பட்ட சிலர்,



அசுத்தமான கிரியைகளை நடப்பித்துக்கொண்டு கிறிஸ்தவர்கள் என்ற பேர் தங்களுக்கு இருப்பது போதும், என்பதுபோல் இருக்கிறதே' என்று நீராடிக்கொண்டு துவைத்த வஸ்திரத்தையும் உடுத்திக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

வரும் வழியில் சில பிராமண ஸ்திரீகள் தண்ணீர்க்குடம் சுமந்துகொண்டு போகும்போது வேதபாராயணம் பண்ணி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொடுத்துக்கொண்டு போவதையும் கவனித்தான். அப்போது வேதத்திலே மோசே எழுதிய ஐந்தாம் ஆகமமாகிய உபாகமம் 6. 7-ல் சொல்லியபடி நாம் செய்யாமலிருக்க இந்த இந்துஸ்திரீகள் இப்படி வேதபாராயணம் பண்ணிக்கொண்டு போகிறார்களே! என்று நினைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான்.

அப்போ வேதாபிமானி, 'அப்பா கீதா! நீ எப்போதும் ஆறு குளங்களில் குளித்தவனல்லவே நமது ஊரிலே கிணறுகளும், தண்ணீர்க் குழாய்களும் தானே உண்டு. உனக்கு ஆற்றிலே குளிக்கக் கிடைத்தது சந்தோஷமாயிருக்கிறதல்லவா?' என்றார்.

அதற்குக் கீதன் 'ஐயா! இன்று இந்துக்களுக்கு ஒரு விசேஷ மாம். எத்தனையோ திரளான ஜனங்கள் நீராட வந்திருந்தார்கள். எல்லாரும் அந்த இடத்திலேயே நின்றுகொண்டு பூசைசெய்து, நமஸ்காரம் பண்ணித்தான் திரும்புகிறார்கள். ஆனால் கிறிஸ்தவரில் யாராவது, அவ்விடத்தில் நின்று தேவனைத் துதிக்கக் காணோம். மெய்யான கடவுளை வணங்குபவர் விக்கிரகபக்திக்காரருக்கு முன் மாதிரி காண்பிக்கவேண்டியிருக்க, இவர்கள் ஏன் அப்படிச் செய்கிறதில்லை? என்பது எனக்கு ஆச்சரியத்தையும் வெட்கத்தையும் கொடுத்ததினால், நானும் நின்றுகொண்டு, 'பரிசுத்தமுள்ள கர்த்தாவே! நீர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நானும் ஆத்துமத்திலும், சரீரத்திலும் பரிசுத்தமாயிருக்கக் காத்தருளும். ஜலத்தினால் என் சரீர அழுக்கு நீங்கினதுபோல் உமது நேசகுமாரனுடைய திருரத்தத்தினால், என் இருதயக்கறை நீங்கக் கழுவி என்னைச் சுத்திகரித்தருளும். உம்முடைய நாமத்தைத் தரித்திருக்கிற என்னை என் கிரியை அசுசிப்படாவண்ணம் உமது நீதியின் வஸ்திரத்தால் அலங்கரித்தருளும்' என்று ஜெபித்துவிட்டு வந்தேன்' என்றான்.

அப்போது வேதாபிமானி 'கீதா! மெத்த சந்தோஷம்! உனக்கு இவ்வளவு புத்தியையும் பக்தியையும் தந்த கடவுளைத் துதிக்கிறேன். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்ட ஏசுநாதரின் திருச்சித்தம் இதுதான். நாம் புசித்தாலும், குடித்தாலும், வேலைசெய்தாலும், படுத்தாலும், எழுந்தாலும், பகலிலும், இரவிலும் ஸ்நானம் செய்யும்போதும், அவரைத் துதிக்கவும் ஜெபிக்கவும், கட-

162421
JL
TSS m211, M86
M86·28—29

மைப்பட்டிருக்கிறோமென்பதை ஒருபோதும் மறந்துபோகக்கூடாது. மகமது மார்க்கத்தாரும் எந்த இடத்திலிருந்தாலும் ஜெபவேளையாகி விட்டால், உடனே யாரிருந்தாலும் சரி, தாங்களிருக்கும் இடத்திலேயே முழங்காலூன்றி ஜெபிப்பார்கள். அப்படியே நாமும் எந்த இடத்திலேயும் ஜெபிக்கத் தவறக்கூடாது' என்று சொல்லிப் பிறகு அந்த ஊரிலுள்ள ஐயரவர்களைக் கண்டுபேசும்படி போகவேணும், என்று வேதாபிமானியும், சீதனும் புறப்பட்டார்கள்.

அப்படியே ஐயரவர்கள் பங்களாவுக்குப் போகும்போது, கம்பவுண்டு வாசலுக்கு உட்பக்கத்திலே தோட்டக்காரன் கயிறுபிடித்து அளந்து தோட்டத்திலுள்ள புற்கள் செடிகொடிகளை வெட்டிச் சரிபண்ணிக்கொண்டிருந்தான். அப்போது சீதமணி தோட்டக்காரனைப் பார்த்து 'இப்படி எத்தனைநாளுக் கொருமுறை வெட்டுவா?' யென 'ஐயா! மாசாமாசம் வெட்டிச் சரிபண்ணிக்கொண்டேயிருக்கவேணும், இல்லாவிட்டால் செடிகள், புல்பூண்டுகள் முளைத்து துரை போகிற பாதையைக்கூட மறைத்துவிடும்' என்றான். அப்போது சீதன் 'ஏன் நீ நன்றாய் வெட்டியிருந்தால் அவ்வளவு சீக்கிரம் வளர்ந்து, மறைத்துவிடாது' என்றான்.

'ஐயா! நாங்கள் மேலேதானே செதுக்கிக்கொண்டு வெட்டிப் போடுவோம். அப்போது பார்வைக்கு ஒன்றுமில்லாமல் சுத்தமாய்த் தானிருக்கும். மூன்றாம் நாள் முளைகிளம்பி வளர்ந்துவிடும்' என்றான். அப்போது சீதமணி 'ஆம், நீ சொன்னது சரியே. அடியில் மறைந்திருக்கும் வேர் இப்படி முளைத்து வளருகிறது' என்று சொல்லிக்கொண்டு நடந்துபோனான்.

அப்போது வேதாபிமானி, 'சீதா! நீ தோட்டக்காரனோடு சம்பாஷித்தாயே. அவன் எத்தனைதரம் வெட்டிச் சரிபண்ணினாலும் திரும்பத் திரும்பச் செடிகள் வளருகிறதென்று சொன்னானே. அதுபோலத்தான் நாம் பூலோகத்திலிருக்குமளவும், நம்முடைய இருதயத்திலிருந்து பாவவேர் அற்றுப்போகாததினாலேதான் நாம் திரும்பத் திரும்பப் பாவத்துக்குள்ளாக ஏதுவாயிருக்கிறோம். நல்ல எழுப்புதலான பிரசங்கங்களைக் கேட்கும்போதும், ராப்போசன பந்தியில் சேரும்போதும், கண்ணீரோடு தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆனாலும் நம்மிடத்தில் பழைய சென்மப் பாவகுணம் அடிக்கடி தலைகாட்டி மோட்சத்துக்குப் போகும் வழியை அடைக்கப் பார்க்கிறது. ஆதலால் நாம் ஒருவிசை பாவமன்னிப்பு அடைந்தது போதுமென்றிராமல், நம்மில் பாவத்தின் வேர் தலைகாட்டுகிறதை மனச்சாட்சியின்படி கவனித்து, உடனே தறித்து எறியக் கவனமாயிருக்கவேணும்' என்றார்.



அதுகேட்டு சீதன், 'ஐயா தேவகிருபையைத் தேட நீ போராடிக்கொண்டிரு' என்ற ஞானப்பாட்டில் 'ஜீவனுள்ள நாள் மட்டாக மோசங்கள் இருக்கிறது. திகிலும் பயமுமாக உன் ரட்சிப்பைக் காத்திரு' என்று பிரார்த்தனைக்காரர் சொல்வதுபோல, நாமும் தினந்தோறும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்' என்றான். இதற்குள்ளாக இருவரும் ஐயர் வீடுவந்து சேர்ந்தார்கள்.



ஐயரவர்களைக் கண்டதும் சலாம் செய்தார்கள். ஐயரவர்களும் வரவேற்று, வேதாபிமானியைக் கண்டு, இவரைப் பார்த்தவுடன் வைதீகமாயும், விருத்தாப்பியமாயும், அறிவாளியாயும் தோன்றினதால் மரியாதைசெய்து உட்காரும்படி நாற்காலி கொடுத்து சம்பாஷிக்கத் தொடங்கினர்.

'நீர் எந்த ஊர்? எந்த மிஷனைச் சேர்ந்தவர்?' என்றார்.

இவர் 'எங்களுக்கு அருள்நகரத்துக்கடுத்த திருப்பார்தலூர் யேசுவின் சபையைச் சேர்ந்தவர்கள். தங்களைக் கண்டு பேசிப் போகலாமென்று வந்தோம்' என்றார்.

'சரி! மெத்த சந்தோஷம். நான் இப்போது சபை சந்திக்கப் போகிற நேரம், சாயங்காலம் போய்க்கொள்ளலாமென்று நினைக்கிறேன்' என்றார்.

அப்போது வேதாபிமானி 'நானும் உங்களைப் பார்த்ததும் எங்கேயோ போகப் புறப்பட்டிருக்கிறீர்கள் என்று அறிந்துகொண்டேன். ஆனதால் மனுஷருக்காக அவசரமின்றி தெய்வ ஊழியத்தை நிறுத்த

வேண்டாம். நாங்களும் உங்கள்கூட வருகிறோமையா. எனக்கும் இந்தச் சபைகளைப் பார்க்க விருப்பம். ஆயினும் புது இடமாதலால் தங்களோடு வந்தால் எங்களுக்கும் நல்லதுதான்' என்றார்.

(இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.

## ANSWER TO SCRIPTURE PUZZLE

### விடை

1. விக்கிரகங்கள்
2. சுவிசேஷம்
3. வா
4. சமோத்திராக்கே
5. எப்பிராயீம்

விசுவாசம்

Right Answer received from P. J. Deva Raju,
Washermanpet.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1913 ஞு ஜூன்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஞா. | 2 சாமு. | 19. | 16—30 | 12 வி. | 2 சாமு. | 24. | 1—15 | 22 ஞா. | யாக். | 5. | 12—20 |
| 2 தி. | ,, | 19. | 31—43 | 13 வெ. | ,, | 24. | 16—25 | 23 தி. | 1 யோவா. | 1. | |
| 3 செ. | ,, | 20. | 1—12 | 14 ச. | யாக். | 1. | 1—11 | 24 செ. | ,, | 2. | 1—14 |
| 4 பு. | ,, | 20. | 13—26 | 15 ஞா. | ,, | 1. | 12—27 | 25 பு. | ,, | 2. | 15—29 |
| 5 வி. | ,, | 21. | 1—14 | 16 தி. | ,, | 2. | 1—13 | 26 வி. | ,, | 3. | 1—12 |
| 6 வெ. | ,, | 22. | 1—13 | 17 செ. | ,, | 2. | 14—26 | 27 வெ. | ,, | 3. | 13—24 |
| 7 ச. | ,, | 22. | 14—28 | 18 பு. | ,, | 3. | 1—12 | 28 ச. | ,, | 4. | 1—14 |
| 8 ஞா. | ,, | 22. | 29—40 | 19 வி. | ,, | 3. | 13-18; | 29 ஞா. | ,, | 4. | 15-21; |
| 9 தி. | ,, | 22. | 41—51 | | | 4. | 1— 4 | | | 5. | 1— 8 |
| 10 செ. | ,, | 23. | 1—12 | 20 வெ. | ,, | 4. | 5—17 | 30 தி. | ,, | 5. | 9—21 |
| 11 பு. | ,, | 23. | 13—23 | 21 ச. | ,, | 5. | 1—11 | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 JUL 1913
MADRAS

# மாதர் போதினி

No. 187 ஜூலை 1913 No. 7



## FREDERICK N. CHARRINGTON, THE MAN WHO RENOUNCED £ 1,250,000

### 18,750,000 ரூபாயைத் துறந்தவர் சரித்திரம்

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னதாக கானான் தேசத்தில் ஒரு வாலிபன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் வந்து இரட்சிப்பின் வழியைப்பற்றிச் சில கேள்விகளைக் கேட்டான். ஆனால் இயேசுவின் உத்தரவு கேட்டு 'அவன் மிகுந்த ஐசுவரியமுள்ளவனாயிருந்தபடியினால் ... மிகுந்த துக்கத்தோடே போய்விட்டான்.'

சுமார் 40 வருஷங்களுக்கு முன்னதாக லண்டன் பட்டணத்திலே F. N. சாரிங்டன் என்னும் இன்னொரு ஐசுவரியமுள்ள வாலிபன்

இயேசுவின் சத்தத்தைக் கேட்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து 18,750,000 ரூபாயை விட்டுவிட்டு அவருடைய சீஷரானார்.

இந்தக் கோடீச்வரனுடைய சரித்திரம் கீழ் லண்டனிலுள்ள அநேக ஆயிரம் ஏழைகளுக்கு நன்றாகத் தெரியும். அவரை 'சாராய வேலையை விட்டுவிட்ட துரை' என்கிறார்கள்.

இங்கிலாந்திலும் மற்றத் தேசங்களிலும் சாராயம், பிராண்டி, பீர் முதலியவைகளைச் செய்யும் பெரிய சாலைகள் உண்டு. ஒரே ஒரு சாலையிலிருந்து ஆயிரம் ஊரிலுள்ள கடைகளுக்குச் சாராயம் அனுப்பி நல்ல வியாபாரம் செய்வார்கள். இந்தச் சாலைகளைக் கட்டவும் ஸ்தாபிக்கவும் அதிக செல்வம் அவசியமானாலும் இந்த வியாபாரத்தில், கிடைக்கும் லாபத்துக்கு அளவு கிடையாது. பஞ்சகாலத்திலும் மற்ற வியாபாரிகள் நஷ்டமடைந்து தங்கள் கைம்முதல் அத்தனையையும் இழந்துவிட்டாலும் இந்த வியாபாரத்தில் ஒரு குறைவும் ஏற்படாது.

இந்தக் கோடீச்வரர் பெயர்போன ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அந்தக் குடும்பத்தார் எல்லாரும் பணக்காரர்; எல்லாரும் இந்த வியாபாரத்தில் பங்கு பெற்றவர்கள். அவருக்கும் வயசு வந்தபோது இந்த வியாபாரத்தையே நடத்தலானார். ஆனாலும் கிறிஸ்துவுக்காக ஏதோ ஒரு ஊழியமும் செய்யவேண்டும் என்ற ஆசையினால் அவர் ஏழைப் பையன்களுக்காக ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து அதில் தாமே ஒவ்வொருநாளும் சாயந்தரநேரத்தில் போய் அவர்களுக்குப் பாடங் கற்றுக்கொடுத்து விசேஷமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

ஒருநாள், அவர் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போன சமயத்தில், அவர் ஜீவியம் முழுவதையும் மாற்றின ஒரு சங்கதி நடந்தது. அதைப் பின்வருமாறு அவரே வெகு நன்றாய் வர்ணித்திருக்கிறார். நான் ஆபீசைவிட்டுக் கீழ்லண்டனுக்குப் போன வழியிலே ஒரு கள்ளுக்கடையைக் கண்டேன்; நான் அதற்குச் சமீபத்தில் போனபோது ஒரு ஏழை ஸ்திரீயையும், அவளது இரண்டு நிர்ப்பந்தமான குழந்தைகளையும் பார்த்தேன். அவள், கள்ளுக்கடையின் கதவு திறந்து உள்ளே குடித்துக்கொண்டிருந்த தன் புருஷனைக் கூப்பிட்டு 'எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள். பிள்ளைகளுக்குச் சாப்பிட ஒன்றும் இல்லாமல் நிரம்ப அழுகிறார்கள்' என்று கேட்டாள். இந்த வார்த்தைகளைக் கேட்ட புருஷன் வெளியே வந்தான். அவன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. சற்றுநேரம் அந்த ஏழையைப் பார்த்து, பின்பு பக்கத்தில் இருந்த ஜலதாரையில் அவள் விழும்படி ஒரு தள்ளுத் தள்ளிவிட்டுத் திரும்பவும் உள்ளேபோய்க் கதவைச் சாத்திக்கொண்டான். நான் கோபம் நிறைந்தவனாய் நிற்கும்போது தற்



செயலாய் அந்தக் கள்ளுக்கடை எஜமானுடைய பெயர் தங்கத்தினாலே பெரிய எழுத்தில்

CHARRINGTON

என்று கதவில் இருந்ததைப் பார்த்தேன்.

நான்தான் அந்தப் பாவத்துக்குக் காரணம்! நான்தான் இப்பேர்ப்பட்டவர்களுடைய பணத்தை வாங்கிக் கோடீச்வரன் ஆயிருக்கிறவன்! இன்னும் எத்தனையோ கடைக்காரர் என்னிடத்திலிருந்து கள்ளுவாங்கி, கடைவைத்து மனுஷரைக் கெடுக்கிறார்கள்! என்மூலமாக அளவில்லாத தரித்திரமும், விசனமும், அசுத்தமும் அதிகரிக்கின்றன! இனி இந்தப் பாவத்தின் பாரத்தை என்னால் சுமக்கமுடியாது! இந்த விதமாக நான் அதிக வருத்தப்பட்டு, யோசித்து அந்தத் துஷ்டனைப் பற்றி எனக்குள்ளே சொன்னது என்னவென்றால் 'அடே! பாவி! உன் ஏழைப் பெண்சாதியை அடித்த அந்த அடியினாலே என்னையும் அடித்து, அந்த அசுத்தமான வியாபாரத்திலிருந்து என்னைத் தள்ளிவிட்டாய்!'

இவர் இப்படித் தீர்மானம் பண்ணிக்கொண்டு சாராய வியாபாரத்தை விட்டுவிட்ட தருணத்தில் சிநேகிதர் குடும்பத்தார் எல்லாரும் அநேக தடைகளைச் சொல்லி அவரை மிகவும் வருத்தப்படுத்தி மனசை மாற்றப் பிரயாசப்பட்டார்கள். அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. ஆனாலும் அவர் 'இந்த வேலை பிசாசின் வேலைதான்; அதிலே நான் பங்குபெறமாட்டேன்' என்கிற பிடிவாதத்தோடு அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, 18,750,000 ரூபாயைத் தள்ளிவிட்டு இயேசுகிறிஸ்துவின்நிமித்தம் ஏழையானார்.

அவர் சீக்கிரத்தில் ஏழைகளுக்காக அநேக காரியங்களைச் செய்யத் தொடங்கினார். பையன்களுக்காக இன்னொரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து இன்னொரு துரையின் உதவியினால் அந்த வேலையை வாய்க்கச் செய்தார். அவர் நித்தம் அந்தப் பையன்களுக்குப் பிரசங்கித்து அவர்கள் மனந்திரும்பும்படி பிரயாசப்பட்டார். கொஞ்சநாளானபின்பு பெண்பிள்ளைகளுக்காக இன்னொரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். அப்படியே வெவ்வேறு இடங்களில் மிஷன் வேலையைத் தொடங்கிப் பெரிய இடங்களை வாடகைக்கு வாங்கினார். கடைசியாக 1886-ம் வரு அந்த வேலைக்கென்று நிலத்தை வாங்கிப் பெரிய சாலைகளைக் கட்டினார். மத்தியிலிருக்கிற பெரிய சாலைக்கு 'பெருங்கூடம்' ('Great Assembly Hall') என்று பெயர் வழங்குகிறது.

அவர் இன்னும் அநேகவிதமான வேலைகளைச் செய்கிறார். சில பிரபுக்களின் உதவியினால் அவர் ஓசியா என்னும் தீவை வாங்கி

அங்கே குடிகாரருக்காக வீடுகளைக் கட்டி அவர்கள் குணப்படும்படியாக அநேக ஒழுங்குகள் செய்திருக்கிறார்.

இப்படியே குடியினால் பாவிகளான ஸ்திரீகளுக்கும், பட்டினியால் செத்துப்போகிறவர்களுக்கும், இன்னும் அநேகவிதமான ஏழைகளுக்கும் அவரும், அவர் சிநேகிதர் அநேகம் பெயரும் உதவிசெய்ய வகைதேடுகிறார்கள்.

தற்காலத்தில் அவர் லண்டன் பட்டணத்தில் பட்டினியினாலும் குளிரினாலும் செத்துப்போகிறவர்களுக்கு உதவிசெய்ய அநேக ஏற்பாடுகள் செய்கிறார். நமது சக்கரவர்த்தியும் இந்த வேலையைக் கவனித்து பணஉதவி செய்துவருகிறார். 1910, 1911, 1912 இம்மூன்று வருஷமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் அவருடைய சாலைகளில், இந்த ஏழைகளில் 700 பெயர்களுக்கு அவர் சாப்பாடு கொடுத்திருக்கிறார். ஆனாலும் அவர் அவர்களுடைய சரீரக்குறைவுகளைப் பார்க்கிறதோடுகூட ஆத்துமக்குறைவுகளையும் கவனிக்கிறார். அவர் சாலைகளில் அநேகம் பெயர் குணப்பட்டுப் பரிசுத்த ஆவியின் சகாயத்தினால் தங்கள் பாவங்களைவிட்டுப் புதிய சிருஷ்டிகளானார்கள்.

போனவருஷம் ஓர் ஏழை ஸ்திரீ ஆச்சரியமான விதமாய்க் குணப்பட்டாள். அவளுடைய புருஷன் நல்ல நிலைமையில் இருந்தவன். அவன் இறந்தபின்பு அவள் வரவரக் குடிகாரியாகி, அதிக பரிதாபமான நிலைமையில் இருந்தாள். ஒருநாள் பிச்சை கேட்க ஒரு மிஷன் சாலைக்கு வந்தாள். அவள் அங்கே சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது ஒருவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பிக் குடியைப் பூராவாக விட்டுவிடத் தீர்மானித்தாள். அடுத்த நாள் அவள் மறுபடியும் வந்து சுவிசேஷத்தைக் கேட்டு, தன் பழைய ஜீவியத்தை முழுவதும் விட்டுவிட்டுக் கிறிஸ்தவளானாள்.

கொஞ்சநாளுக்குப்பிற்பாடு நார்விச் (Norwich) என்கிற ஊரிலுள்ள ஒரு கூலியாள் பின்வருகிற கடுதாசியை எழுதிச் சாரிங்டன் துரையிடம் அனுப்பினான்.

'நான் உங்களுக்கு நல்ல செய்தியை அறிவிக்கிறேன். சில நாளுக்குமுந்தி, ஞாயிற்றுக்கிழமை, நான் உங்கள் சாலையைப் பார்த்தேன். அங்கே பிரசங்கத்தைக் கேட்டு, நான் பெரிய பாவி என்பதை உணர்ந்து திரும்பத் திங்கட்கிழமை வந்தேன். அன்றைக்கு ஒரு துரை என்னோடு பேசி, இயேசுகிறிஸ்து எல்லாப் பாவங்களையும் நீக்கக்கூடியவர் என்று எனக்குச் சொல்லி, இரட்சிப்பின் வழியைக் காண்பித்தார். நான் சொந்த ஊருக்குத் திரும்பிப்போக 112 மைல் தூரம் கால்நடையாகப்போகவேண்டும் என்று சொன்னபோது அதிக பட்சமாய்ப் பேசினார். அன்றைக்குப் பரிசுத்த ஆவியின் சகாயத்தினாலே நான் என்னைக் கடவுளிடத்தில் ஒப்புவித்தேன். அவர் என்



பாவங்களை மன்னித்தார். அவருக்கு ஸ்தோத்திரம். இப்பொழுது என் வருத்தங்கள் நீங்கிவிட்டன. இயேசுகிறிஸ்து எனக்கு உதவி செய்கிறார்.

நீங்கள் பேசும்போது ஜனங்கள் குடியை விட்டுவிடும்படி சொல்லுங்கள். குடியினாலேயே காவலில் வைக்கப்பட்டேன்; பட்டினியால் வருத்தப்பட்டேன்.

கடவுள் உங்களையும் உங்கள் வேலையையும் ஆசீர்வதிப்பாராக. அவருடைய ராஜ்யத்துக்காக ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாக நானும் பிரயாசப்படுகிறேன்.'

இயேசுநாதர் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறவில்லையா? கிறிஸ்துவினிமித்தம் சாரிங்டன் 'தம்முடைய ஐசுவரியத்தை எல்லாம் விட்டுவிட்டு, துன்பங்களோடே நூறத்தனையாகப்' பலன் அடைந்திருக்கிறார்.

## 'BEWARE OF EXPLOSIONS'

## வெடிப்பைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

நிங்பூ என்னும் நகரத்தில் கோடைகாலத்தில் ஒருநாள் மத்தியானம் வெகு உஷ்ணமாயிருந்தது. அந்த நகரத்தின் மேல்பக்கத்திலுள்ள ஒரு சிறு ஏரியின் ஜலம் அமைதியாயிருந்தது. அச்சமயத்தில் அங்கிருந்த சில சீனப்பையன்களின் மனதை அந்த ஏரி கவர்ந்தது. அவர்கள் அக்குளிர்ச்சியும் சுத்தமுமான ஜலத்தில் விளையாடி சந்தோஷமடைந்தனர்.

திடீரென்று அங்கிருந்த பையன்களில் ஒருவன் அங்கே சகதியில் புதைந்துகிடந்த ஏதோ ஒரு கனமான வஸ்துவின்மேல் தன் காலை வைத்தான். அந்தப் பொருளை அவன் வெளியே கொண்டுவந்தான். அவனோடிருந்த மற்றப் பையன்கள் அவ்விநோதமான வஸ்துவைச் சூழ நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். அது கனமாயும் உருண்டையாயுமிருந்தாலும் கல்லல்ல. அவர்களில் ஒருவன் அங்கேயிருந்த அச்சிறிய கூட்டத்தாருக்கு ஒவ்வொரு நிமிஷமும் அப்பொருள் மரணத்தைக் காட்டுகிறது என்று எச்சரித்தான்.

அவ்வழியாய்ச் சென்றவர்கள் அவ்விடத்திற்கு வந்து அப்பொருளை ஆராய்ந்து பார்த்தார்கள்; ஆனால் அது என்ன பொருள் என்று அவர்களால் சொல்லமுடியவில்லை. புத்திசாலியான ஒரு மனுஷன் அவ்விநோதமான பொருளைத் தன் கையால் எடுத்தான். அது இன்னும் ஈரமாயிருந்தது. மேலும் அவன் நினைத்ததைவிட அது மிகவும் கனமாயிருந்ததாகையால் அவன் அதை எடுத்தபொழுது அது



அவனுடைய கைகளிலிருந்து நழுவி அவன் கால்களுக்குக் கீழே யிருந்த கல்லுகளின்மேல் பலமாய் விழுந்தது.

அடுத்த நிமிஷம் அங்கே ஒரு பெரிய வெடியதிர்ச்சி உண்டா யிற்று. அழுகையின் சத்தங்கள் கோடைகாலத்தில் ஆகாயத்தின் வழி



யாய்ப் பரவியது; ஏனென்றால் மூன்று வருஷத்திற்குமுன் ஜெனரல் கார்டன் என்னப்பட்டவர் சதா ஜெயமுள்ள சேனை என்றழைக்கப் பட்ட பட்டாளத்தோடு சீனு தேசத்தில் நடந்துகொண்டிருந்த கலகத்தை யமர்த்தி ஜெயித்த சண்டைகாலத்தில் தப்பிய அந்த உயிருள்ள பீரங்கிக்குண்டு அக்காலம்முதல் அவ்வேரியின் ஜலத்தின் கீழே கிடந்தது.

அந்தப் பீரங்கிக்குண்டால் அந்த அமைதலான கோடைகாலத்தின் மத்தியானம் முடியுமுன்னே ஏழுபேர் அபாயகரமாய்க் காயப் பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

நம்மைச் சூழ அநேக காரியங்கள் தீமையற்றவிதமாய் அப்பீரங் கிக்குண்டு மரணத்தையும் நாசத்தையும் வருவித்ததுபோல் நமது கண் ணுக்கு மறைந்திருக்கின்றன. ஒருவேளை அது விரும்பப்படத்தக்க சிநேகிதனாயிருக்கலாம். அல்லது நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிற ஒரு கெட்ட வழக்கமாயிருக்கலாம். அல்லது ஒருவேளை சந்தோஷங்களை உண்டுபண்ணுகிற ஒரு புஸ்தகமாயிருக்கலாம். உன்னுடைய சோதனை என்னவென்று கடவுளுக்குத் தான் தெரியும். நான் அதை என்ன வென்று சொல்லமுடியாது. ஆனால் அது எதுவாயிருந்தாலும் சரி, பரிசுத்த ஆவியின் சத்தத்துக்குச் செவிகொடு. அவர் அடிக்கடி உனக்கு ஞாபகப்படுத்துகிறது என்னவெனில் 'மாம்ச சிந்தையோ மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.' (ரோ. 6–8·)

## SCRIPTURE PUZZLE. TREES AND PLANTS

## வேதத்தில் வரும் தாவரங்கள்

1. பிரதான ஆசாரியனுடைய அங்கியின் ஓரத்தில் எந்தப் பழத்தின் மாதிரி சித்திரத்தையலில் செய்யப்பட்டிருந்தது?

2. ஓசியா தீர்க்கதரிசி இஸ்ரவேலருடைய பொல்லாத நியாயத் தீர்ப்புகளை எந்தத் தாவரத்துக்கு ஒப்பிடுகிறான்?

3. வனாந்தரத்திலே முறமுறுத்த இஸ்ரவேலர் ஆசைப்பட்ட எகிப்து தேசத்துக் காய்கள் எவை?

4. சங்கீதக்காரன் மனுஷருடைய நாட்களை எந்தத் தாவரத் துக்கு ஒப்பிடுகிறான்?

5. தாவீது பெலிஸ்தியரைத் தாக்க அடையாளமாகக் காட்டி யிருந்தது எந்தச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சல்?

6. கடவுளுடைய ஆசீர்வாதத்தினால் யாக்கோபின் சந்ததியார்கள் எந்தச் செடியைப்போல வளருவார்கள் என்று ஏசாயாவில் சொல்லி யிருக்கிறது?

## THE ILL TREATMENT OF ANIMALS

## பிராணிகளை ஹிம்சிக்காதே

ஒருவிதத்தில் பார்த்தால் ஹிந்துக்கள் பிராணிகளை வெகு பட்சமாகப் பாதுகாக்கிறவர்களாகவே காணும். அவர்கள் செவ்வாய் வெள்ளி இந்தக் கிழமைகளில் தங்கள் வீட்டுக் கதவு நிலைகளுக்கு இடுவதுபோலவே, தங்கள் பசுக்களுக்கும் மஞ்சள் குங்குமம் இடுகிறார்கள். இதனால் இவற்றை இவர்கள் பூஜிக்கிறார்கள் என்னலாம். மாட்டுப் பொங்கல் வேறே இருக்கிறது; குதிரைக்குப் பூஜைபோடும் சுபதினமும் இருந்துகொண்டிருக்கிறது. இப்படிக்கெல்லாம் இருந்தும், ‘பிராணிகளை ஹிம்சிக்காதே’ என்ற நல்ல பாடத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டிய அவசியம் பலவிதங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. இது விஷயமாய்ப் பிராணிகளை நேசிக்கும் நல்லவர் பலர்க்கு வெகு விசனம். இந்த வருத்தத்திற்குக் காரணம் காண வெகுதூரம் தேடித் திரியவேண்டியதில்லை. சாதாரண வீதி ஒன்றில் கொஞ்சநேரம் நின்று கவனித்தால் போதும். நமக்குத் தக்க உதவி புரியும் பிராணிகள் படும் பாடு நல்லவருடைய மனதைக் கரைத்து நீராக்கி அதைக் கண்ணின்வழியாக வடிக்கும்.

கால் நொண்டி அடிமேல் அடி தின்று அழுதழுது அசைந்தசைந்து நடக்கும் எருது கட்டிய வண்டியை வழியில் கண்டதில்லையா? கழுத்தில் புண்வலி அதிகரிக்கும் என்று வண்டியின் நுகத்தடியைத் திமிலண்டையிலோ கொம்பண்டையிலோ தள்ளிவைத்துக்கொண்டு புத்திசாலித்தனமாய் ஓடி ஒழிக்கும் காளைகளைத் தான் கண்டதில்லையா? மாடு மந்தாசியானது என்பதை அறிந்து, சாட்டைக்குச்சியின் நுனியில் சன்ன இரும்புமுள் பதித்துக்கொண்டு அதனால் வாலங்கொட்டை மூக்கில் குத்திக் குத்திக் காயமாய் இருக்கும் இடத்திலேயே திரும்பவும் திரும்பவும் இடித்திடித்துக் காயம் பலப்பட ஈயும் அதிகமாய் மொய்க்க மொய்க்க ஓட்டும் யாட்டைக் காண்பது வெகு சஹஜம்! சம்பள வண்டிக்காரன் தன் வசம்விட்ட ரிஷபம் அடியுண்டு தோலில் தடிப்பு அல்லது வேறு அடையாளம் ஏற்பட்டால், எஜமான் தன்னைத் தண்டிப்பான் என்று பயந்து, அந்த வாயில்லாப் பிராணி ஓடப் பின்வாங்கினால் பையன் கீழே யிறங்கி, முழங்கையால் முக்கி முக்கி முதுகில் ஊன்றி யூன்றிக் குத்துவதை அறியாதவர் அருமைதான்! சத்தமிட்டு மிரட்டியாவது, சாட்டைவாரினால் அடித்தோட்டியாவது, வண்டியைவிட வெட்கிப் பெரிய மனுஷர்போல் இருப்பவரும் தம்முடைய எருதின் வாலை முறுக்கி முறுக்கி முறித்துவிடுவது சர்வ சாதாரணம்!



இனி போலீஸுக்குப் பயந்து குதிரையை அதிகமாக ஹிம்சிப்பதும் உண்டு. குதிரை மெதுவாகப் போனால் நொண்டுவது வெளிப்பட்டுவிடும் என்று விரட்டித் துரத்தி வருத்தத்தை ஒன்



றுக்கு இரண்டாக்குகிறார்கள். இத்தனை காலம் வீட்டில் பழகியும் குதிரை வீட்டுப்பிராணி ஆகவில்லை. காட்டுப்பிராணியின் அடையாளமான மிரட்சி அதை இன்னும் விட்டபாடில்லை. அப்படி அது மிரண்டு பின்னால் போகும்போது வண்டிக்காரன் இறங்கி

முன்னால் வந்து கடிவாளத்தை இரண்டு கையாலும் பிடித்துத் தயிர் கடைந்து, கண்ணென்றும் மூக்கென்றும் பாராமல் 'பட்பட்' என்று கைச்சௌக்கைத் திருப்பி முகத்தில் தீட்டுவதைக் கேட்டதற்குக் கணக்கில்லை. தீனியின் குறைவாலும், வயசின் முதிர்ச்சியாலும் பலஹீனப்பட்டுப்போன குதிரையை வண்டியில் பூட்டி, அதில் ஐந்தாறுபேர் உட்கார்ந்துகொண்டு, வெகுதூரம் விட்டால் அது என்ன செய்யும்? பாவம்! 'இனி என்னால் எட்டி அடிவைக்கவும் முடியாது' என்று தீர்மானமாய் நின்றுகொள்கிறது. அப்போது இரக்கமில்லாக் குதிரைக்காரன் தடியால் எட்டிக் காதுகாதாய்த் தட்டுகிறான். ஏழை ஜட்கா வண்டிக்காரன், தான் வாங்கும் குதிரை ஒவ்வொன்றுக்கும் புதிது புதிதாகச் சாமான் வாங்கமுடியாமல் ஒரே கழுத்துப் பட்டையைச் சின்னதற்கும் பெரியதற்கும் மாட்ட அது புண்ணாக்கி விடுகிறது. புண் ஆறட்டும் என்று காத்திருக்க சாவகாசம் உண்டா அந்த ஏழைக்கு? அல்லது மருந்து போடத்தான் உண்டா? இரண்டும் கிடையாது. அப்போது குதிரை சும்மா கூத்தாடும்: ஓட்டுகிறவனும் தன் கையையெல்லாம் சலிக்கக் காட்டுவான். ஐயோ! என்ன பரிதாபம்! பகவான்தான் பார்க்கவேணும். இப்படி விவரிக்க விவரிக்க வருத்தமே அதிகரிக்கும். இந்த ஹிம்சைகள் எல்லாம் குறைவதற்கு வழியேற்படவேண்டும்.

சிறுவர்களுக்கு இரக்கத்தின் மேன்மையை இளமை முதற்கொண்டே காட்டிவரவேண்டும். இதற்காக உள்ள நல்ல கதைகளைச் சொல்லி மகிழ்வித்து அவர்களை நல்ல வழியில் பழக்கலாம். குழந்தை ஏதாவது தின்னும்போது அருகில் நாம், பூனை, ஆடு, மாடு நின்றால் 'அதற்கும் கொஞ்சம் தா அப்பா!' என்று சொல்லித் தரச்செய்யலாம். அப்பிராணிகளில் எதையாகிலும் நம் குழந்தை அடிக்கக் கண்டால் 'அடே! உன்னை அப்படி அடித்தால் அதற்கும் அப்படித்தானே இருக்கும். அதற்கென்ன? அது வாயில்லாப் பிராணி; பேசாது; முறையிடாது' என்று பயமும் நயமும் காணும்படி செய்யலாம். இங்கேயும் தக்க கதை உதவும். தன் கட்டுச்சோற்றில் ஒரு பிடி தந்ததனால் கள்ளரிடமிருந்து காப்பாற்றிவிட்ட கருநாய்க் கதையை உதாரணமாகக் கொள்ளலாம். இவ்வழிகள் பரிபாலனத்துக்காகும்; நிக்கிரகத்துக்காகும் வழிகளும் சுலபமாய்க் கிடைக்கும். 'கல் எறிந்ததால் நாய் உன் காலைக் கடித்தது' என்று எடுத்துக் காட்டலாம். 'வாலைப் பிடித்திழுப்பானேன் அந்த மாடு காலைப் பார்த்து உதைப்பானேன்' என்றதுபோலக் காரணத்திற்குக் காரியம் கண்டிப்பாய் உண்டு என்பதை எடுத்துக் காட்டலாம். இப்படிப்பட்ட நல்ல வழிகள் பல நல்ல தாய்மார்களுக்குச் சுலபமாய் அகப்படும்.



நம் 'மாதர் போதினி' போலொத்த பத்திரிகைகளில் இரக்கத்தின் வலிமையையும், குரூரத்தின் கொடுமையையும் விஷயங்களாகக் கொண்டு படித்தவர்கள் பலதரமும் எழுதவேண்டும். அவற்றைப் படித்தறியும் பெரியவர்கள் அவற்றைச் செவ்வையாய்த் தெரிந்துகொள்வதோடு நின்றுவிடாமல், சொல்லியிருக்கிறபடியே செய்து, தங்கள் சகோதரர்களுக்கும் சிறுவர்களுக்கும் முன்மாதிரியாக நின்று, அவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும். தங்களில் யாராவது எப்போதாவது பிராணிகளிடத்தில் இரக்கம் காட்டாமல் குரூரமாய் நடந்துவிடுவார்களானால், அவர்களை அப்போதும், பின் அடிக்கடியும் அவமதித்து வரவேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் மானத்திற்குப் பயந்து மனசைத் திருத்திக்கொண்டு நல்லவர்களாய் ஜீவஜெந்துக்களைப் பட்சமாய் நடத்துவார்கள். இதுபோலவே வாயில்லாப் பிராணிகளின் வருத்தத்தை நீக்கி நிவிர்த்திசெய்தவர்களை அப்போதும், எப்போதும் மெச்சி மேன்மைப்படுத்தலும் நல்லதே. கோழிக்காரன் பத்துப் பன்னிரண்டு கோழிகளைப் புணைத்து நெருக்கி ஒரு கையில் தொங்கவிட்டுக்கொண்டுவந்தால், அவனை அவமதியுங்கள்; கோழிகள் கஷ்டப்படுவதை எடுத்துக் காட்டுங்கள்; 'இனி இப்படி வந்தால் உன்னிடம் கோழி வாங்கமாட்டோம்' என்று பயமுறுத்துங்கள். அப்போது அவன் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் வழிக்குவருவான். பாவம் கோழிகளின் பாடும் சிறிது மட்டுப்படும். லோகத்தில் உள்ள எதுவும் நம்முடைய பிரயோஜனத்துக்கென்றே தேவன் படைத்தது என்பது வாஸ்தவமாய், அதைத் தின்னலாம் என்றாலும், அதை ஒரே அடியாய்க் கொன்றுவிடவேண்டுமே தவிர, அதை ஸதா ஹிம்சிப்பது என்பது குரூரத்திலும் மிகுந்த குரூரமாகும்; பாவமுமாகும்.

வண்டியில் கட்டியது புண்கழுத்து மாடாயிருந்தால் அந்த வண்டியில் என்னதான் வாடகை குறைவாயிருந்தாலும் அதில் ஏறவேண்டாம். அப்படிப்பட்ட வண்டியை வழியில் கண்டால் கூடுமானால் ஒரு போலீஸ்காரனிடம் அவ்வண்டிக்காரனை ஒப்புவிக்க முயல்வது நல்ல காரியம். வாடகைக்குறைவை உத்தேசித்து ஒரு கிழட்டுக்குதிரை கட்டிய வண்டியில் ஏழெட்டுப்பேர் மூட்டை முடிச்சுகளுடன் தயவுசெய்து ஏறாதேயுங்கள்.

இப்படிச் சிறுவர்களுக்கு முன்மாதிரி காட்டியும் போதித்தும், பெரியவர்களுக்கு இரக்கர்தை வற்புறுத்தியும், ஹிம்சிப்பவர்களைக் கண்டித்தும், அவர்களைத் தண்டிக்கும் சர்க்காருக்கு உதவிசெய்தும் வருவோமேயானால், பிராணிகளின் ஹிம்சை வெகுதூரம் கம்மியாகும்; நாமும் ஆசீர்வதிக்கப் பெறுவோம்.

'தன்னுயிர்போல மன்னுயிர்க்கு இரங்கு.'

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

அப்படியாக ஐயரவர்களோடு வேதாபிமானியும் கீதமணியும் புறப்பட்டுப் பக்கத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ தெரு ஒன்றிற்கு வந்தார்கள். அங்கே ஒரு வீட்டிலே ஜெபம் செய்யும்படி போனார்கள். அந்த வீட்டைப் பார்த்தால் பெரிய பங்களாப்போல வாசலில் பூஞ்செடிகள், பூந்தொட்டிகள் வைத்து அலங்காரமான மேல்மெத்தை வீடுள்ளதாயிருந்தது. அந்த வீட்டிலே பிள்ளைக்குட்டிகளும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினாலே அதிகமாக இருந்தன. கீதமணிக்கும் பார்க்க சந்தோஷமாயிருந்தது. ஐயரவர்களைக் கண்டதும் அந்த வீட்டு அம்மாள் மரியாதையாக சலாம்செய்து எல்லாருக்கும் தகுந்தபடி ஆசனம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது ஐயரவர்கள் 'அம்மா! ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்கு வந்தீர்களா?' என்றார். அதற்கு அந்த அம்மாள் 'என்ன! ஐயா! காலையிலெழுந்திருந்து காப்பி பலகாரம் ஆயத்தம்செய்து பிள்ளைகளுக்குக் கொடுத்து முடியுமுன் 8 மணி ஆகிவிடுகிறது. அதற்குள்ளாக கோவிலுக்கு மணியடித்துவிடுகிறது. அதற்குப் பிறகு நான் உடுத்தி, தலைசீவிப் புறப்பட்டு வந்தால் கோவிலில் நாற்காலியில் இடமில்லாமற்போகிறது. பாதிகோவிலில் வருகிறதும் பிள்ளைகளைக் கூட்டிவருகிறதும் வருத்தமாயிருக்கிறது. இதினால்தானையா நான் ஒழுங்காய்க் கோவிலுக்கு வரக்கூடாமல்போகிறது. வீட்டிலிருந்து வேதம் வாசித்து ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பேன், ஐயா' என்றாள்.

அப்பொழுது ஐயரவர்கள், 'அம்மா! எங்கள் உபதேசியாருக்குக் கடவுளுடைய கிருபையால் 8 குழந்தைகளுண்டு அந்த அம்மாள் ஒரு நாளும் கோவிலுக்கு வரத் தவறுகிறதில்லை. சுகவீனமாயிருந்தால் மாத்திரம் என்னவோ, மற்றப்படி பிள்ளைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு ஒழுங்காய் எற்கனவே வந்துவிடுவார்கள். எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கும். அந்த அம்மாளுக்கு வேலைக்காரருமில்லை. உங்களுக்கு அதிகாலையில் காப்பி ஆயத்தஞ்செய்ய வேலைக்காரரும், பிள்ளைகளுக்கு உடுப்புப்போடப் பார்த்துக்கொள்ள வேலைக்காரரும், கோவிலுக்குப் போக வண்டியும் இருந்தும், நீங்கள் சொல்லும் தடைகள் என் மனதிற்குச் சரியாயில்லை' என்றார்.

அப்போது அந்த அம்மாள் 'கோவிலிலிருக்க இடம் கிடைப்பது அரிதாயிருக்கிறதே' என்றார்கள்.



அப்போது அந்த அம்மாளுடைய சகோதரி 'ஐயா! நீங்கள் அப்படியானால் கோவிலைப் பெரிதாய்க் கட்டப் பணஉதவி கேளுங்கள். அக்காள் 20 ரூபாய் கொடுப்பார்கள்' என்றாள். அப்பொழுது ஐயரவர்கள் சொன்னது 'அம்மா! நீங்கள் பணம் தடையில்லாமல் கொடுப்பீர்கள். ஆனால் கோவிலை இடித்துப் பெரிதாகக் கட்டின பிறகு கோவிலுக்குப் போய்க்கொள்ளலாம் என்கிற நிச்சயம் நமக்கு உண்டா! கிரியை செய்யக்கூடாத இராக்காலம் திடீரென வந்தால் நாம் ஜீவனுள்ளோர் தேசத்திலே தேவாராதனைக்குப் போகக்கூடுமா? ஆதலால் நீங்கள் சிறு பிராயத்தில் எவ்வளவு ஒழுங்காய் வந்தீர்கள் என்பது எனக்குத் திட்டமாய்த் தெரியும். ஆனால் பிள்ளைகளைச் சாக்கிட்டுக் கோவிலுக்கு வரக்கூடாதென்கிறது சரியான காரணமாக மாட்டாது. ஆதலால் ஓய்வுநாள் காலையில் எழுந்து ஆயத்தப்பட்டு இரண்டா மணிக்குள் கோவிலுக்கு வரப்பாருங்கள். உங்கள் புருஷன் அதிகாலை ரெயிலுக்குப் போவார்களானால் அதற்குள்ளாக எல்லாம் ஆயத்தம் செய்துவிடுவீர்களே. அதுபோல் ஓய்வுநாள் ஆசரிப்பைப் பற்றிக் கவனமாயிருக்கவேணும். மாலை கோவிலில் தாராளமாய் இருக்க இடமுண்டு. அப்போதாகிலும் ஒழுங்காய் வரப்பாருங்கள். உங்கள் பாட்டையா ஓய்வுநாளை மகா பரிசுத்தமாய்க்கொண்டு, கோவிலாராதனை நேரம்போக மீதிநேரம் தனிஜெபம், வேதவாசிப்பு, பிள்ளைகளுக்குச் சிறு வாக்கியம், ஞானப்பாட்டுகளைப் படித்துக் கொடுப்பது இவைகளில் காலம் கழிப்பார்கள். அவர்களுடைய ஜெபம்தான் உங்களுக்கு இவ்வளவு ஆசீர்வாதம் தந்திருக்கிறது என்று நான் அடிக்கடி நினைப்பேன். நீங்களும் இன்றுமுதல் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவீர்களானால் சுவாமி உங்களை இன்னும் அதிகமாய் ஆசீர்வதிப்பார்' என்று ஜெபஞ்செய்து வழியனுப்பிக்கொண்டு கொஞ்சத்தூரம் நடந்து இன்னும் ஒரு வீட்டுக்குப் போனார்கள்.

அங்கே அந்த வீட்டு அம்மாள் சந்தோஷ முகத்தோடே வந்தனம் செய்தாலும் 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றபடி மனதிலே அதிக விசாரமுள்ளவர்களாய்த் தோன்றினார்கள்.

அதுகண்டு ஐயரவர்கள், 'அம்மாள்! உங்கள் எஜமான் எங்கே?' என்றார்கள்.

அதற்கு அந்த அம்மாள் 'ஐயா! அவர்கள் ஆபீஸ் வேலைக்குப் போயிருக்கிறார்கள். வந்தவுடன் சாப்பாடு ஆயத்தமில்லாவிடில் கோபப்படுவார்கள். சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை வாங்கித் தரவு மாட்டார்கள். சாப்பிட்டவுடன் கெட்ட தோழரோடு சேர்ந்து சீட்டு விளையாடவும், உல்லாச நாடகங்கள் பார்க்கவும் போய்விடுவார்கள். இரவு 12 மணிக்குத்தான் வருவார்கள். ஐயா! ஒருநாள் பிள்ளைக்கு

நள்ளிரவில் விஷபேதி கண்டு வருத்தப்பட்டது. இவர்கள் வெளியிலிருந்து குடித்து நாடகம் பார்த்து; வெகுநேரம் சென்று வந்து படுத்துக்கொண்டதால் பிள்ளைக்குச் சரியானபடி வைத்தியரைக் கூட்டிவந்து மருந்து கொடுக்கவோ, கவனிக்கவோ வழியில்லாமற்போயிற்று. எனக்கும் பிள்ளைபடும் பரிதாபத்தைப் பார்த்து புத்தி தடுமாறிவிட்டதால் அவர்களை எழுப்பி எழுப்பிப் பார்த்தேன். அவர்களும் நித்திரை மயக்கத்தால் எழுந்திருக்கவில்லை. காலையிலே எழுந்து வைத்தியரைக் கூப்பிட்டுப் பார்த்தபோது, மிஞ்சிப்போய்விட்டது, நம்பிக்கையில்லை, என்று சொல்லிவிட்டார். அப்புறம் என்ன பிரயாசப்பட்டும் பிள்ளை பிழைக்க வழியில்லை. காலை 10 மணிக்குள் கர்த்தருடைய ராச்சியம் சேர்ந்துவிட்டதையா' என்று கண்ணீர்விட்டு '8 வயது ஆண்குழந்தை இப்போது ஆறுமாதமாகிறது' என்றாள்.



அதுகேட்டு ஐயர் பெருமூச்சுவிட்டு 'அந்தப் பிள்ளை இறந்த பிறகு மனம் மாறுதல் உண்டா?' என்றார்.

“ஆம் ஐயா! அந்த வாரம் அதிக துக்கத்தினாலே, அந்தப் பிள்ளையை அவர்கள் அதிகமாய் நேசித்ததினாலே மற்ற நாட்களைப்போல வெளியில்போய் உல்லாசமாகச் சீட்டு விளையாடவில்லை. அதற்கடுத்த ஓய்வுநாளிலே தேவாலயத்துக்குப் போயிருந்தார்களாம். அப்போது நீங்கள் 'ஒருமணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதா?' என்ற வாக்கியத்தின்பேரில் பிரசங்கம்செய்து சபையாரைப் பார்த்து, உங்கள் சுகத்துக்காகவும் சரீரப்பிழைப்புக்காகவும் நீங்கள் எவ்வளவுநேரம் செலவழிக்கிறீர்கள்? இரவிலே நாடகம்,



வேடிக்கை, சர்க்கஸ் பார்க்கப்போகிறீர்களே, இயேசுவோடே ஒரு மணி நேரம் விழித்திருக்கக்கூடாதா? கோவிலில் ஜெபக்கூட்டத்திலும் தனித்தியானத்திலும் அவருடைய பாடுகளைத் தியானிக்காமல் வீணாய் நாளைக் கழிக்கிறீர்களே” என்று உருக்கத்தோடே பிரசங்கம் பண்ணினீர்களாம்.

அதைக்கேட்டு 'இப்போது கொஞ்சம் உணர்வு உண்டானதுபோல் காணப்படுகிறது. ஆனால் எவ்வளவு நாளைக்கோ தெரியவில்லை. அவர்களுக்காக நீங்களும் ஜெபம்செய்யுங்கள், ஐயா' என்றாள்.

அப்போது ஐயாவர்கள் 'அம்மாளே! நீ துக்கப்படவேண்டாம். அந்தப் பிள்ளையின் மரணமும், தெய்வ எத்தனமாய்ப் பேசப்பட்ட பிரசங்கமும், நன்றாய் உழுது, மழைபெய்த ஈரத்தில் விழுந்த வித்தைப்போல முளைத்துச் சரியான பலனைக் கொடுக்கும் என்பதற்கு ஐயமேயில்லை. நீயும் உன் புருஷனுக்காக எப்போதும் கர்த்தரிடத்தில் அன்னாளைப்போல் உன் கவலையெல்லாம் ஊற்றிவிடு, நானும் ஜெபஞ்செய்வேன். அப்போது கர்த்தர் நமக்கிரங்கி உன் எஜமானின் ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்தி எல்லாவற்றையும் சீராக்குவார். பெண்சாதிகள் தங்கள் பயபக்தியான கற்புள்ள நடக்கையினால் புருஷனை ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்' என்று ஆறுதல்படுத்தி ஜெபம் செய்து வழியனுப்பிக்கொண்டு, 'நான் இனி உன் எஜமானை அடிக்கடி கண்டுபேசுவேன் அம்மா!' என்று சொல்லிப் போய்விட்டார்.

வேதாபிமானியும் கீதமணியும் இதைக் கவனித்துப் பின்னும் ஐயரவர்களோடு சில வீடுகளுக்குப் போக விரும்பினார்கள். அப்படியே ஐயாவர்களும் அடுத்த தெருவிலுள்ள வீடுகளுக்குப் போக விரும்பி இவர்களையும் கூட்டிப்போயினர். இந்த வீடு எல்லா விஷயத்திலும் துப்புரவும் சுத்தமுமாயிருந்தது. சாமான்களெல்லாம் ஒழுங்கும் வரிசையுமாயிருப்பதோடு அதது இருக்கவேண்டிய இடத்திலேயன்றி மற்ற இடங்களில் தாறுமாறாய்க் கிடக்கவில்லை. ஆனால் மற்றவர்களுடைய வீடுகளைப்போல, ஐரோப்பியருடைய தட்டுமுட்டுகளாகிய அலங்கார சாமான்கள் அங்கேயில்லை. அந்த வீட்டு எஜமான் வியாபார ஜோலியாய் வெளியே போயிருந்தனர்.

அந்த வீட்டு அம்மாள் ஐயாவர்களையும் கூட வந்தவர்களையும் கண்டு, தக்கபடி உபசாரம் சொல்லித் தகுந்தபடி ஆசனங்களில் இருக்கச் செய்ததின்பின், ஐயாவர்கள் அந்த அம்மாளைச் சுகம் விசாரித்துக்கொண்டு, 'சந்தோஷமாயிருக்கிறீர்களா?' என்றார். 'ஆம் ஐயா! எனக்கு வரவரத்தான் இயேசு ரட்சகருடைய கிருபையும், அவர் பொறுமையின் ரகசியமும் தெரியவருகின்றன. அவர் பாவிகளுக்

காகச் சகலவித பாடுகளையும் பட்டு உத்தரித்ததை வாசிக்கும்போது கண்ணீர் பொங்குகிறது' என்றாள்.

அதுகேட்டு ஐயாவர்கள் 'ஆம் அம்மா! நீங்கள் ஒழுங்காய் வருவதைப் பார்த்தது அதிக சந்தோஷம்; ஏனெனில் உங்கள் எஜமானவர்கள் எப்போதும் கோவிலுக்கு ஒழுங்குதான். உங்களைப்பற்றித்தான் அவர்களும் என்னிடத்தில் என் மனைவியின் விசுவாசம் பலப்படும்படி ஜெபம் செய்யுங்கள் ஐயா என்பார்கள். நாங்களும் நீங்கள் நமது மார்க்கத்துக்குக் கட்டாயத்தினால் வந்ததினாலே, உங்களுடைய விசுவாசம் மங்கி எரிகிற திரிபோல நுட்பமானது என்று உங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேணுமென்று ஆண்டவரை நோக்கி ஜெபித்து வருகிறோம்' என்றார்.

(இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1913 ௵ ஜூலை ᵮ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | நியா. | 1. | 1—15 | 11 | வெ. | நியா. | 7. | 15—25 | 21 | தி. | நியா. | 13. | 1—12 |
| 2 | பு. | ,, | 1. | 16—36 | 12 | ச. | ,, | 8. | 22—35 | 22 | செ. | ,, | 13. | 13—25 |
| 3 | வி. | ,, | 2. | 1—10 | 13 | ஞா. | ,, | 9. | 1—6 | 23 | பு. | ,, | 14. | 1—11 |
| 4 | வெ. | ,, | 2. | 11—23 | 14 | தி. | ,, | 9. | 7—21 | 24 | வி. | ,, | 14. | 12—20 |
| 5 | ச. | ,, | 4. | 4—16 | 15 | செ. | ,, | 9. | 22—33 | 25 | வெ. | ,, | 15. | 1—8 |
| 6 | ஞா. | ,, | 4. | 17—24 | 16 | பு. | ,, | 9. | 34—45 | 26 | ச. | ,, | 15 | 9—20 |
| 7 | தி. | ,, | 6. | 1—10 | 17 | வி. | ,, | 9. | 46—57 | 27 | ஞா. | ,, | 16. | 1—12 |
| 8 | செ. | ,, | 6. | 11—24 | 18 | வெ. | ,, | 9. | 1—11 | 28 | தி. | ,, | 16 | 13—22 |
| 9 | பு. | ,, | 6. | 25—40 | 19 | ச. | ,, | 9. | 29—40 | 29 | செ. | ,, | 16. | 23—31 |
| 10 | வி. | ,, | 7. | 1—14 | 20 | ஞா. | ,, | 12. | 1—7 | 30 | பு. | ,, | 17. | |
| | | | | | | | | | | 31 | வி. | ,, | 18. | 1—10 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 AUG 1913
MADRAS.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED ... 12 AUG 1913 MADRAS.


# மாதர் போதினி

**No. 188** ஆகஸ்டு 1913 **No. 8**


## THE REMARRIAGE OF WIDOWS

## விதவா விவாஹம்

நம் தேசத்தில் கலியாணம் வெகு சிறு வயசிலேயே நடந்துவிடுகிறது; அதாவது பிள்ளைகள் குழந்தைகளாய் இருக்கும்போதே புருஷனும் பெண்ஜாதியும் ஆக்கிவிடுகிறார்கள். ஆண் பெண்மக்கள் விவாஹத்தின் அவசியம் தெரிந்துகொண்டு, தாங்களே தங்களுக்கு இஷ்டப்பட்டவர்களை மணந்துகொள்ளும் வழக்கம் இல்லை. இப்படி இவர்களுக்கு இளமையிலேயே குடும்ப வாழ்க்கைக்கு ஏற்பட்ட கலியாணத்தை நடத்திவிடுவதால், 'இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை' என்று தாயுமான ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறபடி, இருவரில் எவராவது இறக்க நேர்ந்துவிட்டால், எவ்வளவு தூரம் வருத்தத்திற்கு இடமாகிவிடுகிறது பாருங்கள்! அந்த இருவரில் ஆண்மக்களுக்கு ஒருவிதத்தில் பாதகம் இல்லை; ஒரு பெண்ஜாதி போனால், கொஞ்சம் பணத்தைப் போட்டு, மற்றொரு இளையதாரத்தைக் கட்டிக்கொள்ளுவதற்கு விதியுண்டு. ஆனால் ஸ்திரீ ஒருத்தி தன் புருஷனை இழந்துவிட நேர்ந்தால், அவள் கதி அதோகதிதான்; வேறே புருஷனை மறுபடியும் மணந்துகொள்ளப்படாது என்பது வழக்கத்தில் விதியாக வந்திருக்கிறது.

இந்த விதியின் குரூரம் கொஞ்சம்நஞ்சம் அல்ல. அத்துன்பங்கள் நம் சகோதரிகளுக்கு அநுபவத்தில் தெரியும். ஆதலாலும், அவற்றை விவரித்தால் கண் நீரை வருஷிக்கும் ஆதலாலும், அது விஷயமாக மௌனம் சாதிக்கலாயிற்று. இப்படிப்பட்ட கொடோரமான துன்பங்களை உணர்ச்சியோடு அநுபவிக்கும் வயசு வந்தபோதுதான் அப்பெண் 'ஏன்! நான் கலியாணம் செய்துகொள்ள

வில்லையே!' என்று தர்க்கம்செய்ய ஆரம்பிக்கிறது. அந்தப் புத்திசாலித்தனமான கேள்விக்கு யாராவது, 'சரி! உனக்குச் சிறு வயசிலேயே உன் அருமைப் பெற்றோர்கள் செல்லக் கலியாணம் செய்துவிட்டார்கள்' என்றால் உடனே அப்பெண் 'அவர்கள் செய்த தப்பிதத்திற்குத் தண்டனை எனக்கா?' என்று மறுக்கிறது. இது புத்திமான்களுக்குச் சர்வ சம்மதமாகவே படும்; அதற்குத் தடையுங் காணோம்.

நம் தேசஸ்திரீகள் சாதாரணமாக அனாதைகள்; புருஷனாக ஏற்படுபவனே சம்பாதித்துப் பெண்ஜாதி பிள்ளைகளைக் காப்பாற்றுகிறான். இந்த ஸ்திதியில் ஜனசமூகம் இருக்க ஸ்திரீ ஒருத்தி தன் புருஷனை இழந்துவிட்டால் அவளுக்குத் திக்கு வேறுண்டா? அவளும் குறைந்தது வயிறு நிறைய உண்டும், மானம் மறைய உடுத்தும் வாழவேண்டும் அல்லவா? ஒருவேளை சம்பாதியத்திற்குப் புறப்பட ஆரம்பிக்கலாம் என்றாலோ, அவளுடைய தலை முதலியன அங்கஹீனம் செய்யப்பட்டிருப்பது ஒன்று; முக்காடிட்ட முண்டச்சியை எதிரே காண்பது ஒரு பெரிய அபசகுனம் என்று வைத்துக்கொண்டிருப்பது மற்றொன்று. இப்படி அவள் சம்பாதிப்பதற்குத் தடையாக உள்ளவை அநேகம். தேவகிருபையால் ஏதோ கொஞ்சம் 'ஐவேஜு' இருக்குமானால், அதை வைத்துக்கொண்டு சுகமாயிருப்பதே முடியாததாக இருக்கையில் ஏழை விதவைக்குக் கேட்பானேன்?

திக்கில்லாமல் போகவே அனாதையான விதவையும், மற்ற ஸ்திரீ புருஷர்களைப்போலவேதான். ஆகையால், யாரோ ஒருவரைத் தேடி அடையவேண்டிவருகிறது. அல்லது இவளைத் தேடியடைவதும் உண்டு. இந்தக் காரியம் இயற்கைக்குச் சார்பானதாக இருந்தாலும் ஜனசமூகம் இதைத் துர்நடத்தை என்றே கொள்கின்றது. ஆனால் இந்தவிதக் கெட்ட நடத்தையைப் புத்திபூர்வகமாய்த் தடுத்துச் சொல்ல முடியுமா என்பதை யோசிக்கும்போது முடியாது என்றே தீர்மானிக்க வேண்டும். விதவையாகிவிட்டதினாலேயே மனுஷ இயற்கை மாறிவிடுமா? புருஷன் ஒருவன் தன் பெண்ஜாதியை இழந்தால், அவன்மட்டும் மறுபடியும் இளைய மனைவியைத் தேடிக்கொள்ளுகிறானே! ஸ்திரீ மாத்திரம் புருஷனைத் தேடிக்கொள்ளல் ஏன் ஆகாது? பழைய ஹிந்து சாஸ்திரப்படிக்கும் இப்போதைய ஒழுக்கம் இடம்பெறாததாக ஏற்படும். குழந்தைக் கலியாணம் சாஸ்திர சம்மதம் இல்லாதது என்பது காலஞ்சென்ற 'ஹிந்துவேதப்பழம்' திவான் பஹதூர் ரகுநாதராயர் கண்ட கடைசித் தீர்மானம். அவர் தீர்மானப்படி ஒருத்தியைக் குற்றத்திற்கு உட்படுத்தினவர்கள், அவள் இயற்கையைப் பின்பற்றுவது



தப்பிதம் என்று கொண்டால், அதை மன்னிக்கவேண்டியதுதான். இல்லாவிட்டால், அவளுக்கு மறுபடியும் விவாஹம் செய்துவைத்துவிடவேண்டும். அவள் தானே செய்துகொண்டால் அதை அங்கீகரித்தாலே போதும். தக்க வயசு வருமுன்னேயே கைம்பெண்ணாய் விட்டவள் மறுபடியும் கலியாணம் செய்துகொள்ளலாம் என்பதும் இப்போதைய தக்க ஹிந்து படிப்பாளிகளின் முடிவான எண்ணம். இக்கட்சிக்குப் பிரமுகராகக் காலஞ்சென்ற நியாயாதிபதி கனம். ரானடேயைச் சொல்லலாம். இப்படிப்பட்ட விதவைகளுக்காவது விவாஹம் செய்துகொள்ள அநுமதிகொடுப்பது நன்மையே விளைவிக்கும் என்பது இவருடைய கருத்து.

வெகுநாள் கழித்து விவாஹம் பண்ணிக்கொள்பவனுக்கும், முன்னொரு தாரத்தை இழந்துவிட்டுப் பின் கலியாணம் செய்துகொள்பவனுக்கும், விதவை தக்க மனைவி ஆவாள். முந்திய வீட்டு அநுபவம் அவளுக்கு இருக்கிறது. அதினால் பலவிதங்களிலும் தன் பர்த்தாவுக்கு உதவி செய்பவளாகவே இருப்பாள். மேற்சொன்ன புருஷர்கள் இளையபெண்ணைக் கட்டிக்கொண்டு அதைப் பழக்கவேண்டிய உபத்திரவம் இல்லை. குடும்பச் செலவுகள் வெகு கிரமமாகவும் சிக்கனமாகவும் நடைபெறும். அக்கிரமம் அணுவளவும் உண்டாக இடமில்லை. எப்போ வீட்டுக்கு உகந்த மனைவியாகின்றாளோ, அப்போ அவள் கடவுள் கடாட்சம் இருந்தால், நல்ல தாயும் ஆவாள் என்பதற்கு ஏதாவது சந்தேகம் உண்டா?

ஆகவே, முன் அனாதையென்றும், துர்நடத்தையுள்ளவள் என்றும் கெட்ட பேரே எடுப்பதற்கிருந்த இளைய விதவை, பின் நல்ல மனைவியும், நல்ல தாயுமாய், அதனால் ஜனசமூகம் சந்தோஷமும் விருத்தியும் அடைவதற்கு ஏதுவாகக்கூடிய பாலிய விதவா விவாஹமாவது செய்ய நம் ஹிந்து சகோதரர் சகோதரிகள் முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

V. Chitambaram Mudaliar, Erode.

## HO SHO

## ஹோ இஷ்கோ

ஹோ இஷ்கோ என்பவன் சீனா தேசத்தில் பிறந்தவன். அவன் சிறு குழந்தையாயிருந்தபோதே அவனுடைய தாய் தகப்பன்மார் இறந்துபோனார்கள். அவனுக்கு வயது வந்ததும் ஜீவனார்த்தம் பண்ணும்படியாக ஜப்பான் தேசத்திற்குப் போனான். கொஞ்சகாலம்

அதிக சுறுசுறுப்பாய் உழைத்து நல்ல நிலைமைக்கு வந்தான். பிற்பாடு அவனுக்குக் கஷ்டகாலம் வந்துவிட்டது. அவன் தன்னுடைய சொத்தையெல்லாம் இழந்துவிட்டுக் கவலையினால் புத்தி சுவாதீனம் அற்றுப் பைத்தியக்காரனாய்த் திரிந்தான்.



பிற்பாடு தன்னுடைய மனதைத் திருப்பும்படியாக ஏதாவது வகை தேடலானான். அதற்காக ஒரு புஸ்தகக்காரரிடம் ஒரு புஸ்தகம் வாங்கினான். அது என்ன புஸ்தகம் என்று நினைக்கிறீர்கள்? அது



பரிசுத்த வேதாகமம் தான். பிற்பாடு ஒரு கிறிஸ்தவன் அவனைக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போனான். அவன் வேதாகமத்தை வாசிக்க வாசிக்க, குணப்பட்டு ஞானஸ்நானம் பெற்று ஒரு நல்ல கிறிஸ்தவனானான்.

தேவன் தன்னுடைய உலக ஐசுவரியத்தை எடுத்துக்கொண்டு பரலோகத்தின் ஐசுவரியத்தைத் தந்திருக்கிறார் என்றும், தான் முற்றிலும் ஏழையாகவேண்டும் என்றும், புறமதஸ்தரைக் கிறிஸ்துமார்க்கத்துக்குக் கொண்டுவர ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும் என்றும் விரும்பினான்.

ஆண்டவருக்காக அதிகமாய் உழைத்தான். கையினால் சிறு வேலைகள் செய்து பணம் சம்பாதித்ததில் சரிபாதியைக் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுப்பான். பிற்பாடு அவன் அதிக வியாதிப்பட்டு ஒரு ஆஸ்பத்திரியில் மரணமடைந்தான். அவனுடைய ஜீவியம் அநேகருக்கு நன்மாதிரியாயிருந்தது. அவன் அழியாத ஜீவகிரீடத்தைப் பெறுவான் என்பதற்குச் சிறிதும் சந்தேகமேயில்லை.

## SEVEN WAYS TO KILL A CHURCH

## சபையைக் கெடுக்கும் ஏழு உபாயங்கள்

1. கோவிலுக்குப் போகாதே, வீட்டிலே இரு, அல்லது வேறு ஏதோ ஒரு இடத்துக்குப் போ. கோவிலுக்கு வராமல் வீட்டிலே தங்குவதினால் சபையைக் கெடுக்க ஏதுவாயிருக்கிறது மாத்திரமல்ல உன் பக்தி குறைந்துபோவதற்கும் ஏதுவாயிருக்கும்.

2. கோவிலுக்குப் போனால் குறிக்கப்பட்ட நேரத்துக்குப் பிந்திப் போ. உண்மையுள்ளவர்கள் வழக்கமாய் நேரத்தோடு போவார்கள். அப்படிப் போவது பக்திக்கு அடையாளமாயிருக்கிறது.

3. நீ போனால் 'கடைசியான வரிசையில் உட்காருவேன்' என்கிற தீர்மானத்தோடு போ. 'ஒருவரும் என்னைப் பார்க்கலாகாது' என்கிறவனைப்போல முன் வரிசைக்கு வராமல் எல்லாருக்கும் பின்னதாகச் சுவரோடு உட்காரு.

4. நீ போனால் ஆராதனையிலோ, விசேஷமாகப் போதகரிலோ ஏதாவது ஒரு குறைவு கண்டுபிடிக்கவேண்டும் என்கிற ஆசையோடு போ. சிலர் கோவிலுக்கு வேளைக்கு ஒருவேளை போனாலும் சபையையும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதையும்பற்றிப் புகழ்ந்து பேசுவது அரிது.

5. நீ போனால் 'காணிக்கையில் ஒரு காசும் போடமாட்டேன்' என்கிற தீர்மானத்தோடு போ. "'கோவிலில் அநேக காணிக்கைகளைக் கேட்பதினாலே நாங்கள் போகிறதில்லை' என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் கொடுக்கிறதில்லை. காணிக்கை கொடுக்காதவர்கள் காணிக்கையைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்?

6. நீ போனால் ஒருவருக்கும் வந்தனம் சொல்லாமல், சுகசெய்தியை விசாரிக்காமல், பேசாமல் வீட்டுக்குத் திரும்பு. சிலவேளைகளில் போதகர் ஆராதனை முடிந்தபின்பு 'இன்னான் ஒரு சபையானுக்கு அல்லது இன்னாள் ஒரு சபையாளுக்கு என்மேல் ஏதோ ஒரு வருத்தம் இருக்குமோ? ஒருவரும் என்னிடத்தில் வந்து பேசவில்லையே' என்று விசனத்தோடு வீட்டுக்குப் போவதுண்டு.

7. நீ கோவிலுக்குப் போனால் தனிமையாகப் போ. பெண்ஜாதியையோ, புருஷனையோ, பிள்ளையையோ, அயல்வீட்டுக்காரரையோ, ஒருவரையும் கூட்டிக்கொண்டு போகவேண்டாம். அநேகர் தேவாலயத்துக்குப் போகும்போது எங்கே யாராவது தங்களைப் பார்த்துவிடப் போகிறார்களோ என்று பயப்படுபவர்களைப்போல் திருட்டுத்தனமாய்ப் போவார்கள்.

அந்திரேயா 'முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு... அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான்.'

## STORY OF A BRAHMAN

## துளாதாராவும் ஜாஜலியும்

ஒரு காலத்தில் ஜாஜலி என்னும் பெரிய பிராமணன் ஒருவனிருந்தான். இவ்விப்பிரன் அல்ப ஆகாரமருந்தியும் கந்தைகளையுந் தோல்களையுமன்றி வேறொன்றையும் தன்னுடையாக உடுத்துக் கொள்ளாமல் ஒரு காட்டில் வசித்துவந்தான். இம்மாதிரியாகப் பல வாண்டுகள் ஆங்குக் கழித்துப் பெருந்தவங்கள் பலவற்றையு மிழைத்தான். ஆனால் தான் செய்துள்ள தவப்பெருமையினாலும் பிறவற்றினாலும் மிக்க கர்வங்கொண்டு தன்னினுமிக்கார் இப்பூமண்டலத்தில் எவருமிலரென்று இறுமாப்படைந்தான். ஒருநாள் 'நான் மிகக் கீர்த்தியடைந்தேன். இவ்வவனியிலுள்ள சராசர ஜீவப்பொருள்களில் என்னிலு மிக்காராவது எனக்குச் சமானமுள்ளவராவது இவ்வுலகில் உள





ரோ? இல்லவே இல்லை'யென்று சொல்லிக்கொண்டு கர்விப்பானாயினான். இப்படி இவன் எண்ணமிட்டதுதான் தாமசம்,

'இம்மாதிரியான வார்த்தைகளை மொழிதல் தவிர நாள் முழுவதும் பண்டங்கள் வாங்குவதும் விற்பதுமான 'தொழிலையுடையோனும் உன்னிலு மநேகாயிரமடங்கு நல்நடத்தையிலும் ஞானத்திலும் மிக்கவனுமான துளாதாரனென்னும் நாமமுடையா னொருவனுளனாயினும்

நீ கூறிய மாதிரியான வார்த்தைகள் பகர அவனே தகுதியல்லனெனின் நீ கூறல் தகுமோ' என்று ஆகாயத்தில் அசரீரியொன்று கணீரென்று மொழிந்தது. இவ்வார்த்தையைக் கேட்டதும், ஒரு புறம் கோபமும் மற்றொரு புறம் ஆச்சரியமுமுற்றவனான அந்தணன் தன்னைக்காட்டிலும் சகல விஷயங்களிலும் ஒரு சாதாரண வர்த்தகன், மிக்கானென்று கேட்கப் பொறாத கர்விஷ்டனாய் அன்னோனைப்பற்றி ஆராய்வானாயினான். ஆதலின் அத்தகைய துளாதாரனைப் போய்க் கண்டுபிடித்து அவன் இத்தன்மையனென அறிய வுறவேண்டி வெளியே புறப்பட்டான்.

பன்னாட்கழித்து வாரணாசி என்னும் சிறந்த க்ஷேத்திரத்தில் அவனைக் கண்டான். கடைத்தெருவில் துளாதாரன் தன்னுடைய வியாபாரத்தைச் செய்துகொண்டிருந்தான். அந்தணனைக் கண்ட மாத்திரத்தில் அவன் உடனே தன்னிருக்கையை விட்டெழுந்து அவனுக்கு விதிப்படி வந்தனங்கள் செய்து தன்னிடத்திற்கு வந்த வரலாறு யாதென்று வினவினன். ஜாஜலியும் தன்னுடைய எண்ணத்தின்மேலும் கூறிய வார்த்தைகளின்மேலும் ஆகாயத்தின் கண்ணே எழுந்த அசரீரி மொழிந்த வாக்கினை அவனுக்குரைத்தலும் ஞானக் காட்சியினால் அவனுடைய பூர்வ ஜன்மத்தினையும் பிறவற்றையும் நன்குணர்ந்த துளாதாரன் அவற்றை அவ்விப்பிரனுக்கு எடுத்துரைத்தான். ஜாஜலியும் இவற்றைக் கேட்டதும் மிக்க ஆச்சரியமடைந்தவனாய் விசேஷமாய் ஓயாமல் வாங்கிவிற்கும் தன்மையினையுடைய வர்த்தகனுடைய மகனாகிய துளாதாரன் இத்தன்மையான அபூர்வ ஞானக்காட்சியை யடைந்த வரலாற்றினைத் தனக்கு விளங்க உரைக்கும்படி அந்தணன் கேட்டுக்கொண்டான்.

பிறவுயிர்க்கு இன்னா செய்யாமை என்னும் சிறந்த விரதத்தையே தான் மேற்கொண்டொழுகி வந்ததேதான் இத்தகைய மேன்மையான ஞானவானானதற்குக் காரணமென்று அந்தணனுக்குத் துலாதாரன் கூறினன். தன்னுயிர்போன்ற மன்னுயிர்களுக்குத் தன்னால் கூடுமானவரையில் தீங்கு புரியாமலும் எல்லாவற்றிற்கும் நன்மையையே புரிவதில் அவன் முயற்சித்தும் வந்தனன்; அவன் ஒருபொழுதும் ஒருவரிடத்திலும் சாத்திரத்தைக் கொள்ளவாவது ஒரு பொருளினிடத்தில் செய்தலும் இல்லை. தொன்றுதொட்ட பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட இவ்விதமான மார்க்கந்தான் நல்வழிக்குரித்தானதென்றும், இப்படித்தான் மன்பதைகள் தம் வாணாளை வீணாளாக்காது கழிக்கவேண்டுமென்றும், சிறந்த ஞானமடைதற்கு இதுதான் ஏதுவானதென்றும் துளாதாரன் எடுத்துக் கூறினான். எல்லாச் சிறந்த நன்கொடைகளிலும் மேலான பெருந்தவங்களி



லும் பிறவுயிர்க்குத் தீங்கு புரியாமையே விசேஷமான தர்மமாகும். இத்தகைய தொழிலைக்காட்டிலும் மனிதனின் சிறந்த கடமை வேறின்றாகுமென்பது திண்ணம்.

'சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.'

பின்னும் அநேக விஷயங்களைப்பற்றி ஜாஜலிக்குத் துளாதாரன் உபதேசித்தான். யாகத்திற்காவது உணவுக்காவது ஜீவப்பிராணிகளைக் கொல்லவாவது மற்றப்படி அவற்றை அடித்து இம்சித்துக் காயப்படுத்தவாவது கூடாதென்றும் அந்தணனுக்குப் போதித்தான்.

'அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.'

'அவ்வாட்டைப் பாருங்கள். ஆ! ஆ! அது எவ்வாறு தன் குட்டிகளை அன்புடன் போஷிக்கின்றது' என்று துளாதாரன் கூறினான். பசு தன் கன்றுக்குட்டியை எவ்வளவோ அன்புடன் நேசிக்கின்றது. இவற்றையறிந்தும் மனிதர் கன்றைப் பசுவினின்றும் பிரித்துப் பசுவைத் துன்புறுத்துகின்றனர். குதிரைகளையும் எருதுகளையும் பாரமான பளுவை இழுக்கச்செய்து அவற்றை எத்தகைய தொந்தரைகளுக்குள்ளாக்குகிறார்கள். இவ்வாறு பிராணிகளைத் தொந்தரை செய்யவேண்டுமென்று சிறந்த வேதசாஸ்திரங்கள் கூறுகின்றனவல்ல. பண்டைக்கால ஆசாரியர்கள் பல்லோரும் எல்லாப் பிராணிகளிடத்தும் நாம் தயையா யிருக்கவேண்டுமென்றே போதிக்கின்றார்கள். இவ்வாறான உபதேசங்கள் பலவற்றைத் துளாதாரனிடமிருந்து கேட்ட ஜாஜலி மிக்க களிப்புற்றவனாய்த் திரும்பவும் அநேக கேள்விகள் அவனைக் கேட்டு அவன் பதிற் சொல்ல, மிகக் கவனத்துடன் கேட்டுணர்ந்தான். இன்னா செய்யாமையினாற் போதரும் ஞானப் பெரும்பயன்களைப்பற்றிச் சாதாரண வர்த்தகன் குமாரனாகிய துளாதாரன் என்போன் சொல்ல, அந்தண ஜாஜலியும் நன்குணர்ந்து கொண்டான்.

இத்தகைய துளாதார ஜாஜலியும் சீக்கிரத்தில் நிரதிசயானந்தத்தை அனுபவிக்குமிடமாகிய பரம பதத்திற்கு, இம்மண்ணுலகை நீத்துச் சென்றனர் என்று மகா பாரதத்தில் சாந்திபர்வத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது.

'பலதுளி பெருவெள்ளம்' என்பதுபோல எண்ணிலாத பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து இப்பெரிய புவனமும் பிரமாண்டமான கடலுமாயிருக்கின்றன.

மனிதருடைய சிறிய பணிவுள்ள பல நற்காரியங்கள் பின்னர் நித்திய இன்பத்தை அனுபவிக்கும்படியான பரம பதத்திற் கொண்டுய்க்கின்றன.

Sen Tamil Magazine.

## 'AS SCARLET'

## இரத்தாம்பரம்

ஒரு அம்மாள் இரத்தாம்பரச் சிவப்பைப்பற்றிச் சொல்லுகிறதாவது:—

சில வருஷங்களுக்குமுன்னே நம்முடைய குருவின் விசாரணை ஸ்தானத்தில் ஒரு போலீஸ்காரனுடைய மனைவி வசித்தாள். அவள் தன்னுடைய வீட்டைப் பார்க்கிறவர்கள் பிரியப்படத்தக்கதாக அவ்வளவு அழகாயும் சௌக்கியமானதாயும் வைத்திருந்தாள். அவள் தன்னுடைய பிள்ளைகளுடைய வஸ்திரங்களையெல்லாம் செய்தாள். ஆனால் விசேஷமாக அவள் குணசாலியான ஸ்திரீயின் மாதிரியைப் பின்பற்றித் தன்னுடைய வஸ்திரங்களையெல்லாம் இரத்தாம்பரச் சிவப்பினால் செய்தாள் (நீதி. 31. 21). சிறு குழந்தையிலிருந்து அவள் இரத்தாம்பரச் சிவப்பையே விரும்பினாள்.

'நீ ஏன் இரத்தாம்பரச் சிவப்பையே விரும்புகிறாய்?' என்று நான் அவளைக் கேட்டேன். அதற்கு அவள் 'விசேஷமாய்ச் சிவப்பைமாத்திரம் விரும்புகிறதில்லை. ஆனால் இரத்தாம்பரத்தைக் கழுவினால் அது கெடுவதில்லை. அது பார்வைக்கு அழகாயும் எப்பொழுதும் புதுமையாயும் இருக்கும் ஆகையினால் அதை விரும்புகிறேன்' என்றாள்.

கொஞ்சகாலத்திற்குப் பிற்பாடு டோர்பைஷர் என்னும் மாகாணத்திலுள்ள ஒரு வீட்டை நான் சந்தித்தபொழுது, அங்கே உள்ள படுக்கையறைகளிலுள்ள திரைச் சீலைகளெல்லாம் இரத்தாம்பரச் சிவப்பினால் செய்யப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அது நேர்த்தியாயும் பிரகாசமாயுமிருந்தது. அந்த வீட்டுக்காரியிடம் நான் அதைப்பற்றி விசாரித்தபொழுது அவள் 'எவ்வளவு சூரியவெப்பம் அதின் மேல் பட்டாலும் அதின் நிறம் மாறாது ஆகையினால் அதை விரும்புகிறேன்' என்றாள்.

கொஞ்சகாலத்துக்கு முன்னதாக ஒரு சாஸ்திர வியாக்கினி 'இரத்தாம்பரக் கந்தையை மிகவும் காட்டமான திராவகத்தில் தோய்த்தாலும் அதின் நிறம் இலேசாக மாறுமேயல்லாது முழுவதும் மாறாது; ஏனென்றால் இரத்தாம்பரம் அழிந்துபோகாத சாயமுள்ளது' என்று அவர் சொன்னதை நான் கவனித்தேன்.



ஆகையால் நம்முடைய பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் என்று மூவாயிரம் வருஷங்களுக்குமுன் ஏசாயா தீர்க்கதரிசி சொன்னதை நீ அறிந்துகொள்ளலாம். தற்கால சாஸ்திரத்தினால் அதின் நிறத்தை மாற்றமுடியாவிட்டாலும் தேவனுடைய வல்லமையினாலே அதின் நிறம் மாறிப்போம்.

நம்முடைய பாவங்களுக்கு முன்னடையாளமாக இரத்தாம்பரச் சிவப்பை உபயோகிக்கவேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டிருப்பதை நீ அறிந்துகொள்ளலாம். நம்முடைய பாவங்களுக்காக நம்முடைய ரக்ஷகர் மரித்தபொழுது சிவப்பு அங்கியை அவருக்கு உடுத்தியிருந்ததையும் நீ அறிந்திருக்கலாம். ஆகவே இரத்தாம்பரச் சிவப்பைப்போன்ற நம்முடைய பாவங்களை ஒழிப்பதற்கு ஒரு வழி உண்டென்று நீ எப்பொழுதும் நினைத்துக்கொள்ளவேண்டும். அந்த வழி என்ன? நம்முடைய பாவங்களிலிருந்து நம்மைச் சுத்திசெய்கிற நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் திருரத்தமே.

## SCRIPTURE PUZZLE. BIRDS

## வேதவினா. பறவைகள்

1. நோவா பேழையிலிருந்து முதல் முதல் எந்தப் பறவையை அனுப்பினான்?

2. குருரத்துக்கு அடையாளமாக எரேமியா சொல்லுகிற பறவை எது?

3. சங்கீதக்காரன் தன் தனிமையைக் குறிப்பிட எடுத்துக் காட்டும் பறவைகள் இரண்டும் எவை?

4. கடவுளுடைய கிரியைகளைக் கணக்கிடும்போது யோபு எந்தப் பறவையின் அழகிய இறகுகளைச் சொல்லுகிறான்?

5. வனாந்தரத்தில் முறுமுறுத்த இஸ்ரவேலருக்கு ஆகாரமாக அனுப்பப்பட்ட பறவைகள் எவை?

6. எந்தப் பறவைக்குச் சமானமாய் நம்முடைய வயது திரும்ப வாலவயது ஆகும் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்?

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

அப்போது வேதாபிமானி குருவானவரைப் பார்த்து 'ஐயா! நீங்கள் சம்பாஷிக்கிறதைப் பார்த்தால் இந்த அம்மாள் புதிதாய் மார்க்கத்துக்கு வந்தவர்கள்போல் தோன்றுகிறது. இவர்கள் வந்து எவ்வளவு காலமிருக்கும், ஐயா?' என்றார்.

அதற்கு ஐயாவர்கள் 'இவர்கள் எஜமான் வந்து 5 அல்லது 6 வருஷமாகிறது. ஆனால் இந்த அம்மாள் வந்து ஏறக்குறைய 3 வருஷமிருக்கும்' என்றார்.

அதற்கு வேதாபிமானி 'ஏன்? அந்த ஐயாவும் அம்மாளும் ஒன்றாய் வரவில்லையோ!' என்றார்.

அதற்குக் குருவானவர் 'இல்லை! அந்த ஐயா தான் வீண்பக்தி நாசம் என்ற புத்தகத்தினை கடையிலே பழைய தானாகக் கிடக்கக் கண்டு அதை வாசித்து, பின்பு முழுப் புஸ்தகத்தையும் வாசித்து அவருடைய விசுவாசம் பலப்பட, கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்துகொண்டார். அந்த அம்மாள் அதிக நாளாகப் புருஷனுடைய சொல்லுக்ிணங்க மறுத்துக் கிறிஸ்துமார்க்கம் என்பது ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு விரோதமானது. இனஜனம் நம்மைத் தள்ளிப்போடுவார்களே என்ற எண்ணத்தினால் தடைப்பட்டு இருந்தார்கள். ஆனால் அந்த ஐயா மிகுந்த வைராக்கியத்துடனே ஜெபித்துவர, நாங்களும் ஜெபக்கூட்டங்களிலெல்லாம் அந்த அம்மாளுக்காக ஜெபிப்போம். எல்லாருடைய ஜெபங்களையும் கிருபையுள்ள கர்த்தர் கேட்டருளி, அந்த அம்மாளுடைய இருதயத்தை மாற்றவே, இந்த அம்மாள் கிளை அறுக்கப்போவதுபோல், அதிகாலையில் எழுந்து அந்த உபதேசியாரிடம் வந்து தன் எண்ணத்தைத் தெரிவிக்க அப்படியே இங்கே வந்தார்கள்' என்றார்.

அப்போது வேதாபிமானி 'ஆம் வந்து தீட்சைபெற்று மூன்று வருஷமாகிறது என்கிறீர்களே, கர்த்தருடைய பந்திக்குச் சேர்ந்திருக்கிறார்களா?' எனக் குருவானவர் 'அதற்கு வேண்டிய பாடங்கள் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். ஆனால் இம்மட்டும் சேராமல்தானிருக்கிறார்கள்' என்றார்.

அப்போது வேதாபிமானி அந்த அம்மாளை உருக்கத்துடனே பார்த்து, 'நீங்களும் எங்களைப்போல, இயேசுரட்சகரை விசுவாசித்து ஞானதீட்சை பெற்றுக்கொண்டதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இப்போது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஆனால் ஸ்நானம்பண்ணியாயிற்றே சாப்பிடத் தேவையில்லையா? ஏன் இன்னும் கர்த்தருடைய பந்திக்குச் சேராமலிருக்கிறீர்கள்?' என்றார்.



அப்போது அந்த அம்மாள் அதின் கருத்தை அறிந்துகொண்டு, ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவனும் கர்த்தருடைய பந்திக்குச் சேரவேண்டியது அவசியமும் தகுதியுமென அறிந்துகொண்டு, ஐயரவர்களிடம் 'ஐயா! நாங்கள் அடுத்த முறை கர்த்தருடைய பந்திக்குச் சேர விரும்புகிறோம்' என்றார்கள்.

அப்போது குருவானவர் 'அதைப்பற்றி உபதேசியாரவர்களிடம் சொல்லி உங்களை ஆயத்தப்படுத்தும்படி சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னைத்தான் சோதித்துத் தகுந்த ஆயத்தத்தோடே சேரவேணும்' என்று சொல்லி ஜெபம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.



அப்போது மத்தியானம் ஒருமணி ஆகிவிட்டதால் வெயில் அகோரமாயிருந்தது. கீதமணிக்குப் பசியும் களைப்புமாயிருந்தது. குருவானவர் வேதாபிமானியைப் பார்த்து 'நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?' என்றார்.

அதற்கு அவர் 'ஐயா! நாங்கள் சத்திரத்திலே தங்கியிருக்கிறோம்' என்றார்.

'சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்? நீங்கள் அன்னிய தேசத்தாராதலால் ஒருவரும் பழக்கமிருக்கமாட்டாது. எங்கள் வீட்டிலே நீங்கள் சந்தோஷமாய்த் தங்கலாம். இப்போது என் கூடவே வாருங்கள்' என்று தம்மோடு அழைத்துக்கொண்டு போயினர்.

அப்படியே ஆகட்டுமென்று வேதாபிமானியும், ஞானமணியும் சந்தோஷமாய் ஐயரவர்கள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஐயரவர்களுடைய மனைவி தன் எஜமான் வருந்தனையும் உண்ணாமல் காத்திருந்தாள். இவர்களைக் கண்டதும் தகுந்த ஆயத்தமில்லாமலும் ஏற்கனவே தெரிவிக்காமலும் இருந்ததினால் தகுந்தபடி உபசரிக்க ஏதுவில்லையே என்று இருப்பவற்றைக்கொண்டு பரிமாறி சந்தோஷமான முகத்தோடே உபசாரம் செய்ததால் சாப்பிட்டவர்க்கும் திருப்திகரமாகவே இருந்தது.

அந்த அம்மாளும் வேதாபிமானியைப் பார்த்து 'நீங்கள் போகுந்தனையும் இங்கே இருங்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்குச் செய்தால் கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார்' என்று சொல்லிக்கொண்டார்கள்.

அதுகேட்டு வேதாபிமானி தன் 'அரண்மனை உறவைவிட அடுக்களை உறவுதான் உறவு' என்பார்கள். அதுபோல் ஐயரவர்கள் உபசரித்தாலும் அம்மாள் மனங்கோணாது இருக்கச் சொன்னார்களே; அதுதான் பெரிய புண்ணியம் என்று எண்ணிக்கொண்டார்.

அன்று சாயந்திரம் ஐயரவர்கள் மிசியோன் காரியாதிகள் கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போ ஒரு மனுஷன் ஐயரவர்களைப் பார்க்கும்படி வந்தான். அவனைப் பார்த்தால் மகா யோக்கியமாகக் காணப்பட்டாலும் ஐயரவர்களிடம் தருமம் கேட்கும்படி மரியாதையாக வந்திருக்கிறான். அது வேதாபிமானிக்கு விளங்காததாக இருந்தது. பின்னும் வேதாபிமானி சிலர் சொல்லிக்கொள்வதுபோலக் கந்தையணிந்து பிச்சைகேட்டால் செம்பால் அடித்த துட்டுக் கிடைப்பதுவும் ஏச்சுப் பேச்சுகளோடுதானே. ஆனால் ஆசாரமான வெள்ளை உடையோடு போனால் 'தள்ளி நில்' என்று சொல்லாமல், வெள்ளி நாணயங்களில் ஏதேனும் பெறலாமென்று 'இரக்கப்போனாலும் சிறக்கப்போ' என்றபடி வந்திருக்கலாமோ? என்று சந்தேகித்து அவனிடத்தணுகி 'நீர் யாரய்யா? எங்கு வந்தீர்' என வினாவ, அவன் 'ஐயரவர்களைப் பார்க்க வந்தேன். அவர்கள் மாதந்தோறும் அரை ரூபாய் கொடுப்பார்கள், அதற்காக வந்தேன்' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'ஏன் ஐயா! உம்மைப் பார்த்தால் நன்றாயிருந்தவர்போலத் தோற்றுதே, நீர் இந்தத் தொழில் எடுப்பானேன்' என்றார்.

அப்போது அவன் "ஐயா! நான் வாலிபனாயிருந்தபோது தண்ணீரில் தடம்பார்த்துவிடுவேன். கல்லிலே நாருரிப்பேன். வானத்தை வில்லாக வளைக்க என்னாலாகுமென்பதாக என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்வார்கள். அப்பேர்ப்பட்ட தைரியமும் திடகாத்திரமும் எனக்கிருந்தது. அப்போ நான் சொற்ப சம்பளம்பெற்ற உபாத்தியாயர்தான். ஆனால் நான் அம்மட்டோடு நின்றுவிடாமல் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கொப்ப இலங்கைக்குப் போய்க் கொஞ்சம் பணம் சம்பாதிக்க எண்ணி அவ்விதமாக நல்ல உத்தியோகத்திலமர்ந்தேன். 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை' என்பதுபோல அந்நாட்டில் இருப்பவரைவிட நான் கொஞ்சம் படித்தவனாயிருந்ததுபற்றி எனக்கு 60 ரூபாய் சம்பளத்தில் பாரி உத்தியோகமும் கிடைத்து கொஞ்சகாலம் வேலையிலிருந்தேன். இதற்குள்ளாக இந்த நாட்டிலுள்ள ஒரு படித்த பெண்ணை என் தகப்பனார் பேசி ஒழுங்குபண்ணினார்கள். அவள் என்னைவிட அதிகம் படித்தவள். மெத்தக் கெட்டிக்காரி" என்றான்.





அப்போது வேதாபிமானி 'அதிகம் படித்த பெண் என்கிறாயே, அவள் கொஞ்சம் படித்த மாப்பிள்ளைக்கு எப்படிச் சம்மதித்தாள்?' என்றார். அதற்கு அவன் "என் பெயர்கொண்ட ஒருவருடைய மெட்ரிக்குலேஷன் சர்டிபிக்கேட் காண்பித்து, நானும் இங்கு வேலை கிடைத்தால் பார்ப்பதாகச் சொன்னதின்பேரில் பெண் பேசப்பட்டது. அப்படியே கலியாணம் முடிந்ததும், அந்தப் பிள்ளைக்குப் படித்துக்கொடுத்த ஐயர் எங்கள் இருவருக்கும் வேலை தருவதாகச் சொல்லி எனக்கு 20 ரூபா சம்பளம் கொடுத்து 6-ம் வகுப்புக்குப் பாடம் கற்பிக்க ஒழுங்கு செய்தார்கள். நானோ இங்கிலீஷில் குறைவுள்ளவனாயிருந்தபடியால் வயிற்றுவலி என்றும், சுகமில்லை என்றும் வகுப்புக்குப் போகாமல் கடத்தியும், 'கெட்

டிக்காரன் பொய் எட்டுநாளைக்குள்ளே' என்பதுபோல திட்டமாய்க் காரியம் வெளியாக, ஐய்ரவர்கள் துக்கப்பட்டு என்னையும் என் மனைவியையும் மனவருத்தத்தோடே அனுப்பிவிட்டார்கள்.

நாங்கள் மறுபடியும் இலங்கைக்குப் போய், பழையபடி 60 ரூபா சம்பளத்திலிருந்தோம். தேசம் என் மனைவிக்கு ஒத்துக்கொள்ளாததினால் 3 வருஷத்திற்குள் திரும்பும்படி ஆயிற்று. கையில் அதற்குள்ளாக 450 ரூபா ரொக்கம் வைத்துக்கொண்டு இங்கே வந்து சேர்ந்தோம். வீட்டையும் கொஞ்சம் நிலத்தையும் வாங்கி அதில் சிறு வீட்டைக் கட்டி குடிக்கூலிக்கு விட்டாலும், சொற்ப வாடகை வருமென்று, வக்கீல் ஆபீஸ்களுக்கு வாடகைக்கு விட்டதால், ஒரு வீட்டுக்கு 5 ரூபா கிடைத்தது. அதோடு வியாபாரமும் சிலநாள் செய்துவந்தோம். சீட்டுகள் பிடித்துவந்தோம். அதோடு ஐயரவர்களுடைய தயவை நாடி பலபேர் சிபார்சுகளைக்கொண்டு ஒரு உபதேசியார் வேலையும் கிடைத்தது. இதோடும் சும்மா இராமல் கம்பெனிகளில் சேர்ந்து, கப்பலுக்கு ஆள் கூட்டிவிட இரகசியமாய் ஒப்பந்தம்பண்ணி, அதின் விஷயமாகவும் கொஞ்சம் பொருள் கிடைத்தது. இதுவும் போதாதெனக் காலேஜில் படிக்கும் பிள்ளைகளுக்குச் சாப்பாடு சவதரிக்க எற்பட்டு, அதற்கும் ஒரு பிள்ளை ஒன்றுக்கு 8 ரூபா வீதம் கிடைத்தது. இப்படியாக எங்களுக்கு மாதம் 60 ரூபா வரும்படி உண்டாயிருந்தது" என்றார்.

(இன்னும் வரும்.)

Esther Manonmani Devadas.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ஆகஸ்டு௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | லூக். | 1. 1—17 | 11 | தி. | லூக். | 4. 1—13 | 21 | வி. | லூக். | 7. 1—10 |
| 2 | ச. | ,, | 1. 18—37 | 12 | செ. | ,, | 4. 14—32 | 22 | வெ. | ,, | 7. 11—23 |
| 3 | ஞா. | ,, | 1. 38—56 | 13 | பு. | ,, | 4. 33—44 | 23 | ச. | ,, | 7. 24—35 |
| 4 | தி. | ,, | 1. 57—66 | 14 | வி | ,, | 5. 1—11 | 24 | ஞா. | ,, | 7. 36—50 |
| 5 | செ. | ,, | 1. 67—80 | 15 | வெ. | ,, | 5. 12—26 | 25 | தி. | ,, | 8. 1—15 |
| 6 | பு. | ,, | 2. 1—20 | 16 | ச. | ,, | 5. 27—39 | 26 | செ. | ,, | 8. 16—25 |
| 7 | வி. | ,, | 2. 21—35 | 17 | ஞா. | ,, | 6. 1—12 | 27 | பு. | ,, | 8. 26—40 |
| 8 | வெ. | ,, | 2. 36—52 | 18 | தி | ,, | 6. 13—26 | 28 | வி. | ,, | 8. 41—56 |
| 9 | ச. | ,, | 3. 1—11 | 19 | செ | ,, | 6. 27—38 | 29 | வெ. | ,, | 9. 1—11 |
| 10 | ஞா. | ,, | 3. 12—22 | 20 | பு. | ,, | 6. 39—49 | 31 | ஞா. | ,, | 9. 28—42 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913


# மாதர் போதினி

No. 189 செப்டெம்பர் 1913 No. 9


OFFICE OF THE REGISTRAR REGISTERED 13 SEP MADRAS

## THE GLORY AND RESPONSIBILITY OF MOTHERHOOD

## தாயாயிருப்பதின் மேன்மையும் உத்தரவாதமும்

1. மேன்மை. இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி, அவரால் கிடைக்கும் பலன், என்ற தேவ வசனம் தாயாயிருப்பது ஒரு விசேஷித்த தேவாசீர்வாதமென்று காட்டுகிறது. புத் என்னும் நரகத்திலிருந்து பிள்ளைகள் பெற்றோரை மீட்டு ரட்சிக்கிறார்கள் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். இத்தேசத்தில் பிள்ளையில்லாதவள் தேவசாபமடைந்தவளென்று எண்ணப்பட்டு புருஷனாலும் பந்துக்களாலும் நிந்தையையும் துன்பத்தையுமடைகிறாள். புருஷன் மறுவிவாகம் செய்துகொண்டால் அவளுக்கு விஸ்தரிக்கக்கூடாத சஞ்சலம் உண்டாகிறது. அன்னாளுக்குண்டான நிந்தை எவ்வளவென்று நாம் வாசிக்கிறோம். பிள்ளைப்பேற்றினாலே இவ்வித நிந்தையும் துன்பமும் நீங்கிப்போகிறது. 'அம்மா' என்று கூப்பிட ஒரு பிள்ளை இருப்பது தாய்க்கு மிகச் சந்தோஷம். தன் பிள்ளையின் மதலைச் சொற்களைக் கேட்பதும், அதின் தளர்நடையைக் காண்பதும் அதிக ஆனந்தம். கவலை, பசி, சோர்வு யாவும் தன் பிள்ளையின் முகத்தைப் பார்த்தவுடனே பறந்துவிடுகின்றது. தன் பிள்ளையை அலங்கரித்துக் கையிலேந்திக் கண்ணே என்றும், பொன்னே என்றும் கொஞ்சி, மாகதமென்றும், மாணிக்கமென்றும் பேர்வைத்தழைக்கிறாள். எல்லாப் பாக்கியத்திலும் பிள்ளைப் பாக்கியமே பெரும் பாக்கியமென்று கண்டு மகிழுகிறாள். ஆபரணப் பெருமையுள்ள ஒரு ஸ்திரீ உத்தமி

யான ஒரு தாயிடம் போய் அவளுடைய நகைகளைக் காட்டச்சொல்ல, அவள் தன் பிள்ளைகளை முன்னிறுத்தி ‘இவைகளே என்னுடைய அருமையான நகைகள்’ என்றாளாம். நல்ல பிள்ளைகளையுடைய தாய்க்குண்டாகும் மரியாதையும் புகழ்ச்சியும் அதிகம். ‘உன்னைப் பெற்ற கர்ப்பம் பாக்கியமுள்ளது’ என்று ஒரு ஸ்திரீ இயேசுவிடம் சொன்னதுபோல அவளைப்பற்றியும் சொல்லப்படுகிறது. முற்காலத்தில் கிரேக்கு தேசத்தில் கிரேக்கஸ் என்ற பொது நாமமுடைய இரண்டு புத்திரரை ஒரு உத்தமி மகா கவலையோடு வளர்த்து தேசத்



தில் பிரயோசனமுள்ள மனிதராகும்படி செய்தாள். அவள் மரித்தபோது கல்லறை ஸ்தம்பத்திலே ‘கிரேக்கஸ் என்பவர்களின் தாய்’ என்ற விலாசம் நிலையாக எழுதி வைக்கப்பட்டது. சிறந்த தாய்மாரான அன்னாளும் ஐனிக்கேயாளும் உத்தம மாதிரிகளாக வேதத்திலே சொல்லப்பட்டு அழியாப் புகழடைகிறார்கள். ‘அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்.’ அவளுடைய வயோதிப காலத்தில் பிள்ளைகளால் ஆதரவும் ஆறுதலும் பெற்றுச் சமாதானமாய் நித்திரையடைகிறாள்.



2. உத்தரவாதம். மேன்மையோடே உத்தரவாதமும் சேர்ந்து வருகிறது. ‘இதை எனக்கு வளர்த்திடு’ என்று சொல்லி பார்வோனின் குமாரத்தி மோசேயை அவள் தாயிடம் ஒப்புவித்ததுபோலவே தேவனும் தமக்காக வளர்க்கும்படிக்கே பிள்ளையைக் கொடுத்திருக்கிறார். தேவ பொக்கிஷமாகிய பிள்ளையைப் பெற்றிருக்கும் தாய் தான் ஒரு உக்கிராணக்காரி மாத்திரமென்பதையும், அரிய இத்தாலந்தைப்பற்றி ஆண்டவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டுமென்பதையும் மறந்துவிடலாகாது. பிள்ளையின் அருமையே உத்தரவாதத்தின் மிகுதியைக் காட்டுகிறது. ஒரு பிள்ளையானது வெறும் பொம்மையல்ல. உலகமுழுவதிலும் விலையுள்ளதும் நித்தியகாலமாய்ப் பிழைத்திருப்பதுமான ஒரு ஆத்துமா. அதின் நித்திய வாழ்வு அல்லது நரக வேதனை தாயின்மேலேயே பொறுத்துநிற்கிறது. மேலும் நூற்றில் ஒருவர் மாத்திரம் கிறிஸ்தவராயும், பெண்களில் நூற்றுக்கு ஒரே ஒருவர் மாத்திரம் வாசிக்கக் கற்றிருக்கிறதுமான அவபக்தியும் அந்தகாரமும் நிறைந்த இந்தியா தேசத்தைப் புதுப்பிக்கத்தக்க ஸ்திரீ புருஷரை எழுப்புவது தாயின் பொறுப்பேயாம். தாயின் உத்தரவாதம் பொதுவாய் மூவகையாய் வெளிப்படும்.

(*a*) மாதிரி. ‘தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை’ என்பது மெய். தாயின் முகமே பிள்ளை படிக்கும் முதலாம் பாடப்புஸ்தகமாம். ‘நூறு சிறந்த உபாத்திமாரின் செல்வாக்கிலும் தாயின் செல்வாக்கே மிகுதி’ என்று ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். குணப்படாத ஒரு தாயின் பிள்ளை பிசாசின் பிள்ளையாய்ப்போவது ஆச்சரியமல்ல. ‘இச்சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறவன் கழுத்தில் யந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்தின் ஆழத்திலே அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்’ என்று இயேசு சொன்னார். அப்படியானால் பாவமறியாத பாலரை படுநரகத்துக்குட்படுத்தும் தாய்க்கு வரும் தண்டனை எவ்வளவு பயங்கரமாயிருக்கும். ஆகையால் தாய் தன் பிள்ளையினிமித்தமாவது தன்னைக் கிறிஸ்துவுக்குப் பிரதிஷ்டை செய்து உத்தம ஜீவியம்செய்து சிறந்த மாதிரி காட்டவேண்டும்.

(*b*) வளர்ப்பு. பிள்ளையின் ஆத்தும இரட்சிப்பே தாயின் விசேஷ கரிசனையாயிருக்கவேண்டும். இளம்பிராயமே குணப்படுவதற்கு ஏற்ற காலமென்பதை உணர்ந்து ஐனிக்கேயாளைப்போல் வேதத்தைக் கற்பித்து அன்னாளைப்போல் தேவபணிவிடைக்கென்று பிரதிஷ்டை செய்யவேண்டும். ஊசி திருடிய தன் மகனைக் கண்டித்து வளர்க்காத ஒரு தாய் அவன் கொலைத்தீர்ப்படைந்து கொலைக்களத்தில் நிற்பதைப் பார்த்துக் கண்ணீர்விட்டழுதாளாம். அவன் அவளைப் பார்த்து ‘தாயே

ஏன் அழுகிறாய்? உன்னாலேதான் இந்நிலைமைக்கு வந்தேன்' என்றாளும். "என் பக்தியுள்ள தாய் என் சிறு கையைப் பிடித்து முழங்காலில் நிற்கச்செய்து 'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே' என்று ஜெபிக்கப் பழக்கியிராவிட்டால் இன்று நான் ஒரு பெரிய நாஸ்திகனாயிருக்க நேரிட்டிருக்கும்" என்று பக்திமானான ஒரு சாஸ்திரி சாட்சியிடுகிறார். இவற்றைக் கவனிக்கும்போது பிள்ளையை வளர்ப்பதில் தாயின் உத்தரவாதம் எவ்வளவு மிகுதியென்று காண்கிறோம்.

(*c*) ஜெபம். 'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.' ஆகையால் தாய் தன் உத்தரவாதத்தின் மிகுதியையும் தன் சொந்தப் பலவீனத்தையும் உணர்ந்து தேவஉதவியின்மேல் எப்போதும் சார்ந்திருப்பது அவசியம். பக்தியுள்ள தாய்மாரின் கண்ணீருள்ள ஜெபம் பல துஷ்டப் பிள்ளைகளையும் சீரடையச் செய்திருக்கிறதென்பதற்குப் பல அத்தாட்சிகளுண்டு. சிறுவரை ஆசீர்வதித்த பாலர் நேசர்முன் தன் பிள்ளையை முழங்காற்படியிடச் செய்து அவருடைய ஆசீர்வாதத்துக்காக ஜெபிக்கப் பழகிய தாயே, தன் உத்தரவாதத்தை நிறைவேற்றக்கூடிய உத்தமியாவாள். அவளே பிள்ளைகளால் வரும் பாக்கியத்தையும், தேவனால் அருளப்படும் பேரின்ப ஆசீர்வாதத்தையும் அடைந்து சுகிப்பாள்.

Jane William. Pasumalai.

## STEPHEN'S FAITH

## ஸ்தேவானுடைய விசுவாசம்

இரண்டொரு வருஷங்களுக்கு முன்னதாக சிக்கண்டரபாத்தில் விஷபேதி அதிக கொடியதாயிருந்தது. ஒருநாள் மிஷன் போர்டிங் ஸ்கூலில் ரத்தினம் என்கிற சிறு பையனுக்கு வியாதி திடீரெனக் கண்டது. அந்த ஸ்கூலை மேல்விசாரணை செய்துகொண்டிருந்த துரை இதைக் கேள்விப்பட்டு, இதுவும் காலரா என்று பயப்பட்டு அதற்கேற்ற மருந்து வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போனார்.

வியாதிப்பட்ட பையனுடைய தகப்பன் ஐம்பது மைல் தூரத்திலுள்ள இடத்தில் வேலைசெய்த ஒரு உபாத்தியாயர். அவருடைய பெயர் ஸ்தேவான். அவர் முந்தினநாள் சிக்கண்டரபாத்துக்கு வந்து, தன் ஜில்லாவில் காலரா அதிகமாயிருப்பதாகச் சொல்லி, வியாதியாய்க் கிடந்த ஜனங்களுக்காக மருந்து கேட்டிருந்தார். இதெல்



லாவற்றையும் துரை யோசித்து, பையன் மரண அவஸ்தையில் இருக்கிறானே; தகப்பன் இங்கு இருப்பது அதிக நலம் என்று சொல்லிச் சிறுவனுக்கு வேண்டிய மருந்து கொடுத்துவிட்டு, உடனே 'ஸ்தேவான் எங்கே?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'ஐயா! அவர் இங்கே கொஞ்சநேரம் இருந்தார். ஆனாலும் தன் மகனுக்கு வியாதி கண்ட சமயத்தில் அவர் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும் என்று அதிக ஆத்திரத்துடன் போனார்' என்றார்கள்.



இதைக் கேட்டுத் துரை அதிக வருத்தப்பட்டார். ஸ்தேவான் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவராயிருந்தாலும் அதிகமாய் நம்பக்கூடியவர். இப்படிப்பட்ட சமயத்தில் ஏன் இவ்வளவு ஆத்திரத்தோடு போய்விட்டார்? மகனைப்பற்றிக் கவலையில்லையா? அந்தப் பையன் சீக்கிரத்தில் செத்துப்போவான் ஆக்கும்.

அந்தப் பையனோ செத்துப்போகவில்லை. மருந்து சாப்பிட்டுக் கடவுளுடைய மிகுந்த கிருபையினாலே பூரண சுகமடைந்தான்.

இரண்டு வாரமான பின்பு அந்தத் துரை ஸ்தேவானுடைய கிராமத்துக்குப் போக நேரிட்டது. உபாத்தியாயரைப் பார்த்தவுடனே

'உம்முடைய மகன் மாண அவஸ்தையில் இருக்கும்போது ஏன் அவனை விட்டுவந்தீர்' என்று கேட்டார்.

ஆனாலும் ஸ்தேவான் 'ஐயா! நான் என்ன செய்யக்கூடும்? நான் விஷபேதி மருந்துக்காகப் போயிருந்தேன். நான் என் மகனோடிருக்க வேண்டும் என்று தாமதம்பண்ணினால் இங்கு நம் கிறிஸ்தவர்கள் ஒருவேளை மருந்தில்லாமல் செத்துப்போயிருப்பார்கள் என்று பயந்து வந்தேன். எனக்கு எவ்வளவு வருத்தமாயிருந்தது. ஆனாலும் துரை உதவிசெய்வார், தேவனுடைய கிருபை அதிகம். நான் என் பிள்ளையைவிட்டு அவருடைய பிள்ளைகளுக்காக மருந்து கொண்டுவந்தால் அவர் என் மகனை விடமாட்டார் என்று வந்துவிட்டேன்', என்று சொன்னார்.

துரை அந்த ஏழையின் விசுவாசத்தைப் பார்த்து அதிசயப்பட்டார். அவர் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவராயிருந்தபோதிலும் பக்தியில் உயர்ந்தவர்.

நம்மில் எத்தனை பெயர், அவரைப்போல, நம்முடைய கடமையை நிறைவேற்றவேண்டும் என்று கடவுளை நம்பி அருமையான மகனை விட்டு வேலைக்குப் போவோம்?

## A CHRISTIAN FAMILY—A MEANS OF BLESSING TO THOSE AROUND

## கிறிஸ்தவ குடும்பம்—சுற்றியிருப்பவர்கள் ஆசீர்வாதமடைவதற்கு ஓர் வழி

ஒரு கிராமத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பம் சுற்றியிருக்கும் அஞ்ஞான குடும்பங்களுக்குப் பேராசீர்வாதமும் எழுப்புதலுமாயிருக்க வகைகள் என்ன?

அஞ்ஞானிகள் நிறைந்த ஒரு கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பம் இருப்பதே ஓர் ஆசீர்வாதம். ஏனென்றால் 'மனிதர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பரமபிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்று சொல்லிய நமது பரம தகப்பன் அஞ்ஞானிகள் நடுவில் நம்மைக் கொண்டுபோய் வைப்பதுவும் இந்நோக்கத்திற்கென்றுதான்.

இவ்விதமான இடத்திலிருப்பவர்கள் நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவைப் பின்பற்றி, அவர் இவ்வுலகத்திலிருந்தபோது நடந்த மாதிரி



நடந்து, தங்களுடைய நடக்கையினாலே அநேகரை அவரண்டை கொண்டுவர முயலவேண்டும். நாம் அவர்களுக்குப் போய்ப் புத்தி சொல்லி நீங்களும் கிறிஸ்தவர்களாகுங்களென்று சொல்லக்கூடாது.



நாம் அப்படிச் சொல்லுவோமானால் அவர்கள் பேர்க்கிறிஸ்தவர்களிடமிருக்கும் அநேகங் குற்றங் குறைகளையெல்லாம் சொல்லி, கிறிஸ்தவர்களெல்லாரும் அப்படித்தானிருப்பார்கள். ஆகையால் நீங்கள்

சொல்வதை நம்பமாட்டோமென்று சொல்வதுமல்லாமல், நம்மைப் பகைக்கவும் ஆரம்பிப்பார்கள்.

நாம் நம்முடைய நடக்கையிலே உண்மையும், செம்மையுமாய் நடந்து, நம்முடைய நற்குணங்களாகிய வெளிச்சம் சூரியனைப்போல பிரகாசிக்கச்செய்து, அதினால் சுற்றியிருக்கும் அஞ்ஞானிகள் பார்த்துப் பிரமித்துப்போய் நம்மண்டை வந்து நீங்கள் எவ்வளவோ உண்மையாயும், உத்தமமாயும் நடக்கிறீர்களே, நாங்களும் உங்களைப்போல நடக்கிறதற்கு உங்கள் மார்க்கத்தை எங்களுக்கும் போதியுங்களென்று சொல்லும்பொழுது, நாம் அவர்களுடைய வார்த்தையினால் பெருமையடையாமல், தாழ்மையாய்க் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்களை நம்மாலானமட்டும் அவர்களுக்கு விளங்கத்தக்கதாய்த் தெளிவாய்ப் போதிக்கவேண்டும். நாம் இப்படிச் செய்வோமானால் அநேகரைக் கிறிஸ்துவண்டை கொண்டுவரலாம். நாம் நம்முடைய நடக்கையினாலே அநேகரைக் கிறிஸ்துவண்டை கொண்டுவரலாமென்பதைச் சத்தியவேதத்தில் நன்றாய் அறியலாம்.

அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள் ஒவ்வொருநாளும் தங்கள் வீட்டில் குடும்ப ஜெபம் முதலானவைகளை ஒழுங்காயும், விடாமுயற்சியாயும், பயபக்தியாயும் செய்துவரவேண்டும். அவ்வூரில் கோவிலிருக்குமானால் அதற்கு ஒழுங்காய்ப் போய் அங்கு கேட்டுவரும் பிரகாரம் நடக்கவும் வேண்டும். அவர்கள் வீட்டில் சிறு பிள்ளைகளிருக்குமானால் அவர்களையும் ஒழுங்காய்க் கோயிலுக்குப் போகச்செய்வதுமல்லாமல் அவர்கள் அஞ்ஞானப்பிள்ளைகளைப்போல ஒருவரோடொருவர் சண்டை செய்யாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் சிறுபிள்ளைகளுங்கூட நல்லவர்களாய் நடப்பதினால் அவ்வஞ்ஞானிகளில் அநேகர் குணப்படுவதற்கு ஓர் நல்ல ஏதுவாகும். சிறுவர்கள் அப்படி நடக்காவிட்டால் அவர்கள் சொல்லுவார்கள் என்ன பெரியவர்கள்தான் கொஞ்சம் பக்தியாய் நடக்கிறார்கள், அவர்களுடைய பிள்ளைகளும் நம்முடைய மக்களைப்போலவே குறும்பு, துஷ்டத்தனம் முதலானவைகளைச் செய்கிறார்கள். ஆகையால் நம்முடைய மார்க்கமும் அவர்களுடையதும் ஒன்றுதான் என்று சொல்லுவதற்கு ஏதுவாகும். ஆகையால் அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறும்பு முதலானவைகள் செய்யாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அதைச் செய்துவிட்டாலும் அவர்களை நன்றாய்க் கண்டித்து மறுபடியும் செய்யாமலிருக்கும்படி செய்யவேண்டும். அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்களிடமிருக்கவேண்டிய முக்கியமான குணங்கள் என்னவென்றால் தெய்வபக்தி, தாழ்மை, அன்புமே. அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று



சொல்லியபிரகாரம் அவர்களிடம் அன்பும் தங்களைப்போலப் பிறரையும் நேசிக்கும் அன்புமிருக்குமானால் நாம் எல்லாக் கற்பனைகளின்படியேயும் நடக்கிறவர்களாயிருப்போம். அன்பிருக்குமானால் தாழ்மையும் தன்னாலே வந்துவிடும். ஆகையால் அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள் மாத்திரமல்ல, எல்லாக் கிறிஸ்தவர்களிடமும் இக்குணங்களிருக்கவேண்டும். அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்களிப்படி நடப்பதினால், நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து அநேகரை அவரண்டை கொண்டுவரலாம்.

அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள் அவர்களோடே பேசிப் பழகி, அவர்களுக்கு நேரிடும் துன்பங்கள் தங்களுக்கு நேர்ந்ததுபோல அன்பினால் உணர்ந்து, தங்களால் ஆனமட்டும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். துன்பமடைந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஆறுதல்படுத்தவேண்டும். ஏழைகளையும், வியாதியாயிருப்பவர்களையும் அடிக்கடி போய்ச் சந்திக்கவேண்டும். ஏனென்றால் ஏழைகளுக்கு ஒருவரும் உதவிசெய்யமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் கிறிஸ்தவர்களாகிய அவர்கள் போய் உதவிசெய்யவேண்டும். பணமுள்ளவர்களுக்கும் செய்யவேண்டியதுதான்; ஆனால் அவர்கள் அதற்குப் பதில் உபகாரம் செய்துவிடுவார்கள். ஆகையால் அவர்கள் திக்கற்றவர்களுக்கும் ஏழைகளுக்குமே அதிக உதவிசெய்யவேண்டும். அவர்கள் அப்படி உதவிசெய்யும்போது, அது நம்முடைய கடமையென்றுணர்ந்து செய்து அதற்குப் பிரதிபலன் விரும்பவே கூடாது. அவர்கள் பிரதிபலனை விரும்பிச் செய்வதினால் அந்த உபகாரம் விலைக்கு வாங்குகிற ஒரு பொருளைப்போலாகும். அவ்வஞ்ஞானிகளில் யாராவது அவர்களைப் பகைக்கிறதாக அவர்கள் கண்டால், அவர்களுடைய வீட்டிற்கு அடிக்கடி போய் அவர்களை அதிகமாய் நேசிக்கவேண்டும். அப்படிச் செய்வதினால் அவர்கள் அவர்கள்மேலுள்ள பகையை மறந்து அவர்களோடே அதிக பிரியமாயிருப்பார்கள். சில வேளைகளில் கிறிஸ்துமார்க்கத்திற்கும் வந்துவிடுவார்கள்.

அவர்கள் தங்களுடைய ஜெபத்தினாலே அநேகரை அவரண்டை கொண்டுவரலாம். ஜெபத்தினாலே முடியாத காரியம் ஒன்றுமில்லை. அவர்கள் ஜெபம் பண்ணும்போது ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும், விசுவாசத்தோடும் கேட்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ஜெபம் ஒருபோதும் வீணாகாது. ஜெபத்தினாலே அநேக காரியங்கள் கிடைக்கும். ஆகையால் அவர்கள் அவ்வூரிலுள்ள அஞ்ஞானிகளுக்காக ஒவ்வொருநாளும் ஊக்கத்தோடே ஜெபித்தால், அவர்கள் ஜெபங்கள் கட்டாயம் கேட்கப்படும். நாம் இப்படி ஊக்கத்தோடே கேட்டால் ஏன் கிடைக்காது. 'நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும்

தருவேன்' என்று வாக்கருளிய தேவன் ஒருபோதும் தம் வாக்கை நிறைவேற்றாமலிருக்கமாட்டார். ஆனால் நாம் தான் அவரிடம் ஊக்கத்தோடும் வாஞ்சையோடும் கேட்கிறதில்லை. அவர்கள் அப்படிக் கேட்டால் அநேகரை அவரண்டை கொண்டுவரலாம்.

அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள், தங்களுக்குத் துன்பங்களும் சோதனைகளும் நேரிடும்பொழுது, அது தேவனிடத்திலிருந்து தங்களைச் சீர்திருத்த அல்லது அவர்கள் பொறுமையைச் சோதிக்க வந்தது என்றுணர்ந்து அதிக பொறுமையாயிருந்து தங்களைச் சோதித்துப் பார்க்கவேண்டும். ஏதாவது குற்றமிருந்தால் அதற்காக மனஸ்தாபப்பட்டுக் கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்கவும்வேண்டும்; அதை விட்டுவிடவும்வேண்டும். இப்படிப்பட்ட ஜீவியம் அஞ்ஞானிகள் நடுவிலிருப்பவர்கள் செய்தால், கர்த்தர் அவர்களைக் கட்டாயம் ஆசீர்வதிப்பார்.

Grace Gnanaolivu,

London Mission Girls' High School, Vepery.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

அப்போது வேதாபிமானி 'இரண்டு எஜமான்களுக்கு ஊழியம்செய்வது கூடாது' என்றும் 'கலப்பையின்மேல் கைவைத்தவன் பின்னிட்டுப் பார்க்கக்கூடாது' என்றும் சொல்லியிருக்க நீர் இத்தனை அலுவல்களோடு தேவஊழியம் எப்படிச் செய்திருப்பீர்? என்றதற்கு, 'என்னால் கூடியமட்டுந்தான் செய்யக்கூடும். ஆனால் நான் தெருப்பிரசங்கம்பண்ண வேதபுத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே போகும்பொழுதெல்லாம் எங்கள் ஐயரவர்கள் உலாவப்போகும் நேரமானதால், என்னைத் தப்பாமல் கண்டு, அன்பாய்ப் பேசி, என் வேலையைப்பற்றி எவ்வளவோ சந்தோஷப்பட்டுக்கொள்வார்கள். நானும் அவர்களைப் பாராமல் ஒருநாளும் இருக்கமாட்டேன்' என்று சொன்னான். 'ஆம் ஐயா! அப்படியெல்லாம் உமது காரியங்கள் க்ஷேமமாயிருக்க நீர் இப்போது தரித்திரத்தினால் வருந்தும் நிலைமைக்கு வரக் காரணமென்ன?' என்று வேதாபிமானி துக்கத்தோடு கேட்க, "ஐயா 'கேடு வரும்போது மதிகெட்டு வரும்' என்றபடி, பொல்லாத காலம் சொல்லாமலே என் வீட்டுக்கு வந்துவிட்டது. சாப்பாட்டுக்காரர் விஷயமாய் எனக்கும் என் மனைவிக்கும் சமுசயம் வந்து மனஸ்தாபம் நேரிட்டது. அதோடு சாப்பாட்டுக்காரர் ஒழிந்தார்கள்; சீட்டுப்பணங்



கள் விழுந்து, கிடைத்த அன்றே திருடர்கள் வந்து வீட்டிலிருந்து வஸ்திரங்களையும் ரூபாயையும் திருடிக்கொண்டார்கள். நிலங்களையும் சரியானபடி ரிஜிஸ்தர் பண்ணாமலிருந்தபடியால் முன் பாத்தியதைக்காரர் வழக்காடி எடுத்துக்கொண்டார்கள். இத்துன்பங்களினால் வருந்தும்போது பிள்ளைகளுடைய பராமரிப்பும் குறைவுபட, பிள்ளைகளில் மெத்த அருமையான ஒரு ஆண்குழந்தையும் தவறிவிட்டது. இப்படித் துன்பத்தின்மேல் துன்பமும், அலைமேல் அலையெடுத்தாற்போல விசாரங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் வரவே, எனக்குச் சித்தப்பிரமை (புத்தி மாறாட்டம்) போல் உண்டாகி என் உபதேசியார் வேலையும் ஏடுபட்டது. என் மனைவியும் தன் தாய்தந்தையர் வீட்டுக்குப் போய்விட்டாள். இப்போ நான் தன்னந்தனியனாய்த் தவிக்கிறேன். இங்கே முன் என்னை அறிந்த பெரிய மனுஷர்கள் ஏதாகிலும் கொடுக்கும் உபகாரங்களைக்கொண்டு காலம் கழித்துவருகிறேனையா" என்றும், 'என் முன்னிலைமையை நினைக்கும்போது கண்ணீர் வடிகிறதென்றும், நானும் இந்த உலக உல்லாசங்களுக்காகவும், பொருள் சம்பாதிப்பதற்காகவும், நான் உழைத்ததில் பாதியானாலும், என் தேவனுக்கென்று மனப்பூர்வமாய் உழைத்திருப்பேனானால் என் முதுமையில் இப்படிக் கஷ்டப்படவிடமாட்டார்' என்றும் சொன்னான்.

அதற்குள்ளாக ஐயரவர்கள் எழுந்து, அவருக்கு வழக்கப்படி அரை ரூபாய் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பின்பு வேதாபிமானி "ஒரு மனுஷன் உலகத்தில் ஒன்றிலும் திருப்தியடைகிறதில்லை. பேராவாக்கொண்டு அலைவதால் 'பேராசை தரித்திரம், தீராத உபத்திரவம் என்றாகிறது' என்று சொல்லி, கீதமணியைப் பார்த்து, 'பார்த்தாயா, கீதா! இதினாலே உலகத்தில் மண், பெண், பொன் இவையெல்லாம் மாயையென்றும், நிலையாது என்றும், அதனைச் சம்பாதிக்கும்படி எடுக்கும் உபாயங்களெல்லாம் அதிக காலம் நிலையா என்றும், மனுஷர் தயவில் கிடைப்பது நீடித்த காலம் கிடையாதென்றும் அறிந்துகொண்டாயா? சரீர முயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது. தெய்வபக்தியே இச்சீவனுக்கும் வரும் ஜீவனுக்கும் அதிக பிரயோஜனமுள்ளது என்பதைத் திட்டமாய் அறிந்துகொள் அப்பா!' என்றார். அப்போது கீதமணி, ஆம் ஐயா! உலகத்திலே அவருக்குத் தண்டனை கிடைத்துவிட்டதே. சிலர் செத்த பிறகு என்ன நடக்கும்? யார் கண்டார்? என்று துணிந்து பாவம் செய்கிறார்களே" என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே ஐயரவர்கள் உலாவப் போகிற நேரமாகிவிட்டமையால், அவர்கள் வெளியே புறப்பட்டுப் போகும்போது, வேதாபிமானியிடம் கீதமணி 'ஐயா! நாமும் ஐயரவர்

களோடு உலாவிவருவோமா!' என்க, மூவரும் புறப்பட்டுப் போனார்கள். போகும் வழியில் ஒரு தாமரைத்தடாகம் இருந்தது. அதிலே தாமரைப் புஷ்பங்கள் பூத்து அதின் வட்டமான இலைகளோடு வெகு அழகாய்த் தோன்றின. புஷ்பங்களில் தேனீக்கள் ரீங்காரமிட்டு மொய்த்துக்கொண்டிருந்தன. அதனைப் போய்ப் பறித்துக்கொண்டுவரக் கீதமணிக்கு வெகு ஆசையிருந்தும், தண்ணீரி விறங்கவும், சற்றுத்தூரம் போய் அதைப் பறிக்கவும், தன்னால் கூடாதே என்று எண்ணி 'கிட்டாதாயின் வெட்டென மற' என்றிருந்தாலும் அதன்மேலிருந்த அவாவினால் ஐயரவர்களையும் வேதாபிமானியையும் கூப்பிட்டு, 'ஐயா, இந்தப் பூவைப் பார்த்தீர்களா! அதில் எத்தனை வண்டுகள் சுற்றிச்சுற்றிப் பறந்து வட்டமிட்டுவருகின்றன' என்றான்.

அப்போது ஐயரவர்கள் வேதாபிமானியைப் பார்த்து "இப்படித்தான் இந்தப் பூ இந்தத் தடாகத்தின் மத்தியில் எவ்வளவு காலமிருந்தபோதிலும், அந்தத் தடாகத்திலுள்ள மச்சங்கள், தவளைகள், அதின் மணத்தையும், குணத்தையும் கண்டுகொள்ளவும் கவனிக்கவும் ஏதுவில்லாமலிருக்கிறது. ஆனால் தூரத்திலிருக்கும் வண்டினங்களோ அதிலுள்ள தேனைச் சேர்த்தும் மணத்தை முகர்ந்தும் மகிழ்ச்சிகொள்ளுகின்றன. அன்றியும், நம்போல் ஒத்தவர்க்கு மருந்துக்கு உதவுமாறு தேனைக் கூட்டிவைக்கிறதினால் தூர இருக்கிற நமக்கும் அதின் பிரயோஜனம் கிடைக்கிறதுபோல, இயேசுசுவாமி நமது கண்டத்தில் கன்னிகையின் வயிற்றில் உற்பவித்து அற்புத அதிசயங்களைச் செய்து கொல்கதாமலையில் இரட்சிப்பின் கிரியையை நடப்பித்து, மரித்து, உயிரோடெழுந்து, பரமேறியிருக்க நமது கண்டத்தவரும், யூதர்களும் அத்தவளைகள் மச்சங்களைப்போல உணர்வில்லாமல் 'வலிய வந்த சீதேவியைக் காலாலே உதைத்தாற்போல்' தள்ளிவிட்டார்கள். ஆனால் ஐரோப்பாக் கண்டத்தார் வெகு தூரத்தில் இருந்தும், தேனீக்களைப்போல இயேசுரட்சகரின் பெரிய ரட்சிப்பைத் தாங்களும் தேடிப் பெற்றுக்கொண்டதுமல்லாமல் அந்தப் பெரிய ரட்சிப்புக் கிடைக்கும்படி, 'தேனினிமையிலும் திவ்ய மதுரம்' ஆகிய இயேசுவின் நாமத்தின் பேரின்பத்தை நமக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நமது கண்டத்தில் வந்த இயேசுவின் பெரிய ரட்சிப்பைப் பிந்திதான் அறியக்கூடியதாயிருந்தது. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்" என்றார்.

இதற்குள்ளாக அந்தகர்களைப் படிப்பிக்கும் இடம் வந்தது. அங்கே பார்த்தால் குருடர்களுக்குக் கணிதசாஸ்திரம் எழுத்து வாசிப்பும், இன்னரம், மிருதங்கம், ஹார்மோனியம் முதலிய வாத்தியங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. பின் செவிடர் ஊமையர் இருக்கும் இடத்துக்கு



வந்தார்கள். அவர்களுக்குத் தையலும், சைகையினால் பாடங்களும், போதனைகளும் கற்பிக்கப்பட்டன.' குருடர், செவிடர், ஊமையர்களுக்கு இவ்வளவு தெளிவும் புத்திவிசாலமும் ஏற்படுகையில், கண் தெளிவுள்ள நாம் இடறுவது சரியா? அறிந்தும் பாவம்செய்கிறவன் அநேக அடிகளால் அடிக்கப்படுவான் என்கிற சத்தியத்தை மறந்து திரிகிறார்களே என்று பேசிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தார்கள்.

அங்கே பிள்ளைகள் தீபமேற்றி வெளிச்சத்தினண்டையில் இருந்து தம்தமக்குரிய பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் கூடியமட்டும் ஒழுக்கமும், மரியாதையுமுள்ள பிள்ளைகளாக வளர்க்கப்பட்டிருப்பதால், ஏழு பிள்ளைகள் அந்த வீட்டிலிருந்தும் சந்தடிச்சரவுகள் காணப்படாதிருந்ததுபற்றி வேதாபிமானிக்கு ஆச்சரியமாக இருந்தது. ஐயரவர்கள் ஜெபவேளை வந்ததும் பிள்ளைகளெல்லாரும் வரிசையுடன் வந்திருந்து, ஆளுக்கொரு வேதவாக்கியத்தை மனப்பாடமாய்ச் சொல்லக்கேட்டு, ஜெபம் ஆரம்பித்தார்கள். சமயத்துக்கு ஞானப்பாட்டின் மூன்று கவிகளைப் பாடி வேதத்தில் அன்று வாசிக்கவேண்டிய பாகத்தை வாசித்து, பொதுவாகப் புத்திமதி சொல்லி பிள்ளைகளை வினவினார்கள். பிள்ளைகள் ஒவ்வொருவரும் சரியான உத்தரம் சொன்னார்கள். பிறகு முறைப்படி ஜெபம்செய்து முடித்தார்கள். அந்த ஜெபம் தனக்காக மாத்திரமல்ல, எல்லாருக்காகவும், எல்லா மிஷன் வேலைகளுக்காகவும், கிறிஸ்துமார்க்க ஐக்கியத்திற்காகவும் செய்யப்பட்டது. வேதாபிமானிக்குப் பரமானந்தமாயிருந்தது என்றே சொல்லலாம். மறுநாள் சனிக்கிழமையானதால் பிள்ளைகள் சாவகாசமாய்ச் சாயங்காலம் விளையாட இடம் பெற்றார்கள். அப்போது கிருபா என்ற பெண் ஓடிவந்து தயாவதியை நோக்கி, 'அக்கா! உனக்குத் தைத்த புது உடுப்பைப் பார்த்தால் வெகு நன்றாயிருக்கிறதே. எப்போ உடுக்கப்போகிறாய்?' என்றாள். அதற்கு தயாவதி, 'கிருபா! ஏன் அப்படிக் கேட்கிறாய்? நாம் புது உடுப்புகளை முதலாவது கோவிலுக்கு உடுத்திப்போய், சுவாமிக்குத் துதி செலுத்தின பின்புதானே, வீட்டிலே சாதாரணமாய் உபயோகிப்போம், இது உனக்குத் தெரியாதா?' என்று சொல்லி 'கர்த்தருக்குச் சித்தமானால் நாளை ஞாயிற்றுக்கிழமையாதலால், நாளை உடுத்திக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். அந்த உடுப்பு எனக்கு அதிக பிரீதியானாலும், அதைக் கொடுத்த கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறேன்' என்றாள்.

Esther Manonmani Devadas.

(இன்னும் வரும்.)

## LOVE NEVER FAILETH

## பரம தர்மம்

உத்தமோத்தமமான பரம தர்மம் அகிம்சையே என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸ்ரீமத் பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் என்று முன்னமொருமுறை சொன்னோமன்றோ? பிறவுயிர்க்குக் கொடுமை நாடுவோன் பக்திமானாகமாட்டான். நம்மாற் கூடியவரையிற் பிறவுயிர்க்குத் துன்பம் புரியாமலிருக்க முயற்சித்தால் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா திருவாய் மலர்ந்தருளியபடி நாமெவரும் நடந்தவராவோம். சில வேளைகளில் நாம் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யவேண்டி வரும்.

நாம் நோயாளியாயிருந்தால் நம்மைச் சுகப்படுத்துமாறு நம்மை அப்பொழுது இம்சிக்கவேண்டிய காரியங்களைச் செய்து துன்புறுத்த நேரிடும். இவ்வாறே பிராணிகளுக்குச் சில வேளைகளில் துன்பத்தைச் செய்ய நேரிடும். அப்பொழுது நாம் அவற்றிற்குத் தொந்தரை கொடுப்பதினால் உண்மையிலவை யாதானும் பயனடைகின்றனவா என்பதை யோர்ந்து அவற்றை அவ்வாறு தொந்தரைக்குள்ளாக்க வேண்டுமேயன்றி நாம் அவை இம்மாதிரியாய் அவஸ்தைப்படுமென்பதையாவது அல்லது அவை அவஸ்தைப்பட்டால் நமக்கென்னவென்று எண்ணியாவது அவற்றின் நலங்கருதாமல் நாம் அவற்றைத் தொந்தரைபடுத்தல் நன்றாகாது. இம்மையில் எந்தப் பிராணிகளையும் அச்சுறுத்தித் துன்பஞ் செய்யாதிருக்கிறவன் தான் இறந்த பின்னர் எவற்றினாலும் பயமுறுத்தப்படாமல் சுகப்படுவான் என்று மனுதர்மசாஸ்திரி என்னும் பெரியவர் கூறுகின்றார்.

> 'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
> பிற்பகற் றாமே வரும்.'

பிறவுயிர்களுக்கு மனோவாக்குக் காயங்களினால் சிறிதேனும் துன்பத்தையே நினையாமலும் செய்யாமலுமிருந்த சிறந்த ஆசாரியர்களையும் ரிஷிகளையும் பற்றி வேதாகம சாஸ்திரங்களில் எண்ணிறந்த கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அத்தகைய பெரியோர்களுக்கு அழகிய பெயரொன்றுமுண்டு. யோகியென்று சொல்லப்படும் அப்பெயர் மன்னுயிர் நண்பன் என்று பொருள் பெறும். மலைப்ராந்தியங்களிலுள்ள காட்டுமிருகங்கள் அவரைத் தாக்கா. பாம்புகள் விஷஜெந்துக்கள் முதலியவற்றினூடே அவைகளால் தீங்குறாமல் அவர் சஞ்சரிக்கக்கூடும். பட்சிகளெல்லாம் அவரிடத்திலேயே வந்து சரண



மடைந்து புகலிடம் பெறுகின்றன. பயமறியாப் புள்ளிமான்களும் அவர் கையினின்று ஆகாரம் பெறுகின்றன.

உலகத்துயிர் யாவற்றின்மேலும் வாஞ்சை வைத்துள்ளவர், மன்னுயிர் நண்பர் எனப்படுவார். தன்னுயிர்போலும் மன்னுயிர்களை மதிக்கிறவர்களும், பிறவுயிர்களுக்கு எள்ளளவேனும் தீங்குபுரியாதவர்களும், தமக்குண்டாகும் கோபத்தை யடக்குகிறவர்களும் இம்மையிலும் மறுமையிலும் பேரின்பத்தை யடைகிறார்கள். எல்லா வஸ்துக்களையும் சிறிது பெரிதென்று பாராமல் ஒவ்வொரு வஸ்துவின்மீதும் எவன் அன்பு பாராட்டுகிறானோ அவனே ஈச்வரனை உண்மையாய்த் தியானம் செய்பவன் என்று கருதப்படுவான். ஏனெனில் நம்பால் அன்பு பாராட்டுகிற ஈச்வரன் எல்லாவற்றையும் சிருஷ்டித்து எல்லாவற்றிடத்தும் ஓரே தன்மைத்தான அன்பையே பாராட்டுபவராகின்றார். மகத்தான யோகிகள் செய்த வண்ணமே நாமெல்லாரும் செய்யவியலாதாயினும் பின் சொல்லிய வண்ணமாய்ச் சிறு குழந்தைகள் கூடப் பெரிய யோகிகள் செய்ததைப் பின்பற்றிச் செய்யலாம். நமக்குத் துன்பஞ் செய்தவரிடத்தும் நாம் தயவாயிருக்கவேண்டும்.

> 'கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
> செய்யாமை மாசற்றார் கோள்.'

Sen Tamil Magazine.

## SCRIPTURE PUZZLE. INSECTS

## வேதவினா. பூச்சிகள்

1. தங்கள் ஆபத்துக்காலத்தில் எந்தப் பூச்சி இஸ்ரவேலருக்குப் பாரமாயிருக்கும்?

2. ராஜாக்களின் அரமனைகளில் எந்தப் பூச்சி இருக்கிறது என்று யோபு சொல்லுகிறான்?

3. சவுல் தாவீதைக் கொலைசெய்யத் தேடியது எந்தப் பறவையையும் எந்தப் பூச்சியையும் வேட்டையாடுவதுபோல என்று சொல்லியிருக்கிறது?

4. எந்தப் பூச்சி சுறுசுறுப்புக்குத் திருஷ்டாந்தமாகச் சாலோமோன் எடுத்துக் காட்டுகிறான்?

5. கடவுள் தாம் எப்பிராயீம்மேல் வைத்த கோபத்தை எந்த நாசமாக்குகிற பூச்சிக்கு ஒப்பிடுகிறார்?

## ANSWERS TO JULY PUZZLE

### விடை

1. மாதளம்பழங்கள். யாத். 39. 24, 25.
2. வயல்வெளியின் படைச்சால்களின் விஷப்பூண்டுகள். ஓசி. 10. 4.
3. வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய். எண். 11. 5.
4. புல். சங். 103. 15.
5. முசுக்கட்டைச்செடி. 1 நாளா. 14. 15.
6. நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகள். ஏசா. 44. 4.

Right answers received from G. Rajaratnam,
London Mission, Pollachi.

குறிப்பு:— வேதவிடுகதை முதலியவைகளுக்குத் தரும் விடைகளைப் பத்திராதிபருக்கு அனுப்பலாம். ஆனால் அவ்வவற்றை அங்கீகரிக்கும் தனித்தனி பதில் எழுத இயலாது. சரியான விடைகள் அங்கீகரிக்கப்படுவதை மாதர் போதினியின் பக்கங்களில்தான் கண்டுகொள்ள வேண்டியதாகிறது.

## LESSONS FOR FAMILY WORSHIP

### வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ௵ செப்டெம்பர் ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | ரூத். | 1. | 1—14 | 11 | வி. | எஸ். | 2. | 12—23 | 21 | ஞா. | யோபு, | 1. | 1—12 |
| 2 | செ. | ,, | 1. | 15—22 | 12 | வெ. | ,, | 3. | 1—7 | 22 | தி. | ,, | 1. | 13—22 |
| 3 | பு. | ,, | 2. | 1—13 | 13 | ச. | ,, | 3 | 8—15 | 23 | செ. | ,, | 2. | |
| 4 | வி. | ,, | 2. | 14—23 | 14 | ஞா. | ,, | 4. | 1—8 | 24 | பு. | ,, | 3. | 1—10 |
| 5 | வெ. | ,, | 3. | 1—13 | 15 | தி. | ,, | 4. | 9—17 | 25 | வி. | ,, | 3. | 11—26 |
| 6 | ச. | ,, | 3.14 18;4.1-5 | | 16 | செ. | ,, | 5. | | 26 | வெ. | ,, | 4. | 1—11 |
| 7 | ஞா. | ,, | 4. | 6—22 | 17 | பு. | ,, | 6. | | 27 | ச. | ,, | 4. | 12—21 |
| 8 | தி. | எஸ். | 1. | 1—12 | 18 | வி. | ,, | 7. | | 28 | ஞா. | ,, | 5. | 1—16 |
| 9 | செ. | ,, | 1. | 13—22 | 19 | வெ. | ,, | 8. | 1—8 | 29 | தி. | ,, | 5. | 17—27 |
| 10 | பு. | ,, | 2. | 1—11 | 20 | ச. | ,, | 8. | 9—17 | 30 | செ. | ,, | 6. | 1—13 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

MADRAS

மாதர் போதினி

No. 190 அக்டோபர் 1913 No. 10

## STORY OF GUNAMANI (*Cont.*)

### குணமணி கதை (தொடர்ச்சி.)

அதற்கு கிருபா 'ஆம், நமது அம்மா நமக்குத் தருகிறவை யாவும், கர்த்தர் நமக்குத் தருகிறார் என்றும், அவருக்குத் தோத்திரம் செய்வது அவசியமென்றும் சொல்லுவார்களல்லவா?' என்றாள்.

இதற்குள்ளாக அவர்கள் தம்பி தேவசகாயம் என்பவன் வந்து, 'அக்கா! ஒரு கதை சொல்லு' என்றான். இவர்கள் மூவரும் வேதாபிமானியிடம் வந்து! 'பாட்டையா! எங்களுக்கு ஒரு கதை சொல்லுங்கள்' என்றார்கள். அதற்கு வேதாபிமானி 'எனக்குப் பழைய கதைகள்தான் தெரியும், அது புஸ்தகத்தில் வாசித்திருப்பீர்களோ என்னவோ! ஆனாலும் நான் தெரிந்தமட்டும் சொல்லுகிறேன், கேளுங்கள்' என்றார். அதற்கு மூவரும் சந்தோஷத்தோடே ஆவலாய் 'சொல்லுங்கள் பாட்டையா' என்றார்கள். அப்போ வேதாபிமானி சொல்லத் தொடங்கினார்.

"ஓர் ஊரிலே ஒரு ராஜன் இருந்தான். அவனைக் காணும்படி இரண்டு வித்துவான்கள் போய் இருந்தார்கள். ராஜா அவர்களைப் பார்த்து 'சுகமாயிருக்கிறீர்களா?' என்று வினவ, ஒருவன் 'மகாராஜாவினுடைய கிருபையினாலே சுகமாயிருக்கிறேன்' என்றான். மற்றொருவன் 'கடவுளுடைய கிருபையினாலே இதுவரையும் சுகமாய்க் காக்கப்பட்டு வருகிறோம், மகாராஜாவே' என்றான். இதுகேட்டு மகாராஜா தன்னைப் புகழ்ந்தவனுக்குத் தக்கதோர் இனாமளிக்கக் கருதிப் பெரும் பூசணிக்காய் ஒன்றை வாங்கி, அதின் காம்பை அறுத்தெடுத்துவிட்டு, அதினுள்ளே யுள்ள வித்துகளையும் அப்புறப்படுத்தி, அது நிரம்பத் தங்கப் பவுன்களைக் கொட்டி பழையபடி வாய்தெரியாமல் காம்பைவைத்து மூடிவிட்டுக் கொண்டுவரும்படி ஏவலாளருக்குத்

கற்பித்தபடி கொண்டுவரப்பட்டது. ராஜா இருவருக்கும் வெகுமானமளிக்கும்போது தன்னைப் புகழ்ந்தவனுக்கு இப்பூசணிக்காயையும், 'கடவுளுடைய கிருபையால் சுகம்' என்றவனுக்கு 1 ரூபாயையும் கொடுத்தனுப்பிவிட்டான். இருவரும் ராஜாவுக்கு நமஸ்காரம்செய்து போய்விட்டார்கள். பூசணிக்காயைக் கொண்டுபோனவன் 'நம்முடைய சிறு குடும்பத்துக்கு, இப்பெரும் பூசணிக்காய் என்னத்துக்கு? பிள்ளைகளுக்கும் ஆகாது. இதை 4 அணாவுக்கு விற்று செலவு வாங்கிக்கொண்டுபோவது நலம்' என உத்தேசித்து அங்ஙனமே பூசணிக்காயை விற்று ¼ ரூபாய்க்கும் தானியம் வாங்கிக்கொண்டு வளவுக்கேகினான். இதன்பின்னர் மற்றவன் பிள்ளை பாக்கியம் உடையவனாயிருந்ததினால் அப்பூசணிக்காயை வாங்கினால் வீட்டிலே பிள்ளைகள் ஆசைதீரச் சமைத்து உண்டு, காலம் கழிக்கலாமென்று ராஜா தந்த 1 ரூபாயில் பூசணிக்காயை வாங்கினவனுக்கு ½ அணா லாபம் கொடுத்து 4 அணா 6 பைசாவுக்கு அந்தப் பூசணிக்காயை வாங்கிக்கொண்டு ½ ரூபாய்க்கு அரிசியும், மீதிக்கு மற்றச் செலவுகளும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு எகினான். வீடுவந்து மனைவியிடம் பூசணிக்காயைக் கறிவைக்கும்படி சொன்னான்.

அதை அறக்கவே உள்ளே இருந்த தங்கப்பவுன்கள் தகதகவென மின்னிக்கொண்டு கலகலவென வெளிப்பட்டன. அதைக் கண்ட மனைவி ஆனந்தங்கொண்டு, அளவுக்கடங்கா சந்தோஷத்தால், இருதயம் பூரித்து, தன் எஜமானை விளித்துப் பேச நாவெழாமல் கரத்திலுள்ளதைக் காட்டினாள். அவனும் சந்தோஷத்தால் கரம் கூப்பி, கடவுளைத் தொழுது, 'இது கர்த்தர் தந்தது! கர்த்தர் தந்தது!' என்று அகமகிழ்ந்து கூவி, காரியத்தின் வரலாற்றை மனைவிக்கு விவரித்தான். ஆக இருவரும் முழந்தாளிலிருந்து, ஸ்தோத்திர ஜெபம் செய்து அந்தத் தங்கநாணயங்களிலிருந்து கர்த்தருக்கும் தகுதியான காணிக்கை கொடுத்து, மெத்தைவீடு கட்டி, நிலபுலம் வாங்கி, தரித்திரம் நீங்க ஜீவனோபாயத்துக்காதாரமானவைகளைத் தேடிக்கொண்டு, மிகுதியானதை ஏழைகளுக்குக் கொடுத்து சற்பாத்திரத்தில் தர்மம் செய்து சம்பிரமமாய் வாழ்ந்துவந்தனர்.

இப்படியிருக்கையில் மறுவருஷம் ராஜனைப் பார்க்கும்படி மேற்சொல்லிய இருவரும் போக நேரிட்டது. அப்போது ராஜபார்வையில் 'கடவுளுடைய கிருபையால் சுகமாயிருக்கிறேன்' என்றவர் மிகுந்த முகமலர்ச்சியும் செழிப்புமாயிருக்கிறதையும் 'இராஜாவினுடைய தயவினால் சுகமாயிருக்கிறேன்' என்றவன் வாடி வதங்கித் தரித்திரமேலிட்டதால் தலைகவிழ்ந்து நிற்பதையும் கண்டு மனதுக்குள் ஐயமுற்று 'சுகமாயிருக்கிறீர்களா?' என வினவினார். இருவரும்



பழையபடியே உத்தரம் சொன்னார்கள். அப்போது ராஜன் பூசணிக்காய் தந்தவனோடு 'நான் உனக்குத் தந்த பூசணிக்காயை என்ன செய்தாய்?' என்றார். அவன் 'நான் அதை விற்று அன்றைக்கு வயிற்றுப்பாடு கழித்தேன், மகாராஜாவே' என்றான். மற்றவரைப் பார்த்து 'நீர் நான் கொடுத்ததை என்ன செய்தீர்' என்க, 'மகாராஜாவே! நீங்கள் கொடுத்த நாணயத்தினால் கொஞ்சத்துக்கு அந்தப் பூசணிக்காயையும், மீதிக்கு அரிசி முதலியனவும் வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோய் இந்நாள்வரையும் சந்தோஷமாய்க் கழித்து க்ஷேமமாயிருக்கிறோம்' என்க, அப்போ ராஜன் வெட்கி, 'நாம் கொடுத்தாலும் தெய்வம் நடத்துகிறதைப் பார்! மனுஷ தயவு அபத்தம், தெய்வ கிருபையோ என்றுமுள்ளது' என்று ராஜாவைப் புகழ்ந்தவனை நோக்கி, 'இனி மனுஷரைப் புகழாமல் தெய்வத்தின்மேல் நம்பிக்கைவை. அவர்தான் உன்னையும் என்னையும் நடத்துகிறவர்' என்று சொல்லி சொற்ப உபகாரம்செய்து அனுப்பிவிட்டாராம்" என்றார்.

அதுகேட்டு பிள்ளைகள் 'இது நல்ல கதை, கடவுள் ராஜாதிராஜனல்லவா? மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும் கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் என்று சங். 118. 8, 9-ல் படித்திருக்கிறோமல்லவா!' என்று சொல்லிக்கொண்டார்கள்.

அதற்குள்ளாக ஐயாவர்கள் உலாவப் புறப்பட்டார்கள். அவர்களோடு வேதாபிமானியும் கீதமணியும் ஊர்களைச் சுற்றிப் பார்த்துவரும்படி போனார்கள். அப்படியே நடந்துவருகையில் ஒரு தெப்பக்குளத்துக்கு அடுத்தாற்போல ஒரு பெரிய கோபுரத்தைக் கண்டார்கள். அதினுள் வெகு விநோதமான சித்திரவேலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதின் மத்தியிலே நாலுமூலைக்கும் நாலு பெரிய பொம்மைகள் மிகப் பரிதாபமாய் அமைக்கப்பட்டிருந்தன. எப்படியெனில், அக்கோபுரத்தின் பாரத்தையெல்லாம் தங்கள் தலைமேல் சுமந்திருப்பனபோலவும், அதின் பாரம் தாங்கமுடியாமல் விழிகள் தள்ளுவனபோலவும், நாக்கும் தள்ளி, வாயையும் திறந்துகொண்டிருந்தன. அதனைக்கண்ட கீதமணி குருவைப் பார்த்து 'ஐயா! இந்தப் பொம்மைகள் இப்படி அமைக்கப்பட்டிருப்பது ஏன்?' என்றான். அதற்குக் குருவானவர் "இதற்குத்தான் 'கோபுரம் தாங்கி' யென்று பெயர். இந்தக் கோபுரம் கீழே எவ்வளவு பலமான கற்களால், அஸ்திபாரம் போடப்பட்டு, கற்றூண்களாலான மண்டபங்கள்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனைத் தாங்கள் தலைமேல் தாங்கிவருவனபோல இந்தக் கோபுரம் தாங்கி பொம்மைகள் காட்டுகின்றனவே. இதுபோலுத்தான் உலகத்தில் அநேகம் பேர் தங்களைப்பற்றி நினைவுகொள்ளுகிறது; எல்



லாம் தங்களாலேதான் நடக்கிறது. 'நாங்கள்தான் காரியாதிகளை நடத்திவருகிறோம். எங்களுக்கு யார் உதவிசெய்கிறது?' என்கிறது போலப் பேசிக்கொள்ளுகிறார்கள். நம்மைத் தாங்குகிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லையே. அவர் நம்மை எப்பொழுதும் விசாரிக்கிறவராயிருந்து கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுக்கு முதலாய் எல்லாவற்றிற்கும் படியளக்கிறாரே. அவராலேதான் நாம் பிழைக்கிறோம்; அசைகிறோம்; இருக்கிறோம். அவர் தாயின் கர்ப்பத்திலே முதலாய் பராமரிக்கிறாரே. அவர் 'கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் அமுதளிக்கும் தேவன்' ஆச்சுதே" என்றார்.

அதுகேட்டு வேதாபிமானி "எனக்குப் பூர்வீகமான ஒரு ஹிந்து கதை ஞாபகத்தில் வருகிறது. அதாவது, பரமசிவனும் பார்வதியும் உலாவப்போனார்களாம். அப்போது இரவாகிவிடவே பார்வதி பரமசிவனைப் பார்த்து 'எல்லா ஜீவஜெந்துக்களுக்கும் படியளந்துவிட்டீரா?' என்க, அவர் 'ஆம் எல்லாம் திருப்தியடையப் படியளந்தா



யிற்று' என்றாராம். அப்போது பார்வதி தன் முந்தியிலுள்ள ஒரு சிமிளை எடுத்து 'இதனுள் இருக்கும் எறும்புக்குப் படியளந்தீர்களா?' என்றாளாம். அப்போது அந்த எறும்பு வாயில் ஒரு குறு நொய்யைக் கவ்விக்கொண்டிருந்ததாம்.

இது கட்டுக்கதையாயிருந்தாலும் ஆண்டவர் சகல சிருஷ்டிகளையும் பாதுகாத்து வருகிறார் என்பது நிச்சயமான காரியம் என்று பிரத்தியட்சமாய் அநுபவத்தினால் அறிந்துகொள்ளலாமே" என்றார்.

இதற்குள்ளாக வழியிலே ஒரு தகப்பனும் மகனும் சண்டை போடுகிறதையும், தகப்பன் மனவருத்தப்படுகிறதையும் கண்டு சகியாமல் கிட்டப்போய், குருவானவர் 'என்னப்பா சங்கதி, இந்த மாங்காய்களை ஏன் இப்படிக் கொட்டிவிட்டாய்?' என்றார். அதற்குத் தகப்பன் 'ஐயா! எனக்கு மகன் இவனொருவன்தான். இவனை எவ்வளவோ அருமையாய் வளர்த்தேன். இவனுக்குத் தகுந்த வயதில் கலியாணம் செய்வித்து, என் வீடு தோட்டங்களையும் இவனுக்கு எழுதி வைத்துவிட்டேன். இப்போ பெற்றோராகிய எங்களின் மணம் கூட ஆகாது, என்கிறான். இவன் மனைவிக்கு எங்களைக் கண்டால் எட்டிக் கசப்பாய்த் தோன்றுகிறது. நாங்கள் அவளிடத்தில் போய் அன்னம் கேட்பதைவிட, பட்டினியாவது கிடக்கலாமென்று என் மனைவி இன்று சமைக்கவில்லை. நான் போய்த் தோட்டத்திலே சில மாங்காய்களைப் பறித்துக் கடையில் விற்று, இன்று காலட்சேபங் கழிக்கலாம்' என இவற்றைப் பறித்துவந்தேன். அதற்காக என் மகன் 'சண்டைபோட்டு, பிடித்துத் தள்ளி, மாங்காய்களையும் பறித்துக் கொண்டான். ஐயா! நான் வைத்த மரம். அதிலே நான் கைவைக் கப்படாது என்கிறான்' என்றான்.

இதற்குள்ளாகப் போலீஸ் சேவகன், ஒருவன் வந்து கலகத்தை அமர்த்துகிறவன்போல், பேசிக்கொண்டு மகனைக் கச்சேரிக்கு இழுத்தான். 'பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு' என்ற பழமொழிப்படி அந்த வயோதிபனான தகப்பன் அந்தச் சேவகனோடு மகனைப் போகவிடாமல் 'ஐயா! தகப்பனுக்கும் மகனுக்கும் பிணக்கென்ன? சும்மா பேசிக்கொள்ளுகிறோம்; நீர் போய்வாரும்' என நயந்து பேசி, அந்தச் சேவகனை அனுப்பிவிட்டான்.

Esther Manonmani Devadas.

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ...
RE...
15 OCT 1913
MADRAS

## THE DIGNITY OF LABOUR

## தொழிலில் ஆசை

நாம் செய்துமுடிக்கவேண்டிய எத்தொழிலையும் செய்து தீரவேண்டுமே என்ற அதிருப்தியும் சோம்பலுமில்லாமல் சிரத்தையுடன் செய்ய ஆசைவைக்கவேண்டும். எந்த வேலையையும் கருதிச் செய்தால் மனதிற்கு ஒருவிதமான உற்சாகம் ஏற்படுமென்றதற்குச் சந்தேகமில்லை. ஒன்றைச் செய்யத்தொடங்கினால் மனதை அதிலேயே செலுத்துவதுடன், அதன் நுட்பங்களை நன்றாய்த் தெரிந்து செய்யவேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல; அதன் விருத்தாந்தங்களையும், காரண காரியங்களையும் சரிவரத் தெரிந்து, நாலாவிதத்திலும் யோசித்து எக்காரியத்தையும் செய்யத்துணிந்தால் ஒருபோதும் பிரயோஜனப்படாமல் போகாது. ஆனால் அப்படிச் செய்வதில் மற்றுமுள்ள பல தொழில்களுக்கும் பலன் கொடுக்குமா என்றதையும் ஆலோசிக்கவேண்டும். இவ்விதமாக எத்தொழிலையும் நன்கு ஆராய்ந்துசெய்தால் மனதிற்கு ஒருவித குதாகலம் உண்டாகும் என்பதற்குத் தடையுமுண்டோ? ஆனால் ஆரம்பத்தில் சற்று வருத்தமாகத்தான் தோன்றும். சாத்தியப்படாத காரியம், வீண் சிரமப்படுவானேன் என்று அசட்டைசெய்து தள்ளி விட்டுவிட மனம்பாயும். அவ்விதமாக மனம்போன போக்கில் விட்டுவிடலாகாது. 'மெய்வருந்தக் கூலிதரும்' என்ற வாக்கியம் பொய்போகாது; நன்மையைக் கொடுக்குமேயல்லாமல் முயற்சி வீண்போகாது.

நம் தேசத்திலோ தொழிலுக்கு மதிப்பே கிடையாது. ஏதாயினும் ஒரு தொழிலைச் செய்தால் அதைக் குறைவாகவே பலர் எண்ணுகிறார்கள், அதனால் செய்யத் துணிபவர்களும் குறைவாகக் கொள்ளுகிறார்கள். ஒரு தொழிலைச் செய்வதினாலேயே அந்தஸ்தும் மதிப்பும் குறைந்துவிடும் என்ற தப்பு எண்ணம் அநேகர் மனதில் குடிகொண்டிருக்கிறது. இதனாலேயே தான் நம் தேசத்தில் சாதாரண அந்தஸ்திலுள்ள புருஷனும் தன் மனைவிமக்களை ஒன்றும் செய்யவிடாமல் வீண்காலம் கழிக்கும்படி விட்டுக்கொண்டிருக்கிறான். வீட்டில் தன் மனைவிமக்கள் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தால் தன் யோக்கியதைக்கும் மதிப்புக்கும் குறைவு உண்டாகும், மற்றவர்கள் பார்த்துப் பழிப்பார்கள் என்று ஒருவன் எண்ணி, தானும் தன் மனைவிமக்களை மற்றவர்களைப்போல் சரிவர நடத்திவருகிறோம் என்று பெருமைகொள்ளுகிறான். இதனால் பெண்கள் சரியானபடி காலங்கழிக்க வகையில்லாது வீண் சண்டைசச்சரவு முதலியவை பிடித்துக்கொண்டு காலத்தை வியர்த்தமாய்ப் போக்குகிறார்கள். அநா



வசியமாகக் காலங் கழிக்கிறதைக்காட்டிலும், ஏதோ ஒரு தொழிலைச் செய்யும்படி ஏற்பாடுசெய்து அதை நாளுக்குநாள் அபிவிர்த்திசெய்து வரும் வழியைத் தேடிக்கொண்டு வந்தால் எக்காலத்திலும் பிரயோஜனமும் அதனால் மதிப்பும் கண்ணியமும் அதிகமாகும்.

காலஞ்சென்ற நமது எட்வர்டு சக்கிரவர்த்திக்கு மேஜோடு பின்னத் தெரியுமாம். அவர் முதற்குமாரனாகிய காலஞ்சென்ற யார்க் கோமகனுருக்கு வடந்திரித்தல் தெரியுமாம். ருஷியச் சக்கிரவர்த்தியாகிய இரண்டாவது நிக்கோலாசுக்கு ஏருழவும், நடவும், அறுக்கவுந் தெரியுமாம். ஜெர்மானியச் சக்கிரவர்த்திக்கு நன்றாய் அச்சுக்கோக்கத் தெரியுமாம். இத்தாலியா தேசத்து அரசனாகிய காலஞ்சென்ற ஹம்பர்ட் நன்றாய் ஜோடு தைப்பாராம். ஸ்வீடன் அரசனாகிய ஆஸ்கார் காலஞ்சென்ற இங்கிலாந்துதேசத்துப் பிரதம மந்திரியாகிய கிளாட்ஸ்டன் துரைபோல் மரம் வெட்டுவாராம். நமது காலஞ்சென்ற விக்டோரியா சக்கிரவர்த்தினியாருக்குப் பின்னுந் தொழிலில் மிக விருப்பமாம். நமது சக்கிரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் கப்பல் ஓட்டுவதில் மிக வல்லவராம். தொழிலின் அருமை இவர்களன்றோ நன்றாய் அறிந்தவர்கள்.

நம் இந்தியர்களுக்கு எப்போது தொழிலின்மேல் ஆசை தோன்றுமோ? எப்போது கைத்தொழிலைக் கைக்கொள்வரோ? லோகத்தில் மேலான பதவியை வகிக்கும் ராஜாதிராஜரெல்லாம் தங்களுடைய அந்தஸ்தைப் பெரிதாகக் கருதாமல் ஏதாவது ஒரு தொழில்செய்யத் தெரியவேண்டும் என்ற அவாவினால் தங்களால் கூடியமட்டும் பிரயாசப்பட்டு பக்திசிரத்தையுடன் செய்து தேர்ச்சியடைகிறார்கள். இதனாலேயே இவர்களுக்குக் குறைவு ஏற்படுமோ? தொழில்செய்வது சிலாக்கியமே தவிர கனிஷ்டமல்ல. ஆகையால் எக்குடியிற் பிறப்பினும் யாவரேயாயினும் நற்றொழிலைச் செய்வதே நன்று.

## WHAT TO PRAY FOR

## என்னத்துக்காக ஜெபம் பண்ணவேண்டும்?

உன் ஜீவிய காலத்தில் கஷ்டமில்லாமலிருக்கும்படி ஜெபம்பண்ணாதே. கஷ்டம் அனுபவிக்கக்கூடிய பலனுக்காக ஜெபம்பண்ணு.

உன் திறமைக்கு ஏற்ற வேலையைக் கேளாதே. உன் வேலைக்கு ஏற்ற பலனையே கேளு.

அப்படிச்செய்தால் உன் வேலை உனக்குப் பாரமாயிருக்காது. ஒவ்வொருநாளும் கடவுளுடைய கிருபையினால் நீ அடைந்த புதிய ஜீவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவருக்கு ஸ்தோத்திரம் பண்ணுவாய்.

## SONG. CHARITY

## பாட்டு. தருமஞ்செய்வது

இராகம். 'பெற்ற தாலந்தீர்க்கலை'

பல்லவி.

தருமஞ்செய்ய நிருபந்தனை சாற்றுதேபாரு
தூற்றுதேகேளு.

அனுபல்லவி.

தசமபாகம் தருவோருக்குத் தற்பலனீவார்
ஆசீர் தாராளமாயீவார்.— தரும.

சரணங்கள்.

1. சோதித்துப் பார்க்கச் சொல்லிதேவன்
சொன்னாரே வேதம்தானும் சொல்லுதே.— தரும.

2. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்
பேர் எடுப்பதே யோக்கியம்.— தரும.

3. இரண்டுகாசு போட்டஏழை விதவையைப்பாரு
யேசு வியந்ததைக் கேளு.— தரும.

4. விசனமாயும் கட்டாயமாயும் தருமஞ்செய்யாதே
ஒரு பலனுஞ் செய்யாதே.— தரும.

5. கொர்னெலியாவுக்குப்போல் கூப்பிட்டுச் சொல்வார்
பின்னும் கூப்பிட்டுச் சொல்வார்.— தரும.

6. அனனியா சப்பீராளைப்போல் ஆகவேண்டாமே
அப்படிப் போகவேண்டாமே.— தரும.

7. மக்கதோனியரைப்போல மனமும் வேண்டுமே
உங்கள் பணமும் வேண்டுமே.— தரும.

8. கலயக் காணிக்கை கொண்டு களிப்புடன்வாரும்
கர்த்தரிடத்திலே சேரும்.— தரும.





## THE KING'S CUP BEARER

## ராஜாவுக்குப் பானங் கொடுப்போன்

### I அத்தியாயம்

### லீலீயா நகரம்.

கனம்பொருந்திய ரப்சாகே என்பவர், பாரவீகத்து வழக்கம் போல மினுக்கான உடைதரித்து, அலங்காரமாய் நகரவாசலுக்கு முன்னாக நடந்துபோகிறார். அவருக்கு மேலே நீலவர்ண மேகம் விரிக்கப்பட்டும், அவரைச்சுற்றிலும் சூரியன் காந்தியை வீசிக்கொண்டுமிருந்தது. அது டிசெம்பர் மாதமாயிருந்தபோதிலும், குளிர்ந்த காற்று வீசவுமில்லை, போர்த்துக்கொள்ள அவருக்குக் கம்பளி முதலான சூடான வஸ்திராதிகள் அவசியமிருந்ததுமில்லை.

இந்த நகரம் பாரவீகத்தின் அழகிய ராஜதானி. இதற்கு சூசான் அல்லது லீலீயா நகரமென்று பெயர். இந்தப் பெயர் இந்நகரத்திற்கு வந்த காரணம், அதைச்சுற்றிலும் புஷ்பித்துச் சுகந்த வாசனை வீசும் பலவர்ணமான புஷ்பங்கள்தான். இது ஒரு பிரகாசமான சமபூமியில் கட்டப்பட்டிருந்தது. அதின்வழியாய் இரண்டு நதிகள் ஓடுகின்றன. கொயாஸ்பஸ், ஊலாய்; இவை இரண்டும் அந்தப் பசுமையான சமபூமியில் ஓடும்போது, சில இடங்களில் ஏறக்குறைய 2½ மைல் தூரம் இருக்கும்படியாக அவ்வளவு நெருங்கியும், சில இடங்களில் வெகுதூரம் விலகி ஓடியும், மறுபடியும் ஏதோ ஒரு சக்தியினால் தவர்ச்சித்து இழுக்கப்பட்டதுபோல நெருங்கியும் பாய்ந்தோடி, சூரிய வெளிச்சத்தில் அதிகமாய்ப் பிரகாசிக்கின்றன.

மறுபடியும், வெகுதூரத்தில் இந்தச் சமபூமிக்கும் நதிகளுக்கும் அப்பால் பெரிய மலைத்தொடர்கள் இருக்கின்றன. அவைகள் பட்டணத்திலிருந்து 25 மைல் தூரத்துக்கு அப்பால் கிழக்கேயிருக்

கின்றன. இந்த மலைகளாலேதான் சூசான் பட்டணத்திற்குச் சவுக்கியம் கிடைக்கிறது. எப்படியென்றால், அதிகமான உஷ்ணகாலத்திலும் சதாகாலமும் பனிக்கட்டியினால் மூடப்பட்ட இந்த மலைச் சிகரங்களிலிருந்து வீசும் குளிர்காற்று வறண்ட சமபூமியின்மேல் வீசி மிகவும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

இந்த லீலீயாநகரம் பழைய பட்டணம். இது அநேகமாய் ஆபிரகாமின் காலத்திற்கு முன்னதாகவே கட்டப்பட்டுள்ளது. ஆதி. 14-ம் அதிகாரத்தில் ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாஓமார் பக்கத்துத் தேசங்களின் ராஜாக்களின் உதவிபெற்று, பலஸ்தீனாவின்மேல் படையெடுத்துவந்து லோத்தைச் சிறைபிடித்துக் கொண்டுபோனதாக வாசிக்கிறோம். இந்தக் கெதர்லாஓமார் இந்த நதிகளினருகேதான் வசித்தார். அவர் அரசாண்ட ஏலாம் ராஜ்யத்திற்கு சூசான் தலைநகரியாயிருந்தது.

கொஞ்சகாலத்திற்குப்பிறகு இந்தப் பட்டணம் பாபிலோனியரால் பிடித்துக்கொள்ளப்பட்டது. இந்தப் பாபிலோனுக்கு ஐப்பிராத்து நதியின்மேல் வேறே ராஜதானியிருந்தது. சூசான், தலைநகராயில்லாவிட்டாலும் உலகராஜ்யங்களிலெல்லாம் மிகவும் பிரதானமானதாயிருந்தது. பிரதான மந்திரியாகிய தானியேல் தீர்க்கதரிசி, பாபிலோன் ராஜாவினால் உத்தியோக விஷயமாய் அனுப்பப்பட்டபோது சூசான் அரண்மனையில் தங்கியிருந்தார். அங்கேயிருக்கும்போது அவர் மிகவும் விசேஷமான தரிசனங்கண்டார். தம்முடைய சொப்பனத்தில் ஊலாய் ஆற்றங்கரையில் நின்றதாகச் சொல்லுகிறார் (தானி. 8. 2). அவர் தாமிருந்த அரண்மனையின் ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது இந்த ஆற்றின் காட்சி மகா அருமையாயிருந்திருக்கும். அந்த ஆற்றினருகே இரண்டு கொம்புகளுள்ள ஆடுகளையும் பலமான ஆட்டுக்கடாக்களையும் பார்த்திருக்கலாம். இதிலிருந்து கர்த்தர், உலகத்தின் வருங்காலச் சரித்திரத்தை ஒரு படம்போல அவருடைய கண்களுக்கு முன்பாக நிறுத்தினார்.

ஆனால், இந்த மகா பாபிலோன் ராஜ்யம் நீடித்திருக்கவில்லை. பாரஸீக ராஜாவாகிய சைரஸ் பாபிலோனைப் பிடித்து, பெல்ஷாத்சாரைக் கொலைசெய்து, பாரஸீக ராஜ்யமாகிய உலகத்தின் இரண்டாவது பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

இந்தப் பாரஸீக ராஜ்யத்திற்கு எது தலைநகராயிருந்ததென்றால்; உன்னத கற்சுவரும், உறுதியான கதவுகளுமுடைய பாபிலோன் அல்ல, இந்த லீலிபட்டணமாகிய சூசான் நகரமே. இதை அவர்கள் தெரிந்துகொண்டதற்கு மூன்று முகாந்தரங்களுண்டு. இது தங்கள் பழைய வீடாகிய பாரஸீகத்திற்குச் சமீபமாயிருந்தது. அதைச்



சுற்றிலுமிருக்கும் மலைகளினால் பாபிலோனைவிடக் குளிர்ச்சியாயிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக உலகத்திலுள்ள எல்லாத் தண்ணீரிலும் இங்குள்ள தண்ணீர் மிகவும் விசேஷித்ததாயிருந்தது. இந்தக் கொயாஸ்பஸ் நதியின் தண்ணீர் மிகவும் மதுரமானதும், சுத்தமானதும் சவுக்கியத்திற்கேதுவானதுமாயிருந்ததினாலேதான், பாரஸீக ராஜாக்கள் வேறெந்த ஜலத்தையும் குடிக்கிறதில்லையாம். அவர்கள் எங்கே போனபோதிலும் இந்தத் தண்ணீரைக் கூடவே கொண்டுபோவார்கள். யுத்தத்திற்கு வெகுதூரம் போகவேண்டியிருந்தபோதிலும், இந்தக் கொயாஸ்பஸ் ஆற்றின் தண்ணீரைத் தங்கள் பிரயாணத்திற்கு வேண்டிய இன்றியமையாத பொருளாக எண்ணிக்கொள்வார்கள்.

இந்த லீலீயா நகரம், ரப்சாகேயின்காலத்தில், பழத்தோட்டங்களாலும், பசுமையான வயல்வெளிகளாலும் சூழப்பட்டுப் பூரண அழகமைந்த தேவலோகம்போலிருந்தது.

கரும்பனைகளுக்கு ஊடே வெள்ளை வீடுகளும், கொடிமாதுளை, எலுமிச்சை மரங்களால் சூழப்பட்ட உயர்ந்த மதில்களும் பார்வைக்கு வெகு அலங்காரமாயிருக்கும். இந்த மரங்களின் புஷ்பங்களாலுண்டாகும் வாசனையும், பிரகாசிக்கிற ஆறுகளின் ஓரமாய்ப் புஷ்பித்து நிற்கும் சூசான் லீலிபுஷ்பங்களின் வாசனையும் வெகு இன்பமாயிருக்கும்.

இந்த ரப்சாகேயின் மாளிகை நகரத்தின் மத்தியில் இருக்கிறது. இது மிகவும் மாட்சிமைபொருந்தினதாகத்தானிருந்திருக்கவேண்டும். ஏனென்றால், இது உலகத்தின் மகா பெரிய ராஜாவாகிய பாரஸீக ராஜாவின் அரண்மனை. இது தானியேல் சூசான் நகரத்தைச் சந்தித்தபோது தங்கியிருந்த பழைய மாளிகை அல்ல; நாற்பது வருஷங்களுக்குமுன்புதான், எஸ்தர் ராணியின் புருஷனாகிய ஆகாஸ்வேரு ராஜாவினால் கட்டப்பட்ட அரண்மனை. இந்த அரண்மனையின் பிரதிஷ்டைக்காகத்தான் எஸ்தர் முதலதிகாரத்தில் வாசிக்கிற பெரிய மாட்சிமையான விருந்து அதைக் கட்டின பாரஸீக ராஜாவினால் கொடுக்கப்பட்டது.

இப்புது மாளிகை செங்கல்லாலும், கருங்கல்லாலும் உயர்த்தப்பட்ட பெரிய மேட்டின்மேல் கட்டப்பட்டு, அதின் ஜன்னல்வழியாய்ப் பார்த்தால் பசுமையான சமபூமியும், பிரகாசிக்கிற நதிகளும், பழமரங்களும், புஷ்பங்கள் நிறைந்த தோட்டங்களும், தூரத்தில் பனிமூடிய மலைகளும் கண்ணுக்கு வெகு ரமணீயமாயிருக்கும். அந்த அரண்மனையின் மத்தியில் அநேக தூண்களுள்ள ஒரு சாலையும், அந்தச் சாலையைச் சுற்றிலும், ராஜாக்களை ஏற்று உபசரிக்கும் உபசார மண்டபங்களாகிய பிரதான அறைகளுமுண்டு.

சர் பென்விக் உவில்லியம்ஸ் (Sir Fenwick Williams) என்பவர் 1851-ம் வருஷத்தில் சூசரன் பட்டணத்தின் பாழான இடங்களைக் கண்டுபிடித்தார். கனம்பொருந்திய ரப்சாகே வசித்த அலங்காரமான மாளிகையின் கூரையைத் தாங்கின தூண்களின் அடிப்பாகத்தை இரண்டு நதிகளுக்கும் ஊடே உள்ள சமபூமியில் இன்னும் காணலாம்.

இந்த ரப்சாகே யார்? உலகத்திலுள்ள மகா மாட்சிமையான இந்த அரண்மனையில் எப்படி வந்து வசித்தார்? இவர் யூதனுச்சுதே. அந்நிய தேசத்தானல்லவா? நேபுகாத்நேச்சார் சிறைபிடித்த யூதர்களின் பின் சந்ததியானல்லவா? அசீரியாவுக்குக் கொண்டுவரப்பட்டு இதர ஜாதியைச் சேர்ந்தவனுயிருந்தபோதிலும், பாரஸீக சபையில் மேன்மையான உத்தியோகம் அதாவது ரப்சாகே உத்தியோகம் இவருக்குக் கிடைத்ததாகப் பார்க்கிறோமே அதெப்படி?

வேதாகமத்தில் நாம் அடிக்கடி பார்க்கிற ரப் என்கிற பதமானது கல்தேய பதம். இதற்கு எஜமான் என்று அர்த்தம். புதிய ஏற்பாட்டில் யூத உபாத்திமார் சின்ன ரபி அல்லது எஜமான் என்று அழைக்கப்பட்டதாகப் பார்க்கிறோம். ஆனால் இந்த ரபிப்பட்டம் பாரஸீகத்து நியாயசபையிலுள்ள பெரிய உத்தியோகஸ்தருக்கும் கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட மூன்று பட்டப்பெயர்களை வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

எரேமியா, 59. 13. Rab-Saris. ரப்சாரிஸை. மந்திரிகளின் தலைவன்.

Rab-Mag. ரப்மாக். பண்டிதரின் தலைவன்.

2 இரா. 18. 19. Rab-Shakeh. ரப்சாகே. பானபாத்திரக்காரருக்குத் தலைவன்.

ரப்சாகே என்னும் ஊழியமானது மிகவும் உத்தரவாதமான முக்கிய உத்தியோகமாயிருந்தது. ராஜாவின் திராட்சைரசத்தைத் தன் பொறுப்பில் வைத்திருந்து, ராஜவிருந்து நடக்கும் சமயங்களில், அதில் விஷம் இல்லாதபடி நிச்சயித்து, அலங்காரமாய்ச் சித்திரந் தீர்ந்த பொற்கிண்ணத்தில் வார்த்து ராஜாவுக்குக் கொடுப்பது அவருடைய வேலை.

இது மிகவும் நம்பிக்கையும் வல்லமையுமுள்ள பதவி. மிக நம்பிக்கை எப்படியென்றால், ராஜாவின் ஜீவன் பானபாத்திரக்காரன் கையிலிருந்தது என்றே சொல்லவேண்டும். மகா வல்லமை எப்படியென்றால், பாரஸீக ராஜாக்கள் சாதாரணமாய் எல்லா ஜனங்களோடும் பழகினால் தங்களுக்குக் கண்ணியக் குறைவென்றெண்ணி, 



'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்றாற்போல், அநேகரைத் தங்கள் முன் வரவிடுகிறதில்லை. இந்தப் பானபாத்திரக்காரன் மாத்திரம் எல்லாச் சமயங்களிலும், ராஜாவுக்கு முன்பாகப் போகலாம், அந்த விதமாய் அவரோடு பேசும் சிலாக்கியம் மற்றவர்களுக்குக் கிடையாமல் இவருக்குக் கிடைத்தது.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## HOW TO EXTERMINATE ANTS?

## எறும்புகளைத் தொலைப்பதெப்படி?

1. கீடற்பஞ்சுத் துண்டுகளை (Sponge) கெரோஸீன் எண்ணெயில் (Kerosene Oil) தோய்த்தெடுத்து எறும்புகள் உள்ள இடங்களில் போட்டுவைக்கலாம். இப்படிச் செய்வதில் ஒரு எச்சரிக்கை இருக்கவேண்டும். அதாவது, அந்தப் பஞ்சுத் துண்டுகள் தீப்பற்றிக்கொள்ளாதபடி காப்பது.

2. அரைப்பவுன் தூள் கந்தகத்தையும் நாலு அவுன்ஸ் பொட்டாஷையும் (Flowers of Sulphur and Potash) ஒரு இரும்புக் கிண்ணத்திலாவது மண் கிண்ணத்திலாவது சேர்த்து, நெருப்பின்மேல் வைத்துக் காய்ச்சு. அப்போது அவை இரண்டும் நன்றாய்க் கரைந்துவிடும். பின் அதை எடுத்து நன்றாய்ப் பொடித்து, தண்ணீரில் இட்டுக் கலக்கி எறும்புகள் உலாவும் இடங்களிலும், வசிக்கும் குழிகளிலும் அந்தத் தண்ணீரைத் தெளித்தால் எறும்புகள் மாண்டுபோம். நம் ஸாதா உப்பைத் தெளித்தால் எறும்புகள் அப்பால் போய்விடுமே தவிர அவை சாகமாட்டா.

3. மிளகாயை நன்றாய்த் தூளாக்கி அதைத் தூவிவைப்பதும் பிரயோஜனகரமானதே.

4. ரொட்டி, மிட்டாய், சாதம் முதலிய போஜன பதார்த்தங்களை வைக்கும் இடங்களில் எறும்புகளால் உண்டாகும் உபத்திரவத்தைப் போக்கடிக்கும் வழி இது: தின்பண்டங்களை அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடங்களையும், எறும்புக் குழிகளையும் லைஸால் (Lysel) என்ற சுத்திசெய்யும் திராவகத்தண்ணீராலாவது ஸாதாரணமான பினைல் (Phenyle) என்றதனாலாவது கழுவிவிட்டு, அங்கெல்லாம் மிளகைப் போட்டு இரண்டு மூன்று நாள் அப்படியே வைத்திருக்கவேண்டும். அப்புறம் எறும்பு என்ற பேச்சே இருக்காது. பிற்பாடு அவ்விடங்களில் திரும்பவும் உண்வுப்பொருள்களைக் கொண்டுவந்துவைப்பதற்கு முன்னதாக லைஸால் அல்லது பினைல் வாசனைக் கொஞ்சமும் இல்லாதபடி அறவே ஒழிந்ததா என்பதைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

## THE SLAVE GIRL'S FAITH

## அடிமைக்காரியின் பக்தி

குர்திஸ்தான் என்னும் நாடு துர்க்கிதேசத்தின் ஒரு பாகம். அத்தேசத்தில் பெரும்பான்மையோர் முகம்மதியர்; சுதேச கிறிஸ்தவ சபைகளும் உண்டு. அச்சபைகள் அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னே ஸ்தாபிக்கப்பட்டவை. அச்சபைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஆர்மீனியர் என்று பெயர். சபையை நடத்துகிறவர்கள் அன்னிய தேசங்களிலிருந்து வருகிற மிஷனெரிமார் அல்ல: ஆர்மீனியர்களே தங்கள் சொந்தச் சபையை நடத்துகிறார்கள். அவர்கள் முகம்மதியராலே அதிக துன்பப்பட்டும் பின்வாங்காமல் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். ஆர்மீனிய சபையாரின் கஷ்டங்களை அறிந்து காந்தர்புரி பிரதம அத்தியக்ஷர், அவர்களுக்கு உதவிசெய்யவும் உற்சாகப்படுத்தவும் சில அங்கிலேய போதகர்களை அனுப்பினார். அவர்களில் ஒரு போதகர் அத்தேசத்தின் மலைப்பாகங்களில் தனித்தனியாகச் சில சபைகள் இருந்ததைக் கேள்விப்பட்டு அச்சபைகளைப் பார்க்க ஆசைகொண்டு துர்க்கி இராஜாங்கத்தாரை அங்கே போக உத்தரவு கேட்டார். இராஜாங்கத்தார் உத்தரவு கொடுக்கவில்லை. 'மலையில் வசிக்கிறவர்கள் நாகரீகமில்லாதவர்களும் சண்டைக்காரருமாயிருக்கிறார்கள்; நீர் தனியாய்ப் போனால் உம்மைக் கொன்றுபோடுவார்கள். உம்மைச் சரியாய்க் காப்பாற்றும்படி முப்பது போர்ச்சேவகரை உம்மோடு அனுப்பவேண்டும். அத்தனைபேரை அனுப்புவது எங்களாலே முடியாது. ஆகையால் நாங்கள் உத்தரவு கொடுக்கமுடியாது' என்றார்கள்.

இதைக் கேட்டு அந்தப் போதகர் துக்கப்பட்டு அச்சங்கதியைச் சபையின் மூப்பர் ஒருவருக்குச் சொன்னார். அதற்கு அந்த மூப்பர் 'ஐயா! நீர் விசனப்படாதேயும்; நான் அந்தச் சபைகளைப் பார்க்கப் போகிறேன். நான் தனியனாய்ப் போகலாம். துருக்கர் என்னைக் கொன்றுபோட்டாலும் அது அவ்வளவு பெரிய காரியமல்ல. எனக்குப் பயமில்லை. வெகுகாலமாய் மற்றக் கிறிஸ்தவர்களைப் பார்க்காத சபைகளுக்கு நான் உதவியாய் இருக்கக்கூடுமானால் அதைவிட வேறொன்றும் எனக்கு வேண்டாம்' என்று சொல்லிப் புறப்பட்டார். தைரிய நெஞ்சரான அவரது போக்கிலும் வரவிலும் சுவாமி அவரைக் காப்பாற்றினார். சுகத்தோடும் சந்தோஷத்தோடும் திரும்பிவந்து போதகரிடத்தில் அவர் கண்ட அநேக ஆச்சரியமான காரியங்களைத் தெரிவித்தார்.



அவர் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் ஒரு ஊரிலே தங்கினார். அவ்வூரின் தலைவன் முகம்மதியனாய் இருந்தும் அவரைத் தன் வீட்டுக்கு அழைத்து அவருக்கு எல்லா மரியாதைகளையும் உபசாரங்களையும் செய்தான்.

அவர் அவ்வீட்டிலே சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது வேலைக்காரன் ஒருவன் அவரிடத்தில் வந்து 'ஐயா! தாங்கள் சாப்பிட்டபிறகு எங்கள் எஜமானி தங்களைப் பார்க்க விரும்புகிறார்கள்' என்று சொன்னான். அதைக்கேட்டுப் போதகர் ஆச்சரியப்பட்டார். ஏனென்றால் துருக்க ஸ்திரீகள் புருஷர்களைப் பார்ப்பது வழக்கமில்லை என்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் 'வீட்டு எஜமானி கூப்பிட்டால் போகத்தான்வேண்டும்' என்றெண்ணி அவர் சாப்பிட்டு முடிந்தபிறகு எஜமானியின் சமுகத்திற்குத் தம்மை அழைத்துக்கொண்டுபோகச் சொன்னார். அவர் எஜமானியிருந்த அறைக்குள் பிரவேசிக்க வயதுசென்ற ஒரு அம்மாளைக் கண்டார்.

அந்த அம்மாள் அவரைக் கண்டு ஆனந்தக் கண்ணீரோடு அவரை வாழ்த்தி 'ஐயா! சுவாமி என் விண்ணப்பத்தைக் கேட்டு உங்களை அனுப்பியிருக்கிறார். ஐம்பது வருஷங்களுக்குமுன்னே நான் சிறுமியாயிருந்தபொழுது இவ்வீட்டு எஜமானின் தகப்பனார் போர்ச்சேவகர்களோடு என் ஊருக்கு வந்து சண்டைசெய்து அநேக கிறிஸ்தவர்களைக் கொன்றுபோட்டு என்னைப் பிடித்து இவ்வூருக்குக் கொண்டுவந்து அடிமையாகத் தம்முடைய வீட்டிலே வைத்தார். நான் இவ்விடம் வந்தநாள் முதற்கொண்டு ஒரு கிறிஸ்தவ சகோதரனையாவது சகோதரியையாவது பார்த்ததே இல்லை. நான் இப்பொழுது வயதுசென்றவள்; சுவாமி சீக்கிரத்தில் என்னைத் தம்மிடம் அழைத்துக்கொள்வார். நான் போகும்முன் என்னோடு பிரார்த்தனை செய்ய ஒரு கிறிஸ்தவ போதகரை அனுப்ப சுவாமியை அதிகமாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தேன். என் சத்தத்தைக் கேட்டு இப்பொழுது உங்களை அனுப்பியிருக்கிறார். அவருக்கு ஸ்தோத்திரம்' என்று சொன்னாள். போதகர் மனங்களித்து அந்த அம்மாளோடு ஆத்மீக காரியங்களைப்பற்றிப் பேசி ஜெபம்செய்து அவளிடம் விடைபெற்றுப் போய்விட்டார்.

அவ்வீட்டு வேலைக்காரர் அந்த அம்மாளின் சங்கதியை அவருக்கு விவரித்துச் சொன்னார்கள். அவள் ஐம்பது வருஷங்களுக்கு முந்தி அடிமையாக அவ்வீட்டுக்கு வந்ததாகவும், அவள் நன்னடக்கையினிமித்தம் அவள் எஜமானி அவள்மேல் நம்பிக்கைவைத்து, வரவர வீட்டு விசாரணைகளையெல்லாம் அவளுடைய கையில் ஒப்புக்கொடுத்ததாகவும் தெரிந்துகொண்டார். அதுமாத்திரமல்ல, அவள் பயபக்தி

யுள்ளவளென்றும், நாள் தவறாமல் வேதத்தை வாசித்து ஜெபம்பண்ணி வருகிறாளென்றும், ஆர்மீனிய சபையின் பிரமாணத்தின்படி அவள் வெள்ளிக்கிழமைதோறும் உபவாசித்து, ஒவ்வொரு பெரிய வெள்ளிக் கிழமையிலும் இராப்போசனம் அனுசரித்து பக்திபண்ணிவந்தாள் என்றும், அவளை எல்லோரும் வெகுதூரம் மெச்சிப் புகழ்ந்தார்கள் என்றும் அறிந்து ஒருவாறு மகிழ்ச்சியடைந்தார் மூப்பர்.

## ANSWERS TO AUGUST PUZZLE

விடை

1. புறா. ஆதி. 8. 8.
2. தீக்குருவி. புலம். 4. 3.
3. நாரை, ஆந்தை. சங். 102. 6.
4. தீக்குருவி. யோபு, 39. 13.
5. காடை. யாத். 16. 13.
6. கழுகு. சங். 103. 5.

Right answers received from P. Joseph Devaraj,

Royapuram.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ஸ்ரீ அக்டோபர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | லூக். | 9. | 43—50 | 11 | ச. | லூக். | 12. | 16—30 | 21 | செ. | லூக். | 16. | 19—31 |
| 2 | வி. | ,, | 9. | 51—62 | 12 | ஞா. | ,, | 12. | 31—48 | 22 | பு. | ,, | 17. | 1—10 |
| 3 | வெ. | ,, | 10. | 1—16 | 13 | தி. | ,, | 12. | 49—59 | 23 | வி. | ,, | 17. | 11—25 |
| 4 | ச. | ,, | 10. | 17—28 | 14 | செ. | ,, | 13. | 1—17 | 24 | வெ. | ,, | 17. | 26—37 |
| 5 | ஞா. | ,, | 10. | 29—42 | 15 | பு. | ,, | 13. | 18—35 | 25 | ச. | ,, | 18. | 1—14 |
| 6 | தி. | ,, | 11. | 1—13 | 16 | வி. | ,, | 14. | 1—14 | 26 | ஞா. | ,, | 18. | 15—27 |
| 7 | செ. | ,, | 11. | 14—28 | 17 | வெ. | ,, | 14. | 15—35 | 27 | தி. | ,, | 18. | 28—43 |
| 8 | பு. | ,, | 11. | 29—41 | 18 | ச. | ,, | 15. | 1—10 | 28 | செ. | ,, | 19. | 1—11 |
| 9 | வி. | ,, | 11. | 42—54 | 19 | ஞா. | ,, | 15. | 11—32 | 29 | பு. | ,, | 19. | 12—27 |
| 10 | வெ. | ,, | 12. | 1—15 | 20 | தி. | ,, | 16. | 1—18 | 30 | வி. | ,, | 19. | 28—40 |
| | | | | | | | | | | 31 | வெ. | ,, | 19. | 41—47 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913


# மாதர் போதினி

No. 191 நவம்பர் 1913 No. 11




OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 NOV 1913
MADRAS.

## THE KING'S CUP BEARER *(Cont.)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

### I. அத்தியாயம்

லீலீயா நகரம். (தொடர்ச்சி)

இப்பேர்ப்பட்ட முக்கியமான வேலைக்குச் சிறைபிடிக்கப்பட்ட ஜாதியில் யூதகுலத்திலிருந்து ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டது மிகவும் விநோதமான காரியமே. ஆனால் இந்த ராஜாவுக்குத் தன் பானபாத்திரக்காரனைப்பற்றி நன்றாய்த் தெரியும். இவரை முழுதும் நம்பலாம் என்று ராஜா அறிந்திருந்தார். தம்முடைய நம்பிக்கையில் அவர் ஏமார்ந்துபோகவேயில்லை. ஏனென்றால், கனம்பொருந்திய நப்சாகே, பாரஸீகத்து ராஜாவைவிட மேன்மைபொருந்திய ராஜாவாகிய பரலோகத்தின் தேவனுடைய உத்தம ஊழியக்காரனாயிருந்தார்.

இந்த நப்சாகேயின் பெயர் நெகேமியா. இது அவருடைய பெற்றோரால் கொடுக்கப்பட்டது. இது ஒரு வேடிக்கைப் பேருமல்ல, குடும்பப் பேருமல்ல, அருமைப் பேருமல்ல. யூதப்பெற்றோர் அழ

கான அர்த்தமுள்ள பேர்களைத் தெரிந்தெடுத்துத் தம் பிள்ளைகளுக்கு நாமகரணஞ்செய்வது வழக்கம். அப்படித் தெரிந்தெடுத்து இடப்பட்ட பெயர். இதின் அர்த்தம் 'கர்த்தர் என்னுடைய ஆறுதல்' என்பதே.

விளையாடுகிற மகனைக் கூப்பிடும்போதும், தங்களருமை மகனை இரவில் படுக்கைக்கு அனுப்பும்போதும், இன்னும் மற்றச் சமயங்களிலும் 'கர்த்தர் என்னுடைய ஆறுதல்' என்பது அகாலியாவுக்கும், அவர் மனைவிக்கும் அருமையான எண்ணங்களை உண்டாக்கியிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

பிரகாசமுள்ள சூசான் நகரத்தில் வசிப்பது, மற்ற மேகமும் மந்தாரமுமுள்ள நாடுகளில் வசிப்பதுபோலவே கஷ்ட நஷ்டங்களும் இன்பதுன்பங்களும் சம்பவித்துக்கொண்டேயிருந்தன. அவர்களுக்குத் துன்பகாலங்களிருந்தன, சந்தோஷ காலங்களுமிருந்தன. நமக்கு நேரிடுவதுபோலவே, அவர்களுக்கும் சோதனைகளும், கவலைகளும், கலக்கங்களும், ஆயாசங்களும் நேரிட்டதுண்டு. அப்பேர்ப்பட்ட எல்லாச் சமயங்களிலும், மெய் ஆறுதல் கண்டுகொள்ளும் இடத்தைப் பற்றி அடிக்கடி நினைப்பூட்டப்படுவதினால், அந்தப் பெற்றோர் மிகவும் பாக்கியசாலிகளாயிருந்தார்கள். இந்தவிதமாய், தங்கள் மகனுடைய பெயர் 'கர்த்தர் என் ஆறுதல்' தங்கள் வாயிலிருக்கும்போதே, தங்கள் துன்பகாலத்தில் தேவனண்டைக்குத் திரும்பவேண்டியவர்களாயிருந்தார்கள்.

நெகேமியாவைப்பற்றி நாம் என்னத்தைக் கற்றுக்கொண்டோம்? நம்முடைய இருதயத்திலிருந்து 'கர்த்தர் என்னுடைய ஆறுதல்' என்று நாம் சொல்லக்கூடுமா? என்னுடைய துன்பங்களையெல்லாம் அவரிடத்தில் கொண்டுபோகிறேன். என்னுடைய தொல்லைகளையெல்லாம் அவருக்குச் சொல்லுகிறேன். அவர் அதை அறிகிறார்; என்னையும் அறிகிறார். வேறொருவரும் தேற்றக்கூடாத பிரகாரமாய்க் கர்த்தர் என்னைத் தேற்றுகிறார். மெய்யாகவே கர்த்தர் என்னுடைய ஆறுதலாயிருக்கிறார்.

இந்தவிதமாய், சின்ன நெகேமியா தன் பெற்றோருடைய வீட்டில் தேவனுடைய ஆறுதலைப்பற்றி நினைப்பூட்டும் ஞாபகஸ்தம்பமாக வளர்ந்தார். அகாலியாவுக்கு இன்னும் எத்தனை பிள்ளைகள் இருந்தார்களென்பது சொல்லப்படவில்லை. ஆனால், நெகேமியாவுக்கு, ஆனானி என்று ஒரு தமையன் இருந்தார். சில காலத்திற்குப் பின் அகாலியாவின் குடும்பத்தில் ஒரு பிரிவினை உண்டாயிற்று. இதற்குப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் வேதபாரகனாகிய எஸ்றா, பாபிலோனிலிருந்து எருசலேமுக்குப் போகிறதாகவும், தங்கள் முன்னோருடைய தேசத்தை நேசிக்கிறவர்க



ளெல்லாரும் வந்து தான் எடுத்துக்கொண்ட வேலையில் தனக்கு உதவிசெய்ய மனமுடையவர்கள் வரலாம் என்றும் பிரசித்தம் பண்ணினதினால், சூசானிலுள்ள யூதர்களநேகர் ஏவி எழுப்பப்பட்டார்கள். பலஸ்தீனாவிலுள்ள விஷயங்களைப்பற்றிக் கேவலமான செய்திகள் பாபிலோனுக்கு வந்தன. செருபாபேல் கூடப்போனவர்கள் ஆத்துமாவிலும் சரீரத்திலும் செழித்தோங்கவில்லை என்ற சங்கதி எஸ்றாவுக்கு மிக மனநோவைக் கொடுத்தது. அதினால் அவர் தானே எருசலேமுக்குப்போய், அங்குள்ள கெடுதிகளையெல்லாம் சீர்ப்படுத்தி, அவ்விடத்து ஜனங்கள் தங்களுடைய கடமையைச் சரியானபடி நிறைவேற்றும்படியாக, தன்னால் கூடியமட்டும், ஏவி எழுப்பிவிடவும் தீர்மானித்தார். ஒரு கூட்டம் அவரோடு போகத் தைரியமாய்ப் புறப்பட்டது. 8000 யூதர்கள் தங்களுடைய சுக க்ஷேமங்களையும், ஆஸ்திபாஸ்திகளையும், நிலபுலன்களையும் விட்டு, அந்தப் பாழான பட்டணத்திற்குப்போய், அங்குள்ள ஜனங்களை உற்சாகப்படுத்தி உயிருள்ளவர்களாக்கப் பிரயாசப்பட ஆயத்தமானார்கள்.

எஸ்றாவோடு போன 8000 யூதர்களில் நெகேமியாவின் சகோதரனாகிய ஆனானி ஒருவராயிருந்தார். நெகேமியா அந்தச் சமயத்தில் அவர்களோடேகூடப் போகமுடியாத சிறுவனாயிருந்திருப்பார். அதுவுமல்லாமல், அவருடைய தகப்பனாகிய அகாலியாவோவென்றால், சூசானிலே பிறந்து வளர்ந்தவரானபடியால், அதைவிட்டுப் புறப்படுவது மகா கஷ்டமாயிருந்திருக்கும். ஆகையினாலேதான் ஆனானி தனிமையாய்ப் புறப்படவேண்டியதாயிருந்தது. சகோதரர் பிரிக்கப்பட்டார்கள்.

பன்னிரண்டு வருஷமும் கடந்துபோயிற்று. ஆனானியைப்பற்றிச் சூசானிலுள்ள குடும்பத்தாருக்கு யாதொரு சங்கதியும் தெரியவில்லை. சூசானுக்கும், எருசலேமுக்கும் இடையில் ஐந்து மாதப் பிரயாணமிருந்தது. அந்த நாட்களில், நாம் இப்பொழுது சுகமாய் அனுபவிக்கிற வாகனங்கள் இல்லை. அதனால் ஒருவரை ஒருவர் எளிதில் சந்திக்கும் நம்பிக்கை இல்லாதிருந்தது. அது மாத்திரமல்ல, ஒருவரைப்பற்றி ஒருவர் கேள்விப்படுவது முதலாய்க் கூடாதபடி எந்தவிதமான போக்குவரவுக்குரிய சாதனமும் இல்லாதிருந்தது.

ஆனால் நம்முடைய சரித்திரம் தொடங்குகிற இந்தச் சமயத்தில், ரப்சாகே என்பவர், சூசான் வாசலுக்குமுன்பாக நடந்துபோகும்போது, வடக்கு ரஸ்தாவின்வழியாய் ஒரு பிரயாணக்கூட்டம் வருகிறதைப் பார்க்கிறார். அவர்கள் வெகுதூரத்திலிருந்து பிரயாணமாய் வந்திருந்தபடியால், எல்லாரும் இளைத்துக் களைத்து, வாடி, வதங்கிப் போயிருந்தார்கள். அவர்கள் ஏறியிருந்த கோவேறு கழுதைகள்

பாரத்தினால் கஷ்டத்தோடும், மெதுவாயும் நடந்தன. பிரயாணிகள் வனாந்தரத்தில் சூரிய உஷ்ணத்தால் கருத்துச் சுருங்கியும், அவர்களுடைய வஸ்திரங்கள் கசங்கித் தூசிபடிந்தவைகளாயும், அவர்களுடைய சப்பாத்துகள் துவாரம் நிறைந்தவைகளாயும் இருந்தன. நெகேமியா ஆச்சரியப்படத்தக்கவிதமாய் இந்தக் கூட்டம் மகா நகரமாகிய எருசலேம் பட்டணத்திலிருந்து வந்திருந்தது. இன்னும் அதிகமாய் அவருக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கினது என்னவென்றால், வெகுகாலம் காணாமலிருந்த தன் சகோதரராகிய ஆனானி அந்தப் பிரயாணிகளுக்குள்ளே இருக்கிறார். ஆனானி எப்படி எருசலேமிலிருந்து வந்தார் என்பது சொல்லப்படவில்லை. தம்முடைய விருத்தாப்பியமுள்ள தகப்பனைப் பார்க்க மிகவும் ஆசையாயிருந்திருப்பார். அவர் வந்தபோது எல்லாராலும் விசேஷமாய் நெகேமியாவாலும் எவ்வளவு சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார் என்று நாமே நிதானித்துக்கொள்ளலாம்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## NOTES FOR TEACHERS

## VISUALISATION OF DRAWING

## சித்திரம் கற்பித்தல்

ஞாபகச்சித்திரம் (Memory Drawing) இப்போது சில வருஷங்களாகத்தான் ஐக்கியமாகாணத்திலிருக்கும் கலாபாடசாலைகளுக்கு (Art Schools) எட்டியிருக்கிறது. இதற்கு முன்னெல்லாம் ஒன்றுமில்லாத வெட்டாந்தரையிலிருந்து மேலே ஏதோ இருப்பதாக உருவங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வரைவதாயிருந்தது. அப்படிப்பட்ட உருவங்கள் சரித்திர சம்பந்தமானதாயிருந்தன. அவற்றை மனதிலிருந்து சரியாகப் பெயர்த்தெழுதலும் நேரான கோடுமே அடையவேண்டியது அவசியமாயிருந்தது. இதன்பிறகு, சாரமற்ற மாதிரிகளிலிருந்து இயல்புத்தோற்றமான சித்திரம் கற்பிக்கும் நோக்கத்தோடு மாதிரிச்சித்திரம் (Model Drawing) கொஞ்சம் அப்பியாசம் செய்யப்பட்டது. அப்பால் வெளிச்சமும் சாயலும் (Light and Shade) அதில் காண்பிக்க மாதிரிகள் அமைத்தலோடு ஏகதேசமாகச் சாயலும் கொடுத்துவந்தார்கள். அவ்விதப்பயிற்சி ஒன்றைப்போல மற்றொன்றைச் செய்யும் பாவனாசக்தியை மாத்திரமே பலப்படுத்துவதாயிற்று; ஒரு ரூபத்தை மனோபாவமாக வைத்துக்கொண்டு எழுதும்



தன்மையைத் தருவதாகவில்லை. ஆனால் தற்காலக் கல்வி இதையெல்லாம் மாற்றிவிட்டது. இந்தக் காலத்து வித்தியாப்பியாசத்தில் குழந்தையின் உணர்ச்சி, அனுபோகம் முதலியவைகள் யாவும் தாராளமாய் உபயோகிக்கப்படுகின்றன. அவன் கலையில் தேர்ச்சியடைவது தன் சுய உரிமைக்கும், ஏக பொறுப்புக்கும் தக்கதாக இருக்கிறது. முன் சொன்ன தட்டையான உதாரணத்திற்குப் பதிலாக ஒரு இலையாவது, பூவாவது அந்தக் குழந்தையினிடம் கொடுத்து அந்தமாதிரியே எழுதும்படி சொல்லுகிறோம்.



இப்படிச் சிலகாலம் முயற்சித்தபிறகு தன்னிடத்திலுள்ள குறைவுகளைத் தானே தெரிந்துகொள்ளுகிறான். அந்த உருவத்தைப்பற்றிய அறிவும் எல்லைக்குறிப்பும் வரவர அவனுக்குச் சீக்கிரம் வளர்கின்றன. அதன் மேற்புறம் எழுதவும், அதை யுருவாக்கவும் வர்ணம் உதவுகின்றது. பல பிள்ளைகள் எழுதிய ஒரே உருவத்தைப்பற்றி அவர்கள் பலவிதமாய்ச் சொல்வது, தங்கள் தங்களுடைய வேலையின் சுயத்தோற்றத்தை அவர்களுக்குக் காண்பிக்கக் கூடியதாயிருக்கிறது. அவ்வுருவங்கள் முதலில் ஒழுங்கற்றதாயிருக்கலாம்; ஆனால் அவர்களுக்கு அவற்றில் உண்டாயிருக்கும் பிரியம் அந்தக் குறைவுகளை நீக்கிப் படிப்படியாய் விர்த்திக்குக் கொண்டுவந்துவிடும்: அதிலும் மிருகரூபங்களைக் கொடுக்கும்போது அதிக சீக்கிரம் தேர்ச்சியடைகிறார்கள். இதுகாரணம்பற்றியே வித்தியாசாலைகளில் கூடியமட்டும் கொஞ்சம் மிருகங்களை வைத்திருக்கிறார்கள். மேல் வகுப்பில் பிள்ளைகள் உயிருள்ள பிராணிகளைப் பார்த்து அவைகளின் அசைவுகளைத் தங்கள் சித்திரங்களில் வரையவேண்டியிருக்கிறது.

பிள்ளைகள் முன்னதாகக் கவனித்துப் பார்த்துத் தெரிந்துகொண்ட ஒரு செடி அல்லது பிராணியின் உருவத்தை ஞாபகத்திலிருந்து வரைவதுதான் இந்தவிதப் பயிற்சியின் முக்கிய பாகம். ஆனதால் உருவங்களை மனதில் பதித்துக்கொள்ள புத்தியை உபயோகிக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்விதமாகச் சித்திரம் கற்பிப்பதுதான் பார்வைப் பிரயோகம் என்னப்படும். மாணாக்கர்கள் ஒரு செடியையோ ஒரு பிராணியையோ பார்த்துக் கற்கச் சில நிமிஷநேரம் கொடுக்கிறார்கள். பிறகு அந்தக் கொஞ்சநேரம் பார்த்த ஞாபகத்திலிருந்து பிள்ளைகள் அவைகளை வரையவேண்டும். அவர்கள் அந்த எல்லைக் குறிப்புகளைக் கவனத்தில் வைக்கவேண்டுவதுந்தவிர, அதன் அமைப்பு, ரேகை முதலியவைகளையும் கவனத்தில் வைக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

தளர்ச்சியில் முடிகிறதற்குப் பதிலாகத் துள்ளுகிற சாயலுள்ள சில உருவங்களை எழுதுவது ஜயமாய் முடியும். இது ஜப்பான் தேசத்தில் சர்வ சாதாரணம்; அங்கே ஜனங்கள் இயற்கையில் உற்றுநோக்கி யறியும் தன்மையுடையவர்கள். அவர்கள் மனதில் உருவங்களைப் பதியவைத்து ஒரு பட்சி அல்லது பிராணியின் உருவத்தை எழுதியும், அதிலும் விசேஷித்த பாகத்தை நன்றாய்க் காட்டித் தங்கள் சித்திரவித்தையை நன்றாகப் புதுப்பிப்பார்கள். ஆனால் ஆங்கில மக்களுக்கு அது ஒரு புதுமை. ஆனால் எந்தத் தேசத்திலானாலும் எந்தச் சூழ்ச்சியான வித்தைப் பயிற்சியானாலும் சுயப்பிரீதியோடு ஆரம்பிப்பதினால் அது கைவராமற் போகாது.

இப்புதிய வித்தைப் பயிற்சியில் விசேஷித்த பாகம் சுயப்பிரீதிதான். அதல்லாமல் எல்லாச் சிறுவர்களும் (ஜெந்துக்களின்) அசைவினால் விசேஷமாய் இழுக்கப்படுகிறார்கள். ஆகவே ஆச்சரியமான விதமாய் அதை நன்றாய்ச் செய்கிறார்கள். ஒரு பந்தோடு விளையாடிக்கொண்டிருக்கும் பூனை, ஓடிக்கொண்டிருக்கும் முயல், கத்துகிற சேவல், இன்னும் இப்பேர்ப்பட்டவைகள் பிள்ளைகளைச் சந்தோஷப்படுத்துகின்றன. அவரவர் கருத்துக்கிசைந்தபடி உயிருள்ள உருவத்தைச் சித்திரத்தில் சிறியதாய்ப் பதியவைக்கிறார்கள்.

இந்தப் புதிய மாதிரியில் சித்திரம் பழக்குதல் பிள்ளைகளை இராஜரீகக் கலாசாலையின் மெம்பர்களாக்குவதற்கல்ல: ஆனால் இவ்விதப் பயிற்சி அந்நிலைமைக்கும் கொண்டுவரும். இது மாணாக்கர்கள் கண்களால் நன்றாக உற்றுநோக்கவும், சரியானபடி வரையவும் செய்து அவர்கள் பார்வைப் பிரயோகம்செய்து, மனதில் பதியவைத்துச் சரியாய்ச் செய்யும் நிலைமையில் அவர்களை வைக்கிறதற்குத்தான் என்று சொல்லவேண்டும்.



**உருவங்களைச் சிந்தித்தல்.** குறிப்பெழுதுவதிலும் (Design), உருவங்களைச் சிந்தித்து அதை மனதில் கமனம்பண்ணுவது சிறந்த பலன்களைத் தரும். மாணாக்கன் தான் அதைச் சிந்தித்துத் தன் கருத்தை நன்றாய்ப் பதிய வைத்துக்கொள்ளக் கொஞ்சநேரம் கொடுக்கிறது; பின் அவன் முடித்த வேலை அதேமாதிரியான இன்னொரு நல்ல வேலையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறது. இப்படிச் செய்தால் அவன் பகுத்தறியும் சக்தியுள்ளவனாகும்போது தன்னுடைய குறிப்பில் உள்ள குறைவுகளை உடனே கண்டறிவான். தான் அறிந்துகொள்ள முடியாத பாஷையில் ஒரு உபாத்தியாயர் அந்தக் குறைவுகளை அவனுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை.

ஞாபகச் சித்திரத்தின் மதிப்பு இப்போதுதான் தெரிகிறது. குறிப்பானது ஒருவன் அடக்கியாளும் புத்தியைக்கொண்டும், அந்தச் சித்திரம் எழுதவேண்டியவற்றைக்கொண்டும் அதற்குத் தக்கபடி மனதில் பதியவைத்த இயற்கையுருவங்களை ஒழுங்குசெய்யும். அவன் அதைக் கற்கும்போது அதற்கு வேண்டிய உபகரணத்தின் தன்மையால் அவனுடைய வேலையின் பொறுப்பில் உண்டாயிருக்கும் தடையை யறிகிறான். அவன் தன்னுடைய சொந்த ஒழுங்கின்படியும் கருத்தின்படியும் அந்தக் குறிப்பை எழுதி முடிக்கிறான். அது இலேசானதாயிருக்கலாம்; ஆனாலும் சரியான அலங்காரம் அதற்குச் செய்கிறான். அவன் தன் வேலையில் ஊக்கமாயிருக்கும்போது அவன் சரியான வழியில் வேலைசெய்கிறதால் நிச்சயமாய் அதை நன்றாய்ச் செய்வான்.

ஆங்கில வித்தியார்த்திகள் இந்தியச் சித்திரக்காரரை எப்போதும் புகழ்ந்து பேசுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் தற்செயலாய் அவைகள் சரியாய் வரும்வரைக்கும் இப்பாகத்தையும் அப்பாகத்தையும் மாற்றி மாற்றித் தங்கள் வேலையில் ஒய்யாரமில்லாமல் தங்கள் மனதில் பதித்திருக்கும் உருவங்களைச் சரியாய்ச் செய்கிறார்கள்.

**இப்புதிய வழியின் வெற்றி.** சித்திரம் கற்பிப்பதில் இப்புதிய வழி அதிக அனுகூலமுள்ளதாயிருக்கிறது. இலக்கியம் முதலிய கல்விக்கு நேர் சம்பந்தமான மற்றப் பாடங்களிலும் அது உபயோகப்படுத்தப்படுகிறது. முந்தி எவ்விதக் கல்வியும் சற்றுமில்லாமல் இருக்கும் குழந்தை இவ்விதமாகப் பழக ஆரம்பிக்கும்போது அதிக விருத்தியடைகிறது. அப்போது வஸ்துக்கள் இருக்கிறபடியே ஒவ்வொன்றையும் பார்க்கிறான். உபாத்தியாயர் தம்முடைய அனுபவத்தை குழந்தைக்குச் சொல்வதற்குமுன்னேயே குழந்தை அதை நன்றாய் ஆரம்பிக்கிறான். அதுவுமன்றி தன் உணர்ச்சியையும் பாவனையை

யும் சொல்லவும் வருகிறான். சுயப்பிரீதி சீக்கிரத்தில் உண்டாகிறது. குழந்தை அதிக அறிவோடும் கல்வியபிவிருத்தியை நாடி விருப்பத்தோடு அந்த வேலையைச் செய்கிறான் பாருங்கள்!

## TEMPERANCE

## மதுபான விலக்கு

குடியின் கெடுதிகளை விவரித்து அதனால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் காட்டிவரும் பக்கங்கள் பல பத்திரிகைகளிலும் மாளிகைகளிலும் பலவாக இருந்தும், மதுபானம் குறையாமல் இருக்கிறது என்று மாத்திரமல்லாமல், முன்னிலும் மிகுதியோ என்றும் பயப்படக்கூடியதாக இருந்துவருவதை இன்னும் எங்கும் கேட்கிறோம். ஆதலால் நாமும் நம் மாதர்போதினியில் பலமுறையும் பரக்கப் பாடிய பாட்டும் எழுதிய வியாசமும் போதா என்று, இன்றும் இதுவிஷயம் சிறிது எழுதலானது சொன்னதையே சொல்வதாகாது என்னும் துணிவுகொண்டு இரண்டோர் அம்சங் காட்டலானோம்.

இங்கிலாந்து தேசத்துப் பார்லிமெண்ட் மெம்பர் ஒருவர் சென்ற முப்பது வருஷங்களில் மதுபானத்தில் காசைக் கரியாக்கிவந்ததைக் குறைத்துவந்திருந்தால் தொழிலாளிகள் அல்லது கூலிக்காரர்கள் வருஷத்துக்குச் சராசரி முப்பத்தேழரைக்கோடி ரூபா குடிக்கே செலவிட்டுவிட்டாலும், சராசரி வருஷத்துக்கு நூற்றுப்பன்னிரண்டரைக் கோடி ரூபா மீதிவைத்திருக்கலாம் என்று கணக்கெடுத்திருக்கிறார். இன்னும் இதில் வியாபாரி அடைந்த லாபம் முதலிய பல அம்சங்கள் சேர்க்கவில்லையாம். இப்போது நாகரீகம் மிகுந்துள்ள இங்கிலாந்திலேயே இப்படியென்றால் நம் இந்தியாவுக்குக் கேட்கவே வேண்டாம். இந்தக் கணக்கு 'எட்டில் அடங்காது எழுதித் தொலையாது.'

ஜனங்களில் குற்றவாளிகள் ஏற்படுவது எப்படி? அதைத் தடுப்பது எப்படி?' என்று பிரசுரமாயிருக்கும் புதுப் புஸ்தகத்தில் அதன் ஆசிரியர் 'பீர் (ஒருவித சாராயம்) தானே குற்றங்களின் சத்து' என்று தீர்மானிக்கிறார். இதனால் குடியில்லாவிட்டால் குற்றமும் இல்லையாகும் என்று கண்டிப்பாய்ச் சொல்லலாம் அல்லவா!

குடியால் மரணம் சமீபித்துவிடுகிறது என்பது, ப்ரான்ஸ் தேசத்து ஜனசமூக சௌக்கிய பண்டிதர் ப்ரென்ச் கவர்ன்மெண்டார் பிரசுரித்த மரணசங்கையிலிருந்து ரூபித்துக் காட்டுவதான உண்மையாம். வெறிதரும் பானங்களை மிகுதியாக உட்கொள்வதால் உடம்பில் ஒருவிதக் கிருமி உண்டாகி, அந்தக் கிருமியே மரணத்துக்குக் காரணமாக இருக்கிறது என்று கொள்கிறார். ஆரோகணக்ரமத்தில் குடிவிஷயத்தில், ப்ரான்ஸ் கடைசியிலும் இங்கிலாந்து முதலிலும் நிற்குமாம்.



குடிகாரன் ஒருவன் தன் குடி முழுவதையும் நோயாளிகளும் அதனால் பலஹீனர்களும் ஆக்கிவிடுகிறான். பெருத்த குடிகாரனுக்கு அஸ்தியை இறுகப் பிடிக்கும் வியாதி ஒன்று உண்டாகியே தீரும். அப்போது அவனது சந்ததியாரையும்—அவர்கள் குடிகாரராகாவிட்டாலும், அந்த வியாதி தொத்துகிறது. இப்படியே பாரம்பரியமாய் வர ஜனசமூகம் பலஹீனப்பட்டு நசித்து க்ஷீணித்துப்போகிறது. இது விபரம் சென்ற ஆகஸ்டுமீ 8உ வெளிவந்த 'பப்ளிக் ஒபினியன்' என்ற இங்கிலாந்து வாரப்பத்திரிகையில் 'பெற்றோர்கள் குடிகாரர்களாகாதபடி பாதுகாத்துக்கொள்ளுங்கள்' என்ற தலைப்பின்கீழ் விரிவாகக் காணலாம்.

இப்படிக்கெல்லாம் பலவிதத்திலும் கேட்டையே விளைவிப்பதான வெறியை 'விலக்கு! விலக்கு!! விலக்கு!!!' என்று பத்திராதிபர்கள் கதறிவந்தார்கள். காரியம் கைகூடவில்லை. அதை யறிந்து இப்போதைய ராஜாக்கள் ஏழுபேர் இந்த அருமையான கைங்கரியத்தை முடிப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் நம் சக்கரவர்த்தி ஜார்ஜ் V. மஹாராஜா ஒருவர் என்பது நம் மாதர் போதினி அபிமானிகளுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இதற்காக வேண்டியே இவர் இத்தனை காலமும் நடந்துவந்த பதிவை மாற்றியிருக்கிறார்.

இதுவரையில் ராஜவிருந்து முதலிய பிரபல விருந்துகளில் 'ராஜவாழ்வை'க் கோரித் திராக்ஷரஸம் பருகுவதுண்டு. இவர் இதற்குப் பதிலாகத் தண்ணீரைத் தாராளமாய் உபயோகிக்கலாம் என்றது 'ஏன்?' என்று ஆழ்ந்து யோசிக்க இவரது அன்பும் அநுதாபமும் அனைவர்க்கும் தெளிவாகும் அல்லவா! இந்த மஹானைப்போலவே இன்னும் ஆறுபேர் இருக்கிறார்கள். அவர்கள் யார் யார்? யூரோப் கண்டத்து இடலி, ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய தேசங்களின் மன்னர்களும், ஹாலண்ட் தேசத்து ராணியும், அமெரிக்காவில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு பிரெஸிடெண்ட் அவர்களுமாம். இச்சமயம் நம் சகோதரிகளுக்கு மிகுந்த பிரியந்தரும் சங்கதி ஒன்றை மனமகிழ்ச்சியோடு சேர்க்கிறோம். அதாவது ஸ்வீடன் ராணியாரும் (யு ஸ் அ) பிரெஸிடெண்டின் மனைவியாரும் ஸ்திரீ சமூக நேயர்களாக முன்வந்திருக்கிறார்கள்.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

இதனைக் கண்ட கீதமணி, வேதாபிமானியிடம் 'ஐயா! இந்தத் தகப்பனைப் பாருங்கள்! மகன் பொல்லாதவனாய்த் தன்னிடத்தில் அன்புகூராமலிருந்தாலும் இவனுடைய அன்பு எவ்வளவு அதிகம், சேவகனோடு அனுப்ப மனமற்று இருந்ததுபோல, சிறுவயதிலும் அவனை இளக்காரம்கொடுத்து, கண்டிப்பில்லாமல் செல்வமாய் வளர்த்திருப்பான்போலிருக்கிறது' என்றான்.

அப்பால் ஒரு பெரிய கிணறும் தொட்டியும் கட்டப்பட்டு அதிலே தண்ணீர் இறைக்கிற ஒருவனையும் கண்டார்கள். அதை வேதாபிமானி கீதமணிக்குக் காட்டி, 'கீதா! பள்ளத்திலிருக்கும் தண்ணீர் மேடான இடத்துக்கு உயரவர எவ்வளவு பிரயாசமிருக்கிறது? ஆனால் மேட்டிலிருந்து பள்ளத்துக்குத் தண்ணீர் எவ்வளவு விரைவாய்ப் போகிறது! கவனித்தாயா? அதுபோல்தான் தாய்தகப்பன்மாருக்குப் பிள்ளைமேல் அன்பு பொங்கிப் பாய்கிறது; ஆனால் பிள்ளைகளுக்கோ தங்கள் பிள்ளையின்மேலிருக்கும் அன்பு தாய்தகப்பன் மேலிருப்பது பள்ளத்திலிருந்து மேட்டுக்குத் தண்ணீர் ஏறுவது போல்தான். ஆனாலும் எல்லாரும் இப்படியிருக்கமாட்டார்கள். தாய் தகப்பனைக் கனம்பண்ணுகிறவர்களுக்கு நீடித்த ஆயுளையும் ஆண்டவர் தருவதாக வாக்களித்திருக்கிறாரே' என்றார். இப்படிப் பேசிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தார்கள்.

அப்போது வீட்டிலே நாலைந்து வாலிபர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரென்றால் அந்த ஊரிலுள்ள திரசருடைய குமாரரும், ஐயரவர்களுடைய குமாரரும்தான். என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்று கீதமணி அவர்களிடத்தில் போனபோது அவர்கள் ஆச்சரியப்பட்டு, ஒருக்காலும் காணாத காட்சியை இப்போது கண்டவர்கள்போல, 'இரண்டு தினத்துக்குமுன் நடந்த சர்க்கஸ் விளையாட்டைப்பற்றியும், அதிலே சிங்கங்களும், கரடி புலிகளும், யானை குரங்குகளும் ஒரு மனுஷனுடைய சொல்லுக்கடங்கி அவனுடைய ஜாடையின் சத்தத்துக்குக் கீழடங்கி, அவன் ஏவும் வேலைகளைச் செய்து வேடிக்கைகாட்டித் தம்தம் இடத்துக்கு வரிசைப்படி போய் உட்கார்ந்துகொள்வதும் மிகுந்த வியப்பை உண்டாக்கின. சிங்கத்தின் கண் தீப்பொறியாயிருந்ததால் எங்களுக்கு மிகுந்த பயமாயிருந்தாலும் அந்தத் துஷ்ட மிருகங்கள் ஜனங்களைச் சேதப்படுத்தாதபடி சுற்றிலும் இரும்பு கிராதிகளுள்ள அழிப்பாய்ச்சியிருந்தது. ஆதலால் நாங்கள் தைரியமாய் இருந்து பார்த்தோம்' என்று சொல்லிவிட்டு, 'அந்த மனுஷன் அந்த மிருகத்தை எப்படித்தான் அடக்கிவிட்டானோ அதுதான் ஆச்சரியமாயிருக்கிறது' என்று பேசிக்கொண்டார்கள்.





அதைக்கேட்டு, கீதமணி 'ஐயா! பாம்புகளை வைத்துப் பாம்பாட்டி ஆட்டுகிறதைப் பார்த்தே நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் சிங்கம், கரடி, புலி முதலிய துஷ்ட மிருகங்களையும் அடக்கிப்போடுகிறானே. அது எனக்கு மிகுந்த வியப்பை உண்டாக்குகிறது' என்றான். அதற்கு வேதாபிமானி 'அப்பா! நான் ஒரு பெரிய மனுஷனைப் பார்த்திருக்கிறேன். அவர் சர்க்கஸ்காரனைவிட மேலானவரென்றே எண்ணுகிறேன். அவர் தினசரி செய்யும் வேலை (1) இரண்டு முயலை நினைத்தபடி ஓடவிடாமல் மட்டுக்கட்டுவதும் (2) இரண்டு கருடனை நடத்தவேணும் (3) ஒரு பாம்பை அடக்கவேணும் (4) இரண்டு இராஜாளியை அடக்கவேணும் (5) ஒரு சிங்கத்தைச் சங்கிலியால் கட்டவேணும் (6) ஒரு வியாதிக்காரனைப் பாதுகாக்கவேணும்' என்றார். அது கீதமணிக்கு விநோதமாய் இருந்ததினாலே 'ஒரு மனுஷன் ஒரு நாளில் அவ்வளவையும் செய்யக்கூடுமோ?' என்றான். அதற்கு வேதாபிமானி 'கீதா! அதை விவரிக்கிறேன் கேள்' என்று ஆரம்பித்தார்.

'அதாவது (1) முயல்கள் என்பது நமது இரண்டு கால்களுமே. பாவஞ்செய்யத் தீவிரிக்காதபடி 1-ம் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறபடி கால்களைக் காத்துக்கொள்ளுவதும், சுவிசேஷ வேலைசெய்யக் கவனமாயிருப்பதும்

(2) இரண்டு கருடனாகிய இரண்டு கைகளும் தங்களிச்சையின்படி களவுசெய்யாமல் தேவனுக்கென்றும், மனுஷருக்கென்றும், வேலை செய்ய, உழைக்க, தருமஞ்செய்ய பழக்குவிப்பதும்

(3) பாம்பைப்போல பொந்துக்குள் மறைந்துகிடக்கும் நாவு மனுஷரைத் தீண்டி புண்படுத்தாதபடி காக்கவேணும். அந்த நாவு அநீதி நிறைந்த உலகம் என்றும், நெருப்பு என்றும் சத்தியவேதம் சொல்லுகிறது. 'யாகாவாராயினும் நாகாக்க' என்று குறளிலும் சொல்லியிருக்கிறது. நாவை அடக்காதவர்களாலே பெரிய பெரிய தீங்குகளும், சண்டைகளும், கொலைபாதகங்களும் நடக்கிறதை அனுபோகத்தினால் அறிந்துகொள்ளலாமே. என்ன விழுந்தாலும் எடுக்கலாம் சொல் விழுந்தால் எடுக்கப்படாது என்றும், காலம் போனாலும் வார்த்தை நிற்கும் என்றும் சொல்வார்களே. ஆதலால் நாவினால் நன்மையான காரியங்களைப் பேசி, நற்காரியங்களை நிலைநிறுத்தப் பிரயாசப்படவேணும்

(4) இரண்டு இராஜாளி என்பது நமது கண். அது திடீரென்று தாவீதரசனைப் பாவத்தில் விழப்பண்ணினது. அதுதான் கண்ட காட்சிகளிலேயெல்லாம் தன் சிந்தையைச் செலுத்தாமல் பாதுகாக்கப்பட்டு பரிசுத்த வேதத்தில் புற்றுதல் வைத்து, அதன் ரகசியங்களை அறிந்து, தன் வீட்டைப் பரிசுத்தமான பாதையில் நடத்தும்படி தன்னிரு கண்களையும் வெளிச்சங்களாயிருக்கும்படி உபயோகித்துக் கொள்ளவும் கவனமாயிருக்கவேண்டியது. மற்றப்படி கண்ணினாலே செய்த பாவம் எண்ணினாலும் முடியாது என்று வேதநாயகசாஸ்திரியார் சொன்னபடி, கண்ணினாலே அதிக தீமை விளைய ஏதுவாயிருக்குமே; ஆகையால் அவற்றை அடக்கி ஆளுவதும் அவருடைய தினசரி வேலை.

(5) அப்புறம் ஒரு சிங்கத்தைச் சங்கிலியால் கட்டுவது. அதாவது எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என்று எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார் (எரே. 17. 9). இருதயம் சிங்கத்துக்கு ஒப்பானது. அதை அடக்குவது மகா வருத்தம். கடலின் ஆழத்தைக்கூட மனுஷன் அளந்துவிடுகிறான். அதற்கும் ஒரு எல்லையுண்டு; ஆனால் மனுஷனுடைய இருதய ஆழமோ ஆராயக்கூடாதது. அது ஒரு நிலையில் நிற்பதும் மகா வருத்தமானது. ஆதலால் அதை வேதப்பிரமாணமாகிய சங்கிலியால் கட்டாவிட்டால் அது நினைத்தபடி நடந்து, சில சமயங்களில் கோபமாகிய இடி, குமறல் சிங்கம் கர்ச்சிப்பதுபோல உண்டாகி அநேக சேதங்களை வருவிக்கும். ஆகையால் இருதயமாகிய சிங்கத்தை எச்சரிக்கையோடு கட்டிவைக்கவேண்டும்.



(6) கடைசியாக வியாதிக்காரனைப் பேணவேணும். அது நமது தேகமே (எசா. 1. 6). அதை அதிகமாகப் பேணிவிட்டாலும் சத்துருவாய்விடுவான். கவனியாவிட்டால் ஒடுங்கிப்போவான். ஆகையால் இந்தத் தேகத்தை மிதமாய்ப் போஷிப்பதும், இச்சைகளுக்கு இடமாய் உடலைப் பேணாமலிருப்பதும் நாம் கவனிக்கவேண்டிய கடமை. மாமிசமோ பலனற்றதாயிருக்கிறது. ஆயினும் ஆவியைத் தனக்குக் கீழடக்கப் பார்க்கிறது. அதை நாம் எப்போதும் ஆவிக்குரிய ஜீவியத்திலே பழக்குவிப்பதிலும் ஜாக்கிரதையாயிருக்கவேணும்.

இப்படி அந்தப் பெரியவர் 'தினந்தோறும் செய்வதால் தன்னை அடக்குகிறவன் தலைவனாவான் என்றபடி, அந்தப் பெரியவரை நாம் எவ்வளவும் மதிக்கவேணும். அதோடு நம்மை நாமே அடக்கி ஆளப் பிரயாசை எடுப்பது அதிலும் மேலான காரியம். நம்மை மேலான பதவிக்கும் வழிநடத்துவதற்கும் ஏதுகரமாயிருக்கும் என்பதைக் கவனித்துக்கொள் கீதா' என்றார். அதற்கு அவன் 'ஆம் ஐயா! நாம் நம்முடைய ஐம்புலன்களை அடக்கி ஆளவேண்டுமென்பதைக் கற்றறிந்துகொண்டேன். ஆனால் உலகத்தோடு கூடி வாழும்போது பற்பல சோதனைகள் நேரிட ஏதுவாயிருப்பதால் இதனை ஜயிக்க பலம் போதாதே என்று திகைக்கும்போது தவசியாக, ஏகாந்தனாக மலைகளிலாவது, மடங்களிலாவது, தனித்திருந்தால் நலமென்று நினைக்கிறேன் ஐயா' என்றான். அப்போது வேதாபிமானி 'கிறிஸ்துவானவர் சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்குப் பின்செல்' என்கிறார். ஆகையால் நாம் நமக்குக் கொடுத்திருக்கும் ஊழியத்தை, குடும்பத்தை, பாரத்தை விட்டுவிட்டுப் போகாமல் தாமரையிலையானது தண்ணீர்த் தடாகத்தின் மத்தியிலிருந்தாலும் அந்தத் தண்ணீரோடே சம்பந்தமின்றிப் பிரிந்திருப்பதுபோல, நம்முடைய ஜீவியம் மெய்க்கிறிஸ்தவ ஜீவியமாயிருந்தால் சோதனைகளை ஜயிக்கப் பெலனையும் அவர் தருவார். கீதா என்னுடைய வாலிபகாலத்தில் எனக்கு நேரிட்ட சோதனையையும், அதில் நான் ஜயங்கொண்ட விதத்தையும் சொல்லுகிறேன் கேள்' என்று வேதாபிமானி சொல்லத் தொடங்கினார்.

நான் உபாத்தியாயராயிருந்தபோது மகமதிய வாலிபனொருவன் என் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்துப் பையன்களோடு தகாத வார்த்தைகளைச் சப்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்து 'அப்பா! படிப்புநேரத்தில் சந்தடிபண்ணுவதும், சத்தமிடுவதும் தகா. நீ வெளியே போய்ப் பேசலாமேதவிர உள்ளே சப்திக்கலாகாது' என வெருட்டிவிட்டேன். அவன் முறுமுறுத்துக்கொண்டு வெளியே போய்ச் சிறிது நாட்களுக்குப்பிறகு எனது கிருகத்தில் நெருப்புவைக்கத் தீர்மானித்திருப்பது தெரியவந்தது.

எப்படியென்றால் எனக்குச் சிநேகிதனாகிய ஆஸ்திக்காரனான ஒரு மகமதியன் இரவு 9½ மணிக்குமேல் என்னைத் தனித்துக் கூப்பிட்டு 'இன்னான் உங்கள் வீட்டைத் தீக்கொழுத்தப்போகிறானாம். அவன் பேசிக்கொண்டதை என் மகன் கேட்டுவந்து சொன்னான். காரணம் விளங்கவில்லையே என்று திகைத்து உங்களுக்குத் தெரிவிக்கவந்தேன்' என்றார். இந்தச் செய்தியைக் கேட்டதும் நான் திடுக்கிட்டு, என்ன செய்வதென்று வழி தெரியாமல் திகைத்து சாமான்களையெல்லாம் அப்புறப்படுத்த யோசித்தேன்.

அதற்கு அவர் 'நீங்கள் இவனுக்குப் பயந்துகொண்டு அடுத்த தெருவுக்குப் போவது கேவலம். நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேளுங்கள். அதாவது உங்கள் கைக்கெடியாரத்தை என்னிடம் தாருங்கள். நான் ஆள்வைத்து அவன் வீட்டில் வைத்துவிடுகிறேன். நீங்கள் உங்கள் கடிகாரம் காணமற்போனது என்றும், அந்தப் பொல்லாதவன்மேல் சமுசயம் உண்டு என்றும் போலீசில் எழுதிவையுங்கள். உடனே அவன் வீட்டை சோதனை செய்து கையுமெய்யுமாய்ப் பிடித்து 6 மாதம் ஜெயிலுக்குப் போய் விடும்படி செய்துவிடலாம். அவனை அடக்க என்றால் இயலாதா? நீங்கள் மாத்திரம் நான் சொன்னபடி உங்கள் கைக்கெடியாரத்தைத் தாருங்கள். உங்கள் பேர் வெளியே வாராமல் நான் எல்லாவற்றையும் நடத்திவிடுகிறேன். இல்லாவிட்டால் இன்று ராத்திரி தப்பாமல் தீயை வைத்துவிடுவான். அவன் மகா துஷ்டன். நான் வெகு நாளாய் அவனை அடக்க வழி தேடிக்கொண்டிருந்தேன். இது நல்ல சமயம். உங்கள் மூலமாயாவது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமானதாக இருக்கட்டும் ஐயா' என்று எங்கள்மேல் மெத்த அநுதாபமுள்ளவராகப் பேசினார்.

ஆனால் நானோ 'இது நமக்குப் பெரிய சோதனையாக இருக்கிறதென்று திகைத்து, 'நீர் சொல்லுகிறபடி செய்ய என் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. எங்கள் மார்க்கத்துக்கும் பொருந்தாது. நாங்கள் ஜெபஞ்செய்வோம். அப்போ ஜெயமுண்டாகும் என்றறிவேன்' என்று சொல்லிவிட்டுக் கண்ணீரோடே என் மனைவியிடம் வந்து காரியத்தைச் சொல்லவே, இருவரும் உட்கருத்தாய்க் கண்ணீரோடே எங்கள் கவலைகளைக் கர்த்தருக்கு அறிக்கையிட்டு சமையசகாயத்துக்காகக் கெஞ்சினோம்.

ஜெபஞ்செய்து எழுந்தவுடனே எனக்கு ஒரு நல்ல ஆலோசனை தோன்றினது. அப்படியே அந்த ஊர் மகமதிய முதலாளியிடம் சென்று காரியத்தைத் தெரிவிக்கவே அவரும் 'அவனை வேலையிலிருந்து தள்ளி மூன்றுமாதமாகிறது. ஆயினும் அவனை அழைத்துவந்து



யானை பிடிக்கும் மலைக்கு அனுப்பி இரண்டு யானைகள் கொண்டுவரும்படி செலவுக்கு வேண்டியவை கொடுத்து அனுப்பிவிடுகிறேனென்று அச்சணமே அவனை அனுப்பிவிட்டார்.

அவன் ஊர் கடந்து மூன்று மைல் போகுந்தனையும் காவலாளர் அவன் போய்விட்டது வாஸ்தவம் என்று பார்த்துவந்து எனக்குச் சொல்லும்படியும் ஆக்ஞாபித்தார். அப்படியே காரியம் நடந்தது. நாங்களும் அன்றிரவு சுகமே நித்திரைசெய்து ஸ்தோத்திரத்தோடே எழுந்து கவலை நீங்கி கர்த்தாவைப் பாடித் துதித்தோம். அவனோ மலையிலிருந்து ஆறுமாதத்துக்குப் பிறகு வந்து காரியாதிகளை அறிந்ததினால் என்னைக் காணும்போதெல்லாம் பாதநமஸ்காரம் செய்வது மாத்திரமல்ல, 'நான் அந்த ஊரில் வசித்த காலமெல்லாம் எனக்கு ஏவலாளன்போல நடந்துகொண்டான்' என்றார்.

அதுகேட்டு கீதமணி 'ஆம், ஐயா! பொல்லாப்பை நன்மையினாலே வெல்லவேணுமென்பது இதில் நன்றாய் விளங்குகிறது, நீங்கள் அந்த மகமதியர் சொன்னபடி கடிகாரத்தைத் தந்து போலீஸ் நடபடிக்கை செய்திருப்பீர்களானால் அவன் ஜெயிலிலிருந்து வந்தபிறகு உங்களுக்கு எவ்வளவோ துன்பத்தை உண்டாக்குகிறவனாயிருப்பான். ஆனால் நன்மைசெய்தால் மேன்மையுண்டு என்று அறிந்துகொண்டேன். எல்லாவற்றிற்கும் வல்ல ஆயுதம் ஜெபமே' என்றான்.

Esther Manonmani Devadas.

(இன்னும் வரும்)

## SCRIPTURE PUZZLE

## TOWNS, MOUNTAINS AND RIVERS

## வேதவினா

கீழ்வரும் A ஊர் B மலை C ஆறு இவைகளின் பெயர் எது?

A. 1. வேதத்தில் சொல்லுகிற முதல் ஊர்.
   2. முதல் முதல் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்னும் பெயர் வழங்கின ஊர்.
   3. கிறிஸ்து அற்புதம் செய்த முதல் ஊர்.

B. 1. கேதுருமரங்களுக்குப் பெயர்போன மலை.
   2. மோசே மரித்த மலை.
   3. பத்துக்கற்பனைகள் கொடுக்கப்பட்ட மலை.

C. 1. நாகமான் ஸ்நானம்செய்து தன் குஷ்டரோகத்தை நீக்கிக்கொண்ட ஆறு.
2. ரத்தமாக மாறிய ஆறு.
3. எரேமியா சணல்கச்சையை ஒளித்துவைத்த ஆறு.

## ANSWERS TO SEPTEMBER PUZZLE

விடை

1. வெட்டுக்கிளி. பிர. 12. 5.
2. சிலந்திப்பூச்சி. யோபு, 8. 14.
3. தெள்ளுப்பூச்சி. 1 சாமு. 26. 20.
4. எறும்பு. நீதி. 6. 6.
5. பொட்டரிப்பு. ஓசி. 5. 12.

No answers received were completely right.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ௵ நவம்பர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | யோபு, | 6. | 14—23 | 11 | செ. | யோபு, | 11. | 13—20 | 21 | வெ. | யோபு, | 16. | 6—22 |
| 2 | ஞா. | ,, | 7. | 1—11 | 12 | பு. | ,, | 12. | 1—13 | 22 | ச. | ,, | 17. | |
| 3 | தி. | ,, | 7. | 12—21 | 13 | வி. | ,, | 12. | 14—25 | 23 | ஞா. | ,, | 18. | |
| 4 | செ. | ,, | 8. | 1—13 | 14 | வெ. | ,, | 13. | 1—12 | 24 | தி. | ,, | 19. | 1—13 |
| 5 | பு. | ,, | 8. | 14—22 | 15 | ச. | ,, | 13. | 13—28 | 25 | செ. | ,, | 19. | 14—29 |
| 6 | வி. | ,, | 9. | 1—15 | 16 | ஞா. | ,, | 14. | 1—12 | 26 | பு. | ,, | 20. | 1—15 |
| 7 | வெ. | ,, | 9. | 16—35 | 17 | தி. | ,, | 14. | 13—22 | 27 | வி. | ,, | 20. | 16—29 |
| 8 | ச. | ,, | 10. | 1—13 | 18 | செ. | ,, | 15. | 1—16 | 28 | வெ. | ,, | 21. | 1—15 |
| 9 | ஞா. | ,, | 10. | 14—22 | 19 | பு. | ,, | 15. | 17—30 | 29 | ச. | ,, | 21. | 16—34 |
| 10 | தி. | ,, | 11. | 1—12 | 20 | வி. | ,, | 15. 31—35; 16. | 1—5 | 30 | ஞா. | ,, | 22. | 1—14 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

# மாதர் போதினி

No. 192 டிசெம்பர் 1913 No. 12



OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
13 DEC 1913
MADRAS.

## A LYRIC ON THE INCARNATION

### கிறிஸ்துநாதர் திரு அவதாரம்

விருத்தம்

கட்டளையை மீறினதால் வந்த பாவக்
கசடறுத்து நித்தியமாங் கேட்டி னுக்குட்
பட்டமனு மக்களைரட் சிக்க வென்று
பரமசுதன் மேலோக மகிமை யெல்லாம்
விட்டோ ருருவெடுத்து விளங்கு மன்பால்
மெய்மைமலர் திகழுமொரு கன்னி யின்பால்
சிட்டர்தொழுந் திருக்குழந்தை யாகப் பாரிற்
சிறந்திட்டார் புவிமகிழப் பிறந்திட் டாரே!

VOL. XXVIII.

## கீர்த்தனை

இராகம், மோஹனம். ஆதிதாளம்.

பல்லவி

மனுவுருவாய்ச் சிறந்தாரே—பரம சுதன்
மதலையாகப் பிறந்தாரே!

அனுபல்லவி

கனமிலகிய பா மண்டலம்புகழ
வினைபெருகிய பவ வுலகினர்மகிழ.— மனு.

சரணங்கள்

1. பாவ சாபத்தை நீக்கவே—பூமியின்மீது
படர் கொடுவினை போக்கவே—
சாவிலிருந்து காக்கவே—மானிடருக்கு
சந்தத வாழ்வுண்டாக்கவே—
தேவனரியதிரு மடியினையிகந்து
திகழ்பரமண்டல மகிமைதுறந்து
மேவுமிகுபரிவி னால்மனமுவந்து
மிக்வுமெளியகன்னி யுதரத்தமர்ந்து.— மனு.

2. விண்ணவர் கீதம் பாடவே—வெளியின் மந்தை
மேய்ப்பர் கண்டு கொண்டாடவே—
நண்ணும் ஞானிகள் தேடவே—வானத்தில் வெள்ளி
நயந்தவர் முன்னே நீடவே—
மண்ணுலகதனை விண்ணுலகமதாக்க
வலியவலகையா சாளுகை பேர்க்க
தண்ணளியிழந்தமா னிடரைக்கைதூக்க
தாரணிமேவிய துயரெலாந் தீர்க்க.— மனு.

3. அறியாமை யாவு மாயவே—சத்தியசுடர்
அவனியெங்குமே காயவே—
முறியா மரண மோயவே—நரகமாந்தீ
முன்னீர் வற்றியே தீயவே—
மறையவர் பலர்முன மேற்றியேசொன்ன
வண்ணமாககுரு நாயகனென்ன
குறிகொளும் பரமாட்சக னெனத்துன்ன
குவலயமவர்திரு நாமமே மன்ன.— மனு.

L. I. Stephen, Madras.



## MY HEART IS INDITING A GOOD MATTER

## என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது

கர்த்தருக்குள் என் அருமையான சகோதரிகளே:—

டிசம்பர்மீ 25உ எல்லாருக்கும் ஒரு சந்தோஷமான நாள் இந்நாள் எப்போது வருமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இது வாஞ்சையோடு எதிர்பார்க்கவேண்டிய நாள்தான். இந்த நாளைக் காணவேண்டுமென்று முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகள் ஆசைப்பட்டனர். தூதர் இந்தச் சுபதின சந்தோஷத்தைப் பார்க்கப் பெத்லெகேம் ஊரைநோக்கிக் கூட்டமிறங்கி உன்னத கீதம் பாடினர். கீழ்த்திசை சாஸ்திரிகள் இந்நாளின் விசேஷத்தைக் காட்டின நட்சத்திரத்தின் பின்னால் வந்து நமதருள்நாதர் பாதம் பணிந்தனர். சிமியோன், அன்னாள் முதலியோர் இந்த மகிமையின் நாளைக் காணும்படி ஆவலுடன் காத்திருந்தனர். பெத்லெகேம் மந்தை மேய்ப்பர் இந்நாளின் நற்செய்தியைக் கேட்கவே, ஓடிவந்து, நமது மகிமையின் கர்த்தரைக் கண்டு, அவர் புகழைப் பிரஸ்தாபித்தனர். ஆம், மெய்யாகவே இது எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கும் நாள். இந்த நாளில் வானதூதர் கெம்பீரங்கொண்டாடி 'உன்னதத்திலே இருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக' என்று சங்கீதம் பாடினார்கள். இந்த நாளின் நல்ல விசேஷத்தினால் சங்கீதக்காரன் 'என் இருதயம் பொங்குகிறது' என்று அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னே பாடி மகிழுகிறான்: இந்த விசேஷதினத்தில் உலகமெங்கும் மகிழுகிறது. இதை விசேஷித்துக் காட்டவே அன்று விடியற்கால ஆராதனை நடக்கிறது. விசேஷித்த விருந்து நடக்கிறது. விசேஷித்த போதனை சொல்லப்படுகிறது.

சகோதரிகளே! பெத்லெகேமில் பிறந்தவரைப் போற்றித் துதியுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். இந்த நாளில் நமது மகத்துவநாதரை எவ்விதமாய்ப் பாடிப் போற்றவேண்டும் என்பதைச் சிந்திப்போமாக!

**ஆயத்தமான இருதயத்தோடு ஆண்டவரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டும்.**

இந்நாளுக்கென்று உடுப்புகளெல்லாம் ஆயத்தமாக்கப்படுகிறது. சிலர் மற்றவர்களுக்குப் பண்டிகை இனாம் அனுப்பவேண்டுமென்று

ஆயத்தம்பண்ணுவார்கள். பாட்டுப் படிக்கிறவர்கள் வீணை வாசிக்கிறவர்கள் முன்னமே அப்யாசம் பண்ணினால்தான் ராகம் இன்பமாயிருக்கும். அப்படியே கர்த்தரைத் துதிக்கிற சகோதரிகளின் இருதயமும் ஆயத்தமாக்கப்பட்டதா யிருக்கவேண்டும். அதிலுள்ள பாவக் கறைகளை நீக்கவேண்டும். பெருமை என்னும் மேட்டை ஆவியின் சம்மட்டியால் நொறுக்கவேண்டும். இருதயத்தில் பாவத்தை வைத்துக்கொண்டு கர்த்தரைத் துதிக்கிறவர்களைக் கர்த்தர் பார்த்து:—'இந்த ஜனங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். இவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது' என்று பரிதபிக்கிறார்.

கிறிஸ்மஸ் விடியற்காலையில் பாடும் சகோதரரே! சகோதரிகளே! கிறிஸ்து நம்மண்டையில் நிற்கிறார். நம்மைப் பார்க்கிறார். நம் முகத்தையல்ல, மேனி மினுக்கையல்ல, பட்டு உடுப்பையல்ல, நகைகளின் சிங்காரத்தையல்ல, இருதயத்தையே பார்க்கிறார். நமது ஆசை எதின்மேல் போகிறதென்று பார்க்கிறார். நமது உள்ளத்தைக் கவனித்தவண்ணமா யிருக்கிறார். ஆகையால் பாவம் நமது இருதயத்திலிருக்குமானால், முதலாவது இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர் ரட்சிப்பைப் பெற்று, பாவத்தை அகற்றப் புலம்பி அழுது, மன்னிப்புப்பெற்று, ரட்சணிய சந்தோஷத்துடனே இந்த நல்ல பண்டிகையின் கீதம் பாடவேண்டும். நாம் பாவ இருதயத்தோடு கீதம் பாடினால் அன்புள்ள இயேசுநாதர் நம்மைப் பார்த்துக் கண்ணீர்விடுகிறார். இயேசு நம்மைப் பார்த்துக் கண்ணீர்விடக் காரணமாக இராமலிருப்போமாக.

அன்பு பொங்கி ஆவியினால் நிறைந்து ஆண்டவரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டும்.

தைப்பொங்கலானது இந்துக்களுக்கெல்லாம் ஒரு விசேஷமான நாள். அந்த நாளில் பால்பானை பொங்கிவிட்டால், அவர்களுடைய வாழ்வும் பொங்கிப் பெருகும் என்று எண்ணுவார்களாம். சகோதரிகளே! நமக்கும் ஒரு பொங்கல் உண்டு. அது அஞ்ஞானிகள் கொண்டாடும் பொய்ப் பொங்கல் அல்ல, வயிற்றுப் பொங்கலுமல்ல. இது இருதயத்திலுள்ள ஆவியின் பொங்கல். இருதயமானது கர்த்தரின் ஆவியால் நிரப்பப்பட்டுக் கல்வாரி அக்கினியால் கொதித்துப் பொங்கி வழிந்தோடும் பொங்கலாம். இதுவே மெய்யான பொங்கல். தாவீதின் இருதயமும் இந்த நல்ல விசேஷத்தால் பொங்கினது. நமது நேசர் எல்லா மனுப்புத்திரரிலும் மகா சவுந்தரியமுள்ளவர். அவர் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர். அவர் முற்றிலும் அழகுள்ளவர். அவர் நேசம் எவ்வளவு இன்பம். கெட்டுப்போன தூதர்களை ரட்சிக்கத்



தேடிவரவில்லை. கெட்டுப்போன ஆதாமின் மக்களாகிய நம்மையே தேடிவந்தார். மாட்டுத் தொழுவம் அவர் பிறந்த இடம். எளிய கன்னியிடம் அவர் வந்து பிறந்தார். ஏழைக் கோலமானார். சகோதரரே! அவர் நம்மைத் தங்க லோகத்திற்கு உயர்த்தும்படி தாம் அடிமையின் ரூபமெடுத்தார். இந்த உன்னத அன்பை நாம் நேசிக்கிறோமா? வானம் பூமி ஆளும் ஆண்டவர் நம்மைப்போலப் பாலன் ஆனாரே! கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடும் இன்று நம்மைச் சோதித்துப் பார்க்கவேண்டும். இந்த அருமை நேசரை நமது இருதயத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? அவருடைய அன்பினால் நமது இருதயம் நிறைந்திருக்கிறதா? இந்த நேசரின் அதிசயத் தாழ்மையைத் தியானிக்கிறோமா? இவருக்கே நம்மைப் பூரணமாய்த் தத்தம்செய்து ஜீவிக்கிறோமா?

பிலிப்புப் பட்டணத்தில் பவுலும் சீலாவும், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும்பொழுது, கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டும், கைகள் சங்கிலியால் கட்டப்பட்டும், முந்தின நாள் பட்ட அடியால் தேகம் பச்சைப் புண்ணுமாயிருந்தது. ஆனாலும் பாருங்கள், நடு ராத்திரியிலே துதியின் கீதம் பாடினார்கள். கர்த்தருடைய பிள்ளைகளின் கைகள் கட்டப்பட்டிருந்தும், அவர்கள் வாய் கட்டப்படவில்லை. அவர்கள் இருதயம் தேவ அன்பால் நிறைந்திருந்தது. அவருடைய நாமத்திற்காக அவமானம் அடைவது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அன்பு பொங்கிப் பாடினார்கள். இதுதான் தேவ அன்பு பொங்கின இருதயத்தின் துதி. இப்படிப்பட்ட கீதம் ஆண்டவருக்குப் பிரியம். தேவனுடைய பிள்ளைகளே! தேவனுடைய அன்பு பொங்கி இந்தக் கிறிஸ்மஸ் விடியற்காலையில் கர்த்தரைத் துதியுங்கள்.

இந்த இன்பக் கிறிஸ்மஸ் நம்மெல்லாருக்கும் ஆசீர்வாதமாயிருப்பதாக.

## நீதிமொழிகள். (Wise Sayings)

காரிய நிர்வாகத்துக்கு ஏற்ற யுக்தி மரியாதையைப்போல், வேறே காணோம்.

வாழ்க்கை கால்; ஒழுக்கம் முக்கால்.

ஈரமுள்ள மனசே வீரமுள்ள மனுஷன்.

அருந்தொழில் எதுவும் ஆரம்பத்தில் அசாத்தியமாகும்.

பரமோத்சாகம்போல், படர்நோயில்லை.

# ST. NICHOLAS. THE XMAS SAINT

## பரிசுத்த நிக்கொலஸ் அல்லது கிறிஸ்மஸ் வெகுமதி கொடுத்த மனிதன்

ஒரு ஐசுவரியமுள்ள வாலிபன் ஒருநாள் தன் ஊரின் தெரு வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, உயர்குலத்தில் பிறந்தவனும், தன் ஆஸ்தி முழுவதையும் தோற்று, பசிப் பிணியால் தன் மூன்று குமாரத்திகளோடு வருந்துபவனுமான ஒரு மனிதனுடைய வீட்டிலிருந்து உண்டான புலம்பலின் சத்தத்தைக் கேட்டான்.

அந்த வாலிபன் சற்று நின்று கவனித்தபோது, 'தகப்பனே, பசி நோயால் வருந்துவது அதிக கஷ்டமாயிருப்பதினால், வீதியிற்போய் யாசித்தல் நன்று' என்று சொன்ன ஒரு பெண்மணியின் சத்தத்தைக் கேட்டான்.

அதற்கு அந்த உயர்குடியிற் பிறந்த தகப்பன் பிரதியுத்தரமாக 'இன்று இரவு வேண்டாம், நாளை இரவுமட்டும் காத்திருக்கலாம். நாம் மறுபடியும் கடவுளை நோக்கி அவ்விதமான அவமானத்திலிருந்து இரட்சிக்கும்படி ஜெபிப்போம்' என்றான்.

அப்போது நிக்கொலஸ் அதிவேகமாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தன் தகப்பனிடத்திலிருந்து பெற்ற பொக்கிஷங்களில் மூன்று பொற்கட்டிகளிருந்தன; இரவில் அவைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு அவ்வேழை மனிதன் வீட்டுக்குச் சென்று, தான் எட்டக்கூடிய ஒரு பலகணி திறந்திருப்பதைக் கண்டு, அதன்வழியாய் அத்துண்டைப் போட்டுவிட்டுத் திரும்பிப்போனான். அடுத்த இரவும் மற்றொரு துண்டையும் வைத்துப்போனான். அப்படியே மூன்றாவது துண்டையும் வைத்துப்போனான். ஆனால், அம்மூன்றாவது இரவிலே அவனைத் தெரிந்துகொண்டார்கள். மோட்சத்திலிருந்து அப்பொன் துண்டுகள் வந்தனவென்று நம்பியிருந்த அந்த ஏழைத் தகப்பன், இவனுடைய பாதத்தில் முழங்காற்படியிட்டான்.

அப்போது நிக்கொலஸ் அவனைத் தூக்கிவிட்டு 'என்னை உன்னிடத்தில் அனுப்பிய கடவுளுக்கு நன்றிசெலுத்து; ஏனென்றால், அவர்தாமே என்னை உன்னிடம் வரச்செய்தார்' என்று சொன்னான்.

இதையும், இதைப்போன்ற அநேகவித நேர்த்தியான அன்பின் கொடைகளையும் கடவுள் போலே இரகசியமாய் அளித்துவந்தபடியால், அவர் பரிசுத்த நிக்கொலஸ் என்று பெயர் பெற்றார். இதனிமித்தம் பாலருடைய நேசரும், மானிட இரட்சகருமான அவருடைய எஜமானுக்காகக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தின மாலையில் இப்பரிசுத்தவான் பிள்ளைகளிடத்தில் வந்து அவர்களுடைய மேல் ஜோடுகளை நல்ல ஈவுகளால் நிரப்புகிறாரென்று நாம் சொல்லுகிறோம்.





THE REGISTRAR OF

# XMAS SUNSHINE

## கிறிஸ்து ஜனன நாளின் சூரியன்

ஆனந்தத் தினத்தின் சந்தோஷ ஆரவாரங்களுக்குப் புறம்பேயிருக்கிறவர்களை நாம் நினைக்கவும் அப்பேர்ப்பட்ட சந்தோஷம் கொண்டாடும் தினத்தை உண்டாக்கியிருக்கிறோம்.

ஜனங்கள் சந்தோஷிக்கவும், நகைக்கவும், பாடவும் முடியாமலிருந்தால், சிலருக்குக் கிறிஸ்மஸ் தினத்தில் நகைக்கவும், பாடவும் எவ்வளவு கடினமாகவிருக்கும். கடவுளுக்குத்தான் தெரியும். அந்த நாளுக்குப் புறம்பேயும் அவர்களுக்கு அந்த நாள் தூரமாகவும் இருக்கிறது என்று நாம் சிந்திக்கிறோம்.

ஆனால் நாம் ஒரு நிமிஷம் யோசித்துப் பார்ப்போம். அம்முதல் மகத்தான ஜனனநாள் ஆசீர்வாதம் யாருக்கு முதல் அளிக்கப்பட்

டது. பெத்லெகேமின் சத்திரத்தில் இருக்கிறவர்கள் அன்னியரால் வெறுக்கப்பட்டவர்களா யிருந்தபோதிலும் சிலாக்கியம் பெற்ற ஜனங்களுக்கோ, அல்லது ஏரோதின் வீட்டிலோ? ஆரவாரமும் பாட்டும் நகைப்பும் களிப்பும் இவ்விடத்தில் நிறைந்திருந்தன. சத்திரத்திற்கு வெளிச்சம் நிறைந்திருந்தது. ஆனாலும், சங்கீதமும், ஆட்டமும் அரண்மனையில் நிறைந்திருந்தன. கிறிஸ்மஸ் தினத்தின் ஆசீர்வாதம் அந்தத் தயை பெற்ற மனிதர்களுக்கு வந்ததாம். அல்லது வாழ்த்துதல் மாட்டுக் கொட்டகையில் இருந்த யோசேப்புக்கும் மரியாளுக்கும் வந்ததா? அல்லது குளிர்ந்த குன்றுகளினருகே தங்கள் ஆட்டு மந்தைகளைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு எட்டி வந்ததா?

யோசேப்புக்கும் மரியாளுக்கும் அந்நாளிலே பொழிந்ததுபோல கிறிஸ்து ஜனன நாளின் ஆசீர்வாதத்தைப் புறம்பேயிருக்கிறவர்களுக்கும், துயரத்திலுள்ளவர்களுக்கும், ஆவலுள்ளவர்களுக்கும் பொழியவில்லையா? மேய்ப்பர்களுக்கு இறங்கினதுபோல ஏழைகளுக்கும் நிர்ப்பந்தமுள்ளவர்களுக்கும் இறங்கவில்லையா?

அவர்கள்பேரில் விண் பிரகாசித்தது. அவர்களுக்காக பரமசேனையின் திரள் பாடினார்கள். பின்னும் அவர்களுக்காக மோட்சம் திறக்கப்பட்டது. வருத்தத்திலும் தரித்திரத்திலும் மத்தியில் அவர்கள் ஏழை ஜனங்களே தவிர வேறில்லை. அது உண்மையாக அதின் மகத்தான சிறப்புள்ள ஜனன நாளின் அர்த்தம். இதையே நாம் அடிக்கடி கண்டுபிடிக்காமல் இழந்துவிடுகிறோம்.

ஜனன நாளின் நற்செய்தி யாதெனில் தேவன் கவலைப்படுகிறார். வறுமையின் துயரத்தின் மத்தியிலும், ஜீவியத்தின் கஷ்ட நிலைமையிலும், கடவுளுடைய கவலை நமதுபேரில் இல்லை என்று அர்த்தம் கொள்ளும் சமயத்தில் கிறிஸ்து ஜனன நாளின் அறிவிப்பு வந்தது.

வறுமையும் வருத்தமும் நிலைத்திருந்தன. வானத்திலே அமைச்சலும் பூமியில் மறுபடியும் இருட்டும் உண்டாயிற்று. முன்போலவே தங்கள் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியதாயிருந்தது. ஒருவரும் உயரவில்லை, செல்வமாக்கப்படவில்லை. மேய்ப்பர்கள் இரவு இரவாக குளிர்ந்த குன்றுகளுக்குப் போனார்கள். யோசேப்பும் மரியாளும் தங்கள் ஜீவியத்திற்கும் கஷ்டப்படுகிறதுமல்லாமல் முன்னே பெத்லெகேமிலே சிநேகிதரையுடையவர்கள் இப்பொழுதோ துரோகிகளுக்குத் தப்பியோடிப் பிழைக்கவேண்டியதாயிருந்தது. யாரொருவர் ஜனன நாளில் சஞ்சலத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்கள் அந்தப் பழைய விருத்தாந்தத்தின் பிரதி பகுதிகளாயிருக்கின்றனர். வெளிப்படுத்துதலுக்குப் பிறகு காரியங்கள் இவ்வாறிருக்கையிலே ஜீவியத்தின் பயன் அதிசீக்கிரத்தில் வியாக்கியானம் செய்யப்



பட்டது. ஜீவியத்தின் நன்மை அதிசயமாய் மாறிற்று. ஜனன நாளை அடைந்தவர்களுக்குக் கஷ்டங்களும் தரித்திரங்களும் அவர்களிலிருந்து நீங்காமலிருக்கும். சந்தோஷத்துடன் புதிய நாளுக்குள் பிரவேசிக்கிறவர்களாயிருக்கிறார்கள். நாம் ஜனன நாள் (ஆறுதலின் பண்டிகை) என்பதை மறந்துவிடுகிறோம். கிறிஸ்மஸ் தினத்தின் வாசனையுள்ள மாலைகள் வாடுமே, சந்தோஷத்தின் சகுனங்கள் நார் ஜீவியத்தின் நிலையற்றதைக் குறிப்பிக்கிறது. ஒவ்வொரு வருஷமும் கண்ணீரோடே இதைக் கழிக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் ஜனன நாளின் ஆசீர்வாதம் திரியில் எரிகிற வெளிச்சத்தைப்போல் மாத்திரமல்ல; சூரியனும் சந்திரனும் தரித்திருக்கும் வெளிச்சத்தைப்போலவும், ஓயாமல் வளருகிற சிநேகத்தைப்போலவும், பூமியிலுள்ள அறுப்பைப்போலவும் நிலைத்திருக்கின்றது. மங்குகிற திரிகளும், வாடுகிற இலைகளும் மகத்தான ஞானமான தெய்வச்செயலான காரியங்களை ஒழுங்குபடுத்தலேயாம். கிறிஸ்து ஜனன நாளின் அர்த்தம் என்னவெனில், கடவுள் நல்லவரும் வெளிப்பட்ட அந்நன்மையில் நிலைத்திருத்தலே அவருடைய கவலையை அறிவிப்பதேயாம். இந்த நாளின் சுவிசேஷம் பிரசங்கங்களில் பிரசங்கிக்கப்படவும் ஞான சங்கீதப் பாட்டுகளாகப் பாடவும் பரிசுத்தத்தோடும் பயபக்தியோடும் கொண்டாடப்படவும் களிப்போடும் இவ்விதமாகக் கொண்டாடும் ஜனங்களின் முகங்களில் பிரதிபிம்பிக்கிறது. நாம் வசிக்கும் இவை மத்தியில் காணப்படாதவைகளும் நித்தியமானவைகளின் அன்பைக் காட்டுகின்றன. நாம் நிலையான திவ்ய அன்பின் ஆகாயத்தைச் சுவாசிக்கின்றோம். தேவன் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுத்து இவ்வளவாக உலகத்தில் அன்புகூர்ந்து அவர் சந்தோஷமற்ற அந்த நாளை ஜனனத் திருநாளின் பண்டிகையாக மாற்றினார். அவ்வாறே அநுதினமும் ஆண்டாண்டுதோறும் செய்து வருகிறார்.

நமது ஜீவியத்தின் விருத்தாந்தத்தை அறிவதே நமக்குத் தேவை. நமது அன்புக்குரியவர்கள் நமக்குக் கண்ணுக்கெட்டாத தூரத்திலிருக்கிறவர்களை நாம் நினைக்கவும் பண்டிகைதின சந்தோஷத்தைக் கொண்டாட ஏலாதவர்கள், மனத்தளர்ச்சியடைந்தவர்களாயும் நம்மிலடைந்த முற்குறி மங்குகிறதுபோல் காணப்படுகிற இழந்துபோன சிநேகத்துக்காகப் பரிதாபமுள்ளவர்களாயுமிருக்கிறோம். தேவ அன்பை முத்திரிக்கவும் சஞ்சலத்திலும் சந்தேகத்திலும் நேர்விரோதமானவைகள் எல்லாவற்றிலும் பரம பிதாவின் புத்திரராகத் திடப்படுத்தவும் ஜனன நாள் வருகிறது. நிலையற்ற மனுஷனுடைய அறிவுக்கெட்டாத விதமாக மெய்யாகவே தேவன் நடத்துகிறார். ஆனாலும் எவ்விதத்

திலும் சரியாகவும் உண்மையாகவும் நியாயமாகவும் அன்பாகவுமிருக்கிறதென்று நமக்குத் தெரியும், நமக்குமேல் முன்னொருகாலத்தில் நடந்ததுபோல, இப்போதும் விண் பிரகாசிக்கும் வானத்திலிருந்து சத்தங்கள் முழங்கவும் திருப்பாட்டுகள் தொனிக்கவும் நித்திய சந்தோஷத்தை அறிவிக்கிறது. எல்லாப் பயங்கரமான நாட்களையும் குறிக்கிறது பூமி மோட்சத்தின் சமீபத்திலிருக்கிறதென்றும் நமக்குத் தெரியும். இயேசுரட்சகர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு ரட்சகரென்று விளங்குகிறது. மேகங்களுக்குப் பின்னேதான் பரம அன்பின் சூரியன்.



## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

மறுநாள் ஓய்வுநாளானதால் அதிகாலையெழுந்திருந்து, அமலனடி பணிந்து ஐயரவர்களோடே கீதமணியும் வேதாபிமானியும் தேவால



யத்துக்குப் போனார்கள். அங்கே எல்லாரும் எற்கனவே வந்து தேவாலயம் நிறைந்திருந்தது. முதலாம் மணி அடித்தவுடனே சபையாரும் பள்ளிப்பிள்ளைகளும் வந்திருந்து பாட்டுப் படித்துக்கொண்டிருந்தார்கள். அன்றியும் எல்லாரும் ஒன்றுபோல் நெடு முழங்காலிலிருப்பதும், எழுந்திருந்து ஆண்களும் பெண்களும் சத்தமாய்ப் பாட்டுகள் படிப்பதும், பிள்ளைகள் சந்தடியே காணப்படாமல் எல்லாருடைய முகங்களும் குருவானவரைப் பார்த்து, அவர் விளம்புவதை ஆவலோடே கவனிப்பதாகவும் தோன்றியது கண்டு வேதாபிமானிக்குப் பரமானந்தமாயிருந்தது. அப்போது ஐயரவர்கள் செய்த பிரசங்கவாக்கியம் 2 இரா. 4. 26 'நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா?' என்பதே. இதைப்பற்றி ஐயரவர்கள் சொன்னவைகளில் சிலவற்றைச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேள்.

உலகத்தில் மனுஷனுக்குத் தன, கன, ஜன பாக்கியங்களைவிட அதி முக்கியமானது சுகபாக்கியமே என்று எல்லாரும் ஒத்துக்கொள்வார்கள். ஆதலால்தான் யாதாமொருவர் ஒருவரைச் சந்திக்க நேரிடுங்கால் சுகமாயிருக்கிறீரா என்பது முதல் வினாவாகக் கேட்டுப் பின்னர்தான் சமாச்சாரம் பேசுவர். அப்படியே கோவிலிலுள்ள ஒவ்வொருவரையும் பார்த்து இந்த வாக்கியத்திலுள்ளபடி வினாவுகிறேன். நீங்களோ அந்தச் சூனேமியாள் சொன்னதுபோல் சுகந்தான் என்று மறுமொழி சொல்லிவிடுவீர்கள். சுகம் இல்லாவிடில் இப்போ கோவிலுக்கு வரக்கூடுமோ என்றும் சொல்லுவீர்கள். ஆனால் சூனேமியாள் பிள்ளை செத்துப்போயிருந்தும் சுகம்தான் என்றாளே. அதுபோல் நாம் நம்முடைய நிலைமையைச் சரிவர அறியாமல் கேட்டதற்குத் தக்கபடி சொல்லிப்போகலாகாது. நம்முடைய சரீரத்தைவிட, உலக முழுவதையும்விட விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆத்துமாவின் சுகத்தை நாம் நுண்மையாய் எப்போதும் கவனித்துவருவது அத்தியாவசியமென்பதை எல்லாரும் நன்குணர்ந்து,* நான் சொல்லுகிற சில காரணங்களினால் பரீட்சித்து ஆத்துமா சுகமாயிருக்கிறதா என்பதைக் கவனித்துக்கொள்ளுங்கள்.

(1) வியாதியஸ்தர்களுடைய நாவைப் பார்ப்பார்கள். அவர்கள் வாய்க்குப் போஜனம் பிரியமிராது. அதுபோல தினசரி வேதம் வாசிக்க, ஜெபம்செய்ய யாருக்கு மனம் வரவில்லையோ அங்கே ஆத்தும சுகமில்லை. (2) தேகம் கனத்துத் தோற்றுவது. அதாவது மாமிசத்தின் கிரியைகள் அதிகரித்து தேவாலயத்துக்குப் போக, நல்ல வேலைசெய்ய யாருக்கு மனமில்லாமலிருப்பது ஆத்துமாவின் சுகவீனத்தைக் காட்டும் குறி. (3) தலையில் பாவநித்திரை மயக்கு

முண்டோ அங்கே ஆத்தும சுகமில்லை. இத்தியாதி குணம் யாருக்கு உண்டோ சோதித்துப் பாருங்கள். ஆத்தும சுகமில்லாதவர்கள் சுகமாயிருக்கும் வழி ஏதென்றால் நாம் சரீர சுகத்தை எப்படிப் பேணிப் போஷித்துவருகிறோமோ, அதுபோலவே ஆத்துமாவையும் வேத வசனமாகிய களங்கமில்லாத பாலினால் போஷிப்பித்து, அவருடைய திருரத்தத்தினால் கழுவப்பட்டு அவருடைய நீதியின் வஸ்திரத்தையுடுத்து, நாடோறும் அவருடைய மறைவின்கீழே தங்கி ஜீவிக்கும்படி பார்த்துக்கொள்ளவேணும். அவைகளை ஒழுங்காய்ச் செய்துவரப் பிரயாசப்படவேணும். ஒழுங்கற்ற வேதவாசிப்பும், நினைத்த அன்று ஜெபமும் ஆத்துமாவின் பூரண சுகத்தைக் காட்டும் குறிப்புகளல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் சுகஜீவியாயிருக்கவேண்டுமானால் ஒவ்வொருநாளும் கிறிஸ்துவின் முகதரிசனத்தை அகத்தில் கொண்டவனாய் இருத்தல் அவசியம். ஏனெனில் 'தாய்முகம் காணாக் குழவியும், மழைமுகம் காணாப் பயிரும்' எப்படியோ, அப்படியே கிறிஸ்துவின் பிள்ளைகளென்றால் அவருடைய முகதரிசனம் பெற்று அவருடைய ஒதுக்கிலே ஜீவிப்பது அவசியம். பிரசங்க வாக்கியப்படி (4) நாம் சுகமாயிருத்தல்மாத்திரம் போதாது. நமது குடும்பத்தில் புருஷன், மனைவி, மக்களுடைய சுகத்தையும் கவனித்தல் அவசியம். பிறத்தியாருடைய ஆத்தும சுகத்தையும் கவனித்துவரவேணும். எல்லாருக்கும் சுகம் அருளப்படவேணுமானால் இயேசுவானவர் சொல்லுகிறதைக் கேளுங்கள். மாற். 9. 19. கடைசி பாகம் 'அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்' என்கிறார். நாம் நம்முடைய ஜெபங்கள் மூலமாய்ப் புத்திபோதனைகள் மூலமாய் அவர்களை இயேசுவின் பாதத்தில் வைக்கவேண்டும். அப்பொழுது நாமும், நமது குடும்பமும், சபையும் ஆத்தும சுகம்பெற்று வாழக்கூடும் என்று வற்புறுத்தி ஆவலோடே ஆத்துமாவின் வாழ்வைக் கருதினவராய்ப் பிரசங்கித்தார்.

கோவிலினின்று வெளியேறின ஜனங்கள் பிரசங்கத்தைக்குறித்துச் சாதுரியமானது என்றும், மிக்க நேர்த்தியாயிருந்தது என்றும் பலவாறாய்ப் பேசிக்கொண்டார்கள். அப்போ வேதாபிமானி அவர்களைப் பார்த்து 'ஆடுமாடுகள் ஆகாரத்தை மேய்ந்து தின்றாலும் அசைபோடாவிடில் சுகமிராததுபோல, நாமும் பிரசங்கங்களைக் கேட்டாலும் அதை மனக்கருத்தில்கொண்டு தியானித்து, அதின்படி செய்யாவிடில் பிரயோஜனப்படாது' என்றார்.

இப்படியாக அந்த ஓய்வுநாள் முழுதும் பிள்ளைகளுக்கு என்றும், வாசிப்புத் தெரிந்த பெரிய ஆண்களுக்கும் பெண்களுக்கும், வாசிப்புத் தெரியாதவர்களுக்குமாக வெவ்வேறான கூட்டங்களும் நடத்தப்பட்டன. இரவில் ஜெபக் கூட்டங்கள் வீடுகள்தோறும் கிரமமாக நடத்



தப்பட்டன. தம்தம் வீட்டிலே சிறு பிள்ளைகள் வேதவாக்கியங்கள், ஞானப்பாட்டுகள் படிப்பதிலும் உற்சாகமாயிருந்தார்கள். இரவு சாப்பிட்டபின் அந்த ஐயாவர்கள் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வேத விடுகதைகள் போட்டு வினவிக்கொண்டார்கள். அவையாவன: (1) கேயாசி கெட்டதும் யூதாஸ் பட்டதும் எதினாலே என்றும்,

(2) வித்திலெல்லாம்முத்து வானத்துவித்து
பத்திரமாய்விதைத்து காத்திருந்தமூன்றில்
சித்திரமாய்த்தான்முளைத்து ஜெயலோகம்சென்றதுவே.

என்றும் விடுகதைபோட்டு, அதற்கு முந்தினதைப் பொருளாசை என்றும், இரண்டாவதுக்கு இயேசு சுவாமி என்றும் விடுவித்து விஸ்தரித்துப் பேசிக்கொண்டேயிருந்து அவரவர் நித்திரைக்குப் போயினர்.

Esther Manonmani Devadas.

(இன்னும் வரும்.)

## LYRIC. CHRIST'S BIRTH

## கிறிஸ்து இரட்சகரின் பிறப்பு

Tune 'மேசியா கிறிஸ்தேன் நேசருதித்தாரே'

பல்லவி

ஏசையா கிறிஸ்தென் நேச ருதித்தாரே
ஏத மென்னு பாவபந்த மறுத்தாரே.
நீசபாவி கட்காய் மோட்ச மறந்தாரே
நீடுவான லோக வாசல் திறந்தாரே
நேச குருவை ராஜா துரையை
நித்தம், நித்தம், பாடும் துத்தியம்
மாசுறு குருவை நேச பரனை
மண்டலம் மீண்டிட விண்டலம் விண்டல்.— ஏசை.

சரணங்கள்

1. பாடினார்கள் மகிழ்ந்து தூதர்க ளொன்றாக
கூடினார்கள் திரள் கூட்ட சனமாக
தேடினார்கள் சாஸ்திரி மார்கள் திறமாகத்
தேவ தாரகை வழி காட்டியதேயாக

தீன தயாள மான மனுவேல்
தேவன் தாமே பாவம் போக்கும்
பான பலியாய் ஆன மனுவேல்
பட்டெப்பா டெம் மிட்டம் நாட்ட.— ஏசை.

2. பாவியின் பவங்கள் தானு மறந்திடவே
பாரில் நீசதுரோகி தானு மகிழ்ந்திடவே
தேவ நாயகனுர் சுமைதாங்கி யாகிடவே
தீய பாவிகட் கருளோங்கி நிறைந்திடவே
தேடிடு பாவி நாடிடு தாவி
தேவ ஆவி ஜீவ மீட்பு
ஓடிடு கிருபை நோக்கிடு குருசில்
உன்னை என்னை மீட்க வல்லார்.— ஏசை.

3. தேவ சுந்தரத்தயை பொங்கி நிறைந்திடவே
தேடு பாவிகள் கண்கண்டு மகிழ்ந்திடவே
பாவ மென்னும் கறைநீங்கி யொழிந்திடவே
பாரி லுள்ளவர்கள் மீட்பை யடைந்திடவே
பாருல கெய்தினர் சீர்குல வாதிபர்
பத்தர் நித்தியம் துத்தியம் சொல்லத்
தாரணி வாழ்பவர் மாமகிழ் உற்றிடத்
தற்பரர் நித்தியர் சற்குரு வந்தனர்.— ஏசை.

J. T. Christmas Pillai, Tiruvannamalai.

## HOW CAN WE HELP OTHERS AT XMAS TIME?

## கிறிஸ்மஸ் காலத்தில் நாம் செய்யக்கூடிய ஒரு கிரியை

என் அருமையான சிநேகிதர்களே,

கிறிஸ்மஸ் காலம் நமக்குச் சமீபித்து வருகிறது. அதற்காக நாம் இப்பவே நம் குடும்பங்களிலுள்ளவர்களுக்கு வேண்டிய வஸ்திரங்களைப்பற்றியும், செலவுகளைப்பற்றியும், தர்ம காரியங்களைப்பற்றியும் சிந்தனைசெய்து பணம் தயார் செய்துகொள்வது வழக்கம். இக்கவலை தாய்மாராகிய நமக்கே அதிகமாயுரியது. பின்னும் தன் குடும்பத்தைப் பற்றிய கவலையுள்ள ஸ்திரீயே இவைகளைப்பற்றி யோசனைசெய்வாள். ஏனென்றால், அச்சமயம் நிகழும் காரியங்கள் யாவும் நமது கண்முன் பிரத்தியட்சமாய் நிற்கும் படம்போலிருக்கிறது. எவையென்றால் சில ஏழைக் கிறிஸ்தவப் பிள்ளைகள் அத்தினத்தில் கோவிலுக்கு நல் உடுப்புடன் போக ஆசைப்பட்டும், அவை கிடையாதபடியால் பழைய வஸ்திரமணிந்து, சிறிது மனக்கிலேசத்தோடு தன் வயதொத்த சிறுவர் அணிந்திருக்கும் உடுப்புகளைத் தொட்டுத் தொட்டுப் பார்ப்பதையும், தன் உத்தம சிநேகிதியின் உடுப்பானல் கொஞ்சம் தன் மேலே அணிந்து அழகு பார்ப்பதையும் நாம் அறிவோம். இவைகளை நாம் கண்ணோக்குகையில் தேவன் நமக்களித்திருக்கும் சகலவித நன்மைகளையும் நினைத்து தேவனை ஸ்தோத்திரித்து வருகிறோம் என்பதும் நிச்சயம். கூடுமானல் என் அருமை சிநேகிதரே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் நிலைமைக்குத் தக்கதாக விசேஷமாய்ப் பக்தியுள்ள ஏழைக் குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் உதவிசெய்ய நம் மனதில் தீர்மானிப்போமாக.

ஆனல் சிலர் ‘ஓ! நாம் அந்த நாளில் இப்படிச் செய்தால்தானு கிறிஸ்தவர்கள், அல்லாவிட்டால் இல்லையா?’ என்கிறார்கள். நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; தயவுசெய்து பதில் உரையுங்கள். நமக்காக, நம்மை ரட்சிக்க, இப்பாவப்பாரத்தினின்று நம்மை விடுதலையாக்க, தமது சிங்காசனத்தையும், பரமபிதாவின் மடியையும் விட்டு நம்மை நேசித்து, இப்பூமண்டலம் வந்திறங்கின ராஜாதிராஜனின் பிறந்த நாள் உற்சவத்தை நினைவுகூரும் நாம், பலவித சந்தோஷங்களாலும் அவரை நினைக்கவேண்டியது நியாயமோ இல்லையோ? நாம் சந்தோஷிப்பது எப்படி? இருவகையாய்ச் சந்தோஷிக்கவேண்டும் என்பது நமது கருத்து. ஒன்று நமது ஆத்தும வளர்ச்சியின்பொருட்டு அநேக கூட்டங்களுக்குச் சென்று அங்கு சொல்லப்படும் அமிர்தம்போன்ற வசனத்தைக் கேட்டு ஆனந்திப்பது. மற்றென்று சரீர விஷயமான சந்தோஷம். அது மட்டுக்கு மிஞ்சியல்ல, லாகிரி வஸ்துவோடு அல்ல, கடன்கொண்டு கொள்வதுமல்ல, தகுதியானபடி அனுபவிப்பதேயாம். இவ்விதம் மகிழும் கொண்டாடும் நமது பிள்ளைகளைப் பார்த்து நமதருமை ரட்சகர் தாம் முடித்த ரட்சிப்பின் கிரியையைச் செய்யத் தொடங்கின முதல் நாளை நினைவுகூர்ந்து நம்மோடு மனமகிழ்கிறார். அவர் இப்பூமண்டலத்திற்கு வராவிட்டால் அவர் மாணமடைந்திருக்கமாட்டாரே. ஆகையால் வந்த நாளே விசேஷம், மரித்த நாளே விசேஷம், உயிர்த்த நாளே ஜெயகெம்பீரம். ஆகையால் நாம் இந்நாட்களை விசேஷித்துக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம். கிறிஸ்மஸ் தினம் வருஷத்தின் கடைசி வாரங்களில் வரு

வதால் நம் ஆத்தும வளர்ச்சியின் அளவையும் நாம் ஆராயும் சமயமா யிருக்கிறது. ஒவ்வொருவருடைய மனச்சாட்சியும், பரிசுத்த ஆவியும் நம்மைக் குற்றமற்றதாய்த் தீர்க்க தேவன் கிருபைபுரிவாராக.

உங்கள் வாழ்வை விரும்பும் சிநேகிதி,

M. Devathunai Ammal, Salem.

## SCRIPTURE PUZZLES

## வேத விடுகதை

பாலைக் குடித்ததார்?
பானை உடைத்துப் பட்டணத்தைப் பிடித்ததார்?
எலும்பால் உருவானதார்?
எலும்பைச் சுமந்ததார்?
எலும்பால் கொன்றதார்?
மரத்தில் ஏறினதார்?
மரத்தில் பாடுபட்டதார்?

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1913 ஆம் டிசெம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | லூக். | 20. 1—18 | 11 | வி. | லூக். | 23. 8—26 | 23 | செ. | ஆகா. | 2. 6, 7; |
| 2 | செ. | „ | 20. 19—38 | 12 | வெ. | „ | 23. 27—43 | | | மல்கி. | 3. 1—3 |
| 3 | பு. | „ | 20. 39-47; | 13 | ச. | „ | 23. 44—56 | 24 | பு. | ஏசா. | 7. 14; |
| | | | 21. 1—4 | 14 | ஞா. | „ | 24. 1—12 | | | | 9. 2—7 |
| 4 | வி. | „ | 21. 5—24 | 15 | தி. | „ | 24. 13—35 | 25 | வி. | மத். | 1. 18-25; |
| 5 | வெ. | „ | 21. 25—38 | 16 | செ. | „ | 24. 36—53 | | | லூக். | 2. 8—19 |
| 6 | ச. | „ | 22. 1—13 | 17 | பு. | ஆதி. | 3. 1—13 | 26 | வெ. | மத். | 2. 1—10 |
| 7 | ஞா. | „ | 22. 14—30 | 18 | வி. | „ | 3. 14—24 | 27 | ச. | „ | 2. 11—23 |
| 8 | தி. | „ | 22. 31—46 | 19 | வெ. | ஏசா. | 42. 1—12 | 28 | ஞா. | சங். | 45. |
| 9 | செ. | „ | 22. 47—62 | 20 | ச. | . | 41. 1—10 | 29 | தி. | „ | 8. |
| 10 | பு. | „ | 22. 63-71; | 21 | ஞா. | „ | 40. 1—11 | 30 | செ. | „ | 90. |
| | | | 23. 1—7 | 22 | தி. | „ | 35. | 31 | பு. | „ | 103. |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

OFFICE OF THE REGISTRAR
15 JAN 1914
MADRAS

# மாதர் ... தினி

No. 193 ஜனவரி 1914 No. 1

## PRAYER FOR NEW YEAR

## புது வருஷ ஜெபம்

'சர்வ வல்லமையுள்ள தேவனே! நாங்கள் இன்னொரு புது வருஷத்தின் துவக்கத்திலிருக்கிறோம். இப்பொழுது தொடங்கி யிருக்கிற இந்த வருஷத்தை முடிப்போமா என்கிற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. எங்கள் வாழ்நாளாகிய சூரியன் நடுப்பகலில் ஒரு வேளை அஸ்தமித்துப்போகும். நாங்கள் சொல்ல முடியாது; எங்க ளுக்கு அதைக்குறித்துத் தெரியாது. எங்களுடைய காலங்கள் உம்முடைய கரத்திலிருக்கின்றன. தேவனுடைய மகிமையுள்ள குமாரனே வாரும்; உமக்குச் சித்தமான காலத்திலே வந்து எங்களை ஆயத்தமுள்ளவர்களாய்க் கண்டுகொள்ளும். நாங்கள் உமது திருவிருந் திற்குப் பிந்திப்போகாதிருப்போமாக.

ஆண்டவரே! இந்தப் புது வருஷத்தில் எங்களைக் கிருபையிலே வளரச்செய்யும். பாவத்தினின்று எங்களைக் காப்பாற்றும். நாங்கள் ஒருவரையொருவர் நேசித்து நடக்கக் கிருபைசெய்யும். எந்தத் தீங் காவது கிறிஸ்துவின் அன்பைவிட்டு எங்களைப் பிரிக்காதபடி காத் துக்கொள்ளும். இரக்கமாய், எங்கள் ஏழை மன்றாட்டை ஏற்றுக் கொண்டு உம்முடைய ஆவியின் வரப்பிரசாதத்தை எங்கள்மேல் தெளி யும். அப்போது நாங்கள் வருகிற வருஷத்தைப் புதுப் பலனோடும் பரிசுத்தத்தோடும் கழிக்க ஏதுவுள்ளவர்களாயிருப்போம். ஆமென்.'



## NEW YEAR'S DAY RESOLUTIONS

## புது வருஷத் தீர்மானங்கள்

நாம் தேவனுடைய பெரிதான கிருபையினால் இன்னொரு புது வருஷத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம்.

வழக்கப்பிரகாரமாகவே வருஷத் துவக்கத்திலே, நாம் கடந்த காலத்தை என்னவிதமாய்க் கழித்தோம் என்றும், இனிமேல் வரப்போகிற காலத்தை என்னவிதமாய்ச் செலவழிக்கப் போகிறோம் என்றும் யோசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வாராது' என்ற முதுமொழிப்படி முந்தின காலம் போய்விட்டது. இனிமேல் அது நமக்குக் கிடையாது. அதுபோலவே, நம்முடைய கடந்த ஜீவியமும், அதில் காணப்பட்ட குற்றங்கள், குறைகள், தப்பிதங்கள் நடந்துவிட்டன. இனிமேல் அவைகளை மாற்ற முடியாது. ஆனால் நம்முடைய பழைய அநுபவத்தில் என்னென்ன காரியங்களில் நாம் தவறியிருக்கிறோம் என்றும், என்னென்ன காரியங்களில் நாம் தேறியிருக்கிறோம் என்றும், நம்மை நாமே பரிசோதித்து இனிமேல் நடக்க வேண்டிய பிரகாரத்திற்கேற்ற நல்ல தீர்மானங்களைச் செய்வதினால் நாம் ஒருவாறு கடந்த காலத்தை மீட்டுக்கொள்ளலாம்.

நம்மில் அநேகருக்குச் சில தப்பிதங்கள் நம்முடைய காலைச் சுற்றின பாம்பைப்போல், நம்மை விடாமல் பற்றிக்கொண்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் நாம் அவற்றை எப்படி விடுவது, அது முடியாத காரியமே, என்று திகைத்துக் கலங்குகிறோம். ஆனால் தேவ கிருபையோடு நாம் தைரியமாய் முன்னே



றிச்செல்வோமானால் நாம் சந்தேகமின்றி ஜயம் பெறுவோம். தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை.

பாருங்கள்! ஒவ்வொரு புது வருஷத் தினமும் நமக்கு இரக்கத்தின் நாளாக அளிக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் இருந்தவர்கள் எத்தனையோ பேர் இந்த நாளைக் காணுமுன் மறுமைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் நமக்குச் சொந்தமானவர்களாயிருக்கலாம்; அல்லது, நம்முடைய சிநேகிதர்களாயிருக்கலாம். ஆனால் அன்பு நிறைந்த ஆண்டவர் நம்மைத் தற்காத்து நம்மை இன்னொரு தவணையின் நாளைக் காணச்செய்தது அவரது சுத்தக் கிருபையே. நாம் நன்றியறிந்த மனதோடு அந்த நாளை எவ்வளவோ பக்திவிநயமாய்க் கழிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

புது வருஷத் தினத்தை எப்படிச் செலவிடவேண்டுமென்றும், அதினால் நமக்குண்டாகும் பிரயோஜனங்கள் எவையென்றும், கொஞ்சம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அந்தத் தினம் நம்மில் அநேகருக்கும், முக்கியமாய்ச் சிறுவர்களுக்கும், அதிக சந்தோஷமான நாள். அந்த நாளுக்காக நாம் எவ்வளவோ ஆயத்தம் செய்கிறோம். வீடுகளை வெள்ளையடிப்பதிலும், புது உடுப்புகளை வாங்குவதிலும், இனம் ஜனத்தார்களுக்கு விருந்திடுவதிலும் இஷ்டர் மித்திரர்களைப் போய்ச் சந்திப்பதிலும், கோவிலுக்குப் போவதிலும் செலவிடுகிறோம். இவைகளெல்லாம் தப்பான காரியங்களல்ல. இரக்கம் நிறைந்த ஆண்டவர் இன்னொரு புது வருஷத்தில் பிரவேசிக்கச் செய்ததினால் நாம் சந்தோஷம் கொண்டாட வேண்டியதுதான். ஆனால் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை கிடைக்கும்படி, நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய வேறே காரியங்கள் அநேகம் இருக்கின்றன.

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு மைல் கல்போலிருக்கிறது. கால்நடையாய் நெடும்பிரயாணம் செய்கிற ஒரு மனுஷன் ஒவ்வொரு மைல் கல்லண்டையும் நின்று, அதை உற்றுப் பார்த்து, 'நாம் எத்தனை மைல் வந்திருக்கிறோம்? புறப்பட்டு எவ்வளவு காலம் ஆயிற்று? நாம் இன்னும் போகவேண்டிய தூரம் எவ்வளவு இருக்கிறது?' என்று கணக்கிட்டுக்கொள்வதுபோல, நாமும் ஒவ்வொரு புது வருஷத் தினத்திலும் நம்முடைய ஜீவியத்தைக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

புது வருஷத் தினத்தில் இரண்டொரு மணிநேரமாவது நாம் தனிமையாய் உட்கார்ந்து, கடந்த வருஷத்திலே நடந்த சங்கதிகள், முக்கியமாய் நம்முடைய சொந்த அனுபவத்திலே காணப்பட்ட காரியங்களைப்பற்றி யோசித்து, நம்மை நாமே சோதித்து, பக்திவிநயத்தோடு

தெய்வ கிருபையை முன்னிட்டுப் புதுத் தீர்மானங்களைச் செய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

தற்சோதனைக்குரிய சில கேள்விகள் :—

1. கடந்த வருஷத்திலே முக்கியமாய் என்னிடத்தில் காணப்பட்ட குணமென்ன? பெருமையா, கோபமா, சிற்றின்பமா, வீண் பேச்சா, சோம்பலா, அல்லது எல்லாவற்றிற்கும் காரணமான தன்னயமா? அப்படியானால் அவைகளை விட்டுவிடும்படிக்கு உண்மையாய்ப் பிரயாசப்பட்டுக் கடவுளை நோக்கிப் பிரார்த்திக்கிறேனா?

2. நான் கடந்த வருஷத்திலே கோவிலுக்கு ஒழுங்காய்ப் போய், கோவிலிலும், மற்ற இடங்களிலும், தேவனுடைய கண் என்மேல் நோக்கமாயிருந்ததென்பதை உணர்ந்து நடந்தேனா?

3. காலை மாலைகளில் ஒழுங்காய் வேதம் வாசித்து, முழங்கால் ஊன்றி, தேவனை நோக்கி ஜெபித்து வந்ததுண்டா?

4. என்னுடைய நேரத்தை வீணாய்க் கழித்து, மற்றவர்களுடைய குற்றங்குறைகளைத் தூற்றிக்கொண்டு திரிந்திருக்கிறேனா?

5. என்னுடைய வார்த்தையிலும், நடக்கையிலும், எண்ணத்திலும் யோக்கியமாய் நடந்திருக்கிறேனா?

6. என்னுடையதல்லாததை வைத்திருக்கிறேனா? யாரோடாவது சண்டைபோட்டுப் பேசாமலிருக்கிறேனா?

7. கடவுள் எனக்கு அனுதினமும் செய்துவருகிற நன்மைகளை நினைத்து, நன்றியறிந்த மனதோடு, அவருக்குக் காணிக்கை கொடுத்து வருகிறேனா?

8. நான் கற்றவைகளையும், கேட்டவைகளையும், அறிந்தவைகளையும் மனப்பாடமாக மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறேனா, அல்லது என்னுடைய நாடோடிய ஜீவியத்தில் அவைகளின்படி நடக்கப் பிரயாசப்படுகிறேனா? (Practical Christianity.)

9. பிறனை என்னைப்போல் நேசிக்கிறேனா?

10. கடைசியாக, நம்மைப் படைத்துக் காத்து நமக்கு இரட்சிப்பை உண்டாக்கின தெய்வத்திற்கு உகந்த பிள்ளையாய் நடக்கிறேனா?

புது வருஷத் தினத்தில் செய்யவேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் நமக்கேற்ற ஒரு (Motto text) சிறு சொந்த வாக்கியம் வைத்துக்கொண்டு, அதின்படி ஒவ்வொரு நாளும் நடக்கப் பிரயாசப்படவேண்டும். 'விழித்துக்கொண்டிரு,' 'கிருபையிலே வளர்,' 'கொஞ்சம் பேசு,' 'உண்மை பேசு,' 'பிறனை நேசி,' 'இரட்சகர் என்ன செய்வார்?' (What would Jesus do?) இவை



போல்வனவற்றுள் தனக்கேற்றவைகளைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். மேலும், நாம் எப்படி வருஷமுழுவதும் இதைக் கைக்கொள்ள முடியும் என்ற சந்தேகம் நமக்குண்டாகும். அதற்கு நாம் தேவகிருபையை முன்னிட்டு 'இன்று மாத்திரம்,' 'இன்று மாத்திரம்' (Just for to-day). நான் என்னுடைய வாக்கியத்தைக் கைக்கொள்வேன் என்று கவனமாய் ஜீவித்தால், நமக்கு இம்மையிலும் மறுமையிலும் மேலான பாக்கியம் கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை.

பிரிய சகோதரிகளே! உங்களெல்லாரையும் இன்னொரு சந்தோஷமான வருஷத்தைக் கண்டு களிக்கச்செய்வாராக.

## NEW YEAR'S SONG

## சத்த நவ வருடப்பா

இராகம் 'முத்திநெறி அறியாத'

1. மன்னுருடன் மாதவரும் மாதிரத்தில் கண்டடையா
நன்னர்திரள் யாமுறவே ஞாலமருள் செய்அகண்ட
பொன்னுலகத் தும்பர்சூழாம் போற்றிப்பணி புங்கவனே,
நன்னாளிதைக் காணச்செய்த நல்லாயனே! வந்தனமே.

2. நானாறிலே வானுலகம் நன்றாய்வார்த்தை யாலமைத்து
எழினிலே வோய்ந்திருந்து எக்களித்தோய், இம்முதனாள்
ஏழைகள்நாங் கள்கண்டு இன்பங்கொளக் கிர்பைதந்த
மாழைமிகு மெங்கோமானே மன்னர்கோவே, வந்தனமே.

3. முந்துபெத்லேம் ஊரினிலே மூவரசர் முக்காணிக்கை
தந்துதொழ வேமகிழ்ந்த தற்பரா! அவ் வாறுபோல
இந்தவுற்ச வத்தோதினம் எல்லாருங்கண் டானந்தித்து
சந்தோஷத்தோ டேபாபாட தந்ததேவே! வந்தனமே.

4. வேண்டாருக்காய் முன் கல்வாரி—வெற்பினிலே வெள்ளியன்று
மாண்டெழுந்தோய்! என்றுநாளில் வல்லபிதா வின்சுதனே
ஆண்டிதையே எம்முடைய ஆயுளோடு கூட்டினவா!
நீண்டவாயு சுள்வானே! நிர்மலனே! வந்தனமே.

5. போனசனம் யாதாமொரு பொல்லாங்கின்றி பூதலத்தில்
ஞானொமைக் கர்த்தகங்கள் எல்லாம்சமித் துவ்வாயென
ஆனியத்தைப் பார்த்தேமிக அக்களித்து நல்லகவக்
கானம்பாடித் துள்ளச்செய்த கர்த்தாகனே! வந்தனமே.

6. சங்கடங்கள் பீடைகண்ணீர் சாதுயா மேதுமின்றி
கங்குபகல் உந்தனிரு கண்யுணிபோல் காத்தடியர்
எங்களுக்கு ஆன்மநேதக இன்பசுகங் கள்நல்கின
துங்கம்நிறை எம்பானே! தூதர்கோவே! வந்தனமே.

7. வையகத்தெம் பெற்றோரையும் மாவருமை யானோரையும்
தெய்வதினம் கண்டசனம் செய்துண்டுநின் கோவிற்புக்கி
தொய்யலுடன் வீணைமூட்டித் தோத்ரபதங் கள்படிக்க
செய்யந்தாதி யோர்புதல்வ! ஜேஸையனே! வந்தனமே.

S. Rathinammal, Tuticorin.

## STORY OF GUNAMANI (*Cont.*)

## குணமணி கதை (தொடர்ச்சி.)

மறுநாள் வேதாபிமானியும் கீதமணியும் பிரயாணப்பட உன்னி 'மருந்தும் விருந்தும் மூன்றுநாள்' நாம் வந்தும் ஒருவாரமாகிறது. அதிக நாளிருப்பின் அன்பு குறையும். அதற்கு இடமின்றி வந்த கருமம் முடிந்ததால் குருவானவரிடம் செலவுபெற்றுப்போக உத்தேசித்து, குருவானவருக்கும் அவர் மனைவிக்கும் நன்றியறிதல் சொல்லி ஆசிபெற்று வழிநடந்தனர். அங்கிருந்து மூன்று மைல் தூரத்துக்கப்பாலிருக்கும் ரெயில்வே ஸ்டேஷனில் வந்து தங்கள் சொந்த ஊராகிய திருப்பாந்த ஊருக்குப் போகும்படி வெல்லூருக்குச் சீட்டுவாங்கி ரெயிலேறினார்கள்.

ரெயில்வண்டியும் ஓடத் தொடங்கினது. உடனே இவர்கள் சந்தோஷத்தால் சில பாடல்கள் பாடி, அந்த வண்டியில் இருந்தவர்களுடைய மனதைக் கவரப்பண்ணினார்கள். அப்போது வேதாபிமானி ஐயரவர்களிடம் வாங்கி வந்திருந்த சில ஒற்றைத்தாள் பிரதிகளை (Handbills) எடுத்து அங்குள்ளவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அங்கே வயோதிகனான ஒரு பெரியவரும் இருந்தார். அவர் கிறிஸ்தவராகத் தோன்றினதுபற்றி, அவரிடம் வேதாபிமானி 'உங்கள் ஊர் எது, எங்கே போகிறீர்கள்?' என வினவ, அவர் 'நான் கன்னியாகுமரிக்குப் பக்கத்திலுள்ள ஒரு குக்கிராமத்தில் உபதேசியார் வேலைபார்த்து இப்போ உபகாரச்சம்பளம் பெற்று வருகிறேன். என் மகன் திருச்சினாப்பள்ளியிலே B. A. பரீட்சைக்குப் படிக்கிறான். அவனுக்கு என் தங்கை மகளை மணமுடிக்கப் பேசி ஒழுங்குபண்ணி மகனுக்குக் கடிதம் எழுதியும் பதிலைக் காணோம். அவனுக்கு அந்த



ஊரிலுள்ள உத்தியோகஸ்தர் மகளை முடிக்க நோக்கம் இருப்பதாய் வதந்தி. இக்காரியங்களைப் பார்த்து, மகனுடைய தீர்மானத்தையறிந்துவரும்படி போய்விட்டு வரலாம் என்று புறப்பட்டேன் ஐயா,'



என்றார். அதற்கு வேதாபிமானி 'உமக்கு இனத்தின்மேல் பிரியம். அவருக்கு அந்தஸ்தின்மேல் மனதுபோகிறது.' முன்னாள் முதுமொழிப்படி 'தனக்கு எளியது தாரம்' என்பார்கள். அப்படியே

வயதிலும் நிலைமையிலும் பார்த்துக்கொள்வார்கள். அந்தப் பெண்கள் அடிபணிந்து அடுப்பங்கரைப் பூனைபோல் சமுசாரத் தொழிலுக்கு வேண்டியபடி பணிசெய்துகொள்வார்கள். ஆனால் இக்காலத்திலோ 'பெண்கள் படித்து உத்தியோகம் பார்க்கும் திறமையும், அந்தஸ்தையும் வகித்திருக்கிறார்கள். உமது மகன் B. A. பரீட்சைக்குப் படிக்கிறவர், அதற்கேற்ற பெண்ணைத்தானே நாடுவார்' என்று சம்பாஷித்துக்கொண்டு, மற்றும் மிஷன் சம்பந்தமான சில காரியங்களையும் பேசிக்கொண்டு வருகையில், திருச்சினாப்பள்ளி ஸ்டேஷன் வரவே அவருடைய மகன் தந்தை வரவு நோக்கி முந்தியே வந்து காத்திருந்தமையால் உடனே தகப்பனை வண்டிவிட்டு இறக்கினார். அவர் மகனைப் பார்த்து 'என் அப்பா? கண்ணாடி போட்டிருக்கிறாய், கண் வெள்ளெழுத்து வந்துவிட்டதோ, காலெல்லாம் துணி சுற்றினதுபோலிருக்கிறதே. எதுவும் புண் இருக்கிறதோ?' என்று கவலையுடன் கேட்டார். அவரோ சிரித்துக்கொண்டு (Uniform dress) 'இந்தமாதிரிதான் ஐயா எங்கள் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்கள் உடுத்திக்கொள்ளுகிறது' என்றார்.

'வேதாபிமானி அதுகேட்டு "காலத்துக்குத் தக்க கோலம்" என்றபடி எல்லா வாலிபரும் இப்படிப் புது மாதிரியாக உடுத்துவதை வாஞ்சிக்கிறார்கள். ஆனால் அந்த உடை ஐரோப்பியருக்குத்தான் ஏற்றது. ஏனெனில் அவர்கள் தேசம் மிகுந்த குளிர்ச்சியாயிருப்பதுபற்றிக் காலையும் கையையும் நன்றாய் மூடி, வீட்டில் தரை ஈரமாயிருப்பதினால் பாயடித்து அனல் உண்டாகும்படி செய்துகொள்வார்கள். நமது தேசம் அதிக உஷ்ணமாயிருப்பதினாலே மெல்லிய துணிகளை இடுப்பில் சோமன்கட்டி, மரியாதையான சட்டைகளையும், தலைப்பாகைகளையும் அணிந்துகொள்வார்கள். இப்படியே தேசங்களின் சீதோஷ்ணஸ்திதிக்கு ஏற்றவிதமாக உடுப்புகளும் அமைந்திருக்கக் காணலாம். ஆனால் இக்காலத்திலோ நம்முடைய தேசத்தார் ஐரோப்பியருடைய உடை நடை பாவனைகளை அதிகமாய்ப் பின்பற்றிக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஐரோப்பியரோ நம்முடைய தேசம் எவ்வளவு உஷ்ணமாயிருந்தபோதிலும் தங்கள் தேசத்துக்குரிய உடையைக் கிஞ்சித்தும் மாற்றமாட்டார்கள் என்பதும் விசேஷமே' என்றார்.

அதற்குள்ளாக ரெயில் புறப்பட்டு இவர்கள் போகவேண்டிய வெல்லூருக்கு வந்து சேர்ந்து, வேதாபிமானியும் கீதமணியும் கீழே இறங்கிச் சீட்டுக்கொடுக்கும் இடத்தில் போய் நின்றார்கள். அங்கே சீட்டுவாங்குகிறவர் நாலு வயதுள்ள பிள்ளையொன்றுக்குச் சீட்டுப் [illegible] வராததினால் விடமாட்டேன். இரட்டிப்பான பணம் தர





வேண்டும் என்று கேட்க, பெற்றோர் 'இந்தப் பிள்ளை சிறு பிள்ளைதானே; இனிமேல் சீட்டு வாங்கிவருவோம்' என்றாலும் அவர் விடவில்லை. பிறகு இரட்டிப்பான பணம் கொடுத்துவிட்டுத் தான் வெளியே ஏகினதைக் கண்டு, இவர்களும் சீட்டைக் கொடுத்து வெளியே வந்து, தங்கள் சொந்தத் தேசமாகிய திருப்பாந்த ஊருக்கு வழி நடந்தார்கள்.

அப்படிப் போகும்போது, கீதமணி வேதாபிமானியைப் பார்த்து 'ஐயா! அந்தச் சீட்டு வாங்குகிறவர் எள்ளளவும் இரக்கமில்லாதவர்போலிருக்கிறதே. அந்தச் சிறு பிள்ளையை விடமாட்டேனென்று வெகு வாய்ப் பேசினாரே' என்றான்.

அதற்கு வேதாபிமானி 'ஆம், சிறு பிள்ளைதானே என்றும், சின்னப்பாவந்தானே என்றும், நாம் லேசாய் நினைக்கிறது இயல்பாயிருக்கிறது. ஆனால் கட்டளையைக் கவனித்தால் சட்டப்படி குற்றவாளிகளாவார்கள். "சின்னப் பாம்பென்றாலும் பெரிய தடிகொண்டு தானே அடிக்கவேணும்." அந்தச் சிறு பிள்ளைக்கு அபராதம் பெற்றோர் ஏன் கொடுக்க நேரிட்டது? சரியான்படி பெற்றோர்

முந்தியே சீட்டு வாங்காததினால்தான். அதுபோல பிள்ளைகளைச் சிறு வயதிலே சரியானபடி கண்டித்துச் சிறு சிறு பாவங்கள் தலை காட்டும்போதே, சின்னப்பிள்ளை சின்னப்பிள்ளை யென்று சொல்லாமல் அவைகளைக் கவனித்து அவைகளுக்கு விலகி நடக்க எவி வளர்க்காவிடில், பெற்றோர் பிற்காலம் துன்பத்தையடைய நேரிடும். தாங்களும் சிறு சிறு பாவங்களென்று பொய் முதலியவைகளைச் சொன்னாலும் பிற்காலம் சிறிய தீ பெரிய காட்டைக் கொளுத்துவது போலாகும்' என்றார்.

இப்படிப் பேசிக்கொண்டே வழிநடந்து திருப்பாந்த ஊர் வந்து சேர்ந்தார்கள். உடனே அவர்கள் சுற்றத்தாரும், உற்றார் உறவினரும், அயலகத்தார் பந்துக்களுங்கூடிச் சந்தோஷித்து வெகுநாளாய்த் தங்களைவிட்டுத் தூரதேசம்போய்ச் சுகமாய்த் திரும்பி வரச்செய்த கருணாகரனை நோக்கி ஜெபித்து தோத்திரித்தார்கள் வேதாபிமானிக்கும் கீதமணிக்கும் தங்கள் சொந்த ஊர் வந்து சேர்ந்ததும், இனஜனங்களைக் கண்டதும், மெத்த சந்தோஷமாக இருந்ததினால் அது அவர்களுக்கு ஒரு சந்தோஷ தினமாகவே இருந்தது என்னலாம். கீதமணியும், மற்றவர்களுடைய பார்வைக்கு முன்னிருந்ததைவிடப் புத்தியும் தெளிவுமுள்ளவனாகக் காணப்பட்டான். அகத்தின் அழகு முகத்தில் அமைந்ததுபோல, மிகுந்த புத்திகூர்மையும் குணசாலியுமாய்க் காணப்பட்டதை அங்குள்ளவர்கள் கண்டு வியந்து பேசிக்கொண்டார்கள். இதுவுமன்றி அவ்வூரார் இவர்கள் தேசாந்தர விசேஷ நடபடிக்கைகளையும் காட்சிகளையும் குறித்துக் கேட்க மிகுதியும் ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். அதுகண்டு வேதாபிமானி ஒருநாளிரவில் அதற்கென்று ஒரு கூட்டம் வைத்து மிஷன் ஊழியர்களையும், இன்னும் ஆவலுள்ள சிலரையும் அழைத்து, தங்கள் தேசாந்தரப் பிரயாணத்தில், தேவன் தங்களுக்குப் பாராட்டிய கிருபையையும், அங்கு கண்ட சில கண்காட்சிகளையும், அதிலிருந்து தாங்கள் அறிந்துகொண்ட சத்தியங்களையும், அஞ்ஞானம் வரவர அகன்று மெஞ்ஞான ஒளி எங்கும் வியாபித்திருப்பதையும், பற்பல மிஷன்களின் ஒழுங்குகளையும், ஆங்காங்கு நடத்தப்பட்டுவரும் சுவிசேஷப் பிரபல்ய வேலைகளையும்பற்றிப் பொதுவாக ஒரு உபந்நியாசம் செய்தனர். அதிலும் கிறிஸ்தவர்களுக்கெல்லாம் சாதனமாகச் சில காரியங்களை வற்புறுத்திச் சொன்னார்.

(1) கர்த்தருடைய கட்டளைப்படி நாம் திருச்சபையில் சேர ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வது இரட்சிப்புக்கு எவ்வளவு அவசியமோ, அதுபோல நாம் எப்போதும் மெய்க்கிறிஸ்தவ ஜீவியம் செய்வதில் கவனமாயிருத்தலும் அவசியமே. வாக்குக்கொடுப்பதிலேயே நிறைவேற்றுவதுதான் கவனிக்கப்படவேண்டியது.



(2) ஒவ்வொரு கிறிஸ்தவனும் சுவிசேஷம் பிரபல்யமாகும்படி ஆவலோடே பிரயாசப்படவேண்டியது அவசியம். அப்படிச் செய்வதால் நமக்கும் நமது சபைக்கும் பெரிய ஆசீர்வாதமுண்டு. 'முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.'

(3) கர்த்தருடைய ஜெபத்தில் உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று நாம் ஜெபிப்பதுமாத்திரம் போதாது, பரமநாட்டுப் பழக்கங்களை நாம் கையாடிவரவேண்டியது. (1) சத்துருக்களை நேசிப்பது. (2) பொல்லாப்பை நன்மையினாலே வெல்லுவது. (3) பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாகப் பெருகுவதுபோல, நாம் பாவநாசகரான பாவியினேசனின் சட்டப்பிரமாண சாரமாகிய அன்பினால் ஏவப்பட்டு அநுதினமும் ஜீவித்துவருவோமானால் இச்சீவனுக்கும் வரும் ஜீவனுக்கும் பிரயோஜனமான மெய்த்தேவ பக்தியிலே வளர்ந்து கடைசியிலே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம் என்றார். அதற்கு வேண்டிய கிருபையைத் தேவன் நம்மெல்லாருக்கும் அருள் செய்வாராக என மொழிந்து ஆசீர்வாதம் கூறி முடித்தனர். அதற்குப் பின் அவரவர் தம் தம் இல்லம் ஏகினர்.

சிறிது நாட்களாக வேதாபிமானியோடுகூடவே கீதமணியும் தங்கியிருந்தான். கீதமணியினுடைய கீழ்ப்படிதலையும் புத்திகூர்மையையும், வேத அறிவையும், பக்தியையும், சுறுசுறுப்பையும் கவனித்த அந்த ஊர் ஐயரவர்கள் அவனுக்கு ஒரு உபதேசியார் வேலைகொடுத்து மாதம் 12 ரூ. சம்பளம் தருவதாகவும், இனிமேல் அவருடைய திறமைக்குத் தக்கபடி கூட்டித்தருவதாகவும் சொல்லி ஒரு கிராமத்துக்கு அனுப்பினார்கள். அப்படியே அவன் தனக்கு இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு தேவனுக்குப் பயந்து மனுஷருக்கு நல்வழிகாட்டியாய் நடந்துவந்தான்.

அப்போது வேதாபிமானி தன்னுடைய சிஷனுக்கு ஒரு ஏற்ற துணையைத் தேடி மணம் செய்விக்கக் கருதி, ஜெபத்தோடு ஐயரவர்களிடம் தெரிவிக்க அவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்தில் எல்லாராலும் நற்சாட்சிபெற்று பக்தியிலும், புத்தியிலும், அன்பிலும் சிறந்தவளாய், மன்னன் சொல்லுக்கு மறுசொல்லில்லை என மதித்து நடக்கக்கூடியவளான, சுகுணமுத்து என்ற பெண்ணைக் குறிப்பிட்டுச் சொல்ல, வேதாபிமானியும் கீதமணியும் சம்மதம் கொடுத்து, குறித்த நாளில் அப்பெண்ணை கீதமணிக்கு ஒழுங்குப்படி கர்த்தருடைய சன்னிதியில்

கைப்பிடித்துக் கொடுக்க திருமங்கிலியமும் தரிப்பித்து, விவாகச் சடங்கும் நிறைவேறியது. அன்று பள்ளிப் பிள்ளைகளுக்கும் விருந்து நடந்தது.

வேதாபிமானி பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தக்க புத்திமதிகள் சொல்லி, அவர்களுக்கு ஒரு வேதாகம புஸ்தகத்தை இனாம் கொடுத்து, 'இது பொக்கிஷங்களிலெல்லாம் மேலானது' என்றும், பசும்பொன்னிலும் அருமையானது. தெளிதேனிலும் மதுரமானது. இதிலே நமக்கு வேண்டிய வீட்டுச் சட்டங்களோ, நாட்டுச் சட்டங்களோ சகலமும் இதில் அடங்கியிருக்கின்றன. சமயத்துக்கு ஏற்ற நல்ல ஆலோசனையையும், ஆறுதலையும் தரக்கூடிய வசனங்கள் இதில் உண்டு. ஆகையால் இதை உன் பாதைக்கு வெளிச்சமும், வழிகாட்டியுமாக வைத்துக்கொள்ளவேணும் (சங். 119. 105). மேலும், இதை உனக்கு அணிகலமாக அதாவது, ஞானாபரணமாக இருதயத்திலே தரித்துக்கொள்ளவேணும். இது மாத்திரமல்ல; இது இருபுறமும் கருக்குள்ள பட்டயமாயிருக்கிறதால், பிசாசு, லோகம், மாம்சம் ஆகிய மூச்சத்துருக்களுடன் போர் நமக்குண்டாகும்போது எபே. 6. 17-ல் சொல்லியபடி தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அப்போது நமக்கு வெற்றி கிடைக்கும். போர்வீரர்கள் தங்களுடைய பட்டயத்தைத் தினந்தோறும் சுத்தி செய்து மினுக்காக வைத்துக்கொள்ளாவிடில் துருப்பிடித்துப்போகும் அல்லவா? அதுபோல நாம் தேவ வசனத்தைத் தினந்தோறும் வாசித்து அப்பியாசிக்காவிட்டால் அதனாலுண்டாகும் பிரயோஜனத்தை அடைவது எளிதல்ல. ஆகையால் இப்புஸ்தகத்தைச் சகல சாஸ்திரங்களிலும் மேலானதாக மதிப்பது மாத்திரமல்ல; நமது ஜீவியத்துக்கும் ரட்சிப்புக்கும் ஏற்ற ஆதாரமாகக் கையாடி வருவாயாகில், இந்த ஜீவனுக்கும் வரப்போகிற நித்திய ஜீவனுக்கும், ஏற்ற தெய்வபக்தியின் (1 தீமோ. 4. 8) 'அருளைப் பெற்றுக்கொள்வாய்' என மொழிந்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் வாழ்த்தி ஆசீர்வாதம் கூறினர்.

மறுநாள் சுகுணமுத்து அம்மாளும், கீதமணியும் எல்லாரோடும் வழியனுப்பிக்கொண்டு பெரியோர் ஆங்காங்கு தங்களுக்கு உரைத்த புத்திமதிகளை மனதில் வைத்தவர்களாய்த் தங்களுக்குக் குறிக்கப்பட்ட கிராமத்துக்குப் போய்த் தேவ ஊழியம் செய்துவருகிறார்கள். அவர்கள் வாக்கிலே உண்மையும், நடக்கையிலே அன்பும் விளங்குவதாய், அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்துக்களுக்கும் சீர்திருத்தமுண்டானதோடுகூட நல்லமாதிரியான ஜீவியத்தினாலே எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டு வருகிறார்கள். கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய ஊழியத்தையும் ஆசீர்வதித்து விர்த்தியாக்குவ



தோடு, அவர்கள் புத்திர சந்தானங்களையும் இச்சிறு நூலை வாசிப்பவர்களையும் தமது நாமமகிமைக்கென்று உபயோகித்து ஆசீர்வதித்தருள்வாராக.

பாவி!

இயேசுவை நேசி
வேதத்தை வாசி
ஜெபத்தை சுவாசி
பெறுவாய் ஆசி.

Esthĕr Manonmani Devadas,
முடிந்தது. Pannevelei.



## THE KING'S CUP BEARER *(Cont.)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

### I. அத்தியாயம்

### லீலியா நகரம். (தொடர்ச்சி)

இரண்டு சகோதரரும் ஒன்றாய் சூசான் பட்டணத்திற்குப் போகும்போது, எஸ்றாவின் வேலை சித்திபெற்றதா? ஜனங்களெல்லாரும் ஊக்கமாயிருக்கிறார்களா? உற்சாகமாய் வேலை செய்கிறார்களா? எருசலேம் பட்டணம் நல்ல நிலைமையிலிருக்கிறதா? என்று பலவிதமான கேள்விகளை எருசலேமைப்பற்றி மிகவும் ஆவலாய் ஆத்திரத்தோடே கேட்கிறார்.

ஆனாலோ, சஞ்சலமான செய்தியைப் பிரயாணிகள் சொல்லவேண்டியவர்களாயிருந்தார்கள். பரிசுத்த நகரம் மிகவும் கேவலமான ஸ்திதியில்தான் இருந்தது (நெகே. 1. 3). ‘அதற்கு அவர்கள், சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது’ என்றார்கள்.

வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னுள்ள பிரகாரமாகவே எல்லாச் சங்கதிகளுமிருந்தன. ஜனங்கள் தொல்லையுள்ளவர்களும், நிர்ப்பந்தரும், ஒடுக்கப்பட்டவர்களுமாயிருந்தார்கள். நகரம் தானும் தன்னிலேதானே பாழாய் நேபுகாத்நேச்சார் விட்டபடியே இருந்தது. தேவாலயம் மாத்திரம் கட்டப்பட்டது மெய்யே. ஆனால் வேறொன்றும் செய்யப்படவில்லை. அதின் அலங்கம் பிடிபட்டபோது எப்படிப் பாழாய்க் கிடந்ததோ அப்படியே இருந்தது. அதில் வாசல்கள் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பது கூடக் கஷ்டம். ஆனால் சில இடங்களில் வாசல் இருந்ததற்கு அடையாளமாகக் கருங்கற்குவியல்களைப் பார்க்கலாம்.

ரப்சாகே ராஜ அரண்மனையிலுள்ள தன்னுடைய அறைக்குப் போகும்போது அவருடைய இருதயம் சஞ்சலம் நிறைந்ததாயிருந்தது. அவர் கேள்விப்பட்டது எவ்வளவு பயங்கரமான விஷயம்! எருசலேமின் நன்மையைக் கருதி அதற்காக எஸ்றா எவ்வளவு பிரயாசப்பட்டபோதிலும், அது கடைசியாகப் பாழான ஸ்தலமாகவேயிருந்தது. இந்தக் காரியங்களினால், நெகேமியா மனநோவுள்ளவரும் சஞ்சலமும் கவலையும் மிகுத்தவருமாயிருந்தார். ஆனால் நெகேமியா (கர்த்தர் என்னுடைய ஆறுதல்) தன் பெயரையும் அதின் அர்த்தத்திலுள்ள எச்சரிப்பையும் நினைவுகூருகிறார். உடனே தாமதமின்றி ஆறுதலின் தேவனண்டை போகிறார். அங்கே அழுகிறார்; புலம்புகிறார்; உபவாசிக்கிறார்; தன்னுடைய துயரத்தையெல்லாம் கர்த்தரிடத்தில் ஊற்றிவிடுகிறார். ஒரு குழந்தை தாயினிடம் ஓடித் தன்னுடைய கஷ்டங்களைச் சொல்லுவதுபோல நெகேமியா கர்த்தரிடம் ஓடுகிறார்.

ஒரு பிரபு மிகவும் அருமையும் பெருமையுமாய் வைத்திருக்கும் ஒரு தோட்டத்தினுள் பிரவேசித்து, அங்குள்ள பலவர்ணமுள்ள புஷ்பஜாதிகளைப் பார்த்து அதிசயப்படுகிறோம். எந்தப் பக்கம் பார்த்தாலும், உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களிலுமிருந்து கொண்டுவரப்பட்ட அருமையான புஷ்பங்களும், பலவிதமான இலைதினுசுகளும், கமுகுகளும், புற்களும், காளான் பாசி முதலியவைகளும், இயற்கை



யாயுள்ள அநேகவித அழகான வஸ்துக்களும் வைக்கப்பட்டிருக்கக் காணலாம். அந்தத் தோட்டத்தின் மத்தியில், மிக அழகானதும் புஷ்பராணி என்று சொல்வதுமான புஷ்பங்களால் நிறைந்த ரோஜாச் செடியை அங்கே பார்க்கிறோம். நாம் அதை அங்கே பார்க்கும்போது ஆச்சரியப்படுகிறதில்லை; அந்தச் செடி இருக்கவேண்டிய சரியான இடம் அதுதான். அது நன்றாய்ச் செழித்து வளர்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படவுமாட்டோம். ஏனென்றால், அதின் வளர்ச்சிக்கு வேண்டிய சகலவிதமான கவலையும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆகாயம் அதிக சூடாய் அல்லது குளிர்ச்சியாய் இராதபடி சரிப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலம் சரியானதாய் வைக்கப்பட்டிருக்கிறது. போதுமான வெளிச்சம் இருக்கிறது. அதிக கவலையோடு நேரத்துக்கு நேரம் சரிப்படுத்தப்படுகிற அனல் உண்டு. சொல்லவேண்டுமானால், சகல விஷயத்திலும் அந்தச் செடிக்குச் செழிப்பையும் அழகையும் கொடுக்கக்கூடிய வழிவகைகளெல்லாம் இருக்கின்றன. ஆகையால் அது நன்றாயிருக்கிறது.

ஆனால் லண்டன், கல்கத்தா, பம்பாய் முதலிய பெரிய பட்டணங்களின் மூலைகளிலுள்ள கேவலமான சேரிகளில் (Slums) இப்பேர்ப்பட்ட ஒரு காட்சியைப் பார்க்கிறோமென்று வைத்துக்கொள்வோம். அங்கே ஒரு வீடு உண்டு, அதைச் சுற்றிலும் சாக்கடைத் தண்ணீர் முதலியவைகளால் மகா அருவருப்பாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட இடத்தில் மேல்மெத்தைக்குப் போகும் வழியிலுள்ள ஒரு ஜன்னலில் அழகான புஷ்பங்கள் நிறைந்த ஒரு ரோஜாச்செடி ஒரு தொட்டியிலிருக்கப் பார்க்கிறோம். இந்தமாதிரியான இடத்தில் இந்தப் புஷ்பச்செடியைப் பார்ப்பது மிகவும் ஆச்சரியமான விஷயமே. அதன் வளர்ச்சிக்கு அனுகூலமான தொன்றையும் நாம் அங்கே பார்க்கிறதில்லை. ஆகாயம் அசுத்தமானது. வெளிச்சம் மங்கலாயிருக்கிறது. இன்னும் மற்றெதுவும் அதற்கு விரோதமாகவே இருக்கிறது. என்றாலும் அந்தச் செடியானது அழகு நிறைந்து ஆச்சரியத்தை உண்டாக்குகிறதாயிருக்கிறது.

இப்போதும், நல்ல புஷ்பத்தைச் சாக்கடையில் பார்த்தோமே. தேவனுடைய மனுஷனை எங்கே பார்க்கலாம்? எருசலேம் தேவாலயத்தில் வசித்து, தேவனைப்பற்றி நினைப்பூட்டுகிற எல்லாவற்றாலும் சூழப்பட்டு, மார்க்கமாகிய ஆகாயத்தையே சுவாசித்து, பக்தியுள்ள ஜனங்கள் சுற்றிலும் இருக்க, தனக்கு உதவியாக எல்லாம் பரிசுத்தமும் தூய்மையுமாயிருக்கப்பட்ட இடத்தில் தேவனுடைய மனுஷனைப் பார்ப்பது ஆச்சரியமல்ல.

ஆனுல் இங்கே ரப்சாகே என்கிற செகேமியா அஞ்ஞான மாளிகையில் வசித்து, துன்மார்க்கமான சபையில், குடிவெறி, இன்னும் அவலட்சணமான எல்லாவற்ருலும் சூழப்பட்டு, பாவமாகிய ஆகாயத்தையே சுவாசித்து இருந்தபோதிலும், கர்த்தருடைய செடியாக விசுவாச மனுஷனுக, ஜெப மனுஷனுக, தேவனுடைய பரிசுத்த மனுஷனுக இருக்கிருர். எல்லாம் அவருக்கு விரோதமானதே. அவருடைய பரிசுத்த ஜீவியத்திற்கு அனுகூலமானது ஒன்றுமில்லை. என்றபோதிலும், கர்த்தருடைய தோட்டத்தில் செழித்தோங்கும் செடியாயிருந்தார். அப்படித்தான் எப்போது மிருக்கிறது. தேவ கிருபையாகிய செடி அனுகூலமற்ற இடங்களில் செழித்து வளருகிறதுண்டு. பார்வோனின் வீட்டில் பரிசுத்த யோசேப்பும், துன்மார்க்க ஸ்திரீயாகிய ஏசபேலின் வீட்டில் உண்மையுள்ள ஒபதியாவும் பாபிலோனில் நீதியுள்ள தானியேலும், ஸிஸெராவின் அரண்மனையில் பரிசுத்தவான்களுமுண்டு.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ஸ் ஜனவரிமீ

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | சங். 115. | 12 | தி. | யோபு, 29. 14—25 | 23 | வெ. | யோபு, 34. 16—30 |
| 2 | வெ. | யோபு, 22. 15—30 | 13 | செ. | „ 30. 1—15 | 24 | ச. | „ 34. 31—37; |
| 3 | ச. | „ 23. | 14 | பு. | „ 30. 16—31 | | | 35. 1—4 |
| 4 | ஞா. | „ 24. 1—12 | 15 | வி. | „ 31. 1—12 | 25 | ஞா. | „ 35. 5—16 |
| 5 | தி. | „ 24. 13—25 | 16 | வெ. | „ 31. 13—23 | 26 | தி. | „ 36. 1—12 |
| 6 | செ. | „ 25. 26 | 17 | ச. | „ 31. 24—40 | 27 | செ. | „ 36. 13—27 |
| 7 | பு. | „ 27. 1—10 | 18 | ஞா. | „ 32. 1—14 | 28 | பு. | „ 36. 28—33; |
| 8 | வி. | „ 27. 11—23 | 19 | தி. | „ 32. 15—22 | | | 37. 1—8 |
| 9 | வெ. | „ 28. 1—11 | 20 | செ. | „ 33. 1—12 | 29 | வி. | „ 37. 9—24 |
| 10 | ச. | „ 28. 12—28 | 21 | பு. | „ 33. 13—33 | 30 | வெ. | „ 38. 1—15 |
| 11 | ஞா. | „ 29. 1—13 | 22 | வி. | „ 34. 1—15 | 31 | ச. | „ 38. 16—30 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1913

மாதர் போ[illegible]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 7 FEB 1914 MADRAS.

No. 194 பெப்ருவரி 1914 No. 2

## COUNT TOLSTOI'S HYGIENE MAXIMS

### சுகாதார ஸாரம்

ரஷ்யா தேசத்து மூத்தோர் கவுண்ட் டால்ஸ்டாய் நல்ல சுகவழியில் நடந்துவந்ததால் அவர் பழுத்த முதுமையிலும் சுகதேகியாய் இருக்கலானுர். அந்த வழியை அனைவருக்கும் காட்டவேண்டி அத்தேசமெங்கும் அதைப் பிரசுரப்படுத்தியிருக்கிருர்கள். 'மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்' என்பது அவர் விஷயத்தில் முற்றும் பொருந்தும்; ஆகையால் அவ்வார்த்தைகளை அடியில் வருமாறு சுருங்கச் சொல்லுவாம்.

1. ராப்பகல் சுத்த ஆகாயம்.
2. தினமும் தேகாப்பியாசம்.
3. மட்டான அன்னபானம்.
4. வாரத்தில் ஒருநாள் வெந்நீர் ஸ்நானம், மற்ற ஆறுநாளும் தண்ணீர் ஸ்நானம்.
5. சௌகரியமான உடை; இடுக்கமானதல்ல.
6. ஓதம் என்பது கொஞ்சமும் இல்லாமல், வேண்டுமான வெளிச்சமுள்ள விசாலித்த வீடு.
7. காரான சுசியுடைமை.
8. தேகத்தையும் மனதையும் பீடிக்க இடந்தராதபடி தடுக்கும் கிரமமான கடின வேலை.
9. பட்ட சிரமத்தை நினைத்தபோது பரிகரிக்கப் பார்க்கலாகாது; காலத்தைக் கவனிக்கவேண்டும். ராத்திரி நித்திரைக்கென்றே ஏற்படுத்தப்பட்டது.
10. காரியத்திலே சுறுசுறுப்பாயிருப்பதோடு, நற்கிரியையிலே கௌரவமும் உன்னதான ஜீவியம் நல்ல சுகத்துக்கு முக்கிய ஆதாரம்.

VOL. XXIX.



## THE KING'S CUP BEARER. *(Cont.)*

# ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

### I. அத்தியாயம்

#### லீலீயா நகரம். (தொடர்ச்சி.)

நாம் எப்பொழுதாவது நம்முடைய எஜமானை உண்மையாய்ச் சேவிக்க முடியவில்லையே என்று சொல்ல ஏவப்படுகிறோமா? நான் வேறே நிலைமையிலிருந்தால், என்னை முற்றிலும் ஒப்புக்கொடுக்கும்படியாக என்னுடைய குடும்ப ஜீவியம் எனக்கு உதவியாயிருந்தால், எனக்கு வேறே சிநேகிதர் இருந்தால், வேறே உத்தியோகம் இருந்தால், என்னைச் சூழ்ந்துள்ளவைகள் வேறு விஷயங்களாயிருந்தால், நான் கிருபையில் வளர்ந்து, பரிசுத்த ஜீவியத்தின் நல்ல கனிகளைக் கொடுப்பேன். ஆனால் நான் இருக்கிறபடியே, இருக்கிற இடத்திலேயே, தற்கால நிலைமையிலேயே தேவனுக்குச் சமீபமாய் ஜீவிக்கவாவது நான் அடிக்கடி விரும்புகிறபடி மெய்க்கிறிஸ்தவனாயிருக்கவாவது கூடாத காரியம் என்று சொல்லுவாயோ? இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை நமதாண்டவர் கேட்டால் என்ன சொல்லுவார்? 'என் கிருபை உனக்குப் போதும்.'

'உன் நாட்களுக்குத் தக்கதாக உன் பெலனும் இருக்கும்.'

வேற்றுமையுள்ள, செழிப்பற்ற இடங்களிலுங்கூடத் தம்முடைய செடிகளை வளரச்செய்யவும், செழிப்பாக்கவும் கர்த்தரால் கூடும். நான் இருக்கிற இடத்திலேயே, இருக்கிற வண்ணமாகவே, எந்த



விஷயங்களால் சூழப்பட்டிருக்கிறேனோ அப்படியே என்னைக் கர்த்தர் ஆசீர்வதிக்கக்கூடும். அவருக்கு ஊழியஞ்செய்யவும், அவரை மகிமைப்படுத்தவும், வேண்டிய கிருபையை அவர் எனக்குக் கொடுக்கக்கூடும். நான் கர்த்தருக்கென்று செழித்தோங்காவிட்டால், என்னுடைய நிலைமையைக் குற்றஞ் சாட்டவேண்டியதில்லை. 'கர்த்தர் கொடுக்க ஆயத்தமாயிருக்கிற தேவகிருபையை நான் தேடாததினாலேதான் அப்படியிருக்கிறேன். 'நீங்கள் கேட்காததினால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள், கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.'



### II. அத்தியாயம்

#### ராஜ போஜனசாலை

லண்டன் பட்டணத்தில் 1665-ம் வருஷம் ஒருநாள் ராத்திரியில் வீடுகளெல்லாம் மூடப்பட்டுக் கதவுகளெல்லாம் தாழ்போடப்பட்டிருந்தது. வீதிகள்தோறும் விநோதக்காந்தியுள்ள வெளிச்சங்கள் போடப்பட்டிருந்தது. புகைகிற நீல், கந்தகம் இவைகளின் நாற்றம் மூச்சடைப்பதுபோலிருந்தன. நேரத்திற்கு நேரம் இந்த இரவின் இருட்டான வேளையில் ஒரு பயங்கரமான வண்டி அருவருப்பான சுமையோடு போகும்போது, பாரமான சக்கரங்களின் சத்தம் கேட்கப்பட்டது. அந்த வண்டியோடே ஒரு சத்தமும் கேட்கப்பட்டது.

அந்தச் சத்தம் மூடப்பட்ட எல்லா வீடுகளிலும் கேட்கப்படும்படியாக அவ்வளவு சத்தமாயும், தெளிவாயும், ஊடுருவிப் பாயத்தக்கதாயுமிருந்தது. ‘செத்தவர்களை வெளியே கொண்டுவாருங்கள்!’ ‘செத்தவர்களை வெளியே கொண்டுவாருங்கள்!’ என்கிற இந்தச் சத்தம் உண்டான உடனே, கொள்ளைநோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் வீடுகள் ஒவ்வொன்றாய் வெகு தீவிரமாய்த் திறக்கப்பட்டு, பிணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அந்தப் பயங்கரமான சாவு வண்டிக்குள்ளே எறிந்துவிடப்பட்டன.

‘செத்தவர்களை வெளியே கொண்டுவாருங்கள்!’ இது எவ்வளவு பயங்கரமான அவசொனி! அதைக் கேட்டவர்களுக்கு எவ்வளவு பயங்கரத்தையும், திகிலையும் கொடுத்திருக்கும்! இதே விதமான சத்தம், பரிசுத்த தூதர்களால் நம்முடைய தேசத்திலும், ஒவ்வொரு வீட்டின் வாசற்படியிலும் கேட்கப்படுமானால், ‘செததவர்களை வெளியே கொண்டுவாருங்கள்!’ உங்கள் செத்த சரீரங்களையல்ல, செத்த ஆத்துமாக்களை, தேவனுக்கென்று ஜீவிக்காதவர்களை, அக்கிரமத்திலும் பாவத்திலும் செத்துப்போனவர்களைக் கொண்டுவாருங்களென்றால், எத்தனைபேர் நம்முடைய வீடுகளிலிருந்து வெளியே கொண்டுவரப்படுவார்கள்? நம்முடைய நிலைமை என்ன? நாம் உயிரோடிருக்கிறோமா? செத்துப்போயிருக்கிறோமா? மரித்தோரை ஜீவனுள்ளோரிடமிருந்து பிரிக்க தூதாக்கள் இன்னும் அனுப்பப்படவில்லை. மனிதகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்பி நல்லோரையும் தீயோரையும் பிரிக்கும் காலம் தினந்தோறும் சமீபித்து வருகிறது. மரணத்தையும், அழிவையும், அசுத்தத்தையும் உண்டாக்குகிற எல்லாப் பாவங்களும் சேகரிக்கப்பட்டு , லண்டன் பட்டணத்திலும் இன்னும் மற்றப் பெரிய பட்டணங்களிலும் கொள்ளைநோய்க் காலங்களில் தோண்டிவைக்கப்பட்டிருக்கும் பெரிய குழிகளிலல்ல, நாம் வாசிக்கிறபடி அக்கினிக்கடலில் எறியப்படும்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

ஆகையால், நம்முடைய ஆத்துமா உயிரோடிருக்கிறதா? செத்துப்போயிருக்கிறதா? என்று மெய்யாகவே அறியவேண்டும். நாம் அதை எப்படிச் சோதித்தறியலாம்? அதைத் தெளிவாயும் திட்டமாயும் அறிந்துகொள்ளுவதெப்படி?

மனிதனுக்கு ஜீவனுண்டு என்று அறிந்துகொள்ளக்கூடிய ஒரே ஒரு விஷயமுண்டு. தண்ணீரில் அமிழ்ந்திப்போனவனை வெளியே கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். அவனுக்குப் பேச்சுமில்லை மூச்சுமில்லை. பார்வை, அசைவு, உணர்ச்சி முதலியவைகளுமில்லை. அவனைத் தேய்த்துச் சூடுண்டாக்குகிறார்கள். அப்படியுப் ஜீவனிருக்



கிறதாகத் தோன்றவில்லை. ஆகையினாலே அந்த மனிதன் இறந்துபோய்விட்டான் என்று தீர்மானிக்கலாமா! அப்படியல்ல, அவனைப் பரிசோதித்தறியவேண்டும். ஒரு இறகைக் கொண்டுவந்து அவனுடைய வாயின் முன் பிடித்து அசைகிறதா என்று கவனமாய்ப் பாருங்கள். இதைப் பார்க்க அநேகம் பேர் ஆவலோடே சுற்றி நிற்கிறார்கள். உடனே, இறகு அசைகிறதென்ற சந்தோஷ சத்தம் பிறக்கிறது. மனிதன் பிழைத்திருக்கிறான். எப்படியென்றால் மூச்சு விடுகிறான். அவனுக்குள்ளிருக்கும் மூச்சு அவன் பிழைத்திருக்கிறான் என்பதற்கு உகந்த அடையாளம்.

என்னுடைய ஆத்துமா பிழைத்திருக்கிறதென்று நான் எப்படி அறிந்துகொள்ளுவேன்? அது சுவாசிக்கிறதா? இதுதான் மகா முக்கியமான கேள்வி. ஆத்துமாவின் சுவாசம் என்ன? ஜெபந்தான். தர்ஷீசிலுள்ள சவுல் என்பவர், கர்த்தர் அவனைச் சந்தித்து ஜீவன் கொடுக்கும்வரையில், வெளிப்படையாய் மார்க்கத்தை எவ்வளவாய் அனுசரித்தபோதிலும், உயிரற்ற ஆத்துமாவை உடையவராகவே இருந்தார். சவுல் செய்துகொண்டிருந்த முதலாவது காரியமென்ன? ‘இதோ அவன் ஜெபம்பண்ணுகிறான்.’ அவருக்கு உயிர் வந்தவுடனே மூச்சுவிடுகிறார். அவர் ஜெபிக்கிறார்.

என்னுடைய ஆத்துமாவுக்கும் ஒரு உரைகல் உண்டு. மெய்யான ஜெபம் என்ன என்று எனக்குத் தெரியுமா? என் தேவனோடு சம்பாஷிக்கிறது எனக்கு இஷ்டமா? நான் எப்பொழுதும் என் இருதயத்தை அவருக்கு முன்பாக உயர்த்துகிறேனா? நான் ஜெபமாகிய ஆகாயத்தில் இருப்பேனானால், நான் தேவனுக்கென்று பிழைக்கிறேன். அப்படியில்லாமல், ஜெபித்தலென்றால் கஷ்டமான வேலையாயும், என் கர்த்தரோடு சம்பாஷிப்பதென்றால் என்ன என்று தெரியாதவனாயுமிருந்தால், மெய்யாகவே நான் பாவத்தில் செத்துக்கிடக்கிறேன். என்னில் சுவாசமில்லை, ஆகையால் ஜீவனில்லை.

கனம்பொருந்திய ரப்சாகேயாகிய நெகேமியா ஜீவாத்துமாவாயிருந்தார். ஜெபித்தல் அவருக்கு அதிக பிரியம். எருசலேமைப் பற்றிய துக்கமான செய்தி அறிவிக்கப்பட்ட உடனே, அரமனையிலுள்ள தம்முடைய அறைக்குப்போய், தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணத் தொடங்குகிறார். தம்முடைய ஜனத்திற்கு வந்ததெல்லாம் சரியானபடி வரவேண்டியதுதான் என்று உணர்ந்து, தாழ்மையான பாவ அறிக்கையோடே தம் ஜெபத்தை ஆரம்பிக்கிறார்.’ உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியே

னுடைய ஜெபத்தைக் கேட்பதற்கு உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பனவாக. ‘இன்னும் தம் வீட்டாரின் பாவங்களையும் அறிக்கை செய்கிறார்.’ நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்.

கர்த்தருக்கு முன் அறிக்கையிட்டது ஏதாவது விசேஷித்த பாவமாயிருக்குமோ? பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் தங்களுடைய வீட்டையும் சுகத்தையும் விட்டு எஸ்றாவோடு எருசலேமுக்குப் போகாதது தம்முடைய பாவமும் தம் தகப்பன் வீட்டாருடைய பாவமுமாயிருக்கலாமே.

பிற்பாடு, நெகேமியா கடந்த காலங்களில் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களுக்காகக் கெஞ்சுவதோடு, தமக்கு அவசியமாயிருக்கிற எல்லாக் காரியங்களையும் திட்டமாய்ச் சொல்லி முடிக்கிறார் (நெகே 1. 8–11). இரவும் பகலும் நெகேமியா ஜெபிக்கிறார். சுமார் நாலு மாதங்களாக அவர் வேறொன்றும் செய்யவில்லை.

அப்புறம் அவர் கையிட்டு நடத்தவேண்டியிருந்தது ஒரு லேசான காரியமல்ல. பாரஸீகத்தின் பெரிய சக்கிரவர்த்தியிடம் பேசவேண்டும். அவரிடத்தில் எருசலேம் பாழாய்க் கிடக்கிற பரிதாப நிலைமையைச் சொல்லி, தம்மால் கூடியமட்டும் எருசலேமை அதின் முந்தின மகிமைக்குக் கொண்டுவரும்படியாக, சூசான் அரமனையைவிட்டு எருசலேமுக்குப் போகத் தமக்கு உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும். இது லேசான காரியமல்ல.

நெகேமியா இதைச் செய்ய பயந்தது ஆச்சரியமல்ல, பாரஸீக ராஜாக்களிடத்தில் ஏதாவது தயவு கேட்டால் செய்யவேமாட்டார்கள். உதாரணமாக: எஸ்தர் ராஜாத்தியின் புருஷனாகிய ஸர்க்ஸேஸ் (Xerxes) தன்னுடைய ஏராளமான சேனையோடு கிறீஸுக்குப் போகிற வழியில் சின்ன ஆசியாவிலுள்ள லீதியாவைக் கடந்துபோக வேண்டியதாயிருந்தது. இங்கே பிதியஸ் (Pythius) என்னும் பேர் கொண்ட ஒரு ஐசுவரியவான் ராஜாவுக்குப் பெரிய விருந்துசெய்து, அன்பாய் உபசரித்து, யுத்தத்திற்குச் செலவழிந்த பணத்தையெல்லாம் கொடுத்து, தன்னுடைய ஐந்து குமாரரையும் சேனையில் உழைக்கும்படியாகக் கொடுத்துவிட்டான். இதற்குப் பிற்பாடு பிதியஸ் ராஜாவினிடத்தில் ஒரு தயவு கேட்கத் துணிந்து, தன்னுடைய மூத்த மகன் பட்டாளத்தை விட்டு வயதுசென்ற தகப்பனாகிய தனக்கு ஆறுதலும் ஆதரவுமாயிருக்கும்படி வீட்டுக்கு அனுப்பிவிடப்படவேண்டுமென்று தாழ்மையாய்க் கேட்டுக்கொண்டான்; ஆனால், அந்த ராஜா இந்த சாதாரண, இயல்பான வேண்டுகோளுக்கு இடங்கொடாமல், தன்னி



டத்தில் இந்த விதமாய்க் கேட்டுக்கொண்டதற்காகக் கடுங்கோபங் கொண்டு, மூத்த மகனைக் கொன்று இரண்டு துண்டாக்கி, அந்த இரண்டு துண்டங்களின் நடுவே தன்னுடைய சேனை முழுவதையும் நிற்கக் கட்டளையிட்டான்.

S. A. Vethanayagam.

(இன்னும் வரும்.)

## CHILD'S LULLABY

## தா ரா ட் டு

இராகம். ‘ஆரிவராராரோ, இந்த அவனியோர்’

1. ராரிரி, ராராரோ, ராரோ, ராரிரி, ராராரோ
ராரிரி, ராரிரி, ராரிரி, ராரிரி, ராரோ, ராரா, ராராரோ.

2. அயர்ந்து நித்திரைசெய் என் கண்ணே அமர்ந்து நித்திரைசெய்,
அன்புள்ள ஆண்டவர் அளித்த எனது அழகியபொற்கொடியே.

3. தூங்கிடு கண்மணியே, தேவ தூதர்கள் சூழ்ந்து நிற்க,
யாதொரு மோசமும் உனை அணுகாமலே காப்பவர் அவரல்லவோ.

4. பட்டு ரோஜா நீ, என் கண்ணே, பவள மல்லிகை நீ
எல்லா திக்கிலும் நற்கந்தம் வீசும் மலர்ந்த பிச்சிப்பூ நீ

5. பச்சைக்கிளி நீயே, என் கண்ணே, பாடும் கிளி நீயே,
மாடப் புறாவே ஆடிடும் மயிலே, கூவும் கிளியே நீ

6. சந்திரகாந்தம் நீ, என் கண்ணே, தீர்ந்த ரத்தினம் நீ,
பத்தரை மாற்று சுவர்ணமும் நீயே, பவளமாலை நீயே.

7. ஜீவிய சுக பெலனும், என் கண்ணே, நீடிய தீர்க்காயுசும்
ஆண்டவர் தாமே தருவார் உனக்கு, அயர்ந்து நித்திரை செய்.

8. உன் ஜீவியகாலமெல்லாம், என் கண்ணே, தேவனைப்பின்பற்று,
பாவத்தை வெறுத்து, நீதியின் பாதையில் நீ விரைந்தோடி நட.

S. Rathinammal, Tuticorin.

## THE MARRIAGE OF GERAINT

## ஜெரேயீண்ட்டின் விவாகம்

ஒருநாள் ஆர்த்தர் என்னும் ராஜா தம்முடைய பிரஜைகளைச் சந்திக்கும்படி காளியொன் என்னும் கோட்டையில் வீற்றிருக்கும் நேரத்தில், ஒரு காடுகாவலன் அவரிடத்தில் வந்து, 'ஒருகாலமும் காணக்கூடாத பாலைப்போல் வெண்மை நிறம்போன்ற ஒரு கலைமானை இன்றைக்குக் காட்டில் கண்டேன்' என்று சொன்னான். அந்த நல்ல ராஜா மறுநாள் காலமே வேட்டைக்குப் போகிறதற்குக் குழலை ஊதுவித்தார். ராஜாத்தியும் வேட்டையாடுகிறதைப் பார்க்கும்படி ராஜாவிடம் உத்தரவு கேட்க ராஜா சந்தோஷத்துடன் போகும்படி விடை கொடுத்தார்.

விடியற்காலமே கோட்டிலிருந்த ஜனங்கள் எல்லாரும் புறப்பட்டார்கள்.

ஆனால் ராஜாத்தி எழுந்திருக்க நேரம்சென்றுவிட்டது. அப்படியே ராணி தனிமையாய் ஒரே ஒரு தாதியுடன் குதிரையேறிப் புறப்பட்டாள்.

அவர்கள் காட்டின் அருகில் வந்தபொழுது ஒரு சிறு மேட்டின்மேல் நின்றுகொண்டு வேட்டை நாய்களின் சத்தம் கேட்கும்வரைக்கும் காத்து நின்றார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் குதிரையின் அடிச்சத்தத்தைக் கேட்டார்கள். அது ஜெரேயீண்ட் என்னும் பிரபுவின் குதிரை; அவரும் நேரம் சென்று வருகிறார். அவர் வேட்டை உடுப்பு தரிக்கவுமில்லை, ஒரே ஒருபொன்பிடிக் கத்தியைவிட அவரிடத்தில் வேறே ஒரு ஆயுதமுமில்லை. மேட்டின்மேல் குதிரை பாய்ந்தோடுகையில் அவருடைய பட்டு வஸ்திரம் பொன்வண்டைப்போல் வெயிலுக்குப் பளபளப்பாய்ப் பல நிறம்கொடுத்து மினுமினுப்பாயிருந்தது. அவருடைய அரையில் கட்டியிருந்த இந்திர நீலப்பட்டின் ஓரங்களில் பொன் குஞ்சங்கள் கட்டியிருந்தன. குதிரை ஓடும்பொழுது அவை காற்றுக்குப் பறந்துகொண்டேயிருந்தன.

அவர் ராணிக்கு முன்பாக வந்து அதிக மரியாதையுடன் வந்தன. உபசாரம் செய்துகொண்டிருக்க அவள் பெண்தன்மையாகவும் ராணிக்குத் தகுந்த அலங்காரமாகவும், 'ஓ பிரபுவே! நீர் நேரஞ்சென்று வருகிறீர்' என்று மாறுத்தரமாகச் சொன்னாள்.

அதற்கு அவர், 'மேன்மையான ராஜாத்தியே! நான் நேரஞ்சென்று வந்தபடியால் வேட்டை ஆடுகிறதற்கு அல்ல உம்மைப்போல் பார்க்க



வந்தேன்' என்றார். அப்படியே ராஜாத்தி, 'பார்க்கிறதற்கு இது வசதியான இடம், நீர் எங்களுடன்கூட இந்த மேட்டின்மேல் நில்லுங்கள்' என்று சொன்னாள்.

தூரத்தில் வேட்டையாடுகிற சத்தத்தைக் கேட்டு அவர்கள் நிற்கும்பொழுது, ஒரு யுத்தவீரனும், ஒரு துரைசானியும், ஒரு கட்டையனும் மெதுவாய்ச் சவாரிசெய்து போனார்கள்.

யுத்தவீரன் யுத்த உடுப்பு தரித்திருந்தான்; ஆனாலும் அவனுடைய தலைச்சீரா மேலே உயர்த்தப்பட்டிருந்ததினால் அவனுடைய வாலிபமுகம் காணப்பட்டது. அவன் அகந்தையும் இறுமாப்பும் உள்ளவனாய்க் காணப்பட்டான்.

ராஜாத்தி மாளிகையில் அவனைக் காணாதபடியால் அவனுடைய பெயரை அறிய விரும்பி, கட்டையனிடம் கேட்கும்படி தன்னுடைய தாதியை அனுப்பினாள். அவன் வயதுசென்றவனாயும் முரட்டுக் குணமுடையவனாயும் தன் எஜமானிலும் இருமடங்கு பெருமையுள்ளவனாயும் இருந்தபடியால், 'இதை உனக்குச் சொல்லமாட்டேன்' என்று சொன்னான். 'அப்போ நான் அவரிடத்தில் கேட்பேன்' என்று ராணி சொன்னாள்.

'மெய்யாகவே நீ அவனிடம் கேட்கக்கூடாது, அவனுடன் பேசுகிறதற்கும் நீ தகுந்தவள் அல்ல' என்று கட்டையன் ஆணையிட்டுச் சொன்னான்.

அவள் யுத்தவீரனிடம் போகிறதற்குக் குதிரையைத் திருப்பினபொழுது கட்டையன் அவளை அடிக்கிறதற்குப் பார்த்துக்கொண்டிருக்க அவள் மனஸ்தாபத்துடன் ராணியிடம் திரும்பிப்போனாள்.

இவைகள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ஜெரேயீண்ட் என்னும் பிரபு, 'மெய்யாகவே நான் அவன் பெயரை அறிந்துகொள்வேன்' என்று சொல்லி கட்டையனுக்கு நேரே வெகு விரைவாய்ப் போய்க் கட்டையனிடம் கேட்டான்.

அவனோ முன் சொன்னதுபோலவே மறுமொழி சொன்னான். பிரபு யுத்தவீரனிடம் திரும்பிப்போகும்பொழுது கட்டையன் பிரபுவின் முகத்தில் இரத்தம் ஓடச் சவுக்கால் அடித்தான்.

பிரபு தம் கத்தியை எடுத்து அவனைக் கொலைசெய்ய நினைத்தாலும், அவன் மேன்மையும் தைரியமுமுடையவனாயிருந்தபடியால் 'இப்படிப்பட்ட ஒரு ஏழை கொஞ்சனுடன் சண்டைபிடிக்கிறது நல்லதல்ல' என்று ராணியிடம் திரும்பிப்போனார்.

'மேன்மையுள்ள ராணியே! உன்னுடைய தாதியினால் உனக்கு வந்த இந்த நிந்தையை நான் பழிவாங்குவேன். இவர்கள் எங்கே வாசம்பண்ணுகிறார்கள் என்றும் நான் கண்டுபிடிப்பேன். என்

னிடத்தில் யுத்த ஆயுதங்கள் இல்லாதிருந்தும் ஆரிடமாவது இரவல் வாங்கி அவனுடன் யுத்தம்செய்து அவனுடைய பெருமையைத் தாழ்த்துவேன். நான் கொல்லப்படாவிட்டால் மூன்றாம் நாள் திரும்பி வருவேன்; போய் வருகிறேன்' என்று சொன்னார்.

'போய்வாரும், நல்ல பிரபுவே! 'நீர் உம்முடைய பிரயாணத்தில் சித்தியடைவீராக' என்று ராணி சொன்னாள். 'நீர் முதல் விரும்பிய ஆளை விவாகம் முடிக்க ஜீவித்திருப்பீராக. அவள் ராஜாத்தியினுடைய மகள் என்றாலும் ரோட்டிலிருந்து எடுக்கும் ஒரு எளியவள் என்றாலும் அவளை என்னிடம் முதல் கொண்டுவாரும். நான் அவளைக் கலியாணத்துக்கு உடுத்து அனுப்புவேன்' என்றாள்.

அப்படியே ஜெரேயீண்ட் என்னும் பிரபு அந்த மூன்று பேருக்குப் பின்னாக வயல் வழியாகவும் காடு வழியாகவும் மலைகள் வழியாகவும் பிரயாணம் பண்ணும்பொழுது அவருக்கு வேட்டைநாயின் சத்தம் கேட்டதுபோலும், குழல் ஊதுகிற சத்தம் கேட்டதுபோலும் இருந்தது. அவர்கள் வேட்டை ஆடுகிறதைப் பார்க்கக்கூடாததைப் பற்றியும், இந்த அற்ப காரியத்தினால் தடைப்பட்டதைப்பற்றியும் கொஞ்சம் துக்கப்பட்டார்.

கடைசியாய் அந்த மூன்று பேரும் ஒரு மலை உச்சியின்மேல் நிற்கிறதைக் கண்டார்.

சற்றுநேரத்தில் அவர்கள் காணப்படாமல் மறைந்துவிட்டார்கள்.

அவரும் மலையின்மேல் ஏறினபொழுது ஒரு நீண்ட பள்ளத்தாக்கைக் கண்டார். அதிலே ஒரு சிறிய நீண்ட வழிகொண்ட ஒரு கிராமமிருந்தது. அதில் ஒரு பக்கத்தில் புதிதாய்க் கட்டப்பட்ட ஒரு கோட்டையும், மற்றப் பக்கத்தில் துண்டு துண்டாய் விழப்போகிற ஒரு பழைய கோட்டையுமிருந்தன.

காக்காய்கள் கத்தும் சத்தம்போல, கிராமத்திலிருந்து சத்தம் கேட்டது.

இந்த மூன்று பேரும் புதுக் கோட்டைக்குள் பிரவேசித்ததை ஜெரேயீண்ட் கண்டார்.

'ஆ! இப்போதே அவர்கள் ஒளித்திருந்த இடத்தை நான் கண்டுபிடித்தேன். காடியனார் பிறையைக் கண்டதுபோல், நான் இவர்களைக் கண்டேன்' என்றெண்ணி அவர் கிராமத்துக்குள் பிரவேசித்துத் தங்குகிறதற்கு ஒரு சத்திரம் பார்த்தார்.

சத்திரம் முழுவதும் ஜனங்களால் நிரம்பியிருந்தது.

ஒவ்வொரு இடத்திலும் கொல்லர்கள் யுத்த ஆயுதங்களைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களின் ஆயுதங்களை மினுக்கிக்கொண்டிருந்தார்கள்.



அவர் ஒரு வேலைக்காரனிடம் போய், 'நீங்கள் இவ்வளவு பரபரப்பாய்த் திரிகிற காரியம் என்ன?' என்று வினவினார்.

அவன் தன் வேலையைவிட்டு நிற்காமல் 'ஆலாப்பட்சி' என்று சொன்னான்.

அவர் திரும்பவும் ஒரு சாக்கு தானியம் கொண்டுபோகிற ஒரு கிழவனிடம் வினவினார். அவனும் 'ஆலாப்பட்சி' என்று சொன்னான்.

திரும்பவும் அவர் தலைச்சீராவை இணைக்கும் ஒரு கொல்லனிடம் வினவினார். அவன் திரும்பிப் பாராமல், 'சிநேகிதனே! ஆலாப்பட்சிக்கு வேலைசெய்யும் ஆட்கள் வீண் கேள்விக்கு மறுமொழி சொல்ல நேரமில்லை' என்று சொன்னான்.

அதற்கு ஜெரேயீண்ட் கோபமடைந்து, 'ஆலாப்பட்சி! ஆலாப்பட்சி! நீங்கள் எல்லாரும் ஒரே பாட்டுப் பாடுகிற குருவிகளாயிருக்கிறீர்கள். நீங்கள் இச்சிறு கிராமம் உலகம் என்று எண்ணுகிறீர்கள். உங்களுடைய ஆலாப்பட்சியைப்பற்றி எனக்கென்ன? இரவுக்குத் தங்கியிருக்க எனக்கு ஒரு இடத்தையும் என்னுடைய சத்துராதியுடன் யுத்தம் செய்கிறதற்கு எனக்கு ஆயுதங்களையும் காட்டமாட்டீரா?' என்று கூவினான். கடைசியாகக் கொல்லன் அண்ணாந்து பார்த்து வடிவான நிறங்கொண்ட பட்டு வஸ்திரத்தைத் தரித்திருந்த ஒரு ஆளைக் கண்டு தன் தலைச்சீராவைக் கையில் பிடித்துக்கொண்டு முன் வந்தான்.

'அன்னிய யுத்தவீரனே! என்னை மன்னித்துக்கொள்ளும்; நாளைக் காலமே குதிரைவீரரின் விளையாட்டு இவ்விடத்தில் நடக்கப்போகிறது; அதற்கென்று அரைவாசி வேலை முடிக்க நேரமில்லை. ஆயுதங்களா? எனக்குத் தெரியாது. இவ்விடத்திலிருக்கும் சாமான்கள் எல்லாம் தேவையாயிருக்கிறது. தங்குகிறதற்கு இடமா? மெய்யாகவே எனக்குத் தெரியாது. பாலத்துக்கு அப்பாலிருக்கும் ஈனியோல் பிரபு ஒருவேளை உனக்கு இடம் தருவார்' என்றான்.

இதற்கு ஜெரோயீண்ட்டின் கோபம் கொஞ்சம் தணிந்து அவரைக் கடந்துபோனார்.

அப்பாலே நரைகொண்ட வயதுசென்ற ஈனியோல் என்னும் பிரபு நிறம் மங்கிப்போன பழைய வஸ்திரம் தரித்துக்கொண்டிருக்கிறதைக் கண்டார்.

ஜெரோயீண்ட்டைக் கண்டபொழுது, 'நீர் எங்கே போகிறீர் மகனே?' என்று அவர் கேட்டார்.

'இரவில் தங்குகிறதற்கு ஒரு இடம் தேட வந்தேன்' என்று சொன்னார்.

அதற்கு ஈனியோல், 'இந்த வீடு ஒரு காலத்தில் நன்றாயிருந்தது; இப்போ வறுமையாய்ப் போய்விட்டது. எங்களிடத்தில் இருக்கிறதில் ஒரு பங்கை உமக்குச் சந்தோஷத்துடன் தருவோம், வாரும்' என்று அவரை அந்தப் பழைய கோட்டைக்குள் அழைத்துக்கொண்டு போனார். ஜெரேயீண்ட் சுற்றிப் பார்த்தபொழுது அநேக சுவர்கள் விழுந்து கிடக்கிறதையும், மற்றப் பக்கத்தில் கோபுரத்தின் ஒரு பாகம் விழுந்து கிடக்கிறதையும், மேலே பழைய காலத்தில் அநேக கால்களினால் மிதிக்கப்பட்ட படிகள் முறிந்து கிடக்கிறதையும் கண்டார்.

பழைய காலத்து மரங்களின் வேர் அங்குமிங்கும் நுழைந்து கற்களைப் பிளக்கப்பண்ணினது. அவர்கள் கோட்டையின் தோட்டத்தில் நிற்கும்பொழுது ஈனியோலுடைய மகள் ஈனிட் என்பவள் வீட்டிலிருந்து ஒரு பழைய பாட்டைப் பாடுகிறதைக் கேட்டார்கள்.

'கேளுங்கள்! குருவியினுடைய சத்தத்தில் கூடு எங்கேயிருக்கிறதென்று அறியலாம், உள்ளே வாருங்கள்' என்று ஈனியோல் சொன்னார்.

உள் அறையில் ஒரு வயதுசென்ற அம்மாள் இருந்தாள். அவள் அருகில் ஒரு வடிவான பெண்பிள்ளையாகிய அவளுடைய மகள் நின்றாள்.

'மெய்யாகவே இவள்தான் எனக்குத் தகுதியான பெண்' என்று ஜெரேயீண்ட் நினைத்தார்.

இருவரும் பழைய மங்கின பட்டு உடையைத் தரித்திருந்தார்கள்.

அந்த வயதுசென்ற பிரபு தன் மகளைப் பார்த்து, 'மகளே! இந்த நல்ல பிரபுவினுடைய குதிரை முற்றத்தில் நிற்கிறது. அதைக் குதிரை லாயத்துக்குக் கொண்டுபோய் அதற்குத் தீனி கொடு; பிறகு கடைக்குப்போய் எங்களுக்கு இறைச்சியும் திராட்சரசமும் வாங்கிக் கொண்டுவா; எங்களுடைய சம்பாத்தியம் குறைவாயிருந்தாலும் எங்களுடைய இருதயம் பூரணமாயிருக்கிறது' என்றார்.

ஈனிட் தன் தகப்பன் சொன்னதுபோல் செய்யப்போனாள்.

அவளுக்காக உதவி செய்கிறதற்கு ஜெரேயீண்ட் புறப்பட ஈனியோல் அவருடைய பட்டு வஸ்திரத்தைப் பிடித்து, 'நில்லும், ஆறுதலாயிரும், எங்களுடைய வீடு வறுமையாய்ப் போய்விட்டாலும் எங்களிடத்தில் வரும் விருந்தாளிகள் வேலைசெய்வது தகுதியல்ல' என்று சொன்னார்.

(இன்னும் வரும்.)





## THE SPOILT CHILD

## நன்னெறி யறியாக் குழந்தை

மதலையில்லா மனை மற்றச் செல்வத்தால் நிறைந்துள்ளதாயினும் வசிப்பவர் மனத்தைக் கவரும் சக்தியிலதே. குழந்தையின் இனிய மழலைச் சொற்களையும் தவழ்ந்து செல்லும் சிறு பாதங்களையும் கண்டு களியாத வாழ்நாள் வீண்ணாளாகும். அவ்வித வாழ்வையடைந்த மானிடர் சுயகாரியப் பிரகிருதிகளாகவே இருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுக்குக் குழந்தைகளின்பேரில் பிரியமில்லையென்றும், பிறருடைய குழந்தைகளின் நடத்தைகளைப் பார்ப்பதினாலேயே தங்களுக்குக் கடவுள் குழந்தையைக் கொடாமலிருப்பது ஒரு பெரும் பாக்கியமென்றும் களிப்புடன் கூறுகிறார்கள்.

ஆனால் சரியான வழியில் வளர்க்கப்பட்ட குழந்தைகளுடன் பழகி அவ்வின்பத்தை அனுபவித்தவர்கள் மேற்கூறியவண்ணம் கூறச் சற்றே தயங்குவர். ஆடவரைப்போல், பெண்மக்களிலும் சிலர் குழந்தைகளிடத்தில் பிரீதியில்லாமலிருக்கிறார்கள். இதற்குக் காரண

மென்ன? சரியான வழியிற் கொண்டுவரப்படாத அகங்காரச் சொரூபங்களாகிய சில குழந்தைகளால் உண்டாகும் ஹிம்சைகளின் பயனென்று தெரியவருகிறது.

ஆஸ்டிரேலியா தேசத்திலே மேற்கூறிய குழந்தைகள், 'தன்மை பயிலாத் தனயர்' என்று அழைக்கப்படுகிறார்கள். விருப்பியபடி உருச் சமைக்கலாகும் களிமண்ணைச் சரியானபடி உபயோகிக்கத் திறமில்லாத தேர்ச்சியில்லாக் குயவன்போல், மதியில்லா மாந்தர் சிலர் தங்கள் குழந்தைகளைப் பதராக்குகிறார்கள். ஒரு குழந்தை பிறருக்கு ஹிம்சையையும், பெற்றோருக்குச் சங்கடத்தையும் உண்டுபண்ணுவதற்கு அக்குழந்தையை வளர்த்தவர்களே காரணமாய் இருக்கிறார்கள். ஏனெனில், இளவயதிலேயே சரியான வழியில் அக்குழந்தையைத் திருப்பாதது அப்பெற்றோரின் பிசகேயாகும். இதனால் குழந்தையானது 'நான்' என்னும் அகந்தையுள்ளதாய், தான் பார்க்கும் வஸ்து எதையும் அடையவேண்டுமென்கிற எண்ணத்துடன் பிடிவாதம் செய்கிறது. தமது மக்கட்குச் செய்யவேண்டிய கடமைகளில் முதன்மையான நன்னெறி புகட்டல் என்பதை எள்ளளவேனும் அறியாப் பேதைகளான அப்பெற்றோர்களும், சற்றே தியங்கிப் பிறகு, தம் குழந்தையைச் சமாதானம் செய்யும்பொருட்டு அது விரும்பிய பொருளைக் கடன்பட்டாகிலும் வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால், இளஞ்சந்திரனைப்போல், மேலோங்கக்கூடிய குழந்தையின் அறிவானது, தனது பெற்றோரின் 'தயை'யால் தடைப்பட்டுத் தாழ்வடைகின்றது.

ஆகையால் இவ்வித அகந்தை நமது குழந்தைகளைத் தனது வசமாக்காவண்ணம் காப்பது எப்படி என்று சற்று யோசிப்போம். ஒரு குடும்பத்திலுள்ள அந்நியோந்நியத்தையும், அதனால் உண்டாகும் சந்தோஷத்தையும், அழிக்க வல்லதாகிய அகந்தையைப் போக்க இரு வழிகள் உள. முதலாவது, பெற்றோரின் நடக்கை, ஒவ்வொரு குழந்தையும் தனக்குப் பகுத்தறியும் சக்தி உண்டானதும், தன்னுடன் இருப்பவர் நடக்கும்வண்ணமும் பேசும்வண்ணமுமாகவே தானும் நடக்கவும் பேசவும் முயலுகிறது. பெற்றோர் பரோபகாரச் சிந்தையுடையவரானால், குழந்தையும் அக்குணத்தையடைந்து, அவர் கருத்துக்கு இசைந்தும் நடக்கும். இல்லாவிடில் குழந்தைகளிடத்தில் சற்குணங்களைக் காணல்முடியாது. இரண்டாவது, பெற்றோரின் வல்லமை, கிறிஸ்மஸ் முதலிய விசேஷ நாட்களில் ஒவ்வொரு குழந்தையும் தன் உறவினர் அல்லது சிநேகரால் தனக்குக் கிடைக்கும் வெகுமதிகளைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பது வழக்கம். பெற்றோரும் அந்த வெகுமதிகளைக்கொண்டு தமது குழந்தைகளை



உற்சாகப்படுத்துகிறார்கள். ஆனால் இவ்வித வெகுமதிகளை அடையும் அதிர்ஷ்டத்தைப் பெறாத ஏழைக் குழந்தையைக் கவனிக்கும்படி அவர்கள் தங்கள் தனயர்களைத் தூண்டுவதில்லை. 'தான் ஒரு பொருளை அடைவதைவிடப் பிறருக்குத் தான் அளிப்பதே மேல்' என்னும் சித்தாந்தத்தைக் குழந்தைகள் அறியாமல் இருப்பது மாதா பிதாக்களின் மதியீனமேயாகும். நமது சக்தியைச் சரியாய் உபயோகிப்பதனால் நமது குழந்தைகள் நமக்கும் பிறருக்கும் மிக்க இன்பத்தை உண்டாக்குவார்கள் என்பதை நாம் அறியாவிடில் நமது வல்லமையையே நாம் அறிந்தோமல்லோம். பழுதாக்கப்பட்ட குழந்தை தன்னயமுள்ளதாயும் மூர்க்ககுணமுடையதாயும் இருக்கிறது. ஆனால் இந்த மூர்க்ககுணம் அக்குழந்தை பெரிதாகும்வரையில் தன் கொடிய ஸ்வரூபத்தைக் காட்டுவதில்லை. நாலாம் வயதில் சுயநலங்கருதுங் குணம் தோன்றுமாம்; எட்டுவயதாகும்வரையில் அக்குழந்தையினிடத்தில் மூர்க்ககுணம் தோன்றாது.

ஓர் இளங்குழந்தை சில சமயங்களில் தனது பெற்றோரின் சம்பாஷணைகளைக் கெடுத்துக் கூச்சலிட்டாலும் அதை யாரும் கடிந்துகொள்வதில்லை. ஆனால் பால்ய பருவமடைந்த சிறுவர்கள் அப்படிச் செய்தால் எல்லோருக்கும் அவர்களிடத்தில் வெறுப்புண்டாகும்.

அன்னியன் ஒருவன் தனது சிநேகிதனுடைய வீட்டில் இருக்கையில், அங்கே குழந்தைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுப் பெருங் கூச்சல் இடுவதையும், அவர்களின் பெற்றோர் அதைப் பார்த்து மகிழ்ந்து தமது சிநேகரை நோக்கி, 'குழந்தைகளின் குதூகலத்தைப் பாருங்கள்' என்று சொல்வது அப்பெற்றோர் ஆளுந் திறமையில்லா அவலர் என்பதற்கு ஓர் அத்தாக்ஷியாகும்.

தங்கள் குழந்தைகளிடத்தில் சில துர்க்குணங்களைக் கண்டும், அக்குணங்கள் தம்மிடத்திலும் இருப்பதையே ஒரு காரணமாகக்கொண்டு தம் தனயர்களைக் கண்டிப்பதில்லை. பிறவிக்குணத்தையும் ஊக்கமிருப்பின் மாற்றமுடியும்.

## SCRIPTURE PUZZLE

## வேத வினா

ஆதாம் பாவம் செய்ததேன்?
ஆண்டவர் சத்தம் கேட்டு ஒளித்ததேன்?

## ANSWERS TO PUZZLES FOR NOVEMBER & DECEMBER

### விடை

November.

| | | |
|---|---|---|
| A | வனேக்கு | ஆதி. 4. 17. |
| | அந்தியோகியா | அப். 11. 26. |
| | கானு. | யோவா. 2. 11. |
| B | லீபனேன் | 2 இரா. 19. 23. |
| | நேபோ | உபா. 34. 1. |
| | சீனாய் | யாத். 34. 28, 29. |
| C | யோர்தான் | 2 இரா. 5. |
| | நீல் நதி | யாத். 7. 20. |
| | ஐப்பிராத்து | எரே. 13. 4. |

December.

1. சிசேரா 3. எவான் 5. சிம்சோன்
2. கிதியோன் 4. இஸ்ரவேலர் 6. சகேயு
7. இயேசுகிறிஸ்து

Right answers received from

John Mathews, Dickoga, Ceylon.
E. J. Rajaruthnam, Vellalore, Coimbatore.
Packium Elijah, Mettupalayam.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1914 ஆம் பெப்ருவரிமீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஞா. | யோபு, | 38. | 31—41 | 11 பு. | பிலி. | 2. | 1—16 | 20 வெ. | கொலோ. | 2. | 12—23 |
| 2 தி. | ,, | 39. | 1—18 | 12 வி. | ,, | 2. | 17—30 | 21 ச. | ,, | 3. | 1—11 |
| 3 செ. | ,, | 39. | 19—30 | 13 வெ. | ,, | 3. | 1—11 | 22 ஞா. | ,, | 3. | 12—25 |
| 4 பு. | ,, | 40. | 1—14 | 14 ச. | ,, | 3. | 12—21 | 23 தி. | ,, | 4. | |
| 5 வி. | ,, | 40. | 15—24 | 15 ஞா. | ,, | 4. | 1— 9 | 24 செ. | தெச. | 1. | 1—12 |
| 6 வெ. | ,, | 41. | 1—18 | 16 தி. | ,, | 4 | 10—23 | 25 பு. | ,, | 1. | 13—24 |
| 7 ச. | ,, | 41. | 19—34 | 17 செ. | கொலோ. | 1. | 1—14 | 26 வி. | ,, | 2. | 1—10 |
| 8 ஞா. | ,, | 42. | | 18 பு. | ,, | 1. | 15—29 | 27 வெ. | ,, | 2. | 11—21 |
| 9 தி. | பிலி. | 1. | 1—14 | 19 வி. | ,, | 2. | 1—11 | 28 ச. | ,, | 3. | 1—14 |
| 10 செ. | ,, | 1. | 15—30 | | | | | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

# மாதர் போதினி

REGISTRAR OF BOOKS ... 1914 MADRAS.

No. 195 மார்ச்சு 1914 No. 3


## THE HAPPY HOME

## மனப் பாக்கியமுள்ள வீடு

நாம் வசிக்கும் இவ்வுலகத்தில் பலவிதமான பாக்கியங்களுண்டு. அவைகளனைத்தையும் ஒரு மனுஷன் அனுபவித்தாலும், தனக்குள் மனப்பாக்கியம் என்பது கிஞ்சித்துமில்லாவிட்டால் அவனுக்கு என்ன ஆறுதல் இருக்கும்? மன ஆறுதலில்லாத வீட்டிலிருக்க அவன் மனம் சகிக்காதல்லவா! புருஷர்களுக்கு அடிக்கடி உண்டாகும் அதிருப்திக்கும் மனச் சஞ்சலத்திற்கும் காரணம் பெரும்பாலும் ஸ்திரீகளே என்று சொல்லலாம். புருஷனுக்கு எவ்வித சந்தோஷங்களிருந்தாலும் குணசாலியான மனையாள் தன் புருஷனுக்கு உண்டாக்கும் சந்தோஷத்திற்கு இணையாகமாட்டா. புருஷனும் குணசாலியான தன் மனைவியையே தனக்குண்டான எல்லாப் பொருளிலும் பெரும் பொருள் என்று மதிப்பான்.

1. குணசாலியான ஸ்திரீயின் மதிப்பு.

> 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
> திண்மை யுண்டாகப் பெறின்'

என்று திருவள்ளுவ நாயனார் சொன்னார். அப்பாட்டின் பொருள் எதுவென்றால், ஒரு புருஷன் தான் சம்பாதிக்கக்கூடியது எவ்வளவு உயர்ந்த பொருளேயானாலும் அதைப்பார்க்கிலும் கற்புடைய மாதைத் தன் மனைவியாய் அடைந்திருப்பதே அவனுக்குப் பெரும் பாக்கியம்.

கற்புடைய மாதர்களைப்பற்றி ஞானியாகிய சாலோமோன் சொல்லுகிறதைப் பாருங்கள்:—'குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது

(நீதி. 31. 10). 'வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; கற்புள்ள அல்லது புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு' (நீதி. 19. 14). 'அவள் புருஷனுடைய இருதயம், அவளை நம்பும், அவன் சம்பத்துக் குறையாது.' (நீதி. 31. 11.)



2. குணசாலியான ஸ்திரீயினால் புருஷனுக்கு உண்டாகும் கனம். கற்புள்ள ஸ்திரீ தன் புருஷனுக்கு எப்போதும் குறைவையல்ல கனத்தையே உண்டுபண்ணுகிறாள். 'அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் தன் புருஷனுக்குத் தீமையையல்ல நன்மையையே செய்கிறாள் (நீதி. 31. 12). 'அவள் தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள். (நீதி. 12. 4.)

3. குணசாலியான ஸ்திரீ தன் கடமைகளில் வெளிப்படுத்துகிற குணம். அவளுடைய குணம் பலவிதத்தில் தன் கடமைகளைச் செய்



யும்போது வெளிப்படும். அவள் தன் வீட்டில் தரித்து, தன் புருஷனிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவளாயும் (தீத். 2. 4), தெளிந்த புத்தியுள்ளவளாயும், கற்புள்ளவளாயும், தன் புருஷனுக்குக் கீழ்ப்படிகிறவளாயும் (தீத். 2. 5), தன் புருஷனிடத்தில் பயபக்தியுள்ளவளாயும் (எபே. 5. 33), மரணபரியந்தம் தன் புருஷனோடு வாழ்க்கைப்பட்டிருக்கிறவளாயுமிருப்பாள். (எபே. 7. 2, 3.)

4. குணசாலியான ஸ்திரீயின் அலங்கரிப்பு. உலகப்பிரகாரமான ஆடம்பரத்தைக் கருதி, தன்னைப் பெருமையுடையவளாய்க் காட்டும்பொருட்டுப் பலவித உயர்ந்த வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்துக்கொள்ளாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணயத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியினாலும், நற்கிரியைகளினாலும் தன்னை அலங்கரித்து (1 தீமோ. 2. 9), அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியைத் தன் இருதயத்தில் தரித்துக்கொள்ளுவாள். (1 பேது. 3. 4, 5.)

5. குணசாலியான ஸ்திரீயினால் உண்டாகும் ஆதாயம். குணசாலியான ஸ்திரீ தன் புருஷன் எவ்வளவு தீயகுணமுள்ளவனாயிருந்தாலும் அவனை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறாள். 'புருஷர்கள் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்' என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார். (1 பேது. 3. 1, 2.)

6. குணசாலிக்கு உண்டாகும் புகழ். கற்புள்ள ஸ்திரீ சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறதென்று அதிக கண்ணோக்கமாயிருக்கிறதினாலும் (நீதி. 31. 27), இன்னும் அவளிடத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற கற்பலங்காரத்தினாலும், அவளுக்குண்டாகிற கீர்த்தியைப் பாருங்கள்:—'அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்பார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து அநேக பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு, நீயோ அவர்கள் எல்லாருக்குள்ளும் மேற்பட்டவள் என்று சொல்லி அவளைப் புகழுகிறான்.' (நீதி. 31. 28, 29.)

இதை வாசிக்கிற என் நேச சகோதரியே! நீ எப்படிப்பட்ட குணசாலியாயிருக்கிறாய்? உன் குடும்பம் க்ஷேமத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிறையப்படவேண்டுமானால் உன்னையே நீ திருத்தி குணசாலியாய் இருக்கவேண்டும். வேதத்தில் குறித்துக் காட்டியிருக்கிற சிம்சோனின் மனைவி, மீகாள், சேரேஷ், யோபின் மனைவி, ஏரோதி

யாள், சப்பீராள் என்பவர்களைப்போலிராமல், உத்தமிகளாய்க் காணப்பட்ட மனோவாவின் மனைவி, ஓர்ப்பாள், ரூத், அபிகாயில், எஸ்தர், எலிசபெத், பிரிகிலா, சாராள், என்பவர்களைப்போலிருக்கப் 'பிரயாசப்படு; அப்பொழுது, 'உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் வீட்டிற்குள்ளே சுகமும் இருக்கும்.' (சங். 122. 7.)

Betsy Ross



## THE MARRIAGE OF GERAINT (*Cont.*)

## ஜெரேயீண்ட்டின் விவாகம்

(தொடர்ச்சி)

ஜெரோயீண்ட் மரியாதையின் நிமித்தம் பேசாமல் நின்றார். அப்படியே ஈனிட் குதிரையை லாயத்தில் கட்டிவிட்டு கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக்கொண்டு வந்தாள்.

அவள் தன் கையாலேயே எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணி, அவைகளை அவர்களுக்குமுன்பாகக் கொண்டுவந்து மெத்த அலங்காரத்துடன் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

ஜெரேயீண்ட் மறுபடியும், 'இதுதான் எனக்குப் பெண்' என்று நினைத்து அவள் அங்குமிங்கும் நடக்கும்போதெல்லாம் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஆனால் அவளுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. உடனே அவர் ஈனியோலைப் பார்த்து, 'நீர் என்மேல் எவ்வளவோ பட்சம் காட்டியிருக்கிறீர்; ஆனால் தயவுசெய்து இந்த ஆலாப்பட்சி யார்? என்பதை எனக்கு அறிவியுங்கள். இல்லை! சொல்லவேண்டாம்! நான் இன்றைக்குக் கோட்டைக்குள் போகக்



கண்ட யுத்தவீரன் அவனாயிருந்தால் அவன் பெயரை அவனுடைய வாயிலிருந்தே நான் அறிந்துகொள்வேன் என்று சத்தியம் பண்ணியிருக்கிறேன். நான் டெவன் மாகாணம் ஜெரேயீண்ட். இன்று காலமே ராஜாத்தி தன்னுடைய தாதியை அவருடைய பெயரைக் கேட்டுவரும்படி அனுப்பினபொழுது கட்டையன் தன் சவுக்கினால் அவளை அடிக்கப் பார்த்தான்; அதற்கு நான் இந்த இளநெஞ்சன் இருக்குமிடத்தைத் தேடி, அவனுடன் யுத்தம்செய்து அவனுடைய பெருமையைத் தாழ்த்தி, அவன் பெயரை அறிவேன் என்று சத்தியம் பண்ணியிருக்கிறேன். அப்படியே நான் ஆயுதமில்லாமல் புறப்பட்டு வந்து உங்களுடைய பட்டணத்தில் ஆயுதங்கள் எடுக்கலாம் என்று எண்ணினேன்; அங்கே எல்லாரும் இந்த ஆலாப்பட்சி பைத்தியம் பிடித்தவர்களாயிருக்கிறார்கள், ஆனபடியால் ராணிக்குச் செய்த இந்த நிந்தைக்காகப் பழிவாங்குகிறதற்கு எனக்கு ஆயுதங்கள் எங்கே கிடைக்கும்? உம்மால் சொல்லக்கூடுமானால் தயவுசெய்து எனக்கு அறிவிக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று சொன்னார்.

'மெய்யாகவே நீர் ஜெரேயீண்ட் தானா? அந்தப் பெயர் மேன்மையான செய்கைகளாலே எல்லாராலும் அறியப்பட்டிருக்கிறது. நீர் என்னிடத்தில் பாலத்தண்டை வந்தபொழுது உம்முடைய பார்வையினால் நீர் ஆர்த்தர் ராஜாவின் சந்நிதானத்தில் இருந்து வந்தவர் என்று நினைத்தேன், நான் உம்மைப் போற்றவில்லை. பலதரமும் உம்முடைய வீரச்செய்கைகளைப்பற்றிப் புகழுகிறதை என் அருமைப் பிள்ளை கேட்டிருக்கிறாள். அவள் இதைக் கேட்கப் பிரியப்பட்டிருந்தாள்; திரும்பவும் சொல்லும்படி கேட்பாள்; மேன்மையான செய்கைகளின் சத்தம் மேன்மையான இருதயங்களுக்கு அவ்வளவு இன்பமாயிருக்கிறது.

என் மகளை விவாகம்பண்ணக் கேட்கும்படி இரண்டுபேர் வந்திருக்கிறார்கள். முதலாவது ஒரு வாலிபன் கேட்டான். அவன் குடிகாரனும் சச்சரவுக்காரனுமாயிருந்தபடியால் நான் வேண்டாமென்று மறுதலித்துவிட்டேன். பிற்பாடு, உன்னுடைய சத்துராதி, ஆலாப்பட்சி என்பவன் இவளைக் கேட்டான்; ஆனால் அவன் மூர்க்கனும் கலகம் பண்ணுகிறவனுமாயிருந்தபடியால் அவனுக்கும் மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அதினால் அவனுடைய பெருமை அதிகப்பட்டது. அவன் ஜனங்களுக்கு என்னைப்பற்றிக் கோள் மூட்டித் திரிந்தான். முற்காலத்தில் நான் ஜனங்களை என்னுடைய வீட்டிற்கு அழைத்து ஆதரவுபண்ணினபடியால் என்னுடைய ஆஸ்தி குறைந்துபோய்விட்டது.

அவன் ஐசுவரியவானாயிருந்தபடியால் என்னுடைய ஜனங்களுக்குக் கைக்கூலி கொடுத்துத் தன்வசமாக்கிக்கொள்ள லேசாயிருந்தது. என்னுடைய மகன் ஈனிட்டின் ஜனனநாளுக்கு முந்தின நாள்,' அவன் கிராமத்து ஜனங்களை எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணும்படி செய்ய, அவர்கள் வந்து என்னுடைய வீட்டைப் பாழாக்கி, சாமான்களைக் கொள்ளையடித்து என்னுடைய ஆளுகையிலிருந்து என்னைத் துரத்திவிட்டார்கள். என்னுடைய சிநேகிதர்கள் என்னை இன்னும் நேசிக்கிறபடியால் அவர்களைப் பயமுறுத்தத் தனக்கு அந்தப் பெரிய புதுக் கோட்டையைக் கட்டிக்கொண்டு என்னை இந்தப் பழைய கோட்டையில் வைத்திருக்கிறான்.

நான் யாதொரு தீங்கும் செய்ய இயலாதவன் என்றபடியால் என்னைக் கொலைசெய்யாமல் விட்டிருக்கிறான் என்று நினைக்கிறேன்.

என்னுடைய வல்லமையைக் காட்டாமல் நான் சாந்தகுணமுடையவனாயிருந்தேன். இதினால் நான் இழிவானவனோ, தைரியமுடையவனோ, ஞானமுடையவனோ, மதிகெட்டவனோ என்பது தெரியவில்லை. இருந்தும் எனக்கு என்ன தீங்குவந்தாலும் நான் மனத்தைரியத்தோடு சகிக்கிறேன் என்பது நிச்சயம் என்று சொன்னார்.

அதற்கு ஜெரேயீண்ட்: 'மெய்யாகவே நீர் நல்நெஞ்சன் என்று அறிகிறேன். நாளைக்குக் குதிரைவீரர் விளையாட்டில் ஆலாப்பட்சியின் பெருமையைத் தாழ்த்துகிறதற்கு எனக்கு ஆயுதங்கள் தாரும்' என்றார்.

அப்படியே ஈனியோல், 'என்னுடைய ஆயுதங்கள் பழையனவும் கறைபிடித்தனவுமாயிருக்கின்றன, ஆனால் என்னுடையது உனக்குரியதாயிருக்கிறது. இந்த விளையாட்டில் அவன் விரும்பிய அம்மாள் அங்கேயிருந்தாலொழிய எவரும் யுத்தம்செய்ய முடியாது. அவர்கள் விளையாடுகிற வயலின் பசும்புல்லின்மேல் இருமரத்துக்கிடையில் ஒரு வெள்ளிக்கோல் வைத்து அதின்மேலே பொன்னால் செய்த ஒரு ஆலாப்பட்சியின் சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. இதுதான் அங்கே அதிக அலங்காரமாய்க் காணப்படும் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் உபகாரம். ஒவ்வொரு யுத்தவீரரும் தாம் தெரிந்துகொண்ட பெண்ணுக்குக் கொடுக்கும்படியாக யுத்தம் செய்வார்கள். இந்த ஆலாப்பட்சி பெரியவனும் பலமுடையவனுமாயிருக்கிறபடியால் தன்னோடிருந்த அம்மாளுக்குக் கொடுக்கும்படி வெற்றி அடைகிறான்; ஆனால் உமக்கு ஒரு அம்மாளுமில்லை, நீர் யுத்தம் செய்யக்கூடாது' என்றார்.



ஜெரேயீண்ட் அவருக்குச் சமீபமாய்ப்போய், 'மேன்மையுள்ள பிரபுவே! உம்முடைய அருமையான மகளுக்காக நான் யுத்தம்செய்ய எனக்கு உத்தரவு தாரும். அவளைப்போல், அலங்காரமான பெண்ணை இதுவரையில் நான் காணவில்லை. நான் விழுந்துபோனால் அதினால் அவளுக்கு ஒரு நிந்தையுமில்லை; நான் வெற்றி அடைந்தால் உண்மையாகவே அவளை விவாகம்பண்ணுவேன்' என்று சொல்லித் தம் ஆவலைக் காட்டினார்.

'எங்களுடைய வீட்டிற்கு மறுபடியும் வாழ்வு வரப்போகிறது' என்று ஈனியோல் சந்தோஷப்பட்டு, ஜெரேயீண்டை அவனுடைய மனைவியிடம் கொண்டுபோய் 'ஒரு மங்கையின் மனம் அவளைப் பெற்ற தாயாருக்கே தெரியும், அவள் படுக்கப்போகுமுன் நீர் போய் அவளிடம் கேட்டு அவளுடைய மனசை அறிந்துகொள்ளும்' என்று அந்த இரக்கமுள்ள பிரபு சொன்னார். அவள் சிரித்து சந்தோஷப்பட்டு ஈனிட் தன் படுக்கைக்குப் போகிறதைக் கண்டு அவளை முத்தமிட்டு அவளைப்பற்றி நடந்த சம்பாஷணை முழுவதையும் சொன்னாள். ஈனிட் வெட்கத்தினால் தலைகுனிந்து ஒரு மறுமொழியும் கொடாமலே படுக்கைக்குப் போனாள்.

அவன் அன்று இரவு முழுதும் ஜெரேயீண்டைப்பற்றியும் தன்னுடைய தகாத நிலைமையைப்பற்றியும் நினைத்துக்கொண்டிருந்தான்.

பொழுது விடிகிறதற்குள் அவள் தன் தாயை எழுப்பி இருவரும் கை கோத்துக்கொண்டு குதிரைவீரர் விளையாடும் இடத்துக்குப் போனார்கள். அவர்கள் போய் வயல் வெளியில் காத்து நிற்கிறதை ஜெரேயீண்ட் கண்டு 'இது உபகாரமென்றால் நான் வல்லமையுடையவன் தான்' என்று எண்ணினான்.

ஈனியோல் கறைபிடித்த ஆயுதங்கள் தரித்தவராயிருந்தாலும் அவருடைய பிரபுத்தனம் எல்லாராலும் அறியக்கூடியதாயிருந்தது.

அநேக யுத்தவீரரும் துரைசானிகளும் பட்டணத்து ஜனங்களும் வயல் வெளியைச் சுற்றியிருந்தார்கள்.

அப்பொழுது இருமரத்தை நாட்டி, அதன்மேல் வெள்ளிக்கோ ஒன்றை வைத்து, அதன்மேலே பொன்னால் செய்யப்பட்ட ஒரு ஆலாப்பட்சியின் சுரூபத்தை எல்லாரும் காணும்படி வைத்தார்கள்.

(இன்னும் வரும்.)



## THE KING'S CUP BEARER. *(Cont.)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

### II. அத்தியாயம்

ராஜ போஜனசாலை. (தொடர்ச்சி.)

நெகேமியா ஊழியஞ் செய்துவந்த ஆர்ட்டாஸர்க்ஸஸ் (Artaxerxes) அரசன், பாரஸீக ராஜாக்களிலெல்லாம் மிகவும் சாதுவான குணமுடையவரென்று எண்ணப்பட்டு வந்தார். இவர் செய்த மிகவும் கொரேமான வதையை நாம் கேள்விப்படும்போதே திகிலடைவோம். என்னவென்றால், தான் பட்டத்திற்கு வந்தபோது; தன் தகப்பனுடைய மரணத்திற்குக் காரணமாயிருந்த மித்திரிடேற்ஸ் (Mithridates) என்ற பேர்பெற்ற ஒரு மந்திரி தம்முடைய அரமனையிலிருக்கிறதாகக் கண்டார். இந்த மனிதனை மிகவும் பயங்கரமும் குரூரமுமான விதமாய்க் கொலைசெய்ய நினைத்து, அவனை ஒரு தட்டையான பலகையின்மேல் மல்லாக்கப்போட்டு, நாலு மூலைகளிலும் பலமாய் இழுத்துக் கட்டுவித்து அதற்குமேல், முகம் கைகால் இவைகள் மாத்திரம் தெரியத்தக்கதாகத் துவாரங்கள் செய்யப்பட்ட இன்னொரு பலகையை வைத்து, அவனுடைய முகத்தில் தேனைத் தடவி அகோர வெயிலில் போடுவித்தான். நூற்றுக்கணக்கான ஈக்கள் அவனுடைய முகத்தில் உட்கார்ந்தன. மிகவும் வேதனையோடே அநேகநாள் இருந்தான். சாப்பாடு மாத்திரம் நேரத்திற்கு நேரம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவன் அசையவுமில்லை, கட்டவிழ்க்கப்படவுமில்லை, சுமார் இரண்டு வாரங்களுக்குமேல் மரணமானது, இந்த உபத்திரவா உபத்திரவங்களிலிருந்து அவனை விடுதலையாக்கிற்று.



இப்படித் தம்முடைய பிரஜைகளில் ஒருவனைக் குரூரவதை செய்த இந்த ராஜாவினிடத்தில் வந்து நெகேமியா ஒரு விண்ணப்பஞ் செய்யவேண்டியவராயிருந்தார். ராஜாவோடு பேசுவதற்குப் பயந்தார் என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. அவரை ஆயத்தப்படுத்தும்படியாக அநேக மாதங்களாக ஜெபம்பண்ணவேண்டியது அவசியமென்று உணர்ந்தார். கிஸ்லு (டிசெம்பர்) மாதத்தில் ஆலோசிக்கத் தொடங்கினார். நிசான் (ஏப்பிரல்) மாதம் வரையில் ராஜாவோடு பேசத் துணியவில்லை.

அன்று காலையில் தம்முடைய அறையிலிருந்து புறப்படுகிறதற்கு முன்னே முழங்காற்படியிட்டு, தம்மையும் தம்முடைய காரியாதிகளையும் கர்த்தருடைய கரத்தில் ஒப்புவித்தார். (நெகே. 1. 11.)

பிற்பாடு, ரப்சாகே உத்தியோகமுறையாய் உடுத்திக்கொண்டு அரமனையிலுள்ள ராஜாங்கசாலைக்குப் போகிறார். இந்த மகத்துவமான சாலைகளின் மத்தியில் ராஜாவின் கொலுமண்டபசாலை மிக அழகாயும் கண்ணைக் கவரத்தக்கதாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. அழிந்து கிடக்கிற சூசான் பட்டணத்தைப் போய்ப் பார்ப்போமானால் அதின் மாட்சிமை இன்னும் விளங்கும். இதின் மத்தியில் இருநூறு அடி சதுரமுள்ள தூண் நிறைந்த பெரிய சாலை ஒன்றுண்டு. இந்த மண்டபத்தில் ஒவ்வொன்றும் அறுபது அடி உயரமுள்ள முப்பத்தாறுக்குக் குறையாத தூண்கள் ஆறு வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டு நிற்கின்றன. இந்தப் பெரிய மண்டபத்தைச் சுற்றிலும் அழகான விருந்துசாலைகள் மற்ற ராஜாக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மிகவும் உஷ்ணமான காலத்திலும் அங்கே குளிர்ச்சியாயிருக்கும்படி அவ்வளவு கவனமாய் எல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. அரமனையின் உஷ்ணமான தென்பாகத்தில் அறைகளில்லை. மேல்பாகத்தில் காலையில் கூடும் விருந்துசாலைகளும், கீழ்ப்பாகத்தில் சாயங்கால வேளைகளில் கூடும் விருந்துசாலைகளுமுண்டு. இவ்விதமாய் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதால், அரமனைக்குள்ளே இருப்பவர்களுக்குச் சூரியகதிரின் காங்கை தெரியாது. அப்பால், குளிர்ச்சியான வடபாகத்தில் சிங்காரமான சிம்மாசன மண்டபம் உண்டு. அதில் ராஜா வீற்றிருப்பார். அதின் வழியாய்ப் பட்டாளம் முழுவதும் அல்லது ராஜசபையின் ஏராளமான பேர் யாதொரு மயக்கமுமின்றி அணியணியாய்ப் போகக்கூடும். அவர்கள் வரவும் போகவும் கஷ்டமில்லாதபடி கற்படிகள் எதிரெதிராய் வைக்கப்பட்டு, குதிரைவீரர் இலகுவில் ஏறி இறங்கத்தக்கதாக, அவைகள் நாலு அங்குல உயரமும் பதினாலு அடி அகலமுமாயிருக்கும்.

இப்பேர்ப்பட்ட மகத்துவமான அரமனை அறைகளொன்றில், ரப்சாகே, பானபாத்திரத்தலைவன் பிரவேசிக்கிறார். அந்த அறை சிவப்பு, வெள்ளை, நீலம் ஆகிய பல வர்ணங்களுள்ள சலவைக் கற்களினால் தளம் போடப்பட்டிருந்தது. தொங்குதிரைகள் வெள்ளையும் நீலமுமானவைகள். இந்நிறங்கள் தான் பாரசீக ராஜ நிறங்கள், இந்தத் திரைகள் ஜன்னல்களுக்குச் சரியாய் செய்யப்பட்டு தூண்களிலிருந்து பூமாலைகள்போல அழகாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். காலையில் பனி மூடிய மலைகளிலிருந்துவரும் குளிர்ந்த காற்றும், எலுமிச்சை கிச்சிலிப்பழங்களின் வாசனையும், அரமனையும் பூங்காவனத்திலுள்ள சூசான் லீலி பாரசீக ரோஜா புஷ்பங்களின் வாசனையும் கலந்து சுகந்த வாசனையாய் வீசிக்கொண்டிருக்கும். அங்கே ராஜ போஜன மேஜை தங்கத் தட்டுகளாலும் சித்திரப் பாத்திரங்களாலும் பரப்பப்பட்டும், உலகத்திலுள்ள எல்லாவித மதுரமான பதார்த்தங்களாலும் நிரப்பப்பட்டும் இருந்தது.

அங்கே வளர்ந்த அழகிய ஒரு ராஜா இருக்கிறார். அவருக்கு ஒரு விநோதக்குறை உண்டு. அவர் நிற்கும்போது முழங்காலைத் தொடும்படியாய் அவருடைய கை அவ்வளவு அதிக நீளமாயிருக்கும். அதினால்தான் அவருக்கு நீள்கையான், நீள்கரத்தான் என்று வசைப் பேர் வழங்குகிறது.

தளர்ந்த அகல கைத்தொங்கலுள்ள இந்திர நீலவர்ணப்பட்டுச் சட்டை அணிந்து, அகலமான பொற்கச்சை இடையில் கட்டினவராயிருக்கிறார். அதற்கு அடியில் இந்திர நீலமும் வெள்ளையும் கலந்த உடுப்பும், பிரகாசமான சிவப்புச் சல்லடமுமிருந்தன.

நீண்ட கூர்மையான விரல்களுள்ள மஞ்சள் ஜோடு தரித்திருக்கிறார். அவருக்கு அநேக விதமான ஆபரணங்களுமுண்டு: காதில் தங்கக் காதணிகளும், கழுத்தில் தங்கச் சங்கிலியும், கையில் தங்கக் கடகங்களுமுண்டு. நீண்ட பொற்செங்கோல் பிடித்தவராய் இருக்கிறார். அந்தச் செங்கோலுக்கு ஒரு தங்கப் பந்துக் கிரீடமுமுண்டு.

இந்த ராஜா நீண்டுயர்ந்த முதுகுள்ள நாற்காலியாகிய சிம்மாசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். அதற்கு முன்னால் ஒரு பாதபீடமுண்டு. சிம்மாசனம் சிங்கபாதங்கள்மேலும், பாதபீடம் காளைப் பாதங்கள் மேலும் நிற்கின்றன. எல்லாம் பொன்னால் செய்தவைகளே. ராஜாவின் பக்கத்தில் டமாஸ்பியா (Damaspia) என்ற ராணியையும் பார்க்கலாம். ராணியைப்பற்றிய சரித்திரம் அதிகமாய்த் தெரியாது. ஆனால் ராஜா இறந்த தினமே ராணியும் இறந்துபோனது மாத்திரம் தெரியும். ராஜாவுக்கும் ராணிக்கும் பின்னால், விசிறி பிடிக்கிறவர்களும், ஈ விரட்டுகிறவர்களும், சிறு குடை பிடிக்கிறவர்களும் மிகவும்



கவனமாய்ப் பணிவிடை செய்துகொண்டு நிற்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் அரமனையிலுள்ள மற்றப் பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்.

தினசரி பதினையாயிரம் ஜனங்கள் அரமனையில் ராஜாவிடம் சாப்பிட்டார்கள். ஆனால் ராஜா எப்பொழுதும் தனிமையாகவே சாப்பிடுவார். ராணியும் ராஜ பிள்ளைகளும் ராஜாவோடு மேஜையில் உட்காருவது மிகவும் அபூர்வமாயிருந்தது. ஆகையினாலேதான், நெகேமியா இந்தச் சங்கதியைச் சொல்லும்போது ராணியும் ராஜாவின் பக்கத்தில் இருந்ததாகச் சொல்லுகிறார். இந்தச் சம்பவமானது ராஜா நல்ல குணமாயிருந்தாரென்றும், ஆகையால் தம்முடைய வேண்டுதலை அநேகமாய்க் கேட்பார் என்றும் ரூபகாரப்படுத்துவதினால், அந்தச் சமயத்தை வாழ்த்துகிறாராக்கும். ராஜாவுக்கு மிகவும் நெருங்கிய இனத்தாராயிருந்தாலொழிய ராஜாவோடு மேஜையில் உட்காரமாட்டார்கள். அதிக சிலாக்கியத்தைப் பெற்ற அரமனை உத்தியோகஸ்தரும், தரையிலுட்கார்ந்து, ராஜாவின் பாதபடியில் தான் சாப்பிடவேண்டும்.

விருந்து ஆரம்பித்துவிட்டது ராஜாவுக்குப் பானங்கொடுக்க ரப்சாகேக்கு நேரம் வந்துவிட்டது. ராஜா பார்த்துக்கொண்டிருக்க, மேஜையிலிருந்து பொற்கிண்ணத்தை எடுத்து, ராஜாவின் உபயோகத்திற்கென்று மாத்திரம் வைத்திருக்கும் விசேஷித்த அருமையான எல்பன் (Helbon) திராட்சரசத்தால் நிரப்புகிறார். இந்தத் திராட்சரசம் லீபனோனில் தமஸ்குவுக்குச் சமீபமான எல்பன் என்ற இடத்தில் மிகவும் அருமையாய் வளர்க்கப்பட்ட செடிகளிலுள்ள திராட்சப்பழங்களிலிருந்து எடுத்தது. நெகேமியா கொஞ்ச ரசத்தைத் தன் இடதுகையில்விட்டு ருசித்தபிறகு, அந்தப் பாத்திரத்தைத் தன் விரல்களின் நடுவே லேசாய்ப் பிடித்து மிக அலங்காரமாய் மகா ராஜாவுக்குக் கொடுக்கிறார்.

S. A. Vedanayagam.

(இன்னும் வரும்.)

## A HINDU'S IMPRESSIONS OF CHRISTIANITY

## கிறிஸ்தவ சமயத்திலும் கிறிஸ்தவர்களிடத்திலும் நான் கண்ட நுட்பங்கள்

1. கிறிஸ்தவ சமயம் ஒரு புறமாயும், ஏனைய சமயங்களெல்லாம் ஒரு புறமாயும் நின்று யுத்தஞ்செய்து வருவதுபோலவும், அந்த யுத்தம்



நடந்துவருமளவில் கிறிஸ்தவ சமயமே வெற்றியடைந்துகொண்டு வருவதாயு முணர்கிறேன். அம்மட்டுமல்ல, சில வருஷங்களுக்குள் கிறிஸ்தவ சமயம் இப்பொழுதைவிட மிகப் பிரபல்யத்துக்கு வந்துவிடுமென்றும் நம்புகிறேன்.

2. சுமார் பத்துப் பதினைந்து வருஷங்களுக்குமுன் வரையிலும் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவப்பிரசங்கிமார் பாதிரிமார்களையும் ஏனைய சமயத்தார்கள் வெகுவாய் இகழவும் வெறுக்கவும் கண்டிருக்கிறேன்.

3. வரவர அவ்வுணர்ச்சி குறைந்து, சகோதரத்துவங் கொண்டாடிவர ஆரம்பித்திருக்கிறது.

4. இப்புது வுணர்ச்சி யேற்படுவதற்குக் காரணம், கிறிஸ்தவர்களிடத்திலே காணும், தன்னை வெறுத்தல், பொறுமை, சமாதானம், ஊக்கம், தேவ ஊழியம், பரோபகாரம் முதலிய குணங்கள் தான் என்று நிச்சயிக்கிறேன்.

5. ஏனைய மதங்களும், மதஸ்தர்களும், சகோதரம்போலுள்ள மற்ற மதஸ்தர்களை அநேக விஷயங்களில் புறக்கணித்துவரவும் இக்கிறிஸ்தவ மதமும், கிறிஸ்தவர்களும், அப்படிப் புறக்கணியாமல் சகலரையுந் தழுவிக்கொண்டு, தன்னை நாளுக்குநாள் பலப்படுத்திக் கொள்வதாக வறிகிறேன்.

6. கிறிஸ்தவர்களிடம் சில பெருங்குணங்களிருப்பதாய் 3-வது பாராவில் வெகுவாய்ப் புகழ்ந்துவிட்டதாய் நீங்கள் நினைக்கவேண்டாம். தாங்களே கண்கூடாகப் பார்த்து அறிந்துகொள்ளலாம்.



7. இந்தியா, இப்பொழுது அடைந்திருக்கும், இவ்வளவு நாகரீகங்கூடக் கிறிஸ்தவ சகோதரர்களின் பரோபகார குணம்பற்றியே யென்பேன். இது உபசார வார்த்தையல்ல, ஆராயாத அபிப்பிராயமுமல்ல.

8. சாதாரண குக்கிராமங்கள்முதல் பெரிய பட்டணங்கள்வரையிலும் எங்குபோயினும், கிறிஸ்தவ தேவாலயங்களும், ஆண் பெண், இரு பாலார்க்குங் கல்விச்சாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். போதாக் குறைக்கு வீடுகள்தோறும் போய் வெளியேறாத பெண்களுக்குக் கல்வி கற்பித்துவரும் சாதனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

9. மத்தியில் வெகுகாலமாக மட்கிப்போயிருந்த நம் பெண்களின் அஞ்ஞானத்தைக் கிறிஸ்தவர்கள் வெகு சிரமப்பட்டு ஓட்டிவிட்டார்கள். ஓட்டியும் வருகிறார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் போட்டதை வெறுத்துப்போய், இதர மதஸ்தர்களும் தனித்தனியே, பெண் கல்விச்சாலைகளும், புருஷர்களுக்கென்று ஹிந்து காலேஜ், அலிகர் காலேஜ், தபிஸ்கானே இஸ்லாம், இன்னும் இவைபோன்ற பல எத்தனங்களும் செய்ய ஆரம்பித்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் கிறிஸ்தவ சமயமும், கிறிஸ்தவர்களும் இந்தியாவுக்கு ஒரு வழிகாட்டியாயிருப்பதாய்த் தீர்மானிக்கிறேன்.

10. இம்மட்டுமல்ல, தங்கள் மதமாகவேயிருந்தும், ஜாதிவித்தியாசத்தால் தங்களின் கீழ்ப்பட்ட ஜாதியாரைக் கொடுமையாயும் கேவலமாயும், நடத்தியும், தீண்டாமலுமிருக்க, அவர்கள் சகலரையும். சகோதரபாந்தத்துவமாய்க் கொண்டு நடத்துகிறார்கள்.

11. கிறிஸ்தவர்களின் சகோதரபாந்தத்துவ உணர்ச்சியும் மேற்கூறிய செய்கையுமே, மற்ற மதஸ்தர்களுக்குங்கூட 'ஜாதிவித்தியாசம் கூடாது' என்னும் புது உணர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

12. அல்லாமலும், தாழ்ந்த வகுப்பு என்று கழிக்கப்பட்ட ஜாதியார் இக்காலம் கிறிஸ்தவர்களாகி, மிஷன் ஆதரவில் அல்லது சொந்த திரவியத்தில் பெரும் பரீக்ஷைகளில் தேறித் தக்க உத்தியோகங்களை வகித்துவருங்காலமாக சர்க்காரில் ஏற்பட்டுவிட்டபடியாலும், ஆபீஸில் வணங்குவதும், வீட்டிற் புறக்கணிப்பதுமாகவுள்ள ஒன்றுக்கொன்று மாறுபட்ட செய்கை செய்யமுடியாமற்போயிற்று.

13. கிறிஸ்தவர்களுக்கு, அவர்களின் மதபோதகர்களால், 'எவரையும், எதையும் அற்பமென்று தள்ளிவிடாதேயுங்கள் என்று போதிக்கப்பட்டும் அடிக்கடி ஞாபகப்படுத்தப்பட்டும் வருகிறது.

14. ஜாதியிலுயர்ந்தவர்களுக்குத் தான் கடவுள் அறிவைக் கொடுத்திருப்பாரென்று ஒருவருமே சொல்லிக்கொள்ள முடியாது.

15. அதுபோல், கிறிஸ்தவர்கள் ஜாதியின் தாழ்ந்தவர்களைக் கேவலமாய் நடத்தாமல், அவர்களை அன்பும், ஆதரவுமாய் நடத்தி, அவர்கள், சுத்தமாயிருக்கவும், மரியாதையாய்ப் பேசவும், உண்மையாய் நடக்கவும், கடவுளிடத்தே அந்தரங்கமாய் வழிபடவுமான மார்க்கங்களைக் கற்பித்துத் திருத்திவிடுகிறார்கள். இதனால், சில வருஷங்களுக்குள்ளாக அவர்கள் ஆச்சரியப்படத்தக்க பெரிய மாறுதல்களை அடைந்துகொள்ளுகிறார்கள். கிறிஸ்தவ சமயம் நாளுக்குநாள் பிரபல்யமாய் வருவதற்கு இது வொரு காரணமென்று உணர்கிறேன்.

16. தூஷணையான பேச்சுகள், மரியாதைக்குறைவான நடபடிக்கைகள் முதலியன அறவே ஒழிக்கப்படவேணுமென்று அடிக்கடி கற்பிக்கப்பட்டு மேற்பார்க்கப்பட்டும் சீர்திருத்தப்பட்டும் வருகின்றன.

17. காலந் தவறாதிருக்கவும், சுறுசுறுப்பாயு மிருக்கவேணுமென்று அடிக்கடி போதிக்கப்படுவதால், கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் தினப்படியுள்ள காலங்களின் பெரும் பாகத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு வீட்டுவேலையோ ஆபீஸ் வேலையோ போக, மிகுந்த நேரத்தைச் சாவகாசமாய்க் காண்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட நேரங்களில் இளைப்பாறவோ, தையல்வேலை, சங்கீதம் முதலியவைகள் செய்யவோ, மக்களைப் பயிற்றுவிக்கவோ, தெய்வ வழிபாடுகளோ செய்கிறார்கள்.

18. ஏனைய மதஸ்தர்களுக்குக் காலத்தை மீதப்படுத்தும் வழிகள் அவர்கள் போதகர்களாற் சொல்லப்படுவதில்லை, தாங்களாயு முணர்வதில்லை, சாவகாசமுமவர்களுக் கிருப்பதேயில்லை.

19. தவிர கிறிஸ்தவர்களுக்குச் செட்டு அதாவது வருவாய்க்குத் தக்க செலவு. அதின் மீதமும் பிடிக்கும் மார்க்கம் எளிதில் கற்பிக்கப்பட்டு வருகிறது. அதனால் அவர்கள் மாதம் ஒன்றுக்கு 7 ரூபாயானாலும் 70 அல்லது 700 ரூபாய் சம்பளமானாலும் அதற்குத் தக்கபடி, செட்டாயும், சிருஞ்சிறப்பாயும், மனோவல்லாசமாயுமிருந்துகொள்ளத் திட்டப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அதன்படி நடந்தும் வருகிறார்கள்.

20. ஆடை ஆபரணங்களில் பணத்தை முடக்கும் பைத்தியம், அங்கு பைத்தியம் என்றே போதிக்கப்பட்டும், அது உண்மையேயென்று உணர்ந்து சகலராலும் புறக்கணிக்கப்பட்டுமிருக்கிறது. இதனால், அவர்கள் அவரவர்கள் சக்திக்குத்தக்கபடி இன்றியமையாத இரண்டோர் நகைகளை யணிவதிலும், ‘கந்தையானாலுங் கசக்கியுடு’ என்பதிற்கேற்ப அவரவர்கள் ஸ்திதிக்குத் தக்க ஆடைகளைச் சுத்தமாய் வைத்து உடுத்திக்கொள்ளவும் தெரிந்திருக்கிறார்கள்.



21. கிறிஸ்தவர்களுக்கு, முக்கியமாய் இந்திய கிறிஸ்தவர்களுக்கு, ஆங்கிலேய துரைமக்களிடமும், பிஷப், பாதிரிமார்களிடமும் நெருங்கிய பழக்கங்களிருக்கிறபடியால், அவர்கள் பழக்கவழக்கங்களையும், போதனைகளையும் கேட்டாராய்ந்து, இத்தேசத்துக்கும், தங்கள் மானுக்குந் தக்கபடி தங்களை நடையுடை பாவனை நாகரீகத்தில் திருத்திக் கொண்டு போகிறார்கள்.

(இன்னும் வரும்.)

நெல்லை. உ. ப. உமையொருபாகன்.

ஆலந்தூர், பரங்கிமலை.

## WISE SAYINGS

## நீதிமொழிகள்

1. ஆயுளின் அரைநிமிஷத்தையும் வீணாக்க வியலாது.
2. தேவனை மகிமைப்படுத்த தேவ ஊழியமே நேர்ந்தது.
3. மனசை நாம் சேராக்கினால் வாக்கும் காயமும் தாமே சேராகும்.
4. நமக்கு அழுக்காகவும் அருவருப்பாகவும் காணும் அநேகத்தை ஆண்டவர் பிரயோகிக்கிறார்.
5. ஆண்டவர் ஆஞ்ஞை எதுவும் அற்பமாகாது.
6. தேவ ஆஞ்ஞையை விட்டொரு தேவ ஊழியமில்லை.
7. அற்பத்தையும் ஆண்டவர் காட்டிய வழியே சொன்னதும் செய்ததும் ஆசீர்வாதம் அடையும்.

## PRIZE COMPETITION—WOMEN OF THE BIBLE

## ஸ்திரீகளின் வியாசங்களுக்கு வெகுமதி

வேதாகமத்தில் சொல்லியிருக்கும் ஸ்திரீகளில் கீழே காட்டிய எட்டுப்பேர்களில் எவராவது ஒருவரைப்பற்றி விசேஷவிதமாய் வியாசம் எழுதும் முதல் இரண்டு மாதர்களுக்கு முறையே ரூபா அஞ்சும் இரண்டுமாக (ரூ. 5, ரூ. 2) வெகுமதி அளிக்கப்படும்.

ஸ்திரீகள் எழுதிய வியாசங்களை மேமீ 1உக்குள்ளாக மிஸ் இங்கிலிஸ், மாதர்போதினிப் பத்திராதிபர், ஈரோடு (Miss Inglis London Mission, Erode) என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்,

அனுப்பிய வியாசங்களில் பரிசுபெறும் முதலிரண்டை இரண்டு மாசங்களில் 'மாதர்போதினி' யில் பிரசுரஞ் செய்யலாகும். பத்திராதிபருக்கு இஷ்டமானால் பரிசுபெறாத வியாசங்களையும் ஷை பத்திரிகையில் வெளிப்படுத்தலாகும்.

வியாசம் வரைந்த ஸ்திரீகள் வியாசத்தின் கடைசியில் தங்கள் கையொப்பம் 'முழுவிலாசம் இவற்றைத் தெளிவாய்க் காட்டுவதோடு தாங்கள் இருக்கும் ஊரிலுள்ள பெரிய மனுஷர் ஒருவருடைய கையொப்பத்தையும் வாங்கி அனுப்பவேண்டும்.

வியாசங்களுக்கு விஷயமான வேதாகம ஸ்திரீகள் ;—

1. நல்ல மருமகள். ரூத்.
2. புத்தியில்லாத தாய். ரெபெக்காள்.
3. தைரியமுள்ள ராஜாத்தி. எஸ்தர்.
4. தன் புருஷனைக் கெடுத்த பெண்ஜாதி. யேசபேல்.
5. தன்னால் இயன்றமட்டும் செய்தவள். மரியாள்.
6. பற்பல வேலைகளைச் செய்வதில் வருத்தமடைந்திருந்தவள். மார்த்தாள்.
7. தருமமுள்ள கைம்பெண். தோர்காள்.
8. குழந்தையில்லாத மனைவி. அன்னாள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ஸ்ரீ மார்ச்சுமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | லூ. | 3. | 15—29 | 12 | வி. | மத். | 3. | 13-17; | 22 | ஞா. | மத். | 8. | 1—13 |
| 2 | தி. | „ | 4. | 1—16 | | | | 4. | 1—11 | 23 | தி. | „ | 8. | 14—27 |
| 3 | செ. | „ | 4. | 17—31 | 13 | வெ. | „ | 4. | 12—25 | 24 | செ. | „ | 8. | 28-34; |
| 4 | பு. | „ | 5. | 1—12 | 14 | ச. | „ | 5. | 1—16 | | | | 9. | 1— 8 |
| 5 | வி. | „ | 5. | 13—26 | 15 | ஞா. | „ | 5 | 17—26 | 25 | பு. | „ | 9. | 9—26 |
| 6 | வெ. | „ | 6. | 1—10 | 16 | தி. | „ | 5 | 27—37 | 26 | வி. | „ | 9. | 27—38 |
| 7 | ச. | „ | 6. | 11—18 | 17 | செ. | „ | 5. | 38—48 | 27 | வெ. | „ | 10. | 1—15 |
| 8 | ஞா. | மத். | 1. | 18—25 | 18 | பு. | „ | 6 | 1—15 | 28 | ச. | „ | 10 | 16—27 |
| 9 | தி. | „ | 2. | 1—11 | 19 | வி. | „ | 6 | 16—31 | 29 | ஞா. | „ | 10. | 28—42 |
| 10 | செ. | „ | 2. | 12—23 | 20 | வெ. | „ | 7. | 1—14 | 30 | தி. | „ | 11. | 1—15 |
| 11 | பு. | „ | 3. | 1—12 | 21 | ச. | „ | 7. | 15—30 | 31 | செ. | „ | 11. | 16—30 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

# மாதர் போதினி

No. 196 ஏப்பிரல் 1914 No. 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 4 - APR 1914



## THE LITTLE MOTHER OF JAPAN

## ஜப்பானியச் சிறுதாய் ஒருத்தி

ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் நடந்த ஒரு சம்பவம்

முன்னே ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் பிரமாதமாக யுத்தம நடந்துகொண்டிருக்கவில்லையா? அப்போது ஒருநாள் சாயந்திரம்

VOL. XXIX.

நானும் டாசனும் ஸ்டீவனும் எல்லாருமாகக் குதிரைமேலேறிக்கொண்டு மன்சூரியாவின் குளிர்ந்த மைதானத்தில் பிரயாணம் போனோம். அந்த மைதானத்தில் ஏகமாய்க் கூடியிருந்த றஷ்ய சேனையையும், இங்குமங்கும் போய் நேருக்குநேர் முட்டிக்கொள்ளாமல் தந்திரமாய்த் தவிர்க்கும் ஜப்பானிய சேனையையும் சாதாரணமாய்க் காணலாம். இவர்கள் அடிப்பதும் அவர்கள் தாங்கிநின்று எதிர்ப்பதுமாக யுத்தம் வெகுநாள் நடந்ததல்லவா? நாங்கள் கடந்து போய்க்கொண்டிருந்த அதே மைதானத்தில் நடந்த சண்டைகளில் ஐம்பதினாயிரம் ஜப்பானிய வாலிபர் உயிரை இழந்திருக்கிறார்கள் என்று நாங்கள் பேசிக்கொண்டு விரோதிகள் நாசமாக்கியிருந்த விளைச்சல் நிலங்களின் வழியே குதிரையை விட்டோம்.

இருந்தாற்போலிருந்து எதையோ கண்டு எங்கள் குதிரைகள் மிரண்டன. சுற்றிலும் முற்றிலும் பார்க்க, பக்கத்திலே முந்தினநாள் பீரங்கிகள் குவித்திருந்த மண்மேட்டுக்குப் பின்னாலே ஏதோ இரண்டு கை காற்றுக்கு அசைவதுபோல் காணப்பட்டது. அப்புறமும் பார்க்க, அது ஒரு ஜப்பானிய பெண்பிள்ளை!

அவள் மன்சூரியா நாட்டுக் குடியானவர்கள் போடுகிற கட்டைச் செருப்புப் போட்டிருந்தாள்; அதுவும் மண் மூடிக் கிடந்தது. துணியோ வெகு கேவலம். ஆனால் அத்தனை அவஸ்தையிலும் அவள் நல்ல உயர்ந்த குடியிற் பிறந்தவள் என்பது தெரியாமற்போகவில்லை. அவளது நீண்ட தலையையும், பிரகாசமான கண்ணையும், காட்டுக் கசுமாலத்திலிருந்தும் மேனியின் மிருதுத்தன்மை மறையாதிருப்பதையும், பார்த்தால் அவளைக் கேவலம் காட்டாள் என்று சொல்ல முடியாது: நல்ல நாகரிகம் அடைந்தவள் என்றே தேர்ந்தோம். வயசு நாற்பது நாற்பத்தைந்து இருக்கும்; ஆனால் அவளை நான் ஒற்றைக்கையில் தூக்கிவிடுவேன்போலிருந்தது; அவள் அவ்வளவு ஒல்லியாக மெலிந்து இருந்தாள்.

இதற்குள்ளாக டாசன் றஷ்ய பாஷையையும் ஜப்பானிய பாஷையையுங் கலந்துகொண்டு அவளை, ‘யார்? எவர்?’ என்று கேட்க வாயெடுத்தார். அதற்குள் அவள், ‘நீங்கள் இங்கிலிஷ்காரரா? றஷ்ய பாசறைக்குப் போகிறவர்களா?’ என்று இங்கிலிஷில் தெளிவாகக் கேட்டாள். நாங்கள் அதிசயப்பட்டு எங்கள் பாஷையைப் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்து மரியாதைக்காகத் தொப்பியை எடுத்துவிட்டு ‘ஆமாம், நாங்கள் இங்கிலிஷ் வர்த்தமானப் பத்திரிகை நிருபர். இப்போது சேனாபதியின் பிரதான ஸ்தலத்துக்குத் திரும்பிப் போகிறோம்’ என்று சொல்லிவிட்டு ‘எங்களாலே உனக்கு ஆகக்கூடியது ஏதாவது உண்டா?’ என்று கேட்டோம்.



அதற்கு அவள், ‘நான் நிப்பான் நாட்டவள்; அதோ அங்கிருந்து வருகிறேன்’ என்று சொல்லிக் கையை நீட்டி ஜப்பானியர் எழுப்பும் துப்பாக்கி வேட்டிலிருந்து கிளம்பிய புகைச்சுழல் படர்ந்த இடத்தைச் சுட்டிக்காட்டிப் பின்னும் ‘றஷ்ய அணிகளுக்குள்ளே போக வேணுமானால் பாஸ்போர்ட் அவசியம் என்கிறார்களே. என் மக்கள் இரண்டுபேரும் சண்டையில் காயப்பட்டு றஷ்யரிடம் கைதிகளாய் இருக்கிறார்கள். அவர்களண்டை நான் போகவேண்டும்; காத்திருக்க முடியாது. உங்கள் கண்யத்திற்கு பங்கம் வாராதபடி உங்களாலான உபகாரம் செய்யவேண்டும்; உங்களைப் பிரார்த்திக்கிறேன்’ என்றாள்.

எங்களுக்கோ மிகுந்த யோசனையுண்டாயிற்று. அந்தக் காலத்தில் வேவுகாரர் அநேகம்; அதிலும் ஜப்பானியர்களில் வெகு சாமர்த்திய வேவுகாரர் இருப்பதாகச் சொல்வார்கள். நாங்களோ எந்தவித அந்நியரையும் றஷ்யர்களுடைய இருப்பிடங்களுக்கு இட்டுக்கொண்டு வரலாகாது என்பது ஏற்பட்டிருக்கிறது. அதை மீறிக்கொண்டு போவதானால் அந்த அந்நியன் றஷ்ய ராஜவிசுவாசம் உள்ளவன்தான் என்பதை ஸ்தாபிக்கவேண்டும். அப்போதைய றஷ்ய தளகர்த்தருள் கௌரோபாட்கின் ஒருவர் தவிர மற்றவர்கள் எல்லாம் பழைய காலத்துச் சந்தேகப் பிடுங்கல்கள்; நாம் றஷ்ய ராஜவிசுவாசி என்று என்னதான் சொன்னாலும் நம்பமாட்டாதவர்கள்.

இதையெண்ணி என்கூட இருந்த ஸ்டீவன் குதிரையைவிட்டிறங்கி, ‘அம்மா! உங்களை எங்களுக்குத் தெரியாது. நீங்கள் என்னவோ நிஜத்தைத்தான் சொல்லுகிறீர்கள். ஆனால் அந்த றஷ்ய சேனாபதிகளுக்கு இதை ரூபிக்க என்னாலாகாது. என்கூடவே வேணுமானால் வாருங்கள்; ஆனால் அவர்கள் உங்களைக் கண்டவுடனே பிடித்துக்கொள்வார்கள். அப்புறம் நீங்கள் உளவுதெரியவந்த ஜப்பான் தேசத்தவள் அல்ல என்பதை அறிவதற்காக உங்களை என்னென்னவோ செய்து அவமானப்படுத்துவார்கள். இதையெல்லாம் கடந்து உண்மையை ஸ்தாபிக்க உங்களால் முடியுமா?’ என்றார்.

அவள் உடம்பு இளைத்தும், உடுப்பு விகாரமாக இருந்தும் அவளிடத்தில், காம்பீர தோரணையிருந்தது. டாசனுக்கு அவள் என்ன சொன்னாள்; ‘ஐயா! நான் அந்தப் பழைய ஜப்பான் தேசத்தவளல்ல; இந்தக்காலத்து ஸ்திரீயாக்கும். சொன்னால் சொன்னபடியிருக்கும். வேணுமானால் நிதர்சனமாய்க் காட்டுகிறேன். அதோ அங்கே றஷ்யரிடத்தில் கைதிகளாய் அவஸ்தைப்படும் மக்களுக்கு இரங்கி அவர்களுக்கு ஒத்தாசைசெய்ய ஆசைப்படும் தாய் நான். என்னைச் சேனாபதியிடம் அழைத்துக்கொண்டு போங்கள், அவருக்கு நான் சொல்லிக்

கொள்ளுகிறேன். இந்த உபகாரம் பண்ணுவீர்களானால் உங்களுக்கு ஒருபோதும் குறைவு வராது ஐயா!'

வாஸ்தவத்திலேயே பழைய ஜப்பான், யூரோப்பியரையும் யூரோப்பிய நடபடிகளையும் மிக வெறுத்தது; சதிகார ஜாதியாகவும் முன் இருந்ததுண்டு. ஆனால் இப்போ அப்படியில்லை; மேற்குத் தேசத்தாருடைய கௌரவ நடபடிகளைக் கற்கிறார்கள். இந்தப் பாழும் மைதானத்தில் 'நான் பழையகாலத்து ஜப்பான் தேசத்தவள் அல்ல' என்கிறவள் இவள் ஒருத்திதான் பாருங்கள்!

டாசன் என்னவோ முன்னிடத் துணிந்து 'அம்மா! சேனபதி கௌரோபாட்கினுக்கு நான் வேணுமானால் உங்களுக்காக உத்தரவாதம் தருகிறேன்; இவர்களும் எனக்கு உதவியாயிருப்பார்கள்' என்று சொல்லிக் குதிரையைவிட்டுத் தான் இறங்கிக்கொண்டு அவளைத் தூக்கி அதன்மேலே உட்காரவைத்தார்.

(இன்னும் வரும்)



## THE KING'S CUP BEARER. (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

### II. அத்தியாயம்

ராஜ போஜனசாலை. (தொடர்ச்சி)

முழங்காலிலிருந்து எழும்புகிற தன்னுடைய பானபாத்திரக்காரனை ராஜா பார்த்து, அவருடைய முகத்தில் ஏதோ ஒரு விசேஷக் குறி இருக்கக் காண்கிறார். நெகேமியா வெளிறி, கவலை மிகுந்தவராய்



சஞ்சலப்படுகிறவராயிருந்தார். மனதினுள்ளே நடக்கிற போராட்டத்தை முகம் வெளிப்படுத்திற்று.

ராஜா அதைக் கவனித்து, ரப்சாகேயின் பக்கமாய்த் திரும்பி, 'நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதி இல்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறல்ல' என்றார்.

அப்பொழுது நெகேமியா, 'நான் மிகவும் பயந்தேன்' என்கிறார்.

அவர் பயப்பட்டது ஆச்சரியமல்ல. ஏனென்றால், பாரஸீக ராஜாக்களுக்கு முன்பாக ஒருவரும் துக்கமுகத்தோடாவது, சஞ்சலப்படுகிறவர்களாயாவது, இருக்கக்கூடாதென்பது சட்டமாயிருந்ததால், இது ஒரு குற்றமாகவேயிருந்தது. அவருடைய இருதயம் எவ்வளவு துக்கம் நிறைந்ததாயும், ஆவி எவ்வளவு கலக்கமுமுள்ளதாயுமிருந்தபோதிலும், அரமனை வாசற்படியைக் கடக்கும்போது சிரித்த முகமாய், தனக்குள்ளே இருக்கும் கஷ்டத்தை ராஜா அறியக்கூடாதபடி நடந்துகொள்ளவேண்டும். ஆனால் நெகேமியாவின் முகம் அவரைக் காட்டிக்கொடுத்துவிட்டது. ராஜா என்ன செய்வாரோ? உத்தியோகத்திலிருந்து தள்ளிப்போடுவாரோ? இந்த உயர்ந்த பதவியிலிருந்து தாழ்த்திப்போடுவாரோ? சபைச்சட்டத்தை மீறினதற்காகத் தண்டிப்பாரோ? அல்லது இது தன்னுடைய விண்ணப்பத்தைக் கேட்கும்படி பரத்திலிருந்து அருளப்பட்டதும் தேவனால் அனுப்பப்பட்டதுமான நல்ல சமயமாயிருக்கலாமே.

ஆகையால் உடனே உத்தரவாக, 'ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும் அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்க முகத்தோடே இராதிருப்பது எப்படி?' என்றார்.

அப்பொழுது ராஜா நெகேமியாவுக்கு அவசியமான விஷயம் ஏதோ இருக்கிறதென்று அவருடைய வார்த்தைகளால் அறிந்து 'நீ கேட்கிற காரியம் என்ன?' என்றார்.

இது கஷ்டமான நேரம், இந்த எதிர்பாராத கேள்விக்கு நெகேமியாவின் பதில் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்? அவர் என்னத்தைப் பேசுவார்? எதற்காகக் கேட்டுக்கொள்ளுவார்? எருசலேமின் வருங்கால வாழ்வு எல்லாம், ராஜாவின் கேள்விக்கு நெகேமியா கொடுக்கும் உத்தரவைச் சார்ந்ததாயிருக்கலாமே.

ஒரு நிமிஷம் அமரிக்கையாயிருக்கிறார். ஒரே நிமிஷந்தான் நெகேமியா உத்தரவு கொடுக்கிறார். ஒரே நிமிஷந்தான்; அந்தக் கொஞ்சநேரத்தில் பெரிய வேலைகள் நடத்தப்பட்டன 'பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணினேன்' என்று சொல்லுகிறார்.

B

ஜெபம்பண்ணத் தன்னுடைய அறைக்கு ஓடிப்போனாரா? அந்த விருந்துசாலையில் முழங்காற்படியிட்டு, தேவனை நோக்கிக் கூப்பிட்டாரா? இல்லை. அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. தன்னுடைய கண்களைத் தானும் மூடவில்லை. ராஜா ஒன்றையும் பார்க்கவில்லை. நடந்த சங்கதி ஒன்றும் தெரியாது. என்றபோதிலும், இந்தக் கொஞ்சநேரத்தில் கையில் பாத்திரம் பிடித்திருந்த மௌன புருஷனுக்கும் பரலோகத்தின் ராஜாவுக்கும் மாட்சிமையும் வல்லமையுமான போக்குவரத்து நடந்தது. ஜெபம் என்ன என்று சொல்லப்படவில்லை. ஒருவேளை 'கர்த்தாவே உதவிசெய்யும்' என்ற ஜெபமாயிருக்கலாம். மின்னலொளியைப்போல, உத்தரவு வெகு விரைவாய் வந்தது. பயம் பறந்துபோயிற்று. உத்தரவு சொல்ல ஞானம் கொடுக்கப்பட்டது. அவருடைய இருதயத்தின் விருப்பம் அருளப்பட்டது.

அநேகர் பின் வருமாறு விசனப்படுவதைக் கேட்டிருப்போம். 'நான் புஸ்தகத்தில் வாசிக்கிற நல்லவர்களைப்போல, நீண்ட ஜெபம் செய்யக்கூடவில்லையே. என்னுடைய ஜீவியம் கஷ்டமானதும், வேலைகள் மிகுத்ததாயுமிருக்கிறது. வேலை முடிந்தவுடன் என் சரீரம் இளைப்பாயும், களைப்படைந்ததுமாயிருக்கிறது. கொஞ்சநேரமாவது ஜெபிப்பது கூடாத காரியமாகக் காண்கிறேன். நான் நீண்ட ஜெபம் செய்யக்கூடாததினால், கர்த்தருடையவனாயிருப்பது கூடாதென்று சிலவேளைகளில் பயப்படுகிறேனே? என்று பலவாறாய் எண்ணுகிறதுண்டு. ஆனால் கர்த்தர் விரும்புகிறது நீண்ட ஜெபமல்ல. வேதத்திலுள்ள ஜெபங்களிலநேகம் சுருக்கமானவைகள்தான். கர்த்தருடைய மாதிரி ஜெபம் மிக சுருக்கமானதே. அஞ்ஞானிகள்தான் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். நெகேமியாவின் ஜெபம் உண்மையான ஜெபம்; உத்தரவு பெற்ற ஜெபம், ஆனால் அது ஒரு நிமிஷ ஜெபந்தான்

ஜெபத்திற்கு வார்த்தைதானும் அவசியமில்லை. பாகாலைப் பின்பற்றினவர்கள் உரத்த சத்தமிட்டால் தங்கள் தேவனுக்குக் கேட்குமென்று நினைத்து அதிகமாய்க் கத்தினார்கள்; ஆனால் நெகேமியாவோ பேசவில்லை; உதட்டைக்கூட அசைக்கவில்லை. அவருடைய ஜெபமோ பரலோகத்தில் கேட்கப்பட்டது. தற்காலத்தில், சிலர் அதிக சத்தம், கூக்குரல், உயர்ந்த சத்தம் ஆகாயத்தைக் கிழிக்குமென்று நினைக்கிறார்கள். நாமோ, தேவன் பாஷை நடையையுமல்ல, சத்தத்தையுமல்ல, ஆத்துமாவின் பாஷையை, உள்ளான இருதயத்தின் சத்தத்தைக் கவனிக்கிறார் என்று நினைத்துக்கொள்ளுவோமாக.



நம்முடைய அங்கஸ்திதியும் ஜெபத்திற்கு அவ்வளவு முக்கியமானதல்ல. சிலர் நின்று ஜெபிக்கிறார்கள். சிலர் முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறார்கள். கர்த்தர் நம்முடைய சரீரத்தின் நிலைமையையல்ல, ஆத்தும நிலைமையைக் கவனிக்கிறார். பயபக்தி அவசியந்தான், அது ஆத்துமாவாகிய மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டுச் சரீரத்தில் வெளிப்படையாய்க் காணப்படுகிற பயபக்தியாயிருக்கவேண்டும். நெகேமியா கையிலே பொற்கிண்ணம் பிடித்தவராய் நின்றார்; என்றாலும் அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன? இருதயத்திலிருந்து உணர்வோடு வரும் ஜெபமே மெய்யான ஜெபம், சுருக்கமாயிருந்தாலும், தொனிக்காமலிருந்தாலும், அந்நிய இடத்தில் தகாத சமயத்தில் செய்யப்பட்டதாயிருந்தாலும், தேவன் அதைக் கேட்கிறார்; கேட்டு உத்தரவும் அருளுகிறார்.

நாம், பிரமிக்கச்செய்கிற உலகத்தில் ஜீவிக்கிறபடியால், இந்த எண்ணத்திலுள்ள முழு ஆறுதலையும் கிரகித்துப் பிடித்துக்கொள்ளப் பிரயாசப்படுவோமாக. நாம் காலையில் எழும்புகிறோம். நாள் முழுதும் என்ன நடக்குமோ அறியோம். நாம் நடக்கிற பாதையில் அநேக சந்துகள் உண்டு. திருப்பத்தில் அடுத்த அடி வைக்கும்போது என்ன நேரிடுமோ தெரியாது.

திடீரென்று எதிர்பாராதவண்ணம் ஒரு மனக்கலக்கம் உண்டாகிறது. நாம் என்ன செய்வோம்? எந்த வழி போகலாம்? நாம் இந்த சமயத்தில் உபயோகிக்கக்கூடிய சின்ன ஜெபம் இருக்கிறது. 'கர்த்தாவே வழிகாட்டும்.'

பிற்பாடு அடுத்த திருப்பத்தில் திடீரென்று சோதனை உண்டாகிறது. அநியாயமாய்க் கடுமையான வார்த்தை பேசப்படுகிறது; அப்பொழுது கோபமான மறுமொழி கொடுக்க ஏவப்படுகிறோம். பேசுமுன் ஒரு நிமிஷம் பொறுத்திரு. அச்சமயத்தில் பின்வரும் ஜெபத்தைச் செய். 'கர்த்தாவே உதவிசெய்யும்.'

இன்னும் ஒரு மோசம், சரீரத்திற்கோ ஆத்துமாவுக்கோ நேரிடுகிறது. அப்பொழுது நம்முடைய இருதயத்தை உயர்த்தி, 'கர்த்தாவே ரட்சியும்' என்று கெஞ்சுவோமாக.

முழங்காற்படியிட அவசியமில்லை. வாய்விட்டு வார்த்தைசொல்ல அவசியமில்லை. நம்முடைய ஸ்தானத்தைவிட்டு அசையவேண்டியதுமில்லை. உத்தியோக ஸ்தலத்திலும், வியாபார ஸ்தலத்திலும், பாடசாலையிலும், வேலைசெய்யுமிடங்களிலும், புகைவண்டியிலும், தெருவிலும், எங்கேயிருந்தபோதிலும், எப்பேர்ப்பட்ட கட்டத்தி

விருந்தபோதிலும், அமைதலான சுருக்க ஜெபம் பரலோகத்தின் தேவனண்டைக்குச் செல்லுகிறது.

அப்பேர்ப்பட்ட ஜெபத்திற்கு மறு உத்தரவு கிடையாமற் போகிறதேயில்லை.

கர்த்தராகிய தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக

(இன்னும் வரும்.)

S. A. Vethanayaham.

## A HINDU'S IMPRESSIONS OF CHRISTIANITY (*Cont.*)

## கிறிஸ்தவ சமயத்திலும் கிறிஸ்தவர்களிடத்திலும் நான் கண்ட நுட்பங்கள்

(தொடர்ச்சி.)

22. அவர்களுள், புருஷன் மனைவி யென்பவருள், ஒருவர்க்கொருவர் இருக்கவேண்டிய மரியாதை அன்பு இவைகள் வெகுவாய் அநுஷ்டிக்கப்பட்டுவந்தபோதிலும், இருவரும் ஒரேவிதமான காதலராயிருக்கவேணுமென்று வற்புறுத்தப்பட்டிருப்பதால், புருஷன் மனைவிக்குப் பிரியமான ஆடையாபரணங்களையும் பெண்சாதி தன் புருஷனுக்குப் பிரியமான உடையையும் தரித்துக்கொள்ளுகிறார்கள். இதர மதஸ்தர்களைப்போல, அவர்கள் உலகம் மெச்ச ஆடையாபரணங்களையணிந்து செல்வதில்லை.

23. விவாஹச் செலவுகள் முதலிய சுபாசுபச்செலவுகள், மிகவுங் குறைவாகவே நடத்திக்கொள்ளவேண்டுமென்ற போதனைகளிருப்பது போல, அதற்குத் தக்க பல சாதனங்களும் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் உபாய வரும்படியிலுங்கூட மனந்தளராமலும், கெட்டுப்போகாமலும், அருகன்புல் கட்டைபோலத் தளிர்விட்டுக்கொண்டு, உள்ளதிற்குள் சிறப்பாயும் சந்தோஷமாயும் காலத்தைக் கழித்துவருகிறார்கள். ஏனைய மதஸ்தரோ, இத்தியாதி செலவுகளாலேயே கெடுகிறார்கள்.

24. அன்றியும் விவாஹச்சடங்கு அவர்களின் கோவிலிலேயே செய்யப்படுவது ஒரு நூதனமாயிருப்பதுமட்டுமல்ல, அங்கு விவாஹம் நிச்சயப்படுத்தப்படுவதும் அதன்பின் தம்பதிகளுக்குள் வாக்குத்தத்தங்கள் செய்துகொள்ளப்படுவதும், போதகர் விவாஹ தம்பதிகளை நோக்கி எச்சரிப்பதும், பிறகு மணஞ்சூட்டப்படுவதுமாகிய படிக்கிரமங்களும்,



ஒழுங்குகளும், கவிகளாயாவது, அல்லது சமஸ்கிருதம் இங்கிலீஷ் முதலிய அந்நிய பாஷைகளிலாவதில்லாமல் அவரவர்கள் தாய்ப்பாஷையில் மிகவும் சுலபமான எளிய நடையில் செய்துகொள்ளப்படுவதும், நேரிற் பார்த்தவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தையும், அவர்களிடத்தே நன்குமதிப்பையும் விளைவிக்கும்.

25. இப்படித் தம்பதிகளின் சம்மதங்கேட்டு விவாஹம் நிச்சயப்படுத்துவதும், இருவரும் சில பிரமாணங்கள் செய்து விவாஹஞ் செய்துகொள்வதும், அதற்கேற்றபடி, இருவரும், போதுமான பக்குவமடைந்தபின், அதாவது பெண் கிருஹகிர்த்தியங்களைச் செவ்வனே பார்த்துக்கொள்ளவும், அறிவுள்ள தாயாயிருக்கவும் தகுதியான பின்பும், புருஷன், தன் மனைவியையும் இரண்டோர் குழந்தைகள் பிறந்தால் அவர்களையும் கிரமநெறியில் காப்பாற்றவும் ஒரு தகப்பனாயிருக்கவும் வேண்டிய வயதும் வரும்படியுமுள்ளவனான பின்பும் விவாஹஞ் செய்யப்படுவதால், அவர்களுக்கு ஆரோக்கியதிடகாத்திரமும், விளைவிற் புத்திரசந்தானமும் ஏற்படுகிறது.

26. சரீரசம்பந்தமான விவஹாரங்களில் அளவாயிருக்க அதாவது சுருக்கமாயிருக்கவேணுமென்றும், அதுவே சரீர ஆரோக்கியத்துக்கும், புத்திரபாக்கியத்துக்கும், சந்தோஷகரமான வாழ்க்கைக்கும் வித்து என்றும் போதிக்கப்பட்டும் எச்சரிக்கப்பட்டும் அந்நிலையில் நின்றுவருகிறார்கள்.

27. ஏனைய மதஸ்தர்களெல்லாம் புத்திர பாக்கியத்துக்காகப் பெரும்பாடுகள் பட கிறிஸ்தவ குடும்பங்களில், புத்திரபாக்கியத்தை அநேகமாய் வீடு தவறாமல் கொடுத்திருப்பதைப் பார்க்க சர்வவியாபியாய், ஜெகதீசராய், எவர்க்கும் பொதுவாய் ஜெகஜோதியாய் நின்றிலங்கும் கடவுள், பாரபட்சமில்லாதவரென்ற புகழ்ச்சியைத் தவிர பாரபட்சமுள்ளவராயிருக்காரோ யென்றுகூட நினைக்க ஹேதுவாகிறது. அப்படிப் பாரபட்சமாய்க் கிறிஸ்தவர்களுக்குமட்டும் ஒரு அநுகூலஞ் செய்யமாட்டார். ஆனால் மற்றவர்களிடத்திலில்லாத சில குணங்கள் அவருக்கு வந்ததாய்க் கிறிஸ்தவர்களிடத்தே காணப்படவேண்டும். அதை யாராயுங்கால், தம்பதிகள் பருவம் வந்த பின்பே விவாஹஞ் செய்துகொள்ளுவதும், விவாஹகாலந்தொட்டு மரணபரியந்தம் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல், அதாவது, வேறொருவரை மணந்துகொள்ளாமல், இருவரும் ஐக்கியமாயும் அன்பும் ஆதரவுமாயிருந்து, வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், லாபத்திலும் நஷ்டத்திலும், நன்மையிலும் தீமையிலும், இன்பத்திலும் துன்பத்திலும், ஒருவரையொருவர் புறக்கணியாமல், மா

ணம் இருவரையும் பிரிக்கும் வரை, சரீரம் இரண்டும் உயிர் ஒன்றுமாயிருக்கக்கடவோம் என்று செய்யும் விவாஹப்பிரதிக்ஞையும், அந்த நினைப்போடு கூடி வாழ்தலுமே முக்கிய காரணமென்று தீர்மானிக்கிறேன்.

(இன்னும் வரும்.)

நெல்லை. உ. ப. உமையொருபாகன்
ஆலந்தூர், பரங்கிமலை.

## THE MARRIAGE OF GERAINT (*Concl.*)

## ஜெரேயீண்ட்டின் விவாகம்

(முடிவு)

ஈனியோலுடைய மருமகனாகிய ஆலாப்பட்சி யென்பவன் எல்லாருக்கும் நடுவில் எழும்பி நின்று தன்னோடிருந்த அம்மாளைப் பார்த்து, 'எல்லாரிலும் அலங்காரமான பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட இந்த உபகாரத்தை நான் இரண்டு வருஷமாய் உனக்காக வெற்றி அடைந்தபடியால் நீர் வந்து எடுத்துக்கொள்ளும்' என்று எல்லாரும் கேட்கும்படியாக உரத்த சத்தமாய்க் கூவினான்.

ஜெரேயீண்ட்: 'பொறுத்துக்கொள் அவளிலும் மேன்மையுள்ள ஒருத்தி இருக்கிறாள்' என்று சொல்ல அவன் திரும்பி வெகு ஆச்சரியத்துடனும் சிந்தையுடனும் இந்த நாலுபேரையும் பார்த்தான்.

'அப்படியானால் நீ யுத்தம் செய்யவேணும்' என்று சொல்ல இருவரும் யுத்தம்செய்யத் தொடங்கினார்கள். மூன்றுதரம் யுத்தம் செய்தார்கள், இருவருடைய ஈட்டியும் முறிந்துபோய்விட்டன.

அப்போது அவர்கள் குதிரையை விட்டிறங்கி நிலத்தில் நின்று யுத்தம் செய்தார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்த அடிகள் அவ்வளவு குரூரமாயும் வல்லமையாயுமிருந்தபடியால் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

இருவரும் வெகுநேரமாய் யுத்தஞ் செய்தார்கள். இவர்கள் பலமுள்ளவர்களாயிருந்தபடியால் ஒருவராவது வெற்றி அடைகிறதாய்க் காணவில்லை. கடைசியாக, 'ராணிக்குச் செய்த அந்தப் பெரிய நிந்தையை நினைத்துக்கொள்!' என்று ஈனியோல் சத்தமிட்டார்.

அதற்கு ஜெரேயீண்ட் ஒரு பெரிய அடியினால் மற்றவனுடைய தலைச்சீராவை வெட்டி நிலத்தில் தள்ளிவிட்டுத் தன்னுடைய காலை



அவனுடைய மார்பின்மேல் வைத்து 'உன்னுடைய பெயர் என்ன?' என்று கேட்டார்.

அவன் பெருமூச்சுவிட்டு, 'நான் நட் என்பவருடைய மகன் எடிர்ன், உனக்குச் சொல்ல வெட்கப்படுகிறேன். என்னுடைய பெருமை தாழ்த்தப்பட்டது. மனுஷர் எல்லாரும் என்னுடைய தாழ்த்து தலைக் கண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்.

அதற்கு ஜெரேயீண்ட் 'நட் என்பவருடைய மகன் எடிர்ன். அப்படியானால் நீ இரண்டு காரியம் செய்யவேண்டும், இல்லாவிட்டால் சாகவேண்டும். முதலாவது, அந்தப் பெண்பிள்ளையையும் கட்டையனையும் கூட்டிக்கொண்டு ஆத்தர் ராஜாவின் அரமனைக்குப் பிரயாணம்பண்ணி நீர் ராஜாத்திக்குச் செய்த நிந்தைக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இரண்டாவது, உன்னுடைய அயலாரிடமிருந்து அபகரித்துக்கொண்ட ஆளுகையைத் திரும்ப அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்' என்றார்.

எடிர்ன் மறுமொழியாக, 'நீர் சொன்ன இரண்டு காரியங்களையும் நான் செய்வேன். இதுவரைக்கும் என்னை ஒருவரும் தாழ்த்தவில்லை. நீர் என்னுடைய பெருமையைத் தாழ்த்தினீர், ஈனிட்டும் இதைக் கண்டாள்' என்றான்.

அப்படியே அவன் எழுந்து ஜெரேயீண்ட் சொன்னபடி ஆத்தர் ராஜாவின் அரமனைக்குப் போனான்.

இராணி சந்தோஷத்துடன் மன்னிப்புக் கொடுத்தாள். அவன் இளைஞனாயிருந்தபடியால் தன்னுடைய கெட்ட நடத்தைகளைவிட்டு நல்ல வழியில் நடக்கத் தொடங்கினான். கடைசியாக ராஜாவுக்காக யுத்தம்செய்யும்போது கொல்லப்பட்டான்.

மறுநாள் காலையில் ஜெரேயீண்ட் தான் ராஜாத்திக்குச் சொன்ன வாக்கை நினைத்து, ஈனிட்டும் தன்னோடுபோய் ராஜாத்தியைச் சந்தித்து அவன் தான் சொன்ன வாக்கின்படி எல்லாத் தகுதியான சடங்காசாரங்களோடும் தனக்கும் ஈனிட்டுக்கும் விவாகம்செய்துவைக்கும்படி, ஈனிட்டைக் கேட்க, அவளும் அதற்குச் சம்மதித்தாள்.

அவள் மூன்றாம் நாள் எழுந்திருக்குமுன், தான் அவருக்குக் கொடுத்த வாக்கை நினைத்து, தன்னுடைய மங்கின உடையைப் பார்த்து 'இந்தப் பழைய வஸ்திரத்துடன் நான் ராஜாத்தியின் மாளிகைக்கு எப்படிப் போகட்டும்? ஐயோ! எங்களுடைய ஆளுகையை எங்களுக்குத் திரும்பத் தந்த இந்த மேன்மையுள்ள பிரபுவுக்கு தாழ்ந்தவளாகிய நான் ஏற்ற மனைவியாய் இருப்பது எப்படி? அவர் இன்னும் கொஞ்சநாள் நிற்பாரானால் நான் இரவும் பகலும் வேலைசெய்து ஒரு அலங்காரமான உடையைத் தைத்துக்கொள்ளுவேன்; ஆனால் இவ்வளவு

நன்மை செய்திருக்கிற அவரை இன்னும் தாமதித்து நில்லும் என்று கேட்கிறதும் கூடாத காரியம். எடிர்ன் என்னுடைய ஜனனநாளில் எங்களுடைய வீட்டை அழித்த அந்த நாளில் என்னுடைய தாய் எனக்குத் தந்த ஜரிகை உடை இப்போ இருக்குமேயாகில் எவ்வளவு சந்தோஷமாயிருப்பேன்! அதையும் மற்றச் சாமான்களுடன் எடுத்து விட்டார்களே!' என்று பலவாறும் நினைத்தாள்.

திரும்பவும் அவள் நித்திரைசெய்து தான் ராணியின் மாளிகையில் நின்றதாகவும் ஜனங்கள் தன்னைப் பரிகாசம்பண்ணினதாகவும் சொப்பனங் கண்டாள்.

அவள் திரும்ப விழித்தபொழுது சூரிய ஒளி அவள் வீட்டுக்குள் விழுகிறதையும் தான் விரும்பிய உடுப்பை அவளுடைய தாய் கையில் வைத்துக்கொண்டு தன் அருகில் நிற்கிறதையும் கண்டாள்.

'இங்கே பார் என் பிள்ளையே! மூன்றுவருஷம் இது மறைவாயிருந்தும் இதனுடைய நிறம் மங்காமல் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது! இந்த நல்ல உடுப்பைப் பார்' என்று தாயானவள் சொன்னாள்.

'என்னுடைய ஜனனநாளில் நீர் எனக்குத் தந்த உபகாரம்' என்று ஈனிட் சந்தோஷத்துடன் சொன்னாள். 'நேற்று யுத்தம் முடிந்தபிற்பாடு உன்னுடைய தகப்பனார் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் நம்முடைய சாமான்களைத் திரும்பக் கொடுக்கும்படி கட்டளை கொடுத்தார். அதன்படியே நேற்று சாயந்திரம் இதை ஒருவன் என் கையில் கொண்டுவந்து கொடுத்தான். நான் உனக்கு ஒன்றும் சொல்லாமல் வைத்திருந்து இப்போ இதை உனக்கு உபகாரமாய்க் கொடுக்கிறேன். மூன்று வருஷகாலமாய் எங்களுடைய இடத்துக்குத் தக்க தாய் உடுக்கக்கூடாமலிருந்தோம், இப்போ என் மகளே! உன்னுடைய தகப்பனின் பிள்ளைக்கு ஏற்றதாக இந்த வடிவான உடையைத் தரித்துக்கொள். இதை உடுத்தபின் நீ எல்லாருக்கும் முன்பாக ஒரு பிரபுவின் மணவாட்டியாகக் காணப்படுவாய்' என்று கூறினாள். ஈனிட் சந்தோஷத்துடன் எழுந்து உடுக்கிறதற்கு ஆயத்தம்பண்ணத் தொடங்கினாள்.

தாயும் மகளும் இவ்விதமாய்ப் பேசிக்கொண்டு நிற்கும்பொழுது ஜெரேயீண்ட் ஈனிட்டை வரும்படி அழைத்தார். 'கலியாண உடுப்பு உடுக்கிறார்கள்' என்று ஈனியோல் சொல்ல ஜெரேயீண்ட் 'நேற்று அவள் உடுத்தியிருந்த நிறம் மங்கின உடுப்பு அவள் உடுக்கிறதுதான் என்னுடைய விருப்பம்' என்று சொல்லச் சொன்னார். ஈனிட்டும் அவளுடைய தாயாரும் இதைக் கேட்டபொழுது மிகவும் துக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் புது உடையை ஒரு பக்கத்தில் வைத்து



விட்டு ஒன்றும் சொல்லாமல் பழைய உடையைத் தரித்துக்கொண்டாள்.

ஈனிட் தன் நிறம் மங்கின பழைய உடையைத் தரித்துக்கொண்டு ஜெரேயீண்ட்டின் முன் வந்தபொழுது ஜெரேயீண்ட் அவளுடைய சாந்தமுள்ள முகத்தைக் கண்டு 'இவளைப்போல் ஒரு அழகுடைய பெண்ணை நான் ஒருபோதும் காணவில்லை' என்று நினைத்தார்.

அவளுடைய தாயின் முகத்தை அவர் கண்டபொழுது அவள் விசனப்பட்டிருக்கிறாள் என்று அவர் அறிந்து 'நல்ல தாயே! நான் அவளிடம் பண்ணின விண்ணப்பத்தைப்பற்றி நீர் விசனப்படவேண்டாம். நான் காளியோன் என்னும் கோட்டையைவிட்டு வந்தபொழுது எங்களுடைய இராணி என்னிடம், 'நீர் எந்தப் பெண்ணைத் தெரிந்துகொண்டாலும் நான் அவளை சூரியனைப்போல் என் சொந்தக்கையால் உடுத்தி உனக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பேன் என்று சொன்னாள். இதற்காக நீர் என்னை மன்னித்துக்கொள்ளவேண்டும். இன்னொரு சமயத்தில் அவள் உன்னால் கொடுக்கப்பட்ட ஈவைத் தரித்துக்கொள்ளுவாள்' என்றார்.

அவர்கள் இரண்டுபேரும் புறப்பட்டபொழுது அவள் பெற்றாரின் மனம் சந்தோஷத்தினாலும் துக்கத்தினாலும் நிறைந்திருந்தது. அவர்கள் காளியோன் என்னும் கோட்டைக்கு வந்தபொழுது ராணி அவர்களுக்கு வந்தன உபசாரம் சொல்லி அவளை அங்கீகரித்தாள். ஈனிட்டை ராஜாத்தி தன் சொந்தக் கையால் கலியாணத்துக்கு உடுத்தி எல்லாச் சடங்குகளுடன் ஜெரேயீண்ட்டை அவளுக்கு விவாகம்பண்ணிக் கொடுத்தாள். மாளிகையிலிருந்த ஜனங்கள் ஒரு வாரம் சந்தோஷம் கொண்டாடினார்கள்.

ஈனிட் தன் பழைய உடையைக் கழற்றிவிட்டு ஜெரேயீண்ட் முதல்முதல் தன்னை நேசித்த காலத்தை நினைத்து அதை எப்பொழுதும் பத்திரமாய் வைத்துக்கொண்டாள்.

## HOW TO AVOID CONSUMPTION (TUBERCULOSIS)

## க்ஷயரோகத்தை விலக்குவதெப்படி?

எச்சரிக்கை.

தலைப்பைக் கண்டதும் பலர், 'நமக்கு க்ஷயரோகம் இல்லை!' என்று சொல்லிக்கொண்டு இங்கே சொல்லியிருக்கும் அரிய விஷயங்களைக் கவனிப்பதில்லை; இம்முறை தயவுசெய்து அப்படிச் செய்யாதேயும்

கள். நமக்குத் தெரியாமலே நம்முள் க்ஷயரோகம் இருக்கலாம். பலர் இந்நோயை அடைந்து மாதக்கணக்கான பின்புதான் அதை அறிந்திருக்கின்றனர். நியூ யார்க் நகரத்தில் வருஷம் 10,000 பேர் இந்த வியாதிக்கு இரையாகிறார்கள். 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி.' ஆகையால் காலம் மீறும் முன்னமேயே அதைத் தடுக்க வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸில் க்ஷயரோகத்தால் நேரும் மரணம் மூன்று நிமிஷத்திற்கு ஒன்றாயிருக்கிறது. நியூ யார்க் நகரத்தில் போன வருஷம் கிட்டத்தட்ட 10,000 பேர் இந்த நோயால் மாண்டனர். அவ்வூரில் சாகும் எழுபேரில் ஒருவன் க்ஷயத்தாலே சாகிறான்.

இந்த வியாதிக்கு மூலகாரணம் அரையீரலில் இருந்து வளரும் ஒருவகை உயிர்க்கிருமியே. சுகதேகியாயுள்ள ஒருவன் இந்தக் கிருமியின் வளர்ச்சியை எதிர்த்துத் தடுத்து அவற்றைக் கொல்லவுங் கூடும். தேகம் சக்திகெட்டு அதோடு கவலையீனமும் ஏற்பட்டால் அக்கிருமிகள் பெருகி அரையீரலை நாளுக்குநாள் க்ஷயப்படுத்தி, அதாவது குறைத்து, கடைசியில் மனுஷனைச் சாகச்செய்கிறது.

இந்தக் கிருமிகள் வியாதி ஆரம்பம் முதற்கொண்டே சிறிது சிறிதாக அந்நோயாளி துப்பும் துப்பலில் காணப்படும். நோய் அதிகரிக்க அதிகரிக்க அப்படிக் காணும் கிருமிகளும் அதிகரித்திருக்கும். கடைசிகாலத்தில் அவை கோடிக்கணக்கில் ஏற்பட்டுவிடும்.

**க்ஷயரோகத்தின் முற்குறிகள்** ஒரு மாசமோ அதிகப்படவோ கொஞ்ச இருமல், தேகத்தின் கனக்குறைவு, பிற்பகலில் சிறிது ஜுரம், இரவில் வியர்த்தல், அரையீரலிலிருந்து ரத்தம் வருதல் என்பவைகளாம். இவற்றைக் கண்டதும் உடனே வைத்தியனை நாடிச் செல்லவேண்டும்.

அஸ்திபாரமான ஒழுக்கங்கள்.

1. சுத்தமானதும் போஷிக்கத்தக்கதுமான ஆகாரத்தைப்போலவே சுத்த ஆகாயமும் அத்தனை அவசியமானது.

2. ஏராளமான ஜனங்கள் படுத்திருக்கும் அறைகளிலும், கதவு ஜன்னல் முதலியவைகளை இறுக மூடிய அறைகளிலும் படுத்துத் தூங்கலாகாது.

3. குடியிருக்கும் வீடும், வேலைசெய்யும் தொழிற்சாலையும், சுத்தமாயும், காற்றோட்டம் மிகுந்ததாயும் இருத்தல்வேண்டும். அழுக்கும், அசுத்த ஆகாயமும் க்ஷயரோகத்துக்கு உற்ற சிநேகிதர்கள்.



4. நீடித்த ஜலதோஷம் அல்லது இருமல் பிடித்தவர்களும், தேகத்தின் கனமாவது பலமாவது குறைந்து வருபவர்களும் உடனே வைத்தியனிடம் போகவேண்டும். காலம் மீறும்வரையிற் சும்மா இராதேயுங்கள்.

5. கவலையின்றித் துப்பும் வழக்கம் வியாதியை விருத்திபண்ணும்.

6. க்ஷயரோகி ஒருவன் ஒரு தினத்தில் லக்ஷக்கணக்கான கிருமிகளை உமிழ்கிறான்; அந்தத் துப்பல் வறண்டால் அக்கிருமிகள் சிதறுண்டு மற்றவர்களுடைய அரையீரலுள் செல்ல வழியுண்டாகிறது. ஆகையால் நோயாளிகளின் துப்பலைச் சுட்டெரித்துவிடவேண்டும்.

7. க்ஷயரோகியோடுகூட எவரும் தூங்கலாகாது; இருந்தபோதிலும் ஜாக்கிரதையுள்ள க்ஷயரோகி தன்னுடன் இருப்பார் பிடிப்பார்களுக்கு அபாயமாகான்.

8. பெரும்பாலான ஜனங்களுக்கு உள்ளுக்குள்ளே க்ஷயரோகம் இருக்கலாம்போலும். ஆனால் அவர்கள் சரீரசுகத்தையும் பலத்தையும் காப்பாற்றுவதினால் அந்த ரோகத்திற்கு இரையாகாமல் இருக்கிறார்கள்.

## சக்தியற்ற ஈரலுக்கு நல்லவைகள்

**சுத்த ஆகாயம்** ஏராளமாயிருந்தால் க்ஷயரோகம் தடைபடும். சூரியப்பிரகாசம் கிருமிகளைக் கொல்லும்.

**வெயிலுள்ள அறைகள்.** அப்படிப்பட்ட அறைகளைத் தேர்ந்தெடு. ஜன்னல்களைத் திறந்து ஆகாயத்தை வரவிடு. வீட்டைச் சுத்தமாய் வைத்திரு. க்ஷயரோகி விட்டுவிலகிய அறையின் சுவர்களையும், தரையையும், விட்டம் சட்டம் முதலிய மரச்சாமான்களையும், சோப்பும் (Soap) தண்ணீருங்கொண்டு நன்றாய்த் தேய்த்துக் கழுவு.

**திறந்த வெளியில் பலகாலும் இருத்தல்.** வீட்டிற்குள்ளிருந்து செய்யக்கூடிய தொழிலைவிட வீட்டிற்கு வெளியிலிருந்து செய்யக்கூடிய தொழில் வெகு நல்லது. பாதங்களை வறட்சியாகவே வைத்திரு.

**இழுத்து நீண்ட மூச்செடுத்தல்.** சுத்த ஆகாயம் அரையீரலின் ஒவ்வொரு மூலைக்கும் போய்ச் சேரட்டும். காலையிலும் இரவிலும் ஜன்னல்களைத் திறந்துவிட்டாவது வீட்டுக்கு வெளியேயாவது இருந்து நல்ல காற்றைச் சுவாசி. தினந்தோறும் இப்படிப் பல நிமிஷம் செய். மூக்கினாலேயே சுவாசி, வாயினால் சுவாசியாதே.

**சாதாரண சாப்பாட்டிற்கே** பணத்தைச் செலவிடு.

பாலும், முட்டையும், நல்ல புது மாம்சமும், கீரையும், காயும், வெண்ணெயும், ரொட்டியும், பழமும் நல்லது.

**ஒழுங்கான ஜீவியம்பண்ணு;** தாராளமாய் இளைப்பாறவும் தூங்கவும் செய்.

**ஸ்நானம்பண்ணிச் சுத்தமாயிரு.** எழுந்ததும் குளிப்பது மிகவும் விசேஷம்.

**தைரியம்** வெகு அவசியமானது. க்ஷயரோகிகளுக்கு உதவி புரிந்து அநேகரைக் குணப்படுத்தியிருக்கிறார்கள்.

**சக்தியற்ற சரீரலுக்கு ஆகாது.**

அழுக்கண்டிய கடைகள், மண்டிகள், ஜனநெருங்கிய அறையில் இருத்தல், தூங்கல், அழுக்கான தொழில்கள் இவைபோல்வன ஆகா.

மனம்போன போக்கெல்லாம் போதலும், மிதமின்மையும் வெகு கெடுதல். பலசாலிகளைப் பலவீனப்படுத்தும் துர்மார்க்கம் பலவீனர்களைக் கொல்லும்.

மதுசாரம் மிகுந்துள்ள மருந்து எப்படிப்பட்டதானாலும் பலக்குறைவான சரீரலுக்குக் கெட்டதேதான்.

## செய்யவேண்டியது என்ன ?

க்ஷயரோகம் உன்னில் இருப்பதாகக் காணும் அந்நிமிஷமே தக்க வைத்தியனை நாடு.

## ANSWER TO PUZZLE FOR FEBRUARY. விடை

அரவத்தினால்

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ௵ எப்பிரல்௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | மத். | 12. 1—13 | 11 | ச. | மத். | 14. 25—36 | 21 | செ. | மத். | 18. 23—35 |
| 2 | வி. | ,, | 12. 14—30 | 12 | ஞா. | ,, | 15. 1—14 | 22 | பு. | ,, | 19. 1—15 |
| 3 | வெ. | ,, | 12. 31—42 | 13 | தி. | ,, | 15. 15—28 | 23 | வி. | ,, | 19. 16—30 |
| 4 | ச. | ,, | 12. 43—50 | 14 | செ. | ,, | 15. 29—39 | 24 | வெ. | ,, | 20. 1—16 |
| 5 | ஞா. | ,, | 13. 1—15 | 15 | பு. | ,, | 16. 1—12 | 25 | ச. | ,, | 20. 17—29 |
| 6 | தி. | ,, | 13. 16—30 | 16 | வி. | ,, | 16. 13—28 | 26 | ஞா. | ,, | 20. 30-34; 21. 1—11 |
| 7 | செ. | ,, | 13. 31—43 | 17 | வெ. | ,, | 17. 1—13 | 27 | தி. | ,, | 21. 12—22 |
| 8 | பு. | ,, | 13. 44—58 | 18 | ச. | ,, | 17. 14—27 | 28 | செ. | ,, | 21. 23—32 |
| 9 | வி. | ,, | 14. 1—12 | 19 | ஞா. | ,, | 18. 1—11 | 29 | பு. | ,, | 21. 33—46 |
| 10 | வெ. | ,, | 14. 13—24 | 20 | தி. | ,, | 18. 12—22 | 30 | வி. | ,, | 22. 1—14 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914


# மாதர் போதினி

No. 197 மே 1914 No. 5


OFFICE OF THE REGISTRAR OF BOO[KS] REGISTERED 2 MAY 1914 MADRAS

## THE LITTLE MOTHER OF JAPAN (*Cont.*)

## ஜப்பானிய சிறுதாய் ஒருத்தி

ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் நடந்த ஒரு சம்பவம்

(தொடர்ச்சி)

சரி, போனோம்; வழியில் யாருமே பேசவில்லை. முன்னால் இருந்த காவற்காரரையெல்லாம் கஷ்டம் கொஞ்சங்கூட இல்லாமல் கடந்துபோனோம். அவர்களுக்கெல்லாந்தான் நாங்கள் சேனாபதியுடைய ஸ்தலத்திற்குப் போகிறவர்கள் என்பது சர்வ சாதாரணமே. கௌரோபாட்கின் பக்கம் போக இன்னும் அரைமணி சாவகாசம் காத்திருக்கவேணும். குளிரா சொல்லி முடியாது. மன்சூரியாவில் குளிர் இப்போதுதான் வரும் என்பதில்லை; நினைத்தபோது வரும். அதற்குள்ளே டாசன் எங்கேயோ போய் ஒரு பானை தேயிலைப் பானம் சுடச்சுடக் கொண்டுவந்து அந்த அம்மாளுக்குக் கொடுத்தார். அவளும் நன்றியறிதலோடு அதை வாங்கி நிறையக் குடித்தாள். அப்புறம் கொஞ்சநேரத்திற்கெல்லாம் சேனாபதி கௌரோபாட்கின் சமுகத்தை அடைந்தோம். அந்த அம்மாள் எங்களுக்கிடையில் நிற்கிறதை அவர் கொஞ்சம் உற்றுப் பார்த்தார். உடனே எங்கள் கூட இருந்த ஸ்டிவன் விவரிக்க ஆரம்பித்தார்.

நாங்கள் அவளை எங்கே கண்டோம், எப்படிப் பழகினோம், அவள் என்ன சொன்னாள், அதற்கு நாங்கள் என்ன செய்வதாகச்சொன்னோம், என்று எல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லியானபிறகு அவருக்குக் கொஞ்சம் தயை ஏற்பட்டது. நல்லபடியாகவே அவர், ‘நீ யார்? என்ன தெரிவிக்கவேணும்?’ என்று கொஞ்சம் நயமாகவே கேட்டார்,

இத்தனை நேரமும் அந்த அவலக்ஷணமான ஆடையையல்லவா கட்டியிருந்தாள்? நாங்களும் அவளுக்கு உள்ளது அதுதானுக்கும் என்றிருந்தோம். இப்போ அவள் ஒரு நாடாச் சுருக்கை உருவிவிட்டாள்; அந்த அருவருத்த அழுக்குத் துணியெல்லாம் நீங்கிப்போயின. உள்ளே பார்த்தால் அவர்கள் தேசத்து நல்ல உயர்ந்த பட்டாடை 'பளபள' என்று பகட்டினது. உடனே மடியிலே கைவிட்டு ஒரு கத்தை கடிதாசியை எடுத்து அந்தச் சேனாபதியிடம் நீட்டிக்கொண்டே 'எனக்கு வேண்டியதெல்லாம் அந்தக் கடிதாசி பேசும்' என்று சொன்னான்.



அந்தக் கடிதங்களில் எழுதியிருந்தது என்னவென்று எங்களுக்குத் தெரியாது; இன்ன பாஷையில் என்கிறதுகூடத் தெரியாது. அவற்றைப் படித்துக்கொண்டே அவளைப் பார்த்து 'முந்தின சண்டையில் உன் புருஷன் கொலையுண்டானா?' என்று கேட்டார். அதற்கு அவள் 'ஆம்,' என்றாள்.

'உன் மக்களை நாங்கள் கைதியாக்கி வைத்திருக்கிறோம்?'

'அது உண்மையே.'



'இரண்டுபேருக்கும் காயம்?'

'இரண்டுபேருக்குந்தான்.'

மனதாரச் சொன்ன அவளது வார்த்தையை யாரும் சந்தேகிக்கவே மாட்டார்கள். அப்படியே டாசனும் அதை மனப்பூர்வமாய் நம்பினவராய் உடனே சேனாபதியைப் பார்த்து, 'சேனாபதி! அந்த அம்மாள் நாணயஸ்தியே; அதற்கு நாங்கள்' என்று எல்லாரையும் வளைத்துக் காட்டி 'எல்லாரும் பிணை' என்றார்.

தளகர்த்தர் கௌரோபாட்கின் இவற்றையெல்லாம் கவனிக்கவில்லை; போர்ச்சேவகர்களை அழைத்து, தான் விசாரிக்கும்வரையில் அவளைப் பந்தோபஸ்தில் வைத்திருக்கும்படி கட்டளையிட்டான். நாங்கள் எங்கள் விடுதிக்குப்போய் அவளுக்குச் சாப்பாடு அனுப்பினோம். அவளும் அதை யுண்டு அங்கே பந்தோபஸ்திலேயே உறங்கினாள்.

அடுத்த நாள் நாங்கள் தளகர்த்தர் இருப்பிடத்திற்குப் போனோம். அந்த அம்மாள் இளைப்பாறி முன்னிலும் அழகாய் இலங்கியிருந்தாள். சேனாபதி கௌரோபாட்கினும் அவளை யழைத்து 'உன் சங்கதி உண்மையே. நீ வேண்டியதைத் தருகிறேன். ஆனால் ஒரு விஷயம் கண்டிப்பு. யுத்தம் முடிவாகிறவரைக்கும் நீ எங்கள் அணிகளைவிட்டுப் போகமுடியாது' என்றார்.

'அது எனக்குத் தெரியும்' என்றாள்.

'பேருக்கு நீயும் சண்டையில் அகப்பட்ட ஒரு கைதிபோலவே தான்.'

'அப்படியே ஆகட்டும்.'

அப்பால் போர்ச்சேவகர்கள் வந்து நாங்களும் அவளுடன் போகலாம் என்று கைகாட்ட, நாங்கள் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் படுத்திருந்த கூடாரங்களை ஒன்றொன்றாய்க் கவனித்துக்கொண்டே மெள்ள நடந்தோம். ஓரிடம் வந்ததும் சேவகர்கள் நிற்க நாங்களும் தாமதித்தோம். அங்கே சேவகாதிகாரி ஒருவர் அந்த அம்மாளைப் பார்த்து 'உள்ளே போகலாம்' என்றார். அவள் போய்க் கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்து எங்களையும் வரும்படி கையசைத்தாள்.

டாசன் முன்னே, ஸ்டீவன் பின்னே, அப்புறம் நாங்களெல்லாருமாக உள்ளே நுழைந்தோம். அவளுடைய மக்கள் இருவரும் இரண்டு கட்டிலிலே படுத்திருந்தார்கள். ஒருவன் முந்தின ராத்திரி மரித்தான், மற்றவன் இப்போதோ பிறகோ என்னும் நிலைமையில் இருந்தான். இவன் கஷ்டப்பட்டானோ, அவன் வேதனைப்பட்டானோ, யாரும் எதுவும் சொல்லவில்லை. நாங்கள்மாத்திரம் செத்தவனுக்கும் மற்றவனுக்கும் மரியாதை செலுத்தித் திரும்பி வெளியே வந்துவிட்டோம்.

உடனே டாசன் 'நானும் சில நல்ல தாய்மார்களைப் பார்த்திருக்கிறேன்; ஆனால் இவளை'—என்று எடுத்த சொல்லை முடிக்கும். முன்னேயே ஸ்டீவன் 'சரிதான், நன்றாய்ச் சொன்னாய்! ஏதுக்கும் நாமெல்லாம் இப்போ ஒருத்தியைக் கண்டறிந்துகொண்டோம்' என்றார்.

இந்தக் கதையில் இன்னும் சொல்லவேண்டிய விஷயம் அதிகம் இல்லை. அடுத்த நாளே யுத்தத்தின் தீமையால் அந்த இரண்டு ஜப்பானிய சகோதரர்களையும் ராணுவ மரியாதையோடு ருஷ்ய சைனிய ஸ்தலத்திலே புதைத்துவிட்டார்கள். அவர்கள் தாய் தனக்குரிய மூவரும் இந்த யுத்தத்தில் மாளவே அவளும் தன் சத்துருக்களாகிய ருஷ்யர்களுடைய போர்க்கள ஆஸ்பத்திரிகளில் காயப்பட்டவர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் உதவிசெய்யவும் உபசாரம்பண்ணவும் தன் தேகத்தை ஒப்புக்கொடுத்தாள்.

அந்த ஜப்பானிய சிறிய தாய், கௌரோபாட்கினுக்கும் மனுஷகோடிகளுக்கும் விசுவாசம் உள்ளவளாகவே இருந்தாள். தன்னைச் சூழ இருந்தவர்களுக்கு நேரும் கஷ்டத்தை அன்போடும் அநுசரணையோடும் காத்துத் தன்னுடைய வேதனைப்பட்ட மனசை மாற்றி வருவாள். அவள் கஷ்டகாலத்தில் அநேகரைக் காத்துவந்ததால் சுகமடைந்தவர்கள் எத்தனையோ பேர். பின், ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நேர்ந்த பகைதீர்ந்து சமாதானம் உண்டாகவே நாங்கள் எல்லாரும் சுவாதீனம் பெற்று 'ஒருநாள் அவளுக்குத் தேவானுகூலம் சொல்லப்போனோம்.

அப்போது அவள் சொன்ன மாறுத்தரம் இது: 'கனவான்கள் காட்டிய கௌரவ உபகாரத்துக்கு நான் கண்யமாகவே இருந்து வருகிறேன்.'

## THE KING'S CUP BEARER. (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன்

(தொடர்ச்சி.)

### III. அத்தியாயம்

### தயவுள்ள கரம்

மகத்துவமான சர்வலோகம், ராஜாதி ராஜாவின் ராஜ்யம், இதைப் பற்றிய அதிக சொற்ப அறிவை யார் நமக்குப் புகட்டக்கூடும்? நம்முடைய உலகத்திலிருந்து தூரதிருஷ்டிக்கண்ணாடியின் மூலமாய்ச் சமார் 100,000,000 நட்சத்திரங்களைப் பார்க்கலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அவ்வளவு ஏராளமான இலக்கத்தை யார் கிரகிக்கக்கூடும்? யார்தான் தன்னுடைய மனதில் 100,000,000 வஸ்துக்களை வர்ணிக்கக்கூடும். அத்தனை நட்சத்திரங்களுக்குப் பதிலாக, அத்தனை கிச்சிலிப்பழங்களிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். மனோபாவனையில் அந்தப் பழங்களை வரிசையாய் வைத்து ஒரு நீளமான நூல் ஒவ்வொரு பழத்தின் மத்தியிலும் வரும்படி வைத்தால், எவ்வளவு நீள நூல் வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? 6000 மைல் நீளத்திற்குக் குறையாமல் வேண்டும். அத்தனை பழங்களையும் நீளமாய் வைத்தால் இங்கிலாந்திலிருந்து சீனாவரைக்கும் போகும்.





இத்தனை ஏராளமான நட்சத்திரங்களுக்கும் தேவன் ராஜாவாயிருக்கிறார். ஆனால் மகா பெரிய சர்வலோகத்தையும் பார்க்கும்போது, இதெல்லாம் ஒரு புள்ளியைப்போலத்தானிருக்கிறது. கண்டுபிடித்திருக்கிற ஒவ்வொரு தூரதிருஷ்டிக்கருவியும், கொஞ்சங் கொஞ்சந் தூரத்திற்கு அப்பால் பார்க்கக்கூடியதும், முன்பாராத வேறு உலகங்களை வெளிப்படுத்துகிறதுமாயிருக்கிறது. இன்னும், நாம் பாராத, கவனியாத, கேள்விப்படாத எத்தனை உலகங்கள் இருக்கின்றனவோ, யார்தான் சொல்லக்கூடும்? எண்ணத்தொலையாது, அளவிலடங்காது. இவைகளையெல்லாம் சிருஷ்டித்த தேவன் ஆதியந்தமில்லாதவர்.

இப்படி எண்ணிறந்த உலகங்களும், ராஜாதி ராஜாவின் பார்வைக்குள் இருக்கின்றன அவரே எல்லாவற்றையும் ஆளுகிறார், கவனிக்கிறார், நடத்துகிறார். நான், என்னுடைய அற்ப காரியங்களையும் தேவன் கவனிக்க நேரமிருக்குமென்று நம்புவது கூடிய காரியமா? நான் வியாதியாயிருப்பதையும், வருத்தப்படுவதையும், தரித்திரப்படு

வதையும், அங்கலாய்ப்பதையும், தேவன் கவனிக்கக்கூடுமோ? நானும் சங்கீதக்காரனோடு சேர்ந்து பின்வருபவைகளைச் சொல்லுவேனாக.

'உம்முடைய விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுப்புத்திரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்.' சங். 8. 3, 4.

ஜான் பிலேவல் (John Flavel) என்பவர் எழுதிவைத்த பழமையான சொற்கள் மிகவும் அருமையானவைகளே. அதாவது 'தெய்வ பராமரிப்புக்குக் காத்திருக்கிறவனைக் கவனிக்கத் தெய்வம் வேண்டியதில்லை.' வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால், மேலான வல்லமைக்குத் தன் காரியங்களையெல்லாம் ஒப்படைத்து, கர்த்தருடைய கரங்களில் விழுகிற மனிதன் ஒருபோதும் கலக்கமடையமாட்டான். சர்வலோகத்தையும் ஆளுகிற தேவன் அவனைக் கவனிக்க மறக்கமாட்டார். சர்வலோகத்திலும் அவன் ஒருவனே இருக்கிறதுபோல அவனை அவ்வளவு அருமையாய்க் கவனித்து, வழிநடத்தி, அவனுக்கு உதவிசெய்து வருகிறார்.

பரி. அகுஸ்தீன் என்பவர் 'கர்த்தாவே என்னுடைய ஜீவியத்தைப் பார்க்கும்போது, நீர் என்னை எவ்வளவோ கவலையாயும், அருமையாயும் நடத்திக்கொண்டு வந்திருக்கிறீர் என்று காணப்படுகிறது. நீர் வேறொருவரையும் கவனித்திருக்கமாட்டீர்; ஆனால் நீர் உலகமுழுவதையும் எவ்வளவு ஆச்சரியமாய் நடத்தினீர்; இன்னும் நடத்திக்கொண்டு வருகிறீர் என்று நான் அறியும்போது, என்னைப்போலொத்தவனைக் கவனிக்க உமக்கு எப்படி நேரம் கிடைத்திருக்குமோவென்று அதிசயப்படுகிறேன்' என்கிறார்.

இன்னும் இந்தச் சின்ன உலகத்திற்கு அப்பாலே உள்ள கோடானுகோடி உலகங்களைப் பார்க்கும்போது, தேவனுடைய அன்பான கவலையைக்குறித்து ஆச்சரியப்பட ஏதுவில்லையா?

நெகேமியா தேவநடத்துதலுக்காகக் காத்திருந்தார். தன்னுடைய காரியாதிகளைத் தேவனிடத்தில் சொல்லி ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் தனக்குக் காத்திருக்க இடங்கொடுக்கவில்லை. தேவன் அவரைக் கைவிடவில்லை.

எருசலேமைத் திரும்பக் கட்டும்படி தான் போகவேண்டுமென்று கேட்கிறார். ராஜா அவர் கேட்டதை மறுக்கவில்லை. பக்கத்திலிருந்த ராணியால் ஏவப்பட்டு, 'உன் பயணம் எவ்வளவு நாள் செல்லும்? எப்பொழுது திரும்பிவருவாய்?' என்று கேட்கிறார்.

நெகேமியா சில நாட்களைக் குறித்தார். எவ்வளவு காலம் என்று சொல்லப்படவில்லை. ஆனால் பன்னிரண்டு வருஷங்களாக பாரஸீ



கத்திற்கு வரவில்லை. முதலில் கொஞ்ச நாள் உத்தரவு கேட்டுக்கொண்டுபோயிருந்திருக்கலாம், பிற்பாடு தன்னுடைய வேலையை முடித்துவிட்டு வருவதற்காக நாளை அதிகப்படுத்தும்படியாகக் கேட்டிருக்கலாம்.

ராஜா இருக்கிற மாதிரியைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுத் தைரியங்கொண்டு, கர்த்தர் தன்னோடிருக்கிறார், தன்னுடைய காரியங்களைச் சித்திபெறச் செய்யப்போகிறார் என்று உணர்ந்து நெகேமியா ராஜாவினிடத்தில் இன்னொரு விண்ணப்பஞ் செய்கிறார்.

அந்தக் காலத்தில், பாரஸீக ராஜ்யமானது இந்து நதியிலிருந்து, மத்தியதரைக்கடல்வரையும் வியாபித்திருந்தது. அதை ஐப்பிராத்து நதி கிழக்கே ஒருபாகமும், மேற்கே ஒருபாகமுமாக இரண்டு பிரிவாகப் பிரித்தது.

நெகே. 2. 7. நதிக்கு அப்புறத்தில் அதாவது, ராஜ்யத்தின் மேல் பாகத்திலிருக்கிற தேசாதிபதிகள் தனக்கு வழிகாட்டி உதவிசெய்யும்படி அவர்களுக்குக் கடிதங்கள் கொடுத்தனுப்பும்படி கேட்டுக்கொண்டார் (வா. 8). இன்னும் சில காரியங்களையும் கேட்டுக்கொள்ளுகிறார். ராஜாவின் வனத்துக்காவலாளனான ஆசாப் என்று பேர்கொண்ட ஒரு மனுஷனிருந்தான். நெகேமியா இந்த வனத்தை பரதீஸ்—ராஜாவின் பரதீஸ்—என்று சொல்லுகிறார். பரதீஸ் என்பது பாரஸீக வார்த்தை. பெயரி = சுற்றிலும், டேசா = சுவர். பாரஸீக ராஜாக்கள் தங்கள் ராஜ்யத்தின் பல இடங்களில், உயர்ந்த சுவர்களால் சூழப்பட்ட நந்தவனங்களாகிய பரதீஸுகளை உடையவர்களாயிருந்தார்கள். இந்தப் பரதீஸுகள் மிகவும் அழகானவைகளும் இன்பமானவைகளுமாயிருந்தன. அங்கே ராஜாக்களும் அவர்கள் சிநேகிதரும் அடிக்கடி சந்தித்து, மனமகிழ்ச்சியாய்க் காலங்கழிப்பார்கள்.

கர்த்தரும் தம்முடைய ஜனங்களுக்கு ஆயத்தம்பண்ணப்போன இடம் பரதீஸுதான். சிலுவையில் தம்மோடு தொங்கின கள்ளனைப் பார்த்து 'நீ என்னுடனேகூடப் பரதீஸிலிருப்பாய்,' என்று சொல்லவில்லையா? பாரஸீக ராஜாக்களின் பரதீஸிலிருந்துதான் இந்தப் புதுப் பெயரை நமதாண்டவர் உபயோகித்திருக்கவேண்டும். கர்த்தர் சொன்னது தம்முடைய தோட்டத்தைப்பற்றி, ராஜாதி ராஜாவின் நந்தவனத்தைப்பற்றி, கர்த்தருக்குள் மரித்தவர்கள் போகிற இடம் அதுதான். அங்கே அவர்கள் கர்த்தரோடு சிநேகமாய், அவருடைய முகத்தைப் பார்த்து, அவரோடு உலாவி, அவரோடு சம்பாஷித்து, ராஜாவின் தோட்டத்திலிருந்து ராஜாவின் அரமனைக்குள் பிரவேசிக்கும் நாள் வரும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆசாப் காவலாளனாயிருந்த இந்தப் பரதீஸ் எங்கேயிருந்ததென்று திட்டமாய்த் தெரியாது. ஆனால் இங்கேதான் யூதராஜாக்கள் உல்லாசமாய்க் காலங்கழித்து வந்தார்கள். இது எருசலேமுக்குச் சுமார் எழுமைலுக்கு அப்பால் ஈடாம் என்ற இடத்தில் இருந்தது. இங்கேதான் சாலோமோன் ராஜாவுக்கு அழகான நந்தவனங்களுண்டு. அதைப் போஷிக்கப் பெரிய தண்ணீர்த் தடாகங்களிருந்தன. அவற்றிற்குத் தண்ணீர் ஒரு மறைவான, முத்திரைபோடப்பட்ட ஊற்றிலிருந்து வரும்.

சாலோமோன் ராஜா தன்னுடைய தோட்டங்களைப்பற்றிப் பேசும்போது பரதீஸ் என்கிறார் (பிர. 2. 5). ‘எனக்காகத் தோட்டங்களையும், சிங்காரவனங்களையும் உண்டாக்கி’ (உன்னத. 4. 13) ‘உன் தோட்டம் மாதளஞ்செடிகளும், அருமையான கனிமரங்களும்’ என்று இப்படியாக சாலோமோன் ராஜா தம்முடைய சிங்காரவனங்களைப்பற்றிப் பேசுகிறார்.

(இன்னும் வரும்)

S. A. Vethanayaham.

## POSITIONS TO WHICH WOMEN HAVE ATTAINED

## ஸ்திரீகள் அடைந்துவரும் உன்னத பதவிகள்

சென்ற வருஷத்தில் நடந்தவைகளைக் கவனித்தால் எந்தெந்த வகைகளில் ஸ்திரீகள் மேன்மையடைந்தார்கள் என்பது தெரியவரும்.

எண்பது வருஷத்துக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட மகத்துவமுள்ள பூகோளசாஸ்திர சங்கத்தில் (Royal Geographical Society) இந்நாள்மட்டும் ஆண்களே சேர்ந்திருந்தார்கள். சென்ற வருஷத்திலேயோ ஸ்திரீகளும் சேரலாம் என்று நூதனமாகச் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி அங்கத்தவர்களாகச் சேருமுன், ஆண்கள் அத்தன்மையில் விசேஷ காரியங்களைச் செய்து முடித்தவர்களாயிருக்க வேண்டியதைப்போலவே, ஸ்திரீகளும் இருக்கவேண்டும்.

அவ்வாறே தேர்ந்திருந்த பெண்மணிகள் சென்ற வருஷத்தில் இருபத்தாறு பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

தாபர சாஸ்திர (British Association) அங்கத்தாரின் சென்ற வருஷக் கூட்டத்தில் தலைமை வகித்தவர் ஒரு ஸ்திரீதான். தத்துவ சாஸ்திர உலகத்தில் பெறக்கூடிய விசேஷ கீர்த்திகளுள் இது ஒன்று. இதுவரையில் ஸ்திரீகள் இந்தவிதமான கீர்த்தி பெற்றதேயில்லை.

லண்டன் சர்வகலா சங்கத்தில் புதிதாகப் பிரசங்கம் நடத்த ஏற்பாடாயிருக்கிறது. தாபர சிலாசத்து சாஸ்திர விஷயமாய் அப்பிரசங்கத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பவரும் ஒரு ஸ்திரீயே. இந்து தேசத்துப் பெண்கள் வைத்தியம் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளுக்காக வருஷந்தோறும் சர்க்கார் 10000 பவுன் செலவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.



லண்டன் நகரத்தில், ஸ்திரீகள் நகரவிசாரணை விஷயங்களைக் (Municipal) குறித்து ஆலோசித்து, அவைகளை நடத்தவும், யோக்கியர்களைத் தேர்ந்து நியமிக்கவும், உதவிசெய்வதற்கு ஸ்திரீகள் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

துருக்கிதேசத்து ஸ்திரீகளுக்காக அத்தேசத்தின் ஸ்திரீ ஒருத்தி ஒரு வர்த்தமான பத்திரிகை பிரசுரித்து வருகிறார்.

ஜெர்மனி தேசத்து வூர்டெம்பெர்க் (Wurtemberg) மாகாணத்து ராஜாவின் ஏகபுத்திரி கிருஷிசாஸ்திரம் படிக்கவேண்டி ஒரு சர்வகலாசாலையில் வித்தியார்த்தியாகச் சேர்ந்திருக்கிறார். இங்கிலாந்து தேசத்தில் பல ஸ்திரீகள் ஒரு ஐக்கியத் தொழில் சங்கம் ஏற்படுத்தி, இருநூறு ஏக்கராவுக்கு அதிகமாகப் பூமி வாங்கி, கிருஷியை வாசிக்கவும் தொழில்செய்யக் கற்பிக்கவும் ஒரு பாடசாலையை ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். அந்நிலத்தில் அவரவர்க்கு ஏற்ற அளவு நிலம் பெற்று, அவற்றில் நானாவிதத் தானியம், காய், பழம், பூ முதலியவைகளைப் பயிர்செய்தும், தேனுக்காக தேனீ வைத்துப் பாதுகாத்தும், மாடுகள், கோழிகள், வளர்த்தும், உற்பத்தியாகும் வஸ்துக்களை விற்பனை செய்தும் விருத்தியாக்கி வருகிறார்கள்.

## A LITTLE GIRL'S FAITH

## ஒரு சிறு பெண்ணின் விசுவாசம்

பல சமயங்களில் நமது ஜெபங்கள் கேட்கப்படாமைக்குக் காரணம் நமது விசுவாசக் குறைவேயாம். கர்த்தர் நமது ஜெபத்தைக் கேட்பார் என்னும் நிச்சயத்துடன் ஜெபிப்போர் ஒருபோதும் வெட்கமடைவதில்லை. நாம் உபத்திரவங்களால் சூழுண்டு கவலைகளால் தாக்கப்பட்டிருக்கும் பல சமயங்களில் கர்த்தருடைய ஒத்தாசையைத் தேடாமல், மனுஷருடைய ஒத்தாசையைத் தேடுவதுண்டு. நம்முடைய சுயமுயற்சிகளால் கவலையைப் போக்கப் பிரயாசப்படுவதும் வழக்கம். ஆனால் பிள்ளைப் பக்தியாய்க் கர்த்தர்மேல் தங்கள் வேலைகளை எறிந்துபோடுவோர் வெகு சிலர். நமது இரட்சகரின் ஆலோசனைக்கேற்ப, நாம் சிறு பிள்ளைகளைப்போல் ஆனாலொழிய, நாம் கர்த்த

ரிடத்தில் இருந்து ஒரு ஒத்தாசையையும் எதிர்பார்க்க முடியாது. பின்வரும் கதையிலுள்ள சிறு பிள்ளையின் விசுவாசம் நமக்கு இருந்தால் உத்தமம்.

மத்தேயு ஸ்மித் என்னுமோர் போதகர் ஒருநாளிரவு வெகுநேரம் சென்று தமது வேலையிலிருந்து வீடுசேர்ந்து தமது படுக்கைக்குப் போனார். அவர் கண்மூடிய சற்றுநேரத்துக்கெல்லாம் அவரோடு தங்கியிருந்த அவருடைய சிநேகிதர் அவரை எழுப்பி, 'தங்களை ஒரு சிறு பெண் பார்க்க விரும்புகிறாள்' என்றார்.

போதகர் வருத்தத்தோடே படுக்கையிலிருந்தபடியே திரும்பிப் பார்த்து: 'எனக்கு அதிக களைப்பாயிருக்கிறது, அந்தப் பெண் நாளைக் காலையில் வரட்டும்; அப்போது அவளைப் பார்ப்பேன்' என்றார். அவருடைய சிநேகிதர் சற்றுநேரத்தில் திரும்பிவந்து: 'தாங்கள் படுக்கையைவிட்டு எழுந்தால் நல்லது அந்தப் பெண்ணைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாயிருக்கிறது. அவள் கந்தை வஸ்திரமணிந்து, தலையில் தொப்பியாகிலும், காலில் ஜோடாகிலும் இல்லாதிருக்கிறாள். அவள் உங்கள் வாசற்படியில் உட்கார்ந்து இருக்கிறாள், நான் ஐயரை அகத்தியம் பார்க்கவேண்டும், பார்க்காமல் போகவேமாட்டேன் என்கிறாள்' என்றார்.

அப்போது போதகர் தமது களையைப் பாராமல் எழுந்து உடுத்திக்கொண்டு வெளிக்கதவைத் திறந்து பார்த்தார். அங்கே ஏழைக்கோலமான ஒரு சிறுபெண் உட்கார்ந்து இருந்தாள். அவளைப் பார்த்தால் தரித்திரமும், துக்கமும், துன்பமும் நிறைந்தவளாய்த் தோன்றிற்று. அவள் போதகரை உற்றுப்பார்த்து, 'கிறிஸ்து எவ்வளவு கெட்ட பாவியையும் இரட்சிக்கக்கூடும் என்று பிரசங்கித்தவர் நீர்தானா?' என்று கேட்டாள். அதற்கவர் 'ஆம்' என்றார். பெண் அவரை நோக்கி 'நான் ராத்திரி உங்கள் பிரசங்கத்தைக் கேட்டேன். தாங்கள் தயவுசெய்து என் வீட்டுக்கு வந்து என் தகப்பனாரை இரட்சிக்கப் பிரயாசப்படவேண்டும்' என்றாள்.

போதகர் 'உன் தகப்பனாரைப்பற்றி என்ன சமாச்சாரம்' என்று கேட்டார்.

அதற்குச் சிறுமி 'அவர் குடியாமலிருக்கிற சமயத்தில் நல்லவர்தான். இப்போது அவருக்கு வேலை கிடையாது. மிதமிஞ்சிக் குடித்து இருக்கிறார். இப்போ அவர் என் தாயாருடைய உயிரைக் கொஞ்சங்குறைய வாங்கிவிட்டார்; ஆனால் மிகவும் கெட்டுப்போன பாவியையுங்கூட இயேசுநாதர் இரட்சிக்கக்கூடுமானால் அவர் என் தகப்பனையும் இரட்சிக்கக்கூடும். தாங்கள் உடனே என் வீட்டுக்கு வரவேண்டும்' என்று கெஞ்சினாள்.



உடனே போதகர் தமது தொப்பியை எடுத்துப் போட்டுக்கொண்டு, அப்பிள்ளையின் பின்னே சென்றார். அவள் வீடு சேர்ந்ததும் ஐயரும் அதற்குள் புகுந்தார். அங்கே எல்லாம் மிகுந்த கோலமாயிருந்தது. அதிக இருட்டும், தரையெல்லாம் சேறும், நாற்றமுமாயிருந்தது. உட்காருவதற்கு ஒரு நாற்காலிகூடக் கிடையாது. குளிருக்கு நெருப்பும் இல்லை. ஒரு மூலையிலே சொற்ப வைக்கோலின்மேல் ஒரு ஸ்திரீ படுத்திருந்தாள்.

ஐயர் வாசற்படியில் நிற்பதைக் கண்ட ஸ்திரீ பெண்ணைக் கூப்பிட்டு, 'ஐயோ என் இந்த அன்னியனை இங்கே அழைத்து வந்தாய்?' என்று கேட்டாள்.

சிறுமி நடந்ததைத் தெளிவாக எடுத்துச் சொன்னாள். போதகர் அந்த ஏழை மனுஷியிடம் பட்சமாய்ப் பேச அவள் தன் வருத்தங்களைப் போதகரிடம் சொன்னாள். தன் புருஷனுக்கு வேலை போய்விட்டது என்றும், அவர் குடியில் மிகவும் முழுகிப்போய், சாப்பாட்டுக்கு அவ்ளிடத்தில் ஒன்றுமில்லாமையால் அவளைக் கத்தியால் குத்தினதாகவும் சொன்னாள். அப்போது அவள் புருஷன் மெத்தைமேல் இருந்தான் ஆனால் அவன் திரும்பிவந்து தன் உயிரை முழுவதும் வாங்கிப்போடுவான் என்று பயந்து இருந்தாள். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அக்குடிகாரன் மெத்தையிலிருந்து இறங்கிவந்தான். அவனைப் பார்க்கையில் பிசாசு பிடித்தவனைப்போலிருந்தது. இரத்தமயமாயிருந்த கத்தி ஒன்றை அவன் பிடித்திருந்தான்.

போதகர்தாமே முன்னொரு காலத்தில் துன்மார்க்கனாயிருந்து, கர்த்தருடைய நடத்துதலால் குணப்பட்டுத் தேறி, தேவ ஊழியரானார். ஆதலால் அவர் அந்த நோயையும் அதின் பரிகாரத்தையும் அறிந்தவர். வெறித்திருந்த அவனோடு எப்படிப் பேசி அவனைச் சரிப்படுத்துவது என்று அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவர் பேசிய சாந்தமான வார்த்தைகளால் அவனுடைய மூர்க்காவேசம் தணிந்து, அண்டையிலுள்ள ஒரு பெட்டியின்பேரில் உட்கார்ந்தான். ஆனால் அவர் அவனோடு இன்னும் பேசிக்கொண்டிருக்கையில் சிறுமி அவரண்டை வந்து: 'ஐயா! தகப்பனாரோடு பேசாதேயும்; அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. பேசுவதினால் அவர் இரட்சிக்கப்படக்கூடுமேயானால், அவர் முன்பேயே இரட்சிக்கப்பட்டிருப்பார். தாயார் அவரிடத்தில் எவ்வளவோ பட்சமாய்ப் பேசியிருக்கிறார். எவ்வளவு கெட்டுப்போன பாவியையும் இரட்சிக்கக்கூடிய இயேசுவை நோக்கி, அவர் என் தகப்பனாரை இரட்சிக்கவேண்டும் என்று கேளுங்கள். அதினால்தான் காரியம் ஆகும்' என்று சொன்னாள். சிறுமியின் விசு

வாசமுள்ள வார்த்தைகளால் அதட்டப்பட்ட போதகரும், நிர்ப்பந்தமுள்ள அந்த மனுஷனும் ஒன்றாய் முழங்காலிலிருந்தார்கள். போதகர் முக்கியமாய்க் குடிவெறியையும் அக்குடிகாரனின் இருதயத்தையும் திருப்பவேண்டும் என்று மிகவும் உருக்கமாய் ஜெபம் செய்தார். இந்த ஜெப வார்த்தைகளால் அவனுடைய இருதயம் உருகிற்று. கர்த்தர் அவன் இருதயத்தைத் திருப்பினார். அவன் கர்த்தருக்குத் தன் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புத் தேடினான். மன்னிப்புப் பெற்றவனாய் அன்று இரவு நித்திரைக்குப் போனான். அடுத்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தன் பிள்ளைகளோடு கோவிலுக்கு ஒழுங்காய்ப் போனான். முழுதும் புது மனிதனாகிக் குடியை விட்டு விட்டான். அவனுக்குச் சீக்கிரத்தில் வேலை கிடைத்தது. அவன் தன் இரட்சகரைப் பற்றிக்கொள்ளும் மெய் விசுவாசியாய் ஜீவனம் செய்து வந்தான். மிகவும் கெட்டுப்போன பாவியையும், கிறிஸ்து ரட்சிக்க வல்லவர் என்று நம்பின தன் பிள்ளையின் விசுவாசத்துக்காகக் கர்த்தரை ஒவ்வொருநாளும் ஸ்தோத்திரித்தான்.

நாமும் நமது நடுவிலிருக்கும் பொல்லாதவர்களைக் கர்த்தர் திருப்ப வேண்டும் என்று உறுதியான விசுவாசத்துடன் ஜெபிப்போமாக. இச்சிறு பெண்ணின் விசுவாசத்தை வெட்கப்படுத்தாத கர்த்தர் நமது ஜெபத்தையும் கேட்கவே கேட்பார்.

P. Joseph Devaraj
Lutheran Mission, Royapuram, Madras.

Tune. Hamburg. L. M.

## PRAYER IN TIME OF DISTRESS

## துன்பகாலத்தில் ஜெபித்தல்

1. நான் ஏங்கிநிற்கும் வேளையில்
நல்வழி காட்டிக் காவுமேன்
நீர் சர்வவல்லவ ராதலில்
நீசனைப் பாருமப்பனே.

2. தொல்லையும் கஷ்ட பாரங்கள்
துன்பங்கள் மெத்த வாகுதே
எல்லையில் நாதா நீரெங்கள்
எக்குறையெல்லாம் போக்குமேன்.



3. என் செய்வேன் என்று ஏங்கினேன்
என் பயம் நீக்கிக் காப்பீரே
வன்தொல்லை மெத்த மெத்தவே
வல்லாவி வந்து காத்திடும்.

4. கூவிடும்போது உத்தரம்
கூறுவமென்ற நாதரே
ஆத்திரத்தோடு வேண்டுவோம்
அடியேனை நீர் ஆற்றுவீர்.

5. பாரும் பாருமென் பார்த்திபா
பார்த்து என் பாரம் நீக்கிடும்
வாரும் வாருமென் வல்லாவி
வள்ளலே யேசே காத்திடும்.

6. கல்லையும் பொன்னும் வெள்ளியும்
கண்டவென் தெய்வமென் றெண்ணேன்
எல்லையில் நித்திய யேகோவா
என் தஞ்சம் நீர்தானப்பனே.

J. I. Christmas.

## THE AFRICAN LION

## ஆபிரிக்காக் கண்டத்து சிங்கம்

கிழக்கு ஆப்பிரிக்காவில் சிங்கங்கள் சாதாரணமாய்க் காணப்படுகின்றன. சிங்கக்குட்டிகள் வருஷத்தின் எக்காலத்திலும் பிறக்கின்றன. தாய்ச்சிங்கத்தின் படுக்கை சிலவேளைகளில் குகையிலும், நீண்டு அடர்ந்த புதர்களிலும் இருக்கும். விசேஷமாக குட்டிகள் எங்கே பிறந்தனவோ அங்கே இரண்டொரு வாரம் தங்கியிருக்கும். தாய் அவைகளை விட்டுவிட்டு வேட்டையாடித் திரும்புவதற்கு இரண்டுநாள் ஆனாலுமாகும். அப்படி விட்டுவிட்டுப் போனாலும் அவைகள் சப்தமில்லாமல் தங்கள் இருப்பிடத்திலேயே இருக்கும். வேட்டை அதிகமாயிருந்தால் பல மாதங்கள்வரைக்கும் முன்னிருந்த இடத்திலேயே இருக்கும். வேட்டை அகப்படாவிட்டாலும் வேறு உபத்திரவம் இருந்தாலும் குட்டிகள் என்ன இளமையாயிருந்தாலும் பெண் சிங்கம் அவைகளுடன் அவ்விடத்தைவிட்டு வேறொரு தகுதியான



இடமகப்படும்வரையில் அலைந்துகொண்டிருக்கும். மூன்று மாதக் குட்டிகளாயிருந்தாலும் அவைகள் வழக்கம்போல் தாயுடன் வெளியே செல்லும். தாய்ச்சிங்கம் வேட்டையாடி வயிறு நிறையத் தின்று குட்டிகளிடத்திற்குப் போகாமல் குட்டிகள் தங்கள் தாயோடு வேட்டையாடித் தின்னும். பூனைக்குட்டிகள்போல், பால்குடிக்கும்போதே மாமிசத்தைத் தின்ன ஆரம்பிக்கின்றன. இளங்குட்டிகளாயிருக்கும்பொழுதே அவைகள் சிறு மிருகங்களையும், பறவைகளையும் கொல்ல ஆரம்பிக்கின்றன. நாலைந்துமாதமாய்விட்டால் சிலவேளைகளில் தாய் ஒரு மிருகத்தை அடித்து வீழ்த்தினால் உடனே குட்டிகள் அதைக் கொன்றுவிடும். இப்படியே இருந்து அவைகள் வெகுசீக்கிரத்தில் தாங்களே வேட்டையாடத் துணிந்துவிடும்.

## குடும்ப வாழ்க்கை

சிங்கங்களின் குடும்ப வாழ்க்கை நிலையற்றது. அநேகமாய் கிழச்சிங்கம் தனித்து இருக்கும். சிலவேளை இரண்டாண் சிங்கங்



கள் ஒன்றாகச் சேர்ந்து வேட்டையாடி ஜீவிக்கும். முக்கியமாக ஆண் சிங்கமும் பெண்சிங்கமும் ஒன்றாகவிருக்கக் காணலாம், அப்பேர்ப்பட்ட ஒற்றுமை நீடித்திருக்கும். அடிக்கடி ஒரு ஆண் சிங்கம் மூன்றுநான்கு பெண் சிங்கங்களுடன் ஒரு கூட்டமாக வசிக்கும். சிலவேளைகளில் இரண்டு மூன்று பெண் சிங்கங்கள்மட்டும் ஒன்றாக வசிக்கும். சிலவேளைகளில் பெண்சிங்கங்கள் திக்கற்று இருப்பதும் உண்டு. இரண்டு மூன்று ஆண்சிங்கங்களும் அநேக பெண் சிங்கங்களும் ஒன்றாக வசிக்க நேரிடும். ஆனால் அப்பேர்ப்பட்ட சேர்க்கை நீடித்து நிற்காது.

## கர்ஜ்ஜனை

சிங்கம் பெருத்த சப்தம் செய்கிற மிருகம். அவைகள் கூட்டமாய் வசிக்கும்பொழுது செய்கிற சப்தம் அதிகம் கொஞ்சமாயிருக்கும் பொர்ழுது சப்தம் குறைவு அவைகள் இராக்காலங்களில் தான் கர்ஜ்ஜிக்கும். முதலில் கிழச்சிங்கம் கர்ஜ்ஜிக்க ஆரம்பிக்கிறது. பிற்பாடு மற்றவைகளும் மெதுவாக ஆரம்பித்து வர வர, அநேக மைல் தூரம் கேட்கும். அவற்றின் கர்ஜ்ஜனை இடிமுழக்கம்போல் இருக்கும். கர்ஜ்ஜனையானது வரவரக் குறைந்துகொண்டே நிசப்தமாய் விடுகிறது. பொதுவாகச் சிங்கங்கள் தங்களுடைய இரை அகப்படும் வரையில் சப்தம் செய்யாமல் அமைதியாயிருக்கின்றன.

ஆனால் ஒவ்வொரு சமயத்தில் மற்றச் சிங்கங்களுக்குத் தெரியும் பொருட்டாவது, கோபத்தாலாவது, தங்களிருப்பிடத்திலிருந்து இரைதேடுமிடத்திற்கு இருட்டில் போகும்பொழுது, அடிக்கடி கர்ஜ்ஜிக்கின்றன. அவைகளிரைதேடுமிடத்திற்கு வந்தபின் அமைதியாயிருப்பதே வழக்கம். சிங்கங்கள் தங்களுக்கு இரையாகிற மிருகங்களைப் பயமுறுத்தும்படியான கர்ஜ்ஜனை செய்யாது, ஆனபோதிலும் வேட்டையாடும்பொழுது எதாவதொரு பசித்த சிங்கம் இருட்டில் அழுகைபோன்ற சப்தம் செய்யும். சில சமயங்களில் ஒரு பெண் சிங்கம் தன்னுடைய குட்டிகளை இழக்க நேர்ந்தாலும், இரண்டு சிங்கங்களில் ஒன்று சுடப்பட்டாலும் இராக்காலத்தில் மிகவும் உரத்த சப்தத்துடன் கர்ஜ்ஜிக்கும்; சிலவேளைகளில் கொல்லப்பட்ட இடத்தின் அருகாமையிலிருந்துகொண்டு கத்தும்; இன்னுஞ் சிலவேளைகளில் திரிந்துகொண்டிருக்கும்பொழுது கத்தும். கிழச்சிங்கங்கள் ஒன்றைச் சண்டைக்கிழுப்பதுபோல ஓயாமல் கர்ஜ்ஜிக்கும். ஒரு கூட்டம் கர்ஜ்ஜிக்க ஆரம்பித்தால், கூப்பிடு தூரத்திலிருக்கிற மற்றச் சிங்கங்களும் கர்ஜ்ஜிக்க ஆரம்பிக்கும்.

## இருப்பிடம்

சிங்கங்கள் பகற்காலத்தில் காடுகளில் படுத்துறங்கினாலும், குடியிருக்கும் வீடு அவைகளல்ல. விசாலமான மைதானங்களிலும், புதர்களிலும், தோப்புகளிலும் மத்தியான வேளைகளில் படுத்துறங்கும். நதியோரங்களில் இருக்கும் புதர்களிலாவது குட்டைகுளங்களின் கரையோரங்களில் இருக்கும் புதர்களிலாவது படுக்கும்.

நீண்டுவளர்ந்த புற்களிலும் படுக்கும். சிலவேளைகளில் உயர்ந்த மேடையிலாவது, மலைச்சார்பிலாவது சிறு புதர்களிலாவது கண்ணுக்குக் காணாமல் உறங்கும். புல் நீண்டிருந்தால் தங்கள் இரைகளை எளிதில் அடைவதோடு மனிதர் பார்வையிலிருந்து தப்பித்துங் கொள்ளுகின்றன. எங்கே புதர் அடர்த்தியாயும், வனம் அடர்த்தியாயும் விசாலமாயும் இருக்குமோ அங்கே யார் வந்தாலும் அவைகளுக்குப் பயமில்லை. மிக்க தொந்தரவு செய்யப்பட்டால் அவைகளுக்கு மிகுந்த கோபமுண்டாகிவிடுகிறது.

சிங்கங்கள் தூக்கத்தில் காலத்தையெல்லாம் கழித்தபோதிலும் அவைகள் வெளியில் உலாவுவதைப் பார்க்கலாம். அவைகள் அடிக்கடி சூரியோதயமானபிறகும், இருப்பிடத்திற்குத் திரும்பும். பிறகு வீட்டைவிட்டு சூரியாஸ்தமனத்திற்குமுன்னாலேயே புறப்படும்.

(இன்னும் வரும்.)

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ௵ மேயீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | மத். | 22. | 15—38 | 12 | செ. | மத். | 25. | 31—46 | 22 | வெ. | மத். | 27. | 55—66 |
| 2 | ச. | ,, | 22. | 34—46 | 13 | பு. | ,, | 26. | 1—13 | 23 | ச. | ,, | 28. | 1—10 |
| 3 | ஞா. | ,, | 23. | 1—12 | 14 | வி. | ,, | 26. | 14—25 | 24 | ஞா. | ,, | 28. | 11—20 |
| 4 | தி. | ,, | 23. | 13—26 | 15 | வெ. | ,, | 26. | 26—41 | 25 | தி. | மல். | 1. | 1— 9 |
| 5 | செ. | ,, | 23. | 27—39 | 16 | ச. | ,, | 26. | 42—56 | 26 | செ. | ,, | 1. | 10—14 |
| 6 | பு. | ,, | 24. | 1—14 | 17 | ஞா. | ,, | 26. | 57—68 | 27 | பு. | ,, | 2. | 1—10 |
| 7 | வி. | ,, | 24. | 15—28 | 18 | தி. | ,, | 26. | 69-75; | 28 | வி. | ,, | 2 | 11—17 |
| 8 | வெ. | ,, | 24. | 29—41 | | | | 27. | 1—10 | 29 | வெ. | ,, | 3. | 1— 7 |
| 9 | ச. | ,, | 24. | 42—51 | 19 | செ. | . | 27. | 11—25 | 30 | ச. | ,, | 3. | 8—18 |
| 10 | ஞா. | ,, | 25. | 1—13 | 20 | பு. | ,, | 27. | 26—38 | 31 | ஞா. | ,, | 4. | |
| 11 | தி. | ,, | 25. | 14—30 | 21 | வி. | ,, | 27. | 39—54 | | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

OFFICE OF ... MADRAS. 5 ... 1914

# மாதர் போதினி

No. 198 ஜூன் 1914 No. 6



## THE BIRD THAT SANG IN THE NIGHT

## இரவில் பாடுங் குருவி

1843-ம் வருஷத்திலே ஜென்னி லின்ட் (Jenny Lind) என்றொரு பேர்போன பாடகி இருந்தார். இவருக்கு இருபத்து மூன்று வயதாயிருந்தாலும், இவருடைய இனிமையான சாரீரத்தினாலும் பாட்டுகளினாலும், பல அரசர்களிடமிருந்தும் பிரபுக்களிடமிருந்தும் பெரியபெரிய மரியாதை பெற்றுவந்தார். இவருக்கு 'இரவில் பாடுங் குருவி' என்ற பட்டப்பெயருமுண்டு.

இவர் ஊர் ஊராய்ப் போய், பெரிய கூட்டங்களிலே பாடி ஜனங்களைச் சந்தோஷப்படுத்திவந்தார். போன இடங்களிலெல்லாம் இவரது பாட்டுகள் மாத்திரமல்ல இவரது அன்பான வார்த்தைகளும், அருமையான செய்கைகளும் ஜனங்களால் இன்னும் மறக்கக்கூடவில்லை.

ஒருதடவை டென்மார்க்கு தேசத்திலுள்ள கூப்பன்ஹேகன் என்னும் பட்டணத்திற்குப் பாட்டுப் பாடும்படி இந்த அம்மாள் போயிருந்தார்கள். அந்தப் பட்டணத்திலே பீற்றர்சன் என்றொரு வியாதி

யஸ்தன் இருந்தான். அவனுக்குப் பாட்டுகள் என்றால் மெத்தப் பிரியம். தான் அந்த அம்மாளுடைய பாட்டைக் கேட்கக்கூடாமலிருக்கிறதைப்பற்றி அதிக துக்கப்பட்டுக்கொண்டிருந்தான்.'

இந்தச் செய்தி எப்படியோ ஜென்னி அம்மாள் காதுக்கு எட்டிவிட்டது. அவருக்கு நேரம் கிடைப்பது எவ்வளவோ கஷ்டம் இருந்தாலும், ஒரு ஓய்வுநாள் சாயங்காலம் ஒருவருக்குந் தெரியாமல் பீற்றர்சன் என்பவனுடைய வீட்டிற்கு வந்து நல்ல பாட்டுகளைப் பாடி, அவனைச் சந்தோஷப்படுத்தினார். இப்படி எதிர்பாராத இந்தப் பெயர்பெற்ற பாடகி, தன்மேல் ஞாபகம் வைத்து, தன் வீட்டிற்கு வந்ததினாலே அவனுக்கும், அவன் மனைவிக்கும் உண்டான சந்தோஷத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவேயில்லை. அவர்கள் இரண்டு பேரும் அதிக நன்றியறிதலோடு அவர்களுக்கு வந்தனம் சொல்லி வழியனுப்பினார்கள். ஜென்னி லிண்ட் அம்மாள் இறந்து வெகுகாலம் சென்றுபோயிற்று; ஆனால் அவர்கள் பேர் இன்றும் மறக்கவில்லை.

இனிமேல் நம்மைப்பற்றியும் அப்படிச் சொல்லக்கூடுமா? எங்கும் நன்மைசெய்கிறவராகச் சுற்றித்திரிந்த இரட்சகருக்காக நாமும், பட்சமான வார்த்தைகளைப் பேசி அன்பான செயல்களைச் செய்துவருவோமாக. 'உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே.' (எபி. 6. 10.)

## THE KING'S CUP BEARER. (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### III. அத்தியாயம். தயவுள்ள கரம்

நெகேமியாவுக்கு மூன்று விஷயங்களுக்காக மரம் தேவையாயிருந்தது. இவற்றை வனக்காவலாளனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படியாக ராஜாவினிடத்திலிருந்து ஒரு அனுமதிச் சீட்டு வாங்கிக் கொள்கிறார்.

(1) ஆலய அரணின் கதவுக்காக மரம் வேண்டியதாயிருந்தது. இந்த அரண் ஒரு கோபுரம். இது ஆலயத்தின் வடமேற்கு மூலையிலிருந்தது இது ஆலயப் பிராகாரங்களுக்குக் காவலாயிருந்தது.

(2) அலங்கத்திலுள்ள வாசல்களுக்குக் கதவுகளுக்காகவும்,

(3) தான் தங்கப்போகும் வீட்டின் கதவுக்காகவும் மரம் தேவையாயிருந்தது. எல்லாம் கொடுக்கப்பட்டது. ராஜா தம்முடைய



காரியதரிசியை அழைத்து, நதிக்கப்பாலுள்ள தேசாதிபதிகளுக்கும் ஆசாவுக்கும் கடிதங்களை எழுதிக்கொடுக்கக் கட்டளையிட்டார். எல்லா விஷயமும் இவ்வளவு தூரம் கைகூடி வந்ததற்காக நெகேமியா பெருமைகொள்ளவில்லை. தம்முடைய தைரியம், ஞானம், யூகம் இவைகளைப் புகழ்ந்து பேசிக்கொள்ளவில்லை. தாம் கர்த்தரிடத்தில் ஜெபத்தில் தரித்திருந்ததற்கு நேராய்க் கிடைத்த உத்தரவு என்று நன்றாய் அறிந்திருந்தார். இது கர்த்தருடைய செயலேயொழிய தம்முடைய செயலல்ல என்று உணர்ந்தார். 'என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.'



எஸ்றாவின் பிரமாணம் (Motto) இதுதான். மறுபடியும் மறுபடியும் சொல்லுகிறார் (எஸ்றா. 7. 6, 9, 28; 8. 18, 22, 31). தாம் விடுவிக்கப்பட்டதும், தமக்குச் சகலவித இரக்கங்கள் கிடைத்ததும், கர்த்தருடைய தயவுள்ள கரம் தம்மோடு இருந்ததினால்தான் என்கிறார். தம்முடைய துதியிலும், தம்முடைய ஜீவியத்தின் எல்லாச் சமயங்களிலும், இதுவே அவருடைய விசேஷித்த வார்த்தையாயிருந்தது. நெகேமியா எஸ்றாவைப் பார்க்கவில்லை. ஒருவேளை ஆனானி எஸ்றாவுடைய கூட்டாளியாயிருந்தபடியால்; இந்த வார்த்தைகளை நெகேமியாவுக்குச் சொல்லியிருக்கலாம். ராஜாவோடு பேசவேண்டிய இந்தக் கஷ்டமான நேரத்தில், தம் சகோதரனைச் சந்தோஷப்படுத்தி, தைரியப்படுத்தும்படியாக, எஸ்றா அடிக்கடி உபயோகித்த இந்த வார்த்தைகளை நெகேமியாவின் கஷ்டமான நேரத்தில் உபயோகிக்கும்படியாக ஆனானி சொல்லிக்கொடுத்திருக்கலாமே. அப்படியிருந்தால், தம்முடைய வேலை முடிந்தவுடன் எஸ்றாவின் தங்கப்பிரமா

ணம் தமக்கும் பிரயோஜனமாயிருந்ததைத் தம் சகோதரனிடத்தில் சொல்ல விரைந்து சென்றிருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. 'என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேலிருந்தபடியால்' என்பதே அந்தத் தங்கப்பிரமாணம்.

'என் தேவனுடைய தய்வுள்ள கரம்' எவ்வளவு அருமையான வார்த்தைகள். கஷ்டம் வரட்டும், சோதனை வரட்டும், மரணம் வந்தாலும் வரட்டும், நான் பயப்படேன். என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருக்கிறது. அந்த அருமையான கைகளிலிருந்து ஒருவரும் என்னைப் பிடுங்கிப்போடமாட்டார்கள். கர்த்தாவே என்னுடைய நேரமெல்லாம் உம்முடைய கரத்திலிருக்கிறது. மோசம் வருமென்கிற பயமேயில்லை. இந்தத் தயவுள்ள கரத்தின்கீழ்ப் பத்திரப் படுத்தப்பட்டிருப்பது எவ்வளவு பாக்கியமான காரியம்! ஆனால் இதே கரம் தீமைசெய்கிறவர்களுக்கு எதிர்த்து நிற்கிறது. நான் இந்தக் கரத்தின்கீழ் அடங்கியிருக்கிறேனா? அல்லது இந்தக் கரம் எனக்கு விரோதமாயிருக்கும்படி நடந்துகொள்ளுகிறேனா?

இப்பொழுது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. சேகரிக்கப்பட வேண்டியதெல்லாம் சேகரம் பண்ணியாய்விட்டது. நெகேமியாவும், ஆனனியும் ராஜ சேவகரோடு தங்கள் நீண்ட பிரயாணத்தை ஆரம்பிக்கிறார்கள். தாவீதின் நகரமாகிய எருசலேமைப்பற்றி எத்தனை தரம் சொப்பனங் கண்டிருப்பார், அதைப் பார்க்க எவ்வளவாய் ஆசித்திருப்பார்! கடைசியாக இப்போ அவருடைய விருப்பம் நிறைவேறப்போகிறது. 'எருசலேமே உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயின' என்ற பாட்டைப் பாடக்கூடாதவர்களாயிருந்தார்கள். ஏனென்றால் அந்த நகரத்தின் வாசல்களெல்லாம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடந்தன. ஆனால் அநேகமாய் இந்தச் சமயத்தில் எழுதப்பட்ட 102-ம் சங்கீதத்தைப் பாடியிருப்பார்கள்.

'தேவரீர் எழுந்தருளிச் சீயோனுக்கு இரங்குவீர், அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது.' 'உமது ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சைவைத்து அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள்.'

அவர்கள் ராஜாவின் மனுஷரோடு பிரயாணம் செய்தபடியால், அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் நேரிடவில்லை. ஆனால் இந்தக் கடிதத்தை, நதிக்கப்புறத்திலிருக்கும் அதிபதியினிடம் கொடுத்த போதோ, ஏதோ தொந்தரவு நேரிடப்போகிறதென்று நெகேமியா அறிந்துகொண்டார். அவர்களில் ஒருவர் சமாரியாவின் அதிபதியாகிய சன்பல்லாத்து என்பவர். இது அசீரியா பாபிலோனியப் பெயர். சமாரியாவில் வந்து குடியேறின பாபிலோனியக் குடும்பங்



களிலிருந்து தோன்றினவராயிருக்கவேண்டும். அந்தப் பேருக்கு 'சந்திரபகவான் ஜீவனைக் கொடுக்கிறவர்' என்பது அர்த்தம். இவர் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர். இவருடைய சொந்த ஊர் மோவாபிலுள்ள ஆரோநேம்.

இந்தச் சமாரிய அதிபதியோடு அவருடைய காரியதரிசியாகிய தொபியா என்ற லோத்தின் சந்ததியைச்சேர்ந்த ஒருவர் இருந்தார். இவருக்குச் சன்பல்லாத்துடைய தயவு அதிகமாய்க் கிடைத்தது.

ராஜாவின் கடிதத்தை சன்பல்லாத்திற்கு வாசித்துக் காட்டினது இந்தத் தொபியாவாகத்தானிருக்கவேண்டும். கடிதத்திலடங்கிய சங்கதிகளை வாசித்த உடனே இருவருக்கும் முகம் வேறுபட்டது. இன்னும் அரபியனான கெஷேம் என்றொருவர் சன்பல்லாத்துடைய சிநேகிதராயிருந்தார். இவரும் அங்கேயிருந்தார். இவர் அரபியருக்குத் தலைவரும், ஏசாவின் சந்ததியாருமாயிருந்தார்.

சன்பல்லாத்து, தொபியா, கெஷேம் இம்மூன்று பேரும், எருசலேமின் வாழ்வை விரும்பி, பாரஸீகத்திலிருந்து ஆட்கள் அனுப்பப்பட்ட சங்கதியை அறிந்து, அவர்களுக்குண்டான மனவெறுப்பை அடக்கிக்கொள்ளக் கூடாதவர்களாயிருந்தார்கள். யூதர்களை அவ்வளவாகத் தங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போட்டிருந்தார்கள். ஆகையால்தான் யூதர்கள் அவர்களை எதிர்க்கக் கூடாதவர்களாயிருந்தார்கள், ஆனாலோ, இங்கே சூசான் அரமனையிலிருந்து ஒரு மனிதன் அனுப்பப்பட்டிருக்கிறான். ராஜாவினிடத்திலிருந்து கடிதமும், எருசலேமைக் கட்டி காபந்துசெய்ய அதிகாரமும் பெற்றிருக்கிறான்.

அந்த நிமிஷமுதலே சன்பல்லாத்தும் அவருடைய சிநேகிதரும் நெகேமியாவின் பிராண சத்துருக்களானார்கள்; தங்களால் கூடிய மட்டும் பயமுறுத்தவும் எதிர்க்கவும் தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள்.

கடைசியாக இவர்களுடைய நெடும்பிரயாணம் முடிவுபெற்றது. நெகேமியா எருசலேமில் போய்ச் சேருகிறார். தாம் இன்னவிஷயமாய் வந்தார் என்பதை ஒருவருக்கும் சொல்லவில்லை. மிகவும் களைப்படைந்தவராய் ஒரு சிநேகிதனுடைய வீட்டிற்குப் (ஒருவேளை தம்முடைய சகோதரனாகிய ஆனனியின் வீடாயிருந்தாலுமிருக்கலாம்.) போய் மூன்றுநாள் இளைப்பாறினார்.

மூன்றாம் நாளிரவு ஊரடங்கினபிறகு, இவர் எழுந்து ஒரு கோவேறுகழுதையின்மேல் ஏறிக்கொண்டு, சில உத்தம கூட்டாளிகளோடு, எருசலேமின் அழிவைப் பார்வையிட்டு, அலங்கம் எப்படியிருக்கிறது, அவைகளைச் சீர்ப்படுத்த என்ன செய்யலாம் என்று அறியும்படியாகவும் போகிறார்.

தென்பக்கமாய்ப் புறப்பட்டு, சுபகாலத்தில் பள்ளத்தாக்குவாசல் (கின்னப் பள்ளத்தாக்கு ஓரமாய் இருந்தது) என்றழைக்கப்பட்ட அந்த வாசல் வழியாய்க் கணவாய்ப்பக்கம் திரும்பி, கிழக்காகப் போனார். அப்பொழுது சந்திரனுடைய பிரகாசமும் மங்கலாயிருந்தது. அந்த வெளிச்சத்தில் குப்பைகள் குவியல் குவியலாகக் கிடக்கிறதையும், நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னதாக அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிற வாசல்களையும் பார்க்கக்கூடியதாயிருந்தது. அங்கிருந்து வலுசர்ப்பத் துரவைக் கடந்துபோனார். இந்தத் துரவைப் பற்றி அதிகமாய்த் தெரியவில்லை. இது சில சமயங்களில் அராபியரால் தாய்ப்படிகள் என்று அழைக்கப்படுகிற கன்னி ஊற்று (Virgin's fount) என்று நினைக்கப்படுகிறது. தாய்ப்படிகள் என்றழைக்கப்பட்ட காரணமென்னவென்றால், அந்த ஊற்றுக்கு இருபத்தேழு படிகள் செங்குத்தாய் இருந்தன. எருசலேமுக்குச் சமீபமாய் இந்த ஒரு ஊற்றுத்தானுண்டு. இதிலிருந்துதான் சீலோவாம் குளத்திற்கு அடிச்சுரங்கத்தின் வழியாய்த் தண்ணீர் கொண்டுபோகப்படும். அந்த ஊற்றின் தண்ணீர் விட்டுவிட்டு ஓடும். அதாவது திடீரென்று பெருகி ஓடும், திடீரென்று நின்றுபோகும். டாக்டர் ராபின்சன், டாக்டர் ஸ்மித் (Dr. Robinson and Dr. Smith) என்ற இரண்டு பரிசோதனைக்காரர், இந்த ஜலத்தை அளவிட வந்தார்கள். அளந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று பெருகினதாம், அஞ்சுநிமிஷத்துக்குள் ஒரு அடி பெருகி, இன்னும் பத்து நிமிஷங்களுக்குள் ஓட்டம் நின்றுபோய் முந்தின அளவுக்கு வந்துவிட்டதாம்.

முற்காலங்களில் சாதாரண ஜனங்கள், அந்த ஊற்றினடியில் கண்ணுக்குத் தெரியாதபடி ஒரு வலுசர்ப்பம் படுத்திருப்பதாகவும், அது விழித்திருக்கும்போது தண்ணீர் ஓடாதபடி தடுத்துவிடுவதாகவும், எப்போதும் விழித்திருப்பது மிகவும் கஷ்டமாகையால் தூங்கிவிடுவதாகவும், அப்படித் தூங்கும்போது தண்ணீர் ஓடுகிறதாகவும் நம்பினார்கள். தற்காலத்திலும் அந்த எண்ணமுண்டு.

நெகேமியாவோடு போகிறவர்கள் எவ்வளவு ஆவலாய் ஒவ்வொன்றையும் காண்பிக்கிறார்கள்! ஆனானியும் நெகேமியாவோடேகூட நடந்து தாம் அதிகமாய் அறிந்த இடங்களையும் வஸ்துக்களையும், சொல்ல மாத்திரம் கேள்விப்பட்டு ஆனால் இப்போ பார்த்து அதிசயப்பட்ட தம் சகோதரனுக்கு விவரமாய்க் காண்பிக்கிறார். கின்னப் பள்ளத்தாக்கைக் கடந்து குப்பைமேட்டு வாசலுக்கு வருகிறார்கள். இந்த வாசலுக்கு வெளியே எல்லாக் குப்பையையும் எச்சில் முதலிய அழுக்குகளையும் எறிந்துவிடுவார்கள். அது அருகேயுள்ள பள்ளத்தாக்கில் விழுந்து அழுகிப்போகும். இங்கே விழுந்துபோன கல்



வேலைகள் எப்படிப்பட்டதென்றும், நிற்கிற அலங்கத்தின் கொஞ்ச பாகம் என்ன நிலைமையிலிருக்கிறதென்றும், சுட்டெரிக்கப்படுமுன் வாசல்கள் இருந்த இடம் வெறுமையாயிருக்கிறதையும் பரிசோதித்தறிகிறார்.

பிற்பாடு, ராஜாவின் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்ட சீலோவாம் குளம் அல்லது ராஜாவின் குளத்திற்கு எதிரேயுள்ள ஊற்று வாசலுக்கு வருகிறார். இந்தத் தென்கிழக்கு மூலையில் குப்பைகள் ஏராளமாயிருந்தபடியால், அவர் ஏறியிருந்த மிருகம் நடக்கக்கூடாமற்போயிற்று. கற்களும், உடைந்த துண்டுகளும் குவியல் குவியலாய்க் கிடந்தபடியால், அதற்கு அப்பால் போவது கூடாத காரியமாயிருந்தது. ஆகையால் நெகேமியா இறங்கித் தான் ஏறியிருந்த மிருகத்தை ஒரு ஆளிடம் ஒப்புவித்து, கால்நடையாய் இன்னும் கொஞ்சத் தூரம் போகிறார். கீதரோன் பள்ளத்தாக்கண்டைபோய்க் கீழ்கிணற்றைச் சோதித்துப் பார்த்தபோது மற்றவைகளைவிட இது நல்ல நிலைமையிலிருந்ததாகக் காணப்பட்டது. திரும்பி மேற்காக வந்து தான் விட்டுவந்தவர்களோடு சேர்ந்து பள்ளத்தாக்கின் வாசலுக்குப் போகிறார்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## THE INDIAN WIFE

## இந்திய மனைவி

மனைவி என்ற பதத்திற்குப் பிரதியாக வீட்டுக்காரி அல்லது அகத்துக்காரி, இல்லாள் என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. இவை ரூபத்தில் வித்தியாசப்பட்டவைகளாக இருந்தாலும், அர்த்தத்தில் ஒன்றாய்க் காணப்படுகின்றன. மனைவி = மனை + இ. மனை = வீடு; இ = பெண்பாலைக் காட்டும் விகுதி; அதாவது வீட்டுக்காரி. மனை என்ற வார்த்தை திராவிடபாஷை எதிலும் வழங்குவதாம். அதிலும் கன்னடத்தில் சர்வ சாதாரணம். வீடு, அகம், இல் ஆகிய மூன்றும் ஒன்றே. காரி என்பது காரியம், (அதாவது வேலை, தொழில், அலுவல், உத்யோகம்) என்ற வார்த்தையிலிருந்து உண்டானதாகலாம். கடைக்காரி, ஆப்பக்காரி என்ற அந்தந்தத் தொழிலை நடத்துபவளைக் குறிக்கும். இவற்றைப்போலவே வீட்டுக்காரி, அகத்துக்காரி என்றதும் வீட்டுக் கிருத்தியங்களைச் செய்கின்றவளுக்கு ஆயிற்று. பணைக்காரி என்பதைப்போல,

பணத்துக்குச் சொந்தக்காரி என வருவதும் உண்டு. ஆனால் சம்பளத்துக்கோ கூலிக்கோ ஊழியம் செய்பவள் என்பது ஆகாது. அந்த அர்த்தத்தைக் கொஞ்சமும் கொள்ளாதிருக்க, அடுத்த இல்லாள் என்னும் பதம் உதவுகிறது. இல்லாள் = இல் + ஆள்; அதாவது வீட்டை ஆளுகிறவள் என்பதாம். ஆகவே இந்தப் பதங்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் குறிப்பனவாயின.



வீடு என்று இருந்தால் அதன் அலுவலைக் கவனிக்கவும் வேண்டும், அதற்குச் சொந்தமான ஆளும் வேண்டும், அதை ஆளுகிற எஜமானனும் வேண்டும். பார்க்கப்போனால், இவை மூன்றும் ஒருமிக்க மனைவியின்பேரில் சுமத்தப்பட்டிருக்கின்றன. இப்படி யிருக்கும் நிலைமைக்கே இல்லறம் என்று பேர். முன்சொன்ன மூன்று காரியத்திற்கும் ஆள் ஏற்பட்டிருப்பதால், இந்த அறமே (= நிலைமையே) சிறந்தது என்பதைத் தமிழ் மூதாட்டியாரான ஔவையார் 'இல்லான்



அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' ஆதலால் 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று' என்பதாக ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார். இனி, அறம் என்னும் தமிழ்ப்பதத்திற்கு, சமஸ்கிருதத்தில் வழங்கும் தர்மம் என்ற வார்த்தையை அர்த்தமாகச் சொல்லிவருகிறோம். சாதாரணமாக அது சரிதான்; என்றாலும் தர்மத்தைப் பிச்சையிடல் என்றதில்மட்டும் குறுக்கிக் கொண்டுள்ளதுதான் குறைவாகக் காண்கிறது. அறமும் தர்மமும் இதையும் இன்னும் வெகு விரிவான பெரிய கனத்த பொருளையும் அடக்கியுள்ளது. பொதுவில் சன்மார்க்க காரியங்கள் எல்லாவற்றையும் (நல்லொழுக்கத்தை யெல்லாம்) ஏகோபித்துக் காட்டும் பதமாகக்கொள்ளலாம். இதையெல்லாம் மெஷின் ஆடுவது போல், ஏனோதானோ என்று செய்யாமல் 'இது நல்லது, நல்லதைச் செய்யவேண்டியது சரிதான்' என்று மனப்பூர்வகமாய் நடத்தவேண்டும். சுருக்கினால் இத்தனையும் 'மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றினாலும், உன்னாலானமட்டில் எப்போதும் அறத்தை நடத்து' என்னலாம்.

புருஷன் என்ற சமஸ்கிருத பதம் பொதுப்பட ஆண்பிள்ளையைக் குறிக்கும். ஆனால் தமிழர் அதைப் பெண்சாதி கட்டிய ஒருவனுக்கே வழக்கத்தில் சொல்லிவருகிறார்கள். புருஷன் பெண்சாதி என்பதைக் கவனிக்க. அதனால் ஒருத்தியைக் கட்டிக்கொண்டு, தன் வீட்டை ஆளும்படி அவளை நியமித்துவிட்டுக் காரியங்களையெல்லாம் ஒழுங்காய் நடத்துவதற்கே இல்லறம் என்று பேர். இப்படி நடக்கும் ஒழுங்கில் அல்லது மார்க்கத்தில் காணலாகும் பிரமச்சாரி, வானப்ரஸ்தன், சந்நியாசி ஆகிய மற்ற மூன்று நிலைமைகளிலும் நடப்பவர்களை ஆதரிக்கவேண்டும். இதுதான் இல்லறத்தின் கருத்து: கேவலமான தேக இன்பம் அல்ல.

இனி, வீட்டுக்காரி (மனைவி) இல்லாத வீடு வீடல்ல; அவளுக்கு ஏற்பட்ட கடமையோ அபாரமானது; அப்படிப்பட்டவள் என்னென்ன தன்மையளாக இருக்கவேண்டும்? இதைச் சிறிது யோசிப்பது அவசியம். பக்தன் குசேலன் மனைவி சுசீலை என்பவள் நல்ல பேரெடுத்தவள். அவள்

'மாசிலாக் குலத்து வந்தாள்; வருவிருந்து உவப்ப ஊட்டும்
நேசம் மிக்குடையாள்; கொண்கன் நினைப்பறிந்து ஒழுகும் சீரான்;
தேசுறு வாய்மை மிக்காள்; சினத்திடல் என்றும் இல்லாள்;
பேசுதிண் கற்புவாய்ந்தாள்; பெற்றதே கொண்டு உவப்பாள்.'

இவைதவிர இன்னும்,

(1) பெரிய மனசு.
(2) நல்ல நடத்தை.

(3) புருஷனிடம் அத்தியந்த நேசம்.

(4) அவனுடைய கீர்த்தியிலேயே சதா கவனம்.

(5) கணவனது வரும்படிக்குத் தக்கபடி செலவிடல், ஆகிய சுகுணங்கள் உள்ளவளா யிருக்கவேண்டும். இப்படியே இன்னும் பல சொல்லலாம். ஆனால் அவள் சிறிதும் தாறுமாறாக இருக்கலாகாது. அப்படிப்பட்ட மனைவியோடு வாழ்வதிலும் சந்நியாசம் மேல் என்று சொல்லும் ஒரு பாட்டும் உண்டு. 'இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல், அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்.' வீட்டில் இருக்க நேரும் மாமன், மாமி, மைந்தன், கொழுந்தன் ஆகிய மற்றவர்களிடத்தில் இதமாய் நடந்துகொள்ளாப் பெண்சாதி யமனேதான்.

வீடு என்ற பெயர் விடு என்ற வினையிலிருந்து பிறந்தது. புருஷன் வெளியேபோய் உழைத்துப் பலவித அசௌகரியங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகி, பின் வீட்டுக்கு வந்ததும், அவ்விடத்திலே முந்திய கஷ்டங்கள் இல்லாமல் அவைகளிலிருந்து விடுவிக்கப்படுகிறான். இந்த வீடு வீடாவதற்கு மனைவி அவசியம் என்றும், அவள் அநந்தம் நல்ல குணமுள்ளவளா யிருக்கவேண்டும் என்றும், அவற்றில் ஒன்றிலேனும் பின்னடைதல் கேட்டுக்கு ஆதாரம் என்றும் சொன்னோம். இந்தச் சமயத்தில் இவளது குணங்களுக்கு நேர்படப் புருஷனுக்கு முறையே ஏற்படவேண்டிய லக்ஷணங்களையும் கவனிக்கவேண்டும் அல்லவா? இதுவிஷயமாய்த் தமிழில் பார்க்கலாம் என்றால் அதிக அருமை. உள்ள சிலவும், பொதுவாகப் பரிபூரண பக்குவமடைந்தவன் இப்படி யிப்படி இருக்கவேண்டியது என்பனவேயாம். நாயகியைச் சேர்ந்த நாயகன் இருக்கவேண்டியது எப்படி என்பதை விவரிப்பனவல்லபோலும். இரண்டொன்று காட்டினால் அவை ஆரிய ஆதாரங்களாகும்.

ஆரிய ஆதாரங்களின் பிரகாரம் ஒருவன் பிரமச்சாரிப் பருவம் கடந்தே கணவன் ஆவதற்குத் தகுந்த ஒழுக்கம் உள்ளவனாகிறான். இப்படிக் கலியாணம் செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் சில ஒப்பந்தங்கள் செய்கிறான். அவற்றில் முக்கியமானது இது: பெண்ணைப் பெற்றவன் மாப்பிள்ளையின் முன்வந்து 'தர்மார்த்த காமகிருத்தியங்களுக்கு உதவியாய்த் தரும் இப்பெண்ணைவிட்டு அகலலாகாது' என்பான்; அதற்கு மாப்பிள்ளை நான் அவளைவிட்டு அகலமாட்டேன்' என்பான்.

எல்லோரறிய இப்படி வாக்குறுதி செய்தது வெகு சரியே ஆனால் அனுபவத்தில் அது எவ்வளவு தூரம் நிறைவேறுகின்றது? இதற்குச் சாமானியத்தில் திருப்திகரமான விடைதர இடமில்லை என்றுதான் சொல்லவேண்டி வருகிறது. தற்கால நடப்பைக் கவனித்தால் அப்பாவிகளும் அநாதைகளுமான ஸ்திரீகளின் கதி கொடுமையிலும்



கொடுமை. நாயகன் வரம்பு என்பதில்லாதபடிக்கு அக்கிரமங்கள் எத்தனையும் செய்யலாம்; கேட்பார் இல்லை. இஷ்டம்போல, வேறு மனைவிகளைக் கட்டிக்கொள்ளலாம்; கேடு கெட்ட ஸ்திரீகளோடு தாராளமாய்ச் சகவாசம் செய்யலாம்; பெண்சாதியை இரக்கமின்றி அடிக்கலாம் உதைக்கலாம். ஆனால் அந்தப் பெண்டாட்டி அந்த அநியாயங்களைச் சகிக்காமல் விசுவாசம் குறைத்ததார் வாயசைத்து விட்டாலோ, அந்தக்ஷணமே அவளுக்கு அருங்கேடு அடுத்துவிட்டது; அப்புறம் அவள் கதி அதோகதிதான். பெண்சாதியின் லக்ஷணங்களையெல்லாம் விதித்தவர்கள் அவளோடு வாழவேண்டிய புருஷனுடைய நடத்தை இன்னின்னதாக இருக்கவேண்டும் என்பதை மறந்து, மறைத்துவிட்டதன் நோக்கம் இப்போது விளக்கமாகலாம்.

இந்தவிதமான பாரபக்ஷவிதி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே சன்மார்க்க நியதிகள் பல சொன்ன தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் இந்தக் குற்றத்திற்கு ஆளாகாமற் போவதில்லை. அவர், தம்முடைய மனைவி மாண்டபின்,

'அடிசிற்கு இனியாளே! அன்புடையாளே!
படிசொல் தவறாத பாவாய்!—அடிவருடிப்
பின்தூங்கி முன் எழுந்த பேதையே! போதியோ?
என்தூங்கும் என்கண் இரா?'

என்று புலம்புகிறார். அதில் தம்மைத் தம்மனையாள் நேசித்ததை முன்னிட்டு முறையிடுகிறாரே தவிர, தாம் தம்மனையாளை நேசித்ததாக ஒருவிதக் குறிப்புங் காட்டுவதில்லை இவருக்கு இப்பால் நாகரிக மிகுதிக்கு ஏற்றபடி மனையாளின் உபத்திரவம் அதிகரித்துள்ளதே தவிர ஒரு சிறிதும் குறைந்ததாகக் காணோம். பெண்சாதி தன் வீட்டிலுள்ள எல்லாருக்கும் முன்னேயே அதிகாலையில் எழுந்துவிடவேண்டும். எழுந்ததும் முன்வாசல், புறவாசலைப் பெருக்கி, சாணிபோட்டு, ராத்திரிச் சமைத்த பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி, வீட்டையெல்லாம் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு, தயிர் கடைந்து, பால் கறந்து, (இக்காலத்தில்) காப்பிபோட்டு, தன் புருஷனுக்கு உபசாரணைசெய்து, குழந்தைகளுக்குப் பழைய சாதம் போட்டு, இதெல்லாம் முடிந்தபின் மத்தியானச் சாப்பாட்டைத் தயாராக்கவேண்டும். இத்தனை சம்பத்தில் இவளுக்குக் காலையில் பழைய சாதமாவது காப்பியாவது கிடைக்கும் என்ற நிச்சயமில்லை. இனி மத்தியானம் அரித்து ஆக்கி, வெந்நீர்போட்டு, அத்தனை பேருக்கும் சாப்பாடு போட்டுவிட்டுக் கடைசியில்தான் பெண்டாட்டி சாப்பிடவேண்டியது. இடையி

டையே தன் குழந்தைக்குப் பலதடவை பால்தரும் சிரமத்தைப் பாராட்டப்படாது. இவள் மத்தியானம் வெகுநேரம் பொறுத்தே உண்ண முடியும். அப்புறம் பழையபடி எச்சிலெடுத்து, மெழுகி, பற்றலம்பி, பிள்ளைகளுக்கு இடைப்பகல்போட்டு சமதாய்த்து, தண்ணீர் கொண்டு வந்து உட்காருமுன்னே சூரியன் அஸ்தமிக்க ஆரம்பிக்கும். உடனே ராச்சாப்பாட்டுக்கு யத்தனம் பண்ணவேண்டும். இதையும் செய்து போட்டு, எடுத்துமுடிக்க ராத்திரி வெகுநேரமாகிவிடும். அப்புறம் (மாமியிருந்தால் அவரது உத்தரவுபெற்று) படுக்கையறை சேர்ந்தால் புருஷனுக்கு நாயனார் குறித்தபடி கால்பிடித்துக் கைபிடித்துப் பின் உறங்க ஜாமம் ஆகிவிடும். கண் மூடியதும் மூடாததுமாகக் கோழி கூவிவிடும். உடனே எழுந்ததும் பழையபடி வேலையாரம்பந்தான். ஜட்காவண்டிக் குதிரைக்காவது ஓய்வு ஒழிச்சல் உண்டு. இந்த எஜமானிக்கு அதுவும் கிடையாது. இதைத் தொலைக்க வழியேற்படாதா? ஐயோ பாவம்!

Adapted from article by T. Ponnambalam Pillai
in 'The New Reformer.'

## SONG

## பாட்டு

இராகம், சங்கராபரணம். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும்'

1. காட்டும் நல்வழி காட்டும்
திருவே என்தன் குருவே,
ஊட்டும் நல்மதி ஊட்டும்
தேவே என்தன் கோவே.

2. மாற்றும் என்கவலை மாற்றும்
இறையே, கிருபைக் கடலே,
அகற்றும் தீவினை அகற்றும்
தேவே என்தன் கோவே.

3. நீக்கும் சந்தேகம் நீக்கும்
அன்பே, ஒளியின் ஒளியே,
போக்கும் என்பாவம் போக்கும்
தேவே என்தன் கோவே.



4. வாரும் என்மனதில் வாரும்
அருவே, அன்பின் உருவே,
தாரும், சந்தோஷம் தாரும்
தேவே என்தன் கோவே.

5. காரும், அடியேனைக் காரும்
பரனே, பரம் பொருளே,
சேரும் உம்மண்டை சேரும்
தேவே என்தன் கோவே.

6. பாரும் திருக்கண் பாரும்
திருவே, என்தன் குருவே,
கூறும், கிருபை கூறும்
தேவே என்தன் கோவே.

S. Rathinammal, Tuticorin.

## THE AFRICAN LION (*Cont.*)

## ஆபிரிக்காக் கண்டத்து சிங்கம்

(தொடர்ச்சி.)

அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் வேட்டையாட நேரிட்டபோதிலும் மிகுந்த இருளில் வேட்டையாடாது. ஒருநாள் ரூஸ்வெல்ட் என்ற ஓர் இங்கிலீஷ்காரர் ஒரு ஆண்சிங்கம் மத்தியான வேளையில் ஒரு மைதானத்தில் முந்தின ராத்திரி அது கொன்றிருந்த வரிக்குதிரையிடம் போய்க்கொண்டிருப்பதைக் கண்டார். ஒருநாள் அதே வேளையில் ஒரு பெண்சிங்கம் தன் குட்டிகளுடன் முன்னிரவில் கொல்லப்பட்ட ஒரு கறுப்பு மான் பிணத்தண்டை வருவதைக் கண்டார். மற்றொரு பகலில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மேய்ந்து கொண்டிருக்கும் ஒரு கிழட்டுமானை உற்று நோக்கிக்கொண்டேயிருந்தன. அவைகளின் பார்வையைக் கண்டு அதுவும் பார்த்து ஒடுங்கிக்கொண்டே ஜாக்கிரதையாக நின்றது.

### சிங்கத்தின் வேட்டை

ஓய்வுநேரப்போக, குட்டிபோட்ட காலம் அல்லாமல், மற்றக் காலம் எல்லாம் சிங்கம் செய்வது 'கொள்ளை' என்று சுருக்கமாய்ச் சொல்லிவிடலாம். தக்க வயசுவந்த யானை, நீர்க்குதிரை, காண்டாமிருகம்

இவைகளைத் தவிர மற்றெல்லா மிருகங்களுக்குப் பயமுண்டாக்குகின்ற மிருகம் சிங்கம் தான். அதன் பராக்கிரமமும் வெகு சிறந்தது. அது ரகசியமாய்ப் பதுங்கியிருந்து ஒரே பாய்ச்சலாய் ஆச்சரியகரமாய்ப் பாய்ந்து உடனே கொன்றும்விடும். சில சமயங்களில், பகலில் வேட்டையாடுகிறது; முக்கியமாக இரவில்தான் அதிகம். இருட்டு அதிகரிக்க அதிகரிக்க சிங்கத்திற்குத் தைரியம் அதிகம்; அப்போது கண்ட எதுவும் நடுங்கவேண்டியதுதான். எதாவது ஒரு மிருகம் சிங்கமிருக்கும் வழியில் போகும்பக்ஷத்தில் அதைக் கொன்றுவிடும். துஷ்ட மிருகங்கள் இருக்கும் பிரதேசத்தில் அது பசியாயிருந்தால் சில சமயத்தில் மத்தியானத்திலேயே வேட்டையாட ஆரம்பிக்கும். அல்லது சூரியன் உதயமானபோதிலும் அது வெகுநேரம் வேட்டையாடும். ஆனால் இது அபூர்வமானது.



சிங்கத்தின் நிறமானது அது ஒளிந்துகொள்வதற்கு உதவுகிறது. மஞ்சல் நிறமுள்ளதையாவது காக்கிநிறமுள்ளதையாவது பார்ப்பது வெகு அருமை. நிறம் வித்தியாசப்படுவதால் அது மற்றப் பிராணிகளைக் கொல்வதில் கொஞ்சமும் பின்வாங்காது என்கிறார்கள்.



முன்னே அது இரையின்பேரில் தந்திரமாய் வேறெதுவும் காணாதபடி பாயும் என்றோம். ஆனால் அது முக்கியமாக தந்திரத்தினாலேயே பிழைக்கிறது.

கோடைகாலங்களில் தண்ணீர் இல்லாமலிருந்தால் தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் பருக வரும் மிருகங்களைச் சிங்கங்கள் கரையோரங்களிலிருக்கும் புதர்களில் ஒளிந்து அவைகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். ஆனால் அப்பேர்ப்பட்ட இடங்களில் காத்துக்கொண்டிருப்பதைக்காட்டிலும் சிங்கம் அடிக்கடி மிருகங்களை வேட்டையாடியாவது, மைதானங்களில் துரத்தியாவது கொல்வது சகஜம்.

சிங்கங்கள் பல ஒரு கூட்டமாகக் கூடி, பின் ஓர் ஆற்றின் இரு கரையிலுமாக பல விடங்களில் பிரிந்து நின்றுகொண்டு ஒரு கரையில் உள்ள பசு முதலிய மிருகங்களை வாசனையாலோ சந்தடியாலோ தெரிந்துகொண்டு, அவற்றின் எதிர்க்கரையில் உள்ள சிங்கங்கள் பிடித்துக்கொள்ளட்டும் என்று துரத்தும்.

வழக்கமாக சிங்கம் தனக்குமுன்னால் மேய்ந்துகொண்டிருக்கும் இரையினிடத்திற்குக் கொஞ்சமும் சப்தமில்லாமலும் மறைந்துகொண்டும் தந்திரமாயும் நகர்ந்து செல்லும். காரிருளில் சிங்கமானது மிகவும் தைரியமாகப் போய் எதிர்த்து வேட்டையாடும். ஆனால் நிலா வெளிச்சத்தில் மெள்ளப் பதுங்கிப் பதுங்கி வேட்டையாடும். எவ்வளவு இருட்டாயிருந்தாலும் பாதகமில்லை; சிங்கமானது தன் இரையை வெகு சுலபமாகப் பிடிக்கிறது. அதை ஒரே அடியில் செத்ததும் சாகாததுமாகச் செய்துவிடுகிறது.

சில சமயங்கள் தவிர சிங்கக்கூட்டங்கள் கொழுத்த பசுக்களையும் கடுத்தாமான எருதுகளையும் சிறு கன்றுகளையும் எதிர்க்கிறதென்று நமக்குத் தெரிந்தபோதிலும், ஒரே சிங்கம் காண்டாமிருகத்தையாவது, நீர்க்குதிரையையாவது, கொழுத்த யானையையாவது எதிர்க்காது. ஒட்டைச்சிவிங்கியானது அநேகமாய்ச் சிங்கங்களால் கொல்லப்படுகிறது. ஆபிரிக்காவில் எருமைதான் சிங்கங்களுக்குச் சாதாரண இரை. ஆனால் வேட்டை அதிகமாயிருப்பின் சிங்கங்கள் அப்பேர்ப்பட்ட பயங்கரமானவைகளுடன் சண்டை செய்வதை நீக்கவே எண்ணுகின்றன. சிங்கங்கள் ஒரு பலத்த நல்ல எருமையை எதிர்ப்பது அபூர்வம். அநேக சிங்கங்கள் இருந்தால் சுலபமாய் எதிர்க்கும். பலத்த ஒரு ஆண்சிங்கம் எப்படியிருந்தாலும் ஒரு பெண் எருமையைக் கொன்றுவிடும். பசியாயிருக்கும்பொழுது பலத்த ஒரு ஆண் எருமையைக் கொல்வது தெரிந்திருந்தாலும் வெகுநேரம் எதிர்த்துச் சண்டைசெய்து கொல்லும். தன் இரைக்குத் தெரியாமல் எதிர்க்கச் சக்தியிருக்கும்பொழுதும் கொன்றுவிடுகிறது.

சிறு புதர்களும், நீண்ட புற்களும் சிங்கத்தின் வேட்டைக்கு உதவியாயிருக்கின்றன. மிருகம் தப்பி ஓடாதபடி பக்கத்திலேயே ஒரே பாய்ச்சலில் அகப்படும்படியும் உதவுகின்றன. ஆனல் வெட்டவெளியான மைதானத்தில் வேட்டையானது இரண்டாவது எட்டிலேயே தப்பித்துக்கொள்வதற்கு இடமிருந்தாலும் அகப்படலாம்.

சிங்கம், பெரியதும் சிறியதுமான வரிக்குதிரைகளையும், கறுப்பு மான்களையும், ஒட்டகங்களையும், குதிரைகளையும், கோவேறுகழுதைகளையும், ஆடுமாடுகளையும், நெருப்புக்கோழிகளையும் கொல்லுகிறது. சிங்கத்தின் திடீரென்று உண்டான பலம், பயம், முரட்டுத்தனம் இவைகள், இரையாகிற மிருகத்திற்கு எதிர்ப்பதற்குக்கூட நாழிகை கொடுப்பதில்லை. பல்லில் பலமில்லாத சிறு சிங்கங்களும் கிழட்டு சிங்கங்களும், வரிக்குதிரை பெரிய பலத்த எருமை இவைகளில் எதையாவது எதிர்த்தால் சில சமயங்களில் அது தோல்வியாக முடிகிறது.

ஆனல் மத்திய ஆபிரிக்காவிலும் கிழக்காபிரிக்காவிலும் எருமைதான் பெரிய பலத்த சிங்கங்களுக்கு அபாயம் விளைவிப்பது.

(இன்னும் வரும்)

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ௵ ஜூன் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | நீதி. | 1. 1—19 | 11 | வி. | நீதி. | 6. 6—19 | 21 | ஞா. | நீதி. | 11. 18—31 |
| 2 | செ. | ,, | 1. 20—33 | 12 | வெ. | ,, | 6. 20—35 | 22 | தி. | ,, | 12. 1—15 |
| 3 | பு. | ,, | 2. | 13 | ச. | ,, | 7. 1—5; 24—27 | 23 | செ. | ,, | 12. 16—28 |
| 4 | வி. | ,, | 3. 1—12 | | | | | 24 | பு. | ,, | 13. 1—13 |
| 5 | வெ. | ,, | 3. 13—26 | 14 | ஞா. | ,, | 8. 1—11 | 25 | வி. | ,, | 13. 14—25 |
| 6 | ச. | ,, | 3. 27—35 | 15 | தி. | ,, | 8. 12—26 | 26 | வெ. | ,, | 14. 1—17 |
| 7 | ஞா. | ,, | 4. 1—13 | 16 | செ. | ,, | 8. 27—36 | 27 | ச. | ,, | 14. 18—35 |
| 8 | தி. | ,, | 4. 14—27 | 17 | பு. | ,, | 9. | 28 | ஞா. | ,, | 15. 1—15 |
| 9 | செ. | ,, | 5. 1—14 | 18 | வி. | ,, | 10. 1—16 | 29 | தி. | ,, | 15. 16—33 |
| 10 | பு. | ,, | 5. 15—23; 6. 1—5 | 19 | வெ. | ,, | 10. 17—32 | 30 | செ. | ,, | 16. 1—16 |
| | | | | 20 | ச. | ,, | 11. 1—17 | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914


# மாதர் போதினி

No. 199 ஜூலை 1914 No. 7


OFFICE OF THE REGISTRAR ... 6 JUL 1914 ... MADRAS



THE WEARING OF BRACELETS

## வளையல் அணிதல்

முன் தங்களுடைய மாதர் போதினியின் சஞ்சிகை ஒன்றில் சைனு தேசத்துப் பெண்கள் தங்கள் பாதங்கள் வளராதபடி குறுக்கி வைத்திருப்பது ஓர் அழகென்று நினைப்பது மிகவும் கெட்டதென்றும், அப்பழக்கம் மிகவும் குரூரமான செய்கையென்றும், இனி அவர்கள் அவ்வாறு செய்யாது ஒழிதல் மிக்க பலத்தைத் தரும்

என்றும் வற்புறுத்திக் கூறிய வியாஸத்தைக் கண்டு களிப்படைந்தேன். அவ்விஷயம் அச்சைனா ஸ்திரீகளுக்கு அறிவைப் புகட்டி அவர்களுடைய அக்கிரமச் செயலை ஒழிக்கும் என்பது திண்ணம். அவ்வாறே அவர்களுடைய சகோதரிகளாகிய இந்தியப் பெண்களும் ஒரு கெட்ட பழக்கத்தை அனுசரிக்கிறார்கள். அவர்கள் காலில் வேதனை செய்துகொண்டால், இந்திய மாதர்கள் வளையல் போட்டுக் கொள்வதால் கையில் வேதனை உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள்.

சீனப் பெண்கள் குறுகிய கால்களை எவ்வாறு அழகென்று மதிக்கின்றார்களோ அவ்வாறே கையில் வளையல்களை அணிவது அழகென்றே இந்தியப் பெண்கள் கருதியிருக்கின்றார்கள். அந்தோ! இவர்கள் அணியும் வளையல் அழுகையே. யாதொரு ஸ்திரீயும் அழுகையின்றி வளையல் அணிவதும் அருமையே. ஏனெனில் அவ்வளையலானது மணிக்கட்டில் வந்து சேருமுன், அம்மெல்லிய மாது அதைத் திருத்தும் அந்நியனிடத்தில் தனியே துவக்குண்டு, கிள்ளப்பட்டு, திருகப்பட்டு, அமுக்கப்பட்டு, சில சமயங்களில் கண்ணாடி வளையலானது உடைந்து புறங்கை வெளித்தோலின் உட்சென்று இரத்தம் வெளிப்பட்டுப் பெருங்காயம் உண்டாகச் சிலர் மயக்கமுமடைகிறார்கள்.

அழகு செய்துகொள்வதால் மனதுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவது இயல்பு. அவ்வாறின்றி அழுகையையும் வருத்தத்தையும் உண்டாக்குவது அழகாகுமா? அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணத்தையுமுடைய நம்மிந்திய மாதர்கள் கேவலனாகிய வளையற்காரனைக் கண்டமாத்திரத்தில் அவைகளைப் பறக்கவிட்டு, அவனோடு பேசுவதும், சிரிப்பதும், கேலிபண்ணிக்கொள்வதும், அவனிடத்தில் பலவந்தமாகத் தன் கையை நீட்டித் தனக்குச் சரியான வளையல்கள் மாட்டும்படி கேட்பதும், அவன் 'அம்மா! நான் உங்களுக்கு நல்ல வளையல் மாட்டி மஹாலக்ஷ்மியைப்போல் செய்துவிடுகிறேன்' என்பதும் 'உங்கள் முகத்துக்கும் கைக்கும் இந்த வளையல் நன்றாய் இருக்கும்' என்பதும் 'உங்கள் அந்தஸ்துக்கு இந்த வளையல்தான் நன்றாயிருக்கும்' என்பதும் அப்பொழுது அவனுடைய யோகக்ஷேமத்தை விசாரித்தலும் இவைகளை அவன் கேட்கிற கபடத்தை உணராத மாதர்கள் அவனால் ஏமாற்றப்பட்டும் தங்கள் குலம், யோக்கியதை முதலிய எதையும் கருதாமல், அவனால் தொடப்பட்டு வளையல் மாட்டப்பட்டவுடன் மிக்க அழகுடையவர்களாய்விட்டதாகவும் மஹாலக்ஷ்மியைப்போல் புனிதர்கள் ஆய்விட்டதாகவும் மனதில் நினைத்துக்கொண்டு வீணர்கள் ஆகிறார்கள். இவர்தன் தங்கள் கையில் அணிந்திருக்கும் வளையலைக் கண்டு தண் களித்



1914 MADRAS

தனரேயன்றி இயல்பாய்த் தங்குணத்தைக் கண்டு [illegible] வெறுத்தனரல்லர். எப்படியெனில், தாங்கள் அழகு அடைவதற்கு அன்னியனும் கபடவஞ்சகனுமாகிய ஓர் ஆண்பிள்ளையால் தொடப்படவும் வேண்டுமோ? இதை அவன் உதவியின்றிப் பெண்களுக்குள்ளேயே செய்தல் ஆகாதோ? மேலும் வளையல் மாட்டிக்கொள்வதற்கு மேற்கூறிய இவ்வளவு வேதனைகளும் அடையவும் வேண்டுமோ? மிகப் பெரிய ரதங்களும் ஒரு சிறிய அச்சாணியால் ஆளப்படுவது போல், இவ்வளையல்களுக்குக் கீல்கள் பொருத்தி இவ்வித வேதனைகளையும் தங்கள் யோக்கியதையையும் பெண்கள் காப்பாற்றிக்கொள்ளக்கூடாதா? நம் இந்தியர்கள் அதிலும் விசேஷமாய்ப் பெண்கள் எங்கே சீர்திருத்தம் செய்யவேணுமோ அங்கே கவனிக்காமல் மற்ற அனாவசியமாயிருக்குமிடத்தில் கவனிக்கின்றார்கள்.

ஒரு மகள் கருப்பந்தரித்துப் பிள்ளைபெறுங் காலத்தில் அபாயம் உண்டாயிருக்கும்போது அவளுடைய உயிரைக் காப்பாற்றக் கொஞ்சமும் கருணையில்லாமல் ஒரு வைத்தியனைப் (Male Doctor) பார்க்கச் சொல்லுகிறதா? அப்படி அந்த அபாயத்தினால், அந்தப் பெண் செத்தாலும் சாகட்டும், ஆண்பிள்ளைகளைக்கொண்டு வைத்தியம் பார்க்கக் கூடாது' என்று தடுத்துவிடுகின்றார்கள். ஆனால் தாங்கள் சௌக்கிய நிலையில் இருக்கும்போதும் கேவல வளையலுக்காக ஒரு அல்ப ஜீவனமும் நற்குணமில்லாத ஆண்பிள்ளையைத்தொட்டு மேற்கூறிய வேதனைகளுக்கு உட்படுத்த முகமலர்ச்சியுடனும் சர்வ சம்மதத்துடனும் கையைக் கொடுக்கிறார்கள். அந்தோ இத்தகைய பேதைமைக்கு யாம் என்ன கூறுவது! இனிமேலாவது இவர்கள் இத்தீய செய்கையை ஒழித்து இதம் அடைவார்களாக.

Runganathachar, Kodumudi.

## GOOD CHILDREN

## நற்புதல்வர்

நீர்வளம் நிலவளம் பொருந்திய இத்தேசத்தின்கண் ராமாயணம் என்றோர் பூர்வீக சரித்திரமுண்டு. அதனுள் சொல்லப்பட்ட சிறந்த கதைகளிலொன்றை இங்கெடுத்துக் காட்டுவோம்.

திரேதாயுகத்தில் அயோத்தியா நகரத்தை அரசாண்ட தசரத மஹாராஜா என்றொருவருக்கு நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். இந்நால்வருள் மூத்த மகனாகிய ராமர் மிகவும் குணசாலியாய் நாளுக்கு நாள் விருத்தியடைந்து சகல ஞானங்களையும் கற்று வருவாராயினார். அப்பொழுது தசரதர் ராமரைக் கண்டு களிப்படைந்து அவருக்குப்



பட்டாபிஷேகம் செய்து ராஜ்யத்தை அவருக்கு ஒப்புவிக்க யோசனையாயிருந்தார். அச்சமயத்தில் அவ்வரசனது இளைய மனைவியாகிய கைகேயி என்பவள் அரசனிடத்தில் வந்து, தனக்கு வேண்டிய இரண்டு வரங்களைத் தரும்படி பிரார்த்தித்து வாக்குப் பெற்றுக்கொண்டாள். அவள் அரசனை நோக்கி 'ராமரைக் காட்டுக்கு அனுப்பவேண்டும், தான் பெற்ற மகனாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்விக்க வேண்டும்' என்று கேட்டாள். அவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் வெகு சங்கடப்பட்டு மூர்ச்சையடைந்தார். இச்சங்கதிகளையெல்லாம் நன்றாய் அறிந்த ராமர் தந்தையிடம் சென்று அவருடைய வாக்குக்குப் பங்கம் வாராதவாறு செய்யும்படி அவரை வேண்டிக்கொண்டு, சீதையையும் தன் தம்பியையும் அழைத்துக்கொண்டு தந்தையின் சொல்லை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சிகொண்டு ஆரண்யம் சென்றார் என்பதே.

பிள்ளைகள் எவ்வளவு உயர்ந்த பதவியை அடைந்தாலும் தாய் தந்தையரது வார்த்தையின்படி ஒழுகல்வேண்டும் என்பதும், தாய் தந்தையரது வார்த்தைகளில் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தாலும் கேட்க வேண்டும் என்பதுமே அக்கதையின் போதனை.

'தம்மில், தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.'

தாய்தந்தையர் அறிவுடைய மக்களைப் பெற்றுத் தம் அகம் மகிழுகிறதைவிட அப்புதல்வரின் அறிவு, உலகத்தின்கண் உள்ள உயிர்களுக்கெல்லாம் அதிக அருமையாய் இருக்கும் என்றும்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.'



தாய் தன் பிள்ளையை ஈன்றெடுத்து அதனால் அவள் அடையும் சந்தோஷத்தைவிட, அப்பிள்ளை சகல ஞானத்திலும் சன்மார்க்கத்திலும் நிறைந்தவனென்று மற்றவர்களால் கேள்விப்படும்போது அத்தாய்க்குண்டாகிற சந்தோஷம் அதிகம் என்று நம் தேசத்திற் பிறந்த ஞானியாகிய திருவள்ளுவர் சொல்லுகிறார். பரபக்ஷமார்க்கத்தார் கூறிய இவ்விதப் போதனைகள் மிகவும் சிறந்து நிற்க, சத்திய வேதமார்க்க அனுஷ்டானிகளாகிய கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளைகளின் அருமையை நன்குணராமலிருப்பது சரியோவென்று ஆலோசிப்பது அத்தியாவசியம்.

பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும், சுதந்தரமும் ஈவுமாயிருக்கிறார்கள் என்பது சுருதிமொழி. (ஆதி. 33. 5. 1 சாமு. 1. 27. சங். 127. 4.)

கர்த்தரால் கொடுக்கப்பட்ட நம்முடைய அருமைப் பிள்ளைகளைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவருகிறதும் (மத் 19. 13, 14), அப்பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற பக்தியில் வளர்க்கிறதும் (நீதி. 22. 6. எபே. 6. 4), பிள்ளைகள் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குப் படிப்பிக்கிறதும் (உபா. 32. 46. 1 நாளா. 28. 9), பிள்ளைகளைச் சரியானபடி நடத்துகிறதும் (1 தீமோ. 3 4-12), அவர்களைச் சரியாய்த் திருத்துகிறதும் (நீதி. 13. 24) கிறிஸ்தவர்களின் முக்கிய கடமையாயிருக்கிறது. கர்த்தருக்கென்று வளர்ப்பிக்கப்படுகிற இவ்விதப் பிள்ளைகளோடு கர்த்தர் எப்போதும் இருக்கிறார் (1 சாமு. 3. 19). கர்த்தருக்கென்று வளர்ப்பிக்கப்படுகிற பிள்ளைகளின் குணலக்ஷணங்களைப் பாருங்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களுடைய சொற்களுக்குக் கீழ்ப்படிகிறார்கள் (ஆதி. 28. 7 ; 47. 30). அவர்கள் தங்கள் பெற்றோரைப் பராமரிக்கிறார்கள் (ஆதி. 45. 9-11; 47. 12). அவர்கள் தங்கள் பெற்றோரின் இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறார்கள். (நீதி. 10 1; 29. 17).

அவர்கள் முதியோரைக் கனம்பண்ணுகிறார்கள் (யோபு. 32. 6,7).

இதை வாசிக்கும் என் சகோதரிகளே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை நல்ல வளர்ப்பில் வளர்க்க ஜாக்கிரதையாயிருங்கள். வேதத்தில் நமக்கு எச்சரிப்பாய்க் குறித்துக் காட்டப்பட்டிருக்கிற துன்மார்க்கரான மீகாவின் தாய், அத்தாலியாள், ஏரோதியாள் என்பவர்களைப் போலிராமல், அன்னாள் (1 சாமு. 1. 28), சூனேமியாள் (2 இரா. (4. 19, 20), லேமுவேலின் தாய் (நீதி. 31. 1), லோவிசாள், ஐனிக்கேயாள் (2 தீமோ. 1. 5) என்பவர்களைப்போலிருக்க[illegible] படுவோமாக. அப்போது நம்முடைய வீட்டில் ஆசீர்வாதமும் சந்தோஷமும் பெருகும் என்பது திட்டம். [illegible]செய்து மேற்கூறிய வேதவசனங்களையெல்லாம் ஒத்துப்பார்க்கவும்.

B

JL
TSS m 211, M86
M86 · 28 — 29
162471

## PUSHPAM'S FRIEND

## புஷ்பத்தின் சிநேகிதர்

புஷ்பம் என்னும் சிறுபெண், சீமை தேசத்தில் வசித்த ஒரு வியாதிக்காரி. பாவம், ஏதோ வியாதியினாலே படுக்கையைவிட்டு எழுந்திருக்கவாவது, நடக்கவாவது சக்தியற்றவளாயிருந்தாள். அவள் எப்போதும் தன் கட்டிலில் படுத்துக்கொண்டேயிருப்பாள்.

என்ன பரிதாபம்! நம்மில் யாருக்காவது அப்படிப்பட்ட சுகவீனமிருந்தால், நாம் எவ்வளவு முறுமுறுப்போடும் துக்கத்தோடும் காலங்கழிப்போம். ஆனால், அந்த ஏழைப் புஷ்பம் கூடியமட்டும் சந்தோஷமாயிருந்தாள். அவளுக்கு ஒரு சிறு தோட்டமும் அதிலே ஒரு நல்ல வீடும் உண்டு. அந்தத் தோட்டத்தில், அழகான பூக்களும், நேர்த்தியான பழங்களும் இருந்தன. அவள் தன் படுக்கையிலிருந்தபடியே ஜன்னலின் வழியாக அவைகளைப் பார்த்துச் சந்தோஷப்படுவாள்.

இதைவிடச் சந்தோஷமான காரியம் அவளுக்கு இன்னொன்றுண்டு. அது என்னவென்றால், அவளுக்கு இரண்டு அருமையான சிநேகிதர்கள் இருந்தார்கள். அது யாரென்று நினைக்கிறீர்கள்? அவளுடைய வியாதியில் அவளைத் தாங்கி நடத்திவந்த அவளுடைய அருமைத் தாயாரும், சிறு பிள்ளைகளின் சிநேகிதராகிய அருமை ரட்சகருமே.

ஒருநாள் புஷ்பம் தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அப்போது அவளுடைய தாயார் ஒரு கோப்பையில் அவளுக்குப் பால் கொண்டுவந்து வைத்துவிட்டு, 'குழந்தாய்! எனக்கு என்னமோ செய்கிறது; என் தலை சுற்றுகிறது' என்று சொல்லி நிற்கமாட்டாமல், பக்கத்திலிருந்த ஒரு படுக்கையின்மேல் படுத்துக்கொண்டாள்: மயக்கம் வந்துவிட்டது.

ஐயோ! எழுந்திருக்க முடியாத எளிய சிறுமி என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்த்துக்கொண்டிருந்தாள். அப்படித் திகைத்துக்கொண்டிருக்கும்போது தன் அருமைச் சிநேகிதரின் ஞாபகம் வந்தது. உடனே அவள் இரண்டு கரங்களையும் குவித்து, ஆண்டவரை நோக்கி, 'இயேசு ரட்சகரே, ஏழைப் புஷ்பத்துக்கு உதவிசெய்யும், என் தாயாருக்கு என்ன செய்வதென்று காட்டும். என்னால் எழுந்திருக்க முடியவில்லை, நீர் என்னை நேசிக்கிறீர் என்பது எனக்குத் தெரியும், இப்போது எனக்கு உதவிசெய்யும், உதவிசெய்யும், ஆண்டவரே' என்று ஜெபித்தாள்.

உடனே அவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது, 'நான் ஒரு காகிதத்தில் "உதவிவேண்டும்" என்று எழுதி ஜன்னல் வழியாய்த் தெருவிலே போடுவேன். அதை யாராவது பார்த்தால் உடனே வந்து உதவி செய்வார்கள்' என்று தன் தாயாரிடம் சொன்னாள். அதற்குள்ளாக அந்த அம்மாளுக்கு மயக்கம் அதிகமாகிவிட்டது. அவளோ மறுமொழி சொல்ல இயலாதவளாய்ப் படுத்திருந்தாள். புஷ்பம் மறுபடியும் ஆண்டவரைக் கெஞ்சினாள். அவளுடைய விசுவாசமுள்ள ஜெபத்திற்கு உடனே உத்தரவு கிடைத்தது. தன் தலையணையின் கீழிருந்த ஒரு பென்சிலையும் காகிதத்தையும் எடுத்து, அதில் 'என் தாயாருக்குச் சுகமில்லை, யாராவது தயவுசெய்து உதவிக்கு வாருங்கள்' என்று எழுதி, தன் உதவிக்காகக் கட்டிலண்டை வைத்திருந்த ஒரு கோலையெடுத்து அதன் நுனியில், தன் தலையில் கட்டியிருந்த பட்டுநாடாவைக்கொண்டு அந்தக் காகிதத்தைக் கட்டி, ஜன்னலுக்கு வெளியே நீட்டினாள்.



அப்போது அந்த வழியாய்ச் சென்ற ஓர் அம்மாள் அதைப் பார்த்துவிட்டு உள்ளே வந்தார்கள். அவர்கள் வந்து, புஷ்பத்தின் தாயாருக்கு வேண்டிய உதவிசெய்து, தக்க மருந்து கொடுத்து, உதவிக்கு ஒரு ஆளையும் திட்டஞ்செய்து வைத்தார்கள்.

தாயார் கொஞ்சநாள் சுகவீனமாயிருந்து, பிற்பாடு சுகமடைந்தாள்.

புஷ்பம் தன் அருமை ரட்சகரைப்போல், அன்பும், இரக்க சுபாவமுமுள்ள சிநேகிதர் வேறில்லை என்றும், அவர்தான் தனக்கு உதவிசெய்தார் என்றும் சந்தோஷப்பட்டு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினாள்.

'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.' (சங். 46. 1.)

## THE KING'S CUP BEARER. (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### III. அத்தியாயம். தயவுள்ள கரம்

இதையெல்லாம் பார்த்து வேலை எவ்வளவு அதிகமும் கஷ்டமுமாயிருக்குமென்றும் நிச்சயித்துக்கொண்டார். இப்பொழுது எருசலேம் ஜனங்களுக்கு முன்பாகத் தம்முடைய எண்ணத்தை வெளிப்படுத்தக்கூடியவராயிருந்தார். பட்டணமானது ஒரு மனுஷனாலல்ல, ஒரு ஆலோசனைக் கூட்டத்தால் ஆளப்பட்டுவந்தது. இந்த ஆலோசனைச் சங்கத்தாரையும், பிரபுக்களையும், வேலையாட்களையும் வர



வழைத்து அவர்களுக்கு முன்பாக முறையிடுகிறார். 'எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே; நாம் இனி நிந்தைக்குள்ளாகாதபடி எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்.'

அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக, இதுவரையில் கர்த்தர் தம்மை நடத்தினவிதத்தையும், கர்த்தருடைய தயவுள்ள கரம் ராஜாவின் இருதயத்தையும் அவருடைய பணப்பையையும் தமக்குத் திறந்தருளின விஷயத்தையும் சொல்லுகிறார். இதற்கு என்ன மறுமொழி உண்டாகிறது? எல்லாரும் ஒரே தொனியாய் 'நாம் எழுந்து கட்டுவோம்' என்கிறார்கள். இவ்வளவு நல்ல உதவி கிடைத்ததற்காகவும் எல்லாரும் சந்தோஷமாய்த் தம்முடைய சொல்லுக்கு இணங்கி வேலைசெய்ய ஆயத்தமாயிருக்கிறதற்காகவும் நெகேமியா அதிகமாய் ஆனந்தங்கொள்கிறார்.

மிக ஜாக்கிரதையும், கேள்விகள் நிறைந்ததுமான இந்தக் காலத்தில் நெகேமியா இந்தக் கேள்வியைக் கேட்பாரானால் விசனமான விடைதான் கிடைத்திருக்கும். ஒருவன் எழும்பி 'வேலை அதிக கஷ்டம். கழிவுகள் எவ்வளவு ஏராளமாயிருக்கின்றன; இப்பேர்ப்பட்ட வேலையில் தலையிட்டுக்கொள்வது கூடாத காரியம். தென்கிழக்கு மூலையில் குவிந்துகிடப்பதைப் பாருங்கள், அவைகளையெல்லாம் அகற்ற யாரால் கூடும்?' என்பான். இன்னொருவன் முறுமுறுத்து 'யூதஜாதியாராகிய நாங்கள், ஏழைகளும் அற்பமாய் எண்ணப்பட்டவர்களுமாயிருக்கிறோமே. இதற்குப் பிடிக்கும் செலவு எப்படி



யாகும்? இப்பேர்ப்பட்ட பிரமாண்டமான வேலைக்குத் தங்களுடைய் நேரத்தையும் பணத்தையும் யார் எப்படிக் கொடுக்கக்கூடும்?' என்பான். மூன்றாவது ஆள் நீண்ட முகத்தோடு 'நாம் அலங்கத்தைக் கட்ட ஆரம்பித்தால் சன்பல்லாத்து என்ன சொல்லுவாரோ? தொபியா என்ன செய்வாரோ? கெஷேம் என்ன பேசுவாரோ? [illegible]சாதிபதிகளோடு இப்பொழுது நமக்கு யாதொரு சச்சரவுமில்லை. ஆனால் நாம் வேலைசெய்ய ஆரம்பித்தால் என்ன நடக்குமோ அறியோம். ஆகையால் சும்மா இருந்துவிடுவதே உத்தமம்' என்பான்.

நாலாவது ஆள் எழுந்து தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறான்: 'இப்போதும் நூற்றைம்பது வருஷங்களாய்விட்டன. எருசலேம் கைவிடப்பட்டிருந்தது மெய்தான். ஆனால் நாங்கள் அதற்கு வழக்கப்பட்டுப் போனோம். நெகேமியா மகிமைபொருந்திய சூசானிலிருந்து வந்தபடியால், இந்தக் காட்சி அவருக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கிறதாயிருக்கிறது. ஆனால் சீக்கிரம் பழக்கப்பட்டுப்போனால் அவரும் எங்களைப்போலாய்விடுவார். இதைப்பற்றி எந்தவிதமான குழப்பமுண்டாக்கவும், கஷ்டத்திலகப்படவும் வேண்டிய அவசியமில்லை.' ஐந்தாவது ஆள் எழுந்து கொஞ்சம் அனல் கொண்டவனாய்க் கோபமுகத்தோடே 'புதிதாய் வந்த அந்நியனுக்கு இந்தச் சங்கதிகளெல்லாம் என்ன தெரியும்? முன்னமே இருந்து பழகின பெரியோர் யோசனையின்படி செய்யலாம். ஆகையால் ஆலோசனைக் கூட்டத்தாரைக் கேட்கலாம்' என்பான். இதுவும் இதைப்போலொத்த அநேக தடைகளும் நம்முடைய காலத்திலுண்டாகலாம்.

ஆனால் எருசலேம் பட்டணத்தார் இப்படிச் செய்யவில்லை. நெகேமியாவின் பாதையைக் கஷ்டத்தாலும், அவருடைய இருதயத்தை அதைரியத்தாலும் நிரப்பவில்லை. அவர்கள் முன் வைக்கப்பட்டது சாதாரணமான வேலை. நெகேமியா நடத்தவும், ஜனங்கள் பின்னாலே போகவும் தயாராயிருந்தார்கள். 'நாம் எழுந்து கட்டுவோம்' என்றார்கள். 'இந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டார்கள்.'

கிறிஸ்துவின் ஊழியக்காரராக நாமும் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுவோமாக. நல்ல விஷயமாய் முயற்சி எடுத்துக்கொள்ளுகிற யாருக்கும் தடைசொல்லாதிருப்போமாக. 'இரும்பை இரும்பு கருக்கிடும், சிநேகிதனுடைய முகத்தைச் சிநேகிதன் கருக்கிடுகிறான்.' தைரியப்படுத்தும் வார்த்தைகளோடும், உதவிசெய்யும் கைகளோடும், நம்பிக்கையைக் கொடுக்கும் உற்சாகமான ஆவியோடும் நாம் எப்பொழுதும் வேலைசெய்ய ஆயத்தமாயிருப்போமாக. தேவனுடைய அழகிய

பூமி அழிந்து கிடக்கிறதே. நம்மெல்லாருக்கும் வேலையுண்டு; வேலையாட்களோ கொஞ்சம்.

'நாம் எழுந்து கட்டுவோமாக!' ஒவ்வொருவரும் ஆவலோடு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொண்டும், உலகத்தாரால், உலகத்தினால் உண்டாகிற எந்தத் தடைகளையும் கவனியாதபடி, நம்முடைய ஆண்டவர் 'நல்லது! உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே' என்று சொல்லத்தக்கதாக ஊக்கமாய் வேலை செய்யக்கடவோம்.

## IV. அத்தியாயம்

### அவரவர்க்குரிய வேலை

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில், வருஷத்திற்கொருதரம் கொண்டாட்ட நாள் என்று விசேஷித்த நாள் ஒன்றுண்டு. அந்த நாளில் சர்வகலாசாலையைச்சேர்ந்த ஒவ்வொரு ஆலயத்திலும் ஆராதனையின் மத்தியில் கீர்த்திப்பேர்கள் வாசிக்கப்படும். அந்தப் பேருள்ளவர்கள் கடந்த காலங்களில் அந்தச் சர்வகலாசாலைக்குப் பண உதவியோ மற்றெந்த உதவியோ செய்தவர்களாயிருந்திருப்பார்கள். அவர்களிலநேகர் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே மண்ணறையிலிறங்கி மண்ணாய்ப்போயிருந்திருப்பார்கள். ஆனாலும் அவர்கள் செய்த நற்காரியங்களுக்காக நினைக்கப்பட்டு, எப்போதும் மறந்துபோகாதபடி, வருஷா வருஷம், அந்தக் கொண்டாட்ட நாளிலே பகிரங்கமாய் வாசிக்கப்படுகிறார்கள்.

நாம் கர்த்தருடைய கீர்த்தி ஜாப்தாவை எடுத்து அதில் யார் யார் எழுதப்பட்டிருக்கிறார்களென்று பார்க்கலாம். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே இறந்துபோனவர்கள் மறக்கப்படாமலிருப்பதை அங்கே பார்க்கலாம். தேவனுடைய புஸ்தகத்திலே அவர்களெல்லாருடைய பேர்களும் தெளிவாயும் திட்டமாயும் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் செய்ததெல்லாம் ஞாபகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்)



## THE PLIGHT OF THE LIAR

## பொய்யன் கதி

பொய்பேசும்ஜனங்களில் அநேகவிதமுண்டு. சொல்லும் பொய்யிலும் பலவிதம் உண்டு. சிலர் தற்பெருமைக்காகவும், முகஸ்துதிக்காகவும், வசதிக்காகவும், ஸ்வயப்பிரயோசனத்துக்காகவும் பொய் சொல்லுகிறார்கள். வேறு சிலர்பயத்தினாலும், பகையினாலும், கெடுக்குந்தன்மையாலும், விளையாட்டுத்தனத்தாலும் பொய் பேசுவதுண்டு. இப்படியே கணக்கெடுத்து ஒருவர் எண்ணூற்று அறுபத்தொன்பது வகைப் பொய்யுண்டு என்கிறார். பொய் பேசுவதையே ஒரு பழக்கமாகக் கொண்டிருக்கிறவர்களும் உண்டு.

அஜாக்கிரதையாலும் முன்பின் யோசனையின்மையாலும் அநேகர் பொய்சொல்ல நேரிடுகிறது. வேணுமென்று இவர்கள் பொய் பேசுகிறதில்லை; மனோதிடம் இல்லாததினால்தான் பொய் பேசுகிறார்கள். மேலும் அவர்கள் எதையும் சரியாக கவனித்துப் பார்க்காததினாலும் கேட்காததினாலும் இப்படி உண்டாகிறது. அவர்கள் ஒன்றையும் செவ்வையாகத் தெரிந்துகொள்ளப் பிரயாசப்படுகிறதும் இல்லை.

பொய்யர்களில் முகஸ்துதிசெய்வோன் அண்டப்புளுகனாயிருக்கிறான். அவனுக்குப் பின்னாக மரியாதைப் புளுகனும் தற்பெருமைப் புளுகனும் வருகிறார்கள். இவர்களாற் பிறருக்குக் கெடுதியில்லை; ஆதலால் இவர்களை நம்பலாம். பிறருடைய நன்மையைக் கோரிப் பொய் சொல்பவரும் உண்டு. தம்மிடமிருந்த வேலைக்காரன் தப்பிதஞ்செய்தான் என்று அவனைத் தள்ளிவிட்டு, பிறகு அவனையே வேறொரு பிரபுவுக்குத் தக்க சிபார்சுசெய்வது ஒருவிதத்தில் நல்லெண்ணங்கொண்டதாகும். ஆனால் அவனைத் திரும்பச் சேர்த்துக்கொண்ட இரண்டாம் பிரபுவுக்குச் சம்பவிக்கலாகும் கஷ்டத்தை யோசிப்பதில்லை.

கோள்சொல்வதும் பொய்யில் அடங்கும். அதிலும் அது மகா கெட்ட பொய். அதை ஒருவன் வாக்கினாலேயே நடத்தவேண்டும் என்பதில்லை. சிலவேளைகளில் மௌனம் சாதிப்பதும், அல்லது உண்மையைச் சொல்லவேண்டியபோது சொல்லாது விடுதலும், அதேதான். உண்மையின் ஒரு பாகத்தை மாத்திரம் சொல்வதும் பொய்போல் ஆகலாம். சிலர் தங்கள் கடைக்கண் பார்வையாலும், ஜாடையாலும் அனுமானத்தினாலும் பொய்சொல்லிவிடலாம்.

மனசுக்குச் சந்தோஷந்தராத உண்மையான சங்கதியை வெளியிடமனோதிடம் அதிகம் அவசியமானது. அதில்லாதவர்கள் அந்தச் சங்கதியை மறைக்கச் சிலவேளைகளில் பொய் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு நாம் மனமிரங்கவேண்டியதுதான். இப்படிப்பட்ட பொய்யர்கள் உண்மையைச் சொல்லி வாதாடித் தப்பித்துக்கொள்ள யத்தனிப்பதில்லை.

மனசுக்குச் சந்தோஷமில்லாத உண்மையான சங்கதியை வெளியிட மனோதிடமில்லாதவர்கள் சிலவேளைகளில் அச்சங்கதியை மறைக்கப் பொய் சொல்லுகிறார்கள் இவர்களுக்கு நாம் இரங்கவேண்டியதுதான். இத்தகைய பொய்யர்கள் உண்மையைப்பற்றி வாதாடவும் தங்களை இப்பழியினின்று நீக்கிக்கொள்ளவும் பிரயத்தனப்படுகிறதில்லை. ஏனெனில் இவர்கள் தைரியமாய் ஒரு மனிதனிடத்தில் மனசுக்கு அதிருப்திகரமான சங்கதிகளைச் சொல்லத் துணிகிறதில்லை. ஆகையால் இவர்கள் பேடிகளாய் எப்போதும் பொய்யையே பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கெட்ட குணத்தினால் பொய் சொல்லுகிறதில்லை. மனத்திடம் இல்லாததினால்தான் பொய் பேசுகிறார்கள். உண்மை பேசுவதால் சில சமயங்களில் நமக்குச் சங்கடம் நேரிட்டாலும், சொல்ப காலத்துக்கு நமக்கு நஷ்டம் உண்டானாலும், அதினால் நம்முடைய விரோதிகளுக்கு அனுகூலமாயிருந்தாலும், அல்லது வேறு பிரதிகூலங்கள் நேரிட்டாலும் நாம் அதைத் துணிந்து சொல்ல முன்வருவதானது நம்முடைய ஆண்தன்மையையும், வீரத்தன்மையையும் தைரியத்தையும் உலகமுள்ளவும் காட்டும். பொருளைக் கருதாமலும் சுயநயத்தைப் பார்க்காமலும் எக்காலத்திலும் உண்மையையே பேசுவதினால் கீர்த்தியையே பெற விரும்புவர்களுமுண்டு. அவர்கள் பெறும் அப்பேர்ப்பட்ட கீர்த்தியானது இவர்கள் மோசத்தினால் அடையும் சொல்பகாலத்து லாபத்தைப்பார்க்கிலும் ஆயிரமடங்கு மேலானது. உண்மை பேசுகிறவனுக்கும் பொய் பேசுகிறவனுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. உண்மை பேசுகிறவன் சத்தியத்தாலும் நியாயத்தாலும் கட்டுப்படுவான். பொய் பேசுகிறவன் அப்படியல்ல. உண்மை பேசுகிறவன் எச்சபையிலும் தைரியமாய்ப் பேசுவான். ஆனால் பொய்யனோ, சபையில் சேர நாணி, நடுங்கி, தானும் உண்மை சொல்பவன்போல் நடிப்பான். இவன் மனச்சாட்சியே இவனை அப்படிச் செய்கிறது. எந்த மனிதனும் தான் தப்பாயிருக்கும்போது தைரியமாய்ப் பேசமாட்டான். அவனுடைய மனச்சாட்சியே அவனைக் கண்டிக்கிறது. அது அவனைப் பேடியென்று தெரிவிக்கிறது. உண்மையானது மனிதனுக்குத் தானாகவே இயற்கையாய் ஏற்படும் நிலைமை. பொய்யோ செயற்கையால் மனிதன் செய்யும் பழக்கம். சத்தியத்துக்கு ஒன்றும் ஈடில்லை; கபடத்தையாவது படிப்பையாவது அதற்குச் சமானமாக நினைக்கமுடியாது. ஒருவன் மிகப் படித்தவனாயும் கெட்டிக்காரனாயும் இருந்தாலும் அவன் பொய் பேசுபவனாயிருந்தால், நாம் அவனை நம்புகிறதுமில்லை, யாதொரு விஷயத்திலும் அவனை ஒரு படித்தவனென்று மதிக்கிறதுமில்லை; ஏனெனில் அவனிடத்தில் நற்குணம் இல்லை.



தன் வாழ்நாள் முழுவதும் பொய் சொல்வதிலும் வஞ்சகத்திலும் கழித்த ஒருவனைப் பாருங்கள். அவன் முகத்தைப் பார்க்கும்போதே 'இவன் பொய் பேசுபவன்' என்று தெரியலாம். உண்மைக்கும் இவனுக்கும் வெகுதூரம். இவன் ஒரு பொய் உருவமாம்; தன் இனிமையான வார்த்தையாலும், நல்ல உடுப்பினாலும், மிக்க பணச் செலவினாலும் நற்பார்வையாலும் ஜனங்களை ஏமாற்ற முயன்றாலும், இவன் பொய்யன் என்றே ஜனங்கள் தெரிந்துகொண்டு அவனை மதிக்கிறதில்லை. இவன் இந்தமாதிரி வெளியில் ஜனங்களை ஏமாற்றினாலும் தன் உள்ளத்தை இப்படி நெடுநாள் ஏமாற்றமுடியாது. அது எப்போதும் இவனைக் கண்டித்துக்கொண்டேயிருக்கும்.

## THE AFRICAN LION (*Cont.*)

## ஆபிரிக்காக் கண்டத்துச் சிங்கம்

(தொடர்ச்சி.)

### நரபக்ஷிணிகள்

கிழக்காபிரிக்காவில் மனிதர்களைத் தின்னும் சிங்கங்கள் சாதாரணம். இதில் பேர்பெற்ற இரண்டு சிங்கங்கள் உகந்த (Uganda) என்னும் ரெயில் பாதையைக் கட்டும் கூலிக்காரர்களைக் கொன்றுகொண்டிருந்தன. அதனால் கொஞ்சகாலத்திற்கு அந்தக் கட்டடவேலை நிறுத்தப்பட்டது. பிறகு அவையிரண்டும் ஒரு இன்ஜினீயரால் சுடப்பட்டன. வேறொரு சிங்கம் வந்து ஸ்டேஷன் ரெயில்பாதையைச் சுற்றிலுமிருந்த அநேக மனிதர்களைத் தின்று அந்தச் சமயம் ஏற்படுத்தப்பட்ட ஸூப்பரின்டெண்டெண்டையும் தூக்கிக்கொண்டு போய்க் கொன்று தின்றது.

அவர் தம் வண்டியின்மேல் ஏறிக்கொண்டுபோய் வண்டியை ஒரு பக்கமாக நிறுத்திக்கொண்டு இராத்திரி சிங்கம் வரட்டும் என்று ஜன்னலின் வழியாகப் பார்த்துக்கொண்டே இருந்தார். அவருக்குத்



தம்மை யறியாமல் தூக்கம் வந்துவிட்டது. பிறகு சிங்கம் வண்டியின் மேடையிலேறி கதவில் நுழைந்து தன்னைச் சுட எண்ணியிருந்த அவரைத் தூக்கிக்கொண்டு ஜன்னலின் வழியாகப் போய்விட்டது.

1909-ம் ௵ கோடைகாலத்தில் இரண்டு சிங்கங்கள் கெனியாவிற்கு (Kenia) மேற்கிலிருக்கும் கெஸோஙிரோ என்னும் நதியின் முகத்துவாரத்து மைதானங்களில் இருக்கும் கிராமங்களை நாசம் செய்து வந்தன. அவைகள் செய்த கெடுதியினால் கிராமமானது நாசமாயிற்று. அதனால் கொஞ்சகாலத்திற்கு அங்கிருக்கும் வழிகளில் போக்குவரத்து ஒழிந்தன. அநேக வருஷங்களுக்குமுன் மச்சகோஸ் போமாவுக்கு அருகில் ஒரு பிரயாணியானவன் ஒரு சிங்கத்தினால் ஒரு ராத்திரியில் கூடாரத்திலிருந்து தூக்கிக்கொண்டு போகப்பட்டான். அது அவனைப் பிடித்துக் காயப்படுத்திவிட்டது. அவனுடைய காயங்களையெல்லாம் கழுவித் துணியால் கட்டி அவனை மறுபடியும் படுக்கையில் வைத்தார்கள். அப்புறம் அவனுடைய வேலைக்காரர்கள் அவனைத் தனியாய் விட்டுவிட்டுப் போய்விட, மறுபடியும் சிங்கம் வந்து அவனைத் தூக்கிக்கொண்டுபோய்க் கொன்று தின்றுவிட்டது.



ஒவ்வொரு வருஷமும் கிழக்காபிரிக்காவிலுள்ள ஜனங்கள் அநேகர் கிராமங்களிலிருந்தாவது வேட்டையாடும் இடங்களிலிருந்தாவது சிங்கங்களால் தூக்கிக்கொண்டு போகப்படுகிறார்கள். அப்போதைக்கப்போது மனிதரைத் தின்னும் சிறுத்தைகள் முக்கியமாக ஸ்திரீகளையும், குழந்தைகளையும் தூக்கிச் செல்லும்.

மனிதரைத் தின்னும் கழுதைப்புலிகள் இருக்கின்றன. ஆனால் ஆபிரிக்காவில் சிங்கங்களும் பெரிய முதலைகளுமே மனிதரைத் தின்னும் பிராணிகளாயிருக்கின்றன. வெகு நாளாயிருப்பதனால் மனிதரைத் தின்னும் சிங்கம் ஆண்சிங்கங்களாவது பெண்சிங்கங்களாவது மிகவும் வயது முற்றிவிட்டால் அவைகள் வேட்டையாடுவதற்குச் சக்தியற்றவைகள் ஆய்விட்டன. ஆனாலும் மனிதன் எந்த மிருகத்தையும்விட பலஹீனன் ஆதலால் அவனைப் பிடிப்பது வெகு சுலபம். அவனுக்கு அறிவு போயிருந்தாலும் அல்லது இயற்கையாக ஆயுதங்கள் இல்லாமலிருந்தாலும் அவனைப் பிடிப்பது இன்னும் சுலபம். மனிதரைக் கொல்லும் எல்லாச் சிங்கங்களும் சக்தியில்லாதவைகளென்றும் கிழடுகளென்றும் நினைப்பது தப்பிதம். எங்கே சிங்கங்கள் அநேகமாய் வேட்டையாடப்படுகின்றனவோ அங்கே மனிதர்களை சாதாரணமாக நினைக்கின்றன. அவன் பயமுறுத்திச் சிங்கங்களைத் துரத்துவதால் அவனை அசக்தனென்று எண்ணி அவனை இரையாக எடுத்துக்கொள்கின்றன. கொஞ்சம் தொந்தரவு செய்தால் அவைகளுடைய இயற்கையான மூர்க்கமும் தைரியமும் அதிகப்பட, முன்னே மனிதரைத் தின்னாத சிங்கமும் மனிதனைக் கொன்று தின்னத் தலைப்பட்டுவிடும். இப்படி ஒருதரம் தின்றுவிட்டால் பிறகு அதன் ருசியைக் கண்டதும் அதையே பிடித்துக்கொள்ளும்.

மிகவும் பலசாலிகளாயும் வீரமுள்ளவைகளாயும் இருந்த சிங்கங்களும் கொலையுண்டது பலரறிந்த விஷயம். வழியில் சிங்கங்கள் ஒன்றுக்கொன்று உரக்கக் கர்ஜ்ஜனைசெய்யும். ஆனால் மனிதரை எதிர்ப்பதற்குமுன் ஒரு மணிநேரம் சப்தமில்லாமலிருக்கும். மனிதனை இராக்காலத்தில்தான் எதிர்க்கும். ஒருதரம் தப்பினால் சில வேளைகளில் தைரியமுள்ள சிங்கம் மற்றொரு மனிதனைப் பிடிக்க யத்தனிக்கும்.

## சிங்கத்தின் முடிவு

பலசாலியான சிங்கமும் யானைக்குத் தப்பிக்கொள்ளும். அது காண்டாமிருகத்தைத் தவிர்க்கும். அநேகமாய் ஒரு எருமைக் கூட்டத்தையும் அப்படியே. சிலவேளைகளில் கழுதைப்புலிகள் சிங்கம்

கொன்ற மிருகத்தினிடத்திலிருந்து அதைத் துரத்திவிடும். அவைகள் சக்தியில்லாமல் மெலிந்துபோனால் கழுதைப்புலிகளால் தொந்தரவு அடையும். சிலவேளை தண்ணீர் குடித்துக்கொண்டிருக்கும் ஒரு சிங்கத்தைப் பெரிய முதலைகள் தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டுபோய்விடும்.

வியாதியுள்ள சிங்கத்தைச் சாகவிடுவது அபூர்வம். அதைக் கழுதைப்புலிகள் கண்டுபிடிக்காமலிருந்தாலும், வேட்டை நாய்கள் கண்டு பிடித்துவிடும். அந்த வியாதியுள்ள சிங்கம் அவைகளிடத்திற்குப் போகப் பயப்பட்டால், அது எதிரிகளோடு சண்டைசெய்து இறக்கும். இப்பெரும் பூனையாம் பயங்கரமான மூர்க்கமான சிங்கங்கள் ஆபிரிக்காவின் மைதானங்களில் மிகுதியாக உண்டு. அது எல்லா மான்களும் நடுங்கும்படியான பயங்கரத்தை உண்டுபண்ணுகிறதும் ஜனங்களுக்கு இராக்காலத்தில் அபாயம் விளைவிப்பதுமாயிருக்கிறது. அது இரையைத் தந்திரமாகவும், ரஹஸ்யமாகவும் மெதுவாகவும் எதிர்க்கும். அது நிச்சயமாக இரையின்மேல் பாய்ந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கொல்லும். அப்பேர்ப்பட்ட பெரிய மிருகமானது கொஞ்சம் காயப்பட்டால் அடிக்கடி வேட்டைக்காரனைக் கொன்றுவிடும்; அல்லது தன்னைத் தாக்கின வேறு மிருகத்தையாவது கொன்றுவிடும். இந்த விஷயங்கள் யாவும் கண்ணாரக் கண்டவையும் மனமொப்பக் கேட்டறிந்தவையும் அன்றிப் புனைவியாசம் ஒன்றுமில்லை.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1914 ௵ ஜூலை மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | லூக். | 1. 1—17 | 11 | ச. | லூக். | 3. 12—22 | 21 | செ. | லூக். | 7. 1—18 |
| 2 | வி. | ,, | 1. 18—38 | 12 | ஞா. | ,, | 4. 1—15 | 22 | பு. | ,, | 7. 19—36 |
| 3 | வெ. | ,, | 1. 34—45 | 13 | தி. | ,, | 4. 16—32 | 23 | வி. | ,, | 7. 37—50 |
| 4 | ச. | ,, | 1. 46—64 | 14 | செ. | ,, | 4. 33—44 | 24 | வெ. | ,, | 8. 1—15 |
| 5 | ஞா. | ,, | 1. 65—80 | 15 | பு. | ,, | 5. 1—11 | 25 | ச. | ,, | 8. 16—25 |
| 6 | தி. | ,, | 2. 1—14 | 16 | வி. | ,, | 5. 12—26 | 26 | ஞா. | ,, | 8. 26—40 |
| 7 | செ. | ,, | 2. 15—26 | 17 | வெ. | ,, | 5. 27—39 | 27 | தி. | ,, | 8. 41—56 |
| 8 | பு. | ,, | 2. 27—39 | 18 | ச. | ,, | 6. 1—16 | 28 | செ. | ,, | 9. 1—11 |
| 9 | வி. | ,, | 2. 40—52 | 19 | ஞா. | ,, | 6. 17—31 | 29 | பு. | ,, | 9. 12—27 |
| 10 | வெ. | ,, | 3. 1—11 | 20 | தி. | ,, | 6. 32—49 | 30 | வி. | ,, | 9. 28—42 |
| | | | | | | | | 31 | வெ. | ,, | 9. 43—56 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

# மாதர் போதினி

No. 200 ஆகஸ்டு 1914 No. 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1914
MADRAS.



## EVILS OF THE DOWRY SYSTEM

## வரதக்ஷிணை அல்லது வியாபார விவாகம்

'பெங்காலில் ஸ்நேகலதாதேவி என்ற பெண்மணியை மணம் புரிய விரும்பினவன் அதிக தொகை கேட்டமையால் அவள் தகப்பன் தன் வீட்டைக் குதுவைவைத்து, அதற்கு வேண்டிய பணத்தைக் கடன்வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தாராம். அப்பொழுது இப் பெண்மணி தனக்காகத் தனது தகப்பனார் பணத்துக்குப் படும் கஷ்டத்தைக் கண்டு மனம் சகியாமல் சென்ற பெப்ருவரி௴ தற்கொலை செய்துகொண்ட சங்கதி எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருப்பது அநேகருக்குத் தெரியும். சென்ற மார்ச்சு௴ 5௳ ஸ்நேகலதாவைப்போலவே, இன்னொரு பெண்ணும் வரதக்ஷிணையின் கொடு

VOL. XXIX.

மைக்கு ஆளானாளென்று தெரிய வருகிறது. வங்காளத்தில் போக்ரா
வின் ஜாயிண்ட் சப்ரெஜிஸ்ட்ராரினுடைய 15-வயதுள்ள பெண் தன்
னுடைய புருஷனும் மாமனாரும், கேட்கும் அநீதமான தொகையைக்
கொடுக்கத் தன் தகப்பனாருக்குச் சக்தியில்லாமல் இருப்பதையறிந்து
வருத்தப்பட்டு தனது தேகத்தில் நெருப்புப் பற்றவைத்துக்கொண்டு
இறந்துபோனாள். இத்துர்வழக்கம் பங்காலில் மாத்திரமல்ல, இந்
தியா முழுவது மிருக்கிறதென்னலாம். இது சில வருஷங்களாகத்
தான் நமது ராஜதானியிலும் பரவி அநேக குடும்பங்களுக்குப் பற்பல
கஷ்டங்களையும், மனவருத்தத்தையும் கொடுத்துவருகிறது. முன்
காலத்தில் பிள்ளைவீட்டார் பெண்வீட்டாருக்குச் சொற்பத் தொகை
கொடுத்துவந்தார்கள். சிலர் அதுகூட வாங்காமல் கன்னிகாதானம்
செய்துவந்தார்கள். இக்காலத்திலோ பெண்வீட்டார் பிள்ளைவீட்
டாருக்கு, கலியாணம்முதல் பிள்ளை பிறக்கும்வரையில் அவர்கள்
கேட்பதையெல்லாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிள்ளைவீட்
டார் சாதாரண படிப்பு வாசனையில்லாதவர்களாகையால் பண ஆசை
கொண்டு இவ்விதம் கேட்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. கல்வி
அறிவுள்ளவர்களும் நல்ல உத்தியோகத்திலிருப்பவர்களும் தான் மிகுதி
யாய் வரதக்ஷிணை கேட்கிறார்கள்.

பெண்களோ அதிகரிக்கிறார்கள். பிள்ளைகளோ சொற்பமாயிருக்
கிறார்கள். பெண்களுக்கு அவர்கள் ருதுவாகுமுன் விவாகம் செய்ய
வேண்டுமென்ற மூடக்கொள்கை அநேகர் மனதில் குடிகொண்டு
விட்டது. மேலும் பிள்ளை அதே ஜாதி உட்பிரிவைச் சேர்ந்தவனா
யிருக்கவேண்டும் என்கிறார்கள். எல்லா வயதிலும் பெண்களின்
தொகை ஆண்களின் தொகையைவிடச் சிறியதாகவேயிருக்கிறது.
10 அல்லது 12 வயதுக்குக்கீழ் பெண்களின் தொகை ஆண்களின்
தொகையைவிட அதிகரித்திருக்கிறது. இதனால்தான் பாலியவிவாகம்
நடந்து வருகிறதென்னலாம். 10 வயதுக்குட்பட்ட விவாகமான
ஆண்களின் தொகை பெண்களைவிட அதிக சொற்பமாயிருக்கிறது.
மனிதன் எப்பொழுது வேண்டுமானாலும் தன் இஷ்டப்படி விவாகம்
செய்துகொள்ளலாம். இதைத் தடுப்பார் ஒருவருமில்லை; மூடக்
கொள்கை இவ்விஷயத்தில் ஒருவருக்கும் கிடையாது.

பிள்ளைகள் உயர்தரக் கல்வி கற்பதால் விவாகம் செய்துகொள்ள
அவசரப்படுகிறதில்லை. ஒருவேளை ஒருவன் தன் பெண்ணை விவா
கம் செய்துவைப்பதாக அப்பிள்ளையின் பெற்றோரைக் கேட்டால்,
இதுதான் சமயம் என்று எண்ணி அதிக தொகை கேட்கிறார்கள்.
பிள்ளைகளின் விவாக வயது உயருகிறது. இவ்விதம் வயது உயரு
வதால் பிள்ளை கிடைப்பதும் அருமையாகிறது. கிடைத்தாலும் பணம்



அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பெண்களின் விவாக வயதை
உயர்த்திவைப்பதும், ருதுவாகுமுன் அவர்களுக்கு விவாகமாக வேண்டு
மென்ற விதியை நீக்கிவிடுவதுமே, இக்கொடிய வழக்கத்தை நீக்கக்
கைகண்ட ஔஷதம்.

மேலும் சாதாரணமாகப் பெண்ணும் பிள்ளையும் ஒரு ஜாதியின்
ஒரே உட்பிரிவைச் சேர்ந்திருக்கவேண்டும். ஆனால் கோத்திரம்
மாத்திரம் வேறாக இருக்கவேண்டுமென்ற விதியுமிருக்கிறது. இவ்
வித உட்பிரிவுகளில் சில உட்பிரிவுகளின் தொகை வெகு சொற்பம்.
உட்பிரிவுகளை நீக்கி வடமப்பிராமணன் ப்ரஹசரணப்பெண்ணை விவா
கம் செய்துகொள்ள முன் வந்தாலும் இவ்வித துர்வழக்கம் நீங்கும்.

ஒருவிதத்தில், இங்கிலீஷ் படிப்பும் இத்துர்வழக்கத்திற்குக் காரண
மென்னலாம்; பீ. ஏ. பரீக்ஷை தேறினவன், அல்லது பீ. ஏ-க்குப்
படிக்கிறவன், புத்திசாலியாக இருந்தால் கொண்டாட்டம்தான். இவர்
கள் கேட்பதையெல்லாம் பெண்ணின் தகப்பன் கொடுக்கவேண்டி
யதே. தாழ்ந்த கல்வியறிவுடையவர்களுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000
வரைக்கும் கிடைக்கும் என்பதற்கு மோசமில்லை.

நமது தேசத்தில் பீ. ஏ. முதலிய பரீக்ஷைகளில் தேறுபவர்கள்
வெகு சொற்பம். பிரதமகல்வி, ஸ்கூல் பைனல் முதலியவைகளின்
தொகை அதிகம். இவர்களும் பீ. ஏ. வரைக்கும் படித்தால் இத்துர்
வழக்கம் ஒழிந்தாலும் ஒழியும். அநேக தகப்பன்மார்கள் தங்கள் பிள்
ளைகள் பீ. ஏ. பரீக்ஷையில் தேறினால் அவர்களுக்குப் படிப்பு விஷயத்
தில் செலவழித்த பணத்தையும், அதற்கு வட்டியும், லாபமும் பெறலா
மென்று எண்ணியே தங்கள் புத்திரர்களை பீ. ஏ. வரைக்கும் படிக்க
வைக்கிறார்கள். இப்படிச் செய்வது படிப்பு, விவாகம் இவ்விரண்
டையும் இழிவாக்குகிறது.

நமது யூனிவர்ஸிடிகளிலும், காலேஜ்களிலும் இவ்விதம் வியாபார
விவாகம் செய்துகொள்பவர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் தடுக்க
லாம். யூனிவர்ஸிடி படிப்பு முடிந்ததும் அவர்கள் இவ்விதம் செய்
தால் நாம் என்ன செய்வது?

ஒரு சிறுவன் தான் சம்பாதித்து ஜீவனம் செய்யும்வரையில்
பிரம்மசாரியாக, அதாவது விவாகம் செய்துகொள்ளாமலிருந்தால்,
பின்னிட்டுப் பணத்தை அபேக்ஷித்து விவாகம் செய்துகொள்ளமாட்
டான். ஆனால் இவன் சம்பாதிக்காமல் தாய் தந்தையின் ஆதரவி
லிருக்கும்பொழுது விவாகம் செய்துகொண்டால் பணம் கட்டாயம்
கேட்பான். இன்னொரு முக்கியமான விஷயம். அதாவது, பெண்
வயதாகியாவது சிறுபெண்ணாகவாவது மனைவியாக மாத்திரம் இருந்து
மற்ற யோக்கியதைகளில்லாமலிருந்தால் போதாது. அப்பொழுதும்

வியாபார விவாகம் இருந்துகொண்டேயிருக்கும். சிறு பெண்களை விவாகம் செய்துவைக்கவும் கூடாது. பெண்கள் பிள்ளைகளைப்போல் உயர்தரக் கல்வி கற்கவும்வேண்டும். அதாவது பீ. ஏ. வரையில் ஆண்களைப்போல் படித்துவரவேண்டும். அப்பொழுது விவாகம் உண்மையானதாகும். வியாபார கலியாணம் ஒழிந்துவிடும்' என பம்பாயிலுள்ள 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' என்ற பத்திரிகையின் அருமையான அபிப்பிராயம். இதை நாம் பூராவாக அங்கீகரிக்கிறோம். இவ்விஷயத்தைப்பற்றி நம்மவர்கள் தீர்க்காலோசனை செய்து ஒரு கமிட்டி ஏற்படுத்தி இத்துர்வழக்கத்தை நீக்கி இதிலுள்ளதை நடவடிக்கையில் கொண்டுவர முயல்வார்களென்று நம்புகிறோம்.

(From 'மாதர் மனோரஞ்சினி.')

## SNEHALATHA'S LETTER

## ஸ்நேகலதாவின் கடிதம்

### 'என்னைப் பலி கொடுக்கிறேன்'

தேவரீர் அப்பா அவர்களுடைய பாதபத்மங்களுக்கு ஸ்நேகலதா அநேக நமஸ்காரம். என்னை விவாகம்செய்து கொடுப்பதற்காகத் தாங்கள் நம்முடைய வீட்டை அடைவுவைக்க நினைப்பது என்னால் சகிக்கக்கூடவில்லை. அப்படிச் செய்யவேண்டாம்; செய்யவேண்டிய அவசியமிராது; ஏனென்றால் நாளைப் பொழுது விடியுமுன், பரம துக்கத்துக்காளாகிய என்னுடைய ஜீவன் பறந்துபோய், எப்பொழுதும் இன்பமயமாயிருக்கும் தேவியின் பாத நிழலை அடைந்துவிடும்.

என்னைச் செல்வமாய் வளர்த்தீர்கள். தாங்களும் அம்மாவும் என்னிடத்தில் வைத்துள்ள அன்பினால் நான் சந்தோஷமாயிருந்திருப்பதுபோல், மகாராஜா வீட்டுக்குழந்தைகளும் இருந்திருக்கமாட்டார்கள். இப்படி அன்புடன் நீங்கள் என்னை வளர்த்ததற்குப் பதிலாக உங்களையும் குஞ்சு குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியே ஓட்டி, உங்களைக் கஷ்டப்படும்படி செய்யவா நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்தேன்!

மூன்றாம் நாள் இரவு வெகுநேரம் சென்றபிறகு, பகலெல்லாம் அலைந்து, களைத்து, கால் வலிக்க நீங்கள் வீட்டுக்கு வந்தபொழுது உங்கள் முகத்தைப் பார்த்தேன். அதில் துக்கம் குடிகொண்டிருந்தது. 'எல்லாம் போய்விட்டது' என்று நீங்கள் சொன்னது என் காதில்



விழுந்தது. அதுமுதல் அப்பொழுது உங்கள் முகமிருந்த மாதிரி என் கண்முன் எப்பொழுதும் நின்றுகொண்டே இருக்கிறது. அந்த வார்த்தை என் காதில் சப்தித்துக்கொண்டே இருக்கிறது. என் விவாகத்துக்காக கடன்வாங்கத் தாங்கள் செய்திருந்த யோசனை பலிக்காமற் போய்விட்டதென்பதும், வீட்டை அடமானம் வைத்துக் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் பிறகு எனக்குத் தெரிந்தன. அப்பா! அந்த நினைப்பை சகிக்கக்கூடவில்லை. என் விவாக விஷயமாக எவ்வளவு மனோவிசாரம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டது! இன்னும் எனக்கு விவாகமாகவில்லை என்று எவ்வளவு பேர் தங்களைத் தூற்றுகிறார்கள்? தகுந்த வரன் சம்பாதிக்க நீங்கள் எவ்வளவு பாடுபட்டிருக்கிறீர்கள்? எவ்வளவோ தலைமுறையாக நமக்குச் சொந்தமான இந்த வீட்டில், பிறத்தியார் நடமாட நான் சகிக்கமாட்டேன். நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். 'என்னை நான பலி கொடுத்துவிடுகிறேன்.'

பாத்வானில் வெள்ள மெடுத்தபொழுது, அங்கு கஷ்டப்பட்டவர்களுக்கு உபகாரஞ்செய்ய, உத்தம குணமுள்ள பிள்ளைகள் எவ்வளவோ பேர் முன் வந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். கஷ்டப்பட்ட ஜனங்களுக்கு இரங்கின அவர்களுக்கு பகவான் கிருபை செய்வாராக! அந்நியதேசத்துப் பண்டங்களை வாங்குகிறதில்லையென்று எவ்வளவோ பிள்ளைகள் பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பதாகவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வெகுதூரத்திலுள்ள தென் ஆபிரிக்காவில் இருக்கும் நம் ஜனங்களின்பொருட்டுப் பணம் வசூல் செய்ய, உத்தம குணமுள்ள பிள்ளைகள் அநேகர் வீடுதோறும் போனார்கள் என்று கேள்விப்பட்டேன். இங்கு கிட்டவிருந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு இரங்குகிறவர்களில்லையா?

நேற்றிரவு, அப்பா! நான் ஒரு கனவு கண்டேன். அதிலிருந்து ஒரு பிரமாணம் செய்துவிட்டேன். திடீரென்று ஒரு சங்கீதம் கேட்டது; உடனே ஜோதி ஒன்று உண்டாயிற்று; அந்த ஜோதியின் மத்தியில் நமதன்னை துர்க்கா தேவியைக் கண்டேன். சிரித்த முகத்துடன் என்னைப் பார்த்துத் தன்னண்டை வந்துவிடும்படி கூப்பிட்டாள். அப்பொழுது உங்களையும், குடும்பத்தில் அடிபட்டு எப்பொழுதும் வருத்தத்துடன் இருக்கிற என் அம்மாவையும், நம் வீட்டைச் சொர்க்கமாகச் செய்யும் குழந்தைகளையும் நினைத்துக்கொண்டேன். உங்கள் எல்லாரையும் ஆபத்திலிருந்து தப்புவிக்கிறதாக உடனே பிரமாணம் செய்துகொண்டு, நமது துர்க்காதேவி கூப்பிட்டபடி தாமதமின்றி வந்துவிடுகிறதாகப் பதிலுரைத்துவிட்டேன். நான் போய்விட்டால், நீங்கள் அழுவீர்கள். ஆனால் நான் போகத்தான்

போகிறேன். வீடு தப்பட்டும்; அதுமுதல் எப்படி உயிரை விடலாமென்று பல வழிகளை யோசித்தேன். நெருப்பிட்டுக்கொள்ளலாமா? நீரில் விழலாமா? விஷத்தைச் சாப்பிடலாமா? என்று பலவாறு யோசித்தேன். நெருப்பே சிரேஷ்டமென்று தீர்மானித்துவிட்டேன். நானிடும் தீ தேசமெல்லாம் மூண்டு, பெண்ணை வைத்துக்கொண்டு விவாகம்செய்து கொடுக்கக்கூடாமல் தவித்திருக்கும் ஸர்வ ஜனங்களின் துக்கத்தை எரிக்கட்டும்.

போய்வருகிறேன், அப்பா! பலியிடும் நேரம் கிட்டிவிட்டது. உலகெலாம் தூங்கிக்கொண்டிருக்கிறது. நானும் நித்தியமான தூக்கத்தை அடையப்போகிறேன். எனக்கு இப்பொழுது ஒரு சந்தோஷம் ஜனிக்கிறது. இவ்வளவு நாளாய் நீங்கள் என்னை அன்பாய் வைத்து ஆதரித்துவந்ததுபோல், நமது தாய்க்கை அம்மாளும் இனி என்னை வைத்து ஆதரிப்பாள். நீங்களும் அம்மாவும் அங்கு வரும் வழியைப் பார்த்துக்கொண்டே நிற்பேன்.

அநேக நமஸ்காரம், துரதிருஷ்டசாலி ஸ்னேகலதா.

(From 'சுதேசமித்திரன்')



## THE SONG OF THE LITTLE SYRIAN MAID

## சீரியச் சிறு பெண்ணின் பாட்டு

### பல்லவி

நானொரு சிறு அடிமையானாலும்—நன்மை
செய்யக்கூடும் பாரும்.



### அநுபல்லவி

வானதேவன் நன்மை செய்யவே—மானிடர்களை
படைத்தார் பாரும்.— நானொரு

### சரணங்கள்

1

குஷ்டரோகத்தால் எந்தன் எஜமான்—கஸ்தி
படுகின்றாரே—பாரும் இஷ்டமாய் அவர் ரோகம்
நீங்கவே நான் ஒருவகை செய்வேன்.— நானொரு

2

இஸ்ரவேல் தேசத்தில் எலியா என்றொரு—இன்ப
பக்தனுண்டு—பாரு நிஜமாய் அவரென் எஜமான்
குஷ்டத்தை நீக்குவாரென்றறிவேன்.— நானொரு

3

எந்தன் நாச்சியார் இடமே சென்று—இந்தச்செய்
தியைச் சொல்லி—பாரும் அந்த பூவரிட
மென் னெஜமான் அவசியம் போகச் செய்வேன்.— நானொரு

4

எக்காலத்திலும் எவ்விடத்திலும் இயன்ற—நன்மை
செய்வேன்—பாரும் மிக்கவே தேவன் போற்றுவார்
அவர் விரும்பும் காரியம் அதுவே.— நானொரு

5

நன்மை செய்ய நானிருந்தும் நானதைச் செய்யா
விட்டால் பாரும்—என் னெஜமானுக்கு என்ன
பயனில்லையே மிகத் தொல்லையே—பாரும்.— நானொரு

## RESULTS OF COMPETITION

## வியாசப் போட்டி முடிவு

சென்ற மார்ச்சில் குறித்தபடி ஸ்ரீமதிகள் எழுதியனுப்பிய வியாசங்கள் பல. அவற்றில் அநேகமாக எல்லாமே நன்றாகத்தான் இருந்தன. இருந்தாலும் தாரதம்மியங்களைக் கவனித்தபோது ஐந்து ரூபா பெறும் முதல் பரிசுக்குக் கீழே காட்டியபடி ஸ்ரீமதி ஞானபா

ணம் ஆல்பர்ட் உரியவள் என்று தீர்மானமாகக் காணலாயிற்று. ஆனால் இரண்டாவதற்கு ஸ்ரீமதிகள் பெத்ஸி ராஸ், மேரி தைரியம் ஆகிய இருவரும் ஒரே படியாகக் காணப்பட்டதால், வாக்களித்தது இரண்டே பரிசானாலும், இப்போது ஒரு படியான இருவருக்கும் இரண்டிரண்டு ரூபாவாகத் தந்துவிடவே தீர்மானிக்கலானோம்.

1. ஸ்ரீமதி ஞானாபாரணம் ஆல்பர்ட்
நல்லூர், அலன்குளம் போஸ்ட்,
திருநெல்வேலி.

2. ஸ்ரீமதி பெத்ஸி ராஸ்
26. வடமலைபிள்ளை வீதி,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.
ஸ்ரீமதி மேரி தைரியம்
உரப்பனூர்,
திருமங்கலம்.

## PRIZE ESSAY

## தன்னால் இயன்றதைச் செய்த மரியாள்

*மாற். 14. 8.*

முகவுரை.—ஒலிவமலையின் தென்கிழக்கு அடிவாரத்தில் பெத்தானியா என்ற ஒரு சிறு ஊர் உண்டு. அது எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் எரிகோவுக்குப் போகிற பெரும்பாதையிலிருக்கிறது. அதைச் சுற்றிலும் பல நல்ல தோப்புகளிருப்பதை இப்பொழுதும் நாம் பார்க்கலாம். பெத்தானியா என்னும் சிற்றூரில் ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளுமுள்ள ஒரு குடும்பமிருந்தது. சகோதரன் லாசரு, சகோதரிகள் மார்த்தாள், மரியாள் என்பவர்களே. 'நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு; மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை' என்று பிரலாபித்துச் சொன்ன இயேசுவுக்குச் சிலவேளை இந்தக் குடிசையில் தலைசாய்க்கச் சற்று இடங்கிடைத்தது. இவர்கள் மூவரும் எப்படியோ கிறிஸ்துவின் தாசராகி யிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பலத்த செய்கைகளையும், ஞானபோதனைகளையுங் கேள்விப்பட்டு, ஒருவேளை தாங்களே இந்த இயேசுவை வருந்தி அழைத்துத் தங்கள் வீட்டிலே ஏற்றுக்கொண்டு அவரோடு பழகியிருக்கலாம். யோபு, 22. 21-ல் எலிப்பாஸ் சொல்லுகிறபடி 'நீர் அவரோடு பழகிச் சமா



தானமாயிரும்; அதனால் உமக்கு நன்மை வரும்' என்பதுபோலவே, இந்தக் குடும்பத்தாரும் இயேசுவோடு பழகியிருந்தார்கள். அதனால் அவர்களுக்கு நன்மையும் வந்தது. எப்படியெனில் 'இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்' (யோவா. 11. 5). சுவாமி நம் குடும்பத்திலுள்ள தகப்பன், தாய், அண்ணன், அக்காள், தம்பி, தங்கை இவர்களிடத்தில் தனித்தனியாய் அன்புகூர்ந்தால், அதைப்போல பாக்கியமான வாழ்வு உண்டா? இந்தப் பாக்கியம் நமக்கும் வேண்டும்.

வேதாகமத்தில் இந்த மரியாள் சங்கதியை மூன்று சந்தர்ப்பங்களில் காண்கிறோம்.

I. லூக். 10. 38–42 வரை. இயேசுவுக்குப் பிரியமான இந்தக் குடும்பத்தில் வழக்கப்படி ஒருநாள் இயேசு வந்து தங்க நேரிட்டது. மார்த்தாள் அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டு, அவர் பசியை ஆற்ற விரும்பி, அவருக்கு விருந்து ஆயத்தம்பண்ணுவதில், வெகு சுறுசுறுப்பாயிருந்தாள். ஆனால் இந்த மரியாளோ அவரைத் தன் இருதயமாகிய வீட்டில் ஏற்றுக்கொண்டு அவர் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்க ஆரம்பித்தாள். ஒரு மனுஷனுடைய பாதத்தண்டை உட்கார்ந்து படிப்பதற்கும் இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து படிப்பதற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கமாலியேலின் பாதத்தண்டை உட்கார்ந்து உலக ஞானம் படித்தான். இந்த மரியாளோ இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து பரம ஞானம் படித்தான். அவருடைய பாதமாகிய பாடசாலையைவிட்டு எழுந்துபோய், தன் சகோதரிக்கு வீட்டு வேலையில் உதவிசெய்ய அவளுக்கு மனம் வரவில்லை. இவர் சமூகம் உட்கார்ந்து பாடம் படிப்பது அவளுக்கு மோட்சம்போலிருந்தது. ஏனெனில் 1 தீமோ. 4. 8-ல் 'சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இனிமேல் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் அதுவே எல்லாவற்றிலும் சிறந்ததென்றும், மத். 6. 33-ல் 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' என்றும் போதிக்கிற இந்தக் குருவின் முகத்தைவிட்டுப் பிரிய அவளுக்கு மனம் வரவில்லை. என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற ஆண்டவர் எவ்வளவு நல்ல உபாத்தியாயராயிருக்கிறார் என்று மனதில் சொல்லிக்கொள்ளுகிறாள். பின்னும் அவரிடத்தில் ஐயா தெளிவாய்ச் சொல்லித்தாரும். எனக்கு இதெல்லாம் தெரியாதே. உம்முடைய உபதேசம் நன்றாயிருக்கி

றதே என்று ஆவிக்கடுத்த சந்தோஷம் கொள்ளுகிறாள். ஒருவேளை சிலர், 'இந்த மரியாள் வீட்டுவேலைசெய்யச் சோம்பற்பட்டு இவரிடம் வந்து படித்துக்கொண்டிருந்தாள்' என்று தப்பிதமாய் நினைக்கலாம். ஆனால் காரியமோ அப்படியல்ல. தன் சகோதரியிலும் மேலானவர் ஒருவர் தன் வீட்டுக்கு வந்துவிட்டார் என்றெண்ணி, அவரைப் பிதாவடைவாயும், ஆண்டவராகவும் கனம்பண்ணினாள். மார்த்தாள் கனம் பண்ணின மாதிரி வேறே, மரியாள் செய்த கனமோ ஆண்டவர் புகழக்கூடியதாயிருந்தது.

(a) மரியாள் வசனம் கேட்ட விதம். யோபு, 23. 12--ல் 'அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப்பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்' என்று யோபு சொன்னதுபோலவும், எரே. 15. 16-ல் 'உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தன' என்று எரேமியா சொன்னதுபோலவும், இவளும் கேட்டு உட்கொண்டாள். கேட்டு விட்டுவிடவில்லை. கேட்கிறவளாய் மாத்திரமல்ல, அதன்படி நடக்கிறவளாயும் இருந்தாள். அவரைத் தன் ஜீவ அப்பமாகப் புசித்து, ஜீவதண்ணீராகப் பானம்பண்ணிக்கொண்டாள். கடைசியிலும் மறைவான மன்னா சாப்பிடுவதற்கு இது அச்சாரம்.

(b) மரியாளுக்கு நேர்ந்த தடை.—மத். 10. 36. 'ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.' அவ்வசனம் இப்போ நிறைவேறப்போகிறது. எப்படியெனில், இந்த இயேசு பெருமானோடே ஆவிக்கடுத்த சம்பாஷணை செய்துகொண்டிருக்கும்போது, ஊடே ஒரு தடை உண்டாகப்போகிறது, தடை யார்? தன் சொந்த சகோதரியேதான். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.' (2 தீமோ. 3. 12.)

அவ்வளவு பெரிய துன்பமல்லாவிடினும், எப்படியும் மரியாள் மனம் சிதறவேண்டியதாயிற்று. 'நல்லது இதற்குச் சிறிதுநேரத்துக்கு முன்தான் ஆண்டவர் மரியாளிடம் 'மாம்சசிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்' (ரோ. 8. 6) என்று ஒருவேளை சம்பாஷித்துக்கொண்டிருந்திருப்பார். அவ்வளவு சீக்கிரத்துக்குள்ளாக மாம்சசிந்தையுள்ள சகோதரி மார்த்தாள் வந்து ஆவியின் சிந்தையுள்ள மரியாளைக் கெடுக்க வந்தாள். இக்காலத்திலும் சிலர் கூடி நல்ல ஆவிக்கடுத்த சம்பாஷணை செய்துகொண்டிருக்கும்போது, அதற்கு ஏதாவது தடை உண்டாவதை நாமும் நமது அநுபவத்தில் பார்க்கிறதில்லையா? இது விஷயத்தில் நாம் மார்த்தாள் சிந்தையைத் தரித்துக்கொள்ளாமல் அதைக் களைந்துபோடுவோமாக.



ஒரு சமயம் சாத்தான் ஆண்டவரிடம் சீமோனைச் சுளகினால் புடைக்க உத்தரவு கேட்கையில், அவனை அதட்டின ஆண்டவர், இப்போதும் உலககவலை பிடித்த மார்த்தாளுக்கும் இடங்கொடுக்கவில்லை. மார்த்தாளும் தன் சகோதரிமேல் இருந்த கோபத்தை ஆண்டவர்மேல் காட்டிச் சீறினாள். 'என் சகோதரி என்னைத் தனியே வேலைசெய்யவிட்டு இங்கே வந்திருப்பதைப்பற்றி உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும்' என்பதாய்ச் சொல்லுகிறாள். இது எவ்வளவு துணிகரமான வார்த்தை. இவள் இந்த ஆண்டவருக்குச் சோறுபோட்டுத்தான் பிரயோஜனமென்ன? 'பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப்பார்க்கிலும், சிநேகத்தோடிருக்கும் இலைக்கறியே நல்லது' (நீதி. 15. 17). 'கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப்போல் இருக்கையில், அவர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமாயிருக்கிறார்' (ஏசா. 25. 4). மரியாள்மேல் அந்தப் பொறாமைக்கோப அம்பு தைக்காதபடி இயேசு இடையே இருந்து தாங்கிக்கொண்டார். நல்ல ஆண்டவர். அடக்கமுள்ள மரியாள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இன்னொரு பெண்பிள்ளையானால் உடனே சண்டைக்குப் போய்விடுவாளே. இவளோ தன் காரியத்தின்மேல் கண்ணாயிருந்தாள்.

(c) ஆண்டவருடைய உத்தரவு.—உலக காரியங்களுக்காகக் கவலைப்படுகிற மார்த்தாளே! உன் சகோதரி மரியாள் செய்யும் வேலை, நீ செய்யும் வேலைக்குக் கொஞ்சம் தாழ்வானதென்று நினைத்துக்கொள்ளாதே. நிசந்தான். நீ எனக்குச் சாப்பாடுகொடுத்து என்னை உபசரிக்கிறாய், ஆனால் உன் சகோதரியோ அந்தரங்கமாய் இருதயத்தில் உபசரிக்கிறாள். எப்படியெனில், என்னிடம் ஜீவ அப்பம் வாங்கிச் சாப்பிட்டு, என்னை உபசரிக்கிறதே எனக்குப் பிரியம். 'அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல. நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்.' (யோவா. 6. 27.)

இக்காலத்திலும் அநேகர் கிறிஸ்துவுக்கு வெளியரங்கமாய் ஊழியம் செய்கிறார்கள். எப்படியெனில், படபடப்பாய், சுறுசுறுப்புள்ளவர்களாய், ஒழுங்காய்க் கோவிலுக்குப் போகவோ அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கம் செய்யவோ, கூட்டங்களில் ஜெபிக்கவோ, வெகு முஸ்திப்பாயிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், அடக்கமாய், வெளிக்குத் தெரியாமல், ஜெப சிந்தையுள்ளவர்களாய், உள்ளான தேவபக்தியுள்ளவர்களாயிருக்கிறவர்களைக் குறை சொல்லுகிறதும் உண்டு. இது

நல்லதல்ல. சுவாமி வெளித்தோற்றத்தைமட்டும் பார்க்கிறவரல்ல. இருதயத்தைப் பார்க்கிறவர். ஆகையால் அவர் நிறக்கிற தராசுதான் சரியான தராசு. மரியாளும், மார்த்தாளும் நிறுக்கப்பட்டதில் மார்த்தாள் குறைவாய்க் காணப்பட்டாள்.

(இன்னும் வரும்.)

Gnanabaranam Albert,
Nallur, Alankulam P. O.,
Tinnevelly District.



## SAVED BY A MIRACLE

## அற்புதத்தினால் இரட்சிக்கப்பட்டாள்

ஞானம்மாள் என்னும் ஓர் ஏழைக் கைம்பெண் ஒருநாள் பால் குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ஒரு கிராமத்தின் வீதி வழியாய் அதிக துக்கத்துடன் போனாள்.

'பெரியம்மணி எப்படியிருக்கிறது அம்மா?' என்று பக்கத்து வீட்டுக்காரன் கேட்டான்.

'அதிக மோசமாகத்தான் இருக்கிறது. அவள் பிழைக்கவேண்டுமானால் ஒரு அற்புதம் வேண்டும் என்று டாக்டர் துரை சொல்லுகிறார்' என்று தாய் கண்ணீரோடு சொன்னாள்.



'அப்படியா, அம்மா? ஆனாலும் விசனப்படவேண்டாம்! கடவுளுக்குச் சித்தமானால் அவர் அவளை ரட்சிக்கக்கூடியவராயிருக்கிறார்' என்று பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான்.

ஏழைத்தாய் வீட்டுக்குட் பிரவேசித்து உதவிக்காக வந்த அயல் வீட்டுப் பெண் ஒன்றியாயிருப்பதைப் பார்த்து 'சின்னம்மணி எங்கே?' என்று கேட்டாள்.

'கொஞ்சநேரத்துக்கு முந்திக் கடைவீதிக்குப் போனாள். நீ அவளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அவள் வியாதிக்காரப் பிள்ளையோடு எப்பொழுதும் இருப்பது நல்லதல்ல. வெளியே போய்ச் சற்று நேரம் விளையாடவிடலாமே' என்று சொன்னாள் அயல் வீட்டுக்காரி.

சின்னம்மணியும் டாக்டருடைய வார்த்தைகளைக் கேட்டிருந்தாள். உடனே தனக்கிருந்த காசுகளையெல்லாம் மடியில் கட்டிக்கொண்டு கடைவீதிக்கு ஓடிப்போய், 'தயவுசெய்து எனக்கு ஒரு அற்புதம் வேண்டும்' என்று கேட்டாள். அந்தச் சிறுபிள்ளை கடைக்காரருக்கு அறிமுகமுள்ளவளானபடியினால் எல்லாரும் இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பட்சமாய்ப் பேசினார்கள்.

'எங்கள் கடையில் அற்புதமில்லை; இங்கு விற்கிறதில்லை' என்று புன்சிரிப்புடன் சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

அப்படியே அந்தப் பிள்ளை வீடுவீடாய்ப் போய்க் கேட்டாள். எங்கும் கிடைக்கவில்லை. 'ஐயோ! நான் என்ன செய்வேன்? அற்புதம் விற்கிறதில்லையா? அதை வாங்க முடியாவிட்டால் அக்காள் பிழைக்க மாட்டாள் என்று சொன்னாரே! செத்துப்போவாளே!' என்று இந்தவிதமாய்ச் சொல்லி அழுதுகொண்டு கடைசியாக ஒரு மருந்துக் கடைக்கு வந்தாள். 'இதுதான் சரியான கடை! இங்கே என் அம்மாள் எப்பொழுதும் மருந்து வாங்குகிறதில்லையா?' என்று சந்தோஷத்துடன் உள்ளே சென்று, 'தயவுசெய்து எனக்கு ஒரு அற்புதம் வேண்டும். அதற்கு விலை என்ன?' என்று கேட்டாள்.

'என்ன அம்மா சொல்லுகிறாய்?'

அதற்கு அவள், 'தயவுசெய்து ஒரு அற்புதம் வேண்டும்' என்று திரும்பச் சொன்னாள்.

'இங்கு விற்கிறதில்லை, அம்மணி' என்று கடைக்காரன் பட்சத்துடன் சொன்னான்.

பக்கத்தில் இரண்டு துரைமார் நின்றுபேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் லண்டன் பட்டணத்துப் பெரிய ஆஸ்பத்திரியில் தலைமை வைத்தியர். இவர்கள் பிள்ளையின் கண்ணீரைப் பார்த்து, அவள் கேட்ட கேள்வியைக் கவனித்து 'உனக்கு என்ன வேண்டும் அம்மா? ஏன் இப்படிக் கேட்கிறாய்?' என்று கேட்டார்கள்.

அப்பொழுது சிறுமி தன் சகோதரியின் பயங்கரமான வியாதி, குடும்பத்தின் நிலைமை, தாயின் துக்கம் ஆகிய எல்லாவற்றையும் சொன்னாள்.

உடனே ‘உன் வீடு எங்கே காட்டம்மா! அக்காளைப் பார்த்து உதவி செய்கிறேன் வா’ என்று வைத்தியர் சொன்னார்.

அப்படியே சீக்கிரத்தில் வீட்டுக்குச் சென்றார்கள். வைத்துயர் வியாதிக்காரப் பிள்ளையை நன்றாய்ச் சோதித்துப் பார்த்தார். அப்பொழுது ‘மெய்தான், அவள் பிழைக்கிறதற்கு ஒரு அற்புதம் வேண்டும். நாம் உடனே ஏதாவது செய்யவேண்டும்’ என்று சொன்னார். பின்பு செய்யவேண்டிய ஒழுங்குகளையெல்லாம் செய்து அடுத்த நாள் அவளுக்கு ஆபரேஷன் செய்து ஆண்டவருடைய சகாயத்தினால் அவளைச் சீக்கிரத்தில் சுகப்படுத்தினார். அந்த அற்புதத்தினாலே இரட்சிக்கப்பட்டாள்.

சகோதரிகளே! நாமும் அற்புதத்தினாலேதான் இரட்சிக்கப்படுவோம். ‘தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.’

அந்த நித்திய ஜீவன் உங்களுக்கும் வேண்டுமா?

## THE KING'S CUP BEARER. (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### IV. அத்தியாயம்

அவரவர்க்குரிய வேலை

இந்தக் கீர்த்தி ஜாப்தா எங்கேயிருக்கிறது? நெகேமியாவின் சொல்லுக்கிணங்கி எருசலேமின் அலங்கத்தைக் கட்டினவர்களெல்லாருடைய பேர்களும் அங்கேயிருக்கின்றன. நெகேமியா iii அத்தியாயத்தில் அவர்களெல்லாருடைய பேர்களும் ஒன்றும் விடாமல் காணலாம். அங்கே அந்தப் பெயர்கள் இரண்டாயிரம் வருஷங்களாக இருக்கின்றன. காலம் முடியுமட்டும் அங்கேதானிருக்கும். அந்த யூதர்கள் மிகவும் தைரியசாலிகளும், கனம் பெற்றவர்களுமாயிருந்தார்கள். தங்களுக்கு இந்த ஏற்பாடு உண்டானவுடனே ‘எழுந்து கட்டுவோம்’ என்றார்களே. அவர்கள் தங்கள் வாயினால் சொன்னது மாத்திரமல்ல; தாங்கள் வாக்குக்கொடுத்தபடியே செய்யவும் புறப்பட்டார்கள்.





எருசலேமின் அலங்கத்தைச் சுற்றிலும் போய் வேலை செய்கிறவர்களைச் சற்றுப் பார்ப்போம். நகரத்தின் கிழக்கே ஆட்டுவாசலண்டை வேலை ஆரம்பிக்கிறது. அந்த வாசலண்டை நின்றுபார்த்தால் கீழே கீதரோன் பள்ளத்தாக்கையும், அதற்கு அப்பால் ஒலிவமலைச் சரிவுகளையும் காணலாம். நமது பக்கமாய்ப் பட்டணத்திற்குள்ளே ஆட்டுச்சந்தை உண்டு. அது தேவாலயத்தில் பலியிட வாங்க விரும்புகிறவர்கள் வாங்கும்படியாக ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் விற்கப்படுகிற இடம். இந்தச் சந்தைக்குப் பக்கத்தில், ஆடுகள் தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்படுமுன் கழுவப்படும்படியாக ஒரு குளமுண்டு. இந்தக் குளத்தைப்பற்றித்தான் யோவா. 5. 2-ல் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில், சுகமாகவேண்டுமென்று விரும்பிக் காத்துக்கொண்டிருந்த மனிதன் இங்கேதான் படுத்திருந்தான்.

ஆட்டுவாசலையும் அதற்கு அருகாமையிலிருக்கும் சுவரையும் ஆத்திரமாய்க் கட்டுகிறவர்கள் யார்? அங்கேயுள்ள ஆசாரியன்மார், அல்லது குருக்கள்மார்தான். அவர்கள் ஆலயத்திலுள்ள தங்கள் வேலையை விட்டு, இடைகட்டியவர்களாய், உட்சட்டைத் தொங்கலை மடக்கிவைத்தவர்களாய், தாங்கள் செய்யவேண்டியபடியே, நெகேமியாவின் பிரயத்தனத்திற்கு முற்படையாக மற்றவர்களை வழிநடத்தி ஊழியஞ்செய்கிறார்கள். இவர்களெல்லாருக்கும் முதன்மையாய், வேலையை மேற்பார்த்துக்கொண்டு பிரதான ஆசாரியராகிய எலியாசீப் நிற்கிறார். அவருடைய பெயரின் அர்த்தம் ‘தேவன் சீர்திருத்துகிறார்’ என்பதே. பரிசுத்த நகரத்தைச் சீர்திருத்த ஆரம்பித்த மனுஷனுக்கு இது கனமுள்ள மேன்மையான பெயர்தான். இவர் செருபாபேலோடு திரும்பிவந்த பிரதான ஆசாரியராகிய ஜெசுவாவின் பேரன். இவர்

OFFICE OF THE REGISTRAR
15 OCT 1914
MADRAS.

அந்த அலங்கத்தை அவ்வளவு ஆத்திரமாய்க் கட்டினபோதிலும், அதே அலங்கத்திற்குள்ளே பாவம் வரும்படி இடங்கொடுத்தது இந்த எலியாசீப்தான் என்பது மிகவும் துக்கமான விஷயம்.

ஆசாரியர்கள் ஆட்டுவாசலிலிருந்து நகரத்தின் வடகீழ் மூலையிலுள்ள மீயா, ஆனனீல் என்ற இரண்டு கோபுரங்கள் வரையிலும் கட்டுகிறார்கள்.

அதைக் கடந்துபோனால், இன்னும் சில மனுஷர் வேலை செய்வதைப் பார்க்கலாம். உடையைப் பார்த்தால் அவர்கள் ஆசாரியர்களல்ல. அவர்கள் எங்கேயிருந்து வந்தவர்களென்றால் அவர்கள் எரிகோவின் மனுஷர், எரிகோவிலிருந்து வந்தவர்கள். எரிகோ, யோர்தான் பள்ளத்தாக்குக்குப் பதினாறு மைலுக்கு அப்பால் இருக்கிறது. சைரஸ் காலத்தில் வந்த முன்னூற்று நாற்பத்தைந்து யூதர்களிலிருந்து உண்டானவர்கள். இந்தப் பக்கத்து வேலை இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரணம், இது அவர்களுடைய சொந்த ஊராகிய எரிகோவுக்கு எதிரில் இருப்பதுதான். எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும் பாதை தொடங்குகிற இந்த இடத்திலிருந்து கட்டுகிறார்கள்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1914 ௵ ஆகஸ்டீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | நீதி. | 16. | 17—33 | 11 | செ. | நீதி. | 21. | 17—31 | 21 | வெ. | நீதி. | 26. | 14—28 |
| 2 | ஞா. | ,, | 17. | 1—14 | 12 | பு. | ,, | 22. | 1—15 | 22 | ச. | ,, | 27. | 1—13 |
| 3 | தி. | ,, | 17. | 15—28 | 13 | வி. | ,, | 22. | 16—29 | 23 | ஞா. | ,, | 27. | 14—27 |
| 4 | செ. | ,, | 18. | 1—12 | 14 | வெ. | ,, | 23. | 1—18 | 24 | தி. | ,, | 28. | 1—14 |
| 5 | பு. | ,, | 18. | 13—21 | 15 | ச. | ,, | 23. | 19—35 | 25 | செ. | ,, | 28. | 15—28 |
| 6 | வி. | ,, | 19. | 1—14 | 16 | ஞா. | ,, | 24. | 1—18 | 26 | பு. | ,, | 29. | 1—13 |
| 7 | வெ. | ,, | 19. | 15—29 | 17 | தி. | ,, | 24. | 19—34 | 27 | வி. | ,, | 29. | 14—27 |
| 8 | ச. | ,, | 20. | 1—15 | 18 | செ. | ,, | 25. | 1—14 | 28 | வெ. | ,, | 30. | 1—16 |
| 9 | ஞா. | ,, | 20. | 16—30 | 19 | பு. | ,, | 25. | 15—28 | 29 | ச. | ,, | 30. | 17—33 |
| 10 | தி. | ,, | 21. | 1—16 | 20 | வி. | ,, | 26. | 1—13 | 30 | ஞா. | ,, | 31. | 1—15 |
| | | | | | | | | | | 31 | தி. | ,, | 31. | 16—31 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914



LADY ATKINSON.—அட்கின்ஸன் பெருமாட்டி

# மாதர் போதினி

No. 201 செப்டெம்பர் 1914 No.

OFFICE OF ... 15 OCT 19.. MADRAS.

## LADY ATKINSON

## அட்கின்ஸன் பெருமாட்டி

இப்பெயரையுடைய மாது சிரோன்மணியின் படமொன்றை நமது மாதர்போதினியின் இம்மாசத்துச் சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். அவர் யாரென்று சிலர் அறியாதிருக்கலாம். ஆகையால் அக்குணசீலியைப்பற்றிச் சிறிது சொல்லுதல் மாதர்போதினிப் பத்திரிகாபிமானிகளுக்கு மிக்க சந்தோஷத்தை விளைவிக்குமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வுத்தமி, ஸேர் ஜோன் அட்கின்ஸன் என்னும் அங்கிலேய பிரபுவின் மனைவி. கணவன் நம் தேசத்திற்குக் கலெக்டராய் வந்தபோது அவரோடுகூட நமது தேசத்திற்கு வந்து அவர் செல்லுமிடந்தோறும் சென்று நமது தேசத்து ஸ்திரீகளுக்கு மிக்க நன்மை செய்தவர். புருஷன் கலெக்டராயிருந்த ஜில்லாக்களிலெல்லாம் இந்த அம்மாளுடைய பெயர் புகழ்பெற்று விளங்குகின்றது. கடைசியாய் அட்கின்ஸன் பிரபு, சென்னை கவர்ணர் அவர்களின் ஆலோசனைச் சபைக்குப் பிரதம அங்கத்தவராய் வந்தபோது மனைவியும் இங்குவந்து நமது தேசத்து ஸ்திரீகளின்மீது தாம் வைத்த பேரன்பை விளக்கிக் காட்டினார். பெண்களின் பொதுநன்மைக்கேற்ற விஷயங்களில் பங்குபெற்ற இவ்வுத்தமி எப்பொழுதும் முந்தி நிற்பது வழக்கம். பெண்களுடைய வித்தியாசாலைகளை அடிக்கடி போய்ப் பார்த்து அவற்றை விருத்திசெய்வதற்கேற்ற வழிவகைகளைத் தேடுவதிலும், கலாசாலைகளிற் பரிசளிப்பதிலும், வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகளாயிருக்கும் ஸ்திரீகளைச் சந்தித்து உற்சாகப்படுத்துவதிலும் இந்த அம்மாளுக்குப் பிரீதி வெகு ஜாஸ்தி. அன்றியும் இவர்

நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் என்னும் சபையிலும், சென்னை லேடீஸ் கிளப் என்னும் இந்திய பெண்கள் சங்கத்திலும் அங்கத்தவராயிருந்தார். பெண்கள் கல்விவிஷயத்திலும் இவர் அதிக கஷ்டப்பட்டவர். ஆகையால் இந்த அம்மாளை நாம் என்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். புருஷன் வேலையைவிட்டு உபகாரச் சம்பளம்பெற்று ஜனனதேசம் சென்றமையால் இவரும் கணவரோடு சுயதேசமாகிய இங்கிலாந்திற்குச் சென்றிருக்கிறார். இறைவன் இவருக்குத் தீர்க்காயுளும் நற்சுகமும் தந்து ஆசீர்வதிப்பாராக.



## THE KING'S CUP BEARER (*Continued*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### IV. அத்தியாயம்

அவரவர்க்குரிய வேலை

எரிகோவின் மனுஷரைக் கடந்து சென்றால், அங்கே அலங்கத்தின் கொஞ்ச பாகத்தில் ஒரே மனிதன்தான் வேலை செய்கிறான். அவன்பேர் சாக்கர். அவனுக்குக் கொஞ்சவேலைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபமாய் மீன் வாசலிருக்கிறது. அங்கே ஆசென்னேயின் குமாரர் கட்டுகிறார். இந்த சாக்கர் விசேஷித்த மனிதனாயிருக்கமாட்டான். ஏனென்றால் இவனைப்பற்றி வேறெங்கும் நான் வாசிக்கிறதில்லை. ஆனாலும் தேவனுடைய புஸ்தகத்தில் இவனுடைய பேர் வரையப்பட்டிருக்கிறது. உலக முடிவுவரையிலும் அங்கேதானிருக்கும்.



இப்பொழுது நாம் நகரத்தின் வடக்கேயுள்ள மீன்வாசலுக்குப் போவோம். சமீபத்தில் மீன்கடை ஒன்றுண்டு. அதன் வழியாய்த்தான் எருசலேமில் விற்கப்படும் மீன்களெல்லாம் வரவேண்டும். தீருவின் மனிதர் மத்தியதரைக்கடலிலிருந்தும், கலிலேயச் செம்படவர் உள்நாட்டுக் கடலிலிருந்தும் மீன்களைக் கொண்டுவருவார்கள். இந்தக் கடலிலேதான், பிற்காலங்களில் அப்போஸ்தலர் தங்களுடைய அன்றாடக சாப்பாட்டிற்காக வேலைசெய்து வந்தார்கள்.

எல்லாராலும் அறியப்பட்ட நகரவாசிகளாகிய மூன்றுபேர் அடுத்த பாகத்தைச் சீர்ப்படுத்துகிறார்கள். அவர்கள் மெரிமொத், மெசுல்லாம், சாதேக் என்பவர்களே. இவர்களிலொருவராகிய மெசுல்லாமைப் பற்றி அதிகமாய் வாசிக்கலாம். இவருடைய பேர் எருசலேமைக் கட்டினவராக மிக மேன்மையாய்ச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், நெகேமியாவின் சரித்திரத்தை முழுவதும் வாசிக்கும்போது இவருடைய மற்றக் காரியங்களெல்லாம் தெரியும்.

இம்மூன்று பேரையும் கடந்து, தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டுகிற பாகத்திற்கு வருவோம். இவ்வூர் எருசலேமுக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமம். இதிலிருந்துதான் யோவாப் தாவீது ராஜாவினிடத்தில் ஒரு ஞானமுள்ள பெண்ணை அனுப்பினார். இந்தப் பாகத்தில் என்ன நடக்கிறது? வேலை சரியாய் நடந்தேறவில்லை. வேலைசெய்கிறவர்களை நடத்துகிறவர்களில்லை. வேலையோ நீளமான சுவர். ஆட்களோ வெகு சொற்பம். 5-ம் வாக்கியத்தில் பார்க்கிறபடி 'தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை.'

இவர்கள் ஏரில் பூட்டப்பட்டு இழுக்கமாட்டாத சோம்பலான எருமைக் கடாக்களைப்போலிருந்தார்கள். தெக்கோவாவின் பெரிய மனுஷர்கள் கிராமத்தின் சாதாரண ஜனங்களோடு வேலைசெய்வது கனக்குறைவென்றோ, அல்லது விடாமுயற்சியாய்ச் செய்யவேண்டிய இந்த வேலையைச் செய்ய சோம்பலடைந்தோ செய்யாமல் நின்றுவிட்டார்கள். செய்தாலும் செய்யாவிட்டாலும் அவர்களுடைய இஷ்டம் என்று தங்கள் அயலகத்தாருடைய தலையின்மேல் பாரத்தையெல்லாம் போட்டுவிட்டார்கள்.

அப்பால் பட்டணத்தின் வடக்கேயுள்ள பழைய வாசலைக் கடந்து போகிறோம். இது தமஸ்குவின் வாசலென்று இப்பொழுது அழைக்கப்படுகிறது. இங்கேயிருந்துதான் சமாரியாவுக்கும் கலிலேயாவுக்கும் பெரிய பாதை வடக்காய்ப் போகிறது.

அடுத்தாற்போல், அலங்கத்தின்மேல் கிபியோன் மிஸ்பா ஊர்களின் ஜனங்கள் அடுத்தடுத்து நின்று வேலைசெய்கிறார்கள். இவர்கள் அயலகத்தாரல்லவா? இவர்கள் அப்படி வேலை செய்யவேண்டியது

நியாயமே. இந்த இரண்டு கிராமங்களும் வடக்கு வாசலுக்கு எதிரே ஐந்துமைல் தூரத்திற்கு அப்பாலுள்ள மலையின்மேலிருக்கின்றன.

நகரத்தைச் சுற்றி எப்பிராயீம் வாசலிலிருந்து அகலமான சுவர் மட்டும் பார்வையிடுவோம். இங்கே வேலையாட்களில்லை. ஏனென்றால், பழுதுபார்க்க அவசியமில்லை. யூதாவின் ராஜாவாகிய உசியா அலங்கத்தின் இந்தப் பாகத்தை அதிக பலமாய்க் கட்டிவைத்தபடியால், பட்டணத்தின் மற்றப் பாகத்தோடு இதையும் அழிக்கக் கல்தேயரால் முடியவில்லை. இருநூறு கஜநீளமுள்ள இந்தப் பாகம் மற்றப் பாகத்தைவிட இரண்டு மடங்கு அகலமானதும் அகலச்சுவர் என்று அழைக்கப்பட்டதுமாயிருந்தது.

இதற்குப் பக்கத்தில் தட்டாரும் தைலக்காரருமான தொழிலாளிகள் வேலைசெய்கிறார்கள். அந்தத் தேசங்களில் தொழிலானது அநேக தலைமுறைகளாகத் தகப்பனிலிருந்து மகனுக்குக் கிடைக்கும் பாரம்பரியமாயிருந்தது. ஆகையால் இந்தத் தட்டாரும் தைலக்காரரும் ஒரு குடும்பக் கூட்டமாய்ச் சேர்ந்து இந்த வேலையைச் செய்கிறார்கள். வாசனைத் திரவியங்களைக் கூட்டுகிறவர்கள்தான் தைலக்காரர். இவர்கள் மிகவும் விசேஷித்தவர்கள். அந்தத் தேசத்தில் சமையலுக்கும் வாசனை வஸ்துக்களைச் சேர்ப்பார்கள். இறந்துபோன சரீரங்களுக்கும் சுகந்த வாசனைத் திரவியங்களைப் போட்டு வாசனையேற்றுகிறார்கள்.

இதைக் கடந்து செங்கல் சூளையின் கொம்மையண்டை வருவோம். இங்கே கட்டடத்திற்கு வேண்டிய செங்கற்களெல்லாம் செய்யப்படுகின்றன. இங்கே இரவும் பகலும் வேலை செய்கிறவர்களுக்கு ஒரு கோபுரம் இருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. செங்கல் சூளையின் பக்கத்தில் நாம் கவனிக்கவேண்டிய விநோதக்காட்சி ஒன்றுண்டு. இங்கே கொல்லறு கைபிடித்து மற்ற ஜனங்களோடு துரிதமாய் வேலைசெய்கிற மாது சிரோன்மணிகளைப் பார்க்கலாம். இந்தப் பெண்மணிகள் யார்? எருசலேமைச் சுற்றிலுமிருக்கிற பாகங்களுக்கு அதிபதியாகிய சல்லூம் பிரபுவின் குமாரத்திகள். சல்லூம் மிகவும் சொல் சக்தியுள்ள கீர்த்திபெற்ற பெரிய மனுஷனும் தனவந்தனுமாயிருந்தார். ஆகையால் தெக்கோவாவின் பிரபுக்களைப்போல வேலை செய்யப் பின்வாங்கவில்லை. அவருடைய குமாரத்திகள் கர்த்தருடைய வேலையைச் செய்ய ஆவலுள்ளவர்களாய், தகப்பன் பக்கத்தில் நின்று வேலைசெய்கிறார்கள். எருசலேமின் கன்னிப் பெண்களின் வேலையைத் தேவன் கவனித்தவராய், தம்முடைய கீர்த்தி ஜாப்தாவில் இவர்கள் பேரையும் வரைய மறந்துபோகவில்லை.

இவர்களையும் கடந்து, நிலவு வெளிச்சத்தில் நெகேமியா பரிசோதனை செய்த அலங்கத்தின் பாகத்திற்கு வருவோம். இங்கேதான்



பள்ளத்தாக்கின் வாசலும், குப்பைமேட்டு வாசலும், சீலோவாம் குளத்திற்கு எதிரான ஊற்றுவாசலுமுண்டு. இந்தப் பாகம் நேபுகாத்நேச்சாரால் அதிகமாய் அழிக்கப்பட்டுப்போயிற்று. ஆகையால் இங்கே அதிகமான வேலை செய்யவேண்டியது அவசியம். தென்கிழக்கு மூலைக்குச் சமீபமாய், நெகேமியாவின் கோவேறுகழுதை போகமுடியாமல் நின்றுவிட்ட அந்த இடத்தில் கட்டுகிறவர்களுக்கு அதிகமான வேலைதான். கட்டடம் தொடங்குமுன் அப்புறப்படுத்தவேண்டிய குப்பைகளும், கூளங்களும், கழிவுகளும் ஏராளமாயிருந்தன. ஆகையால் அந்த இடத்தில் வேலையைச் சுலபமாக்கும்படி அநேக கைகள் வேலைசெய்தன. இந்தப் பக்கத்தில் வேலைசெய்கிறவர்களும் தங்கள் ஊருக்கு எதிரே இருக்கும் பாகத்தைத்தான் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். கட்டுகிறவர்கள் தங்கள் ஊர்களுக்கு எதிரேயுள்ள பாகத்தைக் கட்டுகிறதை ஆறுதடவைக்குக் குறையாமல் பார்க்கலாம்.

நாம் கீழ்ச்சுவர்ப் பக்கமாய்த் திரும்பும்போது ஒருவரைக் கவனிக்கிறோம். பாரூக் என்பது அவருடைய நாமம். அவரைப் பார்த்தவுடனே கவனிக்கத்தக்க விஷயம் அவரிடத்தில் உண்டு. தம்முடைய ஜீவனுக்காக உழைப்பவரைப்போல, ஒரு நிமிஷங்கூட விடாமல் வேலை செய்கிறார். யார் வராமற்போனாலும், பாரூக் தன் வேலையில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருப்பார். யார் சோம்பலாயிருந்தாலும், இவர் மாத்திரம் எப்பொழுதும், காலையிலும் மாலையிலும், சூரியன் காந்தியான கதிர்களை வீசும்போதும், இரவில் பனி பெய்யும்போதும், தன் முழு மனதோடும் முழு பலத்தோடும் வேலை செய்கிறார். 20-ம் வாக்கியத்தில் 'வெகு ஜாக்கிரதையோடே பழுது பார்த்துக் கட்டினான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மிகவும் வைராக்கியமாய்ச் செய்தார். பின்னொரு பங்கையும் செய்ததாகப் பார்க்கிறோம். அலங்கத்தில் தம்முடைய பாகத்தை முடித்துவிட்டுத் தென்கிழக்கு மூலையில் ஆழமாய்ப் பதிந்துகிடக்கும் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு உதவிசெய்ய வந்துவிட்டார். ஆகையால் தேவனுடைய கீர்த்தி ஜாப்தாவில் விசேஷமாய் நினைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மூலையைச் சுற்றிப்போய், கீழ்அலங்கத்தைப் பார்த்தால், அங்கே வயதுசென்ற பஞ்சுபோல் தலையுடைய விருத்தாப்பியர் ஒருவர் வேலைசெய்துகொண்டிருக்கிறார். இவர் ஷெகனியாவின் குமாரனாகிய ஷெமாயா என்பவர். 1 நாளா. 3. 22-ல் இவர் பெயரைப் பார்க்கலாம். இவர் தாவீதின் பின்சந்ததியார். இவருடைய குமாரனாகிய ஆத்தூஷ் எஸ்றாவோடு பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் வந்திருக்கிறார். தம்முடைய நரைமயிர், கர்த்தருடைய வேலைக்குத்

தடைசெய்யாதபடி தீர்மானம் பண்ணினவராய், அங்கே வயதுசென்றவராய் நிற்கிறார். ஆலயப்பிராகாரங்களுக்குக் கிழக்கே, ஒலிவமலைக்கு எதிரேயிருக்கும் தங்கவாசலைக் கட்டுகிறார். இதுதான் இவருக்குக் குறிக்கப்பட்ட வேலை.

அலங்கத்தின் கடைசிபாகம் தட்டாராலும் வர்த்தகராலும் செய்யப்பட்டது. இவர்களையும் கடந்துபோனால் மறுபடியும் ஆட்டுவாசலுக்கு வருவோம். இங்கிருந்துதான் நாம் நகரத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம்.

கரண்டிகளின் (கொல்லறு) சத்தமும், வேலையாட்கள் ஒருவரையொருவர் கூப்பிட்டு உற்சாகப்படுத்துகிற சத்தமும் கேட்கப்படுகின்றன. தினசரி காலைமுதல் மாலைவரையும் வேலைகள் மிகவும் துரிதமாய் நடத்தப்பட்டு, பார்த்துக்கொண்டிருக்கும்போதே, இத்தனை வருஷ காலமாய் அழிந்துகிடந்த சுவர்கள் நேர்த்தியாய்க் கட்டி முடிவுபெற்றாய்விட்டது. நெகேமியாவின் வேலையாட்கள் செய்த வேலை கர்த்தருடைய வேலை, மகத்துவமான வேலை, மேன்மை நிறைந்த வேலை, கர்த்தர் பார்த்தார், கவனித்தார், தம்முடைய ஜாப்தாவில் வரைந்துகொண்டார்.

நெகேமியாவின் வேலைக்குப் பிறகு காலங்கள் மாறிப்போயின. நடை உடை வித்தியாசப்பட்டன. ராஜ்யங்கள் மறைந்துபோயின. ஆனாலும் கர்த்தருக்கென்று செய்யப்படும் வேலை இன்னும் இருக்கிறது. ஆண்டவருடைய வேலைத்துறை இன்னும் திறந்திருக்கிறது. கர்த்தருடைய கண் அவருடைய ஊழியக்காரர்மேல் நோக்கமாயிருக்கிறது. ஒருவர் ஒருவராய்த் தம்முடைய ஜாப்தாவில் எழுதுகிறார். உலகத்திலல்ல, பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கீர்த்தி ஜாப்தாவில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்னுடைய பெயர் அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? நான் கர்த்தருடைய வேலையைச் செய்கிறேனா? வேலைத்துறையில் எனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்கிறவனாகக் காணப்படுவேனா? எருசலேமின் அலங்கத்தைக் காட்டி மூன்று நல்ல விசேஷித்த பாடங்களைக் கற்றுக்கொடுக்க விரும்புகிறார்.

(1) யார் வேலை செய்யவேண்டும்?

(2) அவர்கள் எங்கே வேலை செய்யவேண்டும்?

(3) அவர்கள் எப்படி வேலை செய்யவேண்டும்?

யார் வேலை செய்யவேண்டும்? எருசலேமின் அலங்கம் என்ன சொல்லுகிறது? ஒருவர் தவறாமல் எல்லாரும் வேலை செய்யவேண்டும். சகலவிதமான ஜனங்களும் வேலைசெய்ய நாம் பார்க்கவில்லையா? ஐசுவரியவான்களும், தரித்திரரும், தொழிலாளிகளும், தட்டாரும்,



குருக்களும், வர்த்தகரும், தைலக்காரரும் செய்கிறார்களே. ஆண்களும், பெண்களும், பெரியோரும், சிறியோரும், முதிர்வயதானவர்களும், தேசத்தின் பல பாகத்திலிருந்து வந்தவர்களும், எரிகோ, கிபியோன், மிஸ்பா ஊர்களின் ஜனங்களும், எருசலேமின் குடிகளோடு சேர்ந்து வேலைசெய்யவில்லையா?

(இன்னும் வரும்.)

S. A. Vethanayaham.

## SIMPLE REMEDIES FOR COMMON DISEASES

## சாதாரண வியாதிகளுக்கு மருந்து

| வியாதி. | இங்கிலீஷ் ஔஷதம். | நாட்டு மருந்து. |
|---|---|---|
| சீதபேதி. | காஸ்டர் ஆயில் இமல்ஷன், (Castor-oil Emulsion) பொடி செய்யப்பட்ட பிசின், 1 தேக்கரண்டி,<br>சிற்றாமணக்கெண்ணெய்,<br>ஜலம்,<br>செய்யும் வகை:— பொடி செய்யப்பட்ட பிசினோடு ஆமணக்கெண்ணெய் சேர்த்து அரைக்கவும்; வெண்ணிறமாகும்வரை ஜலம் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றவும்; இதோடு கொஞ்சம் சர்க்கரை கூட்டவும்; வேண்டுமானால் 5 துளி பெப்பர்மின்ற் எஸ்ஸென்ஸ் (Essence of Peppermint) சேர்த்துக்கொள்ளவும். | (1) 3 பை கடுக்காய்ப் பூ வாங்கி அதைப் பொன்னிறமாக வறுத்து மாப்போல் பொடி செய்யவும். இதைக் காலை மாலை $\frac{1}{4}$ தேக்கரண்டி அளவு வெறும் வயிற்றில் சாப்பிடவும்.<br>(2) காய்ந்த மாதுளம் பழத்தின் தோலைப் பொடிசெய்து, வெறும் வயிற்றில் சாப்பிடவும். |

| வியாதி. | இங்கிலீஷ் ஔஷதம். | நாட்டு மருந்து. |
|---|---|---|
| படர் தாமரை. (படை.) | இங்கிலீஷ் மால்ட் காடி (English malt vinegar) எடுத்துப் பஞ்சினால் ஒரு நாளைக்கு நாலுதரம் பூசிக் காயவிடவும். | |
| சுளுக்கு. | | எலுமிச்சம்பழம் ஒன்றைச் சரிபாதியாய் அறுத்து, ஒரு சிறு சதுரத் துணியின் நடுப்பாகம் பழத்தின் அறுத்த பாகத்தைத் தொடும்படியாக வைத்து இறுகக்கட்டி கையில் பிடித்துக்கொண்டு பிறகு ஒரு மேஜைக் கரண்டி அளவு நல்லெண்ணெயைச் சட்டியில் விட்டுக் காய்ச்சிப் பழத்தை அதில் தோய்த்து சுளுக்கின பாகத்தில் தாங்கக்கூடிய சூடாய் வைத்து ஒற்றடம் கொடுக்கவும். |
| கட்டிகள், சில ந்திகள் இவற்றைச் சீக்கிரம் பழுக்கவைத்தல். | | பழுப்பு நிறச் சவுக்காரத்தைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவி பழுப்புச் சர்க்கரை கலந்த ஜலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய்க்கலந்து பிளாஸ்திரி போல் போடவும். |
| கண் நோவு. | படிக்கார லோஷன் (Alum Lotion). தூள் செய்த படிக்காரம் 20 கிரேயின் (½ பை). கொதிக்கவைத்த ஜலம் அல்லது மழை ஜலம் 8 அவுன்ஸ் (16 சிற்றண்டிக்கரண்டி). | |





## A HINDU'S IMPRESSIONS OF CHRISTIANITY *(Cont.)*

## கிறிஸ்தவ சமயத்திலும், கிறிஸ்தவர்களிடத்திலும் நான் கண்ட நுட்பங்கள்

(தொடர்ச்சி)

28. கிறிஸ்தவ மதத்தில், போதகர்கள் (Preachers), குருமார்கள் (Reverends), அத்தியக்ஷர்கள் (Bishops), சிரேஷ்ட அத்தியக்ஷர் (Lord Bishop) முதலிய மதசம்பந்தமான பல காரியகர்த்தர்களும், பிறப்பால் அந்தத் தொழிலை யடைபவர்களாயிராமல், வாசித்து, அத்தொழிலுக்குரிய வழிகளிற் படிப்படியாய்த் தேர்ந்து, சன்மார்க்கத்திலும் திறமையிலும் மற்றவர்களைவிட மேன்மையானவர்களாவென்று பரீக்ஷிக்கப்பட்டு, அதன்பின்பே அவ்வுத்தியோகங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதனால் அவர்கள் பெருங்குப்

பட்டங்களை வஹித்தவர்களாயிராமல் அதற்குத்தக்க சகல அம்சங்களும் பொருந்தினவர்களாய் இருக்கிறார்கள்.

29. கிறிஸ்தவக் கோவில்களில், ஆணும் பெண்ணும் கலந்திருக்க, ஒருவரையொருவர் தள்ளுண்டு அசௌகரியப்பட, அல்லது ஒருவரையொருவர் பார்க்க இடமில்லாமல், புருஷர்கள் ஒரு வரிசையாகவும், பெண்கள் ஒரு வரிசையாகவுமிருந்து ஜெபம் செய்யவேண்டுமென்றும், எக்காரணத்தாலும் ஒருவர் வரிசையில் மற்றவர் பிரவேசிக்கக்கூடாதென்ற கட்டளையுமிருக்கிறது. இதனால் தேவாராதனை சமயங்களில், புருஷர்களாயினும் பெண்களாயினும் சிந்தை சிதற வழியில்லை. அதற்கேற்பவே பெண்கள் முக்காடிட்டு ஆலயத்திற்குள் இருக்கவேணுமென்ற முறையுமிருக்கிறது.

30. கடவுளை வழிபடும்முறையில், அவரவர்கள் செய்யும் பிரார்த்தனைகளில், தங்கள் தங்கள் பெண்டுபிள்ளைகள் ஆஸ்திபாஸ்திகள் நன்றாயிருக்கவேணுமென்ற பிரார்த்தனையோடு, தாங்கள் அன்றன்று செய்த தவறுதல்களை ஒருமுறை ஆதியோடந்தமாக நினைந்து, அது தப்பிதந்தானென்றுணர்ந்து, அதை இனிச் செய்வதில்லை என்றும், ஆகையால் அதை மன்னிக்கவேணுமென்றும், இன்னும் அவ்விதத் தவறுதல்கள் தங்களிடம் நேராதிருக்கக் கிருபைசெய்யவேணுமென்றும் மன்றாடப்படுகின்றன. இது அவரவர்களை உடனுக்குடன் கண்டித்து, நாளுக்குநாள் ஒழுக்கத்தில உயர்த்தும் உபாயமாயிருக்கிறது.

31. இன்னொரு முக்கிய மாறுதல், மற்றெம்மதஸ்தரைப் பார்க்கிலும் கிறிஸ்தவ மதஸ்தரிடம் காணப்படுகிறது. அதாவது, வீட்டிலும் கோவிலிலும் கடவுளை வழிபடும் நேரங்களிலெல்லாம், தன்னுடைய சத்துருவுக்காகவும் கடவுளைப் பிரார்த்திப்பதுண்டு. எப்படி? தன் சத்துரு, தன் வீட்டண்டையிருந்து அல்லும் பகலும் ஓயாது சண்டை சச்சரவுகள், கெடுதிகள், அவதூறுகள் செய்துகொண்டிருப்பவனாயிருந்தாலும், அவனை ஜெபகாலத்தில் நினைந்து, 'அவன் தனக்கு இயற்றுகிற துன்பங்கள் எனக்குக் கஷ்டநஷ்டத்தைத் தருவதாயிருந்தாலும், அவனுடைய குற்றத்தை நீர் மன்னியும். அவனைத் திருத்தி நடத்தும் என்னையும் அத்துன்பங்களினின்று விலக்கி நடத்தும்' என்ற வேண்டுதல் செய்யப்படுகிறது. இத்தகைய மன்னிக்கும் குணமும் போதிப்பும் கிறிஸ்தவர்களுக்குள்தான் பிரகாசம். மற்ற மதங்களில் லட்சத்துக்கு ஒரு துறவியிருப்பார். அவரும் கோபமுண்டானால், சபித்தல் திட்டுதலாகிய குணமுடையவராகவே யிருக்கக் காண்கிறோம். ஆகையால் இவ்விஷயத்தில், கிறிஸ்தவமதத்



திற்கும், கிறிஸ்தவ ஜனங்களுக்கும் இணையாக எதையும், எவரையுஞ் சொல்லிக்கொள்ள முடியாது.

32. கிறிஸ்தவ ஆலயவழிபாடு, மற்ற மதக்கோவில் முறைகளைப்போல, அபிஷேகம் அலங்காரம் நிவேதனம் தீபாராதனை எழுந்திருத்தல் முதலியனவாயிராமல் மனோபூசையென்னும் ஜெபமுறையாக விருப்பதாலும், மனம் (Concentration) லயப்படாமல், வெளியரங்கமாய்க் காணும் அபிஷேக அலங்காரங்களால் மாத்திரம் பயனற்றதாதலாலும் தேவாராதனை சம்பந்தமாய்க் கிறிஸ்தவர்கள் அநுஷ்டிக்கிற ஜெபமுறையானது நாகரிகமுள்ளதும், அறிவுக்கு ஒத்ததுமாயுள்ளது. மற்ற மதஸ்தர்களிலும், தெய்வபக்தி விசேஷமாயுள்ள சிலர் இந்த ஜெபமுறையை அநுஷ்டிக்கப் பார்க்கிறோம். ஆகவே, கிறிஸ்தவர்களில் ஒவ்வொரு பிராணியுமே அச்சிறந்த ஜெபமுறையைக் கைக்கொண்டிருப்பது சர்வ சிலாக்கியமாகும்.

33. மற்ற மதங்களில் குருக்களை வியாழவட்டத்துக்கு ஒருமுறை, அல்லது இரண்டு மூன்று தலைமுறை கழிந்தபின் ஒருமுறை காண நேர்வதுபோலில்லாமல், கிறிஸ்தவக் குருமார்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வாராவாரமும், சில சமயங்களிற் சிலருக்குத் தினப்படியும் சந்திக்கும் பாக்கியமிருக்கிறது. இதனால் சிஷ்யர்களின் குணகுணங்களை யறிந்து, உடனுக்குடன் திருத்த, குருக்களுக்கு வசதிகளிருக்கின்றன. மேலும், அடிக்கடி குருவைத் தரிசியாத சிஷ்யர்களாலும், அடிக்கடி சிஷ்யரைச் சந்திக்காத குருக்களாலும், எம்மதந்தான் விர்த்தியடைந்துவிடும்? எந்த ஜனங்கள்தான் சன்மார்க்கமாய் நடக்க முடியும்? முடியாது.

34. கிறிஸ்துமத பரிபாலனம், மற்ற மதங்களின் பரிபாலனம் போலல்ல. தற்கால நாகரிக இராஜ்யத்தின் பரிபாலனத்திற்கு, எவ்வாறு படிப்படியாகச் சிப்பந்திகளும், ஒருவரையொருவர் மேற்பார்க்கும் கவனிப்பும், குணகுணங்களுக்குத் தக்கபடி உயர்த்தல், தாழ்த்தல், விலக்கல் ஆகிய பரிகாரங்களும், இன்னும் பிறவிஷயங்களும் ஏற்பட்டிருப்பதுபோல் கிறிஸ்தவமத பரிபாலனத்திற்குக் காரியகர்த்தர்கள், படிப்படியாய் நியமிக்கப்படுவதன்றியில், அவர்களெல்லோருக்கும் அடங்கி நடந்து தீரவேண்டிய கடமை, அம்மதத்தை ஏற்றுக்கொண்ட சகலருக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் கிறிஸ்தவர்களுக்கு அடிக்கடி குருமார்களின் நற்போதனைகளும், குற்றத்துக்குத்தக்க சிக்ஷைகளும் கிடைத்து, நாளுக்குநாள் திருந்திவரக் காரணமாகிறது. மேலும், 'அரசனில்லாப் படை வெட்டாது'—'தட்டிப்பேச ஆளில்லையானால் தம்பி சண்டப்பிரசண்

டம்' — 'சிறியாரிட்ட வெள்ளாமை விளைந்தாலுங் கைகூடாது' என்ற பழமொழிகளுக்கேற்ப, 'தனக்குமேல் ஒருவரிருக்கிறார், அவரால் நம்மைச் சிக்ஷிக்கமுடியும்' என்ற கட்டளையும், பயமுமில்லாத எக்கூட்டம்தான் முன்னுக்கு வரும்? வராது.

35. கிறிஸ்தவர்களில் யாராவது, வேதத்துக்கு அந்நிதாயும், சபைக்கு விரோதமாயும் நடந்தால், அவர்கள் குருவினால் சபைக்கு வரவொட்டாது சபையின் காரணங்களை எடுத்து விளக்கி நீக்கிவைக்கப்படுவார்கள். இதனால் குருவினிடத்தில் பயபக்தியுண்டாக இடமுண்டாயிற்று.

36. அப்படி நீக்கப்பட்டவன் குருவுக்கு முன்னதாக விண்ணப்பித்துக்கொண்டு அவரது அநுமதியின்பேரில் சபைக்கு வந்து சபையோரறிய 'தான் செய்த குற்றத்தினின்றும் நீங்கி நல்ல பிள்ளையாக நடந்துவந்திருக்கிறேன். அல்லது நான் தீங்குசெய்து அதனால் தீங்கடைந்தவர்களைச் சமாதானப்படுத்திக்கொண்டேன், இனி எக்காலமும் தவறுவதில்லை, மன்னிக்கவேணும்' என்று பிரார்த்திப்பானானால் மன்னித்துத் திரும்பவும் சபையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். இதனால் என்ன அநுகூலம்? ஒருவன் ஒருகாலம் தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றத்துக்காக நீக்கப்பட்டாலும், பின்பு புத்தியாய் நடந்தால் மன்னிக்கப்படுவோமென்ற நிச்சயமிருக்கிறது. ஆகையால் சகலருக்கும் நல்லமாதிரியாய் நடந்துவரவேண்டுமென்ற பயமுண்டாகிறது.

37. கிறிஸ்தவக் கோவில்களில், முக்கியமாய் ஞாயிற்றுக்கிழமைகளில் இராப்போஜனம் என்னும் Communion service நடத்தப்படுகிறது. அது புதிதாக, அம்மதத்தைத் தழுவுவோர்க்காகவும், முக்கியமாக மேற்கூறியபடி குற்றஞ்செய்து மன்னிக்கப்படுபவர்களுக்காகவும், இன்னும் கோவிலுக்கு வந்தவர்களில், கடந்த வாரம் முழுவதிலும் தெரிந்தோ தெரியாமலோ குற்றங்குறைகள் செய்தவர்கள் தம் குற்றங்களை நினைந்து தம் மனதிற்குள்ளே கடவுளை மன்னிப்புக் கேட்டுக்கொள்பவர்களுக்காகவுமே நடத்தப்படுகிறது. இது எவ்வளவு ஏற்றமுடைய ஏற்பாடு! பைசாகூடச் செலவில்லாமல் நிகழ்கிறது. மற்ற மதஸ்தர்களிலோ குற்றங்குறை தீர்வதற்கு, நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் சுருங்கச் சொல்லவேண்டுமானால், தன் ஆஸ்தி பூராவும் விற்றும், ஆலயக்காணிக்கைகள், ஆபரணங்கள், அபிஷேக அலங்காரங்கள், கொடை, பலி முதலியவைகள் நடத்தப்படுகின்றன,



38. மற்ற மதக்கோவில்களில், இன்னின்னார் இன்னின்ன கட்டடத்தைத் தாண்டி உள்ளே போகக்கூடாதென்றும், அப்படிப் போவதற்கும், உண்டியலில் இவ்வளவிவ்வளவு போடவேண்டும் என்றும், பூசாரிகள் அர்ச்சகர்கள் முதலியவர்களுக்கு இவ்வளவிவ்வளவு கொடுக்கவேணுமென்ற நிர்ப்பந்தங்களுமுண்டு. இன்னும், தங்கள் மதத்தைத் தழுவுகிறவர்களாய்த் தங்களுக்குத் தொண்டூழியங்கள் செய்து தீரவேண்டியவர்களாயுமுள்ள அநேக கீழ்ஜாதியாரைக் கோவிலுக்குள் அடியெடுத்துவைக்க இடங்கொடுப்பதில்லை. அவர்கள் எவ்வளவு பணஞ் செலவிட்டாலும் கோவிலுக்குள் நுழைய விடுவதில்லை. இந்த அநியாயங்கள் கிறிஸ்தவ தேவாலயங்களிற் கிடையா. தேவஸ்தானம் எவருக்கும் பொது. கடவுளுடைய பிள்ளைகளாகையால் உயர்வு தாழ்வின்றிக் கலந்திருந்து வணங்கவேண்டும். காணிக்கைபோட இஷ்டமுள்ளவர்கள் போடலாம். கட்டாயமில்லை. இது எவ்வளவு நீதியும் சுயமறுப்பும், சகோதர பாந்தவ்யமும் உடையது? இம்மட்டுமா? அந்நிய மதஸ்தர்கள் வேடிக்கை பார்க்கவோ அல்லது மற்றவர்களோடிருந்து வணங்கவோ கோவிலுக்குட் பிரவேசித்திருக்க ஆசைப்பட்டால், அவர்களைக் கிறிஸ்தவர்கள் அன்போடும் மரியாதையோடும் ஏற்று, அருமையாய் நடத்துகிறார்கள். மற்ற மதக்கோவில்களில், தன் மதஸ்தனையே ஏற்பதில்லையே! கிறிஸ்தவர்களை ஏற்பார்களா? தூரவாவது நிற்கவிடுவார்களா? விடமாட்டார்கள். இவ்வறியாமையைக் கிறிஸ்தவர்களிடத்திற் காணவேமுடியாது.

(இன்னும் வரும்.)

மெல்லை. உ. ப. உமையொருபாகன்
ஆலந்தூர், பரங்கிமலை.

## PRIZE ESSAY (*Cont.*)

## தன்னால் இயன்றதைச் செய்த மரியாள்

மாற். 14. 8.

(தொடர்ச்சி)

(*d*) ஆண்டவர் மரியாளைப் புகழ்ந்த மாதிரி.—'தேவையானது ஒன்றே. மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்.' இந்தத் தேவையான பங்கு மரியாளுக்கு எப்படிக் கிடைத்தது தெரியுமா? இயேசு வந்தவுடனே கிருபையின் காலத்தை அருமையாக எண்ணி, அதைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டாள். இந்தப் போதகரிடம் போதனைகேட்க இன்னொரு சமயம் கிடைக்குமோ என்னவோ! ஒருவேளை 'அவருடைய வசனம் கேட்

கக் கிடையாத பஞ்சம்' (ஆமோ. 8. 11) வந்தாலும் வருமே. ஆகையால் யோசேப்பு செழிப்பான வருஷத்தில் பஞ்சகாலத்துக்காக ஏராளமான தானியங்களைச் சேர்த்துவைத்துக்கொண்டதுபோல, நானும் இந்த இயேசு ரட்சகர் என் வீட்டுக்கு வலிய வந்து போதிக்கிற இந்தச் சமயத்தை இழந்துவிடாமல், என் இருதயமாகிய களஞ்சியத்தை நிரப்பிவைத்துக்கொள்ளவும், அவரைக் கண்டடையவும் இதுவே சமயம் என்றெண்ணி 'இதுவே அநுக்கிரககாலம், இதுவே ரக்ஷண்ய நாள்' (2 கொரி. 6. 2) என்னும் வசனத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, தன் ஆத்துமாவுக்கு வேண்டிய பங்கைத் தெரிந்துகொண்டாள்.



சகோதரிகளே! இந்த மரியாள் சிந்தை நமக்குண்டா? தன்னை விட்டு உலகமாவது, மாம்சமாவது, பசாசாவது, உபத்திரவமாவது, மரணமாவது பிரித்துப்போடாத கிறிஸ்துவின் அன்பாகிய பங்கைத் தெரிந்துகொண்ட மரியாள் நமக்கு நன்றாய்ப் போதிக்கிறாள். ஆ! மரியாளே! உன் புத்தி எனக்கும் வரட்டும், உன் ஆண்டவர் என் ஆண்டவர். தன் சுதந்தரமும் தன் பாத்திரத்தின் பங்குமானவர் இவரே என்று கண்டு, 'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு?



பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை' (சங். 73. 25) என்று தாவீது சொல்லுகிற ஆண்டவரை நாமும் நமது பங்காக்கிக்கொள்வோமாக. தாவீதைப்போலவும் மரியாளைப்போலவும் நாமும் சொல்லப் படித்துக்கொண்டோமானால், நம்மைப்போல் பாக்கியசாலிகளான தாய்மார் வேறு யாருமில்லை. அவர் நல்லவர் என்பதை நாமும் ருசித்து அவரைத் துதிப்போமாக.

பாட்டு. யேசுவே என் பங்கு
யேசுவே, யேசுவே
யேசுவே என் பங்கு
என் பங்கு யேசுவே.

II. யோவா. 11. 1–32 வரை. இந்த மூவர் சேர்ந்த இச்சிறு குடும்பத்தில் ஒரு துன்பம் நேரிட்டது. இயேசுவால் நேசிக்கப்பட்டவர்களுக்கும் துன்பங்கள் வரும் என்பதை இச்சரித்திரம் நமக்குக் கற்பிக்கிறது. என்ன துன்பம்? குடும்பத்தின் ஆண்பிள்ளை லாசரு வியாதிப்பட்டான். நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று இருசகோதரிகளும் அடுத்த ஊரிலிருந்த இயேசுவுக்கு ஆள் அனுப்பினார்கள். இயேசு உடனே வரவில்லை. லாசருவும் மரித்தான்; அடக்கம்பண்ணியாயிற்று. நாலு நாள் பொறுத்து இயேசு வந்தார். இயேசு வருகிறாரென்று மார்த்தாள் கேள்விப்பட்டு, அவருக்கு எதிர்கொண்டு ஓடினாள். இந்த மரியாள் வீட்டில் உட்கார்ந்திருந்தாள். இதுவிஷயத்திலும் மரியாள் சாந்தமும் அமைதலும் உள்ளவளாயிருந்தாள் என்று எண்ண இடமுண்டு. மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து 'ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்' என்றாள். அப்பால் மார்த்தாள் வீட்டில் வந்து மரியாளை நோக்கி, 'போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்' என்றாள். உடனே மரியாள் வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவளும் தன் சகோதரி சொன்னபடியே 'ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்' என்று வெகு அங்கலாய்ப்போடு சொன்னாள். இருசகோதரிகளும் வீட்டில் பேசிக்கொண்டிருந்ததையே இயேசுவிடமும் சொன்னார்கள். ஆகையால் அவர்களிடத்தில் கொஞ்சம் அவிசுவாசம் காணப்பட்டதென்னலாம். எப்படியெனில், வியாதியாயிருக்கும்போது வந்தால் தான் சுகப்படுத்துவார். செத்துக் கல்லறைக்குள் வைக்கப்பட்டபின் எப்படி உயிர்ப்பிப்பார் என்று நினைத்தார்கள். ஆனால் ஜீவனைக் கொடுக்கவும், அதை எடுக்கவும் தமக்கு அதிகாரமும் வல்லமையும் உண்டென்று இப்போது காட்டப்போகிறார்.

மரியாள் அழுகிறதையும், மற்ற யூதர்கள் அழுகிறதையும் இயேசு பார்த்து, பாவத்தின் அகோரத்தையும், அதன் சம்பவத்தையும், மரணத்தின் கூர்மையையும் தமது ஆவியில் கிரகித்துக் கலங்கி, அவனை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டுத் தாமும் கண்ணீர்விட்டார். மரியாள் அங்கலாய்ப்பு அதிகமாயிருந்தபடியால் லாசருவை உயிரோடெழுப்பினார் என்றும் சொல்லலாம். நாமும் பாவத்தில் செத்து நாறுகிற ஆத்துமாக்களுக்காக ஆண்டவரே! நீர் எங்களோடேயிருந்தால் நாங்களும் எங்கள் பிள்ளைகளும், எங்கள் குடும்பமும், எங்கள் சபையாரும், எங்கள் இந்தியா தேசத்தாரும் செத்து நாறமாட்டோம், உயிருள்ளவர்களாயிருப்போம். ஆகையால் அவசியம் எங்களோடே தங்கியிரும் என்று மரியாள்போல், பாதத்தில் விழுந்து அழுது ஊக்கமாய் வேண்டிக்கொண்டால், சுவாமி நம்மையும் உயிர்ப்பிப்பார். நாமும் அநேகரை உயிருள்ளவர்களாக்குவோம். சுவாமி நம்மை உபயோகிப்பார். நாம் விசுவாசத்தில் வல்லவர்களாகலாம்.

இதிலும் மரியாள் சிந்தை நமக்கு வேண்டும். சுவாமி தமது பரிசுத்த ஆவியால் முதலாவது நம்மை உயிர்ப்பிப்பாராக.

இயேசுவே என் ஜீவன்
யேசுவே யேசுவே
யேசுவே என் ஜீவன்
என் ஜீவன் யேசுவே.

(இன்னும் வரும்.)

Gnanabaranam Albert,
Nallur, Alankulam P. O.,
Tinnevelly District.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ௵ செப்டெம்பர் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | லூக். | 9. 51—62 | 11 | வெ. | லூக். | 12. 31—48 | 20 | ஞா. | லூக். | 16. 1—18 |
| 2 | பு. | ,, | 10. 1—16 | 12 | ச. | ,, | 12. 49—59 | 21 | தி. | ,, | 16. 19—31 |
| 3 | வி. | ,, | 10. 17—28 | 13 | ஞா. | ,, | 13. 1—17 | 22 | செ. | ,, | 17. 1—10 |
| 4 | வெ. | ,, | 10. 29—42 | 14 | தி. | ,, | 13. 18—30 | 23 | பு. | ,, | 17. 11—21 |
| 5 | ச. | ,, | 11. 1—13 | 15 | செ. | ,, | 13. 31—35; 14. 1—11 | 24 | வி. | ,, | 17. 22—37 |
| 6 | ஞா. | ,, | 11. 14—28 | | | | | 25 | வெ. | ,, | 18. 1—14 |
| 7 | தி. | ,, | 11. 29—41 | 16 | பு. | ,, | 14. 12—24 | 26 | ச. | ,, | 18. 15—30 |
| 8 | செ. | ,, | 11. 42—54 | 17 | வி. | ,, | 14. 25—35 | 27 | ஞா. | ,, | 18. 31—43 |
| 9 | பு. | ,, | 12. 1—12 | 18 | வெ. | ,, | 15. 1—10 | 28 | தி. | ,, | 19. 1—10 |
| 10 | வி. | ,, | 12. 13—30 | 19 | ச. | ,, | 15. 11—32 | 29 | செ. | ,, | 19. 11—27 |
| | | | | | | | | 30 | பு. | ,, | 19. 28—40 |

PRINTED AT THE C. L. S PRESS, MADRAS—1914

# மாதர் போதினி

OFFICE OF THE ... BOOKS 8 OCT 1914 MADRAS

No. 202 அக்டோபர் 1914

## THE RIGHT REV. BISHOP WILLIAMS

## மகா கனம்பொருந்திய எ. எ. உவில்லியம்ஸ் அத்தியட்சரவர்கள்

1914-ம் ௵ ஜூலை ௴ 1உயானது திருநெல்வேலி திருச்சபையாராலும், இன்னும் மற்ற அநேக கிறிஸ்தவ சபையாராலும் எளிதில் மறக்கப்படத்தக்க நாளல்ல.

ஏனென்றால், அந்த நாளிலேதான் மகா கனம்பொருந்திய திருநெல்வேலி எ. எ. உவில்லியம்ஸ் அத்தியட்சர் அவர்கள், திடீரென்று ஒருவரும் எதிர்பாராதவண்ணமாக இந்த உலகத்தைவிட்டு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

அவர் 1870-ம் ௵ அத்தியட்சர் பட்டம் பெற்று சீமைதேசத்திலே சில வருஷங்களாக வேலைபார்த்து, பிற்பாடு இந்தியாவிற்கு வந்தார். இங்கேயும் 23 வருஷங்களாய் விடாமுயற்சியோடும், உற்சாகத்தோடும், தம் அருமை இரட்சகருக்காக வேலைபார்த்துத் தம்முடைய ஜீவகாலத்தை முடித்தார்.

முதலாவது அவர் திருச்சினாப்பள்ளி சாப்ளன் (Chaplain) ஆகவும் பிற்பாடு சென்னபட்டணம் பெரிய கண்காணியாரவர்களுக்கு உதவிக் கண்காணியாராகவும் இருந்தார். அவர் அந்த வேலையை முடித்து இளைப்பாறவேண்டிய காலத்திலே அவருக்கு இன்னொரு புது வேலை இருந்தது. அந்தக் காலத்திலே திருநெல்வேலியிலே ஒரு பிஷப் அவர்கள், அதிக அவசியமாயிருந்தது. உடனே நமது அருமை பிஷப் அவர்கள் அந்த வேலையைத் தம்மேல் விழுந்த கடமைபோல் ஏற்றுக்கொண்டு, உற்சாகமாய் வேலை நடத்திவந்தார். அதிலே உள்ள சங்கடங்களும் தொல்லைகளும் அவருக்கு நன்றாய்த் தெரிந்

திருந்தும், அவர் எவ்வளவு சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டாரோ, அதேபிரகாரமாய்க் கடைசிவரையிலும் தம்முடைய வேலையை நடத்திவந்தார்.

அவர் வேலை பார்த்த காலங்களிலே அவரோ வேலை பார்த்தவர்களுக்கும், அவரோடு பழகினவர்களுக்குந்தான் அவருடைய விசேஷமான குணங்கள் நன்றாகத் தெரியும்.

அவருடைய தயாளசிந்தை, அன்பு, மற்றவர்களைப்பற்றிய எண்ணம், வேலையிலே உற்சாகம், ஊக்கம் முதலியவை மிகவும் ஆச்சரியப்படத்தக்கனவாய் இருந்தன.

அவருடைய குணாதிசயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் எல்லாருக்கும் அவர் 'கர்த்தருக்குள் ஒரு நல்ல தகப்பன்போலிருந்தார்' என்று சொல்லலாம்.

எளியவர்களையும், வலியவர்களையும், சிறியவர்களையும், பெரியவர்களையும், கிறிஸ்தவர்களையும், புறமதஸ்தர்களையும் ஒன்றுபோல் பட்சபாதமில்லாமல் நடத்திவந்தார். அவருடைய இன்னொரு விசேஷமான குணம், பிள்ளைகளின்மேல் பிரியம்.

கடவுள் அவருக்குச் சொந்தப் பிள்ளைகளைக் கொடுக்காவிட்டாலும் அவர் அநேக இந்திய பிள்ளைகளைத் தம் சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து, அவர்களைப் படிக்கவைத்து ஆதரித்துவந்தார்.

இன்னும், இந்த வயதுசென்ற காலத்திலே அவர் வேலையை விடாமுயற்சியோடும் உற்சாகத்தோடும் பார்த்த மாதிரி யாவராலும் புகழப்படத்தக்கது.

மாட்டுவண்டிகளிலே, இரவிலும், பகலிலும், வெயிலிலும், மழையிலும் நீண்ட பிரயாணங்கள் செய்து தம்முடைய வேலையை நடப்பித்துவந்தார். அவர் போகிற இடங்களிலே, பெரிய மனுஷர், மிஷன் உத்தியோகஸ்தர் வீடுகளுக்கு மாத்திரமல்ல, மற்ற வீடுகளுக்குள்ளும், குடிசைகளுக்குள்ளும் புகுந்து, அவரவர்கள் குடும்ப காரியங்களை, விசாரித்து வேண்டிய உதவிசெய்தார்.

சில சமயங்களில், எளிய குடும்பங்களில் பெரிய பெண்கள், பிள்ளைகள் படிக்கப் பணமில்லாமல், பள்ளிக்கூடங்களுக்குப் போக வழியில்லாமலிருப்பதைப் பார்த்தால், உடனே அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுசெய்து தாம் ஊருக்குப் போகும்போது தம் வண்டியிலே அவர்களை அழைத்துக்கொண்டுவந்து பள்ளிக்கூடங்களில் சேர்த்திருப்பது நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இன்னும் இவர் பட்டிதொட்டிகளுக்குப் போயிருக்கும்போது சிறு பையன்களுக்கும், பெண்களுக்கும், பலகாரங்கள் வாங்கிக் கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்துவதும் வழக்கமாம்.



காணிக்கைவிஷயத்தில் அவர் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும், சுயவெறுப்போடும் கொடுத்துவந்தார் என்று சொல்லலாம். ஏனென்றால், அவர் திருநெல்வேலி அத்தியட்சராக வாங்கின சம்பளத்தில் வருஷத்திற்கு சுமார் பன்னிரண்டு ஆயிரம் ரூபாய் தருமத்திற்காகவும் காணிக்கைக்காகவும் செலவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

அவர் நடக்கையைப்போலவே, அவர்களுடைய பிரசங்கமும் யாவராலும் விரும்பப்படத் தக்கதாயிருந்தது. அவர் பிரசங்கம் பண்ணுகிற சமயத்திலே கோவில் நிறைந்திருப்பதையும் நிமிர்ந்த தலைகள் குனியாமல் அவர்களையே பார்த்தவண்ணமாக இருப்பதையும் நம்மில் அநேகர் கண்ணாரக் கண்டிருக்கலாம்.

அவருக்குப் பாட்டிலும், படிப்பிலும் அதிகப் பிரியம். அதினால் அநேக உயர்ந்த படிப்புள்ள இந்து மார்க்கத்தவர்கள் அவருக்கு நல்ல சிநேகிதர்களாய் இருந்தார்கள். அவர் இவ்வண்ணமாக யாவரோடும் பட்சமாயும் அன்பாயும் பழகி இருந்ததினால் எல்லா மதஸ்தர்களும் அவரை அதிக கண்ணியமாய் நடத்திவந்தார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

சில சமயங்களில் அவர் பாளையங்கோட்டையிலிருந்து திருநெல்வேலிக்குப் போகும்போது, அந்தப் பிரயாணம் முழுவதும் கையை நெற்றியில் வைத்துக்கொண்டே இருக்கவேண்டியதாயிருக்கும். ஏனென்றால், அவரைப் பார்த்தவர்களெல்லாரும் ஆவலோடு அவர்களுக்கு மரியாதை செய்வது வழக்கம்.

இப்பேர்ப்பட்ட குணமுள்ள நமது அருமைக் கண்காணியாரவர்கள் இறந்துபோனது நமக்கு எவ்வளவு பெரிய நஷ்டம். அவருடைய சிரித்த முகத்தையும், இனிய குரலையும், அன்பான வார்த்தையையும் அவரோடு அதிகமாய்ப் பழகினவர்கள் எளிதில் மறக்க முடியாது.

இவ்வளவு அன்பும் பட்சமுமான நல்ல தகப்பனை நமக்குக் கொடுத்த கடவுளுக்கு நாம் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தி நாமும் அவரைப்போலவே நம்முடைய போதனையும் சாதனையும் பூத்துப்போகத்தக்கதாக நடக்க கர்த்தருக்குள் பிரயாசப்படுவோமாக.

நம்மில் அநேகர் அவரைப்போல், வயதுசென்றவர்களாயிருக்கலாம். நம்முடைய நாளும் குறுகுகிறது. திடீரென்று நாமும் எதிர்பாராதவண்ணமாக அழைக்கப்படலாம். ஆகையால் நாம் எப்போதும் விழிப்பும், சந்தோஷமும், ஆயத்தமும் உள்ளவர்களாயிருக்க ஆண்டவர் தாமே நமக்குக் கிருபைசெய்வாராக.



## THE KING'S CUP BEARER (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### IV. அத்தியாயம்

அவரவர்க்குரிய வேலை

தைலக்காரர் 'இது எங்களுடைய வேலையல்ல செங்கலறுக்கிறவர்களுக்கும் கொல்லத்துக்காரருக்குந்தான் இந்த வேலை தெரியும்' என்று சொல்லவில்லை. நரைத்த ஷெமேயா 'வயதுசென்றவனாகிய நான் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடுமென்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது' என்று சொல்லவில்லை. எரிகோவின் மனிதர் 'எங்கள் வீடு பதினாலுமைல் தூரத்திலிருக்கிறது, அங்கேயிருந்து இவ்வளவு தூரம் வந்து உங்களுக்கு உதவிசெய்வது எங்களுக்கு வசதியாயிராது' என்று சொல்லவில்லை. சல்லூமின் குமாரத்திகள் 'நாங்கள் பெண்களாயிருக்கிறோம், அங்கே நாங்கள் செய்யவேண்டிய வேலை ஒன்றுமில்லை' என்றும் சொல்லவில்லை.

கர்த்தருடைய வேலையை எல்லாரும் வந்து சந்தோஷமாயும் உற்சாகமாயும் மனப்பூர்வமாயும் செய்தார்கள்.. ஆனால் ஒரு குறைவு அங்கே காணப்பட்டது மிகவும் விசனமான காரியம். அது அந்தப் புஸ்தகத்தில் ஒரு கறுப்புப்புள்ளி வைத்தாற்போலிருக்கிறது. இரண்டாயிரம் வருஷங்களாகிவிட்டாலும் தெக்கோவாவின் பிரபுக்களுடைய பேர் கர்த்தரின் மகத்துவமான வேலையை அசட்டை பண்ணினவர்களாகவும் சோம்பேறிகளாகவும் அவருடைய புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால் யார் வேலை செய்யவேண்



டும்? நம்மில் ஒவ்வொருவரும், நாம் யாராயிருந்தாலும் சரி, நம்முடைய உத்தியோகம் என்னவாயிருந்தாலும் சரி, நாம் குடியிருக்கும் இடம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் சரி, நமக்கு வயது எவ்வளவாயிருந்தாலும் சரி, ஆண்களாயிருந்தாலும் சரி, பெண்களாயிருந்தாலும் சரி, கர்த்தருடைய வேலையின் பிரமாணம் 'ஒவ்வொருவனுக்கும் வேலை' என்பதே. தங்களுடைய வேலையைத் தாங்களே செய்யவேண்டும்.

நாம் எங்கே வேலை செய்யவேண்டும்? எருசலேமின் அலங்கத்தைக் கட்டினவர்களைக் கவனிப்போம். பட்டணத்திற்குள்ளே வசித்தவர்கள், தங்கள் வீடுகளுக்குமுன்னாலுள்ள அலங்கத்தின் பாகத்தைக் கட்டினார்கள். நகரத்திற்கு வெளியே இருந்தவர்கள், தங்களுடைய கிராமங்களுக்கு எதிரேயிருக்கும் பாகத்தைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். ஆசாரியர்கள் ஆலயத்திற்குச் சமீபமாயுள்ள பாகத்தைக் கட்டினார்கள்.

நாமும் தேவனுடைய வேலையாட்களாக வீட்டில் நம்முடைய வேலையை ஆரம்பித்து அதை மத்திய பாகமாக வைத்துக்கொண்டு, வேலையை விஸ்தீரணப்படுத்திக்கொள்ளுவோமாக. முதலாவது நம்முடைய சொந்த இருதயம்; அங்கே செய்யவேண்டிய வேலை ஏராளம். பிற்பாடு நம்முடைய குடும்பம்; பிறகு நம்முடைய வீட்டார்; பிறகு தெரு ஜனங்கள்; பிறகு சொந்த சபையார், சொந்த ஊரார், சொந்த தேசத்தார், இப்படியாக நம்முடைய வட்டத்தை அகலப்படுத்திக்கொண்டே போவோமாக. இது கடைசியாக தேவனுடைய பெரிய வேலையாகிய பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தம் அவருடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் கூட்டத்தோடே முடியும்.

அப்படியானால் நாம் எப்படி வேலை செய்யவேண்டும்? சாபாயின் குமாரனாகிய பாருக்கைப்போல வைராக்கியமுள்ளவர்களாய் ஆவலோடும் ஆசையோடும் செய்வோமாக. பாருக் வேலைசெய்கிற மற்றவர்களைப் பார்த்து வீண்காலம் போக்கவில்லை. தம்முடைய வேலையில் உண்மையாயிருந்தார். ஒருநாள் நன்றாய் வேலைசெய்து மறுநாள் சோம்பியிருக்கவில்லை. விடாமுயற்சியாய், மிகுந்த பொறுமையோடே செய்தார். வேலையெல்லாம் முடியும்வரையில் தைரியமாய் உற்சாகத்தோடும் விடாமுயற்சியோடும் செய்துமுடித்தார். அப்படியே நாமும் இன்று என்னப்படும்பொழுதே வேலை செய்வோமாக. ஒருவரும் வேலைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

எருசலேமைக் கட்டும்படி கையிட்டுக்கொண்ட வேலை சுலபமானதல்ல. அந்தத் தேசத்தில் வெளிவேலை மிகவும் கஷ்டமானது. யாதொரு நிழலுமில்லாமல் எரிக்கிற வெயிலில், நாளெல்லாம் நின்று

கொண்டு இந்தப் பழக்கமில்லாத பளுவான வேலையைச் செய்வது மிகவும் கடினம்தான். அவர்கள் தைரியமாய்ச் சகித்தார்கள். வேலையில் விடாப்பிடியாய் நின்றார்கள். மெய்யாகவே அவர்களுக்குப் பலனுண்டு. அவர்களெல்லாருடைய பெயரும், மிகவும் அற்பனாயிருந்த போதிலும், கர்த்தருடைய கீர்த்தி ஜாப்தாவில் எழுதப்பட்டிருக்கின்றன.

கர்த்தருடைய ஊழியக்காரரே, வேலை கஷ்டமாயிருக்கிறதா? தொந்தரவு அதிகமாயிருக்கிறதா? உம்முடைய வேலையைச் செய்யும்போது களைப்படைந்தவராய்ப் போகிறீரா? சோதனையாகிய சூரியன் உம் வேலைக்குத் தடைசெய்யப் பார்க்கிறதா? எருசலேம் கட்டப்பட்டதை நினைத்துக்கொள்ளும் தைரியத்தை விடாது. திடன்கொள்ளும், உமக்குப் பலனுண்டு. பிலிப்பியிலுள்ள சில ஜனங்களின் பேர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதாக வாசிக்கிறோம் (பிலி. 4. 3). பவுலப்போஸ்தலர் தம்முடைய உடன் ஊழியக்காரர் என்றும், அந்தப் பட்டணத்தில் கர்த்தருடைய வேலையைச் செய்தவர்களென்றும் அவர்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் மனுஷகைகளாவது, தூதர்கைகளாவது, பிரதான தூதர்கைகளாவது இந்தப் பேர்களை எழுதுகிறதில்லை. ஆட்டுக்குட்டியானவரே அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவேண்டும், அதில் எழுதவேண்டும், கூடியிருக்கும் சர்வலோகத்தாரின் காதுகள் கேட்க அதிலடங்கியிருப்பவைகளை வாசிக்கவும் வேண்டும்.

உண்மையாய் ஊழியஞ்செய்கிற ஒவ்வொருவருக்கும் தங்கள் பேர் வாசிக்கக் கேட்பது எவ்வளவு மேன்மை, எவ்வளவு ஆச்சரியமான சந்தோஷம், எவ்வளவு மாட்சிமையான வெகுமதி!

மெய்யாகவே, அவர்கள் உலகத்தில் வேலைசெய்யும்போது அனுபவித்த எல்லாவற்றிற்கும், இது நல்ல பதில் பிரதிபலன்; இனும்!

## V. அத்தியாயம்

### பட்டயமும் சாந்துக் கரண்டியும்

நீல ஆகாயம் மேலே இருக்கப்பெற்று, எந்தவிதமான அமளியுமின்றிக் கடல் அமைதலாயிருக்கிறது. துலக்கப்பட்ட வெள்ளியைப்போலும், பிரதிபிம்பிக்கிற கண்ணாடியைப்போலும், மலைகளுக்கு நடுவேயிருக்கும் ஏரியைப்போலும் அசைவற்று அமைதலாயிருக்கிறது. அந்தக் கடலில் ஒரு படகு மிகவும் அமரிக்கையாய் ஒரு நதியில் போவதுபோலப் போகிறது. அந்தப் படகிலுள்ள மனிதன் கொஞ்ச



மாகிலும் கஷ்டமின்றித் தண்டு வலித்துக்கொண்டு போகிறான். ஆனால் கடலிலிருந்து கார்மேகம் எழும்புகிறது; திடீரென்று காற்று எழும்புகிறது; தூரமாய்த் தண்ணீரில் வெள்ளைக் கோடுகள் தெரிகின்றன. புசல்காற்று சீக்கிரமாயும் நிச்சயமாயும் வரப்போகிறது. அந்தப் படகிலிருக்கிற மனிதன் உடனே தீரங்கொண்டு எதிர்த்துச்செல்ல ஆயத்தமாகிறான். எல்லாம் அமைதலாயிருக்கும்போது போவது மிகவும் லேசான காரியம், ஆனால் எழும்புகிற புசலை எதிர்த்துச் செல்லுவது கஷ்டமான விஷயமே.

அதிபதியாகிய நெகேமியாவுக்கு இப்படித்தானிருந்தது. இதுவரையில் எல்லா விஷயமும் லேசாயும் ஒழுங்காயும் நடந்துகொண்டு வந்தது. ராஜா தன்னுடைய வேண்டுகோளுக்கு முழுதுமாய்த் தாராளமாய் உத்தரவு அருளினார். ராஜாவின் பாதீவிலிருந்து வேண்டிய மரங்களை ஆசாப் கொடுத்தார். எருசலேமின் பிரதான மனிதர் தன்னுடைய விண்ணப்பத்திற்கு இணங்கினார்கள். ஜனங்களெல்லாரும், பெரியோரும், சிறியோரும், ஆண்களும், பெண்களும், வாலிபரும்; வயோதிபரும், தன்னுடைய சொல்லுக்கு இணங்கினார்கள்; அலங்கம் கட்டப்பட்டு வருகிறது. குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது; எல்லாம் நன்றாயும், சந்தோஷமாயும், உற்சாகமாயும் நடக்கிறது. நெகேமியா பாரவீக அதிபதியைப்போல தளர்ந்த உடைதரித்து, மெதுவான குல்லாவைத்து, கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்து வேலைசெய்கிறவர்களைப் பார்க்கும்படியாகப் பட்டணத்தைச் சுற்றிப் போகிறார். தன்னுடைய வேலை மிக லேசாயும், இன்பமானதாயும் இருக்கக் காண்கிறார். வேலைசெய்ய மனமுடையவர்களை வேலைகொள்ளுவதும், மேல்பார்ப்பதும் லேசான காரியந்தான். நெகேமியா கொஞ்சக்காலம் தன்னுடைய வேலையைச் சமாதானமாய்ச் செய்தார்.

எருசலேமுக்கு வடக்கே கார்மேகம் எழும்புகிறது. முறுமுறுப்பும் முணுமுணுப்பும் கேட்கிறது. கஷ்டமாகிய புசல்காற்று அடிக்கப்போகிறது. கொந்தளிக்குங் கடலில் போக நெகேமியா தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறார். அலங்கத்தில் முதல் கல் வைக்குமுன்னதாகவே கலகம் வருமென்று எதிர்பார்த்தார். தன்னுடைய எண்ணத்தை ஜனங்களுக்குச் சொல்லி, அவர்கள் இணங்கினவுடனே ஏதோ கஷ்டம் உண்டாகப்போகிறதென்று நன்றாய் அறிந்திருந்தார். வடக்கு வாசலண்டை அதிபதியாகிய திர்ஷாதாவுக்கு மேல்விலாசம் எழுதப்பட்ட ஒரு தோற்சுருளைக் கையில் பிடித்தவனாய் ஒரு ஆள் நிற்கிறான். நெகேமியா அதை உடைத்துப் பார்த்து, சமாரியாவின் அதிபதியாகிய சன்பல்லாத்தினிடமிருந்து வந்ததென்று அறிந்து

கொண்டார். அந்தக் கடிதத்தில் பின்வருமாறு நிந்தையான வார்த்தைகள் அடங்கியிருந்தது (11. 19). 'நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணப்போகிறீர்களோ?' நெகேமியாவாகிய நீ எருசலேமைப் பலப்படுத்திக் காபந்துசெய்து, பாரஸீக ராஜ்யத்திற்கு விரோதமாய்க் கலகம்பண்ணப்போகிறாயோ? ராஜாவாகிய எங்கள் ஆண்டவனை நீ ஏமாற்றலாம். ஆனால் எனக்கு உன்னுடைய மாய்மாலமும் தப்பறையான எண்ணங்களும் நன்றாய்த் தெரியும் என்பதாக எழுதியிருந்தது. இதற்குப் பதிலாக நெகேமியா தெளிவாயும், திட்டமாயும் மூன்று விஷயங்களை எழுதுகிறார்.

(இன்னும் வரும்.)

S. A. Vethanayaham.

## GEORGE ATTEWELL:—A BOY HERO

## பாலிய வீரன்

அரிய பெரிய காரியங்கள் பிரதிதினமும் நடக்கின்றன. அதற்கென்ன, நாம் வேண்டுமானால் கவனிக்கிறதில்லை. நம் வீட்டுக்குப் பின்னால் உள்ள சந்திலும் நல்ல வீரர்களைக் காணலாம். இப்படிப்பட்ட வீரர்களில் ஜார்ஜ் அட்டிவெல் ஒருவன். இவன் லண்டனில் ஒரு கைம்பெண்ணின் மகன்; அவனுக்குப் பன்னிரண்டே வயசு. சென்ற ஏப்பிரல்மீ 13உ ஈஸ்டர் திங்களன்று தன் வீரத்தைக் காட்டி அதனால் விண்ணுலகடைந்த விதம் இது:—

வட லண்டனிலே கேம்டன், ஹாலொவே என்று இரண்டு பெரிய வீதிகள். இந்த இரண்டு ரஸ்தாக்களிலும் ஜனங்கள் வருவதும் போவதுமாக சதா நெருக்கமாகவேயிருக்கும். அன்றைக்குக் காலமே, எட்டு எட்டேகால் மணிக்கு அந்த முடுக்கிலே ஒற்றைக் குதிரை பூட்டிய பெரிய நாலு சக்கரவண்டியொன்று நின்றது. இருந்தாற்போலிருந்து அந்தக் குதிரை மிரண்டு ஹாலொவே ரோட்டிலே 'காலப்' பிடுங்கிற்று.

அன்றைக்கு ஈஸ்டராயிற்று! அதோடு வெயிலும் அல்ல, குளிரும் அல்ல என்று ஆகாயமும் ரம்மியமாயிருந்தது. பள்ளிக்கூடம், ஆபீஸ், பாங்கி எல்லாவற்றிற்கும் விடுமுறை வேறே. ஆகையினாலே இங்கு வருவாரும், அங்கே அவசரமாகப் போவாரும், நல்ல சாமானைத் தேடிக் கடைக்குச் செல்வாரும், நல்ல காட்சிக்கு ஆசைப்பட்டு நாட்டுப்புறத்தை நாடுவாருமாக ஜனங்கள் கும்பல் கும்பலாக அந்த வீதிகளில் நிறைந்திருந்தார்கள். அந்தக் குதிரை அப்படியே, எடுத்த



வேகத்திலேயே போயிருந்தது, ஆபத்து இவ்வளவுதான் என்று வாயாலே சொல்லமுடியாது. அந்தச் சமயம் அது புறப்பட்டது அப்படியிருந்தது.

நல்ல வேளை! அந்தப் பயல், அட்டிவெல் வீரன் பாருங்கள்; ஒரு தாண்டில் அந்தக் குதிரையை அடுத்து, கடிவாளத்தைப் பிடித்து இழுத்து வெகு பாடுபட்டு அதைத் தெரு ஓரத்துக்குக் கொண்டுவந்துவிட்டான்.

அங்கே வந்தும் அதன் வேகம் அடங்கவில்லை. பையனும் பிடித்த பிடியை விடவில்லை. இப்படிப் போகப் போக, பாவம்! பையனுக்குக் கால் எப்படியோ தவறிவிட்டது; கீழே விழுந்து 'தரதர' என்று இழுபட்டுக்கொண்டே போனான். பத்தைம்பது கஜத்துக்கப்பால் ஒரு இரும்புக் கம்பம். அதிலே போய் 'படார்' என்று மோதிக்கொண்டான். குதிரை நின்றுவிட்டது. பையனுக்கு மண்டையுடைந்து, அந்தக்ஷணமே உயிரும் போய்விட்டது.

அப்புறம் சவத்தை எடுத்துக்கொண்டு சமாதிக்குப் போகும்போது கூடவந்த ஜனங்கள் கூட்டம் சொல்லிமுடியாது. ஒருத்தராவது வெறுங்கண்ணாகக் காணோம். அத்தனைபேரும் கண்ணீர்விட்டு பாலிய வீரனை கண்ணியப்படுத்தினார்கள்.

## PRIZE ESSAY (*Cont.*)

## தன்னால் இயன்றதைச் செய்த மரியாள்

மாற். 14. 8.

(தொடர்ச்சி)

III. யோவா. 12. 1-3 வரை. முதலாவது தேவையான நல்ல பங்காகிய இயேசுவைத் தெரிந்துகொண்ட மரியாள். இரண்டாவது லாசரு உயிரோடெழுப்பப்படக் கருவியாயிருந்த மரியாள். மூன்றாவது தன் இரட்சகர்பேரிலுள்ள அன்பைத் தன் நன்றியறிதலால் காட்டப்போகிறாள். துதியையும், நன்றியையும் எப்போதும் உயர்த்திப் பேசுகிற ஆண்டவர் இவள் செய்யப்போகிறதையும் வெறுக்கவில்லை. 'என் பிள்ளைகளே! வசனத்தினாலும் நாவினாலுமல்ல; கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்' (1 யோவா. 3. 18) என்னும் வேதவாக்கின்படி இவள் இயேசுவின்பேரிலுள்ள அன்பைத் தன் கிரியையால் காட்டப்போகிறாள்.

இயேசு இரட்சகர் சிலுவையில் அறையப்பட ஆறுநாளுக்கு முன்பு, லாசருவும் அவன் சகோதரிகளும் குஷ்டரோகியான சீமோன்

வீட்டில், பெத்தானியாவில், இயேசுவுக்கு அருமையான விருந்து செய்தார்கள். இங்கேயும் சுறுசுறுப்புள்ள மார்த்தாள் பணிவிடை செய்தாள். லாசரு பந்தியிருக்கிறான். மரியாள் அபிஷேகம் செய்கிறாள். இயேசுவின் திருப்பாதத்தில் ஒரு ஸ்திரீ பரிமளதைலம் பூசி முத்தமிட்டாள் என்று லூக்கா சொல்லுகிறார். இங்கே அவர் சிரசு தைலாபிஷேகம் பெறுகிறது. பாதாபிஷேகம் இயேசுவின் ஊழியத்தின் முதலாம் வருஷத்திலும், சிரசாபிஷேகம் அவர் பாடுபடுவதற்கு ஆறு நாளுக்கு முன்பும் செய்யப்பட்டன. பாதாபிஷேகம் செய்தவள்



ஒரு தயவு வேணுமென்று விண்ணப்பமுறையாய்ச் செய்தாள். சிரசாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு பெறுவதையிட்டு ஸ்தோத்திர முறையாய்ச் செய்தாள் என்ற இரண்டு சங்கதிகளையும் பரிசோதிக்கிறதினால் தெரியவரும். பிதாவாகிய தேவன் தமது குமாரனைப் பரிசுத்தாவியாகிய ஆனந்த தைலத்தால் அபிஷேகம் செய்தார் (சங். 45. 7). யோவான்ஸ்நானன் அவரை யோர்தான் ஜலத்தால் அபிஷேகம் செய்தார். பாவியான ஸ்திரீயும், மரியாளுமோ நளததைலத்தால் அபிஷேகம் செய்தார்கள்.



கிரியையில்லாத விசுவாசம் செத்த விசுவாசம். இந்த மரியாளிடம் உயிருள்ள விசுவாசம் இருந்தது. முதலாவது இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து வசனம் கேட்டவள்; இரண்டாவது இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து தன் சகோதரன் உயிருக்காக மன்றாடினவள்; மூன்றாவது இயேசுவின் பாதத்தில் பரிமளதைலம் பூசி தலைமயிரால் துடைக்கிறாள். ஆகவே பார்த்தமட்டில் இவளுக்கு இயேசுவின் பாதம் மெத்த அருமையாக இருந்திருக்கிறது. பாவி! இயேசுவின் பாதத்தைப்பற்றிய மதிப்பு உனக்குண்டா? உனக்கு இதுவரையும் இல்லையென்றால் இன்றைக்காவது படி; மரியாள் நமக்குப் போதிக்கிறாள்.

(1) மரியாளைப் பரிமளதைலம் பூச ஏவினதென்ன? இயேசுவின்பேரிலுள்ள அன்பே அவளை இப்படிச்செய்ய நெருக்கி ஏவிற்று. 'எனக்கு ஞானபோதனைகளைக் கற்றுக்கொடுத்து, செத்து நாறின என் சகோதரனை உயிரோடெழுப்பிக் கொடுத்த என் ஆண்டவருக்கு நான் என்ன நன்றி செய்யட்டும்' என்று அடிக்கடி அமைதியாய் உட்கார்ந்து யோசிப்பாள்.

ஒருநாள் இந்தக் காரியத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் மெதுவாய் 'ஊற்றுண்ட பரிமள தைலம்' (உன்னத. 1. 4) என்னும் நாமமுள்ள அவருக்கு நீ நளத பரிமள தைலத்தை ஊற்று என்றும், அதுவே அவர்பேருக்கு இசைந்ததென்றும் சொல்லிக்கொடுத்தார். அவள் உடனே அவருக்குக் கீழ்ப்படிந்து ஒரு நல்ல வெள்ளைக்கல் பாணிநிறைந்த விலையேறப்பெற்ற களங்கமில்லாத உத்தம தைலத்தை வாங்கினாள். பதினாயிரம் பேர்களில் சிறந்த, விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்போகிற ஆண்டவருக்கு விலையேறப்பெற்ற தைலமே ஊற்றத் தகுந்தது என்று சிந்தித்துக்கொண்டாள்.

சகோதரிகளே! நமக்கும், நம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அனந்த நன்மைகளைச் செய்த நம் ஆண்டவருக்கு என்ன நன்றி காட்டப்போகிறீர்கள்? சங்கீதக்காரன்போல் சொல்வோமா? 'கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.' இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அவர் நாமத்தையே துதியுங்கள். 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே' என்று பாடு.

(2) மேலும், தைலம் உத்தம தைலம்.—இதிலும் மரியாள் ஒரு பாடம் படிப்பிக்கிறாள். எதுவென்றால், அவருக்குக் கொடுக்கும் பொருள்கள் உதவாதவைகளல்ல, அல்லது கெட்டுப்போனவைகள்

அல்ல. ஊனமுள்ளதும், நசல்கொண்டதுமானவைகளைக் கொடுப்பது அவரைப் பரிகாசம்பண்ணுகிறதுபோல் இருக்கும். அவர் விரும்பும் உத்தம பொருள் எதுவெனில், பாவிகளின் ஆத்துமமே அவர் பார்வையில் உத்தமமானது. 'ஒருவன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு யாதொரு லாபமுமில்லை' என்ற ஆண்டவருக்கு ஆத்துமமே



விலைகொண்டது. அது களங்கமில்லாமலும் இருக்கவேண்டுமாம். அக்கிரமமும், அசுத்தமும் அவருக்குக் கடுகளவும் உதவா. இயேசுவின்மேல் அன்பிருந்தால் நாம் நல்லவைகளை மறைத்துவைத்துக் கொள்ளமாட்டோம். ஒருநாள் ஒரு பெண்பிள்ளையிடம் 'சுவாமிக்கு ஏதாவது காணிக்கை கொடு' என்று கேட்டேன், அப்போது அந்தப்



பெண், 'அவருக்கு நான் என் சதையை முதலாய் அறுத்துக் கொடுப்பேனே' என்று சொல்லி, வீட்டுக்குள் ஓடி ஒரு பைஸ் கொண்டுவந்து தந்தாள். அப்போது நான் 'இந்த ஒரு பைசைப்பற்றி அவ்வளவு காரியமில்லை. முதலாவது உன் ஆத்துமாவை ஆண்டவருக்குக் கொடு. நீ ஒருநாளும் கோவிலுக்கு வரக்காணேமே. வாயினால் கனம் பண்ணி இருதயத்தைத் தூரவைத்துக்கொண்டால் அதில் யாதொரு பிரயோஜனமுமில்லையே' என்றேன். சகோதரியே! உன் காரியம் எப்படி? என் காரியம் எப்படி? நம்முடைய வாயும், கையும் ஒத்திருந்தால் தான் அது ஆண்டவர் பார்வையில் உத்தமமானது.

(3) அபிஷேகித்த வகை.—மத்தேயு, மாற்கு சிரசில் ஊற்றினாள் என்றும், யோவான் பாதங்களில் பூசி தலைமயிரால் துடைத்தாள் என்றும் சொல்லுகிறார்கள். எப்படியும் தைலம் வார்த்தது வாஸ்தவமே. பின்னால் யூதாஸ் சொல்லுகிறபடி அது முந்நூறு பணம் அதாவது ஒன்பது பவுண் ஏழு ஷிலிங் ஆறு பென்ஸ். தமிழ் நாணயப்படி நூறுரூபாய் கிரயமுள்ளதென்றும் தெரிகிறது. மரியாள் போல், இவ்வளவு விலையுயர்ந்த நளதப்புட்டி வாங்க, ஒருவேளை நாம் திராணியில்லாதவர்களா யிருக்கலாம். ஆனால் ஐசுவரியவான்களும் எளியவர்களும், அவர் சிரசில் ஊற்றிப் பாதத்திலும் வடியவிடக்கூடிய ஒரு விலையுயர்ந்த நளதப்புட்டி நம்மெல்லாருக்கும் உண்டு. என் சகோதரியே! அதென்னவென்று கேட்பாயோ, அது 'பிராயச்சித்தத் தைலம்' என்று பேர்பெறும். அந்தத் தைலத்தை நாமே பல மருந்துகள் சேர்த்துக் கூட்டவேண்டும், அதைச் சேர்க்க சுவாமியுடைய கிருபைவேண்டும்; ஆகையால் உடனே இயேசுவிடம் கிருபை வாங்கி மருந்துசேர்.

Gnanabaranam Albert.

## A HINDU'S IMPRESSIONS OF CHRISTIANITY *(Cont.)*

## கிறிஸ்தவ சமயத்திலும், கிறிஸ்தவர்களிடத்திலும் நான் கண்ட நுட்பங்கள்

(தொடர்ச்சி)

39. 'மதிமோசவிளக்கம்' என்று ஒரு புஸ்தகமுண்டு. அதில், உலகத்தில் தற்காலம் ஜனங்களை ஏமாற்றிக் காசுபறிக்கும் பலவித தந்திரங்கள் மோசடிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் பொய்சொல்லி, தர்மத்திற்கென்றும், கோவிலுக்கென்றும், கலியாணத்திற்கென்றும் வசூலிப்பவை. அவைகளிற் தயாராய்த் தேர்ந்த சோம்

பேறிகளும், அச்சோம்பேறிகளை நம்பி வீணாய்ப் பணத்தைக் கொட்டும் புத்திசாலிப் பிரபுக்களும் மற்ற மதங்களிலுண்டு. இவ்வறிவீனமும், தகாத செய்கையும், தர்மமும் கிறிஸ்தவர்களிடம் எள்ளளவும் காணமுடியாது. கிறிஸ்தவர்களில் ஒருவர் தர்மத்துக்காக வருவாரானால், இயலுமானதைக் கொடுக்க நாம் யோசிக்கவேண்டியதில்லை. நாம் கொடுப்பது பைசாவாயிருந்தாலும் ஆக்ஷேபியாமலும் முரண்டாமலும் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்வார். அதுபோல அப்பணம் தக்கோர்களின் மேற்பார்வையுடன் குறித்த விஷயத்திற்கே செலவிடப்படும். ஒருக்கால் பணம் வசூலானபின் குறித்த விஷயம் நடக்கவில்லையானால் அது கொடுத்தவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும். அல்லது அவர்கள் சம்மதத்தில் வேறோர் செல



வுக்கு உபயோகிக்கப்படும். இவ்வொழுங்கை மற்ற மதஸ்தர்களிடம் காணமுடியாது. காண்பது மிக அருமை.

40. கிறிஸ்தவ மதம், தற்காலம் செல்வாக்காய் நிகழ்வதற்கும் அது நாளுக்கு நாள் பிரபலப்படுவதற்கும், சக்கிரவர்த்தியே கிறிஸ்தவ மதத்தைக் கைக்கொண்டவராயிருப்பதைச் சொல்லுகிறார்கள். அப்படியல்ல. கவர்ன்மெண்டார் மற்ற மதக்கோவில்கள், பள்ளிவாசல் இவைகளுக்கு இன்றைக்கும் வருஷவாரி கோவில் 1-க்கு 10,000, 15,000, 20,000 என்றும், சிறிய கோவில்களுக்கு 1000, 500 என்றும், 100, 50 என்றும் தாவாரி தஸ்திக்கு ஏற்படுத்திக் கொடுத்துவருகிறார்கள் இதுதவிர, அவைகளுக்குக் காணிக்கைகளாலும், நிலவரும்படி, வட்டிவரும்படியாகவும் அளவிறந்த பணம்



வருகிறது. வாரமலில்லை. வந்தும் அவைகளைக் காரியாகாரியமறிந்து, பலனுள்ள வழிகளிற் செலவிடுவதில்லை. கிறிஸ்தவக் கோவில்களின் மதகாரியகர்த்தர்களாயுள்ள பிஷப் முதலியவர்களுக்கு ஸிவில் டிபார்ட்மெண்டிலிருந்து அலவன்ஸாகக் (Allowance) கொடுத்துவருகிறார்கள். கோவில் நடந்தேறும் செலவுகளுக்கு உத்தரவாதிகள் நடத்துவதெல்லாம் காணிக்கைகளிலிருந்தும் வேதாகம சங்கம் முதலிய (British & Foreign Bible Society) பல சங்கங்களின் மூலதனத்திலிருந்துமே நடந்தேறிவருகிறது. இதனால் கோவில்களில் (Budget) திட்டத்துக்குமிஞ்சிச் செலவிட மார்க்கமில்லை. திட்டமும் சொற்பமாக விருக்கிறது. இருந்தும், பிரயோஜனமுள்ள காரியங்களில் யோசனையுடன் செலவிடுவதாலும், முக்கியமாக சரீரப் பிரயாசையாலும், அக்கோவில்கள் மிகவுஞ் சீருஞ் சிறப்பாயும் நடத்தப்பட்டு வருகின்றன.

மற்ற மதஸ்தர்களுக்கு வருஷவாரி கொடுக்கும் தஸ்திக் பணம் போல, கிறிஸ்தவ கோவில்களுக்கெல்லாம் கவர்ன்மெண்டு கொடுக்குமானால், அத்தொகை முழுவதையும், தக்க வழிகளில் அதாவது தங்கள் மதஸ்தர்கள் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள சகல ஜனங்களுடைய க்ஷேமத்திற்கும் அடுத்த பெருங்காரியங்களில் கிறிஸ்தவர்கள் செலவுசெய்து காட்டுவார்கள். அவ்வளவு பயிற்சியும் தேர்ச்சியும் பரோபகார குணமும் அவர்களிடத்திலே குடிகொண்டிருக்கின்றன.

41. மேலும், எந்த மதம், எந்த மதஸ்தர்களால் சரியானபடி பரிபாலிக்கப்பட்டு, கடவுளின் ஆணைகளுக்குப் பயந்து வரைதவறாது நடக்குமோ, அந்த மதத்திலேயே சக்கிரவர்த்தியைக் கடவுள் ஏற்படுத்தத் திருவுளங்கொள்வது இயற்கை. இம்முறைபற்றியே ஹிந்துக்கள் ஈச்வரபக்தியிற் சிறந்து நியாயந் தவறாதிருந்தபோது இந்தியாவை ஹிந்துக்களே சக்கிரவர்த்திகளாக விருந்து ஆண்டிருக்கிறார்கள். அப்படியே மொகலாயர் காலமும் மகம்மதியர் காலமுமிருந்தன. ஒரு மதஸ்தர் கடவுளை மறந்து, இஷ்டம்போல் அநியாய வழிகளில் தலையிட்டு நடந்தால் அதைத் திருத்தவேண்டியது கடவுளுடைய முக்கிய பாரமாகையால், அவ்விதக் காலங்களில் கூடியவரை நியாயமாய் நடக்கும் மதஸ்தரை சக்கிரவர்த்தியாய் (அதாவது இகலோக கடவுளாய்) ஆக்கிவைத்து ஆளுகிறார். அம்முறைபற்றி இக்காலம் கிறிஸ்தவ அரசாட்சி நமக்கு லபித்தது. அம்மட்டுமல்ல, அவர்கள் அதைப் பரிபாலனம்பண்ணும் முறையும் ஒழுங்கும் எவருங் கொண்டாடத்தக்கதாயிருப்பதால், கடவுள் இவ்வாட்சியை ஸ்திரப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

மேலும் மனிதன் ஒரு தேசத்திற்கு ஏகச் சக்கிராதிபதியாக விருந்து ஆள, அல்லது எத்தனையோ மதங்களிருக்க அவற்றிலெல்லாம் ஒன்றைச் சிரேஷ்டமாயிருக்கச் செய்யமுடியுமா? முடியாது. கூடுமானால், எந்த மதஸ்தர் கடவுளுக்குப் பயந்து, நியாயந் தவறாமல் தங்கள் கடமையைச் சரியானபடி உணர்ந்து நிறைவேற்றுவார்களோ அவர்கள்பால் கடவுளுங் கருணைகொண்டு, அவரோ ஒரு சிறப்பைக் காட்டலாம். மற்றப்படி, கிறிஸ்தவ மதம் தலைதூக்கி நிற்பதற்குக் கடவுளுடைய திருவுளமும், கிறிஸ்தவர்களின் நடக்கையுமே முக்கிய காரணங்களாகும். சக்கிரவர்த்தி கிறிஸ்தவராயிருப்பதால் அல்ல. ஆனால் கடவுளுக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்கும் கிறிஸ்தவர்களில் நம் சக்கிரவர்த்தியும் ஒருவராய் விளங்கியிருப்பது காரணமாகலாம்.

(இன்னும் வரும்.)

நெல்லை. உ. ப. உமையொருபாகன்

ஆலந்தூர், பரங்கிமலை.

LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ஸு அக்டோபர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | ரோ. | 1. 1—12 | 11 | ஞா. | ரோ. | 5. 1—11 | 22 | வி. | ரோ. | 9. 25—33 |
| 2 | வெ. | ,, | 1. 13—23 | 12 | தி. | ,, | 5. 12—21 | 23 | வெ. | ,, | 10. 1—10 |
| 3 | ச. | ,, | 1. 24—32 | 13 | செ. | ,, | 6. 1—11 | 24 | ச. | ,, | 10. 11—21 |
| 4 | ஞா. | ,, | 2. 1—11 | 14 | பு. | ,, | 6. 12—23 | 25 | ஞா. | ,, | 11. 1—10 |
| 5 | தி. | ,, | 2. 12—24 | 15 | வி. | ,, | 7. 1—12 | 26 | தி. | ,, | 11. 11—24 |
| 6 | செ. | ,, | 2. 26-29; 3. 1— 6 | 16 | வெ. | ,, | 7. 13—25 | 27 | செ. | ,, | 11. 25—36 |
| | | | | 17 | ச. | ,, | 8. 1—12 | | | | |
| 7 | பு. | ,, | 3. 7—18 | 18 | ஞா. | ,, | 8. 13—25 | 28 | பு. | ,, | 12. 1—11 |
| 8 | வி. | ,, | 3. 19—31 | 19 | தி. | ,, | 8. 26—39 | 29 | வி. | ,, | 12. 12—21 |
| 9 | வெ. | ,, | 4. 1—12 | 20 | செ. | ,, | 9. 1— 9 | 30 | வெ. | ,, | 13. |
| 10 | ச. | ,, | 4. 13—25 | 21 | பு. | ,, | 9. 10—24 | 31 | ச. | ,, | 14. 1—12 |

C. L. S. PRESS, MADRAS—1914



Photo by Bourne & Shepherd, Calcutta

RABINDRANATH TAGORE

# மாதர் போதினி

No. 203 நவம்பர் 1914 No. 11

## Dr. RABINDRANATH TAGORE

## கவிராயர் ரவீந்திரநாத் தாகூர்

நாமெல்லாம் 'நமதன்னை,' 'நமதன்னை' என்று கொண்டாடிய காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியார் காலம் முதல் கீர்த்திபெற்று விளங்கிவரும் தாகூர் குடும்பம் பங்காளத்தில் உள்ளது. இந்த ரவீந்திரநாத் தாகூரின் பாட்டனாரை மஹாராணியார் இங்கிலாந்தில் தம் ராஜசபையில் அன்பாய் ஏற்றுத் தக்க மரியாதை செய்தார். இவருடைய மகனும் நமது ரவீந்திரநாத்தின் தகப்பனருமான தேவேந்திரநாத் தாகூர் பெரிய ஜமீன்தார்; பக்தி மிகுதியால் மஹாரிஷி எனப் பெயர்பெற்றவர். அப்பனையும் பாட்டனையும் அவர்களுடைய பிற்சந்ததி இன்னும் புகழுடையச் செய்கிறது. ரவீந்திரருடைய பெரியண்ணன் மஹா ஞானியாவார். சின்னண்ணன் சத்யேந்திரநாத் தாகூர்தான் இங்கிலாந்திலுள்ள ஜில்லா கலெக்டர் பரீக்ஷையாகிய 'ஐ. சி. எஸ்.' பரீக்ஷையில் தேறிய முதல் இந்தியன், பெண்சாதியுடன் இங்கிலாந்திற்குச் சென்ற முதல் இந்திய சீமானும் இவரே. இப்போதும் நடந்துவரும் 'பாரதி' என்ற பத்திரிகையின் ஆசிரியர் இக்குடும்பத்திற் பிறந்த ஒரு மாதுசிரோமணியேயாம். தற்கால முறைப்படி சித்திரம் வரைவதில் பேர்போன இன்னொருவரும் இதில் உண்டு.

இப்படிப்பட்ட மஹான்கள் உற்பவித்த குடும்பத்தில் சுமார் ஐம்பத்துமூன்று வருஷங்களுக்கு முன் பிறந்தவர் இந்த ரவீந்திரநாத் தாகூர். குழந்தை வெகு அருமை பெருமையாகவே வளர்ந்து வந்தது. எதில் குறைவு? ஆனால் ஒருவிதத்தில் அது அவருக்கே பிற்காலத்தில் அடாத காரியமாகக் கண்டுள்ளது. 'அழகிய ஆடை

யும் விலையேறிய ஆபரணங்களும் அணிவது ஓர் ஆசையுந்தான், ஆநந்தமுந்தான். ஆனால் ஓர் அற்ப குழந்தை சாதாரணமாய் அநுபவிக்கும் விளையாட்டின் இன்பத்தைக்கூட ஒரு சீமான் வீட்டுக் குழந்தை இழக்க நேர்வது பரிதபிக்கத்தக்கதாய் இருக்கின்றது. அக்குழந்தைகளுக்கு உடுத்திய பட்டாடை உட்கார்ந்தாலும் கசங்கும் ஓடியாடினாலும் அழுக்காகும்; தனியாகப் போகவிட்டால் போட்டுள்ள நகைகள் திருட்டுப்போகும் என்ற பயமுமுண்டு. ஆகவே இன்பத்தை உத்தேசித்து அணிவித்த ஆடையாபரணங்கள்தாமே துன்பத்திற்குக் காரணமாகின்றன' என்ற கருத்துள்ள பாடல் பிற்காலத்தில் அவர் வாயிலிருந்து வந்தது. இதனால் ரவீந்திரநாத் குழந்தையும் கைதிபோல் கட்டுக்காவலிலே ஈடுபட்டது. நம் சகோதரிகள் கவனிக்கவேண்டிய விஷயங்களில் இது ஒன்றல்லவா?

சரி. படிப்பு ஆரம்பித்தது. ஒருவரால் இவர் கற்பிக்கப்பட முடியவில்லை. இளமை முதல் தம் முயற்சியாகத் தாமே கற்கவும் இயற்கையின் அழகில் இன்பங் கண்டு ஆநந்திக்கவும் ஆசை காட்டி வந்தார். பின்னும் ஒரு கலாசாலையிலும் போய்ச் சேரவில்லை. அப்புறம் இவரைச் சட்டம் படித்துப் பெரிய 'பாரிஸ்டர்' ஆக்க லண்டனுக்கு அனுப்பினார்கள். அதிலும் அவருக்கு ஆசையற்றுப் போய், இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்.

இவரது சுவபாவமே தலைநின்றது. கல்வி நோக்கமே இவருக்கு நோக்கம்; சங்கீதப் பிரியமே பித்து. ஆனால் இவை இவருக்கு வெகு தூரம் கைவந்தனவாயின. இப்படிக்கெல்லாம் ஒன்றும் விசேஷம் இல்லாதிருந்தும் சிறுவயசிலே சிறுசிறு கவி கட்ட ஆரம்பித்தார். வயசு பதினெட்டாகும் முன்னமே பங்காளி பாஷையில் நாடகம் ஒன்றெழுதினார். அதை அந்த பாஷா வல்லவர்கள் அதிசயித்து மெச்சினார்கள். அதை இன்றைக்கும் பங்காள நாடகசாலைகளில் நடித்துக் காட்டுகிறார்கள். கவி ஒரு பிறவி, (ஒருவர் ஆக்க ஆவதில்லை) என்பது இவர் விஷயத்தால் ருஜுவானது.

ஒருநாள் அதிகாலையில் மப்பு மந்தாரமின்றி, குளிருமின்றி ஆகாயம் வெகு ரம்யமாயிருந்தது. ரவீந்திரர் அப்படியே வெளியே உலாவச் சென்றார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சூரியன் உதயமாயிற்று. அப்போது பூக்கள் மலரவும், புல்பூண்டுகள் தளதளவென்கவும், மக்கள் முகமலர்ச்சியுடன் தங்கள் கன்றுகாலிகளை ஓட்டிக்கொண்டு வெகு சுறுசுறுப்பாய் வயற்பக்கங்களிற் போகவும் அவர் கண்டு, இத்தனை ரம்யத்திற்கும் காரணமான ஜகத்ஜோதியாம் பகவானை நினைத்து மகிழ்ந்தார். அதுவே அவருக்கு திவ்ய ஞான ஒளியானதுபோலக் காணப்பட்டமையால் எல்லா ஜீவராசிகளும் அந்த



ஜகத்ஜோதியின் தோற்றமேயென மதிக்க அவை ஒவ்வொன்றின் மேலும் அவருக்குக் கருணை ஏற்படுவதாயிற்று. அதுமுதற்கொண்டு அவர் அந்தப் பரிபூரண ஜகத்ஜோதியைக் காண்பதும், அதைப் புகழ்ந்து பாடுவதுமே நித்யாநந்தமாகக் கொள்ளலானார்.

இந்த நிலைக்கு ஏற்க அவரது பிதுரார்ஜித நிலபுலங்களை மேல் பார்வையிட அடுத்த குக்கிராமத்தில் தங்கியிருக்கவேண்டி வந்தது. வயசும் இருபத்துமூன்றாக, கலியாணமும் முடிந்துவிட்டது. அங்கே அவர் வெகு மனோஹரமாக இங்குமங்கும் நடமாடுவார். பேதையரான கிராமவாசிகளோடு வெகு சரசமாய்க் கலந்து களிப்பார். குடியானவர்களுடைய நேர்மை, பொறுமை, அநுதாபம் முதலிய பல நற்குணங்களை அறிந்து அவற்றைத் தம்மில் அமர்த்திக்கொண்டார். காலப்போக்காக அடிக்கடி நீந்தவும் படவு ஓட்டவும் புகுந்துவிடுவார்.

இப்படித் தம்மட்டில் ஆநந்தமடைவது போதாதென்று கருணையை முன்னிட்டுப் பிறரையும் அந்தவித ஆநந்தத்தில் ஆழ்த்தவேண்டும் என்ற நல்ல ஆசைகொண்டு நாற்பதாவது வயசில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார். அது கல்கத்தாவுக்குத் தொண்ணூற்று மூன்று மைலுக்கப்பால் போல்பூர் என்ற கிராமத்திலிருக்கிறது. அந்த இடத்திற்கு பங்காளியில் 'ஷாந்திநிகேதன்'— அதாவது சாந்தமுள்ள இடம், என்றுபேர். இது வாஸ்தவத்திலேயே சாந்தமும் அமைதியுமுள்ள இடம்தான். ரவீந்திரருடைய தகப்பனார் மஹரிஷியார். இதுவே தனித்து வெகுநேரம் தியானத்தில் மெய் மறந்திருந்த இடம். இந்தப் பள்ளிக்கூடத்தை இவரே ஆதரித்து வருகிறார். உபாத்தியாயரும் அநேகமாக இவரேதான். மைதானத்தின் நல்ல நிழலான மரங்களின் அடியில் சிஷ்யர்களுக்கு நானாவிஷயங்களைப் போதிப்பார். இயற்கைப் பாடங்களே முக்கியமானவை. தம்மைப்போலவே, தம் சிஷ்யர்களும் இயற்கையின் இன்பங்களை அநுபவிக்கவும், அதன் இரகசியங்களை உணரவும் ஆநந்திக்கவும் வேண்டும் என்பதே இவருடைய உள்ளக்கருத்து. தாம் எழுதும் புஸ்தகங்களை விற்பதால் கிடைக்கும் வரும்படியே அதற்கு மூலதனம். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு பெரிய புஸ்தகநிலையமும் (லைப்ரரி) உண்டு. இவருடைய ஜனாபிமானத்தை என்னென்று சொல்வது!

இவரது ஜனாபிமானம் விசேஷமாக பாஷாபிமானத்தாலேயே காட்டப்பட்டு வருகிறது. பங்காளி பாஷையில் இதற்குள் இவர் பல புஸ்தகங்கள் கவியாகவும் வசனமாகவும் எழுதியிருக்கிறார். இக்காலத்தில் பங்காள கவி வசனம் இரண்டிற்கும் எவரும் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க நல்ல நடையில் எழுதுகிறவர் இவரேயாவர். விஷயமும் அரியவைகளாயும், பெரியவைகளாயும் இருக்கும். சிறு சிறு

கதைகள் அநேகம் எழுதியுள்ளார். அவர் தாம் பங்காளியில் முன் எழுதியவைகளைப் பின் தாமே இங்கிலீஷில் மொழிபெயர்த்து உலகத்தில் பலர்க்குத் தெரிவிக்கிறார். இப்படி பங்காளி பாஷையில் முதலில் எழுதியதைப் பின் தாமே இங்கிலீஷில் மொழிபெயர்த்ததைக் கண்டு பிரமித்துத்தான் சென்ற 1913-ல் இவருக்கு 'நோபெல் வெகுமதி' கொடுக்கப்பட்டது. இந்த வெகுமதி ஐரோப்பாவிலுள்ள ஸ்வீடன் தேசத்தில் ஏற்படுத்தப்பட்டது. உலகத்தில் யார் எந்தக் கலையில் பிரமாதமான காரியம் செய்கிறாரோ அவருக்கு இந்த இனாம் அளிக்கப்படும். இந்தப் பரிசைப்பெற்ற முதல் இந்தியன் இவரே. ஏன்? ஆசியா முழுவதிலும் இவர்தான் முதல். பிரிட்டிஷ் குடிகளில் இரண்டாவதாக இவர் இந்தப் பரிசைப் பெற்றார். இந்த வெகுமதியின் கிரயம் 8000 பவுன் அல்லது 120,000 ரூபா. இந்தத் தொகையை அப்படியே தம்முடைய பள்ளிக்கூடத்தின் விருத்திக்கென்று வைத்துவிட்டார். இவர் இயற்றிய புஸ்தகங்களில் 'தோட்டக்காரன்,' 'இளமதி,' 'கீதாஞ்சலி' லோகப்பிரசித்திபெற்றவை. இதன்மேல் இந்தியாவில் இவருக்கு 'டாக்டர்' (மஹா வித்வான்) என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

ஸாதாரணமாகத் தமிழர் தம் தமிழை எவ்வளவு தூரம் படிக்கிறார்கள், மதிக்கிறார்கள், விருத்தி செய்கிறார்கள். இவரைப் பாருங்கள்! அந்நிய பாஷையில் எழுதியதை இன்னொரு அந்நிய பாஷையில் தாம் மொழிபெயர்க்க, அதை மூன்றாமொரு அந்நிய பாஷைக்காரர்கள் பார்த்து பிரமித்து இவரை லோகத்தில் சிறந்த கவிராயர் என்று சொல்லும்படி அவ்வளவு தூரம் மதித்து, படித்து, விருத்தியடைந்து அதை விருத்திக்குக் கொண்டுவந்திருக்கிறார். ஸாதாரணமாகப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் தாய்ப்பாஷையென்றால் கேவலமாக எண்ணுகிறார்களே! இந்தத் தப்பெண்ணம் பகவானே! எப்போது நீங்குமோ!

இவர் மஹா குணசீலர். பெருமைபெற்ற குடியில் பிறந்தவர்; ஆனால் தற்பெருமை ஆடம்பரம் அணுவளவும் கிடையா. பொறுமைப் பொக்கிஷம் இவர். முகத்தைப் பாருங்கள். என்ன தேஜஸ்! யாரோடும் தாராளமாகப் பேசவும் பழகவும் இஷ்டமுடையவர். இப்போது இவருக்கு வயசு ஐம்பத்து மூன்று. இளைஞர் என்றால் அவருக்கு வெகு ஆசை. அதிலும் குழந்தைகள் என்றால் ஆசை வெகு ஜாஸ்தி. கடிதம் எழுதுவதும் அப்படியே. ஆனால் அநேகமாக பங்காளியில்தான் பேசவோ எழுதவோ செய்வார். இங்கிலீஷ் பாஷையும் நன்றாய்த் தெரியும்; ஆனால் அவசியம் அதிகமானால்தான் அதில் எழுதுவார், பேசுவார். ஏழை பேழைகளின்மேல் வெகு இரக்கம்.



சங்கீதப் பிரியர். பாட உட்கார்ந்தால் போஜனவேளைகூடத் தெரியாது. ஜாதியில் அசல் பிராமணர்; ஆனால் ஜாதிக் கட்டுப்பாட்டில் கொஞ்சமும் கட்டுண்டவர் அல்ல.

இவரைப்போல, நாமும் நம்மால் ஆனவரைக்கும் நம் பாஷையைக் கற்று, மகிழ்ந்து, பிறருக்குக் கற்றுக்கொடுத்து, அவர்களையும் மகிழ்வித்து இந்த லோகத்திலே சுகமும் இன்பமும் மலியச்செய்வோமாக.

Chitambaram Muthaliar, Erode.

## PRIZE ESSAY (*Concl.*)

## தன்னால் இயன்றதைச் செய்த மரியாள்

மாற். 14. 8.

(முடிவு)

**பிராயச்சித்தத் தைலம் வடிக்கும் முறை.**—அதற்கு நான் சேர்க்கும் மருந்துகளாவன:

விக்கிரஹாராதனை என்னும் விருட்சத்தின் வேர், அநியாய மரத்து அடிவேர், வேசித்தனத்தின் சல்லிவேர், துரோகச்செடி வேர், பொருளாசையின் பாதாள வேர், பொறாமையின் வேர், வாக்குவாதம், வன்மம், வஞ்சனை இவைகளின் வேர், புறங்கூறுதல், அவதூறு, தேவபகை, துராகிருதம், அகந்தை, வீம்பு இவைகளின் பட்டைகளும் ஆணிவேர்களும் சல்லிவேர்களும், கீழ்ப்படியாமை, வாக்கைப் புரட்டல், இணக்கமில்லாமை என்ற செடிகளின் வேர், விபசாரம், வைராக்கியம், கோபம், சண்டை, மார்க்கபேதங்கள் ஆகிய இவைகளின் கொழுந்தும் வேரும் பூவும், பொய், வெறி, களியாட்டு முதலிய செடிகளின் வேரும் காயும் பழமும் ஆகிய இவைகளை என் மனமலைச் சார்புகளிலும், புதர்களிலும், பள்ளத்தாக்குகளிலுமிருந்து பிடுங்கி, ஜெபமாகிய பனியாலும், உபவாசமாகிய வெயிலாலும் பதப்படுத்தி உலர்த்தி, முதலாவது கெத்சேமனே செக்கிலும், அப்புறம் கொல்கொதாவின் உரலிலும் போட்டு, பத்துக் கட்டளைகளாகிய இருப்பு உலக்கைகளையும் இயேசுவின் இரண்டு கற்பனைகளாகிய வைர உலக்கைகளையும் ஆகப் பன்னிரண்டு உலக்கைகளையும் கொண்டு இடித்து, சத்தியம் என்னும் அடுப்பிலேற்றி, பொறுமை என்னும் பானையில் விட்டு, பாவக் கண்ணீரால் மேற்படி தைலப்பொடிகளைக் கலக்கி, சிலுவைமரத்து விறகுபோட்டு, தேவாவியாகிய அனலை மூட்டி, பெருமூச்சோடும் வியாகுலத்தோடும் ஊதிக் கொதிக்கவைத்து, அது நன்றாய்ப் பொங்கிவரும்போது, இயேசுவின் திரு இரத்தச் சொட்டுகளில் சிலவற்றை விட்டு மணமாக்குவேன். அப்புறம் அதை இறக்கி, அன்பு

என்னும் புட்டியில் அடைத்து, விசுவாசமென்னும் தட்டில் வைத்து, என் ஆத்தும நேசரண்டை போய் அவர் சிரசின்மேல் வார்ப்பேன். இப்படிச் செய்ய மனமுண்டா?

நல்லது, வேதாகமத்தில் சிலர் அவர் சிரசில் ஊற்றின தைலங்கள் எவையென்று சற்று கவனிப்போம்.



(*a*) அன்னாள் சொல்வதைக் கேள் (1 சாமு. 1. 15). 'நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்.' அவள் இருதயத்தில் இருந்த பரிமளதைலம் எது தெரியுமா? அது என்னவென்று சொல்லுகிறேன், கேள். மனக்கிலேசமே அவளிடமிருந்த தைலம்.



சகோதரிகளே! பெண்களாகிய நமக்கு அடிக்கடி மனக்கிலேசம் வருமே. அப்போதெல்லாம் அன்னாள்போல உன் விசாரம், கிலேசம் முதலிய தைலங்களை உன் இயேசுவின் சிரசில் வடிய வடிய ஊற்று. அவர் வேண்டாமென்று அதட்டுகிறவர் அல்ல. மரியாள் ஊற்றி நற்சாட்சி வாங்கினாள். அன்னாள் ஊற்றி அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை. அப்படியே நாமும் ஊற்றுவோமாக. ஊற்றவேண்டிய இடம் எதுவென்று கேட்பாயோ, தேவாலயத்தில் போய் ஊற்று. அறை வீட்டுக்குள் போய் ஊற்று. நல்ல வாசனை உண்டாகும்.

(*b*) தாவீதுராஜன் ஊற்றின தைலம் எதுவென்று கேட்போம் (சங். 62. 8). 'அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்' என்பதே உத்தரவு. இவர் மற்றவர்களுக்குக் கட்டளை கொடுக்கிறாரே. இவர் அநுபோகமுள்ளவரோ—ஆம், அநுபோகமுள்ளவர்தான். இவர் ஊற்றின தைலமெது? தெரியுமா? அது இராமுழுவதும் தமது படுக்கையை ஈரமாக்கி, தன் கட்டிலை நனைத்த கண்ணீர்த்தைலமே. ஏன் இவர் இவ்வளவு கண்ணீர்த்தைலம் ஆண்டவர்மேல் ஊற்றினார்? தான் ஒரு பெரும் பாவி என்று உணர்த்தப்பட்டவுடனே, தன் பெரிய பாவத்தை நினைத்து நினைத்து ஓயாமல் அழுதார். இந்தக் கண்ணீர்த்தைலம் ஊற்றிப் பலன் அடைந்தாரா? ஆம் அடைந்தார். கண்ணீர்த்தைலம் ஊற்றிப் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு இப்போது ஆனந்தப்பாட்டுகள் பாடுகிறார். என் உடன்சகோதரியே!

இது மரியாள் தைலத்தைவிட அதிக வாசனையுள்ளது. என் தாய்மாரே! என் மக்களே! நானும் பாவி, நீங்களும் பாவிகள். ஒவ்வொருநாளும் கண்ணீர்த்தைலம் ஊற்ற மறந்துபோகாதேயுங்கள். நமக்கும் பாவமன்னிப்பு வேண்டுமே. 'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.' (மத். 5. 4.)

(*c*) அழுகணி தீர்க்கதரிசியாகிய எரேமியாவும் தமது புல. 2. 19-ல் 'ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு' என்கிறார். இது மற்ற ஆத்துமாக்களுடைய சரீர ஆத்தும பசியை நீக்க, ஆண்டவரிடத்தில் பரிந்து மன்றாடி அழும் கண்ணீர்தானே. இந்த அநுபோகம் நமக்குண்டா? இல்லையென்றால் பரிசுத்த ஆவியானவரிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு, இரவில் நடுச்சாமத்தில் எழுந்து மன்றாடு.

(4) சாத்தான் செய்கை.—எங்கேயும் சுவாமியுடைய பிள்ளைகள் மத்தியில் சாத்தானும் வந்து, நற்காரியங்களைத் தடுப்பான். அதுவே அவன் வழக்கம். (தி—ம்) அன்னாள் தன் இருதயப்புட்டியை உடைத்து, தன் மனக்கிலேசமாகிய தைலத்தை வாசனையாக ஊற்றுகிறாள்.

பக்கத்தில் ஒரு மனுஷன் 'உன் குடியை உன்னைவிட்டு விலக்கு' என்கிறான். இப்படிச் சொல்லுகிறவன் யார்? ஆசாரியப் பட்டம் பெற்ற லேவி. இக்காலத்திலும் இப்படிப்பட்ட சங்கதி நடக்கிறதில்லையோ? உண்டு. (தி-ப்) சில மாசங்களுக்குமுன் ஓர் ஊரிலுள்ள ஓர் அம்மாள் குணப்படாத ஓர் ஆத்துமாவுக்காக அழுது ஜெபித்ததற்காக, ஒரு குருவானவர் அவள் ஆலயத்துக்கு எந்நாளும் வரக்கூடாதென்று திட்டம் செய்திருப்பதை அறிந்து மிகவும் துக்கப்படுகிறேன். மனக் கிலேசமாய் அழுது ஜெபிக்கிறவர்களுடைய வாயைப் போய் மூடுகிற ஒரு போதகரும் இருந்தார்.

போதகன்மாரே! அவர்களைத் தடைசெய்யாதிருங்கள். சுவாமியுடைய ஆக்கினை உங்கள்மேல் வராதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மரியாள் தைலம் ஊற்றிக்கொண்டு நிற்கிறாள். அங்கேயும் ஒரு சாத்தான் வந்துவிட்டான். அவன் யார்? அப்போஸ்தலப் பட்டம்பெற்ற ஒரு சீஷன். அநேக அற்புதங்களையுங்கூட ஒருவேளை செய்திருப்பான். சீக்கிரம் தன் குருவைக் காட்டிக்கொடுக்கப்போகிற பிசாசின் மகன். கேட்டின் மகன். பொருளாசைக்காரன். முந்நூறு பணத்துக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று வெகு நல்லவன்போலப் போய்ச் சொல்லுகிறான். உடனே மரியாள் 'சாத்தானே! என்னைவிட்டு அப்பாலே போங்கள்' என்று தன் மனதில் சொல்லிக்கொண்டு 'நீ சொன்னவுடன் நான் நிறுத்தமாட்டேன்' என்று பரிந்துபேசும் தன் இரட்சகருக்கு ஊற்றிக்கொண்டே நிற்கிறாள். சாத்தானுக்கு வெட்கம். இயேசுவுக்கு ஜயம். ஆ! மரியாளே! நீ எவ்வளவு குணசாலி. எவ்வளவு தைரியசாலி.

என் அருமைச் சகோதரிகளே! நாமும் ஆண்டவருக்கு அன்பின் கிரியைகள் அற்ப சொற்பம் செய்யும்போது உலகமக்கள் கேலிபண்ணலாம்; பரிகாசம்பண்ணலாம்; இகழலாம்; முறுமுறுக்கலாம்; நீங்கள் அவைகளையெல்லாம் கவனிக்காதேயுங்கள். மற்றவர்கள் செய்யும் நற்கிரியைகளைத் தடுக்காதேயுங்கள். நம்மை யார் தடுத்தாலும் பயப்படவேண்டியதேயில்லை.

## ஆண்டவர் அவளைக்குறித்துக் கொடுத்த சாட்சி.

பிறர் நம்மைப் புறக்கணித்துப் பேசுகையில், நாம் நற்கிரியைகளை விடாமற் செய்தால், நமக்குப் பதிலாக ஆண்டவரே பேசுவார். நம்மைத் தொடுகிறது அவருடைய கண்மணியைத் தொட்டதுபோலிருக்கும். தம்முடைய பிள்ளைகளைச் சாத்தான் கையில் விடார்.

(a) 'என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்.'



REGISTRAR OF BOOKS 10 NOV 1914

(b) 'இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்.' நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் [illegible] கொண்டாள். நாமும் சகல நற்காரியங்களிலும் முந்தவேண்டுமேயல்லாது பிந்தக்கூடாதென்று படிக்கிறோம். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று முடித்தார். அவர் சீக்கிரம் மரிக்கப்போவதை அறிந்து இந்த மரியாள் இப்படிச் செய்தாளோ, என்னவோ அதைப்பற்றித் திட்டமாய்ச் சொல்லமுடியாது.

இன்னும் ஆறுநாட்களுக்குப்பின் தலையில் முள்முடி தரித்து, இரத்தம் வடியப்போகிற சிரசுக்கா, நீ தைலம் ஊற்றுகிறாய். ஆணி கடாவப் படப்போகிற பாதத்துக்கா, தைலம் பூசுகிறாய். பிசாசை ஜயித்து, ஜயம்பெறப்போகிற கால்களையா, தைலம்பூசித் தலைமயிரால் துடைக்கிறாய். ஆ! மரியாளே! உன் ஆசையைத் தீர்த்துக்கொள் என்று இடம்கொடுத்தார். நாமும் ஆண்டவருக்குச் செய்யும் கிரியைகளில், பின்னால் நன்மையுண்டாகும் என்று நமக்குத் தெரியாவிட்டாலும், சர்வவல்லமையும், சர்வஞானமுமுள்ள ஆண்டவர் பார்வையில் அது புண்ணியமாக நினைக்கப்படும் என்பது இதினால் விளங்குகிறது.

எப்படியும் இந்த மரியாள் ஆண்டவரை அபிஷேகம்பண்ணினதைத் தம்முடைய அடக்கத்துக்கு முன்னடையாளமாக வைத்து அவளைப் புகழ்ந்துகொண்டார். நம்முடைய ஜீவ ஓட்டம் முடியுமுன்னதாக, மரியாள் பெற்றுக்கொண்ட நற்சாட்சிப்பத்திரம் நாமும் வாங்கிக்கொள்ளப் பிரயாசப்பட்டு அதற்கேற்றபடி நடக்கச் சுவாமி தமது அருளைத் தருவாராக.

முதலாவது, மரியாள் தைலத்தின் வாசனை வீடு முழுவதும் நிறைந்தது.

இரண்டாவது, அது அந்த ஊர் முழுவதுக்கும் வாசனை கொடுத்தது.

மூன்றாவது, இப்போது அது உலகமெங்கும் வாசனை வீசுகிறது.

பிரிய சகோதரிகளே! நமது கிரியை நாற்றமாயிருக்கிறதா? அல்லது வாசனை வீசுகிறதா? அதை நாம் தற்சோதனைசெய்து பார்க்கவேண்டும். நாமும் மரியாளைப்போல் உப்பைப்போல், சாரமுள்ளவர்களாய் நம்மால் இயன்றதைச் செய்து, பிரயோஜனமுள்ளவர்களாயிருப்போமாக.

கர்த்தரால் புகழப்படுகிறவளே உத்தமி,
நம்மால் இயன்றதைச் செய்வதெப்படி?

1. நம்மால் இயன்ற காணிக்கை கொடுப்பதாலும்,
2. கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவருடைய அன்பைச் சொல்வதாலும்,

3. நமக்காகவும், நம் குடும்பத்துக்காகவும், நம் சபைக்காகவும் ஜெபிப்பதாலும்,

4. நமக்குப் பதில் செய்யாத ஏழைகளுக்கு உதவிசெய்வதாலும்,

5. வியாதியஸ்தரைப் போய்ப் பார்த்து உதவிசெய்வதாலும்,

6. ஒற்றைத்தாள் பிரதிகளை மற்றவர்களுக்குக் கொடுப்பதாலும்,

7 வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வேதபுஸ்தகம் வாசிக்கப் படிப்பிப்பதாலும்,

8. இரண்டுபேர், மூன்றுபேர் கூடி ஆவிக்குரிய சம்பாஷணை செய்வதாலும்,

நம்மால் இயன்றதைச் செய்து, ஆண்டவரை மகிமைப்படுத்துவோமாக.

பாதம் ஒன்றே வேணும்;—இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்—உன்
வீசுங் கமழ்கொண்ட வாசத் தயிலத்தை
ஆசையுடன் மரி பூசிப் பணிந்த பொற்-பாதம்.

Gnanabaranam Albert.

## WHAT A BLIND MAN SAW

## ஒரு குருடன் பார்த்தது என்ன?

கென்ட் என்னும் பட்டணத்திலே, ஒருநாள் ஒரு துரைமகன் சாலைமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்தார்.

அப்போது வெயில் கண்ணைத் திறக்கக்கூடாதபடி அவ்வளவு வெப்பமாய்க் காய்ந்துகொண்டிருந்தது அவர் போய்க்கொண்டிருக்கும்போது சாலை ஓரத்திலே ஒரு மனுஷன் உட்கார்ந்து, மடியிலே ஒரு பெரிய புஸ்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு, தடவித் தடவிச் சத்தமிட்டு வாசித்துக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும், துரை 'இந்தப் புத்தியில்லாத மனிதன், இந்தக் கடும் வெயிலிலே ஏன் உட்கார்ந்து வாசிக்கிறான்?' என்று நினைத்துக்கொண்டு அவனண்டை போனபோது அவன் 'கண்ணில்லாதவன்' என்று அறிந்தார்.

பிற்பாடு அவனைப் பார்த்து, 'நல்ல சிநேகிதனே! அது என்ன புஸ்தகம், அதை எங்கே கண்டுபிடித்தாய், அது நன்றாயிருக்கிறதா?' என்று வினவினார்.

அதற்குக் குருடன், 'ஐயா! ஒரு துரைசானி அம்மாள் இந்தப் புஸ்தகத்தை எனக்குக் கொடுத்தார்கள். அதன் பேர் பரதேசிகளின்



மோட்ச பிரயாணம். வாசிக்க அதிக இன்பமாயிருக்கிறது' என்று விடை கூறினான்.

துரை கொஞ்சநேரம் அவனோடு பேசிக்கொண்டிருந்து அவனைப் பார்த்து, 'ஐயோ பாவம்! இந்த அழகான கண்காட்சிகளையும் மரஞ் செடிகளையும் பார்க்க நீ இயலாதவனாயிருக்கிறாயே' என்று மன வருத்தப்பட்டார்.

அப்போது குருடன், 'அப்படியா சொல்லுகிறீர்கள். ஐயா! அதோ! அந்தக் கட்டடத்தைப் பாருங்கள்! இதோ இந்த ரஸ்தாவைப் பாருங்கள்! இந்தச் சூரிய வெளிச்சத்திலே எவ்வளவு அழகாய்த் தோன்றுகிறது' என்று சொல்லி, தன் கைகளை நீட்டி நீட்டிப் பேசினான்.

துரை ஆச்சரியப்பட்டு, அவனை உற்றுப்பார்த்து, 'நான் உன்னைக் குருடன் என்று நினைத்தேனே. நீ நன்றாய்ப் பார்க்கக்கூடுமோ?' என்று கேட்டார். அப்போது அவன், 'இல்லை ஐயா! என்னுடைய சிநேகன் ஒருவனிருக்கிறான். அவன் அடிக்கடி என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இந்தவிதக் காட்சிகளையெல்லாம் விவரமாய் எனக்குச் சொல்லுவான்' என்று சொன்னான்.

அப்போது துரை, 'அவன் சொல்லுகிறதெல்லாம் உண்மையென்று நீ நம்புகிறாயா?' என்று கேட்டார். அதற்கு அவன், 'ஆம் ஐயா, அவன் என்னுடைய அருமையான சிநேகிதன், அவன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டான்' என்று சொன்னான்.

துரை அவனைப் பார்த்து சந்தோஷப்பட்டு, சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து, அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் வழியே போனார்.

பாருங்கள்! இந்தச் சிறிய சம்பவமும் நம்முடைய இரட்சகர் சொன்ன வாக்குத்தத்தமும் எப்படி ஒத்துப்போகின்றன. நம்முடைய ஆத்துமக்கண்கள் குருடாயிருப்பதினாலே நாம் ஆண்டவர் சொல்லியிருக்கிறதைப் பார்க்க இயலாதவர்களாயிருக்கிறோம். நாமும் அந்தக் குருடனைப்போல், நமது பக்கத்திலிருந்து நமக்கு எப்போதும் நல்ல செய்தி அறிவித்துக்கொண்டிருக்கிற நமது இரட்சகருடைய வார்த்தையை நம்புவோமானால், நமது விசுவாசக் கண்கள் திறக்கப்பட்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களைக் கண்ணாலே கண்டு களிக்கிறவர்களாயிருப்போம்.

'என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்' என்று இரட்சகர் நமக்கு வாக்குக்கொடுத்திருக்கிறார். இன்னும் வெளிப்படுத்தல் கடைசி அதிகாரங்களிலே மோட்சானந்தத்தைப்பற்றி எவ்

வளவு விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மாத்திரம் அதை உண்மையாய் விசுவாசிப்போமானால் இந்த உலகமே நமக்கு மோட்சமாகத் தோன்றும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

## A HINDU'S IMPRESSIONS OF CHRISTIANITY (*Cont.*)

## கிறிஸ்தவ சமயத்திலும், கிறிஸ்தவர்களிடத்திலும் நான் கண்ட நுட்பங்கள்

(தொடர்ச்சி)

42. மற்ற மதக்கோவில்களில், போதுமான சுத்தம், வெளிச்சம் காற்றோட்டமிருப்பதில்லை. அதோடு இருந்து வணங்குவதற்குக் கூடியவரையில் வசதியான விடங்களுமில்லை. தவிர ஒருவரையொருவர் இடித்துத்தள்ளி நெருக்குண்டு நிற்பதால் வெயர்வைகளுண்டாகிப் புழுங்குவதுண்டு. போதாக்குறைக்கு தீபவெக்கை, கற்பூரவெக்கையுமுண்டாவதுண்டு. இதனால் ஜனங்கள் ஆற அமர நின்று, தியானிக்க வழியில்லாமலும் மூலஸ்தானம் தெரியாமலும் எப்பொழுது வெளியே போவதென்று ஆத்திரப்பட்டு வெளியே வந்துவிடுவதுண்டு.

கிறிஸ்தவ கோவில்களோ வழிபட வருபவர்கள் மிகவும் சாதாரணமாயிருந்து வழிபடும்படி, வசதிகளையும், காற்றோட்டம், வெளிச்சம் இவைகளையுமுடைத்தாயிருக்கின்றன.

43. மற்ற மதங்களைப்போல, ஆகாரங்கூட உட்கொள்ளாமல் விரதமாய்ப் பட்டினியாய் நாள் கணக்காய் வாரக்கணக்காய் மாதக்கணக்காயிருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தங்களில்லாமல், ஸ்நாநபானம் செய்து நல்லாடை கட்டிக்கொண்டு கோவிலுக்கு வரவேண்டுமென்ற சௌகரியமிருக்கிறது. மேலும் பட்டினி கிடப்போர் என்ன பக்தியைத்தான் சரிவரச்செலுத்தமுடியும்? 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்றபடி, புத்தி சிதறியும், மட்கியுமே போகும்.

44. மற்ற மதக்கோவில் பூசாரிகள் வந்தவர்களிடம் தட்சணைகளை வாங்கிக்கொண்டு, தேங்காய் உடைத்துக் கொடுப்பதும், நைவேத்தியப்போட்டுக்கொடுப்பதும், விபூதி, துளசி, தீர்த்தம், சந்தனம் சாதிப்பதும் வழக்கமே தவிர, கோவிலுக்கு வந்தவர்களுடைய நன்மையின் பொருட்டு அப்பூசாரி எவ்வித போதனையும் செய்வதில்லை. அப்படிப் போதனை செய்யக்கூடிய கல்வியறிவுள்ளவர்களாய் அப்பூசாரிகளிருப்பதுமில்லை. கிறிஸ்தவ கோவில்களிலோ, வேதம் முறைப்படி



குருவால் படிக்கப்படுவதோடு, கிறிஸ்தவ ஜனங்கள் வீட்டிலும் வெளியிலும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய கடமைகள், சன்மார்க்கத்துக்கடுத்த நீதிகள், கடவுளை யடையும் ஆத்மஞானம் இவைகளைப்பற்றிப் பிரசங்கிப்பது வழக்கமாயும், அதுவரை தரிசனத்துக்கு வந்தவர்கள் இருந்துபோவதும் வழக்கமாயிருக்கிறது. இதற்கு அக்குரு கூலிவாங்கவும் கூடாது; கேட்கவுங்கூடாது, கொடுக்கிற வழக்கமுமில்லை. இது எவ்வளவு சரியான ஏற்பாடு. கோவிலுக்குப் போனால் புதிது புதிதாக நீதிகள் தெரிந்துகொண்டு வீட்டுக்குத் திரும்புவது நன்மையா? பிரசாதங்களை வயிறு புடைக்கத் தின்று ஏப்பமிட்டுக்கொண்டு, 'நிறைந்த பட்டறைக்குக் குறி' யென்ற மாதிரி சந்தனத்தை அடித்துப் பூசி, பூச்சூடி, கைவீசி வீட்டுக்குத் திரும்புவது மேன்மையா? இதுவிஷயத்தில் கிறிஸ்துமத சித்தாந்தம் எவற்றினும் மேலேயாகும்.

45. மற்ற மதக்கோவில்களுண்டான காலங்களில், அவைகளையும், அம்மதங்களையும் ஆண்டு நடத்திப் பரிபாலிக்க அததற்குத் தக்க மதகுருக்களையும் ஏற்படுத்தி, அததற்குத் தக்க மடம், மனை, நிலம் முதலியவைகளை யுண்டாக்கிவைத்தார்கள். அக்காலம் ஒருவாறு சரியாய் நடந்திருக்கலாம். இக்காலமோ அவைகளால் அம்மதஸ்தருக்கு எவ்வித பலனும் கிடையாது.

கிறிஸ்தவ மதபோதகர்களுக்கு மதாபிவிர்த்தி சம்பந்தமான கோவிற்பிரசங்கம் தவிர, வருஷம் முந்நூற்று அறுபத்தைந்துநாளும் தெருப்பிரசங்கம், வீட்டாராதனை, சுற்றுக் கிராமப்பிரசங்க வேலைகள் சதாவிருந்துகொண்டே யிருக்கின்றன. கிறிஸ்துமதம் பிரபலப்பட்டுக்கொண்டு உயர்வதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

46. மற்ற மதநூல்கள், பேசமுடியாத சமஸ்கிருதம், அரபி முதலிய பாஷைகளில் வெகுகாலம் ஏட்டுப்பிரதிகளாய்ச் சிலரிடமிருந்து, தற்காலம் அவற்றில் சில புஸ்தகப்பிரதிகளாய் வெளிவருகின்றன. அப்படி வந்தும் அவைகளைச் சகலரும் வாசிக்கத் தெரிந்திராமலும், தெரிந்தவர்களுக்கு அதன் அர்த்தம் விளங்காமலும், அர்த்தம் தெரிந்ததாய்ச் சொல்வோரும், அவர்கள் இஷ்டம்போல் அர்த்தத்தை அனர்த்தப்படுத்தி வீண்சண்டை யிடுபவர்களாயு மிருக்கிறார்கள். இது ஒரு கூத்து. இன்னொன்று தாய்ப்பாஷையிலேயே கடவுளைப்பற்றிய பாடல்கள் எண்ணிறந்தன விருக்கின்றன. அவைகள் எவரும் வாசிக்கும்படியான வசனநடையாயில்லாமல் கவிகளாக அதிலும் மிகவும் கரடுமுரடாக அல்லது உள்ளர்த்தங்கள் பலவுடையனவாக விருக்கின்றன. இப்படிக்கான நூல்களை ஆராய்ந்து பார்க்க ஒரு

ஜன்மம் போதாது. சகலரும் பண்டிதராகிப் படித்து அப்பால் கடவுளை யறிந்து வழிபடுதல் சாத்தியமா? சாத்தியமல்ல.

கிறிஸ்தவ மதநூல்களும், அதன் பாகங்களும் அம்மதம் பிரபலமான விடங்களில் உள்ள சகல ஜனங்களும் எளிதில் அறிந்துகொள்ளுமவண்ணம், அவ்வவ்விடத்துப் பாஷைகளில் அதாவது 1911-ம் வரு வரை நானூற்று முப்பத்திரண்டு பாஷையில் பிரசித்தப்படுத்தப் பட்டிருக்கின்றன. இது எவ்வளவு உபகாரம்?

(இன்னும் வரும்.)

செல்லை. உ. ப. உமையொருபாகன்
ஆலந்தூர், பரங்கிமலை.



## THE KING'S CUP BEARER (Cont.)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### V. அத்தியாயம்

பட்டயமும் சாந்துக்கரண்டியும்

(1) நாங்கள் செய்கிற வேலைக்கு மனுஷனைவிட மேலான அதிகாரி எங்களுக்குண்டு. 'பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியம் கைகூடிவரப்பண்ணுவார்.'

(2) நீர் எங்களுக்கு விரோதமாய் என்ன சொன்னாலும், செய்தாலும் நாங்கள் எங்கள் வேலையைச் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். 'அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்.'



(3) இதைப்பற்றிக் கவனிக்கவேண்டியது உம்முடைய வேலையல்ல, சன்பல்லாத்தாகிய உமக்கு இதைப்பற்றிக் காரியமில்லை, 'உங்களுக்கோவென்றால் எருசலேமில் பங்குமில்லை பாகமுமில்லை,' ஆகையால் சன்பல்லாத்தே உன்னுடைய நாடாகிய சமாரியாவை மேல் பார்ப்பதோடு திருப்தியாயிரு. எருசலேமையும் யூதர்களையும் என்னுடைய பார்வையிலும் எங்கள் தேவனுடைய பார்வையிலும் விட்டுவிடு.

நெகேமியாவின் கடிதத்திற்குப் பதில் வரவில்லை. ஆகையால் அவரும் அவருடைய கூட்டாளிகளும் எல்லாம் சரியாய்ப்போயிற்று, புசலடித்துக் கடந்துபோயிற்று, சன்பல்லாத்து நம்முடைய தீர்மானத்தை யறிந்து, தன்னுடைய பயமுறுத்தலும் நிந்தைப்பேச்சும் பிரயோஜனமில்லையென்று கண்டு சும்மா இருந்துவிட்டார் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் திடீரென்று ஒருநாள் மறுபடியும் கார்மேகம் எழும்பிப் புசலடித்தது. வேலை வெகு நேர்த்தியாய் நடக்கிறது. ஆசாரியரும், வர்த்தகரும், தட்டாரும், தைலக்காரரும், சல்லூமின் குமாரத்திகளும், நேர்மையுள்ள பாரூக்கும், தலை நரைத்த ஷெமேயாவும் தங்கள் வேலைமேல் ஜாக்கிரதையாய் நிற்கிறார்கள். அவர்கள் எறிட்டுப் பார்த்தபோது எதிர்பாராத ஒரு காட்சியைக் காண்கிறார்கள். சமாரியர் பெருங்கூட்டமாக வந்து வடக்கு வாசலண்டை நின்றுகொண்டு இவர்கள் அலங்கத்தில் செய்கிற வேலையை உற்றுப் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்கள். அதிபதியாகிய சன்பல்லாத்தும், அவர் பக்கத்தில் காரியதரிசியாகிய தொபியாவும், பிரதான ஆலோசனைக்காரரும், சேனையின் மற்ற உத்தியோகஸ்தரும் நிற்கிறார்கள். பலத்த கார்மேகம் எழும்புகிறது. சாந்துக்கரண்டிகளின் மணிபோன்ற சத்தம் நின்றுபோயிற்று. அவர்களெல்லாரும் என்ன நேரிடுமோவென்று கவலையோடும் ஆச்சரியத்தோடும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சத்தமுண்டாகிறது. சன்பல்லாத்து பேசும் நிந்தையான வார்த்தைகளை எல்லாரும் கேட்கிறார்கள். நெகேமியாவும் கேட்கிறார். அலங்கத்தைக் கட்டுகிறவர்களைப்பற்றி மிகவும் அருவருப்பான வார்த்தைகள் பேசப்படுகின்றன. ஏழை யூதர்கள் என்ன செய்வார்கள்? எல்லாராலும் அற்பமாய் எண்ணப்பட்டிருந்தார்களே அவர்கள் என்ன செய்யக்கூடும்; அவர்கள் தங்களைப் பலப்படுத்தக்கூடுமோ? தங்களுடைய வேலையை முடித்துப் பட்டணத்தை பந்தோபஸ்துச் செய்யக்கூடுமோ? இப்படி அலங்கத்தைக் கட்ட எவ்வளவு நாள் செல்லுமோ? சீக்கிரம் முடித்துவிட்டு அங்கே பலியிடுவார்களா? ஒரே நாளில் முடிந்துபோகுமா? அவர்களுக்கு வேண்டிய சாமான்களில்லை. கல் எங்கேயிருந்து வரும்? அந்தக் குப்பைமேட்டிலிருந்து

எறிந்துவிடப்பட்ட கூளங்களிலிருந்து உறுதியான கற்களைச் செய்யக்கூடுமோ? அல்லது சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிற அலங்கத்தின் கற்களைப் புதுப்பித்துக்கொள்ளலாமோ? இவைகளெல்லாம் கூடாத காரியங்களே.

சன்பல்லாத்து பேசி முடிந்தவுடனே தொபியா ஆரம்பிக்கிறான். இந்தச் சுவரின்மேல் ஒரு நரி ஏறித் தாண்டிப்போனாலும் இடிந்து விழுந்துபோகும். அவ்வளவு பலமற்றவைகள்தானே. இந்தச் சொல் உண்டானவுடனே சன்பல்லாத்தும் மற்ற உத்தியோகஸ்தரும் எவ்வளவாய் நகைக்கிறார்கள்! நெகேமியா இதற்கு என்ன மறுமொழி சொல்லுகிறார்? இந்தச் சிந்தையும், காரமும் கோபமுண்டாக்குகிறதுமான வார்த்தைகளுக்கு என்ன பதில் சொல்லுகிறார்? இவருக்கு அதிகமான அதிகாரமும் வல்லமையுமுண்டு. தொபியாவுக்குத் தகுந்த பதிலளித்துத் தம்முடைய ஜனங்களை ஏவிவிட்டு சன்பல்லாத்தையும் அவரைச் சேர்ந்தவர்களையும் துரத்திவிட எண்ணியிருக்கலாம்.

ஆனால், நெகேமியாவோ பேசவில்லை. பதில் சொல்லுவது தம்முடைய வேலையல்ல தேவனுடைய வேலையென்றுணர்ந்து, இந்த விஷயங்களை மனிதனிடத்திலல்ல தேவனிடத்தில் முறையிடுகிறார். ‘எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூறைக்கு ஒப்புக்கொடும்.’

(இன்னும் வரும்.)

S. A. Vethanayaham.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1914 ஷ நவம்பர்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | லூக். | 19. 41—48 | 12 | வி. | லூக். | 22. 47—62 | 21 | ச. | சக. | 1. |
| 2 | தி. | „ | 20. 1—16 | 13 | வெ. | „ | 22. 63-71; 23. 1—7 | 22 | ஞா. | „ | 2. |
| 3 | செ. | „ | 20. 17—26 | | | | | 23 | தி. | „ | 3. |
| 4 | பு. | „ | 20. 27—38 | 14 | ச. | „ | 23. 8—21 | 24 | செ. | „ | 4. |
| 5 | வி. | „ | 20. 39—47 | 15 | ஞா. | „ | 23. 22—34 | 25 | பு. | „ | 5. |
| 6 | வெ. | „ | 21. 1—11 | 16 | தி. | „ | 23. 35—49 | 26 | வி. | „ | 6. |
| 7 | ச. | „ | 21. 12—27 | 17 | செ. | „ | 23 50-56; 24. 1—7 | 27 | வெ. | „ | 7. |
| 8 | ஞா. | „ | 21. 28—38 | | | | | 28 | ச. | „ | 8. |
| 9 | தி. | „ | 22. 1—13 | 18 | பு. | „ | 24 8—24 | | | | |
| 10 | செ. | „ | 22. 14—30 | 19 | வி. | „ | 24. 25—35 | 29 | ஞா. | „ | 9. 1—10 |
| 11 | பு. | „ | 22. 31—46 | 20 | வெ. | „ | 24. 36—53 | 30 | தி. | „ | 9. 11—20 |

C. L. S. PRESS, MADRAS—1914



# மாதர் போதினி

No. 204 டிசெம்பர் 1914 No. 12

OFFICE OF THE REGISTRAR … 4 DEC 1914 … MADRAS

## THE CHRISTMAS TRINITY

## கிறிஸ்மஸ் தினத்தின் திரித்துவ லட்சணங்கள்

மகா நிர்ப்பாக்கியமும் அதைரியமுமுள்ள ஜனங்கள்தான் முதல் முதலாக கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடினார்கள். அவர்கள் கடவுள் தங்களை மறந்துவிட்டதாக நினைத்தார்கள். சகல உபத்திரவங்களிலிருந்தும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதாகத் தீர்க்கதரிசிகள் உரைத்திருந்தார்கள். ஆயினும் அந்த ஜனங்களின் உபத்திரவம் அதிகரித்தே வந்தது. ஆபத்துகள் மென்மேலும் நேரிட்டன. பாரசீகரும், கிரேக்கரும், ரோமரும் முறையே அவர்களுடைய தேசத்தின்மேல் படையெடுத்து அதைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்களுடைய உபத்திரவங்களைக் கடவுள் கவனியாதவர்போலிருந்ததாகத் தோன்றினது.

அப்போது திடீரென எவரும் எக்காலத்திலும் பார்த்திராத ஒரு பெரிய வெளிச்சம் தோன்றினது; தேவதூதர்கள் பாடினார்கள். அந்த கிறிஸ்மஸ் தினத்தை யாவரும் சதாகாலத்திலும் நினைவுகூரத்தக்கதாகத் தேவன் அதை முத்திரித்தார். தங்களைக் கடவுள் மறந்துவிட்டதாக அவர்கள் நினைத்தபோது அவர் அவர்களை நினைவுகூர்ந்து சொல்லிமுடியாத ஈவாகிய தமது நேசகுமாரனை அனுப்பினார். அதன்பிறகு எக்காரியம் எப்படியிருந்தபோதிலும் கடவுள் தங்களை நினைவுகூர்ந்ததை நன்றாய் அறிந்துகொண்டார்கள். அவர் அவர்கள்மேல் கவலைப்பட்டார். ஓர் ஆபத்தும் அவர்களை அவருடைய அன்பிலிருந்து பிரிக்கமுடியாது.

கிறிஸ்மஸ் பண்டிகையின் சாராம்சம் ஒருவரையொருவர் நினைவுகூரும் சந்தோஷமே. கிறிஸ்மஸ் நன்கொடைகள் மறக்கமுடியாத அன்பின் அடையாளங்களாய் இருக்கவேண்டுமென்பது தேவசித்தம். ஒரு நன்கொடை சிறிதாயினும் பெரிதாயினும் ஞாபகார்த்தமாயிருப்பதினிமித்தம் அது அருமையானதே.

ஒருவரையொருவர் இப்படி நினைவுகூரும் சந்தோஷமே கிறிஸ்து ஜயந்தியின் முதல் அடையாளம்.

கடவுள் ஒரு பிள்ளையை உலகத்துக்குக் கொடுத்தருளினார். ஆதலால் அந்த நாள் பரிசுத்த பிள்ளையின் பண்டிகை நாள் என்று அவர் காண்பித்தார். சாஸ்திரிகள் பிள்ளையினிடம் வந்தார்கள்; மேய்ப்பரும் ஞானிகளும் வந்தார்கள். உலகத்துக்கு அவர் அளித்த மகா பெரிய கிறிஸ்மஸ் ஈவினால் கடவுள் எல்லாப் பிள்ளைகளையும் பரிசுத்தப்படுத்தினார். 'என் சகோதரராகிய இச்சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்று கிறிஸ்து சொன்னதைக் கவனிக்கும்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மகத்துவமான ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். அவ்வூழியம் பலிபீடத்தின் முன்னின்று ஜெபிக்கும் சிறந்த தேவவூழியனின் பணிவிடையைப்பார்க்கிலும் குறைவானதல்ல. கிறிஸ்து ஒவ்வொரு பிள்ளையிலுமிருக்கிறார். எல்லாத் தகப்பன்மார், தாய்மார், தாதிமார், உபாத்திமார் என்பவர்களின் எல்லாவித அன்பும் கவனமும் அவருக்கு ஊழியமாகலாம்.

முதல் கிறிஸ்மஸ் தினத்தில் சாஸ்திரிகள் தங்கள் காணிக்கைகளைக் கொண்டுவந்து அவருக்குப் படைத்தார்கள். இவ்விதமாக கிறிஸ்மஸ் தினத்தில் நாம் பிள்ளைகளுக்கு வெகுமதி யளிக்கிறோம். மரங்களிலும் ஜன்னல்களிலும் விளக்குகள் ஏற்றி கிறிஸ்மஸ் தினத்தில் பிரகாசித்த நக்ஷத்திரங்களை நினைவுகூருகிறோம். நாம் ஆனந்தப் பாடல்கள் பாடி தேவதூதரின் ஞான சங்கீர்த்தனங்களை நினைவுகூருகிறோம். பிள்ளைகளைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டு இப்படிச் செய்கிறோம். நமது ஜீவியத்தில் அது மகா பரிசுத்தமும் இன்பமுமான வேலை. இவ்விதமாக கிறிஸ்மஸ் தினத்தின் இரண்டாம் அடையாளம் பிள்ளைகளே.

ஏழைகளுக்கு ஊழியஞ்செய்தலே மூன்றாவது அடையாளம்.

கடவுள் உலகத்திற்கு ஒரு அற்புத ஈவை அளித்தபோது அதை ஏற்றுக்கொள்வதற்கு யாரைத் தெரிந்துகொண்டார்? யாவரும் ஆறுதலான படுக்கைகளின்மேல் நித்திரைசெய்தபோது இராக்காலத்தில் குளிர்ச்சியான வயல் நிலங்களில் விழித்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு ஒரு வெளிச்சம் தோன்றியது. அக்குழந்தை எங்கேயிருந்தது? அலங்காரமும் செல்வமும் நிறைந்த வீட்டிலா? 'பிள்ளையைப் புல்லணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்.' சிநேகிதர்கள் இல்லாமலும் துக்கத்தோடும் மாட்டுத்தொழுவத்தில் தங்கியிருந்த ஒரு ஏழைத் தச்சனுக்கும் அவன் மனைவிக்கும் ஆகாய வெளிச்சம் கிடைத்தது. பெத்லகேமில் ஆகாய வெளிச்சம் மாத்திரமிருந்தபோதிலும் அலட்-



சியம் செய்யப்பட்ட ஜனங்களின்பேரில் உன்னத வெளிச்சம் வீசியது. கிறிஸ்மஸ் தினத்தில் ஏழைகளுக்கும் துன்பம் அடைகிறவர்களுக்கும் நாம் ஊழியஞ்செய்யும்பொழுது கிறிஸ்மஸ் தினத்தில் பாடின தேவதூதர்களோடு பங்கு பெறுகிறோம். நன்மையடைந்தவர்கள் நிர்ப்பாக்கியருக்கு உதவிசெய்யவேண்டும். பரிசுத்த நிக்கொலாஸ் என்பவரைப்பற்றி கிறிஸ்மஸ் பாரம்பரிய சரித்திரத்தில் வாசிக்கிறோம்; ஏனெனில் அவர் தரித்திரருக்கு நன்மை செய்தவர். தங்க நாணயங்களடங்கிய பைகளைத் தரித்திரரின் வீட்டு ஜன்னல்வழியாக எறிந்துவிட்டு அவர்கள் நன்றிசெலுத்துமுன் வேகமாய்ச் சென்றுவிடுவார். வின்ஸ்லாஸ் என்னும் நல்ல அரசன் விறகுக்கட்டைகளை எடுத்துக்கொண்டு குளிரினால் நடுங்கிக்கொண்டுபோன ஓர் ஏழை மனுஷனுடன் அவன் வீட்டுக்குப்போய் நெருப்புப் பற்றவைத்து ஆகாரம் கொடுத்துத் திரும்பினார். இவர்கள் கிறிஸ்மஸ் பக்தர்கள். மனஸ்தாபக் கண்ணீர் உபவாசம் என்பவைகளே யல்லாமல் பரிசுத்தவான்களாவதற்கு வேறு வழியும் உண்டு என்பதைக் காண்பித்தார்கள். அவர்கள் சந்தோஷமான பரிசுத்தவான்கள்.

ஏழைகளையும் தள்ளப்பட்டவர்களையும் திக்கற்றவர்களையும் சந்தோஷப்படுத்துவதினால் சந்தோஷத்தை யடைவது மூன்றாவது அடையாளம்.

ஆகவே திரித்துவ அடையாளங்களாவன :—

1-வது. ஒருவரையொருவர் நினைவுகூரும் சந்தோஷம்.

2-வது. பிள்ளைகளின் பரிசுத்த பண்டிகை.

3-வது. தரித்திரரைச் சந்தோஷப்படுத்தல்.

இதுதான் கடவுளுக்கேற்ற கிறிஸ்மஸ் பண்டிகை. என் சகோதரராகிய இச்சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். கிறிஸ்மஸ் நாளில் விசனமாயிருக்கக் கூடியவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவோமானால் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் கடவுளால் மறக்கப்பட்டோம் என்று நினைத்த ஜனங்களின்பேரில் உன்னத வெளிச்சம் தோன்றினதுபோல் நமது இருதயங்களிலும் சந்தோஷம் உதிக்கும்.

## A WONDERFUL STAR

## ஓர் ஆச்சரியமான நட்சத்திரம்

அநேக வருஷங்களுக்கு முன்னே பெத்லகேம் நகரத்தின் ஓர் தெருவிலே சில சிறுவர்கள் ஒன்றுகூடி விளையாடிக்கொண்டிருந்-



தார்கள். அப்போது திடீரென்று அந்தவழியாய் திரளான ஜனங்கள் வருகிறதைக் கண்டார்கள்.

அந்தப் பிரயாணிகளைப் பார்த்தால் வெகுதூரம் நடந்து, அலுத்துச் சலித்துக் களைத்துப்போனவர்கள்போல் காணப்பட்டார்கள். முக்கியமாய் அவர்களில் ஓர் மனிதனும், ஓர் வாலிபஸ்திரீயுமாகிய இரண்டு பேர், அதிகமாய்த் திடனற்றவர்களாய்க் காணப்பட்டார்கள்.

அவர்கள் இந்தச் சிறுவர்களைப் பார்த்து, 'தம்பிமாரே, உங்களில் யாராவது நாங்கள் தங்கத்தக்க நல்ல சத்திரத்தை எங்களுக்குக் காட்டமாட்டீர்களா?' என்று கேட்டார்கள். அப்போது அந்தக் கூட்டத்திலுள்ள சிமியோன் என்ற ஒரு சிறுவன், 'வாருங்கள் நான் காட்டுகிறேன்' என்று சொல்லி வெகு துடிக்காய் முன்னால் ஓடினான். அப்போது, அந்த மனுஷன், 'தம்பி, கொஞ்சம் மெல்ல நட, நாங்கள் நீண்ட பிரயாணம் செய்து களைத்துப்போயிருக்கிறோம்' என்றான்.

அப்போது சிமியோன் 'நீங்கள் யார்? எங்கேயிருந்து வருகிறீர்கள்' என்று அவர்களைக் கேட்டான். அதற்கு அவன், 'நாங்கள் நாசரேத் என்னும் பட்டணத்திலிருந்து குடிமதிப்பு எழுதப்படும்படி இங்கே வந்திருக்கிறோம்' என்றான்.

அந்த மனிதனும் ஸ்திரீயும் யாரென்று நினைக்கிறீர்கள்? அவர்கள் யோசேப்பும் நமது இரட்சகரின் தாயாகிய மரியாளும்தான்.



பிற்பாடு சிமியோனும் அவர்களும் பேசிப் பேசி வெகுதூரம் நடந்துபோய்ச் சத்திரத்தண்டை வந்தார்கள். உடனே சிமியோன் சத்திரக்காரனிடம் ஓடி, 'ஐயா இன்னும் இரண்டு பிரயாணிகள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் வேண்டும்' என்று சொன்னான்.

அப்போது சத்திரக்காரன் வெளியே வந்து பார்த்து, 'ஐயோ, பாவம்! இடமில்லையே, சத்திரம் நிறைய ஆட்கள் இருக்கிறார்களே' என்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது சிமியோன், 'ஐயா, என் தகப்பனார் ஒரு புது மாட்டுக்கொட்டகை கட்டியிருக்கிறார். நான் போய் அவரை உத்தரவு கேட்டுக்கொண்டு வந்து அதிலே நீங்கள் தங்கும்படி ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லி ஓடினான். அவன் தன் பெற்றோர் உத்தரவு பெற்றுவந்து அந்த ஏழைப் பிரயாணிகளை அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்வித்தான். அன்றிரவு தன் வீட்டிலிருந்து அவர்களுக்குப் போஜனமும் அனுப்புவித்தான்.

பிற்பாடு வழக்கப்பிரகாரம் வீட்டிற்கு வந்து போஜனம் முடிந்து குடும்ப ஜெபம் நடந்ததும் அவன் படுக்கைக்குப் போனான். அன்றிரவு எண்ணாகமம் 24-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டது (எண். 24. 17. பார்க்கவும்). அன்று ஜெபமெல்லாம் இரட்சகருடைய வருகையைப்பற்றித்தான் நடந்தது. ஆனால் அவருடைய வருகை அவ்வளவு சமீபமாயிருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்றிரவு சிமியோனுக்குத் தூக்கம் வரவில்லை. தன் படுக்கையிலே புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தான். அவன் சொர்ப்பனமெல்லாம், ராஜாக்களைப்பற்றியும், போர்ச்சேவகர்களைப் பற்றியும், நட்சத்திரத்தைப்பற்றியுமே இருந்தது. எல்லாரும் அமைதியாய்த் தூங்கிக்கொண்டிருக்கும்போது, இவன் விழித்துக்கொண்டான். ஜன்னல்வழியாய்ப் பார்த்துக்கொண்டேயிருந்தான். திடீரென்று ஒரு பெரிய நட்சத்திரம் காணப்பட்டது. அவன் படுக்கையை விட்டுக் குதித்தெழுந்து, 'ஐயா, ஐயா, ஒரு நட்சத்திரம்' என்று கூவினான். எல்லாரும் எழுந்து வெளியே வந்து பார்த்தார்கள். மற்றவர்களும் அந்த நட்சத்திரத்தைப் பார்த்திருந்தார்கள். ஏனென்றால், அதிகாலையிலே மேய்ப்பர்கள் வந்த இரட்சகரைக் கண்டுகொண்டார்கள். சிமியோனும் அவர்களோடே போய்க் கந்தைத் துணியிலே சுற்றப்பட்டிருந்த பிள்ளையைக் கண்டுகொண்டான்.

சிமியோன், அந்த அந்நியர்களுக்குப் பட்சம் காட்டினதற்காக எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பான்!



## TWO CHRISTMAS SONGS

## கிறிஸ்து பிறந்தபோது தேவதூதர்கள் பாடின பாட்டு

### கண்ணிகள்

1. உன்னதங்களில் மகிமையும் உயர்ந்த
பராபரனுக்கு—மண்மேல் சமாதானமும்
மனுஷர் பேரில் பிரியமும்.

2. ஆசனத்தில் இருக்கும் சுவாமி
ஆட்டுக்குட்டிக்கு என்றென்றும்
வேண்டும் ஞானஸ்தோத்திரம்
வெகு மகிமை யுண்டாகவே.

3. கர்த்தர் சேனை கர்த்தரே
சுத்தர் சுத்தர் பரிசுத்தர்
முற்று மிந்த பூமியை மூடும்
உமது மகிமையால்.



4. மாண்ட ஆட்டுக்குட்டிக்கு
வல்லமை மிக வல்லபம்
மாந்தர்க்காகவே இந்த
மானிலத்தி லுதித்தாரே.

## கிறிஸ்துவின் பிறப்பு

இராகம், பியாகு. ரூபகதாளம்.

### பல்லவி

அந்தரங்கமாக வந்த நீர்
ஆர்? சொல்லவேணும்
யேசையரோ காணும்.

### அனுபல்லவி

கந்தமா மலர்ச் சோலை சூழ் வெல்லை
காவில் வந்தீரோ! என்மேற்
காதல் கொண்டீரோ!— அந்த

### சரணங்கள்

1. பாதி யிராவிற் பரம சேனைகள் பாடுவதேதோ! வெகு
சோதியாய்ப் புன்மிசை துயில்கின்ற
சூட்சமுமேதோ!—அதைச்
சொல்ல வொண்ணாதோ!— அந்த

2. கோவலர் அமிழ்தோடு வந்தும்மைக் கும்பிடுகிறார்; நல்ல
குவளை விழியாள் அணைமரி மடி
கொம்மை யுண்ணுகிறீர்;—குறு
நகையுங் கொள்ளுகிறீர்.— அந்த

3. வானூடு விண்ணினின்று கண்களை மருட்டுதே
என்னமோ! உயர்
சாலப் பொருள்களோடு ஞானிகள்
சந்திப்பதேனோ!—இந்த
ஜாலமுமேனோ!— அந்த

## HOW TO KEEP CHRISTMAS DAY

## கிறிஸ்மஸ் தினத்தை அனுசரித்தல்

பிரியமான சகோதரிகளே!

கிறிஸ்தவர்களாகிய நாம் நமதருமை இரட்சகர் நமது பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கும்படி மனுஷ அவதார

மெடுத்ததை ஞாபகப்படுத்தும்படி கொண்டாடும் சந்தோஷமான நாள் கிறிஸ்மஸ். தேவதூதன் சொன்னபடியே எல்லா ஜனத்துக்கும் அவர் பிறப்பதினால் மிகுந்த சந்தோஷம். தேவதூதர்கள் பாட்டுகள் பாடி சந்தோஷங்கொண்டாடினார்கள். மேய்ப்பர் மனப்பூர்வமாய் அவரைப் பணிந்து சந்தோஷித்தார்கள். சாஸ்திரிகள் தங்கள் வணக்கத்தாலும் காணிக்கையாலும் சந்தோஷித்தார்கள். இதுதான் தேவனுக்குப் பிரியமும் சுத்தமுமான சந்தோஷம். கிறிஸ்தவர்கள் இவ்விதமான சந்தோஷம் கொண்டாடுவது தேவனுக்கு மகிமை; ஆனால் அதற்குப் பதிலாக வருஷம் முழுவதும் நஞ்சென்றும் பாவமென்றும் தள்ளிவைத்திருந்த மதுபானத்தைத் தாங்கள் அருந்துவதுடன் தங்கள் வீட்டிற்கு வரும் சிநேகிதருக்கும் பந்து ஜனங்களுக்கும் குடிக்கக் கொடுத்து, தேவனுடைய நாமத்துக்கு அவமானத்தையும் தங்களுடைய ஆத்தும சரீரத்திற்குப் பல கெடுதிகளையும் வருவித்துக்கொள்வது, ஐயோ! எவ்வளவு துக்கமான காரியம்.



நம்முடைய முழு இருதயத்தையும் கிறிஸ்துவுடன் சேராதபடி மதுபானம் *தடை செய்யுமாகையால் அவைகள் கிறிஸ்து பிறந்த நாளில் நம்முடைய வீடுகளிலும் உபயோகிக்கப்பட்டால் ஆசீர்வாதத்துக்குப் பதிலாக சாபம் வரும். பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல், அப்பண்டிகை நாளின் குடியானது தினக்குடியராக்கி பின்சந்ததிக்கும் ஒரு கெட்ட வழக்கத்தை உண்டாக்குகிறது. குடிக்கிறவர்களுக்கும் மற்றவர்களைக் குடிக்கப்பண்ணுகிறவர்களுக்கும் நீதிமொழி 23-ம் அதிகாரம் 29-ம் வசனத்தில் 'ஐயோ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தேவ சாபத்தை யுணராவிட்டால் குடியினால் வரும் தீமைகளாகிய அமளி, அநியாயம், கசப்பு, வேதனை, துக்கம், காயம், புலம்பல், தரித்திரம் முதலிய சாபத்திற்குள்ளாவோம்.



சிலர் அச்சந்தோஷமான நாளில் ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்வதால் அவரைக் கனயீனப்படுத்தி, தங்கள் ஆத்துமாவைக் கெடுத்து வீட்டாருக்குச் சாபத்தையும் துக்கத்தையும் கஷ்டத்தையும உண்டாக்கி, அந்நாளின் ஆசீர்வாதத்தை இழந்து, பிசாசுக்கு அடிமையாகிறார்கள். திருஷ்டாந்தமாக, நமக்கருமையான யாதாமொருவருக்குப் பிறந்த நாள் வந்தால் அவர்களுக்குப் பிரியமான காரியத்தைச் செய்து அவர்களைச் சந்தோஷப்படுத்துவோம். அப்படியிருக்க நமதருமை இரட்சகரின ஜனனநாளைக் கொண்டாடுகிற நாம், அவருக்குப் பிரியவீனமான காரியத்தைச் செய்வது அவரைச் சத்துருவாக பாவிப்பதுபோலிருக்கும். ஆனபடியால் பெண்களாகிய நாம் இச்சந்தோஷ தினத்தைக் கொண்டாடவேண்டிய விதத்தைக்குறித்து ஏற்கனவே நமது வீட்டுக்காரர்களுடன் கூடி யோசித்து, அன்றையதினம் நம்முடைய வீட்டில் லாகிரிவஸ்துக்கள் நடமாடாதபடிக்கு அதிக ஜாக்கிரதையாயிருந்து, நமது அருமை அன்பர் இயேசு ரட்சகரின் பிறந்த நாளை அவருக்குப் பூரண சந்தோஷத்தைக் கொடுக்கும் விதமாகச் செலவிடுவோமாக.

R. Chinnammal, Erode.

## CHRISTMAS CUSTOMS

## கிறிஸ்மஸ் வழக்கங்கள் வந்தவிதம்

**நாம் கிறிஸ்மஸ் அநுசரிப்பதேன்?**

கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஜனனத்தை அன்று ஆசரிக்கிறார்கள். அவர்களில், உலகத்தின் வெவ்வேறு பாகங்களில் உள்ள பிராடெஸ்டாண்ட், ரோமான், கிரீக் ஆகிய எல்லா சபையாரும் வெவ்வேறு காலங்களில் இந்த மத சம்பவத்தை அநுசரிக்கிறார்கள். இந்த நாளின் உற்சவ ஆடம்பரங்கள் வெகு புராதனமானவை. அவைகளை ஆரம்பித்தவர்கள் ஸ்காண்டிநேவியா, ரோம், கிரீஸ், ஈஜிப்ட் தேசங்களிலிருந்த பழைய காலத்து விக்கிரக ஆராதனை செய்துவந்த மதஸ்தர்கள். வருஷத்தில் சில மாசங்களில் இராத்திரி மிகக் குறைவாகக் காணப்படுமல்லவா? அந்தக் காலங்களில் தினத்துக்குத் தினம்

பகல் குறைந்துகொண்டே வரும். இதைப் பார்த்து அவர்கள் அஞ்சி பகலுக்கு மூலகாரணமான சூரியன் அடியோடே தேய்ந்துபோகுமோ என்று சந்தேகித்தார்கள். ஆகையால் சூரியன் அல்லது பகலவன் தினத்துக்குத் தினம் நீடிக்க ஆரம்பமாகும் அந்த நாளைக் கொண்டாடி ஆனந்திக்க ஒரு சமயம் ஏற்படுத்தினார்கள்.



இப்படிக் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கொண்டாடிய சூரிய உற்சவத்தைக் கண்டு கவனித்த முன்காலத்துக் கிறிஸ்தவ சபைப் பிரமுகர்கள், அந்தப் பழைய மதத்தை விட்டுவிட்டு இந்தப் புது மதத்திற்கு வந்துவிட்டவர்கள் அந்தக் கொண்டாட்டத்தில் கெடுதலில்லாதவைகளை அனுசரிக்க இடங்கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் பழையபடி குடித்துக் கூத்தாடித் திரியாமலிருக்கும்படி கிறிஸ்தவ சபையார் அவர்களை அடக்க முயன்றும் கிறிஸ்மஸிலும் அது நிற்கவில்லை. என்ன முயன்றும் இங்கிலாந்தில் வெறியாட்டம் நிற்காதுபோக பார்லிமெண்டார் கிறிஸ்மஸ் பண்டிகையையே பன்னிரண்டு வருஷ காலம் நீக்கிவிட்டார்கள். இதுவும் ஜனங்களுக்கு இஷ்டமில்லை; கிறிஸ்மஸ் நடத்தத்தான் வேண்டும் என்றார்கள். ஆதலால் நல்ல புத்திசாலித்தனமாகக் கிறிஸ்மஸைத் திரும்பவும் நடத்தச் சட்டம் பிறந்தது.

அதை ஏன் டிசெம்பர் இருபத்தைந்தில் ஆசரிக்கவேண்டும்?

கிறிஸ்து பிறந்தது இதே நாள்தான் என்று யாரும் திட்டமாய்ச் சொல்லமுடியாது. இந்தப் பண்டிகையை இந்தத் தினத்தில் முதல்



முதலாக எந்தத் தேசத்தார் அநுசரித்தார் என்பதும் தெரியாது. கிறிஸ்துமதம் மேம்பட்டு வியாபிக்கவே 'பண்டிகை எதுவும் அநாகரிகமானது மதஹீனமானது' என்று ஆதிக் கிறிஸ்தவர்கள் அவதூறு பேசிவந்தது அடியோடே போய்விட்டது. சுமார் கி. பி. 350-ல் போப் ஜூலியஸ் என்பவர் ஒரு ஞானியாரை கிறிஸ்துவின் ஜனன தேதியைத் திட்டமாய் நிதானிக்கச் சொன்னார். அவர் மேற்குத் தேசத்துச் சபையார். அவர், இந்தப் பண்டிகையை டிசெம்பர் இருபத்தைந்திலேயே கொண்டாடினார்கள் என்றும், மற்றவர் வெவ்வேறு மாசங்களில் அநுசரித்தார்கள் என்றும் தெரிந்து சொன்னார். அதைப் பார்த்து போப் ஜூலியஸ் டிசெம்பர் இருபத்தைந்திலேயே கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடவேண்டுமென்று நியமித்தார். அதுமுதல் அதே தினம் ஆசரிக்கப்பட்டு வரலானது.

கிறிஸ்மஸ் ஆநந்தப் பாட்டுகள் பாடுவதேன்?

கிறிஸ்மஸ் காலத்தில் ஆநந்தப் பாட்டுகள் பாடுவது எப்போது ஆரம்பித்ததோ! அதை அறிய முடியவில்லை. ஆதி விக்கிரக ஆராதனைக்காரர்கள் சடங்குகள் நடந்த சமயத்தில் ஆடிக்கொண்டே பாடிய பாட்டுகளின் மாதிரியாக முதல் கிறிஸ்மஸ் பாட்டுகள் எழுதப்பட்டன.

கி. பி. 589-ல் ஸ்பெயின் தேசத்து டொலிடோ கூட்டத்தார் சபைகளில் சிற்சில நாட்களில் ஆட்டமே ஆகாது என்று தடுத்தார்கள். அடுத்த வருஷம் மற்ற சமயங்களிலும் ஆடப்படாது என்று நிறுத்திவிட்டார்கள். பாடும் வழக்கம் சிற்சில பாகங்களில் நின்றுவிட்டபோதிலும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டலி முதலிய தேசங்களில் இன்னும் நடைபெற்று வருகிறது.

கால்நடைகள் முழந்தாளிடுவதாக பாவிப்பதேன்?

கிறிஸ்மஸ் பருவத்தில் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் விபரீத விசேஷ சக்தி ஏற்படுவதாக ஆதியில் எண்ணினார்கள்; சில பேசுமாம், வேறு சில தேவனை வணங்குமாம்.

ஆடுமாடுகள் என்னவோ தொழுவங்களில் முழந்தாளிடுவதாக வழங்கும் கதைகள் கிறிஸ்து ஒரு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் என்பதிலிருந்து கிளம்பியிருக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. அவர் பிறந்த இரவு அவரைக் குளிரில்லாமல் காப்பாற்ற அவர்மேல் பசுக்கள் மூச்சுவிட்டு அவருக்கு உஷ்ணம் உண்டாக்கி வந்தன என்று நம்பினவர்களாய் ஸ்பெயின் தேசத்தார் பசுக்களிடத்தில் அதிக பக்ஷமாயிருக்கிறார்கள்.

"மான்கள் முழந்தாளிடுவதைக் காணக் காத்திருக்கிறேன். கிறிஸ்மஸ் இராத்திரியில் மான்களெல்லாம் முழந்தாளிட்டு மேலே பரம ஆவியைப் பார்க்கும்' என்று ஒரு அமெரிக்கா தேசத்து இந்தியன் ஒரு கிறிஸ்மஸ் இராமுழுவதும் காடுகளில் சுற்றித் திரிந்ததாகவும் ஒரு கதையுண்டு. இவை அப்படி இருக்க, ஒருவன் அந்தினமும் இந்தப் பிராணிகளைப் பார்ப்பானானால் அவனுக்கு அடுத்தாற் போலவே அருங்கேடு வரும் என்பது திண்ணம்.

கிறிஸ்மஸ் மரம் வந்ததெப்படி?

எட்டாவது நூற்றாண்டில் ஸ்காண்டினேவியா மிஷனெரி ஒருவரைப்பற்றியுள்ள ஒரு பழங்கதையில் முதல் கிறிஸ்மஸ் மரம் ஏற்படுத்தியதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் கதையில் கிறிஸ்துவுக்குமுன் இருந்த ட்ரூயிட் பூசாரிகள் மரத்தை வணங்கியவர்கள். ஜீவ தேவனை அல்ல என்பதை எடுத்துக் காட்டினார்கள். பின்பு, கிறிஸ்மஸ் தினத்துக்கு முந்தின நாள் அந்தப் பூசாரிகள் நரபலி செலுத்த எண்ணிச் சுற்றிக் கூடியிருந்த 'ஒக்' மரத்தை (Oak tree) வெட்டிவிட்டார்கள். அது விழுந்தபோது அதற்கு அப்பால் 'பர் மரம்' (Fir tree) ஒன்று தெய்வீகமாய் முளைத்திருக்கக் கண்டு வந்த மிஷனெரி, 'இதோ ஜீவமரம்! அதில் யாதொரு ரத்தக்கறையும் இல்லை. அதுவே நம் ஆராதனையின் அடையாளமாகும். அது ஆகாயத்தை எப்படிச் சுட்டுகிறது பாருங்கள்! அதை நாம் கிறிஸ்து பாலன் மரம் என்று அழைப்போமாக. அதை எடுத்து உங்கள் பிரபுவின் வீட்டுக்குக் கொண்டுபோங்கள். இனிமேல் வெட்கக்கேடான அந்தப் பாழும் ஆசாரத்தை அநுசரிக்க மறைவான காடு வனம் தேடாதேயுங்கள். இனி மகிழ்ச்சியுடனும் அன்புடனும் பிள்ளைகளோடு வீட்டிலேயே அநுசரியுங்கள். அந்தப் பாழும் 'ஒக்' மரம் விழுந்துவிட்டது. இனி இந்த கிறிஸ்து ஜனனநாளைக் கொண்டாடாத குழந்தைகள் எங்கும் இருக்கமாட்டார்கள். அன்பின் அடையாளமான இந்த மரத்தண்டை வந்து கூடியே தீர்வார்கள்.'

கிறிஸ்மஸ் கார்டு வந்தவிதம்.

ஏறக்குறைய எழுபது வருஷங்களுக்கு முன்னதாகத்தான் கிறிஸ்மஸ் கார்டுகள் முதல்முதல் லண்டனில் அச்சிடப்பட்டன. ஆனால் அவை இருபதுவருஷம்வரை பரவவேயில்லை. அக்காலத்துக் கார்டில் யாதொரு விசேஷமும் இருந்ததில்லை. அதில் வெறும் 'மனோஹரமான கிறிஸ்மஸ்' அல்லது 'புது வருஷ வர்தனம்' என்றே எழுதியிருந்தது. பின்புதான் இப்போது காண்கிற பற்பல அழகான படங்களை அக்கார்டுகளில் அச்சடிக்கத் தொடங்கினார்கள்.





கிறிஸ்மஸ் இனாம் தருவதேன்?

ஆதி ரோமர்கள் தங்கள் குளிர்காலப் பண்டிகையில் ஒருவருக்கொருவர் பரிசுகள் தந்துகொண்டிருந்தார்கள். அதிலிருந்து இப்போதைய வழக்கமும் ஆரம்பித்திருக்கலாம். இதைவிட இவ்வெகுமதிகளை, சிசுவாயிருந்த யேசுவுக்கு சாஸ்திரிகள் கொண்டுவந்து தந்த வெகுமதிகளின் அடையாளங்கள் என்றும், லோகத்திற்கு தேவன் கொடுத்த நல்ல ஈவின் அடையாளமாகக் கொள்ளவேண்டும் என்றும் கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். ஏழைகளுக்குத் தந்த உபகாரம் (நன்றியறிதலுள்ள இருதயத்தின் நற்கிரியை) என்றே ஆதிவேதகாலம் முதலாக நம்பியதாகிறது. ஏழைக்கு இரங்கித் தந்த கொடை தேவனுக்குத் தந்ததேதான்.

கிறிஸ்மஸ் மரத்தை அலங்கரிப்பதேன்?

சூரியவணக்கம் செய்த பண்டைக்காலத்து யூரோப்பியர் சூரியன் ஆகாசத்தில் மேலும் மேலும் கிளம்புவதற்கு அறிகுறியாகப் பரந்து விசாலித்த மரத்தை அமைத்திருந்தார்கள். அந்த மரத்தைப் பின்பற்றியே நமது தற்கால கிறிஸ்மஸ் மரம் ஏற்படலானது. அந்த மரத்தில் தொங்கவிடும் கிறிஸ்மஸ் விளக்குகள் நமது தலைமேல் பிரகாசிக்கும் மின்னலை ஒக்கும்; பழம், காய், பந்து முதலியன சூரிய சந்திர நட்சத்திரங்களை ஒக்கும்; சிலர், அந்த மரத்துக்கும், அதன் அலங்காரத்துக்கும் வேறே அர்த்தம் உண்டென்கிறார்கள். அந்த ஒளி தங்கிய மரம் அநாகரிகமானதும் அஞ்ஞான இருள் நிறைந்ததுமான இவ்வுலகத்திற்கு கிறிஸ்து ஜீவவிருக்ஷமாக வந்ததைக் குறிக்கும். பின் சுத்த கிறிஸ்தவ சின்னங்களான தேவதூதர்கள், நங்கூரம், சிலுவை, இருதயம், கீழ்நட்சத்திரம் கிறிஸ்து குழந்தையின் [illegible]

யைக் குறிக்கும் பொன் நூல்கள் ஆகிய இவைகளையே அமைக்கலாயினர். சிற்சில தேசங்களில் அந்த மாத்தடியில் ஒரு மாட்டுத் தொழுவமும், அதிலொரு சிசுரூபமும் அதைச் சுற்றிப் பெற்றோர்களும் ஆடுமாடுகளும் வைக்கிறார்கள்.

**கிறிஸ்மஸ் மெழுகுவர்த்திகள் குறிப்பதென்ன?**

கிறிஸ்மஸ் காலத்தில் மெழுகுவர்த்திகள் கொளுத்துவது ரோமான்தேசத்துப் பண்டிகையைப் பின்பற்றிய ஒரு வழக்கம். இப்படி வர்த்திகளை உபயோகிப்பது வெளிச்சத்திற்காக மாத்திரமாகாமல், உற்சாகத்தையும் அன்பையும் காட்டத்தகும் வெகுமதிகளுமாகும். கிறிஸ்து ஜனித்த அந்த நாளில் யூதர்களுக்குள் நேர்ந்த ஒரு பண்டிகையில் விளக்குகள் பல ஏற்றினார்கள். அவர்கள் வைத்த விளக்குகளை, தாங்கள் அறியாவிட்டாலும், அன்று லோகத்திற்கு வந்த திவ்ய ஞான ஒளியின் அடையாளங்களாயின. இதற்குச் சார்பாக ரோமான், கிரேக்க சபையார்கள் கிறிஸ்மஸ் தினத்தை இன்னும் 'விளக்கு விருந்து' என்கிறார்கள் பாருங்கள்.

## THE CHRISTMAS CHIMES

## கிறிஸ்மஸ் மணிகள்

ஒருதேசத்தில் அதிக அழகும் பிரதாபமுமான ஒரு கோவில் இருந்தது. அது பட்டணத்தின் மத்தியிலிருந்த உயர்ந்த மலையின் மேல் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மற்ற விசேஷித்த நாட்களும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மலையில் ஏறிக் கோவிலுக்குக் கடவுளைத் தொழுவதற்கு வருவார்கள். கோவில் அதிக விஸ்தாரமாயிருந்ததினாலே முன்பக்கம் இருந்த பெரிய வாசலில் ஒருவர் நின்று பார்த்தால் மறுபக்கத்தில் நின்ற ஒருவன் அவனுக்குத் தெரியாது. இன்பமான ஓசை கொடுத்த ஒரு பெரிய வாத்தியப்பெட்டி இருந்தது. அதை ஒருவன் வாசித்தால் அதின் சத்தம் இடிமுழக்கம்போலத் தோன்றும்; பூமியும் அதிரும்.

ஆனாலும் எல்லா விசேஷங்களைவிடக் கோபுரத்தில் தொங்கியிருந்த மணிகள் விசேஷித்தவை. கோபுரத்தின் மேல்பக்கம் ஆகாச மண்டலத்தை அளாவி நல்ல வெளிச்சம் இருக்கும்போது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தது. அதன் உச்சியில் அதிக நேர்த்தியான பெரிய மணிகள் எட்டு தொங்கின. அவைகளின் இனிய சத்தம் எப்போதாவது ஒருதரம் கிறிஸ்மஸ் இராத்திரியில்



கேட்கப்படுமே ஒழிய மற்றப்படி சாதாரணமாய்க் கேட்காது. வருஷந்தோறும் ஜனங்கள் தங்களுடைய கிறிஸ்மஸ் காணிக்கை கொண்டு வரும்போது ஒருவராகிலும் இயேசுகிறிஸ்துவுக்காகத் தன் மனசிலிருந்த அன்பினிமித்தமே காணிக்கை கொண்டுவந்து கொடுத்தால் தேவதூதர்கள் வந்து மணிகளை அடிப்பார்களாம். அவைகளின் இனிய சத்தம் அத்தேசம் முழுவதும் கேட்டதாம். ஆனாலும் அந்தச் சத்தம் அநேக வருஷங்களாகக் கேட்கப்படவில்லை. அந்த ஊரிலுள்ள ஒரு கிழவன் மாத்திரம் தன் தாய் சிறு வயசில் கேட்டிருந்ததாகச் சொன்னான்.



எத்தனையோ வருஷங்களாக ஜனங்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக நல்ல ஈவுகளைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்று விலையுயர்ந்த ஈவுகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். காற்றின் சத்தமேயொழிய வேறொரு சத்தமும் கோபுரத்தில் கேட்கப்படவில்லை. என்னத்தினால் என்றால், அந்த ஈவுகள் கிறிஸ்துவுக்கு அன்பு காட்டுகிறதற்கல்ல, தங்களை மேன்மைப்படுத்துவதற்காகவே கொண்டுவந்தார்கள் என்று போதகர் சொன்னார்.

பட்டணத்துக்கு ஐந்தாறுமைல் தூரத்தில் ஒரு சிறு கிராமம் இருந்தது. அங்கே தேவதாசனும் அவன் தம்பியும் குடியிருந்தார்

கள். அவர்களும் கிறிஸ்மஸுக்கு முந்தின நாள் கோவிலுக்குப் போகப் புறப்பட்டார்கள். தேவதாசன் தன் தம்பியை அழைத்து, 'வா அப்பா, நாமும் கோவிலுக்குப் போவோம். சில வேளைகளில் கிறிஸ்துதாமே தரிசனமாகி ஜனங்களை ஆசீர்வதிப்பாராம். நமக்கும் அவரைப் பார்க்கும் சிலாக்கியம் கிடைத்தால் எவ்வளவோ சந்தோஷம்' என்று சொல்லி இருவரும் போனார்கள். அன்றைக்கு உறைந்த மழையும் குளிரும் அதிகமாயிருந்தது. ஆனாலும் இந்தச் சிறுவர்கள் அதைக் கவனிக்காமல் புறப்பட்டு, பொழுதுவிழும் சமயத்தில் பட்டணத்தின் பெரிய வாசலண்டை வந்து சேர்ந்தார்கள். அங்கே வழியோரத்தில் ஒரு ஏழைக் கிழவி உறைந்த மழையிற் கிடக்கிறதைத் தேவதாசன் பார்த்து, மனதுருகி, அவளண்டைபோய், சேற்றிலே முழங்கால்படியிட்டுக் கையைத் தேய்த்து உடம்புக்கு அனல் உண்டாக்கி, அவளை எழுப்பப் பிரயாசப்பட்டான். அந்த ஏழையோ குளிரினாலும் பலவீனத்தினாலும் ஒன்றும் தெரியாமல் செத்துப்போனவளைப்போல இருந்தாள். இதைப் பார்த்து, தேவதாசன் 'ஐயோ, தம்பி, நான் இந்த ஏழைக் கிழவியை விட்டுவிட்டுப் போகமுடியாது. நான் அவளுக்கு உதவிசெய்ய, நீதான் கோவிலுக்குப் போகவேண்டும். பாட்டு ஜெபம் எல்லாம் கவனித்துக் கேள். எனக்காகவும் ஒரு சிறு ஜெபம்பண்ணு. முடிந்த பிற்பாடு ஒருவருக்கும் தெரியாமல் எனக்காக இந்த இரண்டணாவைக் காணிக்கைப் பெட்டியில் போடப்பா' என்று கொடுத்து அனுப்பினான்.



அப்படியே சிறுவன் போய்விட்டான். தேவதாசனோ கோவிலுக்குப் போக முடியவில்லை என்கிற விசனத்தினால், தன் கண்ணீரை அடக்க முடியாவிட்டாலும், கிழவிக்கு உதவி செய்துகொண்டேயிருந்தான். அன்று இராத்திரி கோவில் அதிசயமாயிருந்தது.



ஜனங்கள் ஸ்தோத்திரப் பாட்டுகளைப் பாடி கடவுளைத் துதிக்கும்போது 'ஆர்கனை' வாசித்தார்கள். அதின் சத்தத்தினாலே கோவிலின் சுவர்கள் அசைந்தன. தேவதாசனும் பட்டணத்தின் வாசலுக்கு வெளியே கிழவியண்டை முழங்கால்படியிட்டு, தானிருந்த இடமும் அசைந்ததைப் பார்த்தான்.

ஆராதனை முடிந்த பிறகு ஜனங்கள் கிழக்கிலிருந்த பெரிய மேசையின்மேலே தாங்கள் இயேசுகிறிஸ்துவுக்கென்று கொண்டுவந்த ஈவுகளை வைக்கப் போனார்கள். சிலர் ஆபரணங்களையும், சிலர் சுத்த தங்கத்தினால் செய்யப்பட்ட பெரிய பெரிய பெட்டிகளையும் கொண்டு வந்து வைத்தார்கள். ஒரு வித்துவான் தான் அநேக வருஷங்களாக அதிக பிரயாசப்பட்டு எழுதின புஸ்தகம் ஒன்றைக் கொண்டுவந்து வைத்தான். கடைசியாக அத்தேசத்து ராஜா வந்து வைரக்கற்களும் இரத்தினக் கற்களும் பதிக்கப்பட்டிருந்த தன் கிரீடத்தையும் கழற்றி வைத்தான். இதுவரைக்கும் ஒருவரும் இத்தனை விலையுயர்ந்த வெகுமதியைக் கொடுத்ததில்லை என்று ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு மணிகளின் சத்தம் கேட்கப்படமாட்டாதோ என்று பேசாமல் மேலே பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால் காற்றின் சத்தமேயொழிய வேறொரு சத்தமும் கோபுரத்தில் கேட்கப்படவில்லை.

அப்படியே அநேக பெயர் தங்கள் காணிக்கைகளைக் கொடுத்த பிற்பாடு, போதகர் திடீரென்று தம் கையை உயர்த்தினார். ஜனங்கள் மூச்சுவிடாமல் நின்றார்கள். கிறிஸ்மஸ் மணிகளின் இனிய மெதுவான சத்தம் கோவில் முழுவதும் கேட்டது! ஒரே மனுஷனைப்போல ஜனங்கள் பெரிய கூட்டமாக எழுந்திருந்து இந்த ஆச்சரியம் நடக்கத்தக்கதாக என்ன விலையுயர்ந்த ஈவு கொடுக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தார்கள். அதோ! தேவதாசனுடைய சிறு தம்பி மேசையண்டை நின்று அதின்மேல் இரண்டு அணா வைக்கிறதைப் பார்த்தார்கள்!

## THE KING'S CUP BEARER (*Cont.*)

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### V. அத்தியாயம்

பட்டயமும் சாந்துக் கரண்டியும்

பிற்பாடு ஒன்றும் சேரிடாததுபோலவே தம்முடைய வேலையை அமரிக்கையாயும், திட்டமாயும் செய்கிறார். ஜனங்கள் அவரைப்

பின்பற்றுகிறார்கள். கீழேயிருந்து பேசப்படும் எந்தப் பேச்சையும் கவனியாதவர்களாய், தங்கள் வேலையை அமைதலாயும், சீக்கிரமாயும், கவலையோடும் செய்கிறார்கள்.

எவ்வளவு கேலிசெய்து, பரிகாசம்பண்ணிச் சிரித்தபோதிலும், அதனால் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று கண்டு சன்பல்லாத்தும், தொபியாவும் போய்விடுகிறார்கள். வேலையோ முன்போலவே நடந்துவருகிறது.



ஆத்தும சத்துராதியாகிய சாத்தான் முன்காலத்திலிருந்தது போலவே, இப்பொழுதுமிருக்கிறான். ஒரு நல்ல வேலை தொடங்கும்போது எதிர்த்துப் போராடுகிறான். நித்தியத்தைப்பற்றிக் கவலைப்படாத ஒரு வாலிபனைப் பார்ப்போம். அவனுடைய காரியமெல்லாம் வெகு சுலபமாய் நடந்தேறிவருகிறது. அவன் விழித்தெழுந்து குணப்பட்டவனாய், நல்ல காரியங்களைச் செய்ய எத்தனிக்கும்போது அவனுக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகிறது? எத்தனை சத்துருக்கள் எழும்புகிறார்கள்? சாத்தான் சும்மா இருக்கமாட்டான். நெகேமியாவின் காலத்தைப்போலவே, முதலாவது கேலிபண்ணிச் சிரிப்பார்கள். நகைப்பு மனுஷனைக் கஷ்டப்படுத்துகிறதில்லை என்பார்கள். நாம் முழுதும் சரீரமாயே இருந்துவிட்டால் இது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் நமக்குள்ளே ஆவியிருக்கிறதே அதுதான் மிகவும் கஷ்டப்படுகிறது. உடம்பில் அடிபட்டால் எப்படி நோவெடுத்துக் காயமுண்டாகிறதோ, அப்படியே நம்மைப் பார்த்துச் சிரிப்பார்களானால் நம்முடைய ஆத்துமாவுக்கு நோவுண்டாகி காயப்படுகிறது. சாத்தான் இதை நன்றாய்த் தெரிந்துதான் இப்படிச் செய்ய இடங்கொடுக்கிறான்.



பரலோக ராஜ்யத்திற்குப் புறப்பட்டுப்போகிற ஒருவனும், பத்தடி வைக்கிறதற்குள்ளாக சன்பல்லாத்தைப்போலொத்தவர்களைச் சந்தியாமல் போகமுடியாது. அவனுக்குப் போதுமான இகழ்ச்சியும் பரிகாசமும் உண்டு. 'உன்னைப்பற்றிக் கேள்விப்படுகிறோமே அதென்ன? பரிசுத்தவானாகிவிட்டாயோ? உன்னுடைய பழைய சிநேகிதரோடு சேரமாட்டாய்போலிருக்கிறதே. உலகத்தாரெல்லாரையும் நல்லவர்களாக்கிவிடுவாயோ' என்பார்கள். அல்லது வாய் பேசாமலே கண்சாடையினாலும், பரிகாசச் செய்கைகளாலும், சகிக்கக்கூடாதபடி நடந்துகொள்ளுவார்கள். அல்லது தொபியாவைப் போலொத்தவர்கள் சொல்லுகிற அலட்சியமும் பரிகாசமுமான வார்த்தைகளைக் கேட்டும் அதிசயப்படவேண்டாம். ஆ! கொஞ்சநேரம் பொறு. இது எவ்வளவு நாளைக்கு நிலைக்குமோ பார்க்கலாம். ஒரு நரி ஏறிப்போனால் அந்தச் சுவர் விழுந்துவிடும். முதலாவது அவனைக் கோபப்படுத்துகிறதாகிய முதல் சோதனை, நல்ல தீர்மானமாகிய சுவரை இடித்துப்போடப் போதுமானதாயிருக்கும். அப்பொழுது அவனுடைய மார்க்க விஷயங்களெல்லாம் எங்கே போகும்? எல்லாம் இடிந்து விழுந்த குப்பையும் கூளமுமாய்விடும்.

சன்பல்லாத்தையும் தொபியாவையும் எதிர்க்க நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் அவர்களுக்கு எப்படி உத்தரவு சொல்லலாம்? நெகேமியாவைப்போல, மனிதரிடத்திலல்ல, தேவனிடத்திற்கே திரும்புவோமாக. பேசப்படும் ஒவ்வொரு நிந்தையான வார்த்தையையும் கேட்கிறார். சோதிக்கப்பட்டு வேதனைப்படுகிற தம்முடைய பிள்ளைகளைப் பார்த்து அவர் சொல்லுகிறதென்ன?

'அந்தப் பரிகாச வார்த்தையை, கடினமான சொற்களைச் சகிக்கக் கூடாதா? என்னிமித்தமாக?'

'அந்தத் துன்பம் சிறியதும் பாரம் சுளுவுமாயிருக்குமல்லோ சகித்தால் எனக்காக.'

'உனக்கு எவ்வளவு கஷ்டமென்று நான் பார்க்கிறேன் அறிகிறேன். என்னிமித்தமாக.'

என் பிள்ளையே, உன்னை எவ்வளவாய் நேசித்தேன் சகிக்கக் கூடாதா? எனக்காக?'

சன்புல்லாத்தும் தொபியாவும் போய்விட்டார்கள். வேலை நன்றாய் நடந்துவருகிறது. அலங்கத்தில் பாதிவேலை ஆகிவிட்டது. ஜனங்களெல்லாரும் வேலைசெய்ய ஆவலாயிருந்தார்கள் (4. 6). அப்புறம் கொஞ்சநாளாக சன்பல்லாத்தினிடமிருந்து ஒரு சங்கதியும் வரவில்லை. ஆகையால் வேலைசெய்கிறவர்கள் 'இதுதான் கடைசித்

துன்பும் என்று நினைத்திருப்பார்கள். ஆனால் ஒருநாள் பயங்கர [illegible] கத்திற்குள்ளே பேசிக்கொள்ளப்படுகிறது.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

162491

## MY PRAYER—Gitanjali, No. 36.

## என் பிரார்த்தனை

(டாக்டர் ரவீந்திரநாத் தாகூரின் 36-வது கீதாஞ்சலி)

என் நெஞ்சில் [illegible] இருந்திடும் எளிமைதீர்த்து இதுசமயம் ஆளவேண்டும்;
எண்ணிடும் இன்பதுன் பங்களைச் சமமென இருக்கவே உறுதிவேண்டும்;
என் அன்பை உன்பெரும் ஊழியத் திற்செய இசைந்ததோர் சக்திவேண்டும்;
ஏழைபாழைகளான குடிமக்கள் தங்கட்கு இசைந்துதவி செய்யவேண்டும்;
என்னைவந்து அடாதடி மருட்டல்பல செய்யினும் ஏற்றமான வலிமைவேண்டும்;
இகழ்ச்சிபெறும்உலகவிவகாரத்தை உதறிநான்எதிர்த்திடும்திண்மைவேண்டும்;
என்இதய மொடுசக்தி அன்புமுதல் யாஉமக்கு ஈயவழி காட்டவேண்டும்;
என்அன்பான தெய்வமே! அடியேன் பிரார்த்தனைக்கு அருள்புரிந்து
[அருள் ஐயனே!

பண்டிதர் சிவபாத ஹிருதயப் பிள்ளை

ல. மி. ஹை. ஸ்கூல், ஈரோடு.

JL
TSS m211, M86
M86.28-29

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1914 ஆம் வருஷம் டிசெம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | சங். | 10. | 12 | ச. | சங். | 22. 1—15 | 23 | பு. | லூக். | 1. 26—40 |
| 2 | பு. | „ | 11, 12. | 13 | ஞா. | „ | 22. 16—31 | 24 | வி. | „ | 1. 41—56 |
| 3 | வி. | „ | 13, 14. | 14 | தி. | „ | 23. | 25 | வெ. | மத். | 1. 18—25; 2. 1—10 |
| 4 | வெ. | „ | 15, 16. | 15 | செ. | „ | 24. | 26 | ச. | „ | 2. 11—23 |
| 5 | ச. | „ | 17. | 16 | பு. | „ | 25. | 27 | ஞா. | சங். | 29. |
| 6 | ஞா. | „ | 18. 1—15 | 17 | வி. | „ | 26. | 28 | தி. | „ | 30. |
| 7 | தி. | „ | 18. 16—36 | 18 | வெ. | „ | 27. | 29 | செ. | „ | 31. 1—13 |
| 8 | செ. | „ | 18. 37—50 | 19 | ச. | „ | 28. | 30 | பு. | „ | 31. 14—24 |
| 9 | பு. | „ | 19. | 20 | ஞா. | ஏசா. | 35. | 31 | வி. | „ | 32. |
| 10 | வி. | „ | 20. | 21 | தி. | „ | 40. 1—11 | | | | |
| 11 | வெ. | „ | 21. | 22 | செ. | „ | 11. 1—9 | | | | |

C. L. S. PRESS, MADRAS—1914